ஸ்ரீ:

ஸ்ரீக்ருஷ்ணாய வாஸுதேவாய ஹரயே நம:

ஸ்ரீ பகவத்கீதை.

இரண்டாம் ஸஞ்சிகை

ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த கீதாபாஷ்யம்,
அந்த பாஷ்யத்திற்கு ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன்
அருளிச்செய்த தாத்பர்யசந்த்ரிகை, கீதார்த்தஸங்க்ரஹ ரக்ஷை,
இவைகளுக்குச் சரியான தமிழ் மொழி பெயர்ப்பும்,
ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த கீதார்த்த ஸங்க்ரஹ
ஶ்லோகங்கள், கீதா ஶ்லோகங்கள் இவைகளுக்கு
பாஷ்யத்துக்கிணங்கப் பதவுரையும், ஸ்ரீ நிகமாந்த
மஹாதேசிகன் அருளிச்செய்த கீதார்த்த
ஸங்க்ரஹப் பாட்டுகளுக்குப் பொழிப்
புரையுமுள்ளது.

திருவஹீந்த்ரபுரம் சேட்லூர் வித்வான், பகவத்விஷயம்
ஸ்ரீ உ. வெ. நரசிம்மாசார்யார் ஸ்வாமியால் செய்யப்பட்டு
சிந்தாத்ரிப்பேட்டை ஸத் ஸம்ப்ரதாய வர்த்தனீ ஸபையாரால்
பிரசுரம் செய்யப் பெற்றது.

இதன் வில ரூபா. **3-8-0.**
தபாற்கூலி வேறு.

சச்சிதாநந்தம் பிரஸ், கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

1914.

All Rights Reserved.

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]

[illegible] |
[illegible] ||

[illegible]

[illegible] |
[illegible] ||

[illegible]

[illegible] |
[illegible] ||

[illegible]

[illegible] |
[illegible] ||

---

* [illegible]

2-வது ஷட்க கீதா ஶ்லோகங்களின்

அகராதி.

அ - அத்தியாயம், ஶ்ர - ஶ்லோகம், ப - பக்கம்.

	அ.	ஶ்ர.	ப.
அ			
அக்ஷரம் ப்ரஹ்ம	8	3	98
அக்ஷராணாமகார	10	33	348
அக்னிர்ஜ்யோதிரஹ	8	24	152
அத சித்தம் ஸமாதா	12	9	474
அதவா பஹுனை	10	42	361
அதைததப்யஶக்த	12	11	477
அத்ருஷ்டபூர்வம் ஹ்ருஷித	11	45	444
அத்வேஷ்டா ஸர்வபூ	12	13	484
அதிபூதம் க்ஷரோ	8	4	101
அதியஜ்ஞ: கதம்	8	2	96
அனந்தஶ்சாஸ்மி நா	10	29	344
அனன்யசேதா: ஸத	8	14	128
அனன்யாஶ்சிந்தயந்தோ	9	22	227
அனபேக்ஷ: ஶுசி	12	16	491
அனாதிமத்யாந்த	11	19	395
அனேகபாஹூதர	11	16	389
அனேகவக்த்ரநய	11	10	384
அந்தகாலே ச	8	5	104
அந்தவத்து ஃபலம்	7	23	71
அபரேயமிதஸ்த்வன்யாம்	7	5	20
அபி சேத்ஸுதுராசா	9	30	249
அப்யாஸயோகயுக்தே	8	8	110
அப்யாஸேऽப்யஸமர்த்த	12	10	476
அமீ ச த்வாம் த்ருதரா	11	26	410
அமீ ஹி த்வாம் ஸுரஸங்கா	11	21	402
அவஜானந்தி மாம்	9	11	200
அவ்யக்தாத்வ்யக்தய:	8	18	139
அவ்யக்தோऽக்ஷர	8	21	144
அவ்யக்தம் வ்யக்திமா	7	24	73
அஶ்ரத்ததானா:	9	3	182
அஶ்வத்த: ஸர்வவ்ருக்ஷ	10	26	342
அஹம் க்ரதுரஹம்	9	16	212
அஹமாத்மா குடாகே	10	20	327
அஹம் ஸர்வஸ்ய	10	8	298
அஹம் ஹி ஸர்வய	9	24	232
அஹிம்ஸா ஸமதா	10	5	285
ஆ			
ஆக்யாஹி மே	11	31	419
ஆதித்யானாமஹம்	10	21	331
ஆப்ரஹ்மபுவனா	8	16	137
ஆயுதானாமஹம்	10	28	343
ஆஹுஸ்த்வாம்ருஷய:	10	13	305
இ			
இச்சாத்வேஷஸமு	7	27	79
இத்யர்ஜுனம் வா	11	50	453
இதம் து தே குஹ்ய	9	1	176
இஹைகஸ்தம் ஜக	11	7	380
உ			
உச்சை:ஶ்ரவஸ	10	27	342
உதாரா: ஸர்வ ஏவை	7	18	57

கீதா ஶ்லோகங்களின் அகராதி.

	அ.	ஶ்ல.	ப.
ஏ			
ஏதச்ச்ருத்வா வசநம்	11	35	428
ஏதத்யோநீநி	7	6	21
ஏதாம் விபூதிம்	10	7	296
ஏவமுக்த்வா ததோ	11	9	382
ஏவமேதத்யதாத்த	11	3	373
ஏவம் ஸததயுக்தா	12	1	463
ஓ			
ஓமித்யேகாக்ஷரம்	8	1	119
க			
கதம் வித்யாமஹம்	10	17	323
கவிம் புராணம்	8	9	112
கஸ்மாச்ச தே ந நமே	11	37	430
காமைஸ்தைஸ்தைர்ஹ்ருத	7	20	64
காலோऽஸ்மி லோக	11	32	421
கிம் தத்ப்ரஹ்ம கிம	8	1	96
கிம் புநர்ப்ராஹ்மணா	9	33	258
கிரீடிநம் கதிநம் சக்ர	11	46	445
கிரீடிநம் கதிநம்	11	17	391
க்லேஶோऽதிகதர	12	5	467
க்ஷிப்ரம் பவதி	9	31	254
க			
கதிர்பர்தா ப்ரபு:	9	18	215
ச			
சதுர்விதா பஜந்தே	7	16	50
ஜ			
ஜராமரணமோக்ஷாய	7	29	183
ஜ்ஞாநயஜ்ஞேந சாப்யந்யே	9	15	211
ஜ்ஞாநம் தேऽஹம் ஸ	7	2	14
த			
தத: ஸ விஸ்மயாவிஷ்டோ	11	14	388
தத்ரைகஸ்தம் ஜகத்	11	13	387
தபாம்யஹமஹம்	9	19	218
தஸ்மாத்ப்ரணம்ய ப்ரணி	11	44	443
தஸ்மாத்த்வமுத்திஷ்ட	11	33	424
தஸ்மாத்ஸர்வேஷு	8	7	107
துல்யநிந்தாஸ்துதி	12	19	495
தே தம் புக்த்வா ஸ்வர்க	9	21	220
தேஷாமஹம் ஸமுத்தர்தா	12	7	471
தேஷாமேவாநுகம்பார்த	10	11	303
தேஷாம் ஸததயுக்தா	10	10	302
தேஷாம் ஜ்ஞாநீ	7	17	54
த்ரிபிர்குணமயைர்பாவை	7	13	36
த்ரைவித்யா மாம்	9	20	220
த்வமக்ஷரம் பரமம்	11	12	392
த்வமாதிதேவ: புருஷ:	11	38	431
அமீ ஹி த்வா ஸுரஸங்கா	11	21	402
த			
தண்டோ தமயதாமஸ்மி	10	38	356
தம்ஷ்ட்ராகராலாநி	11	25	408
திவி ஸூர்யஸஹஸ்ரஸ்ய	11	12	387
திவ்யமால்யாம்பரதரம்	11	11	384
த்ருஷ்ட்வேதம் மாநுஷம்	11	51	452
தைவீ ஹ்யேஷா குணமயீ	7	14	40
த்யாவாப்ருதிவ்யோரிதம்	11	20	399
த்யூதம் சலயதாமஸ்மி	10	36	353
த்ரோணம் ச பீஷ்மம் ச	11	34	426
த			
தூமோ ராத்ரிஸ்ததா க்ருஷ்ண:	8	25	164
ந			
ந ச மத்ஸ்தாநி பூதாநி	9	5	184
ந ச மாம் தாநி	9	9	195

	அ.	ஶ்.	ப.
𑌨𑌤𑍁𑌮𑌾𑌂𑌶𑌕𑍍𑌯𑌸𑍇	11	8	381
𑌨𑌭𑌃𑌸𑍍𑌪𑍃𑌶𑌂𑌦𑍀𑌪𑍍𑌤	11	21	406
𑌨𑌮𑌃𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌦𑌥	11	40	436
𑌨𑌮𑌾𑌂𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌨𑍋	7	15	47
𑌨𑌮𑍇𑌵𑌿𑌦𑍁𑌃𑌸𑍁𑌰𑌗𑌣𑌾𑌃	10	2	277
𑌨𑌵𑍇𑌦𑌯𑌜𑍍𑌞𑌾𑌧𑍍𑌯𑌯	11	48	448
𑌨𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌸𑍍𑌤𑌿𑌮𑌮𑌦𑌿𑌵𑍍𑌯𑌾	10	40	359
𑌨𑌾𑌹𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃	7	25	76
𑌨𑌾𑌹𑌂𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌨	11	53	453
𑌨𑍈𑌤𑍇𑌸𑍃𑌤𑍀	8	27	166
𑌪			
𑌪𑌤𑍍𑌰𑌂𑌪𑍁𑌷𑍍𑌪𑌂	9	26	236
𑌪𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁𑌭𑌾	8	20	144
𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑌰𑌂	10	12	305
𑌪𑌵𑌨𑌃𑌪𑌵𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿	10	31	345
𑌪𑌶𑍍𑌯𑌮𑍇𑌪𑌾𑌰𑍍𑌥	11	5	377
𑌪𑌶𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍	11	6	379
𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿𑌦𑍇𑌵𑌾𑌂𑌸𑍍	11	15	389
𑌪𑌿𑌤𑌾𑌸𑌿𑌲𑍋𑌕𑌸𑍍𑌯	11	43	440
𑌪𑌿𑌤𑌾𑌹𑌮𑌸𑍍𑌯	9	17	213
𑌪𑍁𑌣𑍍𑌯𑍋𑌗𑌨𑍍𑌧𑌃	7	9	29
𑌪𑍁𑌰𑍁𑌷𑌃𑌸𑌪𑌰𑌃	8	22	150
𑌪𑍁𑌰𑍋𑌧𑌸𑌾𑌂𑌚	10	24	339
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂𑌸𑍍𑌵𑌾𑌮𑌵	9	8	194
𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇𑌮𑌨𑌸𑌾	8	10	112
𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿	10	30	344
𑌬			
𑌬𑌲𑌂𑌬𑌲𑌵𑌤𑌾𑌂	7	11	29
𑌬𑌹𑍂𑌨𑌾𑌂𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑍇	7	19	60
𑌬𑍀𑌜𑌂𑌮𑌾𑌂𑌸𑌰𑍍𑌵	7	10	29
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨	10	4	285
𑌬𑍃𑌹𑌤𑍍𑌸𑌾𑌮𑌤𑌥𑌾	10	35	352
𑌭			
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾	11	54	453
𑌭𑌵𑌾𑌪𑍍𑌯𑌯𑍌	11	2	371
𑌭𑍂𑌤𑌗𑍍𑌰𑌾𑌮𑌃	8	19	139
𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑍋𑌽𑌨	7	4	18
𑌭𑍂𑌯𑌏𑌵𑌮𑌹𑌾	10	1	276
𑌮			
𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌮𑌦𑍍𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌣𑌾	10	9	300
𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌨𑍍𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌃	11	55	457
𑌮𑌤𑍍𑌤𑌃𑌪𑌰𑌤𑌰𑌂𑌨𑌾	7	7	25
𑌮𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌯𑌪𑌰	11	1	370
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂𑌸𑌹	7	3	16
𑌮𑌨𑍍𑌮𑌨𑌾𑌭𑌵 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋	9	34	260
𑌮𑌨𑍍𑌯𑌸𑍇𑌯𑌦𑌿𑌤𑌚𑍍𑌛𑌕𑍍𑌯𑌂	11	4	363
𑌮𑌯𑌾𑌤𑌤𑌮𑌿𑌦𑌂𑌸𑌰𑍍𑌵𑌂	9	4	184
𑌮𑌯𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌣	9	10	198
𑌮𑌯𑌾𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇𑌨	11	47	446
𑌮𑌯𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑍍𑌯𑌮𑌨𑍋	12	2	466
𑌮𑌯𑍍𑌯𑌾𑌸𑌕𑍍𑌤𑌮𑌨𑌾𑌃	7	1	11
𑌮𑌯𑍍𑌯𑍇𑌵𑌮𑌨𑌆𑌧𑌤𑍍𑌸𑍍𑌵	12	8	473
𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃𑌸𑌪𑍍𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑍇	10	6	291
𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂𑌭𑍃𑌗𑍁	10	25	?39
𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍁𑌮𑌾𑌂	9	13	204
𑌮𑌾𑌤𑍇𑌵𑍍𑌯𑌥𑌾𑌮𑌾𑌚	11	49	449
𑌮𑌾𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮	8	15	135
𑌮𑌾𑌂𑌹𑌿𑌪𑌾𑌰𑍍𑌥𑌵𑍍𑌯𑌪𑌾	9	32	158
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃𑌸𑌰𑍍𑌵𑌹𑌰	10	34	350
𑌮𑍋𑌘𑌾𑌶𑌾𑌮𑍋𑌘𑌕𑌰𑍍𑌮	9	12	202
𑌯			
𑌯𑌚𑍍𑌚𑌾𑌪𑌿𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤	10	39	357

	அ.	ஶ்.	ப.
யச்சாவஹாஸார்த்த	11	42	438
யத்கரோஷி யதஶ்நாஸி	9	21	241
யத்ர காலே த்வநா	8	23	152
யதாகாஶஸ்திதோ	9	6	189
யதா நதீநாம் பஹவோ	11	28	416
யதா ப்ரதீப்தம் ஜ்வலநம்	11	29	416
யதக்ஷரம் வேதவிதோ	8	1	117
யத்யத்விபூதிமத்ஸத்வம்	10	41	359
யம் யம் வாபி ஸ்மரந்	8	6	106
யஸ்மாந்நோத்விஜதே	12	15	489
யாந்தி தேவவ்ரதா	9	25	233
யே சைவ ஸாத்விகா	7	12	34
யே து தர்ம்யாம்ருதம்	12	20	198
யே து ஸர்வாணி	12	6	471
யே த்வக்ஷரமநிர்தேஶ்ய	12	3	467
யேऽப்யந்யதேவதா	9	23	229
யேஷாம் த்வந்தகதம்	7	28	81
யோ ந ஹ்ருஷ்யதி	12	17	493
யோ மாமஜமநாதிம் ச	10	3	279
யோ யோ யாம் யாம்	7	21	67
ர			
ரஸோऽஹமப்ஸு கௌந்தேய	7	8	29
ராஜவித்யா ராஜ	9	2	178
ருத்ராணாம் ஶங்கர	10	23	338
ருத்ராதித்யா வஸவ	11	22	404
ரூபம் மஹத்தே பஹு	11	23	405
ல			
லேலிஹ்யஸே க்ரஸமா	11	30	418
வ			
வக்தும் அர்ஹஸ்யஶேஷ	10	16	320
வக்த்ராணி தே த்வரமாண	11	27	410
வாயுர்யமோऽக்நிர்	11	39	434
விஸ்தரேணாத்மநோ	10	18	323
வ்ருஷ்ணீநாம் வாஸுதேவ	10	37	354
வேதாநாம் ஸாமவேத	10	22	335
வேதாஹம் ஸமதீதாநி	7	26	77
வேதேஷு யஜ்ஞேஷு	8	28	167
ஶ			
ஶுக்லக்ருஷ்ணே கதீ	8	26	165
ஶுபாஶுபபலைரேவம்	9	28	244
ஶ்ரேயோ ஹி ஜ்ஞாநம்	12	12	481
ஸ			
ஸகேதி மத்வா ப்ரஸபம்	11	41	438
ஸததம் கீர்த்தயந்தோ	9	14	206
ஸ தயா ஶ்ரத்தயா யுக்த	7	22	69
ஸமோऽஹம் ஸர்வபூதேஷு	9	29	246
ஸம: ஶத்ரௌ ச மித்ரே	12	18	495
ஸர்காணாமாதிரந்த	10	32	347
ஸர்வத்வாராணி	8	12	119
ஸர்வபூதாநி கௌந்தேய	9	7	191
ஸர்வமேதத்ருதம்	10	14	316
ஸஹஸ்ரயுகபர்யந்த	8	17	139
ஸாதிபூதாதிதைவம்	7	30	81
ஸுதுர்தர்ஶமிதம்	11	52	453
ஸந்துஷ்டஸ் ஸததம்	12	14	484
ஸந்நியம்யேந்த்ரியக்ராம	12	4	467
ஸ்தாநே ஹ்ருஷீகேஶ	11	36	429
ஸ்வயமேவாத்மநா	10	15	318
ஹ			
ஹந்த தே கதயிஷ்யாமி	10	19	324

ஸ்ரீமத் பகவத்கீதை.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஏழாவது அத்யாயம்.

பர்-அ] ஆறு அத்யாயங்களடங்கிய முதலாவது பாகத்திஞல் மேலான அடையவேண்டிய ப்ரயோஜனமாகிய பரப்ரஹ்மமாயும், தோஷங்களில்லாதவனையும், எல்லாலோகங்களுக்கும் ஒரேகாரணமாயும், எல்லாவற்றை

தா] ஆறு அத்யாயங்களடங்கிய இந்த இரண்டு பாகங்களுக்கும் ஸங்கதிசொல்லுகிறார்—'ஆறு அத்யாயங்களடங்கிய' என்றாரம்பித்து. 'மேலான' என்றாரம்பித்து 'சொல்லுவதற்காக' என்கிறவரையிலுள்ள வாக்யங்களால் இரண்டாவது ஆறு அத்யாயங்களின் அர்த்தம் சொல்லப்பட்டது. அதற்கு மேலுள்ள வாக்யங்களால் முதலாறு அத்யாயங்களின் அர்த்தம் சொல்லபபட்டது. 'ஆறு அத்யாயங்களடங்கிய முதலாவதுபாகத்திஞல்' என்பதற்கு 'சொல்லப்பட்டது' என்பதோடு அன்வயம் சொல்ல வேண்டியது. [1] "ஆப்ரஹ்மபுவநாத்" என்பது முதலிய ஶ்லோகங்களின் அர்த்தத்தைக் காட்டுகிறார்—'மேலான அடையவேண்டிய ப்ரயோஜனமாகிய' என்று. இத்தால் பரிசுத்தமான ஜீவாத்மா மாத்ரத்தை விலக்குகிறது. மேலான அடையவேண்டிய ப்ரயோஜனமாய் இருக்கைக்குக் காரணங்கள் 'பரப்ரஹ்மமாயும்' என்பது முதலியவை. [2] "பரம் ப்ரஹ்ம பரம் தாம" என்பது முதல் மேலே சொல்லப்போகிறார். தான் புருஷோத்தமன் என்று மேலே சொல்லப்போகிற [3] ஸந்தர்ப்பம் முதலியவைகளின் அர்த்தம் 'தோஷங்களில்லாதவனையும்' என்பது. இத்தால் அறிவில்லாத வஸ்துக்களிலிருக்கிற மாறுதல்களும், அறிவுள்ள வஸ்துக்களிலிருக்கிற க்லேசம் முதலியவைகளும், பரிஹரிக்கப்பட்டன. [4] "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:" என்பது முதலியவைகளின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'எல்லா லோகங்களுக்கும்' என்றாரம்

---

[1] பகவத்கீதை, 8–16. [2] பகவத்கீதை, 10–12.

[3] பகவத்கீதை, 15–வது அத்யாயம். [4] பகவத்கீதை, 10–8.

பாரையும் தெரிந்துகொண்டவனும், எல்லா வஸ்துக்களாயும், ஸத்யஸங்கல்பனும், பெரியவிபூதிகளையுடையவனும் இருக்கிற, லக்ஷ்மிக்கு நாயகனாகிய நாராயணனை அடைவதற்கு உபாயமாகிய அவனைப்பற்றிய உபாஸநத்தைச் சொல்லுவதற்காக, அதற்கு அங்கமாகியும், ஆத்மஜ்ஞானத்தை முன்னிட்டுக்கொண்டிருக்கிற கர்மயோகத்தின் அநுஷ்டானத்தினால் உண்

தா] பித்து. அறிவுள்ள வஸ்துக்கள் அறிவில்லாத வஸ்துக்கள் இவைகளாகிய எல்லா லோகத்துக்கும் நிமித்த காரணமும் உபாதாந காரணமுமாகிய என்றர்த்தம். இப்படி அடையவேண்டியதே காரணம் என்று சொன்னதினால் எல்லாவற்றிற்கும் மேலான ஆகாசம் ஒன்றுண்டு, என்னும் மதம் நிராகரிக்கப்பட்டது. நிமித்த காரணமாயும் உபாதாநகாரணமாயும் இருப்பதற்கு உபயோகங்களாயும் [1] "மத்த: பரதரம்" என்றிவை முதலிய இடங்களில் தாத்பர்யமாய்க்கொள்ளப்பட்ட அர்த்தம 'எல்லாவற்றையும் தெரிந்துகொண்டவனும்' என்பது முதலியவை. 'எல்லா வஸ்துக்களாயும்' என்பதற்கு எல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாகையினால் எல்லாவற்றையும் தனக்கு சரீரமாக உடையவனும் என்றர்த்தம. [2] "ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:" என்றல்லவோ மேலே சொல்லப்போகிறார் [3] "பூமிராப:" என்பது முதலியவைகளாலும் விபூத்யத்யாயம் முதலியவைகளாலும் பெரிய விபூதிகளையுடையவனாயிருக்கை சொல்லப்படப்போகிறது. நாராயணன் என்னும் பதத்தின் அர்த்தமும் 'மேலான' என்றாரம்பித்து 'விபூதிகளையுடையவனும்' என்கிற வரையிலுள்ள பதங்களால் காட்டப்பட்டது. இதனால் சொல்லப்பட்டதாவது [4] "பரத்வாந்நிரவத்யத்வாத் பித்ருத்வாத்திததேசநாத் | அந்தராத்மதயா தோஷப்ரதிக்ஷேபக்ஷமத்வத: || போகலீலார்த்தநிஸ்ஸீமவிபூதியோகத: | ஸ்ரீ[illegible] [illegible] நாராயண: பர: ||" 'அடைவதற்கு உபாயமாகிய அவனைப்பற்றிய உபாஸநத்தை' என்பதற்கு,

[1] பகவத்கீதை 7—7. [2] பகவத்கீதை 11—40. [3] பகவத்கீதை 7—4.

[4] இது தாத்பர்யசந்த்ரிகை செய்தவரின் சுருக்கமான ச்லோகம். இதன் அர்த்தம்—'பரத்வாத்' மேலானவனாகையினாலும் 'நிரவத்யத்வாத்' தோஷங்களில்லாதவனாகையினாலும் 'பித்ருத்வாத்' தகப்பனாகையினாலும் 'ஹிதோபதேசநாத்' நன்மையையறிந்தவனாகையினாலும் 'அந்தராத்மதயா' அந்தராத்மாவாகையினாலும 'தோஷப்ரதிக்ஷேபக்ஷமத்வத:' தோஷங்களைப் போக்கத்தகுந்தவனாகையினாலும் 'போகலீலார்த்தநிஸ்ஸீமவிபூதியோகத:' போகத்துக்காகவும் லீலைக்காகவும்

Bhagavad Geetha / Narasimha Chariar (Ed)
Pub' Chennai. 1914.

பா] டாக்கப்படுகிறதுமான அவனை அடைகிறவனுகிய ஜீவாத்மாவின் உண்மையைப்டார்ப்பது சொல்லப்பட்டது. இப்பொழுது ஆறு அத்யாயங்களடங்கிய நடுபாகத்தினுல் பரப்ரஹ்மமாகிய பரமபுருஷனுடைய ஸ்வரூபமும், பக்தி என்னும் பதத்தினுல் சொல்லப்படுகிற அவனைப்பற்றிய

ரா] பரமாத்மாவைப்பற்றிய உபாஸநமே[1] தத்க்ருது ந்யாயத்தினுல் அவனை அடைவதற்கு உபாயம் ஜீவாத்மாவைப்பற்றிய ஞானமும் கர்மங்களின் அனுஷ்டானமும் அந்த உபாஸநத்தை உண்டுபண்ணுகிறபடியினுல் பரம்பரையாக உபாயம் என்று தாத்பர்யம். அங்கங்களையும் அடைகிறவனையும் சொன்னபிறகு அங்கியையும் அடையவேண்டியதையும் சொல்லுகிறுர், என்று ஸங்கதி என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'இப்பொழுது' என்றுரம்பித்து. கீழ்ச் சொல்லப்பட்ட பரிசுத்தமான ஜீவாத்மாவைவிட வேறுபட்டவன் என்பதையும், மேல்சொல்லப்போகிற மஹிமைகளின் சுருக்கத்தையும் அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறுர்—'பரப்ரஹ்மமாகிய பரமபுருஷனுடைய ஸ்வரூபமும்' என்று. இத்தால் தத்வங்களைப்பற்றிச் சொல்லும் வாக்யங்களிலிருக்கும் பொதுவான ப்ரஹ்ம என்னும் பதம் நாராயணனுகிற விசேஷத்தில் முடிவை உடையது, என்று காட்டப்பட்டது. பிறகு மோக்ஷத்திற்கு உபாயத்தைச் சொல்லும் வாக்யங்களிலிருக்கும் பொதுவான "𑌵𑍇𑌦𑌨𑌂"(அறிவு)"𑌉𑌪𑌾𑌸𑌨𑌂"(இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருத்தல்) என்னும் பதங்களும் விசேஷத்திலேயே முடிகின்றன என்று சொல்லுகிறுர்—'பக்தி என்னும் பதத்தினுல் சொல்லப்படுகிற' என்றுரம்பித்து. இப்படி இரண்டு வாக்யங்களாலும் இந்த இரண்டு ஆறு அத்யாயங்களின் ஸங்க்ரஹ ஶ்லோகங்களும் வ்யாகபானம் செய்யப்பட்டன. [2] '𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑍇 𑌨𑌿𑌷𑍍𑌠𑍇 𑌯𑍋𑌗𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌸𑍁𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍇 । 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌷𑌟𑍍𑌕𑍇𑌨 𑌚𑍋𑌦𑌿𑌤𑍇 ॥ 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 𑌭𑌗𑌵𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑍋 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌃

ஏற்பட்ட எல்லையில்லாத இரண்டு விபூதிகளையுடையவனுகையினுலும் 'ஸ்ரீமத்தவாத்' லக்ஷ்மிக்கு நாயகனுனபடியினுலும் 'அயம்' இந்த 'நாராயண:' நாராயணன் 'உபாஸ்ய:' உபாஸிக்கத்தக்கவன் 'பர:' மேலான 'ப்ராப்ய:' அடையத்தகுந்தவனும்.

[1] வேதாந்த சாஸ்த்ரத்தில் ஏற்பட்ட ஒருந்யாயம் பரமாத்மாவை எவ்விதமாக இங்கே உபாஸிக்கிறுனே அப்படியே அடைகிறுன் என்பது அதின்கருத்து.

[2] கீதார்த்தஸங்கரஹம், 2, 3 ச்லோகங்கள்.

உபாஸனமும் சொல்லப்படுகிறது. இது மேலே * "யத: ப்ரவ்ருத்திர்பூதாநாம் யேந ஸர்வமிதம் ததம் | ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ: ||" என்றாரம்பித்து † "விமுச்ய நிர்மம: ஶாந்தோ ப்ரஹ்மபூயாய கல்பதே || ப்ரஹ்மபூத: ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி |" "ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம் |" என்னுமளவாகச் சுருக்கிச் சொல்லப்படப் போகிறது.

தா] ப்ரக்ருதிஜை: || என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது. 'ஆத்மஜ்ஞானத்தை முன்னிட்டுக்கொண்டிருக்கிற' என்பதினால் 'ஸம்ஸ்க்ருதே' என்னும் பதம் வ்யாக்யானம் செய்யப்பட்டது. அது முன்சொல்லிய இவ்விதஜ்ஞானத்தினால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டிருக்கிறது என்பது முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறதல்லவா. "யோகக்ஷேமஸம்ஸ்க்ருதே" என்கிற இடத்தில் யோகமாவது வேறு விஷயங்களிலிருந்து மனதின் வ்யாபாரத்தைத் தடுத்தல். அதினாலுண்டாகும ஆத்மாவை நேராகப் பார்த்தல் "ஆத்மாநுபூதி" என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது. ஆகையினால புனருக்தி தோஷம் இல்லை என்கிற அபிப்ராயத்தினால் 'உண்மையைப் பார்ப்பது' என்று சொல்லப்பட்டது. 'பரப்ரஹ்மமாகிய' என்பது "தத்த்வயாதாத்ம்ய" என்னும் பதத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறது. இவ்விடத்தில் "தத்த்வ" என்பது ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. "யாதாத்ம்ய" என்பது உண்மையான ஸ்வபாவத்தைச்சொல்லுகிறது. பக்தி கர்மங்களின் அநுஷ்டானத்தினால் உண்டாக்கப்படுகிற ஆத்மஸாக்ஷாத்காரத்தினாலுண்டாகிறது என்பது பதினெட்டாவது அத்யாயத்தில் சொல்லப்படப்போகிறது என்று சொல்லுகிறார்—'இது மேலே' என்றாரம்பித்து. [1] 'அவனையே அறிந்துகொண்டு ஸம்ஸாரத்தைத்தாண்டுகிறான்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யமிருப்பதால், அறிவது மாத்ரத்தினால் மோக்ஷமுண்டென்று தோன்றுகிறதே; [2] 'உபாஸனம் செய்யவேண்டும்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யமிருக்கிறபடியால் உபாஸனமாகிய அறிவினால் மோக்ஷமுண்டானாலுமுண்டாகட்டும். அப்படியிருந்தாலும் பக்தியினால் மோக்ஷமுண்டாகும் என்று ஓரிடத்திலும் ஶ்ருதியில் சொல்லப்படவில்லையே, கர்மங்களுடன் சேர்ந்து மோக்ஷத்திற்குக் காரணம் என்று ஶ்ருதியில் சொல்லியிருப்பதும்

---

* பகவத்கீதை, 18–46 † பகவத்கீதை, 18–53, 54.

1 ச்வேதாச்வதரோபநிஷத் 3–8. 2 ப்ருஹதாரண்யகோபநிஷத் 1-4-15.

பா] பக்தி என்னும் தசையையடைந்த உபாஸனமே பரமாத்மாவை அடைவதற்கு உபாயம் என்று வேதாந்தவாக்யங்களிலேற்பட்டிருக்கிறது. *'அவனையே அறிந்துகொண்டு ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறான்' †'அவனை இவ்விதமாகத் தெரிந்துகொண்டவன் இவ்விடத்திலேயே மோக்ஷத்தையடைந்தவனாகிறான்' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்களில் சொல்லியிருக்கிற அறிவு, ‡'அடே ஆத்மாபார்க்கத்தக்கவன்' என்றாரம்பித்து 'த்யானம் செய்யத்தக்கவன்' §'ஆத்மாவாகிய லோகத்தை உபாஸனம் செய்யவேண்டியது' ¶'ஸத்வகுணம் சுத்தமானால் நிலையான நினைவு உண்டாகும் (அப்படிப்பட்ட) நினைவு உண்டானால் எல்லா ஸம்ஸாரபந்தங்களுக்கும் நீங்குதல் உண்டாகும்' ||'பராபரனாகிய அவன் பார்க்கப்பட்டானேயானால் மனதின் பந்தங்கள் விட்டுப்போகின்றன, எல்லா ஸம்ஶயங்களும் நீங்கிவிடுகின்றன' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளின் அர்த்தத்தையே சொல்லவேண்டியதாகையால் இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருத்தலும், நேராகப்பார்ப்பதுபோல்

தா] *தள்ளமுடியாதே, பரமபுருஷனைப்பற்றிய உபாஸனமே மோக்ஷத்திற்குஸாதநம் என்பதும் சொல்லமுடியாதே. ஏனெனில் ருத்ரன், இந்த்ரன், முதலியவர்களைப்பற்றிய உபாஸனங்களும் மோக்ஷ ஸாதனங்களாக அதர்வ ஶிரஸ்ஸு ப்ரதர்தந வித்யை முதலிய இடங்களில் ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறபடியால், என்றிவை முதலிய ஆக்ஷேபங்களை மனதில் வைத்துக்கொண்டு ஸமாதானம் சொல்லுகிறார்—*' பக்தி என்னும் தசையையடைந்த ' *என்றாரம்பித்து. உபாஸனமே மோக்ஷத்திற்கு ஸாதனம், அறிவது மாத்ரம் அல்ல, என்று ஒரு ப்ரதிஜ்ஞை; அதிலும் பக்தி என்னும் தசையை அடைந்ததே என்று இரண்டாவது ப்ரதிஜ்ஞை; இப்படிப்பட்ட உபாஸனம் மாத்ரமே கர்மமும் சேர்ந்தல்ல என்று மூன்றாவது ப்ரதிஜ்ஞை; அதுவும் பரமாத்மாவைப் பற்றியதே என்று நான்காவது ப்ரதிஜ்ஞை; இது* 'பரமாத்மாவை அடைவதற்கு உபாயம்' *என்பதினால் தத்க்ரது ந்யாயத்தை அநுஸரித்து ஏற்பட்டது.* ' வேதாந்த வாக்யங்களில் ஏற்பட்டிருக்கிறது ' *என்பதற்கு, இவை நான்கும் வேதாந்த வாக்யங்களினாலேயே ஏற்*

---

* *ச்வேதாச்வதரோபநிஷத்*, 3-8. † *புருஷஸூக்தம்.*

‡ *ப்ருஹதாரண்யகம்*, 6-5-6. § *ப்ருஹதாரண்யகம்*, 1-4-15.

¶ *சாந்தோக்யோபநிஷத்*, 7-26-2. || *முண்டகோபநிஷத்*, 2-2-8.

பா]இருப்பதும் த்யானம் உபாஸனம் என்னும் பதங்களால் சொல்லப்படுகிறதுமானதே என்று தெரிந்துக்கொள்ளப்படுகிறது. மறுபடியும் * 'இந்த

தா] பட்டவைகள் நம்மால் கல்பிக்கவேண்டியவைகளுமல்ல,[1] உபப்ரும்ஹணங்களை அபேக்ஷிக்கக்கூடியவைகளுமல்ல என்பது தாத்பர்யம். இவைகளுக்குள் முதலாவது ப்ரதிக்ஞையை ஸ்தாபிக்கிறார்—'அவனையே' என்றாரம்பித்து, 'தெரிந்துகொள்ளப்படுகிறது' என்கிறவரையில். "ச்ரோதவ்ய: மந்தவ்ய:" என்கிற இரண்டு பதங்களும் தன் இஷ்டத்தினால் செய்யக்கூடியவைகளான வேதாந்தத்தைக் கேட்பது, அப்படிக் கேட்ட அர்த்தம் மனதில் உறுதிப்படுவதற்காக மனனம் செய்வது, இவைகளை அநுவதிக்கிறபடியினால் அந்தப் பதங்களை விட்டு பார்க்கத்தக்கவன், த்யானம் செய்யத்தக்கவன், என்று விதிக்கிற பாகம் மாத்ரம் இவ்விடத்தில் எடுக்கப்பட்டது. த்யானம், உபாஸனம், இவை இரண்டு பதங்களும் இவ்விடத்தில் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகின்றன என்று காட்டுவதற்காக, இரண்டு பதங்களுள்ள வாக்யங்களை இங்கெடுத்தது. பார்க்கத்தக்கவன் த்யானம் செய்யத்தக்கவன் என்கிற இரண்டு பதங்களும் வெவ்வேறு அர்த்தங்களைச் சொல்லுகிறதாக லோகத்தில் ப்ரஸித்தங்களாகையாலும், ஒரே வாக்யத்திலிருக்கிற இவை இரண்டு பதங்களும் ஒரே அர்த்தத்தைச் சொல்லுவதாயிருந்தால் புநருக்தி என்னும் தோஷம் வருகிறபடியாலும், பார்ப்பதும் த்யானம் செய்வதும் தனித்தனியாகவே விதிக்கப்படுகின்றன என்று ஆக்ஷேபம்வரில், அதற்கு ஸமாதானமாக அவைகளுள் ஒன்று பொதுவானபதமாகவும் மற்றொன்று விசேஷமான பதமாகவும் இருக்கிறபடியால், ஒரே அர்த்தத்தையே சொல்லுகின்றன என்று காட்டுவதற்காக, நினைப்பதுமாத்ரத்தையும் பார்ப்பது மாத்ரத்தையும் தனித்தனியாக ஸம்ஸாரபந்தம் விடுவதற்குக்காரணமாகச் சொல்லுகிறதாகையினாலேயே, ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிறவாக்யங்களை எடுத்திருக்கிறது. இத்தால் சொல்லப்பட்டதாவது, ஒரே ஸந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டிருக்கிற விசேஷத்தில் அதே ஸந்தர்ப்பத்தில் சொல்லியிருக்கும் பொதுவான பதங்களுக்குத் தாத்பர்யம் என்பது ந்யாயத்தினால் ஏற்பட்டது. ஆகையினால் இந்த ஸந்தர்ப்பத்தில் "வேதனம்" (அறிவு)

---

* முண்டகோபநிஷத், 3-2-3.

[1] இதிஹாஸம் புராணம் முதலியவை.

தா] முதலிய பொதுவான பதங்களுக்கு த்யானம் உபாஸனம் என்னும் பதங்களால் சொல்லப்படுகிற விசேஷத்திலே தாத்பர்யம் ஒப்புக்கொள்ளவேண்டும். த்யானமாவது எண்ணெயின் தாரையைப்போல இடைவிடாமல் உண்டாகிற நினைவுகளின் தொடர்ச்சி என்று 'இடைவிடாத நினைவு' என்றர்த்தமுள்ள ஸ்ருதிவாக்யம் முதலியவைகளால் ஏற்பட்டிருக்கிறது. அந்த இடைவிடாத நினைவும் எல்லா ஸம்ஸார பந்தங்களும் விடுவதற்குக் காரணமாக விதிக்கப்பட்டிருக்கிறது; பார்ப்பதும் அதற்குக் காரணமாக விதிக்கப்பட்டிருக்கிறது; இவைகள் இரண்டும் தனி உபாயங்களல்ல. ஏனெனில், இதில் ஒன்று அதிக ப்ரயாஸமுள்ளது, மற்றொன்று அவ்வளவு ப்ரயாஸமில்லாததாகையினாலும் இவை இரண்டுக்கும் ப்ரயோஜனம ஸமமாகையினாலும் ப்ரயாஸமில்லாத உபாயமிருக்கும் பொழுது அதிகப்ரயாஸமுள்ள உபாயத்தை ஒருவரும் அங்கீகரிக்கமாட்டாராகையினாலே அது உபாயமின்றிக்கே போகவேண்டிவருமாகையால், ஒன்றை வழிபாகக்கொண்டு மற்றொன்று உபாயம் என்பது ஸரியல்ல. அப்பொழுது ஒன்றை விதித்த இடத்திலேயே மற்றொன்றும் ஏற்பட்டபடியினாலே தனித்தனியாக விதிக்கவேண்டியதில்லையாகையால் பார்ப்பதை "ஸ்ம்ருதி" (நினைவு) என்னும் பதத்தினால் உபசாரமாய்ச் சொல்லுவதில் ஒரு குணமுமில்லை. ஆகையால் நினைவே "தர்சந" (பார்ப்பது) என்னும் பதத்தினால் விசேஷித்துச் சொல்லப்படுகிறது. நினைவு பார்ப்பதாகையாவது விசதமாய்த் தோன்றுகிறபடியினால் பார்ப்பதுபோலிருத்தல் தான் பயந்தவன் காமீ இவர்களுக்கு நினைவே ஊற்றத்தின் மிகுதியினால் பார்ப்பது போலிருத்தலை அடையும் என்பது [1] "வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பஶ்யாமி சீரக்ருஷ்ணாஜிநாம்பரம் | க்ருஹீததநுஷம் ராமம் பாசஹஸ்தமிவாந்தகம்" || [2] "லீநேவ ப்ரதிபிம்பிதேவ" என்றிவை முதலிய இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா; இவ்

---

[1] ஸ்ரீமத்ராமாயணம் ஆரண்யகாண்டம், 39--14 'வ்ருக்ஷே வ்ருக்ஷே ச' மரங்கள்தோறும் 'சீரக்ருஷ்ணாஜிநாம்பரம்' மரவுரியையும் மான்தோலையும் தரித்தவராயும் 'க்ருஹீததநுஷம்' பிடிக்கப்பட்ட வில்லையுடையவராயும் 'பாசஹஸ்தம்' பாசத்தைக் கையில் தரித்த 'அந்தகமிவ' யமனைப்போலுமிருக்கிற 'ராமம்' ராமனை 'பஶ்யாமி' பார்க்கிறேன்; (இது ராவணனிடத்தில் மாரீசன் வார்த்தை.)

[2] மாலதீமாதவம் அங்கம்-5 மாலதியினிடத்தில் ஆசையுள்ள மாதவன் வார்த்தை 'லீநேவ' ஒளித்துக்கொண்டவள் போலும 'ப்ரதிபிம்பிதேவ' ப்ரதி பலித்துத் தோன்றினாள்போலும்.

பா] ஆத்மா அனேகமான கேள்விகளாலும் எப்பொழுதும் மனனம் செய்வதாலும் த்யானம் செய்வதினாலும் அடையத்தகுந்தவனல்ல; எவனை இந்த ஆத்மா விரும்புகிறானோ அவனுக்கு இந்த ஆத்மா தன்னுடைய ஸ்வரூபத்தை ப்ரகாசப்படுத்துகிறான் என்றர்த்தமுள்ள ச்ருதிவாக்யத்தினால் இன்னும்சில விசேஷங்கள் சொல்லப்பட்டிருக்கிறபடியினால், பரமாத்மா

ரா] விதமாக 'த்ருவாஸ்ம்ருதி' (நினைவு) 'தர்சந' (பார்ப்பது) இவை இரண்டு பதங்களும் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகின்றன என்பது ஏற்பட்டபடியாலும், ஒரேவாக்யத்திலிருக்கிற பார்க்கத்தக்கவன் த்யானம் செய்யத்தக்கவன் என்கிற இவை இரண்டு பதங்களும், ஒன்று பொதுவாகவும் மற்றொன்று விசேஷமாகவும் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகின்றன என்று. பிறகு இரண்டாவது ப்ரதிஜ்ஞையை நிரூபிப்பதற்காக சொல்லுகிறார்—'மறுபடியும்' என்றாரம்பித்து. இதனால் சொல்லப்பட்டதாவது, இந்த ஆத்மா என்றர்த்தமுள்ள வாக்யம் முதல் மேல்சொல்லப்படுகிற குணமில்லாத கேட்பது மனனம் செய்வது த்யானம் செய்வது இவைகளையே விலக்கியிருக்கிறது. அவைகளை முழுமையுமே விலக்குகிறதென்னில் அனேகப்ரமாணங்களுக்கு விரோதம் வருமாகையினால் 'எவனை இந்தப் பரமாத்மா விரும்புகிறானோ' என்றர்த்தமுள்ள வாக்யம முதலிய ச்ருதிவாக்யத்தினால் பகவான் விரும்புவதற்குக் காரணமான தன்னுடைய ப்ரயத்னத்தினால் உண்டாக்கக்கூடிய ஒரு விதமான குணம் விதிக்கப்படுகிறது. பகவான் ஸ்வதந்த்ரன் என்பதை மாத்ரம் சொல்லுவதாயிருந்தால், பகவானுக்கு பக்ஷபாதம் தயையில்லாமை முதலியதோஷங்கள் வருமாகையினாலும் [1] சாஸ்த்ரங்கள் வ்யர்த்தமாகையினாலும அதுயுக்தமல்ல; ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் குணத்தைச்சொன்னபோதிலும் வேறுவிதிக்கத்தகுந்ததில்லாமையால் [1] சாஸ்த்ரம வ்யர்த்தமதான்; அவ்விதமாக பகவான் விரும்புவதற்குக்காரணமாயும் நம்முடைய ப்ரயத்னத்தினால் உண்டாக்கக் கூடிய குணம் பக்திதான். மிகவும் ப்ரியனானவன்தான் விரும்பத்தகுந்தவனாகிறான், பரமாத்மாவினிடத்தில் ப்ரீதியுள்ளவனே தானே அவனால் விரும்பத்தகுந்தவனாகிறான். [2] 'ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:' என்கிற பகவானுடைய வார்த்தையினாலேயே அப்படி ஏற்படுகிறபடியினால் என்று மற்ற உபாயங்களில் காணப்படாத இந்த ப்ரீதி மிகவும் ஸாதகமானது என்பதைக்காட்டுகிறார்—'நினைக்கப்படுகிற' என்றாரம்பித்து.

---

[1] பக்திப்ரபத்தியை விதிக்கிற சாஸ்த்ரங்கள். [2] பகவத்கீதை, 7-17.

பா] லினால் விரும்பத் தகுந்தவனுயிருக்கைக்கு காரணமாக நினைக்கப்படுகிற வஸ்து மிகவும் ப்ரியமாயிருக்கிறபடியினாலே தானும் மிகவும் ப்ரியமான தொடர்ச்சியான நினைவே உபாஸனம் என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறதென்று நிஸ்சயிக்கப்படுகிறது. இதுவே பக்தி என்று சொல்லப்படுகிறது, * "ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே"

தா] 1 "யா ப்ரீதிரவிவேகாநாம்" என்றாரம்பித்து, 2 "தேஷுதேஷ்வச்யுதா பக்திரச்யுதாஸ்து ஸதா த்வயி" 3 "க்வ நாகப்ருஷ்டகமநம் புநராவ்ருத்திலக்ஷணம் । க்வ ஜபோ வாஸுதேவேதி முக்திபீஜமநுத்தமம் ॥" என்றிவை முதலிய வசனங்களால் பகவானிடத்தில் பக்தி மிகவும் ஸுகம் என்பது ஏற்பட்டிருக்கிறது. இப்படியிருந்தாலும் பக்தி மோக்ஷத்திற்கு உபாயம் என்று எப்படி ஏற்பட்டது, என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'இதுவே' என்றாரம்பித்து. பூஜிக்கத்தக்கவரிடத்தில் ப்ரீதியே பக்தி என்று தாத்பர்யம். "ஸ்நேஹபூர்வம்" என்கிறவிடத்தில் சொல்லுகிற ஸ்நேஹமும் பூஜிக்கத்தக்கவர்களிடத்தில் செய்யும் ப்ரீதியே என்றெண்ணிக்கொள்ளவேண்டியது, அப்படிக்கொள்ளாவிடில் ப்ரீதியுடன் தன் பத்னியை நினைத்துக்கொள்ளுதலும் பக்தியாக வேண்டிவருமாகையால். இப்படி உபாஸனமே பக்தி என்னும் தசையையடைகிறது என்று ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில் ஶ்ருதிஸ்ம்ருதி இவைகளுக்கு ஒன்றுக்கொன்று விரோதம்; ஒப்புக்கொண்டால், ஸ்ம்ருதி 4 உபப்ரஹ்மணமாயும் ஶ்ருதி அத்தால்

---

* முதல் ஷட்கம் 69-வது பக்கம் 2-வது புட்நோட்டைப் பார்க்க.

1 விஷ்ணுபுராணம், 1–20–19. 'அவிவேகாநாம்' தேஹாத்ம விவேகமில்லாதவர்களுககு சப்தம் முதலிய விஷயங்களில் 'யா' எந்த 'ப்ரீதி:' ப்ரீதியோ.

2 விஷ்ணுபுராணம், 1–20–18. 'தேஷுதேஷு' அந்தந்த ஜன்மங்களில் 'அச்யுத' பகவானே 'த்வயி' உம்மிடத்தில் 'பக்தி.' பக்தியானது 'ஸதா' எப்பொழுதும் 'அச்யுதா' நழுவாததாய் 'அஸ்து' இருக்கவேண்டியது.

3 விஷ்ணுபுராணம், 2–6–44. 'புநராவ்ருத்திலக்ஷணம்' திரும்பிவருவதை ஸ்வபாவமாக உடைய 'நாகப்ருஷ்டகமனம்' ஸ்வர்கலோகம் போவது 'க்வ' எங்கே; 'முக்திபீஜம்' மோக்ஷத்திற்குக காரணமான 'அநுத்தமம்' மிகவும் சிறந்த 'வாஸுதேவேதி' வாஸுதேவா என்று 'ஜபம்' ஜபம் செய்வது 'க்வ' எங்கே.

4 ச்ருதியின் அர்த்தத்தை விவரமாய்த் தெரிவிக்கிறது.

பா] என்றிவை முதலான வசனங்களிருக்கிறபடியினால். ஆகையாலேயே *'அவனை இப்படித் தெரிந்துகொண்டவன் இவ்விடத்தில் மோக்ஷத்தை அடைந்தவனாகிறான். மோக்ஷத்துக்கு வேறு வழி இல்லை' என்கிற அர்த்தமுள்ள ஸ்ருதிவாக்யமும் † "நாஹம் வேதைர் ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா | ஸக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம் யதா || பக்த்யா த்வநந்யயா ஸக்ய அஹமேவம்விதோர்ஜுந | ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ||" என்கிற

தா] உபப்ரஹ்மணம் செய்யப்படுகிறதாயும் இருக்கிறபடியினால், ஒன்றுக்கொன்று அநுகூலமாக இருக்கையும் உண்டாகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஆகையாலேயே' என்றாரம்பித்து. "வேதந" (அறிவு) என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட வேதநத்திற்கு உபாயம் பக்தியானபடியினால் என்பது கருத்து. ப்ரஹ்மத்தைப்பற்றிய அறிவைத்தவிர வேறு உபாயமில்லை என்று நடுத்து, அதின்றுபாயம் அவனைப் பற்றிய அறிவைத்தவிர வேறு உபாயமில்லை என்று விலக்குகின்ற ஸ்ருதியில் ஏற்பட்டிருக்கிறது; அவனிடத்தில் பக்தியைத் தவிர வேறு உபாயமில்லை என்கிற விலக்குதல் ஸ்ம்ருதியில் ஏற்பட்டிருக்கிறது. இவை இரண்டும் பக்தி, வேதநம் என்னும் பதங்களால் சொல்லப்படுகிற வஸ்து ஒன்றாக இருந்தாலல்லவோ பொருந்தும். அப்படியில்லாவிடில் ஒன்றுக்கொன்று விரோதமே வரும் என்று தாத்பர்யம். இப்படி இரண்டு ப்ரதிஜ்ஞைகள் ஸோபாதகமாக்கப்பட்டன. மற்ற இரண்டு ப்ரதிஜ்ஞைகளும் நாஸ்தீத்யத்தினால் ஸாதிக்கப்பட்டன. எப்படி என்னில் அறிவைத் தவிர வேறு உபாயமில்லை என்று தடுத்திருப்பதினாலேயே கர்மமும் வேறொரு உபாயமென்னும் பக்ஷம் நிராகரிக்கப்பட்டது. ஆனால் கர்மங்களை அபேக்ஷிக்கிறதுவோ அங்கமாக என்ற அந்தந்த ஸ்ருதிவாக்யங்களின் அர்த்தத்தை நிரூபிப்பதினாலேயே ஏற்படுகிறது. ஸ்வேதாஸ்வதரோபநிஷத்தின் வாக்யங்கள் புருஷஸூக்தத்திலிருக்கும் வாக்யங்கள் இவைகள் ஒரே விஷயத்தைப்பற்றிச் சொல்லுகின்றன என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறபடியால், எல்லா ஸாகைகளிலும் இருக்கும் புருஷஸூக்தத்தின் வாக்யங்களினுடைய அர்த்தத்தையே எல்லா

---

* புருஷஸூக்தம். † பகவத்கீதை, 11–53, 54.

பா] வசனங்களும் ஒரே அர்த்தத்தைச்சொல்லுகின்றன என்பது ஸித்தித்தது. இதில் ஏழாவது அத்யாயத்தில் உபாஸனம் செய்யப்படுகிறவனாகிய பரமபுருஷனுடைய ஸ்வரூபத்தின் உண்மையும், ப்ரக்ருதியினால் அதற்கு மறைவும், அது நிவ்ருத்திப்பதற்காக பகவானிடத்தில் ப்ரபத்திசெய்ய வேண்டுமென்பதும், உபாஸனம் செய்பவர்களுடைய மாதிரிகளின் வித்யாஸங்களும், ஞானியின் மேன்மையும் சொல்லப்படுகிறது.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚

𑌮𑌯𑍍𑌯𑌾𑌸𑌕𑍍𑌤𑌮𑌨𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌯𑍋𑌗𑌂 𑌯𑍁𑌞𑍍𑌜𑌨𑍍𑌮𑌦𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 ।
𑌅𑌸𑌂𑌶𑌯𑌂 𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌮𑌾𑌂 𑌯𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌤𑌚𑍍𑌛𑍃𑌣𑍁 ॥ ௧

தா] உபநிஷத்துக்களும் சொல்லுகின்றன என்பதும் நிரூபிக்கப்பட்டது. அதிலும் [1] 'மஹானான ப்ரபுவான இந்தப் புருஷன் ஸத்வகுணத்தை உண்டாக்குகிறவன்' என்றர்த்தமுள்ள வாக்யமிருக்கிறபடியினால் ஶ்வேதாஶ்வதரோபநிஷத்து புருஷனைப்பற்றிச் சொல்லுகிறது என்பது வ்யக்தமாயிருக்கிறது. அதில சொல்லியிருக்கும "ஶிவ" முதலிய பதங்களும் சுத்தி என்னும் குணம் பகவானிடத்தில் இருக்கிறபடியினால் அதைச் சொல்லிக்கொண்டு பகவானையே முக்யமாகச்சொல்லுகின்றன. அதர்வ ஶிரஸ்ஸு ப்ரதர்தந வித்யை முதலிய இடங்களிலும் ருத்ரன் இந்த்ரன் முதலியவர்களுக்கு அந்தர்யாமியான பரமபுருஷனைப்பற்றிய உபாஸநமே விதிக்கப்படுகிறது, என்று சாரீரகஸூத்ரத்தில் ஸ்த்தாபிக்கப்பட்டது. 'இதில்' என்பதற்கு இந்த நடு ஆறு அத்யாயங்களுக்குள் என்றர்த்தம். 'உபாஸநம் செய்யப்படுகிறவனாகிய' என்பதினால் முன் அத்யாயத்தில் ப்ரஸ்தாவித்ததோடு ஸங்கதியும் காட்டப்பட்டது. உபாஸனம் செய்யப்படுகிறவனாகிய பரமபுருஷனல்லவோ ஆறுவது அத்யாயம் கடைசி ஶ்லோகத்தில் "𑌮𑌾𑌂" (என்னை) என்று ப்ரஸ்தாவிக்கப்பட்டான். இத்தால் [2] "𑌸𑍍𑌵𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌤𑌿𑌰𑍋𑌧𑌿𑌃 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌿𑌃 । 𑌭𑌕𑍍𑌤𑌭𑍇𑌦𑌃 𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍈𑌷𑍍𑌠𑍍𑌯𑌂 𑌸𑌪𑍍𑌤𑌮 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥" என்கிற ஸங்க்ரஹ ஶ்லோகமும் வ்யாக்யானம் செய்யப்பட்டது.

---

[1] ச்வேதாச்வதரோபநிஷத், 3-12.

[2] கீதார்த்தஸங்க்ரஹம், 11 ச்லோகம்.

ஸ்ரீ பகவாந் ஸ்ரீ க்ருஷ்ணன், உவாச சொன்னார்.

ப-ரை.] பார்த்த ஓ அர்ஜுன, மயி என்னிடத்தில், ஆஸக்தமநா: மிகவும் பற்றுதலை அடைந்த மனதை உடையவனாய், மதாஶ்ரய: என்னையே ஆதாரமாக உடையவனாய், யோகம் (என்னைப்பற்றிய) யோகத்தை, யுஞ்ஜந் செய்கிற, (நீ) மாம் என்னை, அஸம்ஶயம் ஸந்தேஹமில்லாமல், ஸமக்ரம் முழுமையும், யதா எப்படி, ஜ்ஞாஸ்யஸி அறியப்போகிறாயோ, தத் அதை, ஶ்ருணு கேள். க

பா] என்னிடத்தில் மிகவும் விருப்பத்துடன் பற்றுதலை உடைய மனதை உடையவனாய், அதாவது என்னிடத்திலிருக்கும் ப்ரீதியின் மிகுதியினால் என்னுடைய ஸ்வரூபம், குணங்கள், வ்யாபாரங்கள், விபூதிகள் இவைகளோடு பிரிவு உண்டாயிற்றேயானால், அந்த க்ஷணத்திலேயே சிதறிப்போகும் ஸ்வபாவமுடையவனாகையினால் என்னிடத்

தா) பிறகு கீழ் பக்தி செய்யவேண்டியவனாக "மாம்" என்று ப்ரஸ்தாவிக்கப்பட்ட தன்னையே, அந்த பக்தி முடிவு பெறுவதற்காக உள்ளபடியே உபதேசிக்கிறேன், என்று இந்த ஸ்லோகத்தினால் பகவான் சொன்னார். "ஆஸக்த" என்கிற இடத்தில் "ஆங்" என்னும் உபஸர்க்கத்தினால் உபாஸநம் செய்வதற்காக உண்டாகவேண்டிய விருப்பம் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'மிகவும் விருப்பத்துடன்' என்று. அதையே காரணத்துடன் விஸ்தாரமாகச்சொல்லுகிறார்—'அதாவது' என்று ஆரம்பித்து. 'விபூதிகள்' என்னும் பதத்தினால் இவ்விடத்தில் பகவானுக்கு அஸாதாரணங்களான கைங்கர்யம் செய்கிறவர்களும் குடை முதலிய வஸ்துக்கள் ஆபரணங்கள் முதலியவைகளும் சொல்லப்படுகின்றன. லீலாவிபூதிநித்யவிபூதி என்கிற விபூதிகள் மாத்ரமல்ல, அவைகளோடு பிரிவு ஒரு பொழுதும் உண்டாகாததாகையினால். அதன்றிக்கே—விபூதிகளுடன் பிரிவாவது பகவானுடைய விபூதிகள் இவை, என்கிற அநுபவமில்லாமையாகவுமாம். ஸ்வரூபம் முதலியவைகளோடு பிரிவும் தன்னிஷ்டப்படி அநுபவமில்லாமையே. 'சிதறிப்போகும் ஸ்வபாவமுடையவனாகையினால்' என்பதற்கு, ஒரு கார்யத்தையும் செய்வதற்கு யோக்யதை இல்லாமையாகிற சிதறுதல் உண்டாகிறபடியினால் என்று அர்த்தம். இதனால் மனதுக்கு இப்பாதிரியான ஸ்வபாவமுண்டாகும் என்று சொல்லப்படுகிறது. புநருக்தி தோஷம் வருமே என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரிப்பதற்காக

பா] த்தில் மிகவும் உறுதியாக வைக்கப்பட்ட மனதை உடையவனாய், அப்படியே தானும் என்னைவிட்டுச் சிதறிப்போகக்கூடியவனாகையினால், என்னை ஒருவனையே ஆதாரமாக உடையவனாய்க்கொண்டு என்னைப் பற்றிய யோகத்தைச் செய்ய ப்ரவ்ருத்தித்த நீ, யோகத்துக்கு விஷயமாகிய என்னை ஸந்தேஹமில்லாமலும் பூர்த்தியாகவும் எந்த என்றால் சொல்

தா] 'தானும்' என்று சொல்லப்பட்டது. "ஸ்வாஶ்ரய:" என்கிற இடத்தில் 1 "ஸலிலக்ஷ:" என்றிவை முதலிய இடங்களில் போல என்னையே என்று சொல்லப்படுகிறது என்று காட்டுகிறார்—'என்னை ஒருவனையே ஆதாரமாக உடையவனாய்க்கொண்டு' என்று என்னுடைய அநுபவத்தையே ஆதாரமாக என்று அர்த்தம். யோகத்துக்கு உபகாரம் செய்கிற பக்தி செய்யத்தகுந்த விஷயமாகிய பகவானுடைய தத்வஜ்ஞானம் இந்த அத்யாயத்தில் சொல்லப்படுகிறதே யொழிய, நேராக யோகத்தின் அநுஷ்டானம் சொல்லப்படவில்லை, என்கிற அபிப்ராயத்தினால் "யுஞ்ஜந்" என்கிற பதத்தின் தாத்பர்யத்தைச் சொல்லுகிறார்—' யோகத்தைச்செய்ய ப்ரவ்ருத்தித்த' என்று. ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படாமலிருக்கிறதைச் சொல்லுகிற வர்த்தமான என்கிற பதத்தின் அர்த்தத்தில் ஆரம்பம் மாத்ரம் இங்கே சொல்லப்படுகிறது, என்று தாத்பர்யம். யோகம் செய்வதற்கு முன்னமேயே உள்ளபடி அறியவேண்டும் என்று ஏற்படுவதற்காக 'யோகத்திற்கு விஷயமாகிய' என்று சொல்லப்பட்டது. "அஸம்ஶயம், ஸமக்ரம்" என்கிற இரண்டுபதங்களும், க்ரியைக்கு விசேஷணங்கள் "ஸமக்ரம்" என்னும் பதம் ஸந்தேஹங்கள இல்லாமைக்காக எல்லாஸ்வபாவங்களோடும் கூடியவனாக என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது, என்று காட்டுவதற்காக 'பூர்த்தியாகவும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. விசேஷத்தைப்பார்ப்பதினாலன்றோ ஸம்சயம் நிவ்ருத்திக்கும். "ஜ்ஞாநம்" என்று மேலே சொல்லி இருப்பதினாலும், மேல் ஶ்லோகத்தின் அர்த்தத்தை யோசிப்பதினாலும், மேல் ஶ்லோகத்தில் நான் சொல்லப் போகிறேன் என்று சொல்வதும், 'கேள்' என்று இங்கே சொல்வதும், ஒரே விஷயத்தைப்பற்றி இருக்கவேண்டும் என்று ஏற்படுகிறபடியினால் இவ்விடத்தில் "யதா" என்னும்

---

1 ஸ்ரீமத்ராமாயணம் ஆரண்யகாண்டம். ஜலத்தை ஸாப்பிடுகிறவர்கள் என்று அர்த்தம். எல்லோரும் ஜலத்தை ஸாப்பிடுகிறவர்களாகையினாலே தனித்துச் சொன்னது ஜலத்தையே ஸாப்பிடுகிறவர்கள் என்று காட்டுவதுபோல.

பா] லப்பட்ட ஞானத்தினுல் அறிகிருயோ அந்த ஞானத்தை ஸாவதா னத்துடன் கூடிய மனதை உடையவஞக இருந்து கேள். க

ஜ்ஞானம் தேஹம் ஸவிஜ்ஞானமிதம் வக்ஷ்யாம்யஶேஷத: ।
யஜ்ஜ்ஞாத்வா நேஹ பூயோऽந்யஜ்ஜ்ஞாதவ்யமவஶிஷ்யதே ॥

ப-ரை] அஹம் நான், தே உனக்கு, ஸவிஜ்ஞானம் விஜ்ஞானத்தோடு கூடிய, இதம் இந்த, ஜ்ஞானம் ஞானத்தை, அஶேஷத: முழுமையும், வக்ஷ்யாமி சொல்லப்போகிறேன்; யத் எந்த ஞானத்தை, ஜ்ஞாத்வா தெரிந்து கொண்டபிறகு, இஹ இந்த விஷயத்தில், பூய: மறுபடியும், அந்யத் வேறு, ஜ்ஞாதவ்யம் தெரிந்து கொள்ள வேண்டியது, அவஶிஷ்யதே மிகுதியாக நிற்கப் போகிறதில்லையோ. உ

பா]நான் உனக்கு என்னைப்பற்றிய இந்த ஞானத்தை விஜ்ஞானத்து டன்முழுமையும்சொல்லப்போகிறேன். விஜ்ஞானமாவது தனியான ஆகா

தா] பதம் ஞானத்தைச் சொல்லுகிறது, என்பது ... ... ஆல் 'எந்த என்னுல் சொல்லப்பட்ட ஞானத்தினுல் அறிகிருயோ' என்று சொல்லப்பட்டது. 'சொல்லப்பட்ட' என்பதற்கு மேல் சொல்லப்போ கிற வார்த்தைகளினுல் தெரிவிக்கப்படுகிற என்று அர்த்தம். சொல்லப் படுகிற விஷயம் இதற்குமுன்புபார்க்கப்படாததாகையினால் கேட்கிற வனுக்கு ஸாவதானத்தை உண்டாக்குவது இந்த முதல் ஶ்லோகத்துக்கு ப்ரயோஜனம் என்று காட்டுகிறார்—'ஸாவதானத்துடன் கூடிய மனதை உடையவஞக இருந்து' என்று. க

"தஜ்ஞாணு" (அதைக்கேள்) என்று சொல்லப்பட்ட அர்த் தத்தையே மறுபடியும் அதிகமான ஸாவதானம் உண்டாக்க வேண்டியதற்காகவும், எல்லாம் தெரிந்தவனுடைய ஞானத்தை நான் சொல்லப்போகிறேன் என்று சொல்லுகிறான், "அஶே ஷத:, வக்ஷ்யாமி" (ஸந்தேஹமில்லாமலும், முழுமையும்) என்று கீழ்ச் சொன்ன அர்த்தத்தைக் கொண்டு விவரமாகச் சொல்லுகிறார். இந்த ஶ்லோகத்தில் "ஜ்ஞாநம், விஜ்ஞாநம்" என்ற பதங்களுக்கு புனருக்தி தோஷத்தை நீக்குவதற்காக "வி" என்ற உபஸர்க்கத் தினுலேற்பட்ட விசேஷத்தைக் காட்டுகிறார்—'விஜ்ஞானமாவது' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் ஞானவிஜ்ஞான என்ற பதங்களினால் அவைகளை உண்டாக்கக்கூடிய வாக்யங்கள் ... ... சொல்லப்

பா] ரத்தைப்பற்றிய ஞானம்; அதாவது எப்படி நான் என்னைவிட வேறான எல்லாச் சேதநா சேதனங்களின் கூட்டத்தைப் பார்க்கிலும் எல்லாக் கெட்ட குணங்களுக்கும் விரோதமான ஸ்வபாவமுடையவனாகையினாலும், அநேகவிதங்களாயும், எல்லையில்லாதமேன்மையை உடையவைகளாயும், எண்ணிறந்தவைகளாயமிருக்கிற கல்யாண குணங்களையும் எண்ணிறந்த விஸ்தாரமான விபூதிகளையுமுடையவனாகையினாலும், வேறுபட்டவனோ, அப்படிப்பட்ட வேறுபட்ட ஸ்வபாவத்தைப்பற்றி ஞானத்துடன் என்னுடைய ஸ்வரூபத்தைப்பற்றிய ஞானத்தையும் சொல்லப்

தா] படுகின்றன. அன்றிக்கே—'கேள் சொல்லப்போகிறேன்' என்பவைகளாவது அந்த ஞானவிஜ்ஞானங்களைக் கொடுக்கக்கூடிய வாக்யங்களின் வழியாக அவைகளோடு அன்வயிக்கிறதாகவுமாம். "ஜ்ஞாநம் ஜ்ஞாத்வா" (ஞானத்தை அறிந்துகொண்டு) என்பது "பாகம் பசதி" (சமயல் சமைக்கிறான்) என்பதைப்போல (அதாவது இரண்டுபதங்களும் சேர்ந்து தெரிந்துக்கொண்டு என்று அர்த்தமாகிறது). இத்தால் விஜ்ஞான என்னும் பதம் த்யானத்தைச் சொல்லுகிறது என்று சிலர் வ்யாக்யானம் செய்தது நிராகரிக்கப்பட்டது. வஸ்துவின் உண்மையான ஸ்திதியைத் தெரிந்துகொள்வதல்லவோ இவ்விடத்தில் "யஜ்ஜ்ஞாத்வா" என்கிற மேல்பாதியினால் சொல்லப்படுகிறது. ஆகையினால் [1]ஸ்வரூபநிரூபகதர்மங்களையும் [2]நிரூபிதஸ்வரூப விசேஷணங்களான தர்மங்களையும் சொல்லுகிறபடியினால், ஞானவிஜ்ஞான என்கிற பதங்களுக்குப் புனருக்தியில்லை. உபயலிங்கங்களை உடையவனாகையினாலும், இரண்டு விபூதிகளையுடையவனாகையினாலும், எல்லா வஸ்துக்களையும் விடத் தான் வேறுபட்டவன் என்று மேல் சொல்லப்போகிறதைக் காட்டுகிறார்—'எப்படி நான்' என்று ஆரம்பித்து. [3]"ஜ்ஞாநஞ் விஜ்ஞாந ஸஹிதம் ... வர்ஜநீயம்"

---

[1] எவைகளைத் தெரிந்துகொள்ளாமல் ப்ரஹ்மத்தை தெரிந்துகொள்ள முடியாதோ அப்படிப்பட்ட ஸத்யத்வம் முதலியவைகள்.

[2] ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொண்டபிறகு அதனிடத்தில் அறியக்கூடிய சக்தி முதலியவைகள்.

[3] 'விஜ்ஞானகுணோபபன்னம்' பகுத்தறிவோடுகூடிய, 'ஞானம்து' ஞானமே, 'அசுபம் கர்ம' கெட்ட கர்மத்தை, 'வர்ஜநீயம்' விடத்தகுந்ததாக, 'பச்யதி' அறிகிறது.

பா] போகிறேன். அதிகமாகச் சொல்வதினால் ப்ரயோஜனம் என்ன? எந்த ஞானத்தைத்தெரிந்து கொண்டபிறகு என்னைப்பற்றிப் பின்னும் தெரிந்துகொள்ளவேண்டியது மிகுதி வேறே இருக்கப்போகிறதில்லையோ, அப்படிப்பட்ட ஞானத்தை சொல்லப் போகிறேன் என்று சேர்த்துக் கொள்ளவும். உ

பா-அ] மேல் சொல்லப்போகிற ஞானம் கிடைக்கக்கூடிய தல்ல என்று சொல்லுகிறார்—

மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித்யததி ஸித்தயே ।
யததாமபி ஸித்தாநாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்த்வத: ॥ ௩

ப-ரை] மநுஷ்யாணாம் மனிதர்களின், ஸஹஸ்ரேஷு ஆயிரங் களுக்குள், கஶ்சித் ஒருவன், ஸித்தயே ஸித்தியின் பொருட்டு, யததி ப்ரயத்னப்படுகிறான்; யததாமபி ப்ரயத்னம் செய்து கொண்டு, ஸித்தாநாம் ஸித்தியை அடைந்தவர்களுடைய ஸஹஸ்ரேஷு ஆயிரங்க ளுக்குள், கஶ்சித் ஒருவன், மாம் என்னை, தத்த்வத: உண்மையாக வேத்தி அறிகிறான்? ௩

பா] மனுஷ்யர்களாவது ஶாஸ்த்ரத்தை அறியாமல் அறிந்தபடி

தா] என்கிற இடத்திலும் விஜ்ஞான என்கிற பதத்தினால் இதுவே சொல்லப்படுகிறது. உயர்ந்த விஷயத்தைப்பற்றிய ஞானம் அதைத் தவிர மற்றதை அநுஸரம் செய்யக்காரணமானதாகையினால் "அஶேஷத:" (முழுமையும்) என்கிற இறகு விவரணமாயும் ஞானத்தை ஸ்தோத்ரம் பண்ணுவதாயுமிருக்கிற மேல் ஶ்லோகத்தை வ்யாக்யானம் செய் கிறார்—'அதிகமாகச் சொல்வதினால் ப்ரயோஜனம் என்ன' என்று ஆரம்பித்து. "இஹ பூய:" என்பவைகளின் அர்த்தம், 'என் னைப்பற்றிப்பின்னும்' என்பது. அவஶ்யமாய்த் தெரிந்துகொள்ளவேண் டிய எல்லா ஆகாரங்களோடும் கூடியதாக இவ்விடத்தில் உபதேசிக்கி றேன், என்று சொல்லப்பட்டது. உ

மறுபடியும் வேறுவிதமாக மேல் சொல்லப்போகிற ஞானமே ஸ்தோத்ரம் செய்யப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல் லுகிறார்—'மேல் சொல்லப்போகிற' என்று ஆரம்பித்து. இவ் விடத்தில் "மநுஷ்யாணாம்" என்கிற பதமானது மநுஷ்ய ஜாதியை மாத்ரம் குறித்ததல்ல, தேவதைகள் முதலியவருக்கும் பக்தி யோகம் செய்வதற்கு அதிகாரமுண்டு, என்று ஶாரீரக ஸூத்ரத்தில் ஸ்தா

பா] அநுஷ்டிக்கவும் யோக்யதை உள்ளவர்கள். அப்படிப்பட்ட ஆயிரம் பெயர்களுக்குள் ஒருவன்தான் ஸித்தியடையுமளவும் ப்ரயத்னம் செய்கிறான். ஸித்தியடையுமளவாக ப்ரயத்னம் செய்கிற ஆயிரம் பெயர்களுக்குள் ஒருவன்தான் என்னைத்தெரிந்துகொண்டு என்னிடத்திலிருந்து ஸித்தியை அடைவதற்கு ப்ரயத்னம் செய்கிறான். என்னை அறிந்த ஆயிரம் பெயர்களுக்குள் ஒருவனாவது உள்ளபடியே என்னை அறிகிறானா? ஒருவருமில்லை என்று அபிப்ராயம். * "ஸ மஹாத்மா ஸுதுர்லப:" †"மாம் து வேத ந கஶ்சந" என்றல்லவோ மேலே சொல்லப்போகிறார்.

தா] பிக்கப்பட்டிருக்கிற படியினால். ஆகையினால் ஸித்தியடைகிறவரையிலும் ப்ரயத்னம் செய்ய யோக்யதையுள்ளவர்களைமாத்ரம் குறிக்கிறது என்றுகாட்டுகிறார்—'ஶாஸ்த்ரத்தை' என்று ஆரம்பித்து. ஸித்தி அடைகிறவனையிலும் ப்ரயத்னம் செய்வது மாத்ரம் அநேகமாக எல்லோருக்கும் பொது. ஆகையினால் "ஸித்தயே" என்னும் பதத்திற்கு "கஶ்சித்" (ஒருவன்) என்றுசொல்லப்பட்ட விசேஷத்தோடு அன்வயம் பொருந்துவதற்காக 'ஸித்தியடையுமளவும்' என்று சொல்லப்பட்டது. "மாம் வேத்தி" (என்னை அறிகிறான்) என்று சொல்லப்பட்ட அறிவு, அவனால் ஸித்தியை அடைகிற வரையில் ப்ரயத்னம் செய்வதற்காக என்பது "யததாமபி ஸித்தாநாம்" என்கிற அநுவாதத்தின் கருத்து, என்று சொல்லுகிறார்—'என்னைத் தெரிந்துகொண்டு' என்று ஆரம்பித்து. 'உள்ளபடி' யாவது அடையத்தக்கவனாக இருக்கிற அவனே அடைவிக்கிறவனாகவுமிருக்கை முதலியது. "தத்த்வத:" என்கிற விசேஷமான அறிவு, பொதுவான அறிவு உண்டானால், உண்டாகும்; ஆகையினால் "யததாமபி ஸித்தாநாம் கஶ்சிந் மாம் வேத்தி, தேஷாம் கஶ்சிந் மாம் தத்த்வதோ வேத்தி" என்று இரண்டு வாக்யங்களாக மேல் பாதியைச் சொல்லிக்கொள்ளவேண்டும் என்கிற அபிப்ராயத்தினால் 'ஸித்தியடையுமளவாக ப்ரயத்னம் செய்கிற' என்று ஆரம்பித்து இரண்டுவாக்யங்களாக அர்த்தம் சொல்லப்பட்டது. "கஶ்சிந்மாம் வேத்தி" (ஒருவன் என்னை உள்ளபடியே அறிகிறான்) என்கிற இடத்தில் ஒருவன்தான் அறிகிறான், இருவர்களில்லை என்று அர்த்தம் சொல்வது வ்யாஸர் பீஷ்மர் முதலிய அநேகம் பெயர்கள் உள்ளபடி அறிந்தவர்களைக் கண்டிருக்கிறபடியால் யுக்தமல்ல. ஒருவன் அறியவே அறிகிறான், என்று சொல்வதும் இவ்விடத்தில் வ்யர்த்தம். மேலே அப்படிப்பட்டவன்

---

* பகவத்கீதை, 7–19 † பகவத்கீதை, 7–26.

பூமிராபோநலோ வாயு: கம் மநோ புத்திரேவ ச ।
அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா ॥ ௪

ப-ரை.] பூமி: பூமி, ஆப: ஜலம், அநல: தேஜஸ்ஸு, வாயு: காற்று, கம் ஆகாயம், மந: மனது, புத்திரேவ ச புத்தியும், அஹங்கார: அஹங்காரம், இதி என்று, அஷ்டதா எட்டு விதங்களாக, பிந்நா பிரிந்திருக்கிற, ப்ரக்ருதி: உலகத்திற்குக் காரண மாகிய வஸ்து, மே என்னுடையது. ௪

பா.] விசித்ரங்களாய், அளவில்லாத அநுபவிக்கக்கூடிய

தா] துர்லபன் என்கிற வார்த்தைக்கு விரோதமாய் வரும்; ஆகையினால் இங்கே வஸ்துவின் ஸ்வபாவத்தினாலும் மேல் சொல்லப்போகிற வார்த்தைகளோடு பொருந்தியிருப்பதினாலும் ஏற்பட்டதாகிய துர்லபன் என்பதையே காட்டுகிறார்—'ஒருவருமில்லை' என்று. ௩

பிறகு இந்த ச்லோகம் முதல் பன்னிரண்டாவது ச்லோகம் வரையில் தன்னுடைய உண்மையான ஸ்வபாவத்தை உபதேசிக்கிறார். அதில் முதலில் கார்யமாயும் காரணமாயுமிருக்கிற அசேதன வஸ்துக்களைவிட வேறுபட்டவனாக இருக்கையை அவைகளுக்குத் தான் யஜமானனாக இருக்கையை முன்னிட்டுக் காட்டுகிறார். ப்ரக்ருதியின் கார்யங்களாகிய பூமி முதலியவைகளை இங்கே ப்ரக்ருதி என்று சொல்லியிருக்கிறபடியினால். வ்யஷ்டி ஸ்ருஷ்டியைக் குறித்து ப்ரக்ருதியாக இருக்கை சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'விசித்ரங்களாய்' என்று ஆரம்பித்து. இங்கு சிலர் சொல்லுவதாவது, [1] 'எட்டு ப்ரக்ருதிகள்' என்று அர்த்தமுள்ள ச்ருதிவாக்யமிருக்கிறபடியினால், பூமி முதலிய பதங்களினால் தந்மாத்ரைகள் சொல்லப்படுகின்றன. "மந:" என்கிற பதத்தினால் மனதிற்குக் காரணமாகிய அஹங்காரம் சொல்லப்படுகிறது. "அஹங்கார:" என்னும் பதத்தினால் அஹங்கார வாஸனைக்கு இருப்பிடமாயும் எல்லாவற்றிற்கும் மூலகாரணமுமான அவ்யக்தம் சொல்லப்படுகிறது என்று. இப்படி எல்லாப் பதங்களுக்கும் முக்யமான அர்த்தத்தை ஒளிப்பதினாலுண்டாகும் கஷ்டத்தை விட வ்யஷ்டி ஸ்ருஷ்டியைக் குறித்துக் காரணமாக இருக்கை சொல்லப்படுகிறது என்பதே மேலானது என்று தாத்பர்யம். அதுவுமன்றிக்கே—"ப்ரக்ருதி:" என்னும்

---

[1] கர்போபநிஷத்து

பா] வஸ்துக்கள், அநுபவிப்பதற்கு ஒத்தாசைக்கருவிகள் அநுபவிக்கும் இடங்கள் இவைகளாக நிற்கிற இந்த லோகத்திற்குக் காரணமாகிய [வா ஸனைமுதலியகுணங்களை உடைய பூமி ஜலம் தேஜஸ்ஸு வாயு ஆகாசம் முதலியவைகளாகவும், மனது முதலிய இந்த்ரியங்களாகவும் மஹான்

தா] பதத்தினால் மூலப்ரக்ருதியே சொல்லப்படுகிறது. காரணமாயும் கார்யமாயும் இருக்கிற வஸ்து ஒன்றாகையினால் அந்த ப்ரக்ருதியே இப்படி எட்டுவிதங்களாகப் பிரிந்து இருக்கிறது என்று சொல்லப்படு கிறது. அந்த ப்ரக்ருதியே முதலில் ஒன்றாக இருந்து, பிறகு எட்டு விதங்களாக மாறி இருக்கிறதல்லவா. இவ்விடத்தில் தன்னைப் பற்றி உபதேசம் செய்ய ப்ரவ்ருத்தித்தவருக்கு ப்ரக்ருதி எட்டு விதம் என்று உபதேசம் செய்வது பொருந்தாது. அது தன்னு டையது என்பதினால் பொருத்தமுண்டே என்பதும் யுக்தமல்ல, அது எட்டுவிதம் என்று முன்னே உபதேசிக்கப்படாமையினால். ஆகையினால் ப்ரத்யக்ஷம் முதலியவைகளினால் ஏற்பட்ட ப்ருதிவீ முதலிய வஸ்துக்களாக மாறியிருக்கும் ப்ரக்ருதியே இங்கே அநு வதிக்கப்படுகிறது. தனக்கு அவைகளைவிட வேறுபட்டவனாக இருக்கையும், அதற்கு சேஷியாக இருக்கையும், அதற்கு நியந்தாவாக இருக்கையும் ஏற்படவேண்டியதற்காக, "மே" (என்னுடையது) என்பதினால், அது தனக்கு சேஷமாக இருக்கிறது என்பது விதிக் கப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'எனக்கு சேஷபூதம்' என்று சொல்லப்பட்டது. "வித்தி" (அறி) என்று பூமி முதலிய வைகளுக்கு ஒன்றுக்கொன்று வித்யாஸத்தைக் காட்டவேண்டியதற் காகவும் அவைகள் அநுபவிக்கத்தகுந்தவைகளாக வேண்டியதற்காக வும் இங்கு சொல்லப்படாத தந்மாத்ரைகளின் கார்யவிசேஷங்களைக் காட்டுவதற்காகவும் 'வாஸனை முதலிய குணங்களை உடைய' என்று சொல்லப்பட்டது. இத்தால் பஞ்சபூதங்களைச் சொன்னது தந்மாத் ரைகளையும் குறிப்பிடுவதற்காக என்பதுவும் தெரிவிக்கப்பட்டது. இந்த அபிப்ராயத்தினால்தான் 'ஆகாசம் முதலியவைகளாகவும்' என்கிற இடத்தில் 'முதலிய' என்கிற பதம் சொல்லப்பட்டிருக்கிறது. தந்மாத்ரைகளுக்கும் பஞ்சபூதங்களுக்கும் அதிக வித்யாஸமில்லாத தினால் கணக்கிட்டுச் சொன்னது. "மந:" என்னும் பதம் கருவிக ளாகிய இந்த்ரியங்களின் கூட்டங்களைக்குறிப்பதற்காக, என்று தெரி விப்பதற்காக 'மனது முதலிய இந்த்ரியங்களாகவும்' என்று சொல்லப்

பா] அஹங்காரம் இவைகளாகவும் எட்டுவிதங்களாகப் பிரிந்திருக்கிற இந்த வஸ்து எனக்கு ஶேஷபூதம் என்று அறி. ௪

அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம் ।
ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் ॥ ௫

பதவுரை.] மஹாபாஹோ பாஹுபலமுள்ள அர்ஜுனா, இயம் இது, அபரா தாழ்ந்த (ப்ரக்ருதி,) இதஃ இதைவிட, அந்யாம் வேறானதாயும், ஜீவபூதாம் ஜீவாத்மாவாகிய, பராம் உயர்ந்த, மே என்னுடைய, ப்ரக்ருதிம் ப்ரக்ருதியை, வித்தி அறி, யயா எந்த ப்ரக்ருதியினால், இதம் இந்த, ஜகத் லோகமானது, தார்யதே தரிக்கப்படுகிறதோ. ௫

பா] இது என்னுடைய தாழ்ந்த ப்ரக்ருதி, இதைக்காட்டிலும் வேறானதாய் அதாவது ஆத்மாவுக்கு அநுபவிக்கத்தகுந்ததாய் அறிவில்

தா] பட்டது புத்தி அஹங்காரம் என்றும் பதங்கள், இவ்விடத்தில் ஞானம் கர்வம் முதலிய வெவ்வேறு அர்த்தங்களைச் சொல்லுகின்றன என்கிற பரமதத்தை விலக்குவதற்காக ஒரு வித தத்வங்களைச் சொல்லுகிறது என்று தெரிவிக்கிறார்—'மஹான் அஹங்காரம் இவைகளாகவும்' என்று இப்படி ஸமஷ்டி வ்யஷ்டி இந்த தத்வங்கள் முழுமையும் சொல்லப்பட்டதாகிறது ஆறும் வேற்றுமை பொதுவாக ஸம்பந்தங்களைச் சொல்லுவதாகவிதிக்கப்பட்டிருந்தபோதிலும் இவ்விடத்தில் உடைமை உடையவன் என்கிற ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது என்று முடிவு செய்யப்பட்டது. ௪

இப்படி அசேதனங்களைகாட்டிலும் தான் வேறுபட்டவன் என்பது சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட ஜீவாத்மாவைக்காட்டிலும் வேறுபட்டிருக்கை இந்த ஶ்லோகத்தில் சொல்லப்படுகிறது. "அபரா" என்பதற்குத் தாழ்ந்தது, அதாவது முக்யமல்லாதது என்று அர்த்தம், "இயம்" என்னும் பதமானது மிகவும் வேறுபட்ட ஸ்வபாவத்தைக்காட்டுகிறது. "இதஃ பராம்" என்கிற இதினாலேயே ஸ்வரூபம் வேறு என்று சொல்லக்கூடியதாக இருந்தபோதிலும் "அந்யாம்" என்கிற பதமானது வேறுபட்ட ஸ்வபாவத்தை உறுதிப்படுத்துவதற்காக என்கிற அபிப்ராயத்தினால 'அதாவது' என்றிவை

பா] லாத இந்த ப்ரக்ருதியைவிட வேறுபட்ட ஆகாரத்தை உடையதாய் அதை அநுபவிப்பதினால் அதையும்விட முக்யமானதாய் அறியும் தன்மையையுடையதாகிய என்னுடைய ப்ரக்ருதியை அறி. எந்த ப்ரக்ருதியினால் அறிவில்லாத இந்த லோகம் முழுமையும் தரிக்கப்படுகிறதோ. ௫

ஏதத்யோநீநி பூதாநி ஸர்வாணீத்யுபதாரய |
அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்ததா || ௬

ப.ரை.] ஸர்வாணி எல்லா, பூதாநி ப்ராணிகளும், ஏதத்யோநீநி கீழ்ச்சொல்லப்பட்ட இரண்டு விதங்களான ப்ரக்ருதிகளையும் காரணங்களாக உடையவைகள்; (ஆகையினால்) அஹம் நான் க்ருத்ஸ்நஸ்ய எல்லா, ஜகத: லோகத்துக்கு, ப்ரபவ: உத்பத்தி ஸ்த்தானம்; ததா அப்படியே, ப்ரலய: லயத்தை அடையும் ஸ்த்தானம். ௬

தா] முதலானது சொல்லப்பட்டது. [1] 'அநுபவிக்கிறவன் அநுபவிக்கத் தக்கது' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தை அநுஸரித்து அநுபவிக்கிறவனாக இருக்கை அநுபவிக்கத்தக்கதாக இருக்கை இவைகளினால் மேன்மையும் தாழ்வும் காட்டப்பட்டது. "இதம் ஜகத்" என்று, ப்ரமாணங்களில் ஏற்பட்டதைச்சொல்லியிருப்பதற்குச் சுருக்கமில்லாமையினால் 'முழுமையும்' என்று சொல்லப்பட்டது. அவ்விடத்தில் "இதம்" என்று சொல்லியிருக்கிறபடியினால் அறிவில்லாத வஸ்து என்பது ஏற்பட்டது. இந்த விதமான தரித்தலும், விழித்துக்கொண்டிருக்கும் பொழுது ஸங்கல்பத்தினால் என்பது ப்ரத்யக்ஷத்தினாலேயே ஏற்பட்டது, மற்ற ஸமயத்தில் ஸ்வரூபத்தினால் தரிக்கிறது.

இப்படி ஸமஷ்டியாயிருக்கும் தசை சொல்லப்பட்டது. "ஏதத்யோநீநி" என்கிற பாதி ஶ்லோகத்தினால் வ்யஷ்டி சொல்லப்படுகிறது. "அஹம் க்ருத்ஸ்நஸ்ய" என்கிற பாதியினாலோ ஸமஷ்டி வ்யஷ்டி இவை இரண்டையும் சேர்த்து இவைகளுக்குக் காரியமாயிருக்கை முதலியன சொல்லப்படுகின்றன. "ஸர்வாணி பூதாநி" (எல்லா ப்ராணிகளும்) என்று சேதனமும் அசேதனமுமாகிய கார்யங்களைச் சொல்லியிருக்கிறபடியால், "ஏதத்" என்கிற பதமும் கீழ்

1 *ஶ்வேதாச்வதரோபநிஷத்*, I-12.

பா] இந்தச்சேதனஸமஷ்டி அசேதனஸமஷ்டியாகிய என்னுடைய இருவகையான ப்ரக்ருதித்வயக்காரணமாக உடையவைகளாயும், ப்ரஹ்மா முதல் புழுவரையிலும் உயர்ந்தவைகளாயும் தாழ்ந்தவைகளாயும் இருக்கிற சேதனம் அசேதனம் இவைகள் கலந்த எல்லா ப்ராணிகளும் என்னுடையவைகள் என்று எண்ணிக்கொள். என்னுடைய இரண்டு விதமான ப்ரக்ருதிகளைக் காரணமாக உடைய அவைகள் என்னுடையவைகள் அல்லவா; அப்படி எல்லாலோகங்களும் இரண்டு வித ப்ரக்ருதியைக் காரணமாகவுடையவைகளாகையாலும் எனக்கு சேஷபூதங்களாகையாலும் எல்லா லோகங்களுக்கும் நானே உத்பத்தி

தா] ப்ரஸ்தாவிக்கப்பட்ட மாதிரியான ப்ரக்ருதி புருஷன் இவைகளைச் சொல்லுகிறதேயொழிய பரக்ருதியைமாத்ரம் சொல்லுகிறதல்ல என்று காட்டுகிறார்—'இந்தச்சேதன' என்றாரம்பித்து. இந்தால் ஜீவாத்மாவுக்கு ஸ்வரூபத்தில் மாறுதல் இல்லாமலிருந்தபோதிலும், தேவன் முதலிய சரீரங்கள் இந்த்ரியங்கள் அவைகளாலுண்டான ஞானம் க்ரியை ஸுக துக்கங்களின் அநுபவம், இவைகளுடன் கூடிய தசையையுடைய தனக்கு இதற்குமுன் அசேதனத்துக்கு ஸமானமாயிருக்கும் தசையை யுடைய தானேகாரணம் என்பது யுக்தம் என்று காட்டப்பட்டது, மூலத்தில் "மதீயாநி" (என்னுடையவைகள்) என்னும் பதம் இல்லை; அப்படி இருக்க வ்யாக்யானத்தில் ஏன் அப்படி சொல்லப்படுகிறது, என்கிற ஆக்ஷேபததிற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'என்னுடைய இருவகையான' என்றாரம்பித்து, [1] பதம் சொல்லப்படாவிட்டாலும் வாக்யத்துக்கு அர்த்தம் ஏற்படுகிற படியினால் "ஹதி" (என்று) என்னும் பதம் தன்னுடையது என்பதைக்குறிப்பதற்காக என்று தாத்பர்யம். பகவானுடைய அபிப்ராயத்திலிருக்கும் வார்த்தையாகையினால் என்னுடையவைகள் என்று சொல்லியிருக்கிறது. 'அப்படி' என்பதற்கு அப்படியிருக்கும்பொழுது என்றர்த்தம். இத்தையே விவரிக்கிறது 'இரண்டுவித ப்ரக்ருதியை' என்பதுமுதல். அன்றிக்கே—'அப்படி' என்னும் பதம் முன்பு சொன்ன சேஷியாயிருக்கை முதலியவற்றைச் சேர்த்துக்கொள்ளவேண்டியது என்று

---

1 என்று எண்ணிக்கொள என்று சொல்லாமற்போனாலும் வாக்யத்தைச் சொன்னமாத்ரத்திலேயே அதன் அர்த்தம் ஏற்படுகிறபடியினால் என்று கருத்து

பா] யாகுமிடமும்; நானேலயிக்குமிடமும் நானே ஶேஷீ என்றுமறி. அந்தச்சேதனம் அசேதனம் இவைகளுக்கு ஸமஷ்டியாகிய ப்ரக்ருதி புருஷன் இவை இரண்டுக்கும் பரமபுருஷனைக் காரணமாகவுடைத்தாயிருக்கை, ஶ்ருதிகளிலும் ஸ்ம்ருதிகளிலும் ஏற்பட்டிருக்கிறது. * 'மஹாந் அவ்யக்தத்தில் லயிக்கிறது. அவ்யக்தம் அக்ஷரத்தில் லயிக்கிறது; அக்ஷரம் தமஸ்ஸில் லயிக்கிறது; தமஸ்ஸு பரனான தேவனிடத்தில் லயிக்கிறது'; என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யமிருக்கிறது. †"விஷ்ணோ: ஸ்வரூபாத் பரதோதிதே த்வே ரூபே ப்ரதாநம் புருஷஶ்ச விப்ர"

தர] சொல்லுகிறதாகவுமாம். "ப்ரபவ: ப்ரளய:" என்னும் பதங்கள் இவ்விடத்தில் உத்பத்தியாகும் இடம் லயத்தை அடையும் இடம் இவைகளைச்சொல்லுகின்றன. ப்ரக்ருதியைப்பற்றிச் சொல்லும் வாக்யத்தில் [1] "அஜாம்" (உத்பத்தியில்லாத) என்னும் ஜீவர்களைச் சொல்லுமிடத்தில் [2] "நித்யாநாம்" (நித்யர்களான) என்னும் ஶ்ருதிகளும் [3]"ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்த்யநாதீ உபாவபி" என்றிவை முதலான ப்ரமாணங்களுமிருக்கும்பொழுது கார்யங்களைப்பற்றிச்சொல்லுகிற "க்ருத்ஸ்ந" (எல்லா) என்னும் பதத்தினால் இந்த இரண்டு வித ப்ரக்ருதிகளையும் சொல்லுகிறதென்பது எப்படித் தெரிந்துகொள்ளப்படுகிறது, என்கிற ஆக்ஷேபத்துக்கு ஸமாதானம் சொல்லுகிறார்— 'அந்தச் சேதனம்' என்றாரம்பித்து. ப்ரக்ருதி புருஷன் இவை இரண்டுக்கும் பரமாத்மாவினிடத்தில் லயம் ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறபடியினால், அவைகள் பரமாத்மாவினிடத்திலிருந்து உத்பத்தியாகின்றனவென்பதும், ஸித்தமன்றோ என்கிற அபிப்ராயத்தினால் ஶ்ருதி வாக்யத்தை எடுக்கிறார்—' மஹாந் அவ்யக்தத்தில் ' என்றாரம்பித்து. ப்ரக்ருதி புருஷன் இவைகளுக்குப் பரமாத்மாவினிடத்தில் லயமாவது பாலில் கலந்த நீர்போலப் பிரிக்கமுடியாத ஸம்பந்தம்; ஆகை

---

* ஸுபாலோபநிஷத்—2.

† விஷ்ணுபுராணம், 1—2—24. 'விப்ர' ஓ ப்ராஹ்மண, 'ப்ரதாநம்' ப்ரக்ருதியும், 'புருஷச்ச' புருஷனும் 'பரத:' மேலான 'விஷ்ணோ:' பகவானுடைய 'ஸ்வரூபாத்' ஸ்வரூபத்திலிருந்து 'உதிதே' உண்டான 'த்வே' இரண்டு 'ரூபே' ரூபங்கள்.

[1] ச்வேதாச்வதரோபநிஷத், 4—5. [2] ச்வேதாச்வதரோபநிஷத், 6—16.

[3] பகவத்கீதை, 13—19.

பா] *“ப்ரக்ருதிர்யா மயாக்யாதா வ்யக்தாவ்யக்தஸ்வரூபிணீ । புருஷஶ்சாப்யுபாவேதௌ லீயேதே பரமாத்மநி ॥ பரமாத்மா ச ஸர்வேஷாமாதார: பரமேஶ்வர: । விஷ்ணுநாமா ஸ வேதேஷு வேதாந்தேஷு ச கீயதே” என்றிவை முதலான ஶ்ருதிஸ்ம்ருதிகளிருக்கின்றனவல்லவா. சா

தா] யால் வஸ்துவின் ஸ்வரூபம் நித்யமாகையால் “ஸதா” என்று ஶ்ருதியில் சொல்லியிருப்பதற்கு விரோதமில்லை. நீர் சொன்ன அர்த்தத்தில் ஸ்ம்ருதியையும் ப்ரமாணமாகக் காட்டுகிறார்—“[illegible] ஸர்வேவாஸ” என்றாரம்பித்து. “ஸதோதிதே” என்றவிடத்தில் “ஸத:, உதிதே” என்று பதம் பிரித்துக்கொண்டு “ஸத:” ஸத்தான விஷ்ணுவின் ஸ்வரூபத்திலிருந்து “உதிதே” உண்டான என்று அர்த்தம் சொல்லிக்கொள்ளவேண்டியது. வ்யாகரணப்படி “ஸத உதிதே” என்று சேரவேண்டியிருந்தபோதிலும், ருஷியின் வாக்யமானபடியால் “ஸதோதிதே” என்று சேர்ந்திருக்கிறது. அன்றிக்கே—இந்த ஸ்ம்ருதியும் ப்ரளயத்தைத்தான் சொல்லுகிறது. ப்ரளயத்தைச் சொல்லும் ஸந்தர்ப்பத்தில் இருக்கிறபடியால் அப்பொழுது “ஶோ தநூகரணே” (ஶோ என்கிற தாது பிரித்தலைச் சொல்லும்) என்கிற தாதுவின்மேல் ‘திதே’ என்பது நிஷ்டா என்னும் விகுதியாய்க் கடைசியில் [illegible] யபதம் அதற்குவெவ்வேறான என்றர்த்தம்; இந்தப் ப்ரளயதசையிலும் ப்ரக்ருதி புருஷன் பகவான் இவைகளுக்கு ஒருவர்க்கொருவர் ஸ்வரூபத்தில் பேதமுண்டு என்று சொல்லப்பட்டதாகிறது. அதுவுமன்றிக்கே—“அதிதே” என்றாவது பதம் பிரித்துக்கொள்ளவேண்டியது. அதற்குப்பிரிவில்லாத என்று அர்த்தம், இத்தால் அவைகளுக்குப் பிரிக்கமுடியாத ஸம்பந்தம் சொல்லப்பட்டதாகிறது; ப்ரளயத்தைச் சொல்லும் ப்ரகரணத்தில் இந்த வசனமிருக்கிறபடியினாலும் இங்கும் இனிமேலும் எடுக்கப்படுகிற வசனங்களுக்கு ஸமமான அர்த்தத்தைச் சொல்லவேண்டும் என்கிற அபிப்ராயத்தினாலும் இப்படியே இந்த வசனத்துக்கு அர்த்தம் சொல்லவேண்டியது. இப்படித்தான் சொன்ன அர்த்தத்தில் ப்ரமாணமாக வ்யக்தமாகச் சொல்லுகிற வசனத்தை உதாஹரிக்கிறார்—“ப்ரக்ருதிர்யா” என்றாரம்பித்து. சா

---

* விஷ்ணுபுராணம் 6–4–39, 40. ‘வ்யக்தாவ்யக்தஸ்வரூபிணீ’ ப்ரகாசமாயும் ப்ரகாசமில்லாததுமான ஸ்வரூபத்தையுடைய ‘யா’ எந்த ‘ப்ரக்ருதி’

மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய ।

ப-ரை. தநஞ்ஜய ஓ அர்ஜுன, மத்த: என்னைவிட அந்யத் வேருன, கிஞ்சித் ஒரு, பரதரம் மேலான வஸ்துவும், நாஸ்தி இல்லை.

பா] எப்படி எல்லாவற்றிற்கும் காரணமான இரண்டுவித ப்ரக்ருதிகளுக்கும் காரணமாகையினுலும் எல்லா அசேதனவஸ்துக்களுக்கும் சேஷியான சேதனத்துக்கும் சேஷியாக இருக்கையினுலும், காரண மாயிருக்கையிலும் சேஷியாயிருக்கையிலும் நானே மேலானவனு,

---

தா] "மத்த: பரதரம்' என்கிற ஶ்லோகததில் முன்பு சொன்ன அர்த்தந்தையே அகற்கு மாருக இல்லை என்று சொல்லி உறுதிப்படுத்துகிறதென்று சொல்லும் பக்ஷத்தில், இந்த ஶ்லோகத்துக்கு அதிக ப்ரயோஜனமில்லை. "அஹம் பரதர:" (நான் மேலானவன்) என்றுகீழ்ச்சொல்லப்படாமையால் என்னைத்தவிரவேறு மேலான வஸ்து இல்லை, என்று அதற்கு விரோதத்தைத் தடுப்பதும் அவ்வளவு உசிதமல்ல; ஆதலால் கீழ்ச்சொல்லப்படாத அர்த்தத்தைச் சொல்லுகிறது என்னும் அர்த்தம் ஸம்பவிக்கும்பொழுது அதை விடுவதும் தகுதியல்ல என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர்—எப்படி' என்றுரம்பித்து, முன் ஶ்லோகத்திலிருக்கும் "தயா" என்னும் பதம் இங்கே இழுத்துக்கொள்ளப்பட்டது. அத்தால் எண்ணிறந்த பெரிய விபூதிகளையுடையவனுயிருக்கை எண்ணிறந்த குணங்களையுடையவனுயிருக்கைக்கு உதாஹரணபரகக் காட்டப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர்—'அப்படியே ஞானம்' என்றுரம்பித்து. 'ஶேஷியாக இருக்கையினுலும்' என்கிறவரையிலுள்ள வாக்யத்தினுல் வஸ்துவினுடைய ஸ்திதியைக் காண்பித்திருக்கிருர். மேல் 'காரணமாயிருக்கையிலும் ஶேஷியாயிருக்

ப்ரக்ருதியானது 'மயா' என்னுல் 'ஆக்யாதா' சொல்லப்பட்டதோ அதுவும் 'புருஷச்ச' புருஷனும் 'ஏதௌ' இந்த 'உபௌ' இரண்டும் 'பரமாதமநி' பரமாத்மாவினிடத்தில் 'லீயேதே' லயத்தை அடைகின்றன 'ஸர்வேஷாம் எல்லாவற்றிற்கும் 'ஆதார:' ஆதாரமான 'பரமேச்வர.' எல்லாவற்றிற்கும் மேலான நியந்தாவான 'பரமாத்மாச' பரமாத்மாவும் 'ஸ.' அந்த 'விஷ்ணு நாமா' விஷ்ணுவென்று பேருடையவனுக 'வேதேஷு ச' வேதங்களிலும் 'வேதாந்தேஷு ச' உபநிஷத்துக்களிலும் 'கீயதே' சொல்லப்படுகிருன்.

பா] அப்படியே ஞானம் சக்தி பலம் முதலியகுணங்களையுடையவனாகை யினாலும் நானே மேலானவன்; என்னைவிடவேறான ஞானம் பலம் முதலியகுணங்களையுடைய ஒரு மேலானவஸ்துவும் இல்லை. சூ

தா] கையிலும்' என்பதினால் மேன்மையின் மாத்ரியைச் சொல்லுகிறார்; ஆதலால் புநருக்தி தோஷமில்லை. 'நானே மேலானவன்' என்றுசொல்லுவது அஸாத்யம்; ஏனெனில் என்னைவிட மேலானவன் இல்லை என்று தடுத்திருந்தபோதிலும் ஸமமானவன் இல்லை என்று ஏற்படவில்லையாகையால், என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'என்னை விட வேறான' என்றாரம்பித்து. இதின் கருத்தாவது, "மத்த:" (என்னைவிட) என்கிற இடத்திலிருக்கும் ஐந்தாவது வேற்றுமை "பரதர:"(மேலானவன்)என்பதோடு அந்வயிக்கிறதில்லை, ஏனெனில் அப்படிச்சொல்லும்பக்ஷத்தில் "அந்ய" (வேறான) என்கிற பதம் அந்வயிக்காமல் போய்விடுமாகையினால் "மத்த: அந்யத் பரதரம் நாஸ்தி" (என்னைவிட வேறு மேலான வஸ்து இல்லை) என்று அந்வயம் சொன்னால், நானே மேலானவன் என்று ஏற்பட்டது. ஆகையினால் பகவானுக்கு ஸமமானவனும் மேலானவனும் இல்லை என்று சொல்லப்பட்டதாகிறது என்பது. 'ஞானம் பலம் முதலிய குணங்களையுடைய ஒரு மேலானவஸ்துவும்' என்பதினால், ப்ரஹ்மா, ருத்ரன், முதலியவர்களும் பரிசுத்தமான ஜீவாத்மாக்களும் சேர்த்துச் சொல்லப்பட்டார்கள். இப்படி [1] "பூமிராப:" என்றிவை முதலிய ஶ்லோகங்களால் வேறொன்றை எதிர்பாராமல் ப்ரக்ருதியே மாறுதலையடைகிறது என்னும் வாதமும், ஜீவாத்மா மாத்ரம் ஸமீபத்திலிருப்பதினாலேயே ப்ரக்ருதி மாறுதலையடைகிறது என்னும் வாதமும், ப்ரக்ருதி புருஷன் இவைகள் பகவானுக்கு ஶேஷபூதங்களல்ல என்னும் வாதமும் நிராகரிக்கப்பட்டன. "மத்த: பரதரம்" என்கிற இந்த ஶ்லோகத்தினால் மும்மூர்த்திகள் ஒன்றென்றும், ஸமமானவர்கள் என்றும், அவர்களை விட மேலானது பரப்ரஹ்மமென்றும், அவர்களுக்குள்ளேயே விஷ்ணுவைத்தவிர வேறொருவர் பரப்ரஹ்மம் என்றும், அந்தந்தக்கல்பங்களில் தனித்தனி பரப்ரஹ்மங்கள் உண்டாகின்றன என்றும் சொல்லும்பக்ஷங்கள் தள்ளப்பட்டன. சூ

---

[1] பகவத்கீதை, 7—4.

மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ ॥ ௭

ப-ரை.] ஸூத்ரே நூலில், மணிகணா இவ மணிகளின் கூட்டங்கள் போல, இதம் இந்த, ஸர்வம் எல்லாம், மயி என்னிடத்தில் ப்ரோதம் கோர்க்கப்பட்டிருக்கிறது. ௭

பா] காரியமான அவஸ்த்தையையும் காரணமான அவஸ்த்தையையும் உடைய சேதனம் அசேதனம் ஆகிய வஸ்துக்களின் கூட்டம் எனக்கு ஶரீரமாய் இருந்துகொண்டு நூலில் மணிகளின் கூட்டம்போல அந்தராத்மாவாயிருக்கும் என்னிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கிறது அதாவது என்னை ஆதாரமாக உடைத்தாயிருக்கிறது. * 'எவனுக்கு

தா] பிறகு கீழ்ச்சொல்லிய எல்லாவற்றிற்கும் உபாதாநகாரணமாயிருக்கையினால் ஏற்பட்ட விகாரத்தையுடையவனாக இருக்கையைப் பரிஹரிப்பதற்காகவும், ப்ரக்ருதிபுருஷர்கள் இவைதனித்தனியாக இருக்கின்றன என்று சொல்லும் வாதத்தை நிராகரிப்பதற்காகவும், எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருக்கையை முன்னிட்டு, எல்லாவற்றையும் சரீரமாக உடைத்தாயிருக்கை இந்தப் பாதி ஶ்லோகத்தினால் சொல்லப்படுகிறது. "ஸர்வமிதம்" என்பதினால் எல்லா அவஸ்த்தைகளையுமுடைய சேதனாசேதனமாகிய எல்லாவஸ்துக்களும் சொல்லப்படுகின்றன என்கிற அபிப்ராயத்தினால் 'காரியமான' என்றிவை முதலியது சொல்லப்பட்டது. நூலையும் மணிகளின் கூட்டத்தையும் உதாஹரணமாகச் சொன்னதினாலும் "ப்ரோதம்" (கோர்க்கப்பட்டிருக்கிறது) என்னும் பதத்தினாலும் தான் அவைகளுக்குள் நுழைந்திருப்பதும், தான் ஆதாரம் அவைகள் தன்னை ஆதாரமாகவுடையவைகள் என்பதும் தோன்றுகிறபடியினால், ஶரீரங்களின் இலக்கணமும் அவைகளுக்குண்டு என்று காட்டப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் 'எனக்கு ஶரீரமாய் இருந்துகொண்டு' என்று சொல்லப்பட்டது. ஒன்றே எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருக்கிறதென்பதும் உள்ளே நுழைந்திருப்பதும் மறைந்து கொண்டிருக்கையும், தன்னையாதாரமாகவுடைய ப்ரக்ருதி முதலியவைகளால் தனக்கு ஸ்திதி இல்லாமையும், இங்கு நூலை உதாஹரணமாகச் சொன்னதாலேற்பட்டது. "ப்ரோதம்" (கோர்க்கப்பட்டிருக்கிறது) என்பதினால் ப்ரஹ்மத்துக்கு அந்த வஸ்துக்களின் வெளியில் நிறைந்திருக்கையில்லை என்று தோன்றுகிறபடியால் அதை நீக்குவதற்

* ப்ருஹதாரண்யகோபநிஷத், 5—7—3.

பா] ப்ருதிவீ சரீரமோ' * 'எவனுக்கு ஜீவாத்மா சரீரமோ' † என்றும் இவன் எல்லா ப்ராணிகளுக்கும் அந்தராத்மாவாயும் பாபங்கள் இல்லாதவனும் பரமபதத்திலிருப்பவனும் இருக்கிற ஒரு நாராயணனாகிய தேவன்' என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்களில் லோகங்களும் ப்ரஹ்மமும் சரீரமாயும் ஆத்மாவாயும் இருக்கின்றன என்பது அந்தர்யாமி ப்ராஹ்மணம் முதலிய ஶ்ருதிகளில் ஏற்பட்டிருக்கிறது. எ

பா-அ.] ஆகையினாலே எல்லாம் பரமபுருஷனுக்கு ஶரீரங்களாகையினாலும் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாகிய பரமபுருஷனுக்கு விசேஷ

தா] காட்டிச் சொல்லுகிறார்—'அதாவது' என்று ஆரம்பித்து. இங்கே ஸுபாலோபநிஷத்தின் வாக்யத்தை எடுத்தது அந்த அந்தர்யாமி நாராயணன் என்பது வ்யக்தமாயேற்படுவதற்காகவும், அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் சொல்லப்படாத வஸ்துக்களையும் சேர்த்துக்கொள்ளுவதற்காகவும். எ

இப்படி "[illegible]"—என்றிவை முதலான ஶ்லோகங்களிலே பேதஶ்ருதிகளின் அர்த்தம் விவரிக்கப்பட்டது. 'மயி ஸர்வம்'' என்கிற ஶ்லோகத்திலே கடக ஶ்ருதியின் அர்த்தம் விவரிக்கப்பட்டது. இவை இரண்டினாலும் ஏற்படுத்தப்பட்ட அபேத ஶ்ருதிகளுடைய அர்த்தத்தின் விவரணம் செய்யப்படுகிறது என்கிற அபிப்ராயத்திலே சொல்லுகிறார்-'ஆகையினால்' என்று. சிலர் "மயி ஸர்வமிதம்'' என்கிற ஶ்லோகத்திற்கு ரஸம் முதலிய ஸ்வபாவங்களையுடைய என்னிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கிறது என்று அர்த்தம், அதை விவரிக்கிறது "ரஸோऽஹம்''என்பதுமுதல் என்று வ்யாக்யானம் செய்தார்கள் அதைப் பரிஹரிப்பதற்காகச் சொல்லுகிறார்—'எல்லாம் பரமபுருஷனுக்கு ஶரீரங்களாகையினாலும்' என்று கீழ்ச்சொல்லியபடி மற்றவர் சொன்ன அர்த்தத்திலேவெனில் ஆதாரமாயிருக்கை [1] ஆதேயமாயிருக்கை இவைகளை [2] மாறடிச்சொல்லுகிறது முதலிய தோஷம் வரும் என்று

---

* சதபதப்ராஹ்மணம் காண்வபாடம் 5 ப்ர 6 அ 5 ப்ரா 30 வா

† ஸுபாலோபநிஷத், 7 கண்டம்.

1 தாங்கப்படுவதாயிருக்கை.

2 இந்த ஶ்லோகத்தில் 'ரஸோऽஹம் அப்ஸு' என்பதனால் ஜலத்தில் இருக்கும் ரஸம் நான் என்று ஜலம் ஆதாரமாகவும் ரஸம் ஆதேயமாகவும் சொல்லப்பட்டிருக்க அதற்கு விரோதமாக ரஸமாகிய என்னிடத்தில் ஜலம் இருக்கிறது என்று ஜலத்தை ஆதேயமாகவும் ரஸத்தை ஆதாரமாகவும் சொல்லுகிறது.

ணங்களாகையினாலும், பரமபுருஷனே எல்லாவற்றையும் தனக்கு விசேஷணங்களாகவுடையவனாக இருக்கிறான். ஆகையினால் எல்லாப் பதங்களினாலும் பரமபுருஷனே சொல்லப்படுகிறான் என்று அந்தந்த வஸ்துக்களுடன் சேர்த்துச் சொல்லுகிறார்—

𑌰𑌸𑍋𑌽𑌹𑌮𑌪𑍍𑌸𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍍𑌰𑌭𑌾𑌸𑍍𑌮𑌿 𑌶𑌶𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌯𑍋𑌃।
𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌶𑌬𑍍𑌦𑌃 𑌖𑍇 𑌪𑍌𑌰𑍁𑌷𑌂 𑌨𑍃𑌷𑍁॥

𑌪𑍁𑌣𑍍𑌯𑍋 𑌗𑌨𑍍𑌧𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌤𑍇𑌜𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌵𑌿𑌭𑌾𑌵𑌸𑍌।
𑌜𑍀𑌵𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌤𑌪𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌷𑍁॥ ௯

𑌬𑍀𑌜𑌂 𑌮𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍।
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌮𑌹𑌮𑍍॥ ௧௦

𑌬𑌲𑌂 𑌬𑌲𑌵𑌤𑌾𑌂 𑌚𑌾𑌹𑌂 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍।
𑌧𑌰𑍍𑌮𑌾𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌕𑌾𑌮𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭॥ ௧௧

ப-ரை] 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 குந்தியின் பிள்ளையாகிய அர்ஜுன, 𑌅𑌪𑍍𑌸𑍁 ஜலங்களில் 𑌰𑌸𑌃 ருசி என்னும் குணமாகவும், 𑌶𑌶𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌯𑍋𑌃 சந்த்ர ஸூர்யர்களிடத்தில், 𑌪𑍍𑌰𑌭𑌾 காந்தியாகவும், 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன், 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 எல்லா வேதங்களிலும், 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 ப்ரணவமாகவும், 𑌖𑍇 ஆகாயத்தில், 𑌶𑌬𑍍𑌦𑌃 ஓசையாகவும், 𑌨𑍃𑌷𑍁 புருஷர்களிடத்தில், 𑌪𑍌𑌰𑍁𑌷𑌂 புருஷத்தன்மையாகவும், 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 பூமியில், 𑌪𑍁𑌣𑍍𑌯𑌃 பரிசுத்தமான, 𑌗𑌨𑍍𑌧𑌃 வாஸனையாகவும், 𑌵𑌿𑌭𑌾𑌵𑌸𑍌 நெருப்பில், 𑌤𑍇𑌜𑌃 எரிக்கும் சக்தியாகவும், 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன். 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 எல்லாப்ராணிகளிடத்திலும், 𑌜𑍀𑌵𑌨𑌂 ப்ராணனோடிருத்தலுக்குக் காரணமாகவும், 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌷𑍁 தபஸ்ஸு செய்பவர்களிடத்தில் 𑌤𑌪𑌃 தபஸ்ஸாகவும் 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன். 𑌪𑌾𑌰𑍍𑌥 அர்ஜுன 𑌮𑌾𑌂 என்னை, 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 எல்லாப்ராணிகளுக்கும், 𑌸𑌨𑌾𑌤𑌨𑌂 அநாதியான, 𑌬𑍀𑌜𑌂 உபாதானகாரணமான ப்ரக்ருதியாக, 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 அறி, 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌂 புத்தியையுடையவர்களுடைய, 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 புத்தியாகவும், 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன். 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌂 பராக்ரமமுடையவர்களின் 𑌤𑍇𑌜𑌃 பராக்ரமமாகவும் 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ப்ரதவம்சத்தில் உத்தமனான அர்ஜுன, 𑌅𑌹𑌂 நான் 𑌬𑌲𑌵𑌤𑌾𑌂 பலசாலிகளுடைய, 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 காமம் ராகம் இவைகளில்லாத 𑌬𑌲𑌂 பலமாக

வும், ஸர்வபூதேஷு ப்ராணிகளிடங்களில், தர்மாவிருத்த: தர்மங்களுக்கு விரோதமில்லாத, காம: காமமாகவும் அஸ்மி ஆகிறேன். அ-கக

பா] இந்த வெவ்வேறு வகையான எல்லா வஸ்துக்களும் என்னிடத்திலேயே உண்டானவைகள்; எனக்கு சேஷபூதங்கள்; எனக்கு சரீரங்களாகையினால் என்னிடத்திலேயே இருக்கின்றன; ஆகையினால் அந்தந்த ஸ்வபாவங்களோடு கூடியவனாய் நானே இருக்கிறேன் அ-கக.

தா] தாத்பர்யம். விசேஷணங்களைச்சொல்லும் பதங்களுக்கு விசேஷணங்களையுடையவஸ்துவைச்சொல்லும் ஸ்வபாவமுண்டென்பது [1]ஜாதிகுணம் இவைகளைச்சொல்லும் பதங்களில் பொதுவாக ஏற்பட்டிருக்கிறது என்று காட்டுவதற்காக 'விசேஷணங்களாகையினாலும்' என்றுசொல்லியிருக்கிறது. சொல்லப்படுவதாவது முக்யமான சக்தியினாலேயே காட்டப்படுகை ரஸம் முதலிய பதங்கள் லோகத்தில் நிஷ்கர்ஷகங்களாகவே (அதாவது அவைகளையுடைய வஸ்துவைச் சொல்லாமல் அவைகளைமாத்ரம் சொல்லுகிறதாகவே) ப்ரயோகிக்கப்படுகின்றன; இந்த ஸ்லோகத்திலும் ஜலம் முதலிய வஸ்துக்களைச் சொல்லும் பதங்களோடு சேர்க்காமலே ஜலத்தில் ரஸம் என்று சொல்லப்படுகிறது; ஆதலால் இந்த ஸ்லோகத்தில் "ரஸ:" என்னும் பதம் அதையுடைய ஜலத்தைச் சொல்லுவதற்கில்லை, ஆனாலும் ரஸம் முதலியவைகள் பரமாத்மாவுக்கு சரீரங்களான வஸ்துக்களுக்கு விசேஷணங்களாகையினால் பரமாத்மாவே எல்லாவற்றிற்கும் விசேஷ்யமாகையினாலும் இந்த ஸ்லோகத்தில் "ரஸ:" என்னும் பதம் "அஹம்" என்னும் பரமாத்மாவைச் சொல்லும்பதத்துடன் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறபடியினாலும் அந்தப் பரமாத்மாவிஷயத்தில் அது நிஷ்கர்ஷகம் (அதாவது அவைகளையுடைய வஸ்துக்களைச் சொல்லாமல் அவைகளை மாத்ரம் சொல்லுகிறது) என்பது இல்லையென்றே ஒப்புக்கொள்ள வேண்டும் ஆங்காங்கு வஸ்துக்களை எடுத்ததோவெனில் அந்தந்த வஸ்துக்களில் முக்யமான ரஸம் முதலிய விசேஷணங்களையுடையவன் நானே என்று தெரிவிப்பதற்காக அந்தந்தவஸ்துக்களுக்குவிசேஷணங்களான ரஸம்முதலியவைகள் பரமாத்மாவுக்கு விசேஷணங்கள்

---

1 ஜாதியைச் சொல்லும் பதம் ப்ராஹ்மணன் மாடு குடம் முதலியன; குணத்தைச் சொல்லும் பதம் வெளுப்பு கறுப்பு முதலியன.

தா] என்பது [1]"காடிந்யவாந் யோ பிபர்தி"என்றிவைமுதலான இட ங்களில் சொல்லப்பட்டிருக்கிறது என்று தாத்பர்யம் ரஸம். பூமியில் இருந்தபோதிலும், ஜலத்திலும் ரூபம் முதலிய வேறுகுணங்களிருந்த போதிலும் "ரஸோऽஹமப்ஸு"(ஜலத்தில் ரஸம் நான்) என்று ஜலத்தில் ரஸத்தைமாத்ரம் தனித்தெடுத்தது தேஜஸ்ஸிலிருந்து, ஜலமாகமாறு தலையடைந்ததிலிதற்கு முன்னிராத ரஸமே முக்யமானகுணமாதலால் வேறொரு இடத்திலும் [2]"ஆத்தகந்தா ததோ பூமி: ப்ரளயாய கல்பதே"என்றிவை முதலான வசனத்தினால் ப்ருதிவீ முதலிய வ்யத்யாஸங் கள் வாஸனை ரஸம் முதலியவைகளாலுண்டானவைகள் என்பது சொல் லப்பட்டது. இப்படியே மேலும் முக்யமாகத் தனித்துச் சொல்லி இருக்குமிடங்களிலும் உசிதத்துக்குத தக்கபடி அறிந்து கொள்ள வேண்டியது. "ப்ரபா" ஆவது தனக்கு ஆதாரமான வஸ்துவை விட வேறானதாய் மற்ற இடங்களில் பரவுகிற தேஜஸ்ஸு என்று சொல்லப்படுகிற வஸ்து. இந்தக் காந்தியினாலேயே சந்த்ரன் ஸூர்யன் இவர்கள் லோகத்துக்கு உபகாரம் செய்கிறார்கள்; ஆகையால் அவர் கள் இந்தக்காந்தியையே முக்யமாக உடையவர்கள். எல்லாவேதங் களுக்கும் காரணமாயிருக்கைமுதலியவைகளால் ப்ரணவம் எல்லா வேதங்களிலும் முக்யமானது. "பௌருஷம்" ஆவது ஆண் தன்மை; அதாவது எந்த அடையாளங்களால் புருஷன் என்று தெரிந்து கொள்ளப்படுகிறானோ அவை என்றுசிலர்சொல்லுகிறார்கள் வேறுசிலர் வம்சத்தின் பரம்பரைக்குக் காரணமான ரேதஸ்ஸு என்று சொல் லுகிறார்கள்; அன்றிக்கே—"பௌருஷம்" ஸாமர்த்யம், அதாவது கர்த்தாவாகும் ஶக்தி என்றர்த்தம்; அந்த ஶக்தியினாலல்லவோ கர்த் தாவாகிய ஜீவாத்மாவுக்கு மற்ற இந்த்ரியம் முதலிய காரணங்களை விட முக்யமாயிருக்கை சொல்லப்படுகிறது. இந்தயோசனையில் "ந்ரு ஷு" என்பதற்கு ஜீவாத்மாக்களில் என்றர்த்தம் அதுவுமன்றிக்கே— "பௌருஷம்" ஆண்மை அதாவது, பெண் நபும்ஸகர்கள் இவர் களுக்கில்லாத தைர்யம் முதலிய ஸ்வபாவம்; அப்பொழுது "ந்ருஷு"

---

[1] விஷ்ணுபுராணம் I—14—28 'ய.' எந்தபகவான், 'காடிந்யவான்' கடின மாயிருக்கும் தன்மையையுடையவனாய்க்கொண்டு 'பிபர்த்தி' உலகதனைத்தாங்கு கிறானே.

[2] விஷ்ணுபுராணம் 6—4—14. 'ததா' அப்பொழுது 'ஆத்தகந்தா' க்ர ஹிக்கப்பட்ட வாஸனையையுடைய'பூமி:'பூமியானது'ப்ரளயத்வாய' ப்ரளயத்தை யுடைவதற்காக 'கல்பதே' தக்கதாகிறது.

தா] என்பது புருஷர்களை சொல்லுகிறது. "புண்யோ கந்த:" (பரிசுத்தமான வாஸனை) என்றது துளஸி முதலியவைகளின் வாஸனை, நல்ல வாஸனையாகவுமாம். அந்த வாஸனை இருப்பதினாலல்லவோ ப்ருதிவீ ஸத்வம் வ்ருத்தியடைவதற்காவது ஸுகத்திற்காவது காரணமாகிறது இவ்விடத்தில் 'விபாவஸு" என்பது நெருப்பு; அதில் தேஜஸ்ஸாவது வஸ்துக்களைக் கொளுத்தும் ஶக்தி "ஸர்வபூதேஷு" என்னும் பதத்தினால் இவ்விடத்தில் சரீரத்தையுடைய ப்ராணிகள் சொல்லப்படுகின்றன "ஸர்வ" என்னும் பதத்தினால் இவ்விடத்தில் ப்ரஹ்மா, ருத்ரன் முதலியவர்களையும் சேர்த்துச் சொல்லுகிறது அவைகளில் "ஜீவநம்" ஆவது, ப்ராணனோடு இருத்தல், ப்ராணன் இருப்பதற்குக் காரணமாகவுமாம். எந்தக்காரணத்தினால் எல்லா ப்ராணிகளும் ஜீவிக்கின்றனவோ அது. அதுவுமன்றிக்கே—எல்லா ப்ராணிகளிடங்களிலும் எதிர்பார்க்கக்கூடிய ரூபமாகவுமாம். "ஸர்வபூதாநாம் ஸநாதநம் பீஜம்" (எல்லா ப்ராணிகளுக்கும் ஆதியான காரணம்) என்றது ப்ரக்ருதியை. அன்றிக்கே - ஒவ்வொரு வஸ்துக்களிலும் முக்யமான குணங்களைச் சொல்லிவருகிற ஸந்தர்ப்பமாகையினால் "பீஜம்" என்னும்பதம் இவ்விடத்தில் உபாதானகாரணமாக இருக்கையாகிற ஸ்வபாவத்தைச் சொல்லுகிறது. அதாவது, மாறுதலை அடைகிற எல்லா வஸ்துக்களுடையவும், அப்படி மாறுதலை அடையும் ஶக்தி, என்று அர்த்தம். அதுவன்றிக்கே "பீஜம்" முளைப்பதற்குக்காரணம், அதாவது ஜங்கமஸ்தாவரங்களாகிற எல்லாவஸ்த்துக்களுடையவும் அததற்கு உபாதானகாரணமாகிய வஸ்துக்கள். "புத்தி:" ஆவது, நிஶ்சயம், அல்லது ஞானமாகவுமாம். "தேஜஸ்வி" களாவது பராக்ரமத்தை உடையவர்கள்; அவர்களுடைய தேஜஸ்ஸாவது, மற்றவர்களினால் அவமானம் செய்யக்கூடாமை. பிறரை அவமானம் பண்ணக்கூடிய சக்தியாகவுமாம். தேஜஸ்ஸென்பது, அபிமானம் என்று சிலரும், ஸாமர்த்யம், என்று சிலரும் சொல்லுகிறார்கள். பலமாவது, சுமையைத் தாங்கும் ஶக்தி. காமம் ராகம் இவைகளினால் அததின் கார்யத்தில ப்ரவ்ருத்தித்தபலம், அயலாரைப் பிடித்தல் முதலியவைகளுக்குக் காரணமாகையினால் தர்மத்திற்கு உபயோகமான ஶரீரம் முதலியவைகளைத் தரிப்பது முதலியவைகளை மாத்ரம் பற்றியது, என்று தெரிவிப்பதற்காக, "காமராகவிவர்ஜிதம்" என்று சொல்லப்பட்டது, காமமாவது ஆசையின் முதிர்ந்த தசை ராகமாவது ஆசை, அதுவுமன்றிக்கே-"காம" என்னும் பதம்

தா] ஆசைப்படத்தகுந்த வஸ்துவைச் சொல்லுகிறது. அதைப்பற்றிய ஆசை காமராக, என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது "பூதேஷு" என்பதற்குதேவன், மனுஷ்யன் முதலிய ப்ராணிகளில் என்று அர்த்தம். "தர்மாவிருத்த: காம:" என்றால், தன்னுடைய பத்னியினிடத்தில் ப்ரீதி முதலியது. பிறகு "ரஸோஹம்" என்றிவை முதலாகச்சேர்த்துச்சொல்லி இருப்பதைக் காரணத்துடன் நிரூபிக்கிறார்— 'இந்த' என்றாரம்பித்து. இது பரமபுருஷனாலுண்டாக்கப்பட்ட ஶக்தியை; உடையது, என்று காட்டுவதற்காக, "ராஜா ராஷ்ட்ரம்" (இத்தேசமே ராஜா) என்றிவை முதலிய வார்த்தைகளைப்போல ஆரோபித்துச் சொல்லப்பட்டதல்ல, முக்யமான அர்த்தமே ஸம்பவிக்கும்பொழுது முக்யமல்லாத அர்த்தத்தைச்சொல்லுவது உசிதமல்லவாகையினால் என்று தாத்பர்யம். 'இந்த' என்பதினால் பகவானைத்தவிர மற்றவர்களினால், செய்யமுடியாமை நினைக்கப்பட்டது. 'எல்லா' என்பதினால் ப்ரஹ்மா ருத்ரன் முதலியவர்களினாலும் மற்றவர்களினாலும் செய்யப்படுகிற வஸ்துக்களும் அந்த ப்ரஹ்மா முதலியவர்களை ஶரீரமாகவுடைய பரமாத்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டன, என்று முன்பு "அஹம் க்ருத்ஸ்நஸ்ய" என்கிற ஶ்லோகத்தில் சொல்லப்பட்டமை ஜ்ஞாபகப்படுத்தப்பட்டது. மேல் சொல்லப்போகிற ரஜோகுணம் நிறைந்த வஸ்துக்களைக்காட்டிலும், தமோகுணம் நிறைந்த வஸ்துக்களைக்காட்டிலும், வேறுபட்டமையைத் தெரிவிப்பதற்காக 'வெவ்வேறான' என்று சொல்லப்பட்டது. [2] "ஸத்த்வ வ்யபாஶ்ரயா:" என்று மேலும் சொல்லப்போகிறார் இத்தால் [3] "நவிலக்ஷணத்வாத்" என்கிற அதிகாரணத்தின் அர்த்தமும் ஞாபகப்படுத்தப்பட்டது. 'என்னிடத்திலேயே உண்டானவைகள்' என்பது முதலியவை அந்தந்த வஸ்துக்களுக்குத்தக்கபடி ஆங்காங்கு ஸம்பவிக்கும் வண்ணம், சேர்த்துச் சொல்வதற்குக் காரணம். குணங்கள், ஜாதி ஶரீரங்கள் இவைகளில் ஒரேமாதிரியாகச் சேர்த்துச்சொல்வதற்குக் காரணம் பிரிக்க முடியாமல் சேர்ந்திருக்கை, என்று தெரிவிப்பதற்காக, 'என்னிடத்திலேயே சேர்ந்திருக்கின்றன' என்று சொல்லப்பட்டது. அ, கூ, ய, கக

---

1 பகவத்கீதை, 7–6. [2] பகவத்கீதை,

[3] சாரீரகஸூத்ரம 2, 1, 4, அஸ்ய, இத்தப்ரபஞ்சத்துக்கு விலக்ஷணத்வாத், ப்ரஹ்மத்துக்கு மாறான ஸ்வபாவத்தை உடைத்தாயிருக்கையினால் ந,ப்ரஹ்மத்தினிடத்திலிருந்து உண்டாகிறதென்பது பொருந்தாது.

யே சைவ ஸாத்த்விகா பாவா ராஜஸாஸ்தாமஸாஶ்ச யே |
மத்த ஏவேதி தாந்வித்தி நத்வஹம் தேஷு தே மயி || ௧௨

ப-ரை.] யே எந்த, பாவா: வஸ்துக்கள், ஸாத்த்விகா: ஸத்வகுணத்தினாலுண்டானவைகளோ, யே எந்த வஸ்துக்கள், ராஜஸா: ரஜோகுணத்தினாலுண்டானவைகளோ, யே எந்தவஸ்துக்கள், தாமஸா: தமோகுணத்தினாலுண்டானவைகளோ, தாந் அவைகளை, மத்த ஏவ என்னிடத்திலிருந்தே உண்டானவைகள், இதி என்று, வித்தி அறி, அஹம் து நானோவென்றால், தேஷு அவைகளிடத்தில், ந இல்லை, தே அவைகள், மயி என்னிடத்தில், (இருக்கின்றன.) ௧௨

பா] தனித்து எதற்காகச் சொல்லப்படுகிறது; ஸத்வ குணத்தி

தா] "ரஸோ(அ)ஹம்" என்றிவை முதலியவைகள் மற்றவைகளையும் குறிப்பிடவேண்டியதற்காகச் சொல்லப்பட்டது என்பதையும், "யே ச" என்கிற ஶ்லோகம் இந்த ஸந்தர்ப்பத்தை முடிக்கிறது, என்பதையும் காட்டுகிறார்—'தனித்து எதற்காகச் சொல்லப்படுகிறது' என்று 'அவைகளுக்குக் காரணங்களாகவும்' என்றதினால் ஷஷ்டீ ஸமாஸமும் சேர்க்கப்படுகிறது. இந்த் தேஹமாக இருந்தல் முதலியவைகளைப் பிரித்துச் சொன்னது இப்பொழுது அநுபவிக்கப்படுகிறவைகளை அநுவாதம் செய்கிற "யே ச" (எந்த) என்கிற பதத்தின் அபிப்ராயத்திலேற்பட்டது. 'ஸத்வகுணத்தினாலுண்டானவை' என்றிவை முதலியது தேஹம் முதலியதில் தனித்தனியே அந்வயிக்கிறது. மேலும் [1] "ப்ரஹர்ஷ: ப்ரீதிராநந்த: ஸ்வாஸ்த்யம் ஸம்ஶாந்தசித்ததா" என்றிவை முதலியன ஸத்வகுணத்தினாலுண்டாகும் ஸ்வபாவங்கள். [2] "அதுஷ்டி: பரிதாபஶ்ச க்ரோதோ லோபஸ்ததாக்ஷமா" என்றிவை முதலியவைகள் ரஜோகுணத்தினாலுண்டாகும் ஸ்வபாவங்கள். [3] "அவிவேகஸ்ததா மோஹ: ப்ரமாத: ஸ்வப்நதந்த்ரதா" என்றிவை முதலியவைகள் தமோகுணத்தினாலுண்டாகும் ஸ்வபாவங்கள். வேறு

---

[1] 'ப்ரஹர்ஷ:' ஸந்தோஷம் 'ப்ரீதி' அன்பு 'ஆனந்த:' ஆனந்தம் 'ஸ்வாஸ்த்யம்' ஸுகம் 'ஸம்ஶாந்தசித்ததா' சாந்தியையுடைய மனதையுடையவனாக இருக்கை.

[2] 'அதுஷ்டி:' ஸந்தோஷமில்லாமை 'பரிதாப:' துக்கம் 'க்ரோத:' கோபம் 'மோஹ:' அஜ்ஞானம் 'ததா' அப்படி 'அக்ஷமா' பொறுமை

[3] 'அவிவேக:' பகுத்தறிவு இல்லாமை 'ததா' அப்படி 'மோஹ:' அஜ்ஞானம்

பா] ணுலுண்டானவைகளும்; ரஜோகுணத்திணுலுண்டானவைகளும், தமோகுணத்திணுலுண்டானவைகளும், இந்த உலகத்தில் தேஹமாகவும் இந்த்ரியங்களாகவும் அநுபவிக்கக்கூடிய வஸ்துக்களாகவும் அவைகளுக்குக் காரணங்களாகவும் எங்கேங்கே வஸ்துக்களிருக்கின்றனவோ; அவைகளெல்லாவற்றையும் என்னிடத்திலிருந்தே உண்டானவைகளாக அறி· அவைகள் எனக்கு ஶரீரங்களாகையிணுல் என்னிடத்திலேயே இருக்கின்றனவென்றும் அறி. நானோ ஒருபோழுதும் அவைகளுக்கு வஶப்பட்ட ஸ்திதியை உடையவன் அல்ல. அதாவது மற்ற இடங்களில் ஶரீரம் ஆத்மாவுக்கு வஶப்பட்ட ஸ்திதியை உடையதாக இருந்தபோதிலும் ஆத்மாவின் இருப்புக்கு ஶரீரத்திணுலும் உபகாரம் இருக்

தா] இடங்களில் விஸ்தாரமாகச்சொல்லப்பட்ட இவைகளும் இந்த இடத்தில் அபிப்ராயத்தில்கொள்ளப்பட்டன. "மத்த ஏவ" (என்னிடத்திலிருந்தே) என்கிற ஏவகாரத்திணுல், நிமித்தகாரணம் உபாதான காரணம் இவ்விரண்டும் ஒன்று என்பதும், 'ஸத்வகுணத்திணுலுண்டானவைகள்' என்றிவை முதலியவைகளிணுல் விசித்திரங்களான ஶக்தியை உடையவைகள் என்பதும், அவைகளுக்குத் தகுந்தபடி அநேக நிமித்த காரணங்கள் உண்டு என்பது ஸரியல்ல என்பதும், தெரிவிக்கப்பட்டது. காரணமாக இருக்கையுடன் ஒன்று சேர்த்துச் சொல்லுகைக்குக்காரணமாகிய நியமனத்தை உள்ளடக்கிக்கொண்டிருக்கிற ஶரீரமாகையிணுல் அவனுக்கு வஶப்பட்டிருக்கும் என்பதும், "மயி" (என்னிடத்தில்) என்பதிலுள்ள ஏழாம் வேற்றுமையிணுல் சொல்லப்படுகிறது, என்று காட்டுவதற்காக, 'எனக்கு ஶரீரங்களாகையிணுல் என்னிடத்திலேயே இருக்கின்றன' என்று சொல்லப்பட்டது. "நத்வஹம் தேஷு" என்கிற இடத்தில் வ்யாபித்திருப்பதே இல்லை என்று சொல்லுகிறது, என்கிற ப்ரமத்தை நீக்குவதற்காகச் சொல்லுகிருர்—'நானோ' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் இது ப்ரஸ்தாவமே இல்லாதபொழுது எதற்காக விலக்கப்படுகிறது, என்று ஆக்ஷேபித்துக்கொண்டு ஸமாதானம் சொல்லுகிருர்—'அதாவது' என்ருரம்பித்து. "து" என்னும் பதம் இவ்விடத்தில் ஆக்ஷேபத்தைத் தடுப்பதற்காக. எவ்வித உபகாரமும் இல்லை என்று தடுக்கும்

ப்ரமாத:' அஜாக்ரதை 'ஸ்வப்னதந்த்ரிதா' தூக்கம் சோம்பலிவைகளை உடையவஞக இருக்கை.

பா] கிறது. எனக்கோவெனில் அவைகளினால் அப்படிப்பட்ட ஒருவித மான உபகாரமும் இல்லை. கேவலம் விளையாட்டுமாத்திரம் தான்ப்ரயோ ஜனம் என்று அர்த்தம். ௰௨

த்ரிபிர்குணமயைர்பாவைரேபிஸ் ஸர்வமிதம் ஜகத் ।
மோஹிதம் நாபிஜாநாதி மாமேப்ய: பரமவ்யயம் ॥ ௧௩

ப-ரை.] த்ரிபி: மூன்றுகளான, குணமயை: ஸத்வம் முத லிய குணங்கள் நிறைந்த, பாவை: இச்ச, ஏபி: வஸ்துக்களி னால், மோஹிதம் மயக்கப்பட்ட, இதம் இந்த, ஸர்வம் எல்லா, ஜகத் லோகமும், ஏப்ய: கீழ்ச்சொல்லிய வஸ்துக்களைக்காட்டிலும், பரம் மேலானவனாகியும், அவ்யயம் அழிவில்லாதவனாகவுமிருக்கிற, மாம் என்னை, நாபிஜாநாதி அறிந்துகொள்ளுகிறதில்லை. ௧௩

பா] ஆதலால் இப்படிச் சேதநாசேதனங்களாகியும் எனக்குச் சேஷபூதங்களுமான எல்லா லோகமும் அந்தந்தக்காலங்களில் என்னி

தா] பக்ஷத்தில் இவைகளை உண்டாக்கினது வ்யர்த்தமாம் என்பதைப் பரிஹ ரிப்பதற்காக 'அப்படிப்பட்ட' என்று சொல்லப்பட்டது. அபிப்ரா யத்தில் வைக்கப்பட்ட வேறுவிதமான உபகாரத்தை "ஸ்வஹம்" என்னும் பதத்தில் அபிப்ராயமாகச்சொல்லப்பட்ட, ஸகல இஷ்டங் களினாலும் நிறைந்தவன், என்பதைக்காரணமாகக் கொண்டு காட்டுகி றார்—'கேவலம்' என்று. ௧௨

இப்படித் தன்னுடைய ஸ்வபாவம் உபதேசிக்கப்பட்டது. பிறகு "த்ரிபி:" என்றிவை முதலிய ஶ்லோகங்களினால் ப்ரக்ருதியினால் இது மறைக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்—இவ்விடத்தில் "மாம்" (என்னை) என்பதினால் "ஸர்வபூதாநாம்" என்றாரம் பித்துச்சொல்லப்பட்ட தன்னுடைய உண்மையான ஸ்வரூபம், குண மயமான வஸ்துக்களைவிடத் தான்மேலானவன் என்பதைத் தெரி விப்பதற்காக அனுவதிக்கப்பட்டது, என்று காட்டுவதற்காகச்சொல் லுகிறார்—'ஆதலால்' என்று ஆரம்பித்து. உத்பத்தி, ப்ரளயம் இவை களுக்கு விரோதமில்லாமல் இருக்கவேண்டியதையும், ஸ்லாக்கற்பங் களிலும் தானே காரணம் என்பதையும், அபிப்ராயத்தில் வைத்துக் கொண்டு 'அந்தந்தக்காலங்களில்' என்று சொல்லப்பட்டது. "த்ரிபி:, குணமயை:, பாவை:" என்கிற மூன்று பதங்களினாலும் துக்கத்

பாடத்திலிருந்தே உண்டாகிறது. என்னிடத்திலேயே லயத்தை அடைகிறது. என்னிடத்திலேயே இருக்கிறது. ஆகையினால் நானே காரணதசையிலும் கார்யதசையிலும் எல்லாவற்றையும் ஶரீரமாக உடையவனாகையினால் எல்லா விஶேஷணங்களையும் உடையவனாக இருக்கிறேன். ஆகையினால் காரணமாக இருக்கையினாலும், ஜ்ஞானம் முதலிய எண்ணிறந்த கல்யாணகுணங்களின் கூட்டங்களினாலும் மற்றெல்லா விதங்களினாலும் உயர்ந்தவன், என்னைவிட வேறான வஸ்து ஒருவிதமான கல்யாணகுணத்தினாலும் உயர்ந்ததில்லை. இப்படிப்பட்டவனாகியும், மூன்று விதங்களான ஸத்வம், ரஜஸ், தமஸ்,

---

தா] தோடு கலந்திருக்கையும், நாஶத்தை அடையும் தன்மையும், தன்னைவிட உயர்ந்த வஸ்துவை உடையவைகள் என்பதும், சொல்லப்படுகின்றன. ரஜோகுணம் தமோகுணம் கலந்திருப்பதினால் துக்கத்தோடு கலந்திருக்கை உண்டு; ஸத்வம் முதலிய மூன்று குணங்களும் ஸுகம் துக்கம் அஜ்ஞானம் இவைகளை ஸ்வபாவமாக உடையவைகளல்லவா. கார்யமாகையினால் அழியும்தன்மையும் இந்த்ரியங்களினால் அளவிட்டு அறியப்படுகிறபடியினால் அறபமாக இருத்தலும் உண்டு என்று தாத்பர்யம் "ஶாம், ஸஹஸ்ரம், ஸத்யம்" என்கிற மூன்று பதங்களினாலும் எல்லாத் துக்கங்களுக்கும் விரோதமான ஸ்வரூபத்தை உடையவனாக இருக்கையும், எல்லையில்லாத ஆனந்தமாக இருக்கையும், நித்யமாக இருக்கையும், அபிப்ராயத்தில்கொள்ளப்பட்டன, என்று காட்டுகிறார்—'இப்படிப்பட்டவனும்' என்று, காரணமாகையினாலே தகப்பனாகையினால் எல்லாவற்றிற்கும் நன்மையை விரும்புகிறவனும், ஶேஷியாகையினால் தனக்கு ஶேஷபூதமான வஸ்துக்கள் உஜ்ஜீவிப்பதையும் தன்னுடைய லாபமாக நினைத்துக்கொண்டிருப்பவனும், எல்லாவற்றையும் அறிந்தவனாக இருக்கை, எல்லா ஶக்தியையுமுடையவனாக இருக்கை, முதலியவைகளினால் அநிஷ்டங்களை நிவ்ருத்தி செய்தல், இஷ்டத்தை அடைவித்தல் இவைகளில் வேறொன்றையும் எதிர்பாராதவனுமான என்பது, 'இப்படிப்பட்டவனாகியும்' என்கிற பதத்தின் அபிப்ராயம். துக்கத்தோடு கலந்திருக்கை முதலியவைகளை உடையவைகளாகக் கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட வஸ்துக்களே "ஸஹஸ்ர:" என்கிற இடத்தில் மேன்மைக்கு எதிர்த்தலையாகச் சொலலப்படுகின்றன என்று தெரிவிப்பதற்காக—'மூன்று விதங்களான' என்றிவை முதலியது சொல்லப்

பா] என்னும் குணங்களினுலுண்டான வஸ்துக்களைவிட எனக்கு அஸா தாரணங்களான கல்யாண குணங்களின் கூட்டங்களினுலும் அனுப விக்கக்கூடியவைகளான எல்லாவிதங்களினுலும் மிகவும் உயர்ந்த வனுகியும், எப்பொழுதும் ஒரேவிதமான ஸ்வபாவத்தை உடையவ னுமான என்னை அந்த மூன்று குணங்களினுலுண்டானதாகியும்

தா] பட்டது. "ஸாஹ்ஃ வரம்" என்கிற இடத்தில் [1] 'தமோகுணத் துக்கு மேலான இடத்தில் என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலிய இடங்களிற்போல இடத்தைச் சொல்லுகிறது, என்பதை விலக்குவதற்காக—'உயர்ந்தவனுகியும்' என்று சொல்லியிருக்கிறது. 'அனுபவிக்கக்கூடியவைகளான எல்லா விதங்களினுலும்' என்றது ஸமுத்ரத்திற்குள் குளப்படி இருக்கிறது என்பது போல; அதாவது [2]'இவனுக்கு இந்த லோகத்தில் எது இருக்கிறதோ எது இல்லையோ அவை யெல்லாம் இந்த ப்ரஹ்மத்தினிடத்தில் இருக்கிறது என்றர்த் தமுள்ள ஶ்ருதிவாக்யமிருக்கிறதல்லவா ப்ரக்ருதி ஸம்பந்தமுள்ளவஸ் துக்கள் ஶப்தம் ஸ்பர்சம் முதலியவைகளாலனுபவிக்கத்தக்கவைகள்; பர மாத்மாவோ ஜ்ஞானம் சக்திமுதலிய கல்யாணகுணங்களினுலும், தன் னுடைய ரூபத்திலிருக்கின்றவைகளும் ப்ரக்ருதிஸம்பந்தமுள்ள ஶப் தாதிகளைக்காட்டிலும் மேலான ஸுகத்தையே ஸ்வபாவமாகவுடைய வைகளுமான ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத ஶப்தாதிகளாலும், பரமாத் மாவை ஆதாரமாகவுடையவைகள் என்று தெரிந்துகொள்ளுவதினுல் அப்ராக்ருதமானவைகளுக்குச் சமானங்களான ப்ரக்ருதி ஸம்பந்த முள்ள ஶப்தாதிகளாலும், தனிதனியே அனுபவிக்கத்தக்கவனுக இருக்கையில் எல்லையில்லாத மேன்மையையுடையவன் என்று தாத் பர்யம். இப்படி சொல்லப்பட்ட மிகவும் போக்யமான ஸ்வபாவத் துக்கு மாறுதலில்லாமையினுல், காலத்தினுலளவை விலக்குகிறது— அவ்யயம்" என்னும் பதம், என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர்— 'எப்பொழுதும் ஒரே ஸ்வபாவத்தையுடையவனுமான' என்று. 'அந்த' என்பதற்குக் கீழ்ச் சொன்ன மூன்று தோஷங்களோடு கூடிய என் றர்த்தம். 'மூன்று' என்பதற்கு குணங்கள் ஒன்றுக்கொன்று குறைந் ததாகவும் அதிகமாகவும் இருந்தாலும் விட்டுப் பிரியாதவைகள், ஆகையினுல் குணமயங்களான வஸ்துக்களுக்கு துக்கத்தோடு கலந்தி

---

[1] புருஷஸூக்தம். [2] சாந்தோக்யோபநிஷத், 8—3.

பா] மிகவும் அற்பங்களாகியும், க்ஷணத்திற்குள் அழியக் கூடியவைகளாகியும் முன் செய்த கர்மங்களுக்குத்தக்கபடி தேஹமாகியும் இந்த்ரியங்களாகியும் அனுபவிக்கத்தக்கவைகளாகியும் இருக்கிற வஸ்துக்களினுல் மயக்கப்பட்ட, தேவதை, பசு, மனுஷ்யன், ஸ்தாவரம், இவைகளாகப் பிரிந்திருக்கிற இந்த லோகம் தெரிந்துகொள்ளுகிறதில்லை. கரு

தா] ருக்கை விடமுடியாது என்று தாத்பர்யம். 'மிகவும் அற்பங்களாகியும்' என்பதற்கு அவரவர் கர்மங்களுக்குத்தக்கபடி உண்டாகிற முக்குணமயங்களான போகங்களும் அந்தக் கர்மங்களுக்குத்தக்கபடி அற்பங்கள் என்று தாத்பர்யம். 'க்ஷணத்திற்குள் அழியக்கூடியவைகளாகியும்' என்றதற்கு அந்தக் கர்மங்கள் ஒழிந்தால் பிறகு ஒரு க்ஷணமும் நிற்க சக்தியற்றவைகள் என்று தாத்பர்யம். ஸத்வகுணத்தினுல் மோஹம் எப்படி உண்டாகும்? என்னில், இவ்விதமாக ஸமாதானம் சொல்ல வேண்டியது. விஷம் கலந்த அன்னத்தில் தேனைக்கலந்தால் அது மூடனுக்கு எப்படி இதை நாம் ஸாப்பிடவேண்டும் என்கிற ஆசையை உண்டாக்குகிறதோ, அப்படியே அவனவன் கர்மத்துக்குத்தக்கபடி அனிஷ்டத்தில் முடிவு பெறுகிற அற்பஸுகத்துக்குக் காரணமாகையினுல் ஸத்வகுணமே மோஹத்துக்குக்காரணமென்பது உசிதம் என்று. "ஸர்வம்" என்னும் பதம் இவ்விடத்தில் தேவதை என்னும் ஜாதிக்குள்பட்ட ப்ரஹ்மா, ருத்ரன், முதலியவர்களையும் சேர்த்துச் சொல்லுகிறது. "ஜக³த்" என்னும் பதமானது நமால் கண்டறியப்படுகிற அனுபவிக்கும ஜீவாத்மாக்களின் கூட்டங்கள் விசித்திரங்கள் என்பதைத் தெரிவிக்கிறது; "ஜக³த்" என்னும் பதமும் அசேதனத்தோடு சேர்ந்த சேதனங்களைச் சொல்லுகிறது என்கிற அபிப்ராயத்தினுல 'தேவதை' என்றிவை முதலானது சொல்லப்பட்டது. [1] 'ப்³ரஹ்மாத்³யா: ஸகலா தே³வா: மநுஷ்யா: பஸ²வஸ் ததா² | விஷ்ணுமாயாமஹாவர்த்தமோஹாந்த⁴தமஸாவ்ருதா: ||' என்றிவை முதலியது இங்கே அனுஸந்திக்கத்தக்கது. கங

---

[1] விஷ்ணுபுராணம், 5-30-17. 'ப்ரும்மாத்யா:' பிரும்மா முதலிய 'ஸகலா:' எல்லா 'தேவா:' தேவதைகளும் 'ததா' அப்படியே 'மனுஷ்யா:' மனுஷ்யர்களும் 'விஷ்ணுமாயா:' பகவன்மாயையகிற 'மஹாவர்த்த' பெரிய சூழலொலுண்டாககப்பட்ட 'மோஹ' அஜ்ஞானமாகிற 'அந்ததமஸா' இருட்டினுல் வருதா: மறைக்கப்பட்டவர்கள்.

பா-அ] ஸ்வபாவத்தினாலேயே எல்லையில்லாத மேன்மையையுடைய ஆனந்த ஸ்வரூபனாகவும் அழிவில்லாதவனாகவும் எப்பொழுதும் ஒரேவிதமான ஸ்வபாவத்தை உடையவனாகவும் லோகத்தில் இருக்கும் வஸ்துக்களிலுள்ள அநுபவிக்கக்கூடிய ஸ்வபாவங்களினால் மிகவும் சிறந்தவனாகவும் இருக்கிற நீர் இருக்கும்பொழுது மிகவும் அற்பங்களாயும் குணமயங்களாயும் அழிவுள்ளவைகளாகவுமிருக்கிற வஸ்துக்களில் எல்லா ஆத்மாக்களுக்கும் இது அநுபவிக்கக்கூடியது என்கிற புத்தி எப்படி உண்டாகிறது? என்கிற ஆக்ஷேபத்துக்கு ஸமாதானம் சொல்லுகிறார்— ௧௩½

தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா । ௧௩½

ப-ரை] தைவீ தேவனாகிய என்னால் உண்டாக்கப்பட்டதும், குணமயீ ஸத்வம் முதலிய குணங்கள் நிறைந்ததுமான, ஏஷா இந்த, மம என்னுடைய, மாயா ப்ரக்ருதியானது, துரத்யயாஹி தாண்டமுடியாததல்லவா? ௧௩½

தா] வஸ்துக்களின் ஸ்திதி கீழ்ச் சொல்லியபடியிருக்கும்பொழுது இந்த மோஹம் உண்டாவதே பொருந்தாதே என்கிற ஆக்ஷேபத்திற்கு "தைவீஹ்யேஷா" என்கிற ஶ்லோகம் ஸமாதானம் சொல்லுகிறதென்று அவதாரிகை சொல்லுகிறார் —'ஸ்வபாவத்தினாலேயே' என்றாரம்பித்து. 'எல்லா' என்பதற்கு ஸகலஜனம் மோஹித்திருக்கிறபடியினாலே தத்வஜ்ஞானத்துக்கறிவில்லாதிருக்கிற தேவஜாதிக்கும் என்று தாத்பர்யம். உயர்ந்ததும் தாழ்ந்ததும் சேர்ந்திருக்கும்பொழுது உயர்ந்ததைச் சொல்லுவதே பதத்துக்கு ஸ்வபாவம் என்பது 'ஆத்மாக்களுக்கும்' என்பதினால் காட்டப்பட்டது. இவ்விடத்தில் "ஹி" என்னும் பதம் தாண்டமுடியாமைக்குக் காரணத்தைச் சொல்லுகிறது "தைவீ" என்னும் பதத்திலிருக்கும் விக்ருதிக்கு தேவனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டது என்றர்த்தம். "திவு க்ரீடா" என்றாரம்பித்துச் சொல்லப்படுகிற "திவு" என்கிற தாதுவிலிருந்து "தைவ" என்னும் பதம் உண்டானது. இத்தால் தேவனுடைய தன்சக்தியை என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யமும் குறிக்கப்பட்டது "தைவீ மம" என்னும் பதங்களாலுண்டாகிற, மாயையை ஸ்ருஷ்டித்த தேவன் வேறு என்னும் ப்ரமத்தை விலக்குவதற்காக 'என்னாலேயே' என்று சொல்லப்பட்டது ஸ்வதந்த்ரனாயும அகடிதகடனா ஸாமர்த்யமுள்ளவனாயு

பா] என்னுடையதும், இந்தஸத்வம், ரஜஸ், தமஸ், என்கிறகுணங்களினால் நிறைந்ததுமானப்ரக்ருதியானது எந்தக்காரணத்தினாலே விளையாடுவதற்காக ப்ரவ்ருத்தித்த என்னாலேயே செய்யப்பட்டதோ; ஆதலால் ஒருவராலும்தாண்டமுடியாதது. இந்த ப்ரக்ருதி, "மாயா" என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது, என்பது அஸுரர்களுடையவும், ராக்ஷஸர்களுடையவும்அஸ்த்ரம் முதலியவைகளைப்போல விசித்ரங்களான கார்யங்களைச்செய்கிறபடியினால், * "𑌤𑌤𑌃 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚𑌕𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 | 𑌆𑌜𑌗𑌾𑌮 𑌸𑌮𑌾𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑌂 𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌮𑌾𑌲𑌿 𑌸𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 || 𑌤𑍇𑌨 𑌮𑌾𑌯𑌾𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍𑌶𑌮𑍍𑌬𑌰𑌸𑍍𑌯𑌾𑌶𑍁𑌗𑌾𑌮𑌿𑌨𑌾 | 𑌬𑌾𑌲𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌤𑌾 𑌦𑍇𑌹𑌮𑍇𑌕𑍈𑌕𑌶𑍍𑌯𑌨 𑌶𑍋𑌧𑌿𑌤𑌮𑍍" என்றிவை முதலான இடங்களில் மாயா என்னும் பதம் எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறதோ அப்படியே. ஆதலால்

தா] மிருக்கிற பகவானால் தன்னுடைய லீலைக்காக ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட மாயை பகவானல்லாத மற்றெல்லாராலும்தாண்டமுடியாதல்லவா? என்பது 'ஒருவராலும்' என்பதினபிப்ராயம். இவ்விடத்தில் "அத்யய" என்னும் பதத்திற்கு நாசம் அர்த்தம், என்பதை நீக்குவதற்காகச் சொல்லுகிறார்—'தாண்டமுடியாதது' என்று. "துரத்யயா" என்னும் பதத்திற்கு வருத்தப்பட்டு தாண்டக்கூடியது அதாவது பகவானிடத்தில் ப்ரபத்தி செய்யாதவர்களால் தாண்டமுடியாது என்றர்த்தம். "மாயா" என்னும் பதத்திற்கு மற்றவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட அர்த்தத்தை நிராகரிக்கப்போகிறவராய் தன்னால் ஒப்புக்கொள்ளப்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'இந்தப்ரக்ருதி' என்றாரம்பித்து. உண்மையாகவே இருக்கிற அஸுரர்களுடையவும் ராக்ஷஸர்களுடையவும் அஸ்த்ரம் முதலியவைகளில் "மாயா" என்னும் பதத்தை ப்ரயோகித்திருப்பது அவை பொய் என்பதைப் பொறுத்ததல்ல என்று தாத்பர்யம் 'எப்படிசொல்லப்பட்டிருக்கிறதோ' என்பதற்கு

---

* விஷ்ணுபுராணம், 1–19–19, 20. 'ததः' பிறகு 'தஸ்ய' அந்த ப்ரஹ்லாதனை 'ரக்ஷார்த்தம்' காப்பாற்றுவதற்காக பகவதா பகவானால் 'ஸமாஜ்ஞப்தம்' ஆஜ்ஞாபிக்கப்பட்ட 'ஜ்வாலாமாலி' ஜ்வாலைகளின் வரிசைகளை உடைய 'ஸுதர்சனம்' ஸுதர்சனம்என்கிறபெயரை உடைய 'உத்தமம்' உயர்ந்த 'சக்ரம்' சக்ராயுதமானது 'ஆஜகாம' வந்தது 'ஆசுகாமிநா' வேகமாகப்போகிற 'பாலஸ்ய' குழந்தையான ப்ரஹ்லாதனுடைய 'தேஹம்' சரீரத்தை 'ரக்ஷதா' காப்பாற்றுகிற 'தேந' அந்தசக்ரத்தினால் 'தத்' அந்த 'சம்பரஸ்ய' சம்பராஸுரனுடைய 'மாயாஸஹஸ்ரம்' அநேகமாயைகள் 'ஏகைகச்யேன' தனித்தனியாக ஸுோதிதம் கொல்லப்பட்டது.

1 வ்யாகரணம் தாதுபாடம்.

பா] மாயா என்னும் பதம் பொய் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறதல்ல இந்திரஜால வித்யை செய்கிறவன் முதலியவரிடத்திலும் சில மந்த்ரங்களினாலும், ஔஷதம் முதலியவைகளினாலும் பொய்யான வஸ்துவைப் பற்றிய உண்மையான புத்தியையுண்டாக்குகிறபடியினால் மாயாவீ என்று

தா] "தேநமாயாஸஹஸ்ரம்" என்கிற இடத்தில் மாயையான வஸ்துவைச் சொல்லுகிறதென்பது ஸரிக்கவும் முடியாது, ஏனெனில் பொய்யாகிய வஸ்து ஆயுதத்தால் கொல்லத்தகாதது ஆகையினால், என்று தாத்பர்யம். 'முதலான' என்னும் பதத்தினால் "[1] மாயயா ஸததம் வேத்தி ப்ராணிநாம் ஶுபாஶுபம்" [2] 'தேவமாயேவ நிர்மிதா" என்றிவை முதலிய ப்ரயோகங்களும் சேர்த்துச் சொல்லப்பட்டன. மேலும் [3] நீதிநூலில் ஸாமம் முதலிய நான்கு உபாயங்களை நிரூபித்தபின்பு இன்னும் சில மாயா, உபேக்ஷா, இந்த்ர ஜாலம், முதலிய அமுக்யங்களான மூன்று உபாயங்கள் சொல்லப்பட்டன. அதில் மாயையாவது, ஒருவிதமாக இருக்கும் வஸ்துவை வேறுவிதமாகப் பண்ணும் ஶக்தி, இந்திரஜாலமாவது, ஒருவிதமாக இருக்கும் வஸ்துவை வேறுவிதமாகக்காட்டும் ஶக்தி, என்று பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது ஆகையினால் "மாயாவீ" என்னும் பதம் உண்மையானவஸ்துவைக் குறிக்கிறதே, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஆதலால்' என்று "மாயா" என்னும் பதத்தின் ப்ரயோகமானது உண்மையான வஸ்துவைக் குறிக்கிறதாகையினால், என்று அர்த்தம். பொய்யான வஸ்துவைக்காட்டுகிறவர்களிடத்தில் மாயையின் ஸம்பந்தமிருக்கிறபடியினால் "மாயாவீ" என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் "மாயா" என்னும் பதம் பொய்யான வஸ்துவினிடத்திலும் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறதே? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார் —'இந்திர ஜால வித்யை செய்கிறவன்' என்று ஆரம்பித்து. பொய்யாக இருத்தலைப் போலவே பொய்யானவஸ்துவை உண்டாக்குதலும் "மாயா" என்னும் பதத்திற்கு அர்த்தமல்ல, என்று காட்டுவதற்காக 'உண்

---

1 'ப்ராணிநாம்' ஜந்துக்களுடைய 'ஶுபாஶுபம்' பாபபுண்யங்களை 'மாயயா' தன்னுடைய ஞானத்தினால் 'ஸததம்' எப்பொழுதும், 'வேத்தி' அறிகிறான்.

2 ஸ்ரீமத்ராமாயணம் பாலகாண்டம் I—26. 'தேவமாயேவ' தேவதைகளின் மாயைபோல 'நிர்மிதா' ஸ்ருஷ்டிக்கப்பட்ட (சீதை) என்று சொல்லிக்கொள்ளப்படு

3 நீதிஸாரம்,

பா]ப்ரயோகம் செய்யப்படுகிறது. அப்படியே அவ்விடத்தில் மாயையாவது மந்த்ரங்களும், ஔஷதம் முதலியவைகளுமே. எல்லா ப்ரயோகங்களுக்கும் பொருந்தியிருக்கிற ஒன்றே பதத்துக்கு அர்த்தமாகுமாகையினால்? அவ்விடத்தில் பொய்யான வஸ்துக்களில் மாயை என்னும் பதத்தை ப்ரயோகிப்பதும் மாயையினால் உண்டாக்கப்படுகிற புத்திக்கு விஷயமாக இருக்கிறபடியினால் "ஜ்ஞாநஂ ஶ்ராமஸ்தி" (கட்டில்கள் கூவுகின்றன)

தா]மையானபுத்தியை' என்று சொல்லப்பட்டது. ப்ரமமாகிய ஞானமும் தன்ஸ்வரூபத்தைப்பற்றினவரையிலுண்மையே. இந்த ஞானத்தினால் இல்லாத இடத்தில் இருப்பதாகக் காட்டப்பட்ட வஸ்துதான் பொய் யென்று சொல்லப்படுகிறது. ஆனாலும் முடிவாய்ப் பொய்யான வஸ்துவின் ஸம்பந்தம் மாயை என்று சொல்வதற்குக்காரணம் ஆயிற்றே என்னும் ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—அப்படியே' என்று ஆரம்பித்து. மந்த்ரம், ஔஷதம் முதலியவைகளும் பொய்யான வஸ்துவும் சேர்ந்திருக்கும்பொழுது இதுவே மாயை என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது, என்று நிஶ்சயிப்பதற்கு என்னகாரணம் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்— 'எல்லா ப்ரயோகங்களுக்கும்' என்று ஆரம்பித்து. ஒரு ஶக்தியினாலேயே நிர்வாஹம் ஸம்பவிக்கும்பொழுது அநேக ஶக்தி கற்பிப்பது யுக்தமல்ல, என்று தாத்பர்யம். பொய்யான வஸ்துக்களிலும் இது மாயை என்கிற ப்ரயோகம் இருக்கிறது; அதில் விசித்ரமான கார்யத்தைச் செய்கையாகிற காரணமில்லாமையினால் பொய்யாக இருத்தலே அப்படிச் சொல்லப்படுதலுக்குக் காரணமாக ஒப்புக்கொள்ளவேண்டும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'அவ்விடத்தில்' என்று ஆரம்பித்து. இதின் கருத்தாவது எந்த இடத்தில் ஸம்பந்தத்தினாலோ, அல்லது அதின் குணமிருப்பதினாலோ, ப்ரயோகத்திற்குக் காரணம் சொல்லமுடியாதோ, அந்த இடத்தில் வேறு ஶக்தி உண்டு, என்று கற்பிப்பதினாலுண்டாகும் ப்ரயாஸம் பொறுக்கத்தக்கது. இவ்விடத்திலோ மாயையினாலுண்டாக்கப்படுகிற ஞானத்திற்கு விஷயமாக இருக்கிறபடியினால் பரம்பரையாக ஸம்பந்தம் ஸம்பவிக்கிறது. பொய்யாக இருக்கையே அப்படிச் சொல்லப்படுவதற்குக் காரணம் என்று ஒத்துக்கொள்ளும்பக்ஷத்தில் அஸ்த்ரம் முதலியவைகளில் பொய்யான வஸ்துவின் ஸம்பந்தம் கொஞ்சமேனுமில்லை; பொய்யான வஸ்துவுக்குக் குணமில்லா

பா] என்பதுபோல உபசாரமாக ஏற்பட்டது. இந்தக்குணமாயுமாயுமுண்மை யுமான பகவானுடைய மாயையே * "மாயையை ப்ரக்ருதி என்று அறி"

தா] மையினாலேயே அதின் குணத்தின் ஸம்பந்தமும் பௌருஷாரம்பிராக ரிக்கப்பட்டது. மேலும் பொய்யாகிய முத்துச்சிப்பியில் ப்ரதிக்கப் பட்ட வெள்ளி முதலியவைகளில் மாயை என்னும் பதத்தின் ப்ர யோகம் இல்லாமையினால் பொய்யான சில வஸ்துக்களில் தான் அப்படி ப்ரயோகிப்பது உண்டு என்று சொல்லவேண்டும்; அப்படிச் சிலவற்றிற்கு என்ன விசேஷம் என்று யோசித்துப்பார்க்குமிடத்து நாம் சொன்னவிசேஷத்திலேயே முடிவு பெறும், என்று. [1] "ஸம் ஹிதோ க்ஷமதி தேவ நக்ஷத்ர ஜகதீஸ்வர ஜனதே | ஸ்தோயம் விசால வாக்ஷீம் தவ பத்மவர்ணம் ஸ்ரீரூபஹராம் ||" [2] "யோகநித்ராஹ்வயா" என்றிவை முதலான இடங்களிலும் பகவான் விசித்ரமான கார்யங் களைச் செய்வதற்கு உபயோகமாக இருக்கிறபடியினாலாவது, ப்ரக்ருதி என்னும் வஸ்துவுக்கு அபிமானிதேவதையாக இருக்கிறபடியினாலா வது. ஸ்ரீலக்ஷ்மியைக்குறித்து "மாயா" (மாயை) என்னும் பதம் சொல் லப்பட்டிருக்கிறது. ஆகையினால் விசித்ரங்களான கார்யங்களைச் செய் கையே மாயை என்னும் பதத்தினால் சொல்லப்படுவதற்குக் காரண மாகிறது என்பது, யுக்தம்தான் என்பது. ஸ்ருதியிலும் விசித்ரமான ஸ்ரு ஷ்டிக்குக் காரணமாகிய உண்மையான ப்ரக்ருதியிலேயே மாயை என் னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார் — 'இந்த' என்று ஆரம்பித்து. இந்த ஸ்ருதியில இருக்கும் "மஹேஸ் வர:" என்னும் பதமானது ருத்ரனைச் சொல்லுகிறது, என்கிற ப்ரமத்தை நீக்குவதற்காக 'பகவானுடைய' என்று சொல்லப்பட்டது ஸ்வேதாஸ்வதர உபநிஷத்தும் புருஷஸூக்தத்தில சொல்லி இருக் கும் பதங்கள் வருவதினாலே புருஷஸூக்தத்தை ஞாபகப்படுத்துகிற

---

* ச்வேதா ச்வதா உபநிஷத்து, 4-10.

1 தேவ ஓதேவனே, 'த்வம்ஹி' நீயோவெனில், 'லோகக3தி:' லோகத்துக்கெல் லாம் கதியாவாய், 'த்வாம்' உன்னை, 'த்வ' என்னுடைய 'பூர்வபரிகரஹாம்' முதல் பதநியான 'விசாலாக்ஷீம்' அகன்ற கண்களையுடைய, 'மாயாரூபம்' மாறி வை விட்டு. 'கேசித்' ஒருவரும், 'நப்ராஜானந்தே' அறியவில்லை

2. யோகநித்ரை என்றும், மஹா மாயை என்றும் ஸ்ரீக்குப் பெயர் என்று சோதுதுக்கொள்ளவும்

பா]மாயையை உடையவனை மஹேச்வரனென்று அறி' என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளில் சொல்லப்படுகிறது. இதினுலுண்டாக்கப்படும் கார்யமாவது பகவானுடைய ஸ்வரூபத்தை மறைத்தலும், தன்னுடைய ஸ்வரூபத்தில் இது அனுபவிக்கத்தக்கது, என்கிறபுத்தியும். ஆகையினுல் பகவானுடைய மாயையினுல் மறைக்கப்பட்ட எல்லாலோகமும் பகவானை எல்லையில்லாத மேன்மையை உடைய ஆனந்த ஸ்வரூபனுகத் தெரிந்துகொள்ளுகிறதில்லை. கங½

தா]படியினுலும்; 'ஸத்வகுணத்தை உண்டாக்குகிறவன்' என்றுசொல்லி இருக்கிறபடியினுலும் பகவானைப்பற்றிச்சொல்லுகிறது என்றே தோன்றுகிறது "உமாஹஸ்ர. ஶிவ" என்கிறவை முதலிய பதங்களோ அந்தப்பகவானுக்கே காரணப் பெயராக இருந்துகொண்டு அந்தந்தப்பதங்களினுல் சொல்லப்படுகிற குணங்கள் பகவானிடத்தில் இருக்கிறபடியினுல் அவனையே சொல்லுகின்றன. ருத்ரனுக்கு மற்ற ஶ்ருதிகளில் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கையும், கர்மங்களுக்கு வஶப்பட்டிருத்தலும் சொல்லி இருக்கிறபடியினுலே, என்று தாத்பர்யம். இந்த ஶ்ருதிவாக்யத்திலும், மாயையை ப்ரக்ருதியாக அறி என்று சொல்லி இருக்குமிடத்தில் ப்ரக்ருதியைக்குறித்து மாயை என்பது விதிக்கப்படுகிறதில்லை பின்னையெதென்னில் மாயா என்னும் பதத்தின் அர்த்தத்தை அனுவாதம் செய்து அது ப்ரக்ருதி, என்பது விதிக்கப்படுகிறது, என்பது வாக்யத்தின் ஸ்வாரஸ்யத்தினுல் ஏற்பட்டது. இதற்கு அடுத்த கீழ்வாக்யத்தில் [2]'இந்த மாயையிலிருந்து இந்தமாயையை உடையவன் இந்த ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கிருன். இந்த ப்ரபஞ்சத்தில் மற்ருெருவன் மாயையினுல் கட்டப்பட்டிருக்கிருன்' என்று சொல்லப்பட்டிருக்கும்பொழுது அந்த மாயையாவது எது என்கிற கேள்வி உண்டாயிருக்கிற படியினுல், என்று தாத்பர்யம். இந்த ஸந்தர்பத்தில் மாயை என்னும் பதத்தை ப்ரயோகித்ததற்குக் காரணமாயும் ப்ரக்ருதத்தில் உபயோகமுமான விசித்ரமான கார்யத்தைக்காட்டுகிருர்—'இதனுலுண்டாக்கப்படும்' என்று ஆரம்பித்து. இவை எல்லாவற்றையும் மனதில் வைத்துக்கொண்டு பகவானுகிய யாமுன முனியென்னும் ஆளவந்தாரினுல் [3]"ஸ்வயாதாத்ம்ய ப்ரக்ருத்யா ஸ்வம் திரோதாய ஶூரணா மதீ: ॥" என்று அருளிச்செய்யப்பட்டது.

---

1 ச்வேதாச்வதரம், 4–10 3 கீதார்த்தஸங்க்ரஹம், 11 ச்லோகம்.

2 ச்வேதாச்வதரம், 4–9.

பா-அ.] இந்த ப்ரக்ருதியை விடுவித்துக்கொள்வதற்கு உபாயத்தைச் சொல்லுகிருர்— கச

மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே । கசு

ப-தை] யே எவர்கள், மாமேவ என்னையே, ப்ரபத்யந்தே சரணமாக அடைகிருர்களோ, தே அவர்கள், ஏதாம் இந்த, மாயாம் ப்ரக்ருதியை, தரந்தி தாண்டுகிருர்கள். குசு

பா] ஸத்ய ஸங்கல்பனும் மிகுந்த தயையை உடையவனும், வ்யத்யாஸங்களை யோசிக்காமல் எல்லா ஜனங்களையும் காப்பாற்றுகிறவனுமா

தா] கீழ்ச்சொன்ன ஆக்ஷேபத்திற்குப் பரிஹாரம் செய்கிருர்— 'ஆகையினுல்' என்று ஆரம்பித்து. கரு

1 "ஸ்வயாதாத்ம்யம் ப்ரக்ருத்யாஸ்ய திரோதி: ஶரணாகதி:" என்கிற ஸ்லோகத்தில் "ஶரணாகதி:" என்பதற்கு முன் அதை நிவ்ருத்தி செய்வதற்காக என்று வைத்துக் கொள்ளவேண்டியது, என்று காட்டிக்கொண்டு மேல் க்ரந்தத்துக்கு அவதாரிகை சொல்லுகிருர் 'இந்த ப்ரக்ருதியை' என்றாரம்பித்து எவனுடைய உத்தரவினுல் தாண்ட முடியாத விலங்கு ஏற்பட்டதோ அதன் நிவ்ருத்தியும் அவனாலேயே செய்யவேண்டியது என்று "மாமேவ" (என்னையே) என்பதின் அபிப்ராயம் என்று காட்டுகிருர்—"ஸத்ய ஸங்கல்பனும்' என்றாரம்பித்து பந்தத்தைப்பற்றிய ஸங்கல்பம் மாத்ரம் ஸத்யம் என்பதில்லை; பின்னை மோக்ஷத்தைப்பற்றின ஸங்கல்பமும் ஸத்யமே, ஆகையால் அவனே சரணமாக அடையத்தக்கவன் என்று தாத்பர்யம். ஶக்தியுள்ளவனாக இருந்தாலும் தயையில்லாதவனைச் சரணமாக அடைவதினுல் ஒரு ப்ரயோஜனமுமில்லை ஆகையினுல்—'மிகுந்த தயையையுடையவனும்' என்று சொல்லப்பட்டது. தயையையுடையவனுயிருந்தாலும் லோகத்து மனிதரைப்போல் அவனுக்கு, இவன் அங்கீகரிக்கத்தக்கவன், இவன் அங்கீகரிக்கத்தகாதவன், என்கிற வ்யத்யாஸமிருக்கும் பக்ஷத்தில் பொறுக்க முடியாத அபசாரங்களைச் செய்துகொண்டிருக்கிற இந்த ஜனத்திற்கு அப்படிப்பட்டவனைச் சரணமாக அடைவதால் என்ன ப்ரயோஜனம், என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமாக 'வ்யத்யாஸங்களை' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டது, காக்கை, ஸுக்ரீவன் என்

1 கீதார்த்தஸங்க்ரஹம் 11 ச்லோகம்

பா] இருக்கிற என்னையே எவர்கள் ஶரணமாக அடைகிருர்களோ, அவர்கள் என்னுடையதாயும், குணமயமாயும் இருக்கிற இந்த ப்ரக்ருதியை விட்டு என்னையே உபாஸனம் செய்கிருர்கள் என்று அர்த்தம். சச

பா-அ] பகவானைப்பற்றின உபாஸனத்தையுண்டாக்குகிற பகவானிடத்தில் ப்ரபத்தியை ஏன் எல்லோரும் செய்கிறதில்லை? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிருர்—

ந மாம் துஷ்க்ருதினோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: ।
மாயயாபஹ்ருதஜ்ஞானா ஆஸுரம் பாவமாஶ்ரிதா: ॥ கரு

ப-ரை.] மூடா: தெரியாதவர்கள், நராதமா: மனிதர்களுக்குள் தாழ்ந்தவர்கள், மாயயா மாயையினுல், அபஹ்ருதஜ்ஞானா: அபஹரிக்கப்பட்ட ஞானத்தையுடையவர்கள், ஆஸுரம் அஸுரர்களுடையதான பாவம் ஸ்வபாவத்தை ஆஶ்ரிதா: அடைந்தவர்கள் (ஆகிய நான்கு விதமான) துஷ்க்ருதின: பாவம் செய்தவர்கள், மாம் என்னை ப்ரபத்யந்தே ஶரணமாக அடைகிறதில்லை. கரு

தா] ஸும்குரங்கு, விபீஷணன், த்ரௌபதீ, முதலியவர்கள் விஷயத்தில் இது ஸ்பஷ்டமாக இருக்கிறது [1]"யதிவா ராவண: ஸ்வயம்" என்று அவனுடைய வார்த்தையுமிருக்கிறது. "ஏதாம்" (இந்த) என்பதின் அபிப்ராயத்திலிருக்கும் அர்த்தத்தைச் சொல்லுகிருர்—'என்னுடையதாயும் குணமயமாயும் இருக்கிற' என்று. அப்படி யிருந்தாலும் என்று சேர்த்துக்கொள்ளவேண்டியது. உபாஸனத்தைச் சொல்லும், ஸந்தர்ப்பமானபடியினுலும், மேலேசொல்லப்போகிற [2] ஆர்த்தன் முதலிய நான்குவித அதிகாரிகளுக்கும் பொதுவாயிருக்கவேண்டியதாகையினுலும் உபாஸனத்துக்கு அங்கமான ப்ரபத்தியே இங்கு சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர்—'இந்த ப்ரக்ருதியை விட்டு' என்ருரம்பித்து. கச

---

1 *ஸ்ரீராமாயணம் யுத்தகாண்டம். 18–35. 'ராவண:' ராவணன் 'ஸ்வயம் யதி வா' தானேவந்திருந்தபோதிலும் (அழைத்துக்கொண்டுவா) என்று மேலே சேர்த்துக்கொள்ளவும்.*

2 *ப்ரபத்தி பண்ணினவர்கள் ப்ரக்ருதியைத் தாண்டி மோக்ஷத்தை அடைகிருர்கள் என்று சொன்னுல் ஆர்த்தன் முதலியவர்களுக்கு மோக்ஷம் பலமல்ல ஐச்வர்யமே பலம் ஆகையால் எல்லோருக்கும்பொதுவாகாது என்றறியவும்*

பா] பாபகர்மங்களைச் செய்தவர்கள் என்னைச் சரணமாக அடைகிறதில்லை. அவர்கள் தங்கள் தங்கள் பாவங்களின் தாரதம்யத்தினால் மூடர்கள் என்றும், நராதமர்கள் என்றும், "மாயயாபஹ்ருதஜ்ஞாநா:" (மாயையினால் அபஹரிக்கப்பட்ட ஞானத்தை உடையவர்கள்) என்றும், "ஆஸுரம் பாவமாஸ்ரிதா:" (ஆஸுரஸ்வபாவத்தை உடையவர்கள்) என்றும் நான்கு விதமாகிறார்கள். மூடர்களாவது விபரீதமான ஞானத்தை உடையவர்கள். அதாவது கீழ்ச்சொன்னபடி பகவானுக்கு

தா] 'ப்ரபத்யந்தே' (அவர்கள் சரணமாக அடைகிறார்களோ) என்று மேல் தனித்துச்சொல்லவேண்டுமென்ற ஆக்ஷேபத்தை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு கேட்கிறார்—'பகவானிடத்தில்' என்றாரம்பித்து. புண்ணியங்களைச் செய்யாதவர்கள், பாவங்களைச் செய்தவர்கள், என்கிற வ்யத்யாஸம் சேதநர்களுக்கேயிருப்பதில்லை. அவர்களுக்குச் சாஸ்த்ரத்தைச் சொல்லியிருப்பதோ விடவேண்டிய ஆசாரங்களில் முக்யமானதையும் அங்கீகரிக்கவேண்டிய ஆசாரங்களில் முக்யமானதையும் தெரியப்படுத்துவதற்காக, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'பாபகர்மங்களைச் செய்தவர்கள்' என்றாரம்பித்து. மேல் ஶ்லோகத்தில் இருக்கும் "சதுர்விதா:" என்னும் பதம் இவ்விடத்திலும் நான்கு விதமான வகுப்பையுடைய மனிதர்களை எடுத்திருப்பதினால் அவ்விடத்திலிருந்து இழுத்துச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. "மூடா:" என்பது முதலிய விசேஷணங்கள் ஒரே இடத்திலேயே ஒன்று சேர்ந்தவைகளாக எண்ண இருக்கக்கூடாது என்கிற ஆக்ஷேபத்தை விலக்குவதற்காக, இந்த நான்கு பதங்களுக்கும் வ்யாக்யானம் செய்கிறார்—மூடர்களாக இருக்கை, மாயையினால் அபஹரிக்கப்பட்ட ஞானத்தையுடையவர்களாக இருக்கை, இவை இரண்டுக்கும் நடுவில் ஒருவிதத்தை "நராதமா:" (மனிதர்களுக்குள் அதமர்கள்) என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'பகவானுடைய' என்றாரம்பித்து. உபநிஷத்துக்களில் சொன்ன அர்த்தங்களில் நிஸ்சயம் இல்லாமற்போனாலும் எல்லாலோகங்களிலும் ப்ரஸித்தங்களான இதிஹாஸபுராணம் முதலியவைகளினால் பொதுவான ஞானம் உண்டாயிருக்கிறது. மேருபர்வதம் முதலியவைகளிடத்திற்போல ஸௌலப்யம் என்கிற ஞானம் இல்லாமையால் அவனை ஆஸ்ரயிப்பதற்கு யோக்யதையில்லை. ஞானம் உண்டானாலல்லவோ அதை அபஹரிக்கலாம்;

பா]ஶேஷமாக இருக்கையையே ஸ்வபாவமாக உடைய தன்னையும் அநுபவிக்கக்கூடிய வஸ்துக்களின் கூட்டத்தையும் தனக்கு ஶேஷமாக எண்ணிக்கொண்டு இருக்கிறவர்கள். நராதமர்கள் (மனிதர்களுக்குள் அதமர்கள்) ஆவது—பகவானுடைய ஸ்வரூபம் பொதுவாக அறியப்பட்டிருந்தபோதிலும் அவனை ஆஶ்ரயிப்பதற்கு யோக்யதை இல்லாதவர்கள். "மாயயாபஹ்ருதஜ்ஞாநா:" (மாயையினால் அபஹரிக்கப்பட்ட ஞானத்தை உடையவர்கள்.) ஆவது—என்னைப்பற்றியும் என்னுடைய ஐஶ்வர்யத்தைப்பற்றியும் எவர்களுக்கு உண்டான ஞானம் இது அஸம்பாவிதம் என்று தெரிவிக்கக்கூடிய கபடயுக்திகளினால் அபஹரிக்கப்பட்டதோ அவர்கள். "ஆஸுரம்பாவமாஶ்ரிதா:" (அஸுரர்களுடைய ஸ்வபாவத்தை அடைந்தவர்கள்) ஆவது—என்னைப்பற்றியும் என்னுடைய ஐஶ்வர்யத்தைப்பற்றியும் எவர்களுக்கு மிகவும் உறுதி

தா] *அதுவும் விசித்ரங்களான மயக்கங்களை உண்டாக்குகிறபடியினால் மாயை என்னும் பதத்தினால் சொல்லப்படுகிற குத்ருஷ்டிகளுடையவும், பாஹ்யர்களுடையவும் கபடயுக்திகளாலேயே, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'என்னைப்பற்றியும்' என்றாரம்பித்து. "ஆஸுரம்பாவமாஶ்ரிதா:" (அஸுரர்களுடைய ஸ்வபாவத்தை அடைந்தவர்கள்) என்கிற விது அபஹரிக்கப்படாத ஞானத்தை உடையவர்களைப் பற்றியது, என்று சொல்லுகிறார்—'மிகவும் உறுதியாக உண்டான' என்று. நன்றாய்க் கீழே நிரூபிக்கப்பட்டமாதிரியாக ப்ரமாணங்களினாலும் யுக்திகளினாலும் மறுக்கமுடியாதபடி நிஶ்சயிக்கப்பட்ட, என்று அர்த்தம். "ஆஸுரம்பாவம்" என்பதற்கு அஸுரர்களுடைய ஸ்வபாவம் என்று அர்த்தம்; அஸுரர்கள் பகவானை மிகுந்த ஶக்தியுள்ளவன் என்று தெரிந்துகொண்டே த்வேஷம் செய்கிறார்களல்லவா. பதினாறாவது அத்யாயத்தில் ஆஸுர ப்ரக்ருதிகளின் ஸ்வபாவம் சொல்லப்படுகிறது. 1 "விஷ்ணுபக்திபரோ தேவோ விபரீதஸ்ததாஸுர:" என்று சொல்லியிருக்கும் ந்யாயத்தினாலும அஸுரர்களின் ஸ்வபாவமாவது பகவானிடத்தில் த்வேஷம்தான் என்கிற, அபிப்ராயத்தினால்*

---

1 *மஹாபாரதம் விஷ்ணுதர்மம் 109-74, 'விஷ்ணுபக்திபர:' விஷ்ணுவினிடத்தில் பக்தியுள்ளவன், 'தேவ:' தேவாம்சமுள்ளவன், 'ததா' அப்படியே 'விபரீத:' அதற்குமாறான ஸ்வபாவமுள்ளவன், 'அஸுர:' அஸுரஸ்வபாவமுள்ளவன்.*

பாபியாக உண்டான ஞானம் அவர்களுக்கே என்னிடத்தில் த்வேஷத்திற்குக்காரணமாகிறதோ. அவர்கள் இதில் முதலில் சொன்னவர்களை விட மேன்மேலும் சொல்லப்பட்டவர்கள் அதிக பாபிகள். ௧௫

சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோ(அ)ர்ஜுந ।
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப ॥ ௧௬

ப-ரை] ஹே பரதர்ஷப பரதவம்சத்தில் ச்ரேஷ்டனே, அர்ஜுந ஓ அர்ஜுனனே, ஸுக்ருதிந: புண்யகர்மங்களைச் செய்தவர்களாகிய, ஆர்த்த: கெட்டுப்போன ஐச்வர்யம் மறுபடியும் கிடைக்கவேண்டும் என்கிற எண்ணமுள்ளவனும், அர்த்தார்த்தீ புதிதான ஐச்வர்யம் கிடைக்கவேண்டும் என்கிற எண்ணமுள்ளவனும், ஜிஜ்ஞாஸு: கைவல்யத்தை விரும்புகிறவனும், ஜ்ஞாநீ ச பகவானுடைய திருவடியை விரும்புகிறவனுமாகிய; சதுர்விதா: நான்கு வகையான, ஜநா: ஜனங்கள், மாம் என்னை, பஜந்தே உபாஸிக்கிறார்கள். ௧௬

பா] புண்யகர்மங்களைச் செய்தவர்கள் என்னை சரணமாக அடை-

தா] 'த்வேஷத்திற்குக் காரணம்' என்று சொல்லப்பட்டது. இவர்களுக்குள் மேன்மேலும் சொல்லப்பட்டவர்கள் ஞானத்தினால் மேன்மையுடையவர்கள் ஆதலால், சிறந்தவர்கள், என்கிற ப்ரமம் நேரும் ஆதலால் அதை நிராகரிப்பதற்காகச் சொல்லுகிறார்—'இதில் முதலில் சொன்னவர்களை விட' என்று ஆரம்பித்து. [1] ''விதுஷோ(அ)திக்ரமே தண்டபூயஸ்த்வம்'' என்கிற ந்யாயத்தினால் அதிகமான ஞானமே இவ்விடத்தில் அதிக பாபி ஆவதற்குக் காரணம். ஞானம் அதிகமாக இருந்தாலும் பகவானிடத்தில் பராங்முகமாக இருப்பது அதிகமான பழைய பாபத்தினாலேயே, என்று தாத்பர்யம். ௧௫

''சதுர்விதா பஜந்தே'' என்கிற இடத்தில் பக்தியோகத்தில் முடிவுபெறுகிற ப்ரபத்தி சொல்லப்படுகிறது. முன்ஸ்லோகத்தில் ''ந ப்ரபத்யந்தே'' (சரணமாக அடைகிறதில்லை) என்று அதையே நிஷேதித்து இருப்பதினாலே அதை விதிப்பதே உசிதமாகையினால்,

1 கௌதமதர்மம் 12—6 'விதுஷ:' தெரிந்தவனுடைய, 'அதிக்ரமே' அக்ரமத்தில், 'தண்டபூயஸ்த்வம்' அதிக சிக்ஷை

Accn No. 14248

பா] ந்து என்னை உபாஸிக்கிறார்கள். அவர்களும் தங்கள் தங்கள் புண்ய காமங்களின் தாரதம்யத்தினால் நான்கு விதமானவர்கள். புண்யங்களின் மிகுதியினால் ஞானம் விசேஷமாக உண்டாகிறபடியினால் மேன்மேலும் சொல்லப்பட்டவர்கள் அதிகமாகச்சிறந்தவர்களாகிறார்கள். “ஆர்த:” ஆவது முன்னிருந்த நிலை தவறினவன். அதாவது நழுவிப்போன ஐஶ்வர்யத்தை உடையவனாய் மறுபடியும் அதை அடையவேண்டும் என்கிற ஆசையை உடையவன். “அர்தார்தீ” ஆவது இதுவரையிலும் ஐஶ்வர்யத்தை அடையாதவனாக இருந்து ஐஶ்வர்யத்தை அடையவேண்டும் என்கிற ஆசையை உடையவன். இவ்விருவருக்கும் முன் இருந்த நிலையில் பேதம்மாத்திரமுள்ளது, ஐஶ்வர்யத்தைப்பற்றியதா

தா] என்கிற அபிப்ராயத்தினால்—‘என்னை ஶரணமாக அடைந்து’ என்று சொல்லப்பட்டது. புண்யங்களைச்செய்தவர்கள் என்பது,எல்லோருக்கும் ஸமமாக இருக்கும்பொழுது அதிகாரிகளுக்குள் பேதம் எப்படி ஏற்பட்டது? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமாக ‘புண்ய கர்மங்களின் தாரதம்யத்தினால்’ என்று சொல்லப்பட்டது. தாரதம்யத்தை விவரிக்கிறார்—‘புண்யங்களின் மிகுதியினால்’ என்று. விஶ்வாஸம் முதலியவை ஸாதாரணமாக இருந்தபோதிலும், ஞானத்திற்கு விசேஷம் ப்ரயோஜனங்களிலுண்டான ஆசைகளின் வ்யத்யாஸத்தினால் ஏற்பட்டது. இவ்விடத்தில் “ஆர்த:” என்னும் பதமானது ஆர்த்திக்குக் காரணமான முன் தசையிலிருந்து நழுவினதைச் சொல்லுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘முன்னிருந்த நிலை தவறினவன்’ என்று. ஆர்த்தன் பகவானை உபாஸநம் செய்வது தன் ஆர்த்தி நிவ்ருத்திப்பதற்காகவே; என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘அதாவது’ என்று ஆரம்பித்து. ஶ்லோகத்தில் சொல்லி இருக்கிற வரிசைக்ரமத்தை விட வஸ்துக்களின் ஸ்வபாவத்தினால் ஏற்படும் வரிசைக்ரமம் ப்ரபலமாகையினால் ஜிஜ்ஞாஸுவுக்கு முந்தியே அர்த்தார்த்தியை எடுத்தது. ஆர்த்தனை விட அவனுக்கு வ்யத்யாஸத்தைக் காட்டுகிறார்—‘இதுவரையிலும்’ என்று ஆரம்பித்து. “அர்த:” என்னும் பதமானது இவ்விடத்தில் ப்ரார்த்திக்கத்தகுந்த போகங்களைச் சொல்லுகிறது. பதத்தை முன்னிட்டு அல்லவோ அதிகாரிகளின் பேதம் இங்கே சொல்லப்படுகிறது. ஆர்த்தனுக்கும் அர்த்தார்த்திக்கும் ஐஶ்வர்யம் ஒன்றே பலம், அவர்களுக்குள் உட்பிரிவு வெவ்வேறாகையினால பேதம் ஏற்படுத்தப்பட்டது என்னில் இப்படியே இன்னும்

THE ACADEMY OF SANSKRIT RESEARCH MELKOTE-571431. (KARNATAKA STATE)

பா]கையினால் இவ்விருவர்க்கும் அதிகாரம் ஒன்றே "ஜிஜ்ஞாஸு:" ஆவது ப்ரக்ருதியை விட்டு நீங்கின ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை

தா]சில பேதங்களும் சொல்லமுடியுமே? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'இவ்விருவருக்கும்' என்று ஆரம்பித்து. ப்ரஸித்தமான உட்பிரிவைக்கொண்டு அவர்களுக்கிருக்கும் பேதத்தைக் காட்டியிருக்கிறது; என்று தாத்பர்யம். "ஜிஜ்ஞாஸு:" என்னும் பதத்தினால் ஞானத்தை விரும்புகிறவன் அதாவது பகவானை அறியவேண்டும் என்கிற ஆசையுள்ளவன் சொல்லப்படுகிறான் ஆவது என்றாவது அன்றிக்கே ¹"யூயம் ஜிஜ்ஞாஸவோ பக்தா:" என்று வ்யாஸர் முதலியவர்கள் சொல்லியிருப்பதைப்போல பக்தியும் விஸ்வாஸமும் இல்லாமல் கேவலம் அபேக்ஷையினால்மாத்ரம் பகவானைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற எண்ணமுள்ளவனாவது சொல்லப்படுகிறான் என்றாவது, ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது? மேலும் ² "ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத் தநமிச்சேத் ஹுதாசநாத் | ஈஸ்வராஜ்ஜ்ஞாநமந்விச்சேத் மோக்ஷமிச்சேஜ்ஜநார்த்தநாத்" || என்று சொல்லப்பட்ட நான்குவித அதிகாரிகளும் சொல்லப்படுவதாகத் தோன்றுகிறபடியினால் இங்கு "ஜிஜ்ஞாஸு:" என்று சொல்லப்பட்டவனும் அந்த இடத்தில் சொல்லப்பட்ட ஞானத்தை விரும்புகிறவனாக இருப்பதே உசிதம்; என்கிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ப்ரக்ருதியை விட்டு' என்றாரம்பித்து. பகவானையறியவேண்டுமென்கிற ஆசையுள்ளவனுக்குக் கடைசியாகப் பகவானே அடையவேண்டிய ப்ரயோஜனமாக ஒப்புக்கொள்ளப்பட்டான் ஆகையால் ஞானிக்கும் ஜிஜ்ஞாஸுவுக்கும் ப்ரயோஜனத்தில் பேதமில்லை; இவ்விடத்திலோ ப்ரயோஜனத்தின் பேதத்தினால் அதிகாரிகளின்பேதம் சொல்லப்படுகிறது; அதில் "ஜிஜ்ஞாஸு:"

¹ 'யூயம்' நீங்கள், 'ஜிஜ்ஞாஸவ:' தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற ஆசையையுடைய 'பக்தா:' பக்தர்கள்.

² மாத்ஸ்யபுராணம் 77-49, 'பாஸ்கராத்' ஸூர்யனிடத்திலிருந்து, 'ஆரோக்யம்' ரோகநிவ்ருத்தியை, 'இச்சேத்' விரும்பவேண்டும், 'ஹுதாசநாத்' அக்னியினிடத்திலிருந்து, 'தநம்' செல்வத்தை, 'இச்சேத்' விரும்பவேண்டும், 'ஈஸ்வராத்' ருத்ரனிடத்திலிருந்து, 'ஜ்ஞானம்' ஞானத்தை, 'அன்விச்சேத்' விரும்பவேண்டும் 'ஜனார்த்தநாத்' பகவானிடத்திலிருந்து 'மோக்ஷம்' மோக்ஷத்தை, 'இச்சேத்' விரும்பவேண்டும்

பா] அடையவேண்டும் என்கிற ஆசையை உடையவன். ஞானமே இந்த ஜீவாத்மாவுக்கு ஸ்வரூபமாகையினுல் "ஜிஜ்ஞாஸு:" (ஞானத்தை விரும்புகிறவன்) என்று சொல்லப்பட்டது. ஞானியாவது "இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்" என்று ஆரம்பித்துச்சொல்லப்பட்ட பகவானுக்கு சேஷமாக இருக்கை ஒன்றையே ஸ்வபாவமாக உடைய ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டவன். அதாவது ப்ரக்ருதியை விட்டுப் பிரிந்த கேவலம் ஜீவாத்மாவினிடத்தில் முடிவு பெறுமல் பகவானையே அடையவேண்டும் என்கிற ஆசையை உடையவனுய் பகவானையே முக்யமான ப்ரயோஜனமாக நினைத்துக்கொண்டிருப்பவன். சகூ

தா] அர்த்தார்த்தீ' என்று. வெளியிலிருக்கும் ப்ரயோஜனங்களைவிரும்புகிறவர்கள் சொல்லப்பட்டார்கள். பகவானை விரும்புகிறவன் ஞாநீ என்று சொல்லப்பட்டான். ஜீவாத்மாவின் ஸ்வரூபமும் அதிகமான ஆனந்தரூபமானது என்றும், ப்ரயோஜனம் என்றும் வேறு இடங்களில் ப்ரஸித்தமாயிருக்கிறது; இந்தக் கீதையிலும் மேலே இந்த அதிகாரிகளுக்குப்பேதம் நிரூபிக்கப்படப்போகிறது. ஆகையினுல் மிகுதியாயிருக்கிறபடியால் ஆத்மாவை விரும்புகிறவனைச் சொல்லுகிறது-இந்த "ஜிஜ்ஞாஸு" என்னும் பதம், என்று தாத்பர்யம். ஞானத்தைவிரும்புகிறவன் என்கிற அர்த்ததைச் சொல்லுகிற "ஜிஜ்ஞாஸு" என்னும்பதத்திற்கு ஆத்மாவை விருப்புகிறவன் என்று அர்த்தம் எப்படி சொல்லப்படுகிறது? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிருர்—'ஞானமே' எனறுரம்பித்து. பரிசுத்தமான ஆத்மாவை அனுபவிப்பதாகிற ஞானம் இவ்விடததில் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம். "ஜ்ஞாநீ" வேறு அதிகாரி என்பதற்கு அனுகுணங்களாயிருக்கிற மேலே சொல்லப்போகிற விசேஷங்களை நினைத்துக்கொண்டு விசேஷமான ஞானத்தையுடையவன் என்பதைக்காட்டுகிருர்—"இதஸ்த்வந்யாம்" என்றுரம்பித்து. 'கேவலம் ஜீவாத்மாவினிடத்தில் முடிவுபெறுமல்' என்பதற்கு பட்டணத்திற்குப்போகவேண்டும் என்கிற எண்ணமுள்ள வழிப்போக்கன் நிழலுள்ள மரத்தடியில் தூங்குவதைப்போல, ஜீவாத்மாவை அனுபவிப்பதினுலுண்டாகும் காலதாமதம்; என்று தாத்பர்யம். இங்கே ஜிஜ்ஞாஸுவைப்பற்றிச் சொல்லவேண்டியதை யெல்லாம் எட்டாவது அத்யாயத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்போகிறோம். விசேஷமான ஞானத்திற்கு ப்ரயோஜனமாக மேலான பலத்தை அங்கீகரித்துக் கொண்டிருக்கையைச் சொல்லுகிருர்—'பகவானையே அடையவேண்டும்

தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர்விசிஷ்யதே |
ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய: || ௧௭

பதவுரை.] தேஷாம் அவர்களுக்குள், நித்யயுக்த: என்னுடன், எப்பொழுதும் சேர்ந்திருக்கிறவனும், ஏகபக்தி: ஒரே வஸ்துவினிடத்தில் பக்தியுள்ளவனுமான, ஜ்ஞாநீ ஞாநியானவன், விசிஷ்யதே மேலானவன், ஹி எந்தக்காரணத்தினால், ஜ்ஞாநிந: ஞாநிக்கு, அஹம் நான், அத்யர்த்தம் மிகவும், ப்ரிய: ப்ரியனோ (அப்படியே) ஸ: ச அவனும், மம எனக்கு, ப்ரிய: ப்ரியன். ௧௭

தா] என்கிற ஆசையையுடையவனாய்' என்று. அதற்குக் காரணத்தைச் சொல்லுகிறார்---'பகவானையே' என்றாரம்பித்து. 'பகவானையே' என்றதற்கு ஆத்மாவை அநுபவிப்பதினாலுண்டாகும் காலதாமதத்தைப் பொறுக்காதவன் என்பது கருத்து. ௧௬

இப்படி பக்தர்களின் பிரிவு சொல்லப்பட்டது, அவர்களுக்குள் ஞானியின் மேன்மையை இந்த ச்லோகத்தினால் காட்டுகிறார். இந்த அர்த்தத்தை பேலேயும் [1] "சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி மே ச்ருதா: | தேஷாமேகாந்திந: ச்ரேஷ்டா தே சைவாநந்யதேவதா: || அஹமேவ கதிஸ்தேஷாம் நிராசீ: கர்மகாரிணாம் ; யே ச சிஷ்டாஸ்த்ரயோ பக்தா: பலகாமா ஹி தே மதா: || ஸர்வே ச்யவநதர்மாணஸ் ப்ரதிபுத்தஸ்து மோக்ஷபாக்" என்று சொல்லுகிறார். இது ஸ்தோத்ரம் செய்வதற்காக மாத்ரமோ? என்று ஆக்ஷேபிக்கிறார்---

---

1 மஹாபாரதம் சாந்திபர்வம் மோக்ஷதர்மம் 350, 33-34-35, 'சதுர்விதா:' நான்குவிதமானவர்களும், 'மம' என்னுடைய, 'ஜநா:' ஜனங்கள், 'தே' அவர்கள், 'பக்தா ஏவ' பக்தர்களாகவே, 'ச்ருதா:' சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டார்கள், 'தேஷாம்' அவர்களுக்குள், 'ஏகாந்திந:' ஞானிகள், 'ச்ரேஷ்டா:' சிறந்தவர்கள், 'தே சைவ' அவர்களே, 'அநந்யதேவதா:' வேறுதேவதையை உடையவர்களல்ல, 'நிராசீ: கர்மகாரிணாம்' பலன்களில் ஆசையில்லாமல் கர்மங்களைச் செய்கிற, 'தேஷாம்' அவர்களுக்கு, 'அஹமேவ' நானே, 'கதி:' அடையவேண்டியவன், 'சிஷ்டா:' மிகுதியான, 'பக்தா:' பக்தர்கள், 'யே' எவர்களோ, 'தே து' அவர்களோவெனில், 'பலகாமா:' பலன்களிலாசையுடையவர்களாக, 'மதா:' எண்ணப்பட்டார்கள், 'ஸர்வே' எல்லாரும், 'ச்யவநதர்மாண:' நழுவுதலை ஸ்வபாவமாக உடையவர்கள், 'ப்ரதிபுத்தஸ்து' ஞானியோவெனில், 'மோக்ஷபாக்' மோக்ஷத்தையடைகிறவன்.

பா] அவர்களுக்குள் ஞானீ மேலானவன் ஏனெனில் நித்யமாய் சேர்ந்திருப்பவனானபடியினாலும், ஒரே இடத்தில் பக்தியையுடையவனானபடியினாலும், என்னொருவனையே ப்ரயோஜனமாகவுடைய ஞானிக்கு என்னுடன் ஸம்பந்தம் நித்யமல்லவா, மற்ற இருவர்களுக்குமோவெனில் தங்கள் இஷ்டபலம் கிடைக்கிறவரையிலும் என்னுடன் ஸம்பந்தம். அப்படியே ஞானிக்கு என்னொருவனிடத்திலேயே பக்தி, மற்ற இருவருக்குமோவெனில் தங்கள் இஷ்டபலத்திலும் அதற்கு ஸாதநமாகையினால் என்னிடத்திலும் பக்தி. ஆகையினால் அவனே மேலானவன் மேலும் ஞானிக்கு நான் மிகவும் ப்ரியனல்லவா. இங்கே

தா] 'ஏனெனில்' என்று. மேலே சொல்லி இருக்கும் இரண்டு விசேஷணங்களும் ஞானி சிறந்தவன் என்பதற்குக் காரணத்தைச் சொல்லுகின்றன என்று சொல்லுகிறார்—'நித்யமாய்' என்றாரம்பித்து. 'என்னொருவனையே' என்றிவை முதலான வாக்யத்திற்கு அடைவிக்கிறவனாகிய பகவானே அடையத்தக்கவனுமானபடியினால் பலதசையிலும் பகவானுடன் ஸம்பந்தம் தொடர்ந்திருக்கிறது என்றர்த்தம். ஆர்த்தனும், அர்த்தார்த்தியும் ஒரே அதிகாரிகள் என்று கீழே நிஶ்சயம் செய்திருக்கிறபடியினால் 'மற்ற இருவர்களுக்கும்' என்று சொல்லியிருக்கிறது. இதனால் கைவல்யத்தை விரும்புகிறவனுக்கும் பலதசையில் பரமாத்ம போக்யம் என்கிற அநுஸந்தானம் இல்லை, என்று ஏற்பட்டது. எவனுக்கு ஒரே வஸ்துவினிடத்தில் பக்தி இருக்கிறதோ, அவன் "ஏகபக்தி:" என்று சொல்லப்படுகிறான். இது வ்யதிகரணபஹுவ்ரீஹி என்று சொல்லப்படுகிறது. "ஏக" என்னும்பதத்தினால் நினைக்கப்பட்ட, உபாஸிக்கப்பட்ட வஸ்துவும் பலமும் ஒன்று, என்பதைக் காட்டுவதற்காக—'என்னொருவனிடத்திலேயே' என்று சொல்லப்பட்டது. "ப்ரியோஹி" என்றிவைமுதலிய மேற்பாதியினால் அதற்கே மற்றொருகாரணமும் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'மேலும்' என்று. மிகவும் உயர்ந்தமேன்மையைச் சொல்லுவதற்காகச் சொல்லுகிறார்—'இங்கே' என்று ஆரம்பித்து. "அத்யர்த்தம்" என்றால் சொல்லத்தகுந்த வஸ்துக்களை அதிக்ரமித்த, என்று அர்த்தம், இங்கே சொல்லத்தகுந்த வஸ்துக்களை அதிக்ரமிக்கையாவது, மற்ற சொல்லத்தகுந்த வஸ்துக்களைவிட விலக்ஷணமாக இருக்கை, அதாவது இவ்விடத்தில் சொல்லமுடியாமையே. என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஞானிக்கு நான்' என்று ஆரம்பித்து. இவ்வி

பா] “ஸம்ருதம்” என்கிற இடத்தில் “ஸம்பூத” என்னும் பதம் சொல்லத்தக்கது—என்னுமர்த்தத்தைச் சொல்லுகிறது. ஞானிக்கு நான் எப்படிப்ரியனோ அது, எல்லாம் தெரிந்தவனாயும், எல்லா ஶக்தியுமுள்ளவனாயுமிருக்கிற என்னாலும் சொல்லமுடியாது (அவன் என்னிடத்தில் வைத்திருக்கும்) ப்ரீதிக்கு அளவில்லாமையால், அப்படியே ஞானிகளுக்குத் தலைவரான ப்ரஹ்லாதனுடைய ப்ரீதி *“ஸ த்வாஸக்தமதி: க்ருஷ்ணே தம்ஶ்யமாநோ மஹோரகை: । ந விவேதாத்மநோ காத்ரம் தத்ஸ்ம்ருத்யாஹ்லாதஸம்ஸ்தித: ॥” என்று சொல்லப்பட்டிருக்கிறது அப்படியே அவனும் எனக்குப்ரியன். கஎ

சா] டத்தில் சொல்லமுடியாதென்பது பரிமாணமுடையவஸ்துவையாயினால், அவனாலும் சொல்லமுடியாது என்பது ஏற்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால்—‘எல்லாம் தெரிந்தவன்’ என்பது முதலியவை சொல்லப்பட்டன. எல்லாவற்றையும் தெரிந்துகொண்டவனால் தெரிந்துகொள்ளப்படாதது எதுவோ; அது இல்லாத வஸ்துவாகவே இருக்கும். எந்தவிஷயத்தில் இவன் சக்தியற்றவனோ அந்தவிஷயத்தில் இவன் ஈஶ்வரனாகமாட்டானே என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—‘ப்ரீதிக்கு’ என்று ஆரம்பித்து. ஆகாயப்பூவைப்போல வஸ்துவில்லாமையினால் தெரிந்துகொள்ளாமை தோஷமாகாது. அப்படி இல்லாவிடில் பரிமிதவனாக வேண்டிவரும். இல்லாதவென்பது இல்லாமையாலே அதைச் சொல்லக்கூடிய பதமுமில்லை. ஆகையினாலே அப்படிப்ரயோகியாததும் சக்தியில்லாமைக்குக் காரணமாகாது என்று தாத்பர்யம். “ஹி” என்பதினால் காட்டப்பட்ட ப்ரஸித்திக்கு உதாஹரணம் காட்டுகிறார்—‘அப்படியே’ என்றாரம்பித்து. ‘ஞானிகளுக்குத் தலைவரான’ என்பதினால் பிறப்பிலேயே ஏற்பட்ட எல்லையில்லாத ஞானத்தை யுடைத்தாயிருக்கையும், அதைத்தடுக்கிற அநேக வார்த்தைகளாலும் அநேகங்களான பயமுறுத்தல்களினாலும் அசைக்க

---

* விஷ்ணுபுராணம் 1-17-39, ‘க்ருஷ்ணே’ க்ருஷ்ணனிடத்தில், ‘ஆஸக்தமதி:’ நன்றாகப்பற்றுதலையடைந்த புத்தியையுடைய, ‘ஸ:’ அந்த ப்ரஹ்லாதனும் ‘மஹோரகை:’ பெரியபாம்புகளால், ‘தம்ஶ்யமான:’ கடிக்கப்பட்டவனாயிருந்தாலும், ‘ஸதா’ எப்பொழுதும், ‘தத்ஸ்ம்ருத்யாஹ்லாதஸம்ஸ்தித:’ பகவானை நினைப்பதினாலுண்டான ஆனந்தத்தில் இருந்துகொண்டு, ‘ஆத்மந:’ தன்னுடைய, ‘காத்ரம்’ தேஹத்தை, ‘நவிவேத’ அறியவில்லை.

உதாராஸ்ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் ।
ஆஸ்தித ஸ்ஸஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம் ॥ கஅ

தா] முடியாமையும், சொல்லப்படுகிறது. "க்ருஷ்ண" என்பதினால் [1]"க்ரு ஷிர்பூவாசகஶ்ஶப்தோ ணஶ்ச நிர்வ்ருதிவாசக:" என்று சொல்லியிருக்கி றபடி இவ்விடத்தில் ஸுகத்திற்குக் காரணமாக இருக்கை முதலி யது சொல்லப்படுகிறது. ப்ரவாஹம்போல் அநாதியாக வந்துகொண் டிருக்கும் க்ருஷ்ணவதாரங்களிற்செய்த காளியமர்தனத்தை ஞாபகப் படுத்துகிறதாகவுமாம். பக்தர்களின் துக்கத்தை யிழுத்துவிடுகிறபடியி னால் க்ருஷ்ணன் என்று சொல்லப்படுகிறானாகவுமாம். அதிகமான துக் கத்திற்குக்காரணமிருந்தபோதிலும் துக்கத்தை அநுபவியாமலிருந் தது, எல்லையில்லாத வேறொரு விஷயத்திலுண்டான ப்ரீதியினால் மநத தை அடைந்திருந்தபடியினால், என்று தாத்பர்யம். அப்பொழுது தன் ஆத்மாவைப் பற்றிய ஞானமேயில்லை, வீடுமுதலியவைகளைப்போன்ற ஶரீரத்தைப் பற்றியஞானமில்லை, யென்பதற்குக்கேழ்க்கவும்வேண்டு மோ என்று "ஸ்ரீநோமாத்ரம்" என்பதின்கருத்து. "ஸசமேப்ரிய:" 'அவனுமெனக்குப்ரியன் என்னுமிடத்திலும்"அத்யர்த்"என்னும் பதம் "ச"என்பதின் ஶக்தியினாலும், வஸ்துவின் ஸ்வபாவத்தினாலும்,சேர்த் துக்கொள்ளப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார் 'அப்ப டியே' என்று. [2]மூன்றுவிதங்களான அளவுகளுமில்லாத எல்லையில்லாத ஆனந்தத்தையே ஸ்வரூபமாகவுடையவனாகவும்,விபூதிகளையுமுடையவ னுமிருக்கிற நான் எப்படி ஞானிக்குப்ரியனோ, அப்படியே இந்த ஞானி ஒருவனே எனக்கு எல்லையில்லாத ப்ரீதிக்குப்பாத்திரனாகிறான். என்று சொல்லப்பட்டது. "ஸசமேப்ரிய:" என்கிற இடத்தில் எல்லையில்லா தப்ரீதியைச் செய்துகொண்டிருந்தாலும் மிகவும் உதாரனானபகவா னுக்கு பக்தன் ப்ரீதிசெய்வதைக் காரணமாகக்கொண்டு தான் ப்ரீதி செய்கிறபடியினால் அத்ருப்தி காட்டப்பட்டது, என்று சிலஆசார்யர் கள் சொல்லுகிறார்கள். கஎ

---

1 மஹாபாரதம் உத்யோகபர்வம் 69—5. 'க்ருஷி:' க்ருஷி என்னும் பதம் 'பூவாசக:' பூமியைச்சொல்லுகிற 'சப்த:' பதம் 'ணச்ச' ண: என்னும் பதமும் 'நிர் வ்ருதிவாசக:' ஸுகத்தைச்சொல்லுகிறது

2 1-வது வ்ஷடம் 7-வது பக்கம் தாத்பர்யசந்த்ரிகையின் புட்நோட் டைப்பார்க்க.

ப-ரை] ஏதே இவர்கள், ஸர்வே ஏவ எல்லாருமே, உதாரா: உதாரர்கள், ஜ்ஞாநீ து ஞானியோவெனில், மே எனக்கு, ஆத்மா ஏவ ஆத்மா (என்று) மதம் எண்ணப்பட்டது, ஹி எந்தக்காரணத்தினால், ஸ: அந்த ஞானி, யுக்தாத்மா, என்னுடன் ஸம்பந்தத்தை ஆசைப்பட்ட மனதையுடையவனாய்க்கொண்டு, மாம் ஏவ என்னையே. அநுத்தமாம் மிகவும் உத்தமமான, கதிம் அடையவேண்டிய ப்ரயோஜனமாக, ஆஸ்தித: எண்ணிக்கொண்டிருக்கிறானோ? ௧௮

பா] இவர்களெல்லோருமென்னையே உபாஸிக்கிறார்களாகையால் உதாரர்சள். எவர்கள் என்னிடத்திலிருந்து ஏதாவதொன்றை வாங்கிக்கொள்ளுகிறார்களோ அவர்களல்லவோ எனக்கு எல்லா ஆஸ்தியையும் கொடுக்

தா] "தேஷாம் ஜ்ஞாநீ" என்கிற கீழ் ஶ்லோகத்திற்சொன்ன அர்த்தமே இந்தஶ்லோகத்தினால் உறுதிப்படுத்தப்படுகிறது. ஞானி மிகவும் ப்ரியன் என்று சொன்னதினால் மற்றவர்கள் கொஞ்சம் ப்ரியர்கள் என்றேற்பட்டது. அதுதான் "உதாரா:" என்றது முதல் கால் ஶ்லோகத்தினால் விஸ்தாரமாகச்சொல்லப்படுகிறது; பகவானொருவனையே உபாயமாகவுடையவர்களாயிருக்கை எல்லோருக்கும் பொதுஎன்பது 'என்னையே உபாஸிக்கிறார்கள்' என்பதினால் காட்டப்பட்டது "உதாரா:" என்னும்பதத்திற்கு அல்பமான ப்ரயோஜனமுள்ள, உயர்ந்தவர்கள் என்று அர்த்தம் சொல்லுவதை விலக்குவதற்காக ப்ரஸித்தியை அநுஸரித்து அர்த்தம் சொல்லுகிறார்—'உதாரர்சள்' என்று. யாசகர்களாயிருப்பவர்களுக்கு உதாரத்தன்மை எப்படி ஸம்பவிக்கும்? என்கிற ஆக்ஷேபத்துக்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'எவர்கள் என்னிடத்திலிருந்து' என்றாரம்பித்து. எல்லாப்பலங்களையும் கொடுக்கும் தன்மையாகிற மிகுந்த உதாரத்தன்மையே எனக்கு எல்லா ஆஸ்தியும், அது வாங்கிக்கொள்ளுகிறவர்களைப்பொறுத்தது, அவர்களில்லாவிட்டால் எனக்கு அது எப்படி ஸம்பவிக்கும், என்று சொல்லப்பட்டது. "மதம்" என்று "நபும்ஸகலிங்கம்" (ஒன்றன்பால்) ஆகயிருக்கிறபடியினால் "ஜ்ஞாநீ" என்பதுடன் அந்வயிக்காது "மத:" என்று மற்றவர்கள்சொன்ன "பும்லிங்கம்" (ஆண்பால்) ஆனபாடமோ ப்ரஸித்தமல்ல ஆதலால் "இதி" (என்று) என்னும்பதம் சேர்த்துக்கொள்ளப்பட்டது. வேதாந்தத்திலேற்பட்ட ஸித்தாந்தமாயிருந்தாலுமிருக்கட்டும், இல்லாமற்போனாலும் போகட்டும், க்ருஷ்ணனுடைய ஸித்தாந்தம் இது, என்று தாத்பர்யம் அநேக ப்ரமாணங்களுக்கு விருத்தமாகையி

பா]கிறவர்கள். ஞானியோவெனில் எனக்கு ஆத்மா, அவனாலேயே என்னுடைய ஸ்வரூபம் தரிக்கப்படுகிறது, என்று நான் நினைக்கிறேன். ஏனிப்படி என்னில் எந்தக்காரணத்தினால் இந்த ஞானி என்னை விட்டுப் பிரிந்து தன் ஆத்மாவைத்தரிப்பது முடியாதாகையால் என்னையே மிகவும் உயர்ந்த

தா] னுல் இவ்விடத்தில் 'ஆத்மா" என்னும் பதம் அபேதத்தைச்சொல்லுகிறதல்ல, அப்படிச் சொல்லில் "மே" (எனக்கு) என்று பேதத்தைக் காட்டுகிற ஆறும் வேற்றுமையாகச்சொல்லியிருப்பதும் விரோதிக்கும் ஆகையால் அதின் தாத்பர்யத்திலிருக்கும் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'அவனாலேயே' என்றாரம்பித்து. சரீரத்துக்கு அதைத்தரிப்பவன் ஆத்மாவல்லவா? "ஆத்மைவ" என்று "ஏவ" என்பதோடு சேர்த்துச்; சொல்லியிருக்கிற விது, ப்ரீதியின் மிகுதியைக் காட்டுவதற்காக ஆத்மா என்பதை ஆரோபித்துச் சொல்லியிருக்கிறது. அபிமானம் மாத்ரத்தைப் பலமாகவுடைய இந்த உம்முடைய வித்தாந்தத்திற்கு எதை ப்ரமாணமாக நினைத்திருக்கிறது; என்கிற கேள்விக்கு ஸமாதானமாக "ஆஸ்தித:" என்றிவை முதலான மேல்பாதி சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிறார்—" ஏனிப்படி என்னில்' என்று. "ஹி" என்பது காரணத்தைச் சொல்லுகிறது. 'யுக்தாத்மா" என்பது ஆசையைக்காட்டுகிற "க்த" என்னும் விகுதியையுடையது. எவனுடைய மனது பரமாத்மாவுடன் ஸம்பந்தத்தை ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறதோ அவன் இவ்விடத்தில் "யுக்தாத்மா" என்று சொல்லப்படுகிறான். இவையெல்லாவற்றையும் மனதில் வைத்துக்கொண்டு 'என்னைவிட்டுப்பிரிந்து தன் ஆத்மாவைத் தரிப்பது முடியாதாகையினால்' என்று சொல்லப்பட்டது. என்னைப்பற்றிய அநுஸந்தானமில்லாமற்போனால் வேறு வஸ்துக்களை அநுஸந்தானம் செய்யவும் ஸாமர்த்யமில்லாத ஸ்வபாவத்தையுடையவனாகையினால் என்றர்த்தம். 'என்னையே' என்பதற்கு என்னுடன் ஸம்பந்தமில்லாதபோது அஸத் ஆகவே. ஆய்விடும் என்று தாத்பர்யம். 'என்னையே' என்பதற்கு உபாயமாகிய என்னையே; வேறுபலத்தின் கொஞ்சபாகத்தையுமல்ல, என்றர்த்தம் 'அடையத்தகுந்த ப்ரயோஜனமாக' என்பதற்கு அவ்விடத்தில "கதிம்" என்னும் பதம் அடையத்தகுந்த வஸ்துவைச் சொல்லுகிறது, என்று தாத்பர்யம். ஞானி பகவானால் தன் ஆத்மாவைத் தரித்துக்கொண்டிருக்கிறான் என்பது ப்ரமாணங்களுக்கு ஒத்திருக்கிறபடியினால் இப்படியே இருக்கலாம்;

பா] அடையத்தகுந்த ப்ரயோஜனமாக எண்ணிக்கொண்டிருக்கிறேனே, ஆகையினாலேயே அவனைவிட்டுப்பிரிந்து எனக்கும் ஆத்மாவைத் தரிக்கமுடியாதாகையால் எனக்கு அவனாத்மாவல்லவா ௧௭

பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே |
வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: || ௧௯

ப-ரை] பஹூநாம் அநேகங்களான, ஜந்மநாம் ஜந்மங்களுடைய, அந்தே கடைசியில், ஜ்ஞாநவாந் ஞானத்தை உடையவனாய்க்கொண்டு,

---

கா] ஆனாலும் பகவான் ஞானியால் தன்னுடைய ஆத்மாவைத் தரித்துக் கொண்டிருக்கிறான் என்பதற்கு என்ன ஸாதகம் ஏற்பட்டதென்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ஆகையினாலேயே' என்றாரம்பித்து. ஸரஸமான மனதையுடையவர்களாய் மன்னுடைய அபிப்ராயத்தைத் தெரிந்துகொண்டவர்களுக்கிது வ்யக்தமாயிருக்கிறது, என்றபிப்ராயம் அப்படியே [1]"ந தஸ்யாந்ய: ப்ரியதர: ப்ரதிபுத்தைர் மஹாத்மபி: | விஷ்ணோஸ்த்ரிஷு லோகேஷு தத்ஸந்தேஹோ? காந்திதாம் கத:|| நாரதைதத்ஸத்யம் வசநம் ஸமுதாஹ்ருதம் | நஹ்யஸ்மத்பக்தேப்ய: ப்ரியதரோ லோகே கச்சந வித்யதே||" என்று சொல்லியிருக்கிறது. 'ஆகையால் எனக்கு அவனாத்மாவல்லவா' என்பதற்கு ஆதாரமாயிருக்கை முதலியவைகளில் சில விசேஷங்களைவோ ஆத்மாவுக்கு இலக்கணம் என்று தாத்பர்யம், ஐஸ்வர்யம் முதலியவற்றை விரும்புகிற எல்லோரும் என்னுடைய ஸ்வரூபத்திற்கு மேன்மையை உண்டாக்குகிறவர்கள், ஞானியோவெனில் என்னுடைய ஸ்வரூபம் நிற்பதற்கே காரணம், என்று தன்னுடைய பக்தர்களை ஸ்தோத்ரம் செய்கிறார்] இந்த ஸ்லோகத்தினால். ௧௮

---

1 'தஸ்ய' அந்தபகவானுக்கு 'மஹாத்மபி:' மஹாத்மாக்களாகிய 'ப்ரதிபுத்தை' ஞானிகளைத்தவிர 'அந்ய:' வேறு 'ப்ரியதர:' மிகவும் இஷ்டமானவன் 'த்ரிஷு' மூன்று 'லோகேஷு' லோகங்களில் 'நவித்யதே' இல்லை 'யத:' ஆகையால் 'ஏகாந்திதாம்' ஞானியாயிருக்கையை 'கத:' அடைந்தவனாக 'அஸ்மி' ஆகிறேன் 'நாரத' ஓ நாரதருஷியே 'ஸத்யம்' உண்மையான 'ஏதத்' இந்த 'வசநம்' வார்த்தை 'தே' உனக்கு 'ஸமுதாஹ்ருதம்' சொல்லப்பட்டது 'அஸ்மத்' இந்த என்னுடைய 'பக்தை' பக்தர்களைத்தவிர வேறு 'ப்ரியதர' மிகவும் ப்ரியமானவன் 'கச்சந' ஒருவனும் 'லோகே' லோகத்தில் 'நவித்யதே' இல்லை

வாஸுதேவ: ஸ்ரீ க்ருஷ்ணனே, ஸர்வம் எல்லாமும், இதி என்று, (எண்ணிக்கொண்டு) மாம் என்னை, ப்ரபத்யதே அடைகிறான், ஸ: அந்த, மஹாத்மா மஹாத்மாவானவன், ஸுதுர்லப: மிகவும் கிடைக்கத்தகாதவன். ௧௯

பா] எனக்கு ஶேஷமாக இருக்கை ஒன்றையே ஸ்வபாவமாக உடைய ஆத்மாவின் உண்மையைப்பற்றிய ஞானத்தை முன்னிட்டு என்னை ஆஶ்ரயிக்கிறது என்கிற வித்து ஸ்வல்பக்கணக்கினுல் எண்ணப் பட்ட புண்யஜன்மங்களின் பலமல்ல; பின்னை எப்படியெனில் அனேகங்களான புண்யஜன்மங்களின் கடைசியில் வாஸுதேவனு க்கு ஶேஷமாக இருக்கை ஒன்றையே ஸ்வபாவமாக உடையவன் நான், அவனுக்கு வஶப்பட்ட ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகளை உடையவன், அந்தப்பகவானும் எண்ணிறந்த கல்யாண குணங்களினுல் மிகவும் மேலானவன், என்கிற ஞானமுள்ளவனுகி, பசவானே எனக்கு

தா] மறுபடியும் கீழ்ச்சொல்லிய ஞானத்தை உடையவனுக இருக்கை, அனேகஜன்மங்களில் செய்யப்பட்ட புண்யங்களுக்குப்பலமாகையினுலே கிடைப்பது மிகவும் அரிதாகையினுல் ஞானியின் மேன்மையைக் காட்டுகிருர்—இந்த ஶ்லோகத்தில் "யேஜந்மகோடிபிஸ்ஸித்தா: தேஷாமந்தேஜநார்த்தந:" என்கிற பஞ்சராத்ர ஶாஸ்த்ரத்தையும் ''ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு'' என்றிவை முதலிய ஸ்ம்ருதிகளையும் நினைத்துக்கொண்டு சொல்லுகிருர்—'எனக்கு ஶேஷமாக' என்று ஆரம்பித்து. "பஹூநாம் ஜந்மநாம்" என்கிற இடத்தில் அனேக ஜன்மங்கள் உண்டானமைமாத்ரம் சொல்லப்படவில்லை; அது இவ்விடத்தில் உபயோகமற்றதாகையினுல், அனேகஜன்மங்கள் மாத்ரம் ஞானமுண்டாவதற்குக் காரணமாகச் சொல்லப்படவில்லையல்லவா? அப்படியாகில் எல்லோரும் ப்ரயத்னம் இல்லாமல் ஞானியாகக் கூடுமாகையினுல். ஆதலால் 'புண்யஜன்மங்களின்' என்று விஶேஷித்துச் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட ஞானத்தை உடையவனுக இருக்கை இப்படிப்பட்ட விஶேஷமான ப்ரபத்திக்குக்காரணம் என்று காட்டுவதற்காகவும், ஞானிக்கு அனேக ஜன்மங்களுண்டு என்கிற ப்ரமத்தை நீக்குவதற்காகவும். 'ஞானமுள்ளவனுகி' என்று சொல்லப்பட்டது. "வாஸுதேவஸ்ஸர்வம்" (வாஸுதேவனே எல்லாம்) என்று சேர்த்துச்சொல்லியிருப்பது லோகமெல்லாம்

பா] மேலான அடையத்தகுந்த ப்ரயோஜனமும், அடைவிக்கிற வனும், என் ஆசையில் இருக்கிற மற்றெல்லாமும் அவனே, என்று என்னை உபாஸிக்கிறான். அப்படிப்பட்ட பெரிய மனதை உடையவன் இந்த உலகத்தில் மிகவும் துர்லபன். "வாஸுதேவஸ்ஸர்வம்" என்ப

தா] இல்லை என்றாவது, அவைகள் பரமாத்மாவினிடத்தில் ப்ரதிஷ்டிக்கப்பட் டன என்றாவது, அவைகள் ப்ரஹ்மத்தோடு ஒன்று என்றாவது, சொல் லுகிறது என்பது பொருந்தாததாகையினாலும், சரீரமும் ஆத்மாவா யிருப்பதினால் அப்படி சொல்லியிருக்கிறதென்பதைப் பார்க்கிலும் இந்த ஸந்தர்ப்பவிசேஷத்தினால் ஏற்பட்ட அர்த்தமே அவச்ய மாய் க்ரஹித்துக்கொள்ள வேண்டியதாகையினாலும் — 'பகவானே எனக்கு மேலான அடையத்தகுந்தப்ரயோஜனம்' என்றிவை முதலானது சொல்லப்பட்டது. இந்த லோகத்திலிருக்கும் தாயகம் முதலியவை களை நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'என்னாசையிலிருக்கிற' என்றா ரம்பித்து. [1]"த்வமேவ மாதா ச பிதா த்வமேவ" என்பதும் 'தாயார் தகப்ப னார், உடன்பிறந்தவன், இருப்பிடம், காப்பாற்றுகிறவன், மித்ரன் அடை யத்தகுந்தவன், எல்லாம், நாராயணனே' என்பதும் முதலிய ஸ்ருதி வாக்யம் முதலியவைகளும் இங்கே நினைக்கப்பட்டன. இவ்விடத்தில் சரணாகதி உபாஸனத்துக்கு அங்கம் என்று சொல்லுகிறார்—'என்னை உபாஸிக்கிறான்' என்று. ஞானிக்கும் ஸ்வரூபம் 'மஹத்' (பெரிது) என்பது ப்ரமாணங்களுக்கு விருத்தமாகும். கும்பலைப் பரிசுத்தமாக்கும் தன்மை முதலிய பெருமைகள் இருந்தபோதிலும் அவைகளை இங்கேசொல் லவேண்டிய அவச்யமில்லை. ஆகையால் விசேஷமான ஞானத்தினா லுண்டான பெருமையே இவ்விடத்தில் சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிறார்—'பெரியமனதை உடையவன்' என்று இதரங்களி லாசையுள்ளவனாய் பகவானை உபாஸிக்கிறவன் துர்லபனாகையினால அவனை விலக்குவதற்காக "ஸ:" என்னும் சப்தம் சொல்லப்பட்டி ருக்கிறது, என்று தெரியப்படுத்துவதற்காக 'மிகவும் துர்லபன்' என்று சொல்லப்பட்டது. 'வாஸுதேவஸ்ஸர்வம்" என்று சேர்த்துச் சொல் லியிருப்பதற்கு மற்றவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட அர்த்தத்தை

[1] 'த்வமேவ' நீயே 'மாதா' தாயாரும் 'பிதா' தகப்பனும் 'த்வமேவ' நீயே.

பா]தற்கு இதுதான் அர்த்தம்."வீர்யோஷ்மிஜ்ஞாநிநோ நாத்யர்த்தம்" "ஞானி தஸ்யாஹம் ஜ்ஞாநம் ஸ்தாநமேவ மநுத்தமாம்கதிம்" என்று ஆரம்பித்திருக்கிறபடியினால். ஜ்ஞாநவாந் என்பவனும் கீழ்ச்சொல்லிய அடையாள முள்ளவனே. இவனே கீழ்ச்சொல்லப்பட்ட ஞானியாகையினால்."ஸுக்ருதிநாவ:" என்று ஆரம்பித்து. * 'பூமிராபோநலோ வாயு: கம் மநோ புத்திரேவ ச । அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா । அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம் । ஜீவ பூதாம்" என்று சேதநாசேதநங்களாகிய இரண்டு விதங்களான ப்ரக்ருதியும் பரமபுருஷனுக்கு ஶேஷமாக இருக்கை ஒன்றையே ஸ்வபாவமாக உடைத்தானவைகள் என்பது சொல்லப்பட்டது. † "மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய" என்று ஆரம்பித்து. ‡ "யே சைவ ஸாத்விகா பாவா ராஜஸாஸ் தாமஸாஶ்ச யே । மத்த ஏவேதி தாந் வித்தி ..." என்று ஆரம்பித்து. ‡" யேசைவஸாத்விகாபா

தா] நிராகரித்துக்கொண்டு தன்னால் சொல்லப்பட்ட அர்த்தத்தை உறுதிப்படுத்துகிறார்—" வாஸுதேவஸ்ஸர்வம்" என்றாரம்பித்து. இவ்விடத்தில் ஆரம்பம், ப்ரயோஜனம் வேறானதைக்காரணமாகக்கொண்டு அதிகாரிகளின் பேதத்தைச் சொல்லவந்தது. ஸங்கர்ப்பத்துக்கு விருத்தமான அர்த்தமும் ஸங்கர்ப்பத்துக்கு உபயோகமில்லாத அர்த்தமும், ஸங்கர்பத்திலேயே ஏற்பட்டதும் ஸங்கர்ப்பத்துக்கு மிகவும் உபயோகமுமான அர்த்தமிருக்கும்பொழுது ஆதரிக்கத்தக்கதல்ல, என்று தாத்பர்யம். "ஜ்ஞாநவாந்" என்கிற இடத்திலும் ப்ரம்ஹம் எல்லா விஶேஷங்களுமற்றது, என்கிறஞானத்தையும், ஜீவாத்மா மாத்ரத்தைப்பற்றிய ஞானத்தையும், விலக்குவதற்காகச் சொல்லுகிறார்— "ஜ்ஞாநவாந்"'என்பவனும்'என்றாரம்பித்து. 'கீழ்ச்சொல்லிய அடையாளமுள்ளவனே, என்பதற்கு தன்னுடைய ஆத்மாவை வாஸுதேவனுக்கு ஶேஷமாயிருக்கை ஒன்றையே ஸ்வபாவமாக உடையவன், என்று தெரிந்துக்கொண்டவனே, என்றர்த்தம். கீழ்ச்சொல்லிய அடையாளமுள்ளவனாக இருக்கைக்குக் காரணத்தைச் சொல்லுகிறார்—'இவனே' என்றாரம்பித்து "ஜ்ஞாநீ த்வாத்மைவ" என்று முன்புசொல்லப்பட்ட ஞானிக்கு கீழ்ச்சொல்லிய அடையாளமுள்ளவனாகயிருக்கை எப்படி சொல்லப்படு

* பகவத்கீதை, 7–4, 5. † பகவத்கீதை, 7-6, 7.

‡ பகவத்கீதை, 7–12.

¶ பகவத்கீதை, 7–20.

பா] ராஜஸாஸ்தாமஸாஸ்ச யே । மத்த ஏவேதி தாந் வித்தி ந த்வஹம் தேஷு தே மயி'' என்று கார்யதசை, காரணதசையாகிய இரண்டுதசைகளையுமுடைய இரண்டுவித ப்ரக்ருதிகளும் பரமபுருஷனுக்கு வசப்பட்ட ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளை உடையவைகள் என்பதும், பரமபுருஷனே எல்லா ஸ்வபாவங்களினாலும் எல்லா வஸ்துக்களையும் விட மேலானவன் என்பதும் சொல்லப்பட்டது ஆகையினால் இப்படிப்பட்டவனே இவ்விடத்தில் ஞானி என்று சொல்லப்படுகிறான். ௧௯

பா-அ.] அந்த ஞானிதுர்லபன் என்பதையே நிரூபிக்கிறார்:—

காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தேऽந்யதேவதா: ।
தம் தம் நியமமாஸ்தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா ॥ ௨0

ப-ரை] *ஸ்வயா* தங்களுடையதான, *ப்ரக்ருத்யா* ஸ்வபாவத்தினால், *நியதா:* கட்டப்பட்டவர்களாய், *தைஸ்தை:* அந்தந்த, *காமை:* ஆசைகளினால், *ஹ்ருதஜ்ஞாநா:* அபஹரிக்கப்பட்டஞானத்தை உடையவர்களாய்க்கொண்டு, *தம் தம்* அந்தந்த, *நியமம்* நியமங்களை, *ஆஸ்தாய* அடைந்து, *அந்யதேவதா:* இதரதேவதைகளை, *ப்ரபத்யந்தே* ஆஸ்ரயிக்கிறார்கள். ௨0

தா] கிறது? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார் "ஸாத்விகாபாவா:" என்று ஆரம்பித்து என்று அதுவன்றிக்கே கீழ்ச்சொல்லிய ஞானியாகையினால், என்பதினால் ஒரேவஸ்துவினிடத்தில் பக்தியுள்ளவனாக இருக்கைமுதலியன சொல்லப்படுகிறது "ஸாத்விகாபாவா:" என்றாரம்பித்துச்சொல்லும் வாக்யத்தினால் வேறொருகாரணமாய் சொல்லப்பட்டிருக்கிறது. 'கார்யதசை காரணதசை, இவைகளை உடைய,' என்பதற்குக் கார்யமாக இருக்கை காரணமாக இருக்கையாகிய இரண்டுதசைகளுமுடைய என்று அர்த்தம். ஸ்வரூபஸ்திதி முதலியவைகள் அந்த பகவானுக்கு அதீனமாக இருக்கின்றன என்பது "மயி ஸர்வம் ஸ்வொஹம்" என்றிவைமுதலான இடங்களில் வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கீழ்ச்சொல்லிய அடையாளமுள்ளவன் என்பதை முடிக்கிறார்—'ஆகையினால்' என்று ஆரம்பித்து. 'அவனே' என்பதற்கு வாஸுதேவனுக்கு சேஷமாக இருக்கை ஒன்றையே ஸ்வபாவமாக உடையவன் என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்ட அடையாளமுள்ளவனே என்று அர்த்தம். ௧௯

பா] உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் குணமயங்களான வஸ்துக்க ளைப்பற்றிய தங்களுடையதான வாஸனைகளோடு எப்பொழுதும் சேர்ந்து கொண்டவர்களாய்த் தங்கள் தங்கள் வாஸனைக்குத் தகுந்தவைகளாயும் குணமயங்களாயும் தங்களி லாசைப்படப்பட்டவைகளாயு மிருக்கிற வஸ்துக்களினால் அபஹரிக்கப்பட்ட என் ஸ்வரூபத்தைப்பற்றிய ஜ்ஞானத்

தா] "காமைஸ்தைஸ்தை:" என்று ஆரம்பித்து 27-வது ஶ்லோகம் வரையிலுமுள்ள க்ரந்தத்திற்கு ப்ரக்ருதத்தோடு ஸங்கதி சொல்லுகி றார்—'அந்த' என்று ஆரம்பித்து. வேறு தேவதைகளிடத்திலும் வேறு பலங்களிலும் ஆசைமுதலியவை இதற்குத் தடையாகும், என்று தாத்பர்யம். பன்மையாகச் சொல்லி இருப்பதற்குச் சுருக்கமில்லாமையை யும், "ஸர்வபூதாநி ஸம்மோஹம்" என்று மேலே சொல்லப்போகிற தையும் நினைத்துக்கொண்டு 'எல்லா' என்று சொல்லபபட்டது. தங்க ளுடையதான' என்பதற்கு அநாதியான தங்களுடைய அனுபவத்தினு லுண்டானதாயும், ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அததற்குத் தகுந்தபடி தனித்தனியே இருப்பதாயும், அந்தந்த ஆத்மாவுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடியது மான, என்று அர்த்தம். இந்த வாஸனைத் தனித் தனியாக விஷயங்களைப் பற்றிய ஆசையை உண்டாக்குகிறது, என்று தெரிவிப்பதற்காக—'குணமயங்களான வஸ்துக்களைப்பற்றிய' என்று சொல்லப்பட்டது. இத்தால் ஸ்வபாவம் என்னும் அர்த்தத்தைச் சொல் லுகிற ப்ரக்ருதி யென்னும் பதமானது இவ்விடத்தில் "காமைஸ்தைஸ் தை:" என்பவை முதலிய பதங்களோடு சேர்ந்திருக்கிறபடியினால் அந்தந்த ஆசைக்குக் காரணமான ஸ்வபாவத்திலேயே ஏற்பட்ட வாஸனையைச் சொல்லுகிறது, என்பதும் தெரிவிக்கபபட்டது "நியதா:" என்பதற்கு ஓரிடத்திலும் தனித்திருக்கையைக் கண்டறியாத சேர்க் கை அர்த்தம், என்கிற அபிப்ராயத்தினால் 'எப்பொழுதும் சேர்ந்துகொ ண்டவர்களாய்' என்று சொல்லப்பட்டது. 'அந்தந்த' என்று இரட்டித்துச சொல்லி இருப்பதின் அபிப்ராயத்தைச் சொல்லுகிறார்:—தங்கள் தங் கள் வாஸனைக்குத் தகுந்தவைகளாயும்' என்று. "லபதே ச தத:காமாந்" என்று மேலே சொல்லப்போகிற காம என்கிற பதத்தின் அர்த்தத்தை யே சொல்லவேண்டியதாகையினால் இவ்விடத்தில் இருக்கும் காம என் னும் பதமும் இச்சிக்கப்படுகிறது என்னும் அர்த்தத்தையே சொல்லுகி றது. "ஹ்ருதஜ்ஞாநா:" என்னுமிடத்தில் ஞான என்கிற பதத்தினால் முன்பு ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஞானமே சொல்லப்படுகிறது, என்று தெரி விப்பதற்காக—'அபஹரிக்கப்பட்ட என் ஸ்வரூபத்தைப்பற்றிய ஞானத்

பா]தை உடையவர்களாய்க்கொண்டு இஷ்ட பலங்கள் ஸித்திப்பதற்காக என்னைவிட வேறான கேவலர் இந்த்ரன் முதலிய தேவதைகளை அந்தந்தத் தேவதைகளுக்கு மாத்ரம் ப்ரீதியை உண்டாக்குவதற்கு அஸா

தா]தை உடையவர்களாய்க்கொண்டு' என்று சொல்லப்பட்டது. இதனால் வேறு தேவதைகளை ஆச்ரயிப்பதற்குக் காரணமான பாபத்தையும் காரணத்தையும் பலம் என்னும் காமத்தையும் சொல்லியது. ஸ்வரூபத்தைமாத்திரம் சொல்லியிருந்தாலும் அல்பமாயும் அஸ்திரமாயுமுள்ள ப்ரயோஜனமாகவும் மற்றொன்று ஸாதனமாகவும் இருக்கிற பலம் தானே ஏற்பட்டது, என்று காட்டுகிறார்—'அந்தந்த இஷ்டபலங்கள் ஸித்திப்பதற்காக' என்று சொல்லப்பட்டது, "தைஸ்தை:" (அந்தந்த) என்பதற்கு அந்தந்த தேவதைகளினால் கொடுக்கப்படுகிற பலங்களை என்று அர்த்தம். இந்த்ரன் முதலிய தேவதைகளையும் பரமாத்மாவை அந்தர்யாமியாக உடையவர்கள் என்று அநுஸந்தானம் செய்யும் பக்ஷத்தில் இந்த்ரன் முதலிய விசேஷணங்களை உடைய பரமாத்மாவே இந்த்ரன் முதலிய பதங்களுக்கு அர்த்தமாயிருப்பதினாலே இங்கு "அந்யதேவதா:" என்று சொன்னது அப்படிப்பட்ட அநுஸந்தானம் இல்லாமையைப் பற்றியது, என்று தெரிவிப்பதற்காக—என்னைவிட வேறான கேவலம் இந்த்ரன் முதலிய தேவதைகளை' என்று சொல்லப்பட்டது.[1] இதனால் "காமைஸ்தைஸ்தை:" என்றிவை முதலியது ஞானியைத் தவிர மற்ற மூன்று வித பக்தர்களைப்பற்றியது என்று மற்றவர்கள் சொன்ன அர்த்தம் நிராகரிக்கப்பட்டது. அந்தந்த இஷ்ட பலங்களுக்காகவும் விவேகிகளினால் பகவானே ஆச்ரயிக்கத்தக்கவன் ஆகையினாலேயே கீதார்த்த ஸங்க்ரஹத்தில் "ஸௌகாங்க்ஷ்யம் ஹ்ருஷ்டக்ருஷ்ணம் ஸமாநாதிகாரிணாம்" என்று சொல்லப்பட்டது. அப்படிக்கு பகவானை அடையாத பக்ஷத்தில் "த்ருஷிதோ ஜாஹ்நவீதீரே கூபம் கநதி துர்மதி:" (முட்டாளான ஒருவன் கங்கைக்கரையில் தாகித்தவனாய்க் கிணறு வெட்டுகிறான்) என்று தாத்பர்யம். "தம் தம் நியமம்" என்கிற இடத்தில் நியமமாவது ஒருவிதமான ஸங்கல்பம் முதலியவை. 2 "ச்ரத்தயார்ச்சிதுமிச்சதி" என்று மேலே சொல்லப்போகிறபடியினால் இவ்விடத்தில் சொல்லுகிற ப்ரபத்தியும் அந்த ஆராதனத்திற்கு அங்கம் என்பதைக் காட்டுகிறார்—ஆச்ரயித்து ஆராதனம் செய்கிறார்கள்' என்று. விச்வாஸத்துடன் நீ பலத்தைக் கொடுக்கவேண்டும் என்று வரித்துக்கொண்டு அந்தந்தக் கர்மங்களினால் ப்ரீதி உண்டா

---

1 அவர்கள் பகவானையே ஆச்ரயிப்பவர்களாதலால் வேறுதேவதைகளையாச்ரயிக்கிறார்களென்பது பொருந்தாதாகையால் 2 பகவத்கீதை 7, 21

தா] தாரணமான நியமத்தை அடைந்து அவர்களையே ஆஶ்ரயித்து ஆராதனம் செய்கிறார்கள். 20

யோ யோ யாம் யாம் தநும் பக்த: ஶ்ரத்தயார்சிதுமிச்சதி।
தஸ்ய தஸ்யாசலாம் ஶ்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் ॥ 21

ப-ரை] யோய:-எவனெவன், பக்த:- பக்தியை உடையவனாக, யாம்யாம் எந்தெந்த, தநும்- சரீரத்தை, அதாவது எனக்கு ஶரீரமாகிய எந்தெந்த தேவதையை, ஶ்ரத்தயா- விஶ்வாஸத்தினால், அர்சிதும் - ஆராதிப்பதற்கு, இச்சதி- விரும்புகிறானோ, தஸ்யதஸ்ய - அவனவனுக்கு, தாம்- அந்த, ஶ்ரத்தாமேவ- விஶ்வாஸத்தையே, அசலாம்- உறுதியாக, அஹம்- நான். விததாமி- செய்கிறேன். உக

பா] அந்தத் தேவதைகளும் என்னுடைய ஶரீரங்கள் என்று * 'எவன் ஸூர்யனிடத்தில் இருக்கிறானோ எவனை ஸூர்யன் தெரிந்துகொள்ளவில்லையோ எவனுக்கு ஸூர்யன் ஶரீரமோ' என்று அர்த்தமுள்ள வாக்

தா] கும்படி செய்கிறார்கள் என்று அர்த்தம். ப்ரபத்தியின் ஸ்வரூபத்தையோசித்துப் பார்த்ததினால் 'அவர்களையே' என்பது ஏற்பட்டது, ததேகோபாயதாயாச்ஞா" என்றல்லவோ ப்ரபத்தியின் லக்ஷணம். 20

இப்படி இதர தேவதைகளிடத்திலும் வேறு பலங்களிலும் பற்றுதலை உடையவர்களும் அந்தந்தத் தேவதைகளின் ஆராதனங்களும் அதின் பலங்களும் நிறைவேறமற்போனால், 1 "அலாபே மத்தகாஶிந்யா: த்ருஷ்டா திர்யக்ஷு காமிதா" என்கிற நயாயத்தினால் அநிஷ்டபலங்களுக்குக் காரணங்களாகிய ஶாஸ்த்ரங்களினால் விலக்கப்பட்ட உபாயங்களில் மூழ்கிவிடுவார்கள் என்று நினைத்து, மிகுந்த கருணையை உடையவனாகிய நானே அந்தத் தேவதைகளின் ஆராதனங்களுக்குக் காரணமாகிய ஶ்ரத்தைக்குத் தடைகளின் நிவ்ருத்தியையும் அவைகளின் பலங்களையும் கொடுக்கிறேன் என்று இந்த இரண்டு ஶ்லோகங்களினால் சொல்லுகிறார். ஒரு பகவானே, ராமன் க்ருஷ்ணன் முதலிய அவதாரங்களைப்போல ஸூர்யன் முதலிய ஶரீரங்களை அடைகிறாரே யல்லாமல் வேறொரு ஜீவன் இல்லை என்கிற குத்ருஷ்டிகளின் மதத்தை நிராகரிப்பதற்காகச் சொல்லுகிறார்—'அந்தத்தேவதைகளும்' என்று ஆரம்பித்து. அதின் கருத்தாவது-முன் ஶ்லோகத்தில் "ப்ரபத்யந்தேऽந்யதேவதா:"

---

* ப்ருஹதாரண்யகம் 5 - 7.

1 மத்தகாஶிந்யா: - உத்தமமான ஸ்திரீயின், அலாபே-கிடையாமையில், திர்யக்ஷு - மிருகங்களிடத்தில், காமிதா - காமுகனுக இருக்கை, த்ருஷ்டா பார்க்கப்பட்டது.

பா]யம் முதலிய ஶ்ருதிகளினால் சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய ஶரீரம் என்று தான் தெரிந்துகொள்ளாமற் போனபோதிலும் எவனெவன் எங்கெந்த ஸூர்யன் முதலிய என்னுடைய சரீரத்தை ஶ்ரத்தையினால் ஆராதனம் செய்ய விரும்புகிறானோ, அவனவன் தெரிந்துகொள்ளாமலிருந்த போதிலும் இந்த ஶ்ரத்தை என்னுடைய சரீரத்தைப்பற்றியது என்று

தா](இதர தேவதைகளை ஆஶ்ரயிக்கிறார்கள்) என்று சொல்லியிருப்பது பகவானுடைய அஸாதாரணவிக்ரஹங்களைப்பற்றியாவது அவைகளோடு கூடிய பகவானைப்பற்றியாவது சொல்லுகிறது என்பது சரியல்ல; ஏனெனில் அவைகளில் ராமன் க்ருஷ்ணன் முதலியவர்களிடத்தில் போல "அந்யதேவதா:" (இதர தேவதைகளை) என்று சொல்லியிருப்பது பொருந்தாததாகையினால். ஆகையினால் வேறு தேவதைகளைப்பற்றியே சொல்லுகிறது என்பது அவஶ்யமாக ஒப்புக்கொள்ளவேண்டும். 1 "தேவாந் தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி" என்று மேலே சொல்லப்போகிறார். ஆகையினால் இவ்விடத்தில் "தநும்" (ஶரீரத்தை) என்னும் பதமானது கீழ்மேல் ஸந்தர்ப்பங்களை அநுஸரித்து சில ஜீவர்களைச் சொல்லுகிறது என்பது. ஜீவர்களாகிய எல்லாத் தேவதைகளும் பகவானுக்கு ஶரீரம் என்பதைத் தெரிவிப்பதற்காக ஶ்ருதிவாக்யத்தை எடுத்துக் காட்டுகிறார்—எந்தப் பகவான் என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் பகவானுக்கு ஶரீரம் என்று உபாஸனம் செய்வது சொல்லப்படவில்லை. அப்படியாகில் 2 ப்ரதர்தநவித்யை முதலியவைகளைப் போலப் பரமாத்மாவைப்பற்றிய உபாஸனம் ஆகிவிடும், 3 "ந து மாமபிஜாநந்தி தத்த்வேந" என்று மேலே சொல்லப்போகிற படியினாலும். என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'என்னுடைய ஶரீரங்கள் என்று தெரிந்துகொள்ளாதபோதிலும்' என்று. ஆகில் 'தநும்' (ஶரீரத்தை) என்று இங்கே சொல்லியிருப்பது பொருந்தாதே. அன்றியும் ப்ரயோஜனமற்றதாகவுமாகிறதே "யாம்யாம் தேவதாம்" (எந்தெந்த தேவதையை) என்றல்லவோ சொல்லவேண்டும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'அவனவன்' என்று ஆரம்பித்து. ராஜாவினுடைய ஜீவாத்மஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளாமல் ராஜாவினுடைய ஶரீரத்துக்கு அலங்காரம் முதலியவைகளைச் செய்கிறவனுக்கு ராஜாவினுடைய ஆத்மாவினாலேயே எப்படிப் பலம் கொடுக்கப்படுகிறதோ (அப்படியே இங்கும்). என்கிற ந்யாயத்தைக் காட்டுகிற

---

1 பகவத்கீதை, 7, 23

2 உபநிஷத்தில் சொல்லிய 32 ப்ரம்மவித்யைகளிலொன்று. பரமாத்மாவை இந்த்ரனுக்கு அந்தர்யாமியாக உபாஸித்தல் 3 பகவத்கீதை, 9, 24

பா] நான் தெரிந்துகொண்டு அந்தந்த ஶ்ரத்தையையே தடையில்லாத தாய்ச்செய்கிறேன். 21

ஸ தயா ஶ்ரத்தயா யுக்தஸ்தஸ்யாராதநமீஹதே ।
லபதே ச தத꞉ காமாந்மயைவ விஹிதாந்ஹிதாந் ॥ 22

ப-ரை] ஸ꞉-அந்தமனிதன், தயா அப்படிப்பட்ட ஶ்ரத்தயா-ச்ரத்தையோடு யுக்த꞉-கூடினவனுய், தஸ்ய அ-ந்த த்தேவதையின், ஆராதநம்-ஆராதன, த்தை, ஈஹதே - ஆசைப்படுகிறான், தத꞉ - அந்த ஆராதனத்தினுல், மயைவ-என்னுலேயே, விஹிதாந்-செய்யப்பட்ட, காமாந்-இஷ்டங்களை, லபதே-அடைகிறான். உஉ

பா] அப்படித் தடையில்லாத ஶ்ரத்தையையுடைய அந்த மனிதன் அந்த இந்த்ரன் முதலிய தேவதையின் ஆராதனத்தைக் குறித்து ஆசைப்படுகிறான்; எனக்கு ஶரீரங்களான இந்த்ரன் முதலிய தேவதைகளின் ஆராதனங்களினுல் தன்னுல் விரும்பப்பட்டவைகளும் என்னுலேயே கொடுக்கப்பட்டவைகளுமான தன்னிஷ்ட பலங்களை அடைகிறான். அவர்கள் ஆராதனம் செய்யும்பொழுது தங்களால் ஆராதிக்கப்படுகிற இந்த்ரன்

தா] படியினுல் "தநும்" என்கிற பதம் மிகவும் பொருத்தமுடையது, என்று தாத்பர்யம். உண்டாகிய ஶ்ரத்தை சலிக்காமல் இருப்பதாவது. ஒரு தடையுமில்லாமல் பலம் கிடைக்கும் வரையிலும் இடைவிடாமல் செய்யப்படுகை, என்கிற அபிப்ராயத்தினுல் 'தடை இல்லாததாய்' என்று சொல்லப்பட்டது. 21

இந்த ஶ்லோகத்திலும் ஸதயா என்னும் பதங்களை ஸஸ꞉ தயாதயா (அவனவன் அந்தந்த) என்று இரட்டித்துச் சொல்லிக்கொள்ள வேண்டியது. தயா(அந்த)என்றது இங்கு பிரஸ்தாவிக்கப்படுகிற அர்த்தத்துக்கு உபயோகமான ஆகாரத்தைக் குறிக்கிறது, என்று தெரியப்படுத்துவதற்காக—'தடையில்லாத' என்று சொல்லப்பட்டது. ஈந்தேவதா꞉ என்றும் 'தநும்' என்றும் கீழ் ஶ்லோகங்களில் ஸ்த்ரீலிங்கம் (பெண்பால்) ஆகச்சொல்லியிருக்க இங்கு தஸ்ய என்று பும்லிங்கம் (ஆண்பால்) ஆகச் சொல்லியிருப்பது புத்தியிலிருக்கும் அந்தந்த தேவர்களைக்குறிக்கிறது; 'தேவாந் தேவயஜோயாந்தி' என்றல்லவோ மேலும் சொல்லப்போகிறார், என்கிற அபிப்ராயத்தினுல் 'அந்த இந்த்ரன் முதலிய தேவதையின்' என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் தஸ்யா꞉ என்றும் பதம் பிரிக்கலாம், ஆனுலும் ஆ என்னும் உபஸர்க்கமில்லாத ராதநம் என்னும் பதம் ஆராதனத்தை ச்சொல்லுகிறதென்பது ப்ரஸித்த

பா] முதலியதேவதைகள் என்னுடைய ஶரீரங்கள் என்றும், ஆகையினால் அவர்களுக்குச் செய்யும் ஆராதனங்களும் என்னுடைய ஆராதனங்கள், என்றும் தெரிந்துகொள்ளுகிறதில்லை; ஆனாலும் வாஸ்தவத்தில் அவைகளை என்னுடைய ஆராதனங்களாகையினால் அந்த ஆராதனங்களைச் செய்பவர்களின் இஷ்ட பலத்தை நானே கொடுக்கிறேன். 22

தா] மல்ல, ஆகையினால் அதை அனுஸரிக்கிறது. அன்றிக்கே தாத்பர்யத்திலேற்பட்ட அர்த்தத்தைச் சொல்லியிருக்கிறது, 'மயா' என்கிற பதம் பிரிக்கப்பட்டிருக்கிறதாகவுமாம். 'தத:' என்பதற்கு பாஷ்யத்திலிருந்து வ்யாக்யானம் 'எனக்கு ஶரீரங்களான இந்த்ரன் முதலிய தேவதைகளின் ஆராதனங்களினால்' என்றது. இதில் தாத்பர்யம் 'தத:' என்பதற்கு இந்த்ரன் முதலிய தேவதைகளினால் என்பது தான், என்பது உசிதமல்ல, 'மயைவ விஹிதாந் ஹி தாந்' என்று தானே பலம் கொடுக்கிறதாகச் சொல்லுகிறபடியினால். ஆகையினால் தான் பலம் கொடுப்பதற்குக் காரணம் மாத்ரம் இங்கே சொல்லவேண்டியது. ஆகையால், 'தஸ்யாராதநம்' என்று கீழ்ப்ப்ரதானமாகப் பரஸ்தானிந்நிட்டதையே குறிக்கிறது இது, என்பது. 'ஹி தாந்' என்றவிடத்தில் 'ஹி' என்பது அவ்யயம். கீழ் எல்லா இடங்களிலும் 'அந்த' என்று சொல்லி இருக்கிறபடியினால் "காமாந்" (இஷ்டபலங்களை) என்றவிடத்திலும் "தாந்" (அந்த) என்று சொல்வது உசிதம். பகவான் எல்லா இஷ்டபலங்களையும் கொடுக்கிறார் என்பதைத் தெரிவிக்கிறபடியினால் அவஶ்யம் வேண்டியதாம்; ஹிதங்கள் என்று சொல்வது இந்த ஸந்தர்ப்பத்துக்கு விரோதம். "[illegible] ஸாம்" என்று அவைகளை நிந்திக்கப்ரவ்ருத்தித்திருப்பதினால், என்கிற அபிப்ராயத்தினால் 'தன்னால் விரும்பப்பட்டவைகளும்' என்றிவை முதலியது சொல்லப்பட்டது. உன்னைப்பற்றிய ஞானமில்லாதவர்களுக்கு நீ எப்படிப் பலம் கொடுக்கிறாய்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமாக "மயைவ" என்கிற பதத்தின் அபிப்ராயத்தில் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'அவர்கள்' என்று ஆரம்பித்து. அவர்களுக்கு உன்னுடைய அனுக்ரஹத்தினாலேயே பலம்கிடைப்பதாக இருந்தால் அப்பொழுது உன்னையே நேரிலுபாஸிப்பவர்களைவிட அவர்களுக்கு என்ன வ்யத்யாஸம் என்கிற ஆக்ஷேபமும் இங்கே ஞாபகப்படுத்தப்பட்டது. 22

𑌅𑌨𑍍𑌤𑌵𑌤𑍍𑌤𑍁 𑌫𑌲𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌦𑍍𑌭𑌵𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌮𑍇𑌧𑌸𑌾𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌦𑍇𑌵𑌯𑌜𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑌪𑌿 ॥ 23

ப-உ] 𑌅𑌲𑍍𑌪𑌮𑍇𑌧𑌸𑌾𑌂- அல்பமான புத்தியையுடைய, 𑌤𑍇𑌷𑌾𑌂- அவர்களுக்கு, 𑌤𑌤𑍍- அந்த, 𑌫𑌲𑌂- ப்ரயோஜனமோவெனில், 𑌅𑌨𑍍𑌤𑌵𑌤𑍍 - அழிவை'யுடையதாக, 𑌭𑌵𑌤𑌿 - ஆகிறது, 𑌦𑍇𑌵𑌯𑌜𑌃- (இதர) தேவதைகளை ஆராதிப்பவர்கள, 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍- (அந்த) தேவதைகளை, 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿- அடைகிறார்கள், 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌃 - என்னிடத்தில் பக்தியுள்ளவர்களும், 𑌮𑌾𑌂 - என்னை, 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 - அடைகிறார்கள். உ௩

பா] அல்பமான புத்தியையுடையவர்களாய் இந்த்ரன் முதலிய தேவதைகளை மாத்ரம் ஆராதிப்பவர்களுக்கு, அந்த ஆராதனத்தின் பலமானது அல்பமாகவும் அழிவையுடையதாகவு மாகிறது. ஏனெனில் எந்தக் கார

தா] கீழ்ச் சொல்லிய ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்— இந்த ஶ்லோகத்தில். முதல் பாதியில் ஒரே வாக்யமாக இருத்தல் ஸம்பவிக்கிறபடியினால் வாக்யம் வேறு, என்கிற ப்ரமத்தை நிராகரிப்பதற்காக 'அல்பமான **புத்தியையுடையவர்களாய்**' என்று சேர்த்து அர்த்தம் சொல்லப்பட்டது. '𑌤𑍇𑌷𑌾𑌂' (அவர்களுக்கு) என்றது பலம் அல்பமாவதற்குக் காரணத்தைக் காட்டுகிறது, என்று சொல்லுகிறார்— '**இந்த்ரன் முதலிய தேவதைகளை மாத்ரம் ஆராதிப்பவர்களுக்கு**'; என்று. அதற்குக் காரணம் அல்பமான புத்தியை யுடையவர்களா யிருக்கை. "𑌅𑌲𑍍𑌪𑌮𑍇𑌧𑌸𑌃" என்பதற்கு அல்பங்களான இந்த்ரன் முதலிய தேவதைகளிடத்திலும், அவர்களால் கொடுக்கப்படும் பலங்களிலும் புத்தியையுடையவர்கள், என்றர்த்தம். அன்றிக்கே அல்பங்களான வஸ்துக்களைப்பற்றிய தாகையால் அல்பமான புத்தியையுடையவர்கள் என்றுமாம். அல்பமான புத்தியை யுடையவர்களாதலால் அவர்களுடைய பலமும் அல்பம், என்று அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு 'அல்பமா**கவும் அழிவையுடையதாகவும் ஆகிறது**' என்று சொல்லப்பட்டது. '𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌦𑍇𑌵𑌯𑌜𑌃' என்கிற இடத்திலிருக்கும் தேவ என்னும் பதமானது 1 கோபலீவர்தந்யாயத்தை அநுஸரித்து இங்கே மேலே '𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌃' என்கிற இடத்தில் '𑌮𑌦𑍍' என்னும்பதத்தினால்சொல்லப்படுகிற பகவானைத் தவிர மற்ற தேவதைகளைச் சொல்லுகிறது, அன்றிக்கே மனுஷ்யர் முதலியவைகளோடு ஸமமாகச் சொல்லப்பட்ட கர்மங்களுக்கு வசப்பட்ட தேவ ஜாதியைச் சொல்லுகிறதாகவுமாம், என்கிற

1-வால்யம் 270- பக்கம் புட்நோட்டைப் பார்க்கவும்.

பா]ணத்திஞல் இந்த்ரன்முதலியதேவதைகளைஆராதிப்பவர்கள் அவர்களை யே அடைகிறுர்களோ இந்த்ரன்முதலிய தேவதைகளும் அளவிடப்பட்ட போகத்தை உடையவர்களும் ஸ்வல்பகால மிருப்பவர்களுமோ ஆகையி ஞல் அவர்களுக்கு ஸமானமான போகத்தை அடைந்தவர்களும் அவர்க ளுடன் நழுவிவிடுகிறுர்கள். அந்தக் கர்மங்களே என்னுடைய ஆராதனங் கள் என்று தெரிந்துகொண்டு ஸ்வல்பமான பலங்களிலாசையைவிட்டு என்னை ஸந்தோஷப்படுத்துவ தொன்றையே பலமாகக் கொண்டவர்கள்

தா] அபிப்ராயத்திஞல் ‘இந்த்ரன்முதலிய’ என்றாரம்பித்துச் சொல்லப் பட்டது. இந்த்ரன்முதலியவர்களை அடைவது பலம் அல்பம் என்பதற்கும் அழிவை யுடையது என்பதற்கும் எப்படிக் காரணமாகும், என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறுர்—‘இந்த்ரன் முதலிய தேவதைகளும்’ என்றாரம்பித்து. அவர்கள் அல்பமான போகத்தை யுடையவர்களென்பதும், அழிவை யுடையவர்களென்பதும் இருக் கட்டுமே; அதிஞல் உம்முடைய அநுக்ரஹத்திஞல் பலத்தை அடையக் கூடியவர்களாகிய அவர்களை உபாஸனம் செய்பவர்களுக் கென்ன? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறுர்— ‘ஆகையிஞல்’ என்று ஆரம்பித்து. இந்த்ரன் முதலிய தேவதைகளை மாத்ரம் ஆராதிப்பவர்களுக்கு அவர்களால் விரும்பப்பட்ட அந்த இந் த்ராதிகளின் ஸாயுஜ்யம் முதலிய பலங்களையே பகவான் கொடுக்கிறுர், ஸாயுஜ்யமாவது அவர்களுக்கு ஸமானமாகிய போகத்தை யுடையவர் களாயிருக்கைதான், ஆதலால் இந்த்ரன் முதலியவர்களின் போகம் அல்பமாயும், கொஞ்சக்கால மிருக்கக் கூடியவைகளாயு மிருக்கிறபடியி ஞல் அதற்கு ஸமானமாகிய அவர்களை ஆராதிப்பவர்களின் போகமும் அப்படிப்பட்டதாகவே இருக்கும், என்று தாத்பர்யம். ‘மாம்’ என்று சொல்லப்பட்ட பகவானுடைய ஸ்வரூபம் எல்லையில்லாத ஆனந்தமய மாகையிஞல் அவனுக்கு ஸமமாக இருக்கையை அடைந்தவனுக்கும் எல்லையில்லாத போகத்தையுடையவஞக இருக்கை ஏற்பட்டிருக்கி றது. 1‘போகமாத்ரஸாம்யலிங்காச்ச’ என்று ஸூத்ரம் சொல்லப்பட்டி ருக்கிறது. அந்த பகவான் அழிவில்லாதவஞனபடியிஞலே அவனை உபாஸனம் செய்தவர்களின் போகமும் அழிவில்லாதது என்பதைக்

---

1 சாரீரகஸூத்ரம் 4-4-21 முகதனுக்கு போகம் மாத்திரம் பகவானோடு ஸமம் என்கிறதிஞல் ஜகதஸ்ருஷ்டி முதலியதில்லை யென்றர்த்தம்.

பார்] என்னை அடைகிறார்கள் மறுபடியும் திரும்புகிறதில்லை ‡ 'மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே'' என்றல்லவோ மேலே சொல்லப்போகிறது 23

மற்றவர்களோ வெனில் எல்லோரும் ஆஶ்ரயிக்க வேண்டியதற்காக நான் மனுஷ்யன் முதலியவர்களிடம் அவதாரம் செய்திருப்பதையும் ப்ரயோஜனமற்றதாகச்செய்து விடுகிறார்கள்,—

அவ்யக்தம் வ்யக்திமாபந்நம் மந்யந்தே மாமபுத்தய: |
பரம் பாவமஜாநந்தோ மமாவ்யயமநுத்தமம் || ௨௪

தார்] காட்டுகிறார்—'மறுபடியும் திரும்புகிறதில்லை' என்று. இவ்விடத்தில் அபிப்ராயத்தில் கொண்டிருக்கும் அர்த்தத்தை மேலே சொல்லப்போகிற வாக்யத்தினால் விவரிக்கிறார்—'மாமுபேத்ய' என்பதாம். இந்த விஷயத்திலும் 1 'அநாவ்ருத்திஶ்ஶப்தாத் அநாவ்ருத்திஶ்ஶப்தாத்' என்று ஸூத்ரம் சொல்லப்பட்டிருக்கிறது. 'மத்பக்தா யாந்தி மாமபி' என்கிற இடத்தில், பகவானிடத்தில் வேறு பலங்களை ப்ரார்த்திக்கிறவர்களுக்கும் கடைசியில் மோக்ஷத்தில் முடிவுண்டாகும் என்பது, 'அப்படியே இதர தேவதைகளிடத்தில் பக்தி செய்பவர்களுக்குத் தங்கள் இஷ்ட வஸ்துக்கள் கிடைப்பதே பலம், பகவானிடத்தில் பக்தி செய்கிறவர்களுக்கோவெனில் அவ்வளவு மாத்ரம் பலமல்ல; பின்னை யெதென்னில் தன்னை விரும்பப்படாமலிருந்தாலும் ஸ்வபாவத்தினாலேயே பாபங்கள் நாசமடைகிறபடியினாலும் ஸத்வ குணம் அதிகமாய் வ்ருத்தியடைகிறபடியினாலும் பரிசுத்தங்களான தர்மங்களில் ஶ்ரத்தை யுண்டாகிறபடியினால் மெள்ள மெள்ள ஞானம் வைராக்யம் இவைகளுண்டாய் அவைகளின் வழியாய் முன்பு சொல்லிய விசேஷமான பக்தியுண்டாகிறபடியினால் வெகுகாலம் கழிந்தபின்பாவது பகவானையடைவதாகிய பலம் கிடைத்து விடுகிறது; ஆகையால் அவன் அழிவில்லாத பதத்தை அடைந்தவனாகிறான் என்பது அபிப்ராயம்' என்று நாராயணார்யரால் சொல்லப்பட்டது. இந்த அர்த்தம் ஶாண்டில்ய ஸம்ஹிதையில் பாகவதாபசாரத்தை சொல்லுமிடத்தில், 3'[illegible] | [illegible]' என்று சொல்லப்பட்டது. 23

‡ பகவத்கீதை 8 - 16

1 சாரீரகஸூத்ரம் 4-4-22 (முக்தனுக்கு அநாவ்ருத்தி: திரும்பிவராமை சப்தாத்: ச்ருதி வாக்யத்தினால் ஏற்படுகிறது.

ப-ரை] அபுத்தய:-புத்தியில்லாதவர்கள், மம என்னுடைய, அவ்யயம் அழிவில்லாத, அநுத்தமம் இதற்குமேலுயர்ந்த தோன்றில்லாத, பரம் உயர்ந்ததான, பாவம் ஸ்வபாவத்தை, அஜாநந்த: அறியாதவர்களாய் மாம் என்னை, அவ்யக்தம் இதற்கு முன்னுற்பத்தியை அடையாதவனுகவும் (கர்மவஶத்திஞல்), வ்யக்திம் உற்பத்தியை, ஆபந்நம் அடைந்தவனுகவும் மந்யந்தே என்னுகிருர்கள். 24

பா] என்றுசொல்லுகிருர். எல்லாக்கர்மங்களினுலும் ஆராதிக்கத்தக்கவனுயும் எல்லாவற்றிற்கும் ஈஶ்வரனுயும்வாக்கினுலும்மனஸினுலும்அளவிடக்கூடாதஸ்வரூபம்ஸ்வபாவம் இவைகளைஉடையவனுகவுமிருக்கிற நான் மிகுந்த கருணையினுலும் ஆஶ்ரயித்தவர்களிடத்தில் ப்ரீதியினுலும் எல்லோராலும் ஆஶ்ரயிக்கத் தகுந்தவனுவதற்காக என்னுடைய ஸ்வபாவங்

தா] வேறு பலன்களிலும் வேறு தேவதைகளிடத்திலுமுண்டான வாஸனையினுலல்லவோ உண்மைபற்றிய ஞானம்தடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. உண்மை நேரில் பாராமலிருந்தாலல்லவோ அது பொருந்தும் நீர் கருணைமுதலிய குணங்களினுல் ஏவப்பட்டவராய் எல்லோராலு மாஶ்ரயிக்கத்தகுந்தவனுவதற்காக அவதாரங்களைச் செய்து எல்லா ஜனங்களுடையவும் கண்களுக்கும் பார்க்கத்தகுந்தவனுக நிற்கும்பொழுது எப்படி உண்மை விடுதல் ஸம்பவிக்கும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் இந்த ஶ்லோகம் என்கிற அபிப்ராயத்திஞல் சொல்லுகிருர்---'மற்றவர்களோ வெனில்' என்று ஆரம்பித்து. 'இதரே' (மற்றவர்கள்) என்பதற்குக் கீழ்சசொல்லிய நான்குவகைப்பட்டபுண்யமாலிகளைவிடமற்றவர்கள் என்று அர்த்தம். ''பரம்பாவம்'' என்பதினுல் அபிப்ராயத்தில்கொள்ளப்பட்ட எல்லையில்லாத மேன்மை ஸௌலப்யம்இவைளாகிறஸ்வபாவங்களைக்காட்டுகிருர்.--'எல்லாக்கர்மங்களினுலும்' என்று ஆரம்பித்து,'அவதரித்திருக்கிறேன்' என்பதானவாக. 'என்னுடையஸ்வபாவங்களைவிடாதவனுய்'என்பது''அவ்யயம்'' என்னும் பதத்தின்அபிப்ராயத்தி லிருக்கும் அர்த்தத்தைச்சொல்லியிருக்கிறது. இதைவிட உயர்ந்ததில்லைஆகையினுல் ''அநுத்தமம்'' என்று சொல்லப்படுகிறது. அதாவது எல்லையில்லாத மேன்மையை உடையது என்று அர்த்தம். இவ்விடத்தில் ''அவ்யக்தம்,வ்யக்திமாபந்நம்'' என்கிற பதங்களின் ஸாமர்த்தியத்திஞல் அவதாரங்களைச சொல்லுகிறது என்பதும், அதிலும் ''மாம்'' என்கிற பதத்தின் பொருத்தத்திஞல் க்ருஷ்ணுவதாரத்தைச் சொல்லுகிறதென்பதும் ஏற்பட்டது, என்று அபிப்ராயத்தில்

பா]களைவிடாதவனாய்வஸுதேவருக்குமகனாய்அவதரித்திருக்கிறேன்.என்றிப்படிப்பட்ட அழிவற்றஇதற்குமேலுயர்ந்த தோன்றில்லாத உத்தமமான ஸ்வபாவத்தைத்தெரிந்து கொள்ளாதவர்களாய் ஸாதரணமான ராஜாக்களின் குமாரர்களுக்கு ஸமமானவனாகவும் இதற்கு முன் ப்ரகாஶத்தை அடையாமலிருந்து இப்பொழுது கர்மவஶத்தினால் ஒருவகை ஜன்மத்தை அடைந்து ப்ரகாஶத்தை அடைந்தவனாகவும், என்னைப் புத்தியில்லாதவர்கள் எண்ணுகிறார்கள் ஆகையினால் என்னை ஆஶ்ரயிக்கிறதில்லை. கர்மங்களினால் என்னை ஆராதிப்பதுமில்லை. 24

தா] வைத்துக்கொண்டு 'வஸுதேவருக்குக் குமாரனாக அவதரித்திருக்கிறேன்' என்றும், 'ஸாதாரணமான ராஜாக்களின் குமாரர்களுக்கு ஸமமானவனாகவும்' என்றும்சொல்லப்பட்டது. அன்றிக்கே இதுஎல்லாஅவதாரங்களையும் குறிக்க வேண்டியபதற்காக விஶேஷமான அவதாரத்தை உதாஹரணமாகச் சொல்லியிருப்பது மாத்திரமாகவுமாம். "அவ்யக்தம்,வ்யக்திமாபந்நம்" என்கிற இரண்டு பதங்களும் வெவ்வேறு அர்த்தங்களைச் சொல்லுகின்றன என்கிற ப்ரமத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்.—'ஸாதாரணமான' என்று ஆரம்பித்து. அல்பமான புத்தியையுடையவர்களால் அறியத் தகுந்ததாயிருக்கிறபடியினால் இவ்விடத்தில் நிந்திக்கப்படுகிற அர்த்தம இதுவாகத்தான் இருக்க வேண்டும், என்று தாத்பர்யம். இதற்கு முன் ப்ரகாசமாகாமலிருந்தநம் இப்பொழுது அவதாரத்தினால் பரகாசமாக இருத்தலும் ப்ரமாணங்களால் ஏற்பட்டது; ஆகையினால் அது எப்படி இங்கே நிராகரிக்கப்படுகிறது? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம். 'கர்மவசத்தினால் ஒருவித ஜன்மத்தையடைந்து' என்று சொல்லபபட்டது. 1 உத்ஸர்காபவாதந்யாயத்தை அனுஸரித்து இங்கே அர்த்தத்தைச் சுருக்கிச் சொல்லவேண்டும். என்று தாத்பர்யம் 'அவ்யயஃ' என்பதினால் பரமாத்மா அவனுடைய அவதாரம் முதலியவைகளைப் பற்றிக் கேழ்ப்பதும் அதை நினைப்பதும் இல்லை என்பதும், அவைகளின் மேன்மையைத் தெரிவிக்கக் கூடிய அடையாளங்களைப் பார்த்தாலும் அதை ஊஹித்தறியக் கூடிய பக்தி யில்லாமையும், சொல்லப்படுகிறது. ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்---'ஆகையினால்' என்றாரம்பித்து. ஆஶ்ரயிப்பதாவது இவ்விடத்தில் ப்ரபத்தியை முன்னிட்டு பக்தி செய்கிறது அதில்லாமையினால் அதற்கங்கமாகிய வர்ணாஶ்ரம தர்மங்களையும், ஸ்தோத்ரம் நமஸ்காரம் முதலியவைகளையும் செய்கிறதில்லை, என்று சொல்லுகிறார்—'கர்மங்களினால்' என்றாரம்பித்து. 24

---

1 முதல்வால்யூம் 9-வது பக்கம் புட்நோட் பார்க்கவும்.

பா] இவ்விதமாக ஏன் ப்ரகாசமாகிறதில்லை? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்.—

நாஹம் ப்ரகாஶ: ஸர்வஸ்ய யோகமாயாஸமாவ்ருத: |
மூடோऽயம் நாபிஜாநாதி லோகோ மாமஜமவ்யயம் || ௨௫

ப-ரை] யோகமாயாஸமாவ்ருத: (தேவன் மனுஷ்யன் என்று சொல்லப்படுகிற சரீரங்களைப் போன்ற அவயவங்களின் சேர்க்கையையுடைய தேகங்களின்) சேர்க்கையாகிய மாயையினால் மறைக்கப்பட்டிருக்கிற, அஹம் நான், ஸர்வஸ்ய எல்லா ஜனத்துக்கும், ந ப்ரகாஶ: ப்ரகாசமாவதில்லை, (ஆகையால்) மூட: தெரியாத, அயம் இந்த, லோக: ஜனம், மாம் என்னை, அஜம் பிறப்பில்லாதவனாகவும், அவ்யயம் அழிவில்லாதவனாகவும், நாபிஜாநாதி தெரிந்து கொள்ளுகிறதில்லை. 25

பா] ஜீவாத்மாக்களுக்கு அஸாதாரணங்களான மனுஷ்யனிருக்கை முதலிய அமைப்புடன் சேர்ந்திருக்கை என்று பேருடைய மாயையினால் மறைக்கப்பட்டிருக்கிற நான் எல்லோருக்கும் ப்ரகாசமாவதில்லை

தா] ஒருவராலும் தடுக்கப்படாத ஸங்கல்பத்தையுடைய நீர் ஸங்கல்பித்து எல்லோராலும் ஆச்ரயிக்கத்தகுந்தவனாகப் ப்ரகாசிக்கிறீரோயாகில் ஏன் அதற்கு ப்ரயோஜனம் உண்டாகவில்லையென்று ஆக்ஷேபிக்கிறான்—'இவ்விதமாக' என்றாரம்பித்து. இந்த ப்ரகரணத்தில் மாயா விசித்ரங்களான கார்யங்களை உண்டாக்குகிற வஸ்துவாய் சொல்லுகிறது, என்று முன்னமே நிரூபிக்கப்பட்டது. முன் குணங்களோடு கூடிய ப்ரக்ருதியினால் மறைக்கப்பட்டிருக்கையே வெளியில் பரந்த அவதாரதசை இவை இரண்டுக்கும் பொது. அவதாரதசைக்கு மாத்ரம் அஸாதாரணமான மறைவுக்குக் காரணம் சொல்லுவது உசிதம். ஸங்கல்பம் முதலியவையோ வெளியில் முன்போலவே இரண்டுக்கும் ஸாதாரணம்; யோக என்னும் பதமும் ஸம்பந்தம் என்னும் அர்த்தத்தில் ப்ரஸித்தமாக ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறபடியினால் அந்த யோக சப்தத்துக்கு அப்படி ஸம்பந்தமும் இந்த ப்ரகரணத்திலேற்பட்டது. அதாவது இவ்விடத்தில் உபமானமாயும் வேறு இடங்களில் பரவிந்த மாயையினாலும் மனுஷ்யன் முதலிய அமைப்பு, வேஷம், பாஷை முதலியவைகளே. இந்தாலேயே இந்த்ரஜாலமாகிய மாயை இல்லை என்பதும் ஏற்பட்டது. என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'மனுஷ்யனுயிருக்கை முதலிய' என்று. 'ப்ரகாசமாவதில்லை' என்பதுடன் பரமாத்மாவின் ஸ்வபாவத்துடன் என்று சேர்த்துக் கொள்ளவும். இப்படியாகில் இந்தக் குற்றம்

பா] என்னிடத்தில் மனுஷ்யனு யிருக்கை முதலிய அமைப்பைப் பார்த்த மாத்திரத்தினுலே மூடமான இந்தலோகமானது இந்த்ரன் வாயு இவர்களை விட மேலான கார்யத்தைச்செய்துக்கொண்டிருந்தாலும் ஸூர்யன் அக்னி இவர்களைவிட மேலான தேஜஸ்ஸையுடையவனுக யிருந்தாலும் பிறப் பில்லாதவனுகவும், அழிவில்லாவனுகவும், எல்லா லோகங்களுக்கும்

தா] உம்முடையது தான் என்கிற கேள்விக்கு பதில் சொல்லுகிருர்— 'மூடமான' என்ருரம்பித்து எல்லோராலும் அடையத்தகுந்தவனுவதற் காக ஆங்கீகரிக்கப்பட்ட மனுஷ்யாவதாரம் முதலியது கெட்டபுத்தியுடை யவர்களுக்கு விழுவதற்குக் காரணமாயிற்று. பரமாத்மாவின் ஸ்வபா வம் முழுமையும் மறைக்கப்படவுமில்லை, லோகத்தில் கண்டறியாத கார்யங்கள் தேஜஸ்ஸு முதலியவைகளை ப்ரகாசம் செய்துகொண் டிருக்கிறபடியினுல்; ஆனுல் மூடமான இந்த லோகமானது சிலபாகங் களில் மாமாயிருப்பதினுலே மேகங்களால் மறைக்கப்பட் டிருக்கிற ஸூர்யனை மினுமினும் ப்ரசி என்று ப்ரமிக்கிறது, என்கிற அபிப்ரா யத்தினுல் சொல்லுகிருர்-'என்னிடத்தில்' என்ருரம்பித்து. 'மூடமான' என்பதற்கு என்னிடத்தில் மனுஷ்யன் என்கிற ப்ரமத்தை யுடைய என்றர்த்தம். "மாம்" (என்னை) என்று அப்பொழுது காணப்படுகிற ஆகாரத்தைச் சொல்லி யிருப்பதின் சக்தியினுலும் வேறு இடங்களில் சொல்லப்பட் டிருக்கிறபடியினுலும் 'வாயு இந்த்ரன் இவர்களைவிட மேலான கார்யத்தைச் செய்துகொண் டிருந்தாலும்' என்றிவை முதலி யது சொல்லப்பட்டது. பரதசையிலிருக்கும் ஸ்வபாவத்தைத் தெரிந் து கொள்ளாமை எல்லோருக்குமே உள்ளதல்லவா; இவ்விடத்திலோ வெனில் 'பரம்பாவமஜாநந்தோ மமாவ்யயமநுத்தமம்' என்று மனுஷ்யனு யவதரித்திருக்கும் பொழுதே யிருக்கும் மேன்மையைத் தெரிந்து கொள்ளாமை சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் இல்லை என்று சொல் லப்படுகிற ஜ்ஞானம் உண்டாவதற்குக் காரணமான அடையாளங் களைச் சொல்லியிருக்கிறது. எல்லையில்லாத ப்ரகாசத்தையுடையவனு யிருக்கை ஜகத்துக்குக் காரணமாகிய பரமாத்மாவின் ஸ்வபாவமென்று வேதாந்தங்களில் நிஶ்சயிக்கப்பட் டிருக்கிறது. வாயு இந்த்ரன் இவர் களைவிட மேலான கார்யத்தைச்செய்துகொண்டிருத்தலும் எல்லாவற் றையும் நியமிக்கிறவனுயிருக்கைக்கு அடையாளம். 'அஜம்' என்பதினுல் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிருர்---'எல்லாலோகங்களுக்கும்

பா] ஒரேகாரணமாகவும், எல்லாவற்றிற்கும், ஈஶ்வரனாகவுமிருக்கிறநான் எல்லோராலும் ஆஶ்ரயிக்கத் தகுந்தவனாதற்காக மனுஷ்யனாயிருக்கை முதலிய அமைப்பை அடைந்திருக்கிறேன் என்று தெரிந்துகொள்ளுகிறதில்லை. 25

வேதா³ஹம் ஸமதீதாநி வர்தமாநாநி சார்ஜுந |
ப⁴விஷ்யாணி ச பூ⁴தாநி மாம் து வேத³ ந கஶ்சந || ௨௬

ப-தை] அர்ஜுந அர்ஜுனனே, அஹம் நான், ஸமதீதாநி முன்னிருந்தவைகளும், வர்தமாநாநி இப்பொழுதிருந்து கொண்டிருப்பவைகளும், ப⁴விஷ்யாணிச இனிவரப்போகிறவைகளுமான, பூ⁴தாநி ப்ராணிகளை, வேத³ அறிகிறேன், மாம் து என்னையோவெனில், கஶ்சந ஒருவனும், ந வேத³ அறியவில்லை. 26

பா] முன்னிருந்தவைகளும் இப்பொழுது இருப்பவைகளும் இனி உண்டாகப் போகிறவைகளுமான எல்லாப் பிராணிகளையும் நான் தெரிந்து கொள்ளுகிறேன், என்னையோ வெனில் ஒருவரும் தெரிந்து கொள்ளவில்லை, என்னால் அறியப்படுகிற மூன்று காலங்களிலுமிருக்கிற ப்ராணிக

தா] ஒரே காரணமாகவும்' என்று "ஸ்வயம்' என்றதினால் [?] அர்த்தத்தை சொல்லுகிறார் 'எல்லாவற்றிற்கு மீஶ்வரனாகவும்' என்று. அழிவில்லாதவனாயிருக்கையாவது ஸ்வரூபத்திலும் ஸ்வபாவத்திலும் மாறுதலில்லாதவனாயிருக்கையல்லவா, இதனால் [1]'அஜோபிஸந் அவ்யயாத்மா பூ⁴தாநாமீஶ்வரோபிஸந்' என்று முன்பு சொன்னது ஞாபகப்படுத்தப் பட்டதாகவுமாம். பிறப்பில்லாதவனாகவும், அழிவில்லாதவனாகவும் தெரிந்து கொள்ளுகிறதில்லை பின்னை எப்படி என்னில், மற்றப்புருஷர்களைப்போலவே கர்மத்துக்கு வசப்பட்ட பிறப்பையுடையவனாகவும், ஞானத்தின் சுருக்கம் முதலியவைகளையுடையவனாகவும் அறிகிறார்கள். என்று தாத்பர்யம். 25

தா] கீழ் ஸ்லோகம் 'நாபி⁴ஜாநாதி' (தெரிந்து கொள்ளுகிறதில்லை) என்று இவ்வளவு மாத்ரம் சொல்லியிருக்கிறபடியினால் இப்பொழுதிருப்பவர்களை மாத்ரம் சொல்லுகிறது என்று ஸந்தேஹப்படவேண்டாம் மூன்று காலங்களிலுமிருக்கிற ப்ராணிகளும் என்னைத் தெரிந்து கொள்ளுவதில்லை என்று இந்த ஸ்லோகத்தினால் சொல்லப் படுகிறது. இதில் 'ஸமதீதாநி' (முன்னிருந்த) என்று தனித்துச் சொல்லப்பட்டிருக்கிற படியினால் 'பூ⁴தாநி' என்பது ப்ராணிகளை மாத்திரம் சொல்லுகிறது. தான் எல்லாவற்றையும் தெரிந்து கொண்

1 பகவத்கீதை 4-6.

ளுக்குள், இப்படிப்பட்ட வென்னை எல்லோராலும் ஆஶ்ரயிக்கத் தகுந்த வனாவதற்காக வஸுதேவர் மகனாய் அவதாரம் செய்திருப்பவனாய்த் தெரிந்துகொண்டு என்னையே ஆஶ்ரயிக்கிறவன் ஒருவனும் கிடைக்க வில்லை ஆகையால் ஞானீ மிகவும் துர்லபன் தான் என்றர்த்தம். 26

அப்படியல்லவா

𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑍇𑌨 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍋𑌹𑍇𑌨 𑌭𑌾𑌰𑌤 ।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑌂𑌮𑍋𑌹𑌂 𑌸𑌰𑍍𑌗𑍇 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥ ௨௭

ப-ரை] 𑌪𑌰𑌂𑌤𑌪 சத்துருக்களைக் கொல்லும் ஸ்வபாவமுள்ள, 𑌭𑌾𑌰𑌤 பரதவம்ஶத்திற் பிறந்த அர்ஜுநா, 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 எல்லாப்ராணிகளும், 𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑍇𑌨—𑌇𑌚𑍍𑌛𑌾 ஆசை, 𑌦𑍍𑌵𑍇𑌷 விரோதம், (இவைகளினால்) 𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑍇𑌨 உண்டாகிய, (அதாவது) ஆசைக்கும் த்வேஷத்துக்கும் விஷயமாகத் தோன்றுகிற, 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍋𑌹𑍇𑌨—𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵 சீதோஷ்ணம் முதலிய இரட்டைகளாகிய, 𑌮𑍋𑌹𑍇𑌨 அஜ்ஞாநத்திற்குச் காரணமான வஸ்துவினால், 𑌸𑌰𑍍𑌗𑍇 ஸ்ருஷ்டி காலத்திலேயே 𑌸𑌂𑌮𑍋𑌹𑌂 அஜ்ஞானத்தை, 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 அடைகிறதுகள். 27

பா] ஆசை த்வேஷம் இவைகளினாலுண்டாகிற சீதோஷ்ணம் முதலிய "இரட்டை" என்கிற பெயரை உடைய அஜ்ஞானத்துக்குக் காரணமாகிய வஸ்துவினால் எல்லாப்ராணிகளும் உண்டாகிற பொழுதே அஜ்ஞானத்தை அடைகின்றன. இத்தால் சொல்லப்பட்டது யாதெனில் ஸத்வாதி

தா] டவன் என்பது இங்கே எதற்காகச் சொல்லப்படுகிறது,? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்; 'என்னால்' என்றாரம்பித்து. அந்தப்பகவானை அறிவதற்குபலம் அவனையே ஆஶ்ரயிப்பதுதான் என்று காட்டுவதற்காக 'என்னை ஆஶ்ரயிக்கிறவன்' என்று சொல்லப் பட்டது. முக்யமாக ப்ரஸ்தாவிக்கப்பட்ட அர்த்தத்தோடு சேர்க்கிறார் 'ஆகையினால்' என்றாரம்பித்து 26

இப்படி ஜ்ஞானி துர்லபன் என்பதற்காக மூன்று காலங்களிலுமிருக்கும் எல்லா ப்ராணிகளுக்கும் பொதுவான பகவானை அறியாமைக்குக் காரணம் இந்த ஶ்லோகத்தினால் சொல்லப்படுகிறது. என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்.—'அப்படி அல்லவா' என்று. பதங்களுக்கு அர்த்தத்தையும் அன்வயத்தையும்காட்டுகிறார்.-'ஆசைத்வேஷம்' என்று ஆரம்பித்து. உண்டாகும் காலத்திலேயே ஆசைத்வேஷமிவைகள், காரணமில்லாமையினால் உண்டாகாது அப்படிக்கு உண்டானால் ஏன் அவைகள் பகவானைப்பற்றி உண்டாகக்கூடாது, ஆசைத்வேஷமிவைகள் மாத்திரத்தினாலேயே சீதோஷ்ணங்கள் உண்டாகாதே? எனெனில்

குணங்கள் நிறைந்த ஸுக துக்கம் முதலிய இரட்டைகளில் பூர்வ பூர்வ ஜன்மங்களில் எந்த எந்த விஷயங்களைப்பற்றிய ஆசாத்வேஷங்கள் அடிக்கடி பரிசயம் செய்யப்பட்டதுகளோ அதின் வாஸனையினால் மறுபடி உண்டாகும் பொழுதே அந்த இரட்டையே ஆசைக்கும் த்வேஷத்துக்கும் விஷயமாக ப்ரகாசித்துக் கொண்டு எல்லாப்ராணிகளுக்கும் மயக்கத்திற்குக் காரணமாகிறது அந்த மயக்கத்தினால் எல்லா

தா] அவை குளிர்காலம் வெய்யிற்காலம் முதலிய த்வந்த்வங்கள் காரணத்தினால் உண்டாகக்கூடியவைகள் ஆகையினால், இந்த இரட்டை மோஹம் என்கிற பதத்திற்கு எப்படி அர்த்தமாகும் அப்படியானால் மோஹத்தினால் மோஹத்தை அடைகின்றன என்று பொருந்தாததாகிறபடியினால் ஆத்மாச்ரயம், என்கிற தோஷம் வருமோ? ஆசைத்வேஷங்களே "த்வந்த்வ" என்கிற பதத்தினால் சொல்லப்படுகிறது அவைகளிலுண்டாகும் மோஹம், த்வந்த்வமோஹம், என்னப்படுகிறது, என்றிவை முதலாக மற்றவர்கள் வ்யாக்யானம் செய்திருப்பதும் புனருக்தி முதலிய தோஷங்கள் வருகிறபடியினால் சரியல்ல. இத்தால் எனக்கு ஸுகமுண்டாகவேண்டும் துக்கம் உண்டாகக்கூடாது என்கிற உறுதியான ஆசைத்வந்த்வமோஹம், என்னப்படுகிறது, என்பதும் உசிதமல்ல, என்றிவைமுதலிய ஆக்ஷேபங்களைச் செய்து கொண்டு ஸமாதானம் சொல்லுகிறார்.—'இத்தால் சொல்லப்பட்டது யாதெனில்' என்று ஆரம்பித்து. பூர்வ ஜன்மத்திலுண்டான வாஸனை என்கிற காரணம் இருக்கிறது. வாஸனையும் தன்னுடைய காரணமானது எதைப்பற்றியதோ அதைப்பற்றியே இருக்குமாகையினால் ஆசைத்வேஷங்களுக்கு ஒன்றோடொன்று சேர்தல் எப்படி இவைகளைப்பற்றி உண்டாகட்டுமே என்கிற கேள்விக்குமிடமில்லை. இவ்விடத்திலுண்டாகும் ஆசைத்வேஷம் இவைகளுக்கு விஷயமாக ப்ரகாசித்தல் 'மோஹம்' என்னும் பதத்திற்கு மோஹத்திற்குக் காரணமான என்றர்த்தம். ஆனதினால் சீதோஷ்ணம் முதலிய இரட்டைகளில் மோஹம் என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. மோஹத்தின் காரணத்தினால் மோஹமுண்டாவதில் ஆத்மாச்ரயம் முதலிய தோஷங்களுமில்லை, என்று தாத்பர்யம். அனுபவிக்கத்தகாத வஸ்துவில் இது அனுபவிக்கத்தகுந்தது என்கிற புத்தியும், த்வேஷம் செய்யத்தகாத வஸ்துவில் இது த்வேஷம் செய்யத்தக்கது என்கிற புத்தியும் இவ்விடத்தில் மோஹம் என்னப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—

பா] ப்ராணிகளும் அஜ்ஞாநத்தை அடைகின்றன. அதாவது, அவைகளைப் பற்றிய ஆசைத்வேஷம் இவைகளை ஸ்வபாவமாக உடையவைகளா கின்றன. என்னோடு சேருதல் பிரிதல் இவைகளினால் ஸுக துக்கங்களை அடையும் ஸ்வபாவங்களை உடையவைகளாக ஆகிறதில்லை. ஜ்ஞானியோ வெனில் என்னோடு சேர்தல் பிரிதல் இவையொன்றினாலேயே ஸுக துக்கங்களை அடையும் ஸ்வபாவத்தை உடையவன். ஒரு ப்ராணியும் இப்படிப்பட்ட ஸ்வபாவமுள்ளதாக உண்டாகிறதில்லை என்பது 27

யேஷாம் த்வந்தகதம் பாபம் ஜநாநாம் புண்யகர்மணாம்।
தே த்வந்த்வமோஹநிர்முக்தா: பஜந்தே மாம் த்ருடவ்ரதா:॥ உ-அ

ப-ரை] புண்யகர்மணாம் புண்ய கர்மங்களை உடைய, யேஷாம் எந்த, ஜநாநாம் ஜனங்களுக்கு, பாபம் பாபமானது, அந்தகதம் முடிவையடைந்ததோ, தே அவர்கள் த்வந்த்வமோஹநிர்முக்தா: இரட்டைகளினாலுண்டாகும் மோஹத்திலிருந்து விடுபட்டவர்களாய், த்ருடவ்ரதா: உறுதியான ஸங்கல்பத்தை உடையவர்களாய், மாம் என்னையே பஜந்தே அடைகிறார்கள். 28

பா] எவர்களுக்கு அனேக ஜன்மங்களில் செய்யப்பட்ட சிறந்த புண்ணியங்களின் கூட்டத்தினால் குணமயங்களான இரட்டைகளில்

தா] அவைகளைப்பற்றிய' என்று ஆரம்பித்து 'இப்படிப்பட்ட மோஹத்தினால் ஆசை த்வேஷம் இவைகள் நேரில் உசிதமான விஷயத்தை விட்டு விடுகிறது, என்று காட்டுகிறார்—'என்னோடு சேர்தல்' என்று ஆரம்பித்து. உசிதமான விஷயத்தில் ஆசையும் த்வேஷமுமுடைய மிகவும் நல்லவனான ஞானியை இவர்களை விட வேறுபட்டவன் என்று காட்டுவதற்காக நிரூபிக்கிறார்—'ஞானியோவெனில்' என்று ஆரம்பித்து 1 "ஜ்ஞாநீ து பரமைகாந்தீ ததாயத்தாத்மஜீவந:| தத்ஸம்ஶ்லேஷவியோகைகஸுகது:கஸ் ததேகதீ: ||" என்று ஸங்க்ரஹத்தில் சொல்லியிருக்கிற இவனைவிட வேறுபட்டிருக்கையே எல்லாப் பிராணிகளுக்கும் பிறப்பிலேற்பட்டது, என்று காட்டுகிறார்— 'இப்படிப்பட்ட' என்று ஆரம்பித்து. 27

இப்படி எல்லா ப்ராணிகளும், அஜ்ஞானத்தை அடைகிறதேயானால் பகவானைப் பற்றிய உபாஸனம் ஒரு பொழுதும் ஒருவனுக்கும் உண்டாகாதாகையினால் "சதுர்விதா பஜந்தே மாம்" என்றிவை முதலாகக் கீழ்ச் சொன்னது பொருந்தாதே? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமா

---

1 *கீதார்த்த ஸங்க்ரஹம் 29 ஶ்லோகம்.*

பா]ஆசைக்கும் த்வேஷத்துக்கும் காரணமாயும் என்னிடத்தில் ப்ரீதிக்குத் தடங்கலாயும் அநாதிகாலமாக உண்டானதாயுமிருக்கிற பாபம் குறைவை அடைந்ததோ, அவர்கள் கீழ்ச் சொல்லிய புண்ணியங்களின் தாரதம்மியத்தினால் என்னையே சரணமாக அடைந்து, குணமயங்களான மோஹத்திலிருந்து விடுபட்டவர்களாய்க் கைவல்யத்திற்காகவும் சிறந்த

தா]னம் இந்த ஸ்லோகத்தில் சொல்லப்படுகிறது. ‘புண்யகர்மணாம்’ (புண்ணிய கர்மங்களை உடைய) என்பது பாபம் நிவ்ருத்தியாவதற்குக் காரணத்தைச் சொல்லுகிறது. ‘‘தர்மேண பாபமபநுததி’’[1] (தர்மத்தினால் பாபத்தைப் போக்குகிறான்)’’ என்று அந்த ஸ்ருதிவாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ‘‘ஜநாநாம்’’ (ஜனங்களுக்கு) என்கிற பதமும் புண்ணியமதிகமாவதற்குக் காரணமான அநேக ஜன்மங்களைக் காட்டுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் ‘அனேக ஜன்மங்களில் செய்யப்பட்ட சிறந்த புண்ணியங்களின் கூட்டத்தினால்’ என்று சொல்லப்பட்டது. பகவானை அறிவதற்குத் தடையான பாபங்களை நிவ்ருத்தி செய்வதினால் அவை சிறந்தவை என்பது சொல்லப்பட்டது. ‘குணமயங்களான’ என்னும் பதத்தினால் ஸுக துக்கங்களான பகவானுடன் சேர்தல் பிரிதலாகிய இரட்டை விலக்கப்பட்டது. ‘‘த்வந்த்வமோஹநிர்முக்தா: பஜந்தே’’ என்று இருவகையான பலன்களைச் சொல்லுகிறபடியினால் தடையான பாபத்தினுடைய, இரட்டைகளில் ஆசை த்வேஷங்கள் இவைகளுக்குக் காரணமானதென்றும், பகவானிடத்தில் ப்ரீதிக்குத் தடையானதென்றும் பேதம் காட்டப்பட்டது. அநேக ஜன்மங்களில் செய்யப்பட்ட சிறந்த புண்ணியங்களினால் நாசம் செய்யப்பட்டது என்று தெரிவிப்பதற்காக ‘அநாதிகாலமாக உண்டானதாயுமிருக்கிற’ என்று சொல்லப்பட்டது. உபாஸனம் செய்ய ஆரம்பிக்கும்பொழுதே பாபமும் ஸுக துக்கங்களாகிய இரட்டையும் முழுமையும் நாசமடைவதில்லையாதலினால் ‘‘அந்தகதம்’’ என்னும் பதத்தினால் கொஞ்சம் மிகுதியாக இருந்தது சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் ‘குறைவை அடைந்ததோ’ என்று சொல்லப்பட்டது. கீழ்ச் சொல்லிய ‘‘[illegible]’’ என்றிவை முதலியவையும் நினைத்துக்கொண்டு சொல்லப்போகிற ‘‘ஜராமரணமோக்ஷாய’’ என்றிவை முதலியவையும் நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்— ‘கீழ்ச் சொல்லிய’ என்று. இவ்விடத்தில் ஸுகதுக்கங்களாகிற மோஹத்திலிருந்து விடப்பட்ட

---

1 தைத்திரீயம் நாராயணம் 50 அநுவாகம்.

பா]ஐஶ்வர்யத்திற்காகவும், என்னை அடைவதற்காகவும் உறுதியான ஸங்கல்பத்தை உடையவர்களாய்க் கொண்டு, என்னைக் குறித்தே பக்தி செய்கிறார்கள். 28

பா] இவ்விடத்தில் பகவானைக் குறித்து பக்தி செய்கிற மூன்றுவித அதிகாரிகளுக்கும் அறியவேண்டிய விஶேஷங்களையும், செய்யவேண்டியவைகளையும் ப்ரஸ்தாவிக்கிறார்.

𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌮𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑌤𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇 ।
𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚𑌾𑌖𑌿𑌲𑌮𑍍 ॥ ௨௯

பா] 𑌯𑍇 எவர்கள், 𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 கிழத்தனம், மரணம், இவைகளை நீக்குவதற்காக, அதாவது கைவல்யத்திற்காக, 𑌮𑌾𑌂 என்னை, 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 அடைந்து, 𑌯𑌤𑌨𑍍𑌤𑌿 ப்ரயத்னம் செய்கிறார்களோ, 𑌤𑍇 அவர்கள், 𑌤𑌤𑍍 அந்த, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ப்ரஹ்மத்தை, 𑌵𑌿𑌦𑍁𑌃 அறிந்து கொள்ளுகிறார்கள், 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 எல்லா, 𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 அத்யாத்மத்தையும், 𑌵𑌿𑌦𑍁𑌃 தெரிந்து கொள்ளுகிறார்கள், 𑌅𑌖𑌿𑌲𑌂 எல்லா, 𑌕𑌰𑍍𑌮 கர்மத்தையும், 𑌵𑌿𑌦𑍁𑌃 தெரிந்து கொள்ளுகிறார்கள். 29

தா]வர்களாய் என்று சொல்லி இருக்கிறபடியினால் ஐஶ்வர்யத்தைவிரும்புகிறவர்களுக்கு ப்ரஸ்தாவமே இல்லை, என்று நினைக்கக்கூடாது. அவர்களுக்கும் மிகவும் அல்பமான இரட்டைகளின் நிவ்ருத்தி அவஶ்யம் வேண்டியதாகையினால் "𑌵𑍍𑌰𑌤" (விருதம்) என்னும் பதம் ஸங்கல்ப விஶேஷங்களில் அவஶ்யமாக உபயோகிக்கப்படுகிறது. அதின் ஸம்பந்தமிருக்கிறபடியினால் சில காரியங்களிலும் ப்ரயோகிக்கப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் "உறுதியான ஸங்கல்பத்தை உடையவர்களாய்" என்று சொல்லப்பட்டது. "𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤" (உறுதியான ஸங்கல்பத்தை உடையவர்) என்னும் பதத்தினால் ப்ரமாணங்களை அநுஸரித்து வேறு தேவதைகளைவிட்டு விஹிதமுதலிய நியமங்களும் சொல்லப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் 'என்னைக்குறித்தே பக்தி செய்கிறார்கள்' என்று சொல்லப்பட்டது. "𑌮𑌾𑌂 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇" (என்னைக் குறித்து பக்தி செய்கிறார்கள்) என்பதினாலேயே அந்த பக்திக்கு அங்கமாகிய வ்ருதம் முதலியவைகளும் ஏற்பட்டபடியினாலே 'என்னை அடைவதற்காகவும்' என்னும் மளவுமுள்ள வாக்யத்தினால் "𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌾𑌃" என்பது தங்களுக்கு இஷ்டங்களான பலங்களைப்பற்றியது, என்று வ்யாக்யானம் செய்யப்பட்டது. 28

பா] ப்ரக்ருதியை விட்டு நீங்கிய ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தைக் காண்பதற்காக என்னை ஆச்ரயித்து எவர்கள் யத்தினம் செய்கிறார்களோ, அவர்கள் அந்த ப்ரஹ்மத்தைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். அத்யாத்மத்தைமுழுமையும் தெரிந்து கொள்ளுகிறார்கள். கர்மத்தையும் தெரிந்து கொள்ளுகிறார்கள். 29

ஸாதிபூதாதிதைவம் மாம் ஸாதியஜ்ஞம் ச யே விது: |
ப்ரயாணகாலேऽபி ச மாம் தே விதுர்யுக்தசேதஸ: ||30

ஸ்ரீகண்ணபிரான் திருவடிசேர்ந்த

ஸ்ரீமத் பகவத்கீதையில் ஏழாம் அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ப-ரை] யே எந்த ஐச்வர்யார்த்திகள், ஸாதிபூதாதிதைவம் அதிபூதம் அதிதைவம் இவைகளோடுகூடிய, ஸாதியஜ்ஞம் ச அதியஜ்ஞத்தோடு கூடியவனுமு மிருக்கிற, மாம் என்னை, விது: தெரிந்து கொள்ளுகிறார்களோ, தே ச அந்த மூன்றுவிதமான அதிகாரிகளும், யுக்தசேதஸ: (ஸக்த:)என்னிடத்திலேயே வைக்கப்பட்ட மனதை உடையவர்களாய்க் கொண்டு, ப்ரயாணகாலேऽபி மரணகாலத்திலும், மாம் என்னை, விது: அறிகிறார்கள். 30

பா] இவ்விடத்தில் "யே" (எவர்கள்) என்று மறுபடியும் சொல்லி இருக்கிறபடியினால் முன் சொன்னவர்களைவிட வேறான அதிகாரிகள்

தா] பிறகு எட்டாவது அத்யாயத்தில் விஸ்தாரமாகச் சொல்லப் போகிற அர்த்தத்துக்கு ப்ரஸ்தாவம் இந்த இரண்டு ஸ்லோகங்களினால் செய்யப்படுகிறது, என்று சொல்லுகிறார்— இவ்விடத்தில், என்று ஆரம்பித்து. "ஜராமரணமோக்ஷாய" (கிழத்தனம் மரணம் இவைகளை விலக்குவதற்காக) என்றிவ்வளவு மாத்திரம் சொல்லி இருப்பதனால் 'ப்ரக்ருதியை விட்டு நீங்கிய ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தைக் காண்பதற்காக' என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் ப்ரயத்னமாவது ஆராதனம் தான் சொல்லப்பட்டது. இந்த "ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்நம்" முதலிய வழக்கும் கேள்வியை முன்னிட்டு விஸ்தாரம் மேலே வரப்போகிறது. இவ்விடத்தில் "விது:" (அறிகிறார்கள்) என்று ஸித்தமாகச் சொல்லி இருப்பது விதி (கட்டளை)யைக் காட்டுவதற்காக. 29

"ஸாதிபூத" என்னும் ஸ்லோகம் ஐச்வர்யார்த்திகளைப் பற்றிச்சொல்லுகிறது, என்று சொல்லுவதற்காக அதிகாரிகளின் பே

பா] ஏற்படுகிருர்கள். அதாவது ஐஶ்வர்யத்தை விரும்புகிற எவர்கள் அதிபூதத்தோடுகூடிய, அதிதைவத்தோடும்கூடிய என்னைத் தெரிந்துகொள்ளுகிருர்களோ, என்னுமிது அனுவாதம் செய்வதைப் போலிருந்தாலும் இதற்கு முன் சொல்லப்படாத அர்த்தத்தைக் சொல்வதினுல் விதிக்கிறதுதான். அப்படியே 'ஸாதியஜ்ஞம்', (அதியஜ்ஞத்தோடு கூடிய) என்பதும் வஸ்துவின் ஸ்வபாவத்தினுல் மூன்று அதிகாரிகளுக்கும் பொதுவாக விதிக்கப்படுகிறது. மூன்று அதிகாரிகளுக்கும் நித்யநைமித்திகங்க

தா] ளைக் காட்டக்கூடிய அடையாளத்தை முதலில் காட்டுகிருர்—'இவ்விடத்தில்' என்று ஆரம்பித்து. முன் சொன்ன அதிகாரியைப்பற்றிச் சொல்லுகிறதாக இருந்தால "ஸாதியஜ்ஞம்ச யே விது:" (அவர்கள் அதியஜ்ஞத்தோடு கூடிய என்னைத் தெரிந்து கொள்ளுகிருர்கள்) என்றல்லவோ சொல்லவேண்டும். அப்படி சொல்லப்படிக்க வில்லையே 'யே' (எவர்கள்) என்னும் பதத்தைத் திருப்பிச் சொன்னதற்கும் ப்ரயோஜனம் வேறொன்றுமில்லை, என்று தாத்பர்யம். கேள்விக்கு மேலே சொல்லப்போகிற பதிலினுலும் இந்த அதிகாரிகளின் பேதம் ஏற்படும். இப்படிப் பொதுவாய்த்தெரிந்து கொள்ளப்பட்ட அதிகாரிகளின் பேதத்தை அதிபூத முதலிய பதங்களின் ஸாமர்த்தியத்தினுல் விசேஷித்துச்சொல்லுகிருர். 'ஐஶ்வர்யத்தை விரும்புகிற' என்று 1 'ஜராமரணமோக்ஷாய' என்கிற இடத்திற்போல இவ்விடத்திலும் 'யே' என்னும் பதமிருக்கிறபடியினுல் அனுவாதம் என்று தோன்றுகிறது அதை நிராகரிக்கிருர்—'என்னுமிது' என்று ஆரம்பித்து. 2 அக்னி தேவதையைக் குறித்து எட்டுக் கபாலங்களில் எந்தப் புரோடாசத்தைச் செய்கிருர்களோ" என்கிற ஶ்ருதி வாக்யம்போல இதுவும், என்று தாத்பர்யம். இது விதி, என்பது மேலே கேட்கும் கேள்வி முதலியவைகளினுலும் ஏற்படப்போகிறது. தெரிந்து கொண்ட விஷயத்தில் கேள்விக்கு இடமில்லையல்லவா "ஸாதியஜ்ஞ" என்பது ஒரு அதிகாரியைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்த போதிலும் வஸ்துவின் ஸ்வபாவத்தினுலே மூன்று அதிகாரிகளிடத்திலும் அன்வயிக்கிறது, என்பதைக் காட்டுகிருர்—அப்படியே, என்று ஆரம்பித்து. வஸ்துவின் ஸ்வபாவத்தினுல், என்பதற்கு எல்லா அதிகாரிகளுக்கும் பொதுவாக ப்ரமாணங்களில் ஏற்பட்ட யஜ்ஞமென்று பெயரை உடைய வஸ்து

1 பகவத்கீதை - 29. 2 ஶதபத ப்ராம்மணம் 2,5,1,11 இந்த ஶ்ருதி வாக்யத்தில் "யத்" (எந்த) என்கிறபத மிருந்தபோதிலும் விதியாக மீமாம்ஸகர்களினுல் ஒப்புக்கொள்ளப்பட்டது அப்படியே இதுவும்

பா]ளாகிய மஹாயஞ்ஜம் முதலியவைகளை அனுஷ்டிப்பது [illegible] அல்லவா. அவர்களும் மரணகாலத்தில் தங்கள் [illegible] ப்ரயோஜனத்துக்குத் தக்கபடி என்னைத் தெரிந்து [illegible] ([illegible] களும்) என்பதினால் முன்பு சொல்லிய கைவல்யத்துக்காக [illegible] செய்பவர்களும் மரணகாலத்தில் தெரிந்து கொள் [illegible] சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இத்தால் வஸ்துவின் ஸ்வபாவத்தினால் ஜ்ஞானிகளும் அதியஜ்ஞத்தோடு கூடின என்னைத் தெரிந்து [illegible] கள். மரணகாலத்திலும் தங்களுடைய [illegible] ப்ரயோஜனத்

தா]வின் ஸ்வபாவத்தினால், என்று [illegible] — மூன்றுஅதிகாரிகளுக்கும், என்று [illegible]
1 [illegible] என்று சொல்லி [illegible] பற்றவனாக வேண்டிய [illegible] என்று [illegible] — விடத்தகாததல்லவா, என்று "[illegible]" [illegible] தின் [illegible] [illegible] யினாலும், தனித்தனி [illegible] யோஜனம் இருப்பதினாலும், [illegible] னாலும் பிரித்துச் சொல்லுகிறார் அவர்களும், என்று [illegible] லுண்டாகும் ஞானத்திற்கு [illegible] யான விஷயங்களினால் [illegible] குத் தகுந்த ஆகாரத்தை [illegible] "[illegible]" என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது. [illegible] தங்கள் தங்களால் அடையத் தகுந்த ப்ரயோஜனத்துக்குத் தக்கபடி, [illegible] "[illegible]" காரத்திற்குப் பிரிந்து [illegible] தைச் சொல்லுகிறார். 'அவர்களும் என்பதினால்,' [illegible] "மெ" என்று சொல்லப்பட்ட [illegible] "[illegible]" [illegible] பதினால் இங்கு [illegible] முன் ஸ்லோகத்தில் சொல்லப்பட்ட [illegible] கள். அவர்களுக்கும் மரணகாலத்திலுண்டாகும் ஞானத்தின் [illegible] மேலே சொல்லப்படப்போகிறது, என்று [illegible] அதி

---

1 தக்ஷஸ்ம்ருதி 2,22, ஸந்த்யாஹீநஃ சந்தியாவந்தனமில்லாதவன், [illegible] எப்பொழுதும், அசுசி:-அசுத்தன், ஸர்வகர்மஸு- [illegible] ஹஃ—யோக்யதை இல்லாதவன்.

துக்குத்தக்கபடி என்னைத்தெரிந்து கொள்ளுகிறார்கள், என்று சொல்லப் பட்டதாகிறது. 30

ஸ்ரீபகவத்ராமாநுஜ முனி யென்னும் பாஷ்யகாரர் அருளிச்செய்த
ஸ்ரீமத் கீதா பாஷ்யத்தில் ஏழாவது அத்யாயம்
முற்றிற்று.

ஸ்ரீ உடைய ராமாநுஜாய நம:

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

காரிகளுக்கும் என்று சொன்னது யுக்தமல்ல, ஞானிகளுக்கு இவ்விடத்தில் ப்ரஸ்தாவமே இல்லாமையினால், என்கிற ஆக்ஷேபத்துக்கு ஸமாதானம் சொல்லுகிறார்---'இத்தால்' என்று. 'யஜ்ஞ°' மரணகாலத்திலுண்டாகும் ஞாபகம், இவைகள் மாத்ரம மூன்றுவித அதிகாரிகளுக்கும் பொது, என்பது விளக்கமாக இருக்கிறபடியினால் என்று தாத்பர்யம். (30)

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த
தாத்பர்ய சந்த்ரிகையில் ஏழாவது அத்யாயம்
முற்றிற்று.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த கீதார்த்த ஸங்க்ரஹஶ்லோகங்கள்.

ஏழாவது அத்யாயத்தின் ஸங்க்ரஹம்.

ஸ்வயாதாத்ம்யம் ப்ரக்ருத்யாஸ்ய திரோதி: ஶரணாகதி: |
பக்தபேத: ப்ரபுத்தஸ்ய ஶ்ரைஷ்ட்யம் ஸப்தம உச்யதே || ௧௧

ப-ரை] ஸ்வயாதாத்ம்யம் தன்னுடைய உண்மையும், ப்ரக்ருத்யா ப்ரக்ருதியினால், அஸ்ய இதற்கு திரோதி: மறைவும், (அதை நிவ்ருத்தித்துக்கொள்வதற்காக), ஶரணாகதி: பகவானையே ஶரணமாகப்பற்றுதலும், பக்தபேத: பக்தர்களின் பிரிவும், ப்ரபுத்தஸ்ய ஞானியின் ஶ்ரைஷ்ட்யம் மேன்மையும், ஸப்தமே ஏழாவது அத்யாயத்தில், உச்யதே சொல்லப்படுகிறது. ||

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

ஸ்ரீ கீதார்த்தஸங்க்ரஹரக்ஷை.

இவ்விடத்தில், பாஷ்யத்தில், 'ஏழாவது அத்யாயத்தில், பரமபதமாகிய பரமபுருஷனுடைய ஸ்வரூபத்தின் உண்மையும், ப்ரக்ருதியினால் அதற்கு மறைவும், அது நிவ்ருத்திப்பதற்காக பகவானிடத்தில் ப்ரபத்தி செய்யவேண்டியது என்பதும், உபாஸனம் செய்பவர்களுடைய ப்ரக்ருதிகளின் வ்யவஸாயங்களும் ஞானியின் மேன்மையும், சொல்லப்படுகிறது,' என்று சொல்லி இருக்கிறது. இவ்விடத்தில் ப்ரக்ருத்யா என்னும் பதத்தினால் 'தைவீஹ்யேஷா குணமயீ' என்கிற இடத்திலுள்ள "மாயா" என்னும் பதம் வ்யாக்யானம் செய்யப்பட்டது. 'குணமயீ' என்று விஶேஷணம் சொல்லி இருப்பதினால் இந்தப் பிரக்ருதியே சொல்லப்படுகிறது. என்று ஏற்படுகிறதல்லவா, ஶ்ருதியிலும் 1 "மாயையை உடையவன் இந்த மாயையிலிருந்து இந்த

---

1 - -ஶ்வேதாஶ்வதரோபநிஷத் - 4 - 9, 10.

ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கிறான், இந்த ப்ரபஞ்சத்தில் மற்றொருவன் மாயையினால் நடுக்கப்பட்டிருக்கிறான்" என்று ப்ரஸ்தாவிக்கப்பட்ட மாயை, அதை உடையவன், இவர்களைப்பற்றி, 2 'மாயையை ப்ரக்ருதி என்று அறியவேண்டும், மாயையை உடையவனை மஹேஶ்வரன் என்று அறியவேண்டும்" என்கிற வாக்யத்தில் தானே விவரித்திருப்பதினாலும், ஆகையினால் விசித்திரங்களான ஸ்ருஷ்டிக்கு ஒத்தாசைக் கருவியான வஸ்துவாகையினால் இங்கு ப்ரக்ருதியிலேயே மாயை, என்னும் பதம் ப்ரயோகித்திருக்கிறது, என்று தாத்பர்யம். எட்டாவது அத்யாயத்தின் ஆரம்பத்தில் ஸங்கதி சொல்லுமிடத்திலும் இந்த ஶ்லோகத்தின் அர்த்தம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, 'ஏழாவது அத்யாயத்தில் பரப்ரஹ்மமாகிய வாஸுதேவனே உபாஸிக்கத்தகுந்தவன் என்பதையும், சேதனசேதனங்களாகிய எல்லா வஸ்துக்களுக்கும் ஶேஷி என்பதையும், காரணம் என்பதையும், ஆதாரம் என்பதையும், எல்லா வஸ்துக்களையும் தனக்கு ஶரீரமாக உடையவனாதலாலும் எல்லா வஸ்துக்களையும் தனக்கு விஶேஷணமாக உடையவனாதலாலும் எல்லா பதங்களினாலும் சொல்லத்தகுந்தவன் என்பதையும், எல்லாவற்றையும் நியமிக்கிறவன் என்பதையும், எல்லாக் கல்யாண குணங்களினாலும் அவனே மேலானவன் என்பதையும், ஸத்வம் ரஜஸ் தமஸ் இவைகள் நிறைந்தவைகளாயும், தேஹம் இந்த்ரியம் அனுபவிக்கத் தக்க வஸ்து இவைகளாகப்பிருந்திருப்பவைகளாகவும் அனாதிகாலமாக உண்டான பாபங்களின் பெருக்கைக் காரணமாக உடையவைகளாகவும் இருக்கிற வஸ்துக்களினால் இதற்கு மறைவையும், மிகவும் சிறந்த புண்ணியங்களைக்காரணமாகஉடையபகவானை ஶரணமாக அடைவதினால் அதின் நிவ்ருத்தியையும், புண்ணியங்களின் வ்யத்யாஸத்தினாலுண்டான புத்தியின் வ்யத்யாஸத்தினால் ஐஶ்வர்யம் கைவல்யம் பகவானை அடைதல், இவைகளை ஆசைப்படுவதினால் உபாஸகர்களின் பேதத்தையும், பகவானை அடைய வேண்டும் என்று ஆசையை உடையவன் எப்பொழுதும் பகவானுடன் சேர்ந்திருப்பதினாலும் ஒரே இடத்தில் பக்தி உள்ளவனாதலாலும் மிகவும் பகவானுக்கு ப்ரியமானவன் ஆதலாலும், சிறந்தவன் என்பதையும், துர்லபன் என்பதையும், நிரூபித்து இந்த மூன்று அதிகாரிகளுக்கும் அறிய வேண்டியவைகளுடையவும், அனுஷ்டிக்க வேண்டியவைகளுடையவும் பேதங்களையும் ப்ரஸ்தாவித்தார், என்று.

ஸ்ரீ மங்கிகமாந்த மஹாதேஶிகன் அருளிச் செய்த
ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷை ஏழாவது அத்யாயம்
சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீ மந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

கீதார்த்த ஸங்க்ரஹம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

தானின்ற வுண்மையைத் தன்றனி மாயை மறைத்தமையும்
தானன்றி மாயை தனைத்தவிர்ப் பான்விர கற்றமையும்
மேனின்ற பத்தர்க ணால்வரில் ஞானிதன் மேன்மைகளும்
தேனின்ற செங்கழ லான்றெளி வித்தனன் பார்த்தனுக்கே.

ப-ரை] தேன் - மது, நின்ற - தேங்கி நின்ற, செம் - சிவந்த, கழலான் திருவடிகளை உடைய ஸ்ரீ கண்ணபிரான், தான் - தான், நின்ற - அவதாரஞ்செய்து நின்ற, உண்மையை - ஸத்யமான ஸ்வபாவத்தை, தன் - தன்னுடைய, தனி - ஒப்பற்ற, மாயை - ப்ரக்ருதியானது, மறைத்தமையும் - மறைத்துக் கொண்டிருப்பதையும், மாயைதனை - இப்ரக்ருதியை, தவிர்ப்பான் - போக்குவதற்கு, தானன்றி - தானில்லாமல், விரகு வேறு உபாயம், அற்றமையும் - இல்லாமையையும், மேல்நின்ற - மேலாகிநின்ற பத்தர்கள் நால்வரில் - நான்குவித பக்தர்களுக்குள், ஞானிதன்–ஜ்ஞானியினுடைய, மேன்மைகளும்-மேன்மைகளையும், பார்த்தனுக்கு அர்ஜுனனுக்கு, தெளிவித்தனன் - அறியும்படிச் சொன்னான், ஏ அசை.

வ்யாக்யானம்.

‘ஸ்வயாதாத்ம்யம் ப்ரக்ருத்யாஸ்ய திரோதிஶ்ஶரணாகதி: ।
பக்தபேத: ப்ரபுத்தஸ்ய ஶ்ரைஷ்ட்யம் ஸப்தம உச்யதே’ ॥

என்கிற ஏழாவது அத்யாயத்தின் ஸங்க்ரஹ ஶ்லோகத்தின் அர்த்தத்தை அருளிச்செய்கிறார். இவ்விடத்தில் ‘தேனின்றசெங்கழலான்’ என்பதினால் பகவானுடைய திருவடிகளைத் தாமரைபுஷ்பமாக நிரூபித்து அதின் காந்தியைத் தேனாகநிரூபித்திருக்கிறதாகவுமாம். அன்றிக்கே போக்யதை விஞ்சி இருக்கும் திருவடிகள் என்று தாத்பர்யார்த்தமாகவுமாம். அதுவுமன்றிக்கே “ப்ரணதஸுரகிரீடப்ராந்தமந்தாரமாலாவிகலிதமகரந்தஸ்நிக்தபாதாரவிந்த:” என்று தாமருளிச் செய்தபடியே, ‘வாழ்த்தியவாயராய் வானோர்மணி மகுடம் தாழ்த்தி வணங்கும் பொழுது அவர்கள் மகுடங்களில் சூட்டிய மாலைகளிலிருந்து பெருகும் தேன்களினால் எப்பொழுதும் நனைந்திருக்கும் திருவடிகளை உடையவன் என்றாகவுமாம். அதுவுமன்றிக்கே, அல்லாத தாமரை பூக்களைப்போல சிலகாலம் கழிந்தவாறே செவ்விமாறுதலன்றிக்கே எப்பொழுதும் செவ்வி பெற்றிருக்கிறது. என்று திருவடிகளுக்கு

வைலக்ஷண்யம் சொன்னதாகவுமாம். 'தானின்றஉண்மையை' எல்லாரும் வந்து தன்னை ஆஶ்ரயிப்பதற்காக வஸுதேவ க்ருஹத்தில் அவதீர்ணனாய் நிற்கிற உண்மையை, அன்றிக்கே 'தான் நின்ற' தானாகவே வெறொரு ஹேதுக்களினாலன்றிக்கே, ஸ்வபாவஸித்தமாக நின்ற,'உண்மையை' பரத்வம்முதலிய உண்மையான ஸ்வபாவத்தை, அன்றிக்கே 'தான் ப்ரகாசமாகிநிற்கிற' 'அதிவாயுஹ்ருதி தேஜஸம்' என்றருளிச் செய்யப்பட்ட ஸ்வபாவத்தை, 'தன்தனிமாயை' 'தைவீ' என்று சொல்லப்பட்ட பகவானுக்கு சேஷபூதமாயும் இப்படிக்கு விசித்திரங்களான காரியம்செய்வதில் தனக்கு ஒப்பில்லாததுமான, 'துரத்யயா' என்று சொல்லப்பட்ட ப்ரக்ருதி, என்னவுமாம். அன்றிக்கே 'தன்'அந்த மனுஷ்யர்களுக்குத் தங்கள் தங்கள் கர்மானுகுணமாக ஏற்பட்ட 'தனி' அவனவன் கர்மானுகுணமாகத் தனித்தனியான ஸத்வரஜஸ் தமோகுணங்களை உடைய ப்ரக்ருதி என்றாகவுமாம். இத்தால் 'ஸஹோஷாத்ரும் த்ருஷ்ட்வாஸத்ருஶமேவ' என்பதின் அர்த்தம் விவரிக்கப்பட்டது. 'தான் அன்றி மாயைதன்னைத் தவிர்ப்பான் விரகற்றமையும்' என்பதினால் தன்னைத் தவிர வேறொரு உபாயமில்லாமை ஏற்படுகிறதினால் தானே உபாயம் என்றேற்படுகிற படியினாலே அப்படிக்குப் பகவானே உபாயமாவதற்குக்காரணமாகிய ஶரணாகதிஅர்த்தாத் ஸித்திக்கிறதாகவுமாம். அன்றிக்கே ஆகிஞ்சன்யானன்ய கதித்வங்கள் சொல்லப்படுகிறபடியினால் இபபடிப்பட்ட அதிகாரிக்குக் கர்த்தவ்யமான ஶரணாகதியும் ஏற்பட்டதாகவுமாம். ஆக இத்தால் 'ஶரணாமதி:' என்பதின் அர்த்தமும் சொல்லப்பட்ட தாகவுமாம் 'மேல்நின்ற' இத்யாதி. "யோகி நாஞ்சைவ ஸர்வேஷாம்" இத்யாதிகளினால் எல்லா யோகிகளையும் விட மேற்பட்டவனாகச் சொல்லப்பட்டானையும்,ஆர்த்தன் ஜிஜ்ஞாஸு அர்த்தார்த்தி, ஜ்ஞானி, என்று சொல்லப்பட்ட நான்கு வித பக்தர்களுக்குள் 'தேஷாம்ஜ்ஞானீ' என்று எடுத்துச் சொல்லப்பட்ட, ஜ்ஞானியின் பெருமையையும், இந்த அத்யாயத்தில் அர்ஜுனனுக்கு நன்றாக உரைத்தான் என்று தாத்பர்யம்.

ஸ்ரீ. உ. சேட்லூர் வித்வான் நரஸிம்மாசாரியார் செய்த கீதார்த்த ஸங்க்ரஹ வ்யாக்யானத்தில் 8-வது பாட்டு வ்யாக்யானம் முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஏழாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீ:

ஸ்ரீமத் பகவத்கீதை.

ஶ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

எட்டாவது அத்யாயம்,

அவதாரிகை.

பா-அ] ஏழாவது அத்யாயத்தில் பரப்ரஹ்மமாகிய வாஸுதேவனே உபாஸிக்கத் தகுந்தவன், என்பதையும், சேதனுசதனங்களாகிய எல்லா

தா] ஸங்கதியைக் காட்டுவதற்காகச் சொல்லுகிறார். 'ஏழாவது அத்யாயத்தில் என்று ஆரம்பித்து. பரப்ரஹ்மமாகிய வாஸுதேவனே உபாஸிக்கத் தகுந்தவன்' என்பது 1 "மய்யாஸக்தமநா:" என்றிவை முதலிய ஶ்லோகங்களின் அர்த்தம். அவ்விடத்திலன்றோ உபாஸனம் ப்ரஸ்தாவிக்கப்படுகிறது. அதற்கு அங்கமாக மற்றதெல்லாம் இந்த அத்யாயத்தில் சொல்லப்படுகிறது. 2 " அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத:, 3 வாஸுதேவஸ்ஸர்வம், 4 சதுர்விதா பஜந்தே மாம்" என்றிவை முதலிய ஶ்லோகங்களினல் மேலும் இதற்கே விவரணம் செய்யப்படுகிறது, என்று தாத்பர்யம். 'பரப்ரஹ்மமாகிய' என்பவை முதலிய பதங்களினல், அவித்யை முதலியவையோடு சேர்ந்த ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்றும், த்ரிமூர்த்திகளைவிட மேலான வஸ்துவே ஜகத்காரணம் என்றும் சொல்லும் பக்ஷங்கள் நிராகரிக்கப்பட்டன. 'ப்ரஹ்ம' என்னும் பதம் இவ்விடத்தில் ஒரு விஶேஷமான தேவதையைக் குறிக்கும் பதத்தோடு சேர்ந்திருப்பதினல் இதர தேவதைகளே மேலானவர்கள் என்பது நிராகரிக்கப்பட்டது. 'வாஸுதேவ' என்னும் பதத்தினல் இப்பொழுது இவ்விடத்திலிருக்கும் அவதார விஶேஷம சொல்லப்படுகிறது. 'சேதனு சேதனங்களாகிய' என்றிவை முதலிய விஶேஷணங்களினல் உபாஸிக்கத்தக்கவனுக இருப்பதற்கும், பரப்ரஹ்மமாக இருப்பதற்கும், உபயோகமான ஆகாரங்களைச்சொல்லி இருக்கிறது. 'சேதனு

1 பகவத்கீதை, 7, 9.

2 பகவத்கைீத, 7, 6.

3 பகவத்கீதை, 7, 19.

4 பகவத்கீதை, 7, 16.

வஸ்துக்களுக்கும் ஶேஷி என்பதையும், காரணம் என்பதையும், ஆதாரம் என்பதையும், எல்லா வஸ்துக்களையும் தனக்கு ஶரீரமாக உடையவனு தலும், எல்லா வஸ்துக்களையும் தனக்கு விஶேஷணமாக உடையவ னுதலாலும், எல்லாப் பதங்களினாலும் சொல்லத் தகுந்தவன் என்பதை யும், எல்லாவற்றையும் நியமிக்கிறவன் என்பதையும், எல்லாக் கல்யாண குணங்களினாலும் அவனே மேலானவன் என்பதையும், ஸத்வரஜஸ்த

சேதனங்களாகிய எல்லா வஸ்துக்களுக்கும் ஶேஷி என்பதையும்' என்பது [1] "[illegible]" என்பது முதலான இரண்டு ஶ்லோகங்களின் அர்த்தம். 'எல்லா' என்னும் பதத்தினால், காரியமாயும் காரணமாயும் இருக்கிற அவஸ்தைகளைச் சொல்லி இருப்பதினால், காரியங்களான ப்ரஹ்மா ருத்ரன் இவர்களையும்சேர்த்திருக்கிறது. 'காரணம்' என்பது, [2] "[illegible]" என்கிற ஶ்லோகத்தின் அர்த்தம். [3] "மத்த: பரதரம் நாந்யத்" என்கிற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஶேஷித்வம் [4] "[illegible]" என்கிற இடத்தில் உபயோகமுள்ளதானதினால் அவ்விடத்திலேயே சொல்லுவதற்காக இவ்விடத்தில் அதை விட்டு [5] "[illegible]" என்கிற இடத்தில் சொல்லப்பட்ட ஆதாரமாக இருக்கை சொல்லப்பட்டது. [6] "ரஸோஹம்" என்றிவை முதலான இடங்களில் சேர்த்துச் சொல்லி இருப்பதினால் ஏற்பட்டது, எல்லாப் பதங்களினாலும் சொல்லத் தகுந்தவன் என்பது. அதற்குக் காரணம் ஆதாரமாக இருக்கை முதலியவைகளினாலேற்பட்ட எல்லா வஸ்துக்களையும் தனக்கு ஶரீரமாக உடையவனாக இருக்கை. இப்படி எல்லா வஸ்துக்களுக்கும் ஶேஷியாக இருக்கை முதலியவைகளை அறிவதும் செய்தலினால் அந்தந்த அதிகாரிகளினால் அடையத்தகுந்த வஸ்துக்களோடு சேர்த்துச் சொல்லி இருப்பதற்கும் அவைகள் ஶரீரமாகவும் பகவான் அவைகளுக்கு ஆத்மாவாக இருக்கையுமே காரணம், என்பது காட்டப் பட்டது. [7] "[illegible]" என்றிவை முதலிய இடங்களில் அவைகளின்ப்ரவ்ருத்திகளும் பகவானுக்கு அதீனப்பட்டவைகளென்று சொல்லப்படுகிறபடியினால், பகவான் எல்லாவற்றையும் நியமிக்கிறான், என்பதும் ஏற்பட்டது. எல்லா, என்பதினால் இங்கே சொல்லப்படாதவைகளாய் அபிப்ராயத்திலிருக்கும் மற்றக் கல்யாணகுணங்களும்சேர்க்கப்பட்டன. அவனே, என்கிற. ஏ வுதியினால் [8] "நாந்யத் கிஞ்சிதஸ்தி" என்பதின் அர்த்தம் சொல்லப்பட்டது. [9] "த்ரிபிர்குணமயைர்பாவை:" என்பது முதல் மூன்றரை ஶ்லோகத்தினுடைய அர்த்தம், ஸ்த்வரஜஸ்

---

1 பகவத்கீதை, 7, 4. 2 பகவத்கீதை, 7, 6 3 பகவத்கீதை, 7, 7.
4 பகவத்கீதை, 7, 13. 5 பகவத்கீதை, 7, 7. 6 பகவத்கீதை, 7, 8.
7 பகவத்கீதை, 7, 12. 8 பகவத்கீதை, 7, 7. 9 பகவத்கீதை, 7, 13.

மோ குணங்கள் நிறைந்தவைகளாயும் ; தேஹம் இந்த்ரியம், அனுபவிக்கத்தக்க வஸ்துக்கள், இவைகளாகப் பிரிந்து இருப்பவைகளாயும் அனுதிகாலமாக உண்டான பாபங்களின் பெருக்கைக் காரணமாக உடையவைகளாகவும் இருக்கிற வஸ்துக்களினல் இதற்கு மறைவையும், மிகவும் சிறந்த புண்ணியங்களைக் காரணமாக உடைய பகவானையே ஶரணமாக அடைவதினல் அதற்கு நிவ்ருத்தியையும், புண்ணியங்களின் வ்யத்யாஸத்தினலுண்டான புத்தியின் வ்யத்யாஸத்தினல் ஐஶ்வர்யம் கைவல்யம் பகவானை அடைதல் இவைகளை ஆசைப்படுவேதினல் உபாஸகர்களின் பேதத்தையும், பகவானை அடையவேண்டும் என்று ஆசையை உடையவன் எப்பொழுதும் பகவானுடன் சேர்ந்திருப்பதினலும் ஒரே இடத்தில் பக்தியுள்ளவனுதலாலும், மிகவும் பகவானுக்கு ப்ரியமானவனுதலாலும் சிறந்தவன் என்பதையும், துர்லபன் என்பதையும், நிரூபித்து, இந்த மூன்று அதிகாரிகளுக்கும் அறியவேண்டியவைகளுடைய

தமோ குணங்கள், *என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்டது.* 1 ‘சாஶ்வ’ *என்கிற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ப்ரபத்தி மிகுந்த புண்ணியத்தினல் உண்டாகிறது, என்பது* 2 “ஜநாஸுக்ருதிநః” *என்கிற பதத்தினல் காட்டப்பட்டது, அதையே சொல்லுகிருர்.*—மிகவும் சிறந்த, *என்று ஆரம்பித்து* 3 “ நசாஜ்ஷுக்ருதிநః” *என்றிவை முதலானது முன்பு சொல்லப்பட்ட மறைவின் விஶேஷங்களைச் சொல்லி இருக்கிற படியினலும் புண்ணியஶாலிகளை ஸ்தோத்திரம் பண்ணினதற்கு அங்கமாக இருக்கிறபடியினலும், அதின் அர்த்தம் இவ்விடத்தில் தனித்துச் சொல்லப்படவில்லை* 4 “வதவிஷயாஃ” *என்றிவை முதலியது* புண்ணியங்களின் வ்யத்யாஸத்தினல், *என்று ஆரம்பித்திருக்கும் வாக்யத்தினல் நினைக்கப்பட்டது. அதற்கு,* ‘உபாஸனம் செய்கிறவர்களின் பேதத்தையும்’*என்பதோடு அன்வயம் சொல்லிக்கொள்ளவேண்டியது.* 5 “தேஷாம்ஜ்ஞாநீ” *என்பது முதலாக இரண்டு ஶ்லோகங்களின் அர்த்தம்* ‘பகவானை’ *என்று ஆரம்பித்துச்சொல்லப்பட்டது.* ‘பஹூநாம் ஜந்மநாம்’ *என்று ஆரம்பித்து* ஸமேதுயாத்மா ஸுதுர்லப’ *என்கிறவரையில் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிருர்.*—‘துர்லபன் என்பதையும்’ *என்று.* ‘யேஷாம்’ *என்று ஆரம்பித்து அத்யாயத்தின் மிகுதியான பாகத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிருர்.*— ‘இந்த மூன்று அதிகாரிகளுக்கும்’.*என்று.*‘அறியவேண்டிய’*தாவது ஏற்க*

1 *பகவத்கீதை*, 7,14. 2 *பகவத்கீதை*, 7,16. 3 *பகவத்கீதை*, 7, 15.
4 *பகவத்கீதை*, 7,16. 5 *பகவத்கீதை*, 7, 17.

வும், அநுஷ்டிக்கவேண்டியவைகளுடையவும், பேதங்களையும் ப்ரஸ்தாவித்தார். இப்பொழுது எட்டாவது அத்யாயத்தில் கீழ்ப்ரஸ்தாவிக்கப்பட்ட அறியவேண்டியவைகளுடையவும் அநுஷ்டிக்கவேண்டியவைகளுடையவும் பேதங்களைப் பிரித்துக்காட்டுகிறார்.—

அர்ஜுந உவாச - அர்ஜுனன் சொல்லுகிறான்.

கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம ।
அதிபூதம் ச கிம் ப்ரோக்தமதிதைவம் கிமுச்யதே ॥ (க)
அதியஜ்ஞ: கதம் கோऽத்ர தேஹேऽஸ்மிந் மதுஸூதந ।
ப்ரயாணகாலே ச கதம் ஜ்ஞேயோऽஸி நியதாத்மபி: ॥ (உ)

ப-ரை] புருஷோத்தம புருஷர்களுக்குள் ஶ்ரேஷ்டரான, மதுஸூதந கிருஷ்ணனே, தத் அந்த ப்ரஹ்ம ப்ரஹ்மமானது, கிம் எது, அத்யாத்மம் அத்யாத்மமானது, கிம் எது, கர்ம கர்மமானது, கிம் எது, அதிபூதம் அதிபூதம் என்று, கிம் எது, ப்ரோக்தம் சொல்லப்பட்டது அதிதைவம் அதிதைவம் என்று கிம் எது, உச்யதே சொல்லப்படுகிறது, அத்ர இவ்விதமான அஸ்மிந் இந்த தேஹே ஶரீரத்திலே (அதாவதுஶரீரமாகிய இந்த்ரன் முதலிய தேவதைகளிடத்தில், அதியஜ்ஞ: அதியஜ்ஞமானது, க: எது, கதம் அதற்கு அதியஜ்ஞ மென்கிற பதத்திற்கு அர்த்தமாக இருக்கை எப்படி, நியதாத்மபி:—நியதவஶப்படுத்தப்பட்ட, ஆத்மபி: மனதை உடையவர்களினால், ப்ரயாணகாலே ச மரணகாலத்தில், கதம் எப்படி, ஜ்ஞேய: அறியத்தகுந்தவனாக, அஸி ஆகிறீர். 1,2

னவே ஸித்தமாக இருக்கிறது சொல்லப்படுகிறது. அங்கீகரிக்கத்தகுந்ததாவது அநுஷ்டிக்கத்தகுந்தது. இத்தால் 'ஸ்வயாதாத்ம்யம்' என்கிற ஸங்க்ரஹ ஶ்லோகத்தின் அர்த்தம் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டது. இது எட்டாவது அத்யாயத்தின் ஸங்க்ரஹம். 'ஐஶ்வர்யாக்ஷரயாதாத்ம்யபகவச்சரணார்த்திநாம் । வேத்யோபாதேயபாவாநாமஷ்டமே பேத உச்யதே' என்று. பேதத்தைச் சொல்வதே அத்யாயத்திற்கு அர்த்தமாகையினால், அவைகளின் ஸ்வரூபத்தின் ப்ரஸ்தாவம் முன்னமே செய்யப்பட்டது, என்று காட்டப்பட்டது. கீழ்ப்ரஸ்தாவிக்கப்பட்டதை விவரிக்கிறது என்று ஸங்கதி சொல்லுகிறார். இப்பொழுது, மன்று ஆரம்பித்து.

பா] கைவல்யத்திற்காக பகவானை ஆஶ்ரயித்து ப்ரயத்னம் செய்கிறவர்களுக்கு அறியவேண்டியதாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மம், அத்யாத்மம், கர்மம் எது வென்று சொல்லவேண்டும். ஐஶ்வர்யத்தை விரும்புகிறவர்களுக்கு அறியவேண்டிய அதிபூதமும் அதிதைவமும் எது? மூன்று அதிகாரிகளுக்கும் அறியவேண்டிய அதியஜ்ஞ என்னும் பதத்தினால் சொல்லப்பட்டது எது? அதற்கு அதியஜ்ஞ என்னும் பதத்துக்கு அர்த்தமாக

தா] ஜீவாத்மாவின் ஸ்வரூபம் முதலிய அறியவேண்டியவைகளுடையவும், உபாஸனம் முதலிய அனுஷ்டிக்கவேண்டியவைகளுடையவும், வ்யாக்யாஸங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்கிற ஆசையினால் அர்ஜுனன் இந்த இரண்டு ஶ்லோகங்களினால் கேட்கிறான். ‘க்ஷேத்ரஜ்ஞ ஜிஜ்ஞாஸூ:’ என்று ஆரம்பித்து முன்னமேயே அதிகாரிகள் மூன்று விதம் என்று சொல்லப்பட்டமையினாலும் ‘ஜராமரணமோக்ஷாய’ என்றிவை முதலான இடங்களில் ‘யே’ என்கிற பதத்தையே திரும்பவும் சொல்லியிருப்பதினாலும், வஸ்துக்களின் ஸ்வபாவங்களாலும், அதிகாரிகள் வெவ்வேறு என்பதும், அவர்களுக்கு அறியவேண்டியவைகளுடையவும் அனுஷ்டிக்கவேண்டியவைகளுடையவும் ஏற்பாடுகளும் அர்ஜுனனால் தெரிந்து கொள்ளப்பட்டது. அதிலேயே விஶேஷங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற ஆசையினால் இந்தக்கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அந்த விஶேஷமும் மேலே சொல்லப்படுகிறது ஆகையினால் ‘கிம் தத்’ என்கிற பாதி கைவல்யத்தை விரும்புகிறவர்களைப் பற்றியது. ‘அதிபூதஞ்ச’ என்கிறபாதி ஐஶ்வர்யத்தை விரும்புகிறவர்களைப்பற்றியது. ‘அதியஜ்ஞ:’ என்கிற ஶ்லோகமோ வஸ்துவின் ஸ்வபாவத்தினால் மூன்று அதிகாரிகளுக்கும் பொது என்று பிரித்துச் சொல்லுகிறார் —‘கைவல்யத்திற்காக’ என்று ஆரம்பித்து. “கதம்” (எப்படி) என்றுமாதிரியைப்பற்றிய கேள்வியில் “அதியஜ்ஞ” என்னும் பதத்திற்கு அர்த்தமாக இருக்கை என்பது தானே ஏற்பட்டது. “அத்ர” (இவ்விடமான) என்கிற இதப்பதம் ஶாஸ்திரங்களில்குறிக்கப் பட்டிருக்கையைக் காட்டுகிறது. இதையும் மேல் க்ரந்தத்தில் வ்யாக்யானம்செய்யப் போகிறார். [1] எனக்கு தேஹமாகிய இந்த்ராதிகளிடத்தில்” என்று. “அஸ்மிந்” (இந்த) என்கிற பதமோ வெளியில் தனக்கு நேரில் தெரிவதைக்காட்டுகிறது. இப்பொழுதுகேட்கிற அர்ஜுனனுக்கு இந்த்ரன் முதலியவர்களும் ப்ரத்யக்ஷமாகத் தெரிகிறார்களல்லவோ. “தத், இதம்” என்கிற பதங்களுக்கு ஒரே வாக்

---

1 கீ,8,4 பாஷ்யத்தில்.

பா] இருக்கை எப்படி ஸம்பவிக்கும். மரணகாலத்தில் ஸ்வாதீனமான மனதை உடைய இந்த மூன்றுவித அதிகாரிகளாலும் எப்படி அறியத்தக்கவராகிறீர். I,2

ஸ்ரீபகவாநுவாச ஸ்ரீகிருஷ்ணன் சொல்லுகிறார்.

அக்ஷரம் ப்ரஹ்ம பரமம் ஸ்வபாவோऽத்யாத்மமுச்யதே।
பூதபாவோத்பவகரோ விஸர்க: கர்மஸம்ஜ்ஞித: ॥ ௩

ப-ரை] ப்ரஹ்ம ப்ரஹ்மமானது, பரமம் சிறந்த, (அதாவது ப்ரக்ருதி ஸம்பந்தமற்ற), அக்ஷரம் பரிசுத்தமான ஜீவாத்மஸ்வரூபம், ஸ்வபாவ: ப்ரக்ருதியானது, அத்யாத்மம் அத்யாத்மமாக, உச்யதே சொல்லப்படுகிறது, பூதபாவோத்பவகர: மனுஷ்யன் முதலியவைகளாக இருக்கையை உண்டாக்குகிற, விஸர்க: (ரேதஸ்ஸை) விடுதல், கர்மஸம்ஜ்ஞித: கர்மம் என்று பெயரை உடையது. ௩

பா] அந்த ப்ரஹ்மம் என்று கீழே குறிக்கப்பட்டது பரமமான அக்ஷரம். நக்ஷரதி - நாசத்தை அடைகிறதில்லை, ஆகையினால் அக்ஷரமென்று சொல்லப்படுகிறது. அதாவது ஸமஷ்டியான ஜீவாத்மாவின் ஸ்வரூபம். அப்படியே "அவ்யக்தம், அக்ஷரத்தில் லயத்தை அடைகிறது அக்ஷரம் தமஸ்ஸில்

தா] பாதத்தில் ஒன்றாகச் சேர்ந்து ப்ரயோகிக்கில் சில பதங்கள் [illegible]ங்களில் காணப்பட்டிருக்கிறது. அதுவுமன்றி "அத்ர" என்பதற்கு இந்த யஜ்ஞத்தில் என்று அர்த்தமாகவுமாம். ப்ரயாணகாலத்தில் இந்த ஜ்ஞானம் மூன்று அதிகாரிகளுக்கும் வேண்டியது. இவ்விடத்திலிருக்கிற பன்மையும் மூன்று அதிகாரிகளையும் காட்டுகிறது. என்கிற அபிப்ராயத்தினால் 'இந்த மூன்று வித அதிகாரிகளாலும்' என்று சொல்லப்பட்டது. I,2

'அக்ஷரம் ப்ரஹ்ம பரமம்' என்கிற இடத்தில் வ்யவதானம் செய்யப்படுகிறதும் விதிக்கப்படுகிறதும் மாறுதலாகத் தோற்றுவதாகையினால் அதை நிராகரிப்பதற்காகச் சொல்லுகிறார். அந்த ப்ரஹ்மம் என்று கீழே குறிக்கப்பட்டது. என்று 'ப்ரஹ்ம' என்னும் பதமானது இவ்விடத்தில் பரமாத்மாவின் ஸ்வபாவம் இருக்கிறபடியினால் உபசாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்று தாத்பர்யம். 'அக்ஷரம்' என்னும் பதத்திற்கு வ்யுத்பத்தியையும் அதின் அர்த்தத்தையும் காட்டுகிறார். 'நக்ஷரதி' என்று ஆரம்பித்து. ஜீவாத்மாக்களின் ஸமஷ்டியில் இந்தப் பதத்திற்கு ச்ருதியில் ஏற்பட்ட ப்ரயோகத்தைக் காட்டுகிறார். 'அப்படியே' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் லயமாவது, ஒருவித

பா]லயத்தை அடைகிறது'' என்று அர்த்தமுள்ள ஸ்ருதி வாக்யம் முதலியது சொல்லி இருக்கிறது பரமம் அக்ஷரமாவது. ப்ரக்ருதியை விட்டு நீங்கிய ஜீவாத்மாவின் ஸ்வரூபம். ஸ்வபாவமாவது, ப்ரக்ருதி அதாவது தான் ஆத்மாவாக அல்லாமலிருந்தும் ஆத்மாவினிடத்தில் சேர்ந்து மிருக்கிற பஞ்சாக்னி வித்யையில் அறியவேண்டியதாகச் சொல்லப்பட்ட ஸூக்ஷ்ம

தா]மான சேர்க்கை. அன்றியும், ஸ்ருதியில் அக்ஷர என்னும் பதத்தினால் கொஞ்சம் ப்ரகாஶமாகக் கிளம்பிய ஜீவாத்மாக்களை உடைய ப்ரக்ருதியின் ஒருவகையான தசையே சொல்லப்படுகிறதாகையினால் நேராக ப்ரதாநமே அர்த்தம், என்று சொன்னாலும் விரோதமில்லை. ஆகிலும் ஶப்தம் அந்தத் தசையைச் சொல்வதற்குக் காரணமான ஜீவாத்மாக்களிடத்திலும் தாத்பர்யமுண்டாகையினால் அதை இங்கே உதாஹரணமாக எடுத்து 'பரமம், அக்ஷரம்' என்கிற இடத்தில் பரமம் என்கிற விஶேஷணத்தினால் கருத்தில் கொள்ளப்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்.—'ப்ரக்ருதியைவிட்டுநீங்கிய' என்று ஆரம்பித்து. ஸ்வபாவ என்னும் பதத்தின் அர்த்தம், ப்ரக்ருதி என்பது அதாவது விட்டுப் பிரியாமல் சேர்ந்திருக்கும் வஸ்து, என்று, தாத்பர்யம் அது, எது என்கிற கேள்விக்கு, அத்யாத்மம் என்னும் பதத்தை அனுஸரித்து ஸமாதானம் சொல்லுகிறார்—'தான் ஆத்மாவல்லாமல்' என்று ஆரம்பித்து. ஆத்மாவினிடத்தில் வஸிக்கிறபடியினால் சேர்ந்து கொண்டிருக்கும் வஸ்து, என்று அத்யாத்மம், என்னும் பதத்தின் வ்யுத்பத்தி. அதினாலேயே தான் ஆத்மாவல்ல என்பதும் ஏற்பட்டது. அவைகளின் வாஸனை முதலியவைகளாவது, அவைகளின் ஸம்பந்தத்தினாலுண்டாகிற அஜ்ஞானம் கர்மம், இவற்றின் வாஸனை முதலியது, ஸூக்ஷ்மமான பஞ்சபூதம் முதலியவைகள் அறியவேண்டியவைகள் என்பதில் ஸ்ருதியை எடுத்துக்காட்டுகிறார். 'பஞ்சாக்னிவித்யையில்' என்று. 1 'ஐந்தாவது ஆஹுதியில் ஜலங்கள் எப்படிப் புருஷன் என்கிற பெயர் பெற்றவைகளாகின்றன (என்பதை) அறிகிறாயா' என்கிற வாக்யம் முதல், 2 இவ்விதமாக ஐந்தாவது ஆஹுதியில் ஜலங்கள் புருஷன் என்கிற பெயர் பெற்றவைகளாகின்றன என்று சொல்லி 3 எவர்கள் இதை இப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ' என்று அர்த்தமுள்ள வாக்யத்தில் 'ஆப:' என்னும் பதத்தினால் குறிக்கப்பட்ட ஸூக்ஷ்மமான பஞ்சபூதங்கள் அறியத்தக்கவைகள், என்றல்லவோ சொல்லப்பட்டது, என்று தாத்பர்யம். உபாயத்தைச் செய்கிறவனாகிய இப்பொழுது இருக்கும் ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தைவிட்டுப் பரிஶுத்தமான ஆத்மஸ்வரூபத்தைச் சொல்லி இருப்பது. மோக்ஷத்தில விருப்பமுள்ளவனுக்கு எந்த

---

1 சாந்தோக்யோபநிஷத் - 5 - 3 - 3. 2 சாந்தோக்யோபநிஷத் - 5 - 9 - 1.
3 சாந்தோக்யோபநிஷத் - 5 - 10 - 1.

பா] மான பஞ்சபூதங்களும் அவைகளின் வாஸனை முதலியவைகளும், இவை இரண்டும் அடையவேண்டிய தாகையினாலும் விடவேண்டிய தாகையினாலும் மோக்ஷத்தை விரும்புகிறவர்களினால் அறியத்தக்கவைகள். 'ஸம்ஸ்தஹாவ' மாவது மனுஷ்யன் முதலிய ப்ராணிகளாக இருக்கை. அவைகளுக்குக் காரணமாகிய 'விஸர்க்க' மாவது. † ஐந்தாவது ஹோமத்தில் ஜலங்கள் புருஷன் என்று பெயர் பெற்றவைகள் ஆகின்றன.' என்று அர்த்தமுள்ள ஸ்ருதிவாக்யத்தில் ஏற்பட்டதாய் ஸ்த்ரீகளின் புணர்ச்சியினால் உண்டாகக்கூடியது. இது முழுமையும் அத்துடன் சேர்ந்த வஸ்துக்களுடனே பயத்தை உண்டாக்கத்தக்கவைகளென்றும், பரிஹரிக்கத்தக்கவைகள் என்றும் முமுக்ஷுக்களால் தெரிந்துகொள்ளத்

தா] விஷயத்தில் உபயோகமானது. ஸங்க்ஷேபமாக [illegible] முதலியவைகளைச் சொல்லி இருப்பதால் [illegible] என்கிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் சொல்லுகிறார்.—'இவை இரண்டும்' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் சொல்லி இருக்கிற ப்ரயோஜனங்கள் இரண்டையும் முறையே அன்வயித்துக்கொள்ளவும். இவ்விடத்தில் [illegible] ஆஹுதி சொல்லப்படுகிறபடியினால் ப்ரயோஜனமாய ப்ராணிகளைப் பற்றினது இந்த ஸ்ருதி என்னும் பக்ஷம், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்.—'ஸம்ஸ்தஹாவ' மாவது மனுஷ்யன் முதலிய ப்ராணிகளாக இருக்கை' என்று. மனுஷ்யனாக இருக்கை முதலிய அவஸ்தைகள் உடைய ஶரீரங்களின் ஸம்பந்தம், என்று அர்த்தம். [illegible] அறியவேண்டியது என்பதிலும் அது மனுஷ்யன் முதலியவைகளாகைக்குக் காரணம் என்பதிலும் ஸ்ருதியை எடுத்துக்காட்டுகிறார்.—'ஐந்தாவது ஹோமத்தில்' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் [illegible] களின் விருத்தி விஷயமாக 'ஸம்ஸ்தஹாவொத்பவகரஃ' என்கிற விஶேஷணம் சொல்லப்பட்டது [illegible] விவரிக்கிறார்—'ஸ்த்ரீகளின் புணர்ச்சியினாலுண்டாகக் கூடியது' என்று. இந்த விஸர்க்கத்துக்குக் கொடுத்திருக்கும் விஶேஷணத்தின் ஸாமர்த்தியத்தினால் இவ்வர்த்தம் கிடைக்கிறது. [illegible] என்று சொல்லப்பட்ட [illegible] லின் விஸர்க்கத்தைத் தெரிந்து கொள்வதின் ப்ரயோஜனத்தைச் சொல்லுகிறார்—'இது முழுமையும்' என்று ஆரம்பித்து. கர்மா என்னும் பதத்தை நினைத்து இது என்று நபும்ஸகமாகச் சொல்லப்பட்டது. 'முழுமையும்' என்பதற்கு மனுஷ்யனாக இருக்கை முதலானதாக இருக்கை முதலிய [illegible] காரணமாக [illegible] என்று அர்த்தம். 'அத்துடன் சேர்ந்த வஸ்துக்களுடனே' என்பதற்கு

† சாந்தோக்யம். 5,3,

பா] தக்கவைகள் பரிஹரிக்கத்தக்கவை என்பதும் மேலே ‡எதை இச்சித்தவர்களாய் ப்ரும்மசர்யத்தைச்செய்கிறார்களோ'என்கிற ஶ்ருதிவாக்யத்திலேயே சொல்லப்போகிறது. 3

அதிபூதம் க்ஷரோ பாவ: புருஷஶ்சாதிதைவதம் |
அதியஜ்ஞோऽஹமேவாத்ர தேஹே தேஹப்ருதாம் வர || (௪)

ப-ரை] தேஹப்ருதாம் ப்ராணிகளுக்கெல்லாம், வர ஶ்ரேஷ்டனுன அர்ஜுன அதிபூதம் அதிபூதம் என்பது, க்ஷர: மாறுதல்களை அடைகிற, பாவ: வஸ்து, அதிதைவதஞ்ச அதிதைவதமும் புருஷ: ஐஶ்வர்யாதிகளை அனுபவிக்கக்கூடிய ஜீவாத்மா, அத்ர இந்த, தேஹே எனக்கு ஶரீரமாகிய இந்த்ராதிகளிடத்திலிருக்கிற நானே, அதியஜ்ஞ: அதியஜ்ஞும் என்று சொல்லப்படுகிறேன். 4

பா] ஐஶ்வர்யத்தையே விரும்புகிறவர்களுக்கு அறியவேண்டியதாகக் கீழேகுறிக்கப்பட்ட அதிபூதமாவது ஆகாஶம் முதலிய பஞ்சபூதங்களி

தா] இதற்குக் காரணங்களானகர்மங்களுடனும், அதின்பரபோஜனங்களுடனும், கர்பவாஸம் முதலியவைகளுடனும் சேர்ந்து என்று அர்த்தம். பஞ்சாக்னிவித்யையில் அசேதனமாகிய ப்ரக்ருதி எல்லா அவஸ்தைகளிலும் சேர்ந்திருக்கிறது, நம்மால்விட முடியாது, கர்ப்பவாஸம், பிறப்பு முதலிய துக்கங்களுக்குக்காரணம், என்பவை முதலியவைகள் ஏற்படுகிறபடியினுல் இது அருவருக்கத்தகுந்ததாக இருக்கையும், பயத்தை உண்டாக்கக்கூடியதாக இருக்கையும் தகும். பரிஹரிக்கக்கூடியதாக இருக்கை எதினுல் ஏற்பட்டது. என்கிற கேள்விக்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'பரிஹரிக்கத்தகுந்தது என்பதும்' என்று ஆரம்பித்தது. 3

'ஐஶ்வர்யத்தை விரும்புகிறவர்களுக்கு அறியவேண்டியதாகக் கீழே குறிக்கப்பட்ட, என்கிற இது அதிதைவதம் என்பதுடனும் சேர்த்துக்கொள்ளவேண்டியது, 'அதிபூதம்'க்ஷர:' என்னும் பதங்களின் வ்யுத்பத்தியை அனுஸரித்து வ்யாக்யானம் செய்கிறார்—'ஆகாஶம்முதலிய' என்று ஆரம்பித்து. 'பூத' என்னும் பதம் ஐந்துக்களைச சொல்லுகிறது. என்பதை விலக்குவதற்காக. 'ஆகாஶம்முதலிய'என்று சொல்லி இருக்கிறது. அனுபவிக்கத்தக்கவைகளான ஶப்தம் முதலிய அவஸ்தைத அந்த அவஸ்த்தைக்கு ஆதாரமான வஸ்துக்கள், இவை இரண்டையும் 'க்ஷர' என்னும் பதத்தினுல் சேர்த்துக்கொள்ள வேண்டியதற்

---

‡ சாந்தோக்யம். 5.10,1,

பா]லிருக்கும் மாறுதல்கள் அதாவது, மாறுதலை அடைவதையே ஸ்வபாவமாக உடைய சிறந்தவைகளான சப்தம் ஸ்பர்சம் முதலியவைகளும் அவைகளுக்கு ஆதாரமானவைகளும், சிறந்தவைகளான சப்தாதிகளுக்கு ஆதாரமான வஸ்துக்களோடு கூடிய சப்தம் ஸ்பர்சம் ரூபம் ரஸம் கந்தம் இவைகள் ஐச்வர்யத்தை விரும்புகிறவர்களினால் அடையத்தக்கவைகளாகையினால், அவர்களால் அனுபவிக்கத்தக்கவைகளாம். 'ஸுபிசௌகவத' என்னும் பதத்தினால் சொல்லப்பட்டவன் புருஷ, [illegible] ஸுபிசௌகவத மாவது தேவதைகளுக்கு மேலே இருப்பவன் இந்த்ரன் ப்ரஹ்மா முதலிய எல்லாத் தேவதைகளுக்கு மேற்பட்டிருப்பவன் அதாவது இந்த்ரன் ப்ரஹ்மா முதலியவர்களுக்கு அனுபவிக்கக் கூடிய விஷயங்களைப் பார்க்கிலும் மிகவும் சிறந்த சப்தம் முதலியவைகளை அனுபவிக்கிற புருஷன் அப்

தா]காக, 'மாறுதலை அடையும் ஸ்வபாவமுள்ள' என்று [illegible] டியிருக்கிறது அதாவது அழியக்கூடியவைகளாக, [illegible] 'சிறந்தவைகளான' என்கிற இடத்தில் இந்த்ரன் [illegible] க்கு அனுபவிக்கக்கூடிய வஸ்துக்களைவிட என்று [illegible] கிறதை இங்குக் கண்டுகொள்ளவும். இப்படி [illegible] னிடத்திலேயே அஸாதாரணமான பக்தியோகம் செய்ததினால் [illegible] யுடன் கூடிய பரமாத்மாவின் ஸங்கல்ப விசேஷத்தினால் [illegible] பட்ட போகங்களாகையினாலே இது [illegible] காரணத்தைக் காட்டுகிறார் 'சிறந்தவைகளாயும்' என்று [illegible] 'க்ஷேமாஹாவ:' என்று [illegible] என்று தாத்பர்யம். 'ஸுபிசௌகவத' என்னும் [illegible] என்னும் [illegible] சொல்லுகிறார்—'ஸுபிசௌகவத' 'என்னும் பதத்தினால் சொல்லப்பட்டவன்' [illegible] வ்யுத்பத்தி, 'தேவதைகளின்மேலிருப்பவன்' என்று [illegible] ளின்மேல என்கிற இடத்தில் [illegible] சொல்லும ஆறாம்வேற்றுமை ஸமாஸம் சொல்லவேண்டியது. 'ஓகவத' என்னும் பதத்திற்கு இவ்விடத்தில் பகவானிடத்திலிருந்து [illegible] றெல்லாத் தேவதைகளையும் சொல்லுகிறது என்பதையும் சொல்லுகிறார்—'இந்த்ரன்' என்று ஆரம்பித்து இவ்விடத்தில் [illegible] கேவலம் இடத்தினால் மாத்திரம் அல்ல [illegible] லும், என்று சொல்லுகிறார்—'இந்த்ரன்' என்று [illegible], 'புருஷன்' என்கிறவனையிலும் இவ்விடத்தில் [illegible] புருஷனை [illegible] சொல்லுகிறது. தன்னுடைய ஆத்மாவின் ஸ்வரூபத்தைப் [illegible] டைய அனுஸந்தானமற்ற அதிகாரிகளுக்கு ஸமானம். ஆகையினா

பா] படிப்பட்டபோக்தாவாகும்தனை ஐஶ்வர்யார்த்திகளால்அடையத்தக்கதாகையினால் அநுஸந்திக்கத்தக்கது. அதியஜ்ஞ என்னும் பதத்தினால் சொல்லப்பட்டவன் நானே. 'அதியஜ்ஞமாவது, யஜ்ஞங்களினால் ஆராதிக்கத்தகுந்தவனாக இருப்பவன். எனக்கு தேஹமாகிய இந்த்ராதிகளிடத்

தா] இவ்விடத்தில்இவனுக்குஎன்னவிசேஷம்.என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'இந்த' என்று ஆரம்பித்து. பரிசுத்தமான ஜீவாத்மாவின் ஸ்வரூபம் இவ்விடத்தில் அநுஸந்திக்கத்தக்கதல்ல. அசுத்தமான ஜீவாத்மாவைப்பற்றியும் இது விடத்தக்கது என்று நினைக்கவும் வேண்டியதில்லை. 'புருஷ:' என்னும் பதமும் இவ்விடத்தில் புருஷனாக இருக்கும் தன்மையைக் குறிக்கிறது. என்று தாத்பர்யம். 'நானே' என்பது. 'க:'(எது) என்னும் கேள்விக்குப்பதில். 'கதம்' (எப்படி) என்னும் கேள்விக்குப் பதிலையும் அதின் அபிப்ராயத்தையும் விவரிக்கிறார்—'அதியஜ்ஞமாவது' என்று. யஜ்ஞத்தோடு சேர்ந்திருப்பது அதியஜ்ஞம். இவ்விடத்தில் பகவானுக்கு யஜ்ஞத்தோடு ஸம்பந்தம் அவைகளினால் ஆராதிக்கப்படுமவனாகையினால். என்று சொல்லுகிறார்—'யஜ்ஞங்களால்' என்று ஆரம்பித்து. இந்த்ரன் முதலியவர்கள் ஸேவா அந்த யஜ்ஞத்தில் ஆராதிக்கப்படுகிறவர்களாக ஶ்ருதிகளில் சொல்லப்படுகிறார்கள். அப்படியிருக்க நானே, என்று எப்படிச் சொல்லப்படுகிறது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் 'அத்ர தேஹே' என்பதினால் சொல்லப்படுகிறது. என்று காட்டுகிறார்—'எனக்கு தேஹமாகிய' என்று ஆரம்பித்து. 'அதியஜ்ஞோஹமேவாத்ர தேஹே' என்று, பகவானால் சொல்லப்படுகிறபடியினால் அந்தப் பகவானுடைய தேஹத்தைப்பற்றியது என்று ஏற்பட்டது. அந்தப் பகவானுடைய தேஹமாவது. 'யஜ தேவபூஜாயாம்' என்கிற தாது பாடத்தை அநுஸரித்துப் பூஜை செய்யப்படும் தேவதையை அபேக்ஷிக்கிற யஜ்ஞ என்னும் பதத்தினால் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிற இந்த்ரன் முதலிய தேவதைகளே என்கிற அபிப்ராயத்தினால். 'இந்த்ரன் முதலிய' என்று. சொல்லப்பட்டது. '[1] யாம் யாம் தநும்' என்று கீழ்ச் சொன்னதை ஞாபகப்படுத்துகிறார்—'எனக்கு தேஹமாகிய' என்று. அசேதனமாகிய வஸ்து கர்மத்தினாலல்லவோ ஒருவனுக்கு ஶரீரமாகிறது. அப்படிக் கிவ்விடத்தில ஶரீரமாக இருக்கை ஒரு ஸமயத்திலுண்டானதல்ல என்று தெரிவிப்பதற்காகப் பாஷ்யத்தில் 'தேஹீபூதே' என்று வ்யாக்யானம் பண்ணாமல் 'தேஹபூதே' என்று வ்யாக்யானம் செய்யப்பட்டது. தேஹமாகிய கேவலம் இந்த்ராதிகளை விலக்கு

---

1 கீ, 7, 21.

பா]த்தில் ஆத்மாவாக இருக்கும் நானே யஜ்ஞங்களிலெல்லாம் ஆராதிக்கத்தக்கவன். என்று மஹாயஜ்ஞம் முதலிய நித்யநைமித்திகங்களை அனுஷ்டிக்கும் ஸமயத்தில் மூன்றுவித அதிகாரிகளுக்கும் அனுஸந்திக்கத்தக்கது. 4

அந்தகாலே ச மாமேவ ஸ்மரந் முக்த்வா கலேவரம் |
ய꞉ ப்ரயாதி ஸ மத்பாவம் யாதி நாஸ்த்யத்ர ஸம்ஶய꞉ || (௫)

ப-ரை] அந்தகாலே ச மரணகாலத்திலும், மாமேவ என்னையே ஸ்மரந் நினைத்துக்கொண்டு, கலேவரம் சரீரத்தை, முக்த்வா விட்டு, ய꞉ எவன், ப்ரயாதி போகிறானோ, ஸ꞉ அவன், மத்பாவம் என்னுடைய ஸ்வபாவத்தை, அதாவது அந்தக் காலத்தில் எவ்வித ஸ்வபாவமுடையவனாக என்னை நினைக்கிறானோ அந்த ஸ்வபாவத்தை யாதி அடைகிறான், அத்ர இந்த விஷயத்தில், ஸம்ஶய꞉ ஸந்தேஹம், நாஸ்தி இல்லை. 5

தா]வதற்காக 'நானே' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அன்றிக்கே முன்பு சொன்ன ப்ரஹ்மம், அத்யாத்மம், கர்ம, அதிபூதம், அதிதைவமும், இவைகளைப்போல வேறொரு வஸ்துவல்ல, என்று தெரிவிப்பதற்காகவுமாம். ப்ரக்ருதியிலும் விக்ரஹத்திலும் எல்லாத்தெய்வமும் என்று அதித்தமென்னவாக்யமும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த்ராத்யயம் என்கிறதென்விக்கும் பதில் சொல்லப்பட்டது. அப்படியானால்? அந்தந்த தேவதைகளை சரீரங்களாக உடைய பகவானை ஆராதிக்கும் தத்தவனுக்கு, 'தேஹப்ருதாம்வர' என்பதினால், ஆத்மாவை அனுஸந்தானம் செய்வதற்கு அனுகுணமான ஸத்வகுணம் மேலிட்ட தேஹமும் இந்த்ரியம் முதலியவைகளை உடையவனாக இருக்கையும், தான் லோகத்தில் கண்டறியாத இந்த்ரன் முதலிய தேவதைகளை உடையவனாக இருக்கையில் உதாஹரணமும் காட்டப்பட்டது. இப்படிப்பட்ட அதியஜ்ஞத்தைத் தெரிந்துகொள்வது அனுஷ்டானத்திற்கு உபயோகப்பட்டு அதற்கு உபகாரம் செய்கிறதுமாத்திரமல்ல மோக்ஷஸாதனத்தைப் பற்றியதுமல்ல. என்று காட்டுகிறது—'என்று மஹாயஜ்ஞம் முதலிய' என்று ஆரம்பித்து. செய்யாமையினாலுண்டாகும் அபாயத்தைப் பரிஹரிப்பதற்காக மூன்று அதிகாரிகளும் அவஶ்யம் செய்யவேண்டியது, என்று தெரிவிப்பதற்காக 'நித்யநைமித்திகங்கள்' என்று சொல்லி இருக்கிறது. 4

பா] இதுவும் மூன்று அதிகாரிகளுக்கும் ஸாதாரணமானது மரண காலத்தில் என்னையே நினைத்துக்கொண்டு ஶரீரத்தைவிட்டு எவன் போகிறனோ அவன் என்னுடைய ஸ்வபாவத்தை அடைகிறன். அதாவது அப்பொழுது எவ்விதமாக என்னை அனுஸந்தானம் செய்கிறனோ அப்படிப்பட்ட ஆகாரத்தை உடையவனாக ஆகிறன். எப்படி ஆதிபரதன் முதலியவர்கள் அப்பொழுது தன்னால் நினைக்கப்பட்ட மான் போன்ற ஆகாரத்தை உடையவர்களானார்களோ அப்படியே, என்று அர்த்தம். 5

தா] 'வ்யாணக்ஷெ' என்கிற பாதி ஶ்லோகத்தில் கேட்ட கேள்விக்கு இந்த ஶ்லோகம் சுருக்கமானபதில் ஆதலால் ஜ்ஞானியைமாத்திரம்பற்றியதல்ல. என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறர்—'இதுவும்' என்று. 'ஜ்ஞேயம்' என்னப்படும் வஸ்துவின் ஸ்வபாவத்தினாலும் மேலே சொல்லப்போகிற ந்யாயத்தினாலும், என்று தாத்பர்யம். அன்வயத்தைக் காட்டுகிறர்.—'மரண காலத்தில்' என்று ஆரம்பித்து. 'ஸ்ரீ வயாதி' என்கிற இடத்தில் ஶ்ருதி முதலியவைகளுக்கு விரோதமான ஐக்யத்தை அடைகிறன் என்று அர்த்தம், என்கிற ப்ரமத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிறர்.—'என்னுடைய ஸ்வபாவத்தை' என்று. ஈஶ்வரனுடைய ஸ்வபாவத்தை அடையும்பொழுது இவனும் குளவியின்கூட்டில் வைக்கப்பட்ட புழு குளவியாவதுபோல அவனும் வேறொரு ஈஶ்வரனாகவேண்டி வருமே. மூன்று அதிகாரிகளுக்கும் 1 எட்டுக் குணங்களாகிய பகவானுடைய ஸ்வபாவத்தை அடைவது ஸமமானால் அதிகாரிகளுக்குப பேதமும் இல்லாமற்போகட்டுமே? என்கிற ஆக்ஷேபத்திற்குஸமாதானம்சொல்லுகிறர்—'அப்பொழுது' என்றுஆரம்பித்து அவரவர்களால் அனுஸந்தானம் செய்யப்படுகிற ஆகார விஶேஷங்களினால் ஸாம்யத்தை அடைவது சொல்லப்படுகிறது. ஸாம்யமாவது ஸ்வரூபம் வேறென்று தெரிவிக்கக்கூடிய வ்யத்யாஸம் இருந்துகொண்டிருக்கும்பொழுதே. ஆகையினால் ஒருதோஷமும் இல்லை. என்று தாத்பர்யம். இப்படி, கேள்விகள் பதில் சொல்லப்பட்டதுகள். 'நாஸ்த்யத்ர ஸம்ஶயஃ' என்கிற இத்தால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்ட காரணத்தின் ப்ரஸித்தியைக் காட்டுகிறர்.—'ஆதிபாதன் முதலியவர்கள்' என்று ஆரம்பித்து. இந்த உதாஹரணத்தினாலும் ஐக்யத்தை அடைதல் என்கிற ப்ரமம் நிராகரிக்கப்பட்டது. ஆதிபரதருக்குத் தன்னால் நினைக்கப்பட்ட ம்ருகத்தோடு ஐக்யமுண்டாகவில்லையல்லவா. பின்னை ஏதென்னில்? அந்த மானுக்கு ஸமமான ஆகாரத்தை உடைய மான்ஶரீரத்தை அடைதலே உண்டானது. என்று அந்தச் சரித்திரத்திலேயே ஸித்தமாக இருக்கிறது. 'அப்பொழுது' என்பதற்குத் தேஹத்தைவிட்டுப் பிரியுங்காலத்தில் என்று அர்த்தம். 5

1 கர்மங்களில்லாமை கிழத்தனமில்லாமை முதலியன ஶ்ருதியில் சொல்லப்பட்டவைகள்.

பா] நினைக்கிறவனுக்கு நினைக்கப்படும் வஸ்துவுக்கு ஸமானமான ஆகாரத்தை உண்டாக்குதல் [1] அந்திம ப்ரத்யயத்தின் ஸ்வபாவம், என்று ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறார்.

யம் யம் வாபி ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே கலேவரம் |
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித: || (௬)

ப-ரை] *அந்தே* மரணகாலத்தில், *யம்யம்வாபி* எந்தெந்த, *பாவம்* ஸ்வபாவத்தை, *ஸ்மரந்* நினைத்துக்கொண்டு, *கலேவரம்* ஶரீரத்தை *த்யஜதி* விடுகிறானோ, *கௌந்தேய* ஓ அர்ஜுன, *ஸதா* எப்பொழுதும், *தத்பாவபாவித:* அந்த ஸ்வபாவத்தையே நினைத்துக்கொண்டிருப்பவனாய், *தம்தமேவ* அந்தந்த ஸ்வபாவத்தையே, *ஏதி* அடைகிறான். 6

பா] மரணகாலத்தில் எந்தெந்த ஸ்வபாவத்தை நினைத்துக்கொண்டு ஶரீரத்தை விடுகிறானோ, அந்தந்த ஸ்வபாவத்தையே மரணத்துக்குப் பின்

தா] இது பகவானைப்பற்றிய அந்திமப்ரத்யயத்துக்கு மாத்திரம் ஸ்வபாவம் என்று நினைக்கவேண்டாம். கீழ்ச்சொன்ன விஷயத்தில், எல்லாவற்றிற்கும் பொதுவான இது இங்கும் சொல்லப்பட்டது. என்று காரணம் 'யம்யம்' என்னும் ஸ்லோகத்தினால் சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிறார்—நினைக்கிறவனுக்கு, என்று ஆரம்பித்து. 'அந்தே' என்னும் பதமானது முன் ஸ்லோகத்தில் சொல்லப்பட்ட மரணகாலத்தைச் சொல்லுகிறது. அந்தப்பதத்தில், அந்திமப்ரத்யயத்தின் ப்ரபாவத்தைத்தெரிவிப்பதற்காக 'ஸ்மரந்' என்பதோடு அன்வயம் சொல்லவேண்டியது, என்று காட்டுகிறார் —மரணகாலத்தில் என்று ஆரம்பித்து. இரட்டித்துச் சொல்லியிருப்பதினாலும் 'வாபி' என்று சொல்லியிருப்பதினாலும் நினைக்கப்படும் விஷயம் இன்னதென்கிற நியமம் இல்லை, என்பதும், உயர்ந்த விஷயம் தாழ்ந்த விஷயம் என்கிற வ்யத்யாஸமில்லை, என்பதும் காட்டப்பட்டது. 'தம்தம்' என்று இரட்டித்துச் சொல்லியிருப்பதினால், கணித்த நியாயமாய் அந்தந்த ஸ்வபாவங்களை அடைதல் சொல்லப்படுகிறது. 'ஸதா' என்றதினால் ப்ரபல புண்ணியங்களினாலும் மிகுந்து தடுக்கமுடியாதது, என்பது சொல்லப்படுகிறது. பாவ என்னும்பதமானது இவ்விடத்தில் ஸ்வபாவத்தைச் சொல்லுகிறது. வஸ்துவைப்பற்றிய ஞாபகமோ ஞானமோ ஏற்படுகிறது. இவ்விடத்தில் 'பாவ' என்னும் பதம் அர்த்தமாவதாகச் சொன்னதனால், கீழ் ஸ்லோகத்தில் சொல்லப்பட்ட 'பாவ' என்னும் பதத்தின் அர்த்தத்

---

1 கடைசி நினைவு அதாவது மரணகாலத்திலுண்டாகும் ஞாபகம்.

பா] னிட்டு அடைகிறான். இந்த அந்திம ப்ரத்யயமும், முன்பு நினைத்துக் கொண்டிருந்த விஷயத்தைப்பற்றியே உண்டாகிறது. 6

தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமநுஸ்மர யுத்ய ச ।
மய்யர்பித மநோபுத்திர் மாமேவைஷ்யஸ்யஸம்ஶய: ॥ (எ)

ப-ரை] தஸ்மாத் ஆகையினாலே, ஸர்வேஷு எல்லா, காலேஷு காலங்களிலும், மாம் என்னை, அநுஸ்மர நினைத்துக்கொண்டிரு, யுத்ய ச யுத்தமும்செய், (இவ்விதமாக) மயி என்னிடத்தில், அர்பித மநோபுத்தி: ஸமர்ப்பிக்கப்பட்ட மனஸ்ஸு புத்தி இவைகளை உடையவனாய்க் கொண்டு, மாமேவ என்னையே, ஏஷ்யஸி அடையப்போகிறாய், அஸம்ஶய: ஸந்தேஹமில்லை. 7

எந்தக்காரணத்தினால் முன்காலத்தில் பரிசயம் செய்யப்பட்ட விஷயத்தைப்பற்றியே அந்திம ப்ரத்யயம் உண்டாகிறதோ. ஆதலால் எல்

தா] தைவிட வேறு அர்த்தம் கூறுதல்,' என்னும் தோஷம்வரும் 'தம் தமேவ' என்கிற இடத்தில் அததின் ஸாம்பத்தைஎன்று லக்ஷணை சொல்ல வேண்டிவரும். 'தம் தமேவைதி' என்கிற இடத்தில் ஏதாவது ஒரு ஜன்மத்தில் எல்லாருக்கும் நேரக் கூடியதான அந்த ஜாதியிற் பிறப்புமாத்திரம் அர்த்தம். என்பதை விலக்குவதற்காக 'மரணத்துக்குப் பின்னிட்டு' என்று சொல்லபட்டது. ஆகிபரதர்மானுக்கும் பொழுது நடுவில் வேறு ஜன்மங்கள் உண்டாகவில்லை யல்லவா. 'ஸதா தத்பாவபாவித:' என்பதினால் இந்த அந்திம ப்ரத்யயத்திற்குக் காரணம் சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிறார்— இந்த அந்திம ப்ரத்யயமும்' என்று. "தத்பாவபாவித:" என்பதற்கு அதைப்பற்றிய நினைவினால் வாஸனையை உண்டாக்கப்பட்டவன் என்றாவது, எவனால் அந்த வஸ்துவினிடத்தில் மனது வைக்கப்பட்டிருக்கிறதோ, என்றாவது அர்த்தம் சொல்லிக்கொள்ள வேண்டியது. 6

இப்படி அந்திம ப்ரத்யயத்துக்கு வஶப்பட்டு பலம் வர வேண்டிய தாகையினால் அந்திம ப்ரத்யயமும் இடைவிடாமல் த்யானம் செய்வதினாலுண்டாகக் கூடிய தாகையினால், உன்னாலும் அப்படிப்பட்ட த்யானமும் அதற்கு ஒத்தாசைக் காரணமான கர்மமும் செய்யத்தக்கது, என்று இந்த ஶ்லோகத்தில் சொல்லப்படுகிறது. 'ஸர்வேஷு காலேஷு' (எல்லாக் காலங்களிலும்) என்பதினால் 1 அவன் தன் ஆயுஸ்ஸுவரையிலும் இப்படியே இருந்துக்கொண்டு ப்ரஹ்மலோகத்தை அடைகிறான்' என்றும் 2 'ப்ர

---

1 சாந்தோக்யம் 8, 15, 1. 2 ப்ரஶ்ந உபநிஷத், 5, 1.

லாக் காலங்களிலும் மரணமடையும் தினம்வரையில் தினம்தோறும் என்னை த்யானம் செய். தினம்தோறும் த்யானம் செய்வதற்குக் காரணமா

மரணம் புறப்படும் வரையில் ப்ராணனைத் தாங்காமல் பரமாத்மாவை என்றும் அர்த்தமுள்ள ச்ருதி வாக்யங்களிலிருந்து தோன்றும் என்கிற அபிப்ராயத்தினால் 'மரணம் அடையும் தினம் வரையில்' என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்டது. ஸூத்ரம் 1 'ஆப்ரயாணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம்' என்று சொல்லி இருக்கிறது, மரணம் வரையில் என்பது பக்ஷந்தோறும் த்யானம் செய்தாலும் மரணதினம் வரையில் என்று சொல்லலாம். ஆகையினால் அதை விலக்கவேண்டும் என்கிற அபிப்ராயத்தினால் பண்மையாகச்சொல்லி இருக்கிறது, என்று சொல்லுகிறார்— தினம்தோறும், என்று 2 'தம் வேத்யவான் ...' என்றிவை முதலிய சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட அப்யாஸம் விருப்பதற்குத் தகுதியான ஸந்த்யாவந்தனாதி விடப்பட்ட காலங்களில், என்று சொல்லப்பட்டதாகிறது. அப்படியே ஸூத்ரம் 3 'யத்ரைகாக்ரதா தத்ராவிசேஷாத்' என்று சொல்லி இருக்கிறது. 'யுத்யஸ்வ' என்று விதிக்கப்பட்ட யுத்தம் இவ்விடத்தில் 4 'மையைகார்த்யம் ...' என்கிற ந்யாயத்தினால் அந்த த்யானத்திற்கு அங்கம் என்பது ஏற்பட்டது அந்த யுத்தமும் இவ்விடத்தில் ப்ரஸ்தாவித்திருக்கிறபடியினால் உபலக்ஷணமாகச் சொல்லப்பட்டது ஆகையினால் ப்ராமணங்களில் ஏற்பட்ட தம்தம் வர்ணாச்ரம கர்மங்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டியது, என்று சொல்லப்பட்டதாகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—தினம் தோறும் த்யானம் செய்வதற்குக் காரண

1 சாரீரகஸூத்ரம், 4, 1, 12, ஆப்ரயாணாத் மரணம் அடையும் தினம்வரையிலும் உபாஸநம் செய்யவேண்டும், தத்ராபி அந்த [illegible] அதுவரையிலும் ப்ருதியிருப்பதினால்

2 பாதஞ்சலயோக சாஸ்த்ரம் தம் அந்தபகவானை, பூர்வாபரராத்ரே ராத்ரியின்முன் பாகத்திலாவது, பின்பாகத்திலாவது, யுஞ்சான:—யோகாப்யாஸம் செய்து கொண்டு,

3 சாரீரகஸூத்ரம் 4. 1,11, யத்ர-எந்த இடத்திலும் காலத்திலும், ஏகாக்ரதா-மனதுக்கு ஸமாதான முண்டாகுமோ, தத்ர அந்த இடத்திலும் காலத்திலுமுபாஸனம் செய்யவேண்டும். அவிசேஷாத் வேறொரு விசேஷமும் சொல்லாமையினால்,

4 கர்மமீமாம ஸாந்யாயம், ஒருகர்மத்திற்குப் பலம் சொல்லி மற்றொரு கர்மம் பலமின்றிச சொல்லியிருந்தால் பல மற்றது பலமுள்ள கர்மத்துக்கு அங்கம் என்பது கருத்து. 'இங்கே அந்திமப்ரத்யயமாகிறபலத்துக்காக, த்யானம்சொல்லப்பட்டது, யுத்தமதற்கு அங்கம்.

யும், வர்ணாஶ்ரமங்களைச் சேர்ந்ததாயும் ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் விதிக்கப் பட்டதாயும் இருக்கிற யுத்தம் முதலியநித்ய நைமித்திககர்மங்களைச் செய். இவ்வித உபாயத்திஞல் என்னிடத்திலேயே ஸமர்ப்பிக்கப்பட்ட மனஸ் ஸு புத்தி இவைகளை உடையவனுய்க் கொண்டு மரணகாலத்திலும் என்னையே நினைத்துக்கொண்டு, உன்ஞல் இஷ்டப்படப்பட்ட ஸ்வபாவத்

மாயும், என்று. வர்ணாஶ்ரமங்களைச் சேர்ந்ததாயும், என்பது இத்தால் குறிக்கப்படுகிற எல்லாக் கர்மங்களுக்கும் பொதுவான ஆகாரம். விதிக் கப்பட்டதாயும், என்பதிஞல் ஶாஸ்திரமே விதித்திருப்பது, ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்ட கர்மங்கள் தவிர மற்ற விஷயங்களைப பற்றி, என்று காட்டப்பட்டது. நித்யநைமித்திகங்களை, என்பதிஞல் பலங்களில் ஆசையுடன் செய்யப்பட்ட கர்மங்கள் விலக்கப்பட்டன. 'மய்யர்பிதமநோபுத்தி:' என்பது கீழ்ச்சொல்லிய அர்த்தத்தைஅனு வாதம் செய்கிறது, என்று காட்டுகிறூர்—இப்படி. என்று உபாயத்தி ஞல், என்பதற்குக் கர்மம் முதலிய உபாயத்திஞல், என்று அர்த்தம் இவ்விடத்தில் மனதை ஸமர்ப்பிக்கையாவது, எப்பொழுதும் நினைத் துக்கொண்டிருக்கை, புத்தியை ஸமர்ப்பிக்கையாவது பலத்தைக் கொடுக்கக்கூடியவன் அவனே என்கிற நிஶ்சயம், இந்த ஸந்தர்ப் பத்திலேற்பட்ட தான இடையில வரக்கூடிய வ்யாபாரத்தைச் சொல்லி இருக்கிறது. மரணகாலத்திலும் என்னையே நினைத்து க்கொண்டு' என்பது. அன்றிக்கே 'இவ்விடத்திலுபாயத்திஞல்' என்று. கர்மங்களிஞலொத்தாஶை செய்யப்பட்ட த்யானமே சொல் லப்படுகிறது. அதின் ப்ரயோஜனம், 'மய்யர்பிதமநோபுத்தி:' என்று சொல்லப்பட்டது. அதின் அர்த்தம், மரணகாலத்திலும், என்னையே நினைத்துக்கொண்டு, என்பது. முன்பின் ஸந்தர்ப்பங்களில் தொடர்ந்து வருகிற மூன்றுவித அதிகாரிகளுக்கும் பொது ஆவதற்காக சொல்லு கிறூர்—'உன்ஞலிஷ்டப்படப்பட்ட ஸ்வபாவத்தோடு கூடிய' என்று '1 நிஸ்ஸம்ஶயேஷு ஸர்வேஷு நித்யம் வஸதி வை ஹரி: | ஸஸம்ஶ யாந்ஹேதுபலாந்நாத்யாவஸதி மாதவ:' என்கிற இடத்திலேபோ ல 'அஸம்ஶய:' (ஸம்ஶயமில்லாதவஞய்) என்று அர்ஜுனனுக்கு விஶேஷணமாக இருந்தாலும் அதிஞலேற்பட்ட அர்த்தத்தைச் சொல்

1 மஹாபாரதம்மோக்ஷதர்மம், 369, 71, ஹரி:—பகவான், நிஸ்ஸம் ஶயே ஷு ஸந்தேஹமில்லாத ஸர்வேஷு எல்லாரிடத்திலும், நித்யம், எப்பொழுதும், வஸதி—இருக்கிறூர், மாதவ:—பகவான், ஸஸம்ஶயான் ஸந்தேஹத்தோடுகூடிய வர்களிடத்திலும் ஹேதுபலாந் ஹேதுவாதம் செய்கிறவர்களிடத்திலும் நாத்யா வஸதி இருப்பதில்லை.

தோடுகூடிய என்னையே அடையப்போகிறாய் இதில் ஸம்ஶயம் இல்லை 7

பா] இப்படிப் பொதுவாக அவரவர்களுக்குப் பலம் கிடைப்பது அந்திம ப்ரத்யயத்திற்கு வஶப்பட்டிருக்கிறது என்று சொல்லி அதற்காக மூன்று அதிகாரிகளுக்கும் உபாஸநம் செய்யும் மாதிரிகளின் வ்யத்யாஸத்தைச் சொல்ல ஆரம்பிக்கிறார் அதில் ஐஶ்வர்யத்தை விரும்புகிறவர்களுக்குச் செய்யவேண்டிய உபாஸநத்தின் மாதிரியையும், உபாஸநத்தைப் போலவே அந்திம ப்ரத்யயத்தின் மாதிரியையும் சொல்லுகிறார் -

அப்⁴யாஸயோக³யுக்தேந சேதஸா நாந்யகா³மிநா |
பரமம் புருஷம் தி³வ்யம் யாதி பார்தா²நுசிந்தயந் || (௮)

ப-ரை] பார்த்த ஓ அர்ஜுன, *அப்⁴யாஸயோக³யுக்தேந* அப்யாஸம், யோகம், இவைகளோடு கூடிய *நாந்யகா³மிநா* வேறொரு விஷயத்தில் செல்லாத *சேதஸா* மனஸ்ஸினால், *தி³வ்யம்* திவ்யனான, *பரமம் புருஷம்* பரமபுருஷனை, *அநுசிந்தயந்* த்யானம் செய்துகொண்டிருப்பவன், (அந்தப் பரமபுருஷனையே) *யாதி* அடைகிறான் ௮

பா] தினந்தோறும் அப்யாஸம் யோகம் இவைகளுடன் கூடி இருக்கிறபடியினால், வேறொரு விஷயத்தில் செல்லாத மனதினால், மரணகாலத்தில் பரமபுருஷனையும், திவ்யனையுமிருக்கிற என்னை, மேல்சொல்லப்போ

[illegible]கிறாய் 'இதில்ஸம்ஶயமில்லை' என்று '1 ஸர்வோ நஸ்ஸம்ஶய [illegible]' என்று சொல்லப்பட்ட இந்த ப்ரமாணத்தை 'ஸ' என்பதனால் [illegible] சொல்லுகிறார் '2 இவ்விடத்திலிருந்து போனவுடன் இவனை அடையப்போகிறேன்' என்று எவனுக்கு நிஶ்சயமிருக்கிறதோ அவனுக்கு ஸம்ஶயமில்லையோ' என்கிற ப்ரமாணமும் இவ்விடத்தில் [illegible] கொள்ளத்தக்கது. 7

தா] அந்திம ப்ரத்யயத்தைப் ப்ரஸ்தாவித்ததின் மேல் உபாஸனத்துக்குக் காரணமாக 'அப்⁴யாஸ' என்று உபாஸனம் ப்ரஸ்தாவிக்கப்பட்டது. அந்த உபாஸனத்தின் மாதிரிகளின் பேதம் அந்திம ப்ரத்யயத்தின் ஆதாரம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இப்படி' என்று. மேலே சொல்லப்போகிற தன்மையின் பேதமும், [illegible] லக்ஷணமாகச் சொல்லப்படுகிறது இந்த [illegible] ஶ்லோகம் முதல் பத்தாவது ஶ்லோகம் வரையில் மூன்று ஶ்லோகங்களுடைய [illegible]

---

1 *அ, மா, நோ, ந இவைகள் மறுபடியும் சொல்லுகின்றன ஆகையினால் ஸம்ஶயமே இல்லை என்று அர்த்தம்.* 2 *சாந்தோக்யம்,* ௩, ௧௪, ௪,

கிற ஸ்வபாவத்தோடு கூடியவனாக த்யானம் செய்துகொண்டு என்னையே அடைகிறான். ஆதிபரதர்மானாக இருக்கையை அடைந்ததுபோல ஐஶ்வர்யத்தை உடையவனாக இருக்கையினால் எனக்கு ஸமமான ஆகாரத்தை

தா] *ப்ரஸ்தாவமில்லாததை மறுக்கக்கூடாதாகையினாலும், இங்கு மறுக்கப்படுகிறதற்கு ஸமீபத்திலிருக்கிற ப்ரஸ்தாவத்தை அங்கீகரிப்பது உசிதமாகையினாலும், நாஶத்தை அடையக்கூடிய ப்ரயோஜனமாகிய ஐஶ்வர்யத்தை விரும்புகிறவர்களுக்கு ஜன்மம் உண்டு என்பது, பகவானை அடைந்தவர்களுக்கு ஜன்மமில்லை என்று, கீழ் ஶ்லோகத்தில் மறுத்ததினால் ஞாபகப்படுத்தப்பட்டது. ஆகையினால் அந்த விஷயத்திலும் காரணம் மாத்திரம் சொல்லவேண்டியது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்*—'ஐஶ்வர்யமாகிற ப்ரயோஜனத்தை' *என்று, 'மாமுபேத்ய' என்று, பகவானை எதிராகச் சொல்லி இருப்பதினால் இங்கே 'ஆ' என்பது அதுவரையிலும் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்*—'ப்ரஹ்மலோகம் வரையிலுமுள்ள' *என்று. ப்ரக்ருதி என்று பெயரை உடைய பகவா*

போகம் ஐஶ்வர்யமிவைகளுக்கு இடமாக இருக்கிற எல்லாலோகங்களும் நாஶத்தை உடையவைகள். ஆகையினால் ஐஶ்வர்யத்தை அடைந்தவர்களுக்கு அடையப்படுமிடம் நஶித்துவிடுகிறபடியினால் அவர்களுக்கும் நாஶத்தை அடைதல் தள்ளமுடியாது. எல்லாம் தெரிந்தவனும் ஸத்ய ஸங்கல்பனும், எல்லாலோகங்களுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் இவைகளை விளையாட்டாக உடையவனும் மிகுந்த தயையை உடையவனும் எப்பொழுதும் ஒரேவிதமான ஸ்வபாவத்தை உடையவனும் இருக்கிற என்னை அடைந்தவர்களுக்கு நாஶத்தின் ப்ரஸ்தாவமே இல்லையாதலால் அவர்களுக்கு மறுபடியும் ஜந்மம் இல்லை. 16

னுடைய மாயையாகிய பெரிய ஸமுத்திரத்தில், ப்ரஹ்மாண்டங்களெல்லாம், நீர்க்குமிழிகள்போல இருக்கின்றன, என்றால் அதற்குள்ளிருக்கும் லோகங்களுக்குத் தனித்துச் சொல்லவேண்டியதே இல்லை, என்கிற அபிப்ராயத்தினால் 'ப்ரஹ்மாண்டத்திறகுள்ளிருக்கிற' என்று சொல்லப்பட்டது. இத்தால் பரமபதம் விலக்கப்பட்டது. ஐஶ்வர்யங்கள் அநித்யம் என்று நிரூபிக்கவேண்டியதற்காக—'போகம் ஐஶ்வர்யம் இவைகளுக்கு இடமாக இருக்கிற' என்று சொல்லப்பட்டது. 'ஸபுவந' என்கிற பதத்தோடு சேர்ந்த 'லோக' என்னும் பதமானது ஜனங்களைச் சொல்லுகிறது என்பது பொருந்தாதாகையினாலும், லோகத்திற்கு போகுதலே இல்லாமையினால் திரும்பி வருதலும் இல்லாமையினால் 'ஸபுநராவர்த்திந:' என்னும் பதத்தினால் பரம்பரையாக நாஶமடைதலே லக்ஷணையாகச் சொல்லப்படுகிறது என்று சொல்லுகிறார்—'நாஶத்தை உடையவைகள்' என்று 'ஸபுநராவர்த்திந:' என்னும் பதம் அஜஹல்லக்ஷணையினால் அந்த லோகங்களைச் சொல்லுவதற்கு அந்த லோகத்திலுள்ள ஜனங்கள் திரும்பி வருவதே காரணம் (அதாவது திரும்பிவருகிற புருஷர்களை உடையவைகள் என்று அர்த்தம்). முடிவான அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'ஆகையினால்' என்று. 'மாம்' (என்னை) என்கிற இடத்தில 'து' என்னும் பதத்தினால் காட்டப்பட்ட திரும்பிவராமைக்குக் காரணமாகிய விஶேஷணங்களைக் காட்டுகிறார்—'எல்லாம் தெரிந்தவனும்' என்று ஆரம்பித்து. எல்லாவற்றையும தெரிந்துகொள்ளாததாகவும் அஸத்ய ஸங்கல்பமாகவும், ஸ்ருஷ்டிக்கப்படும் வஸ்துக்களில் சேர்ந்ததாகவும், தயை இல்லாததாகவும், ரஜோகுண தமோகுணங்களினாலுண்டாகிற ராகத்வேஷம் முதலிய அனேகவித மாறுதல்களை உடையதாகவுமிருக்கிற ஒரு அல்பமான தேவதையை அடைந்தவர்களுக்கல்லவோ வேறு தேவதையினாலாவது, அந்தத் தேவதையினாலாவது திரும்பிவருதலுண்டாகும் என்று, விஶேஷணங்களுக்குத் தாத்பர்யம். 16

பா] ப்ரஹ்மலோகம் வரையிலுள்ள லோகங்களுக்கும் அதற்குள்ளிருக்கும் வஸ்துக்களுக்கும் பரம புருஷனுடைய ஸங்கல்பத்தினலேற்படுத்தப்பட்ட உத்பத்தியாகும் காலம், நசிக்கும் காலம், இவைகளின் ஏற்பாட்டைச் சொல்லுகிறார்—

ஸஹஸ்ரயுக³பர்யந்தமஹர்யத்³ ப்³ரஹ்மணோ விது³: ।
ராத்ரிம் யுக³ஸஹஸ்ராந்தாம் தேऽஹோராத்ரவிதோ³ ஜநா: ॥

அவ்யக்தாத்³ வ்யக்தய: ஸர்வா: ப்ரப⁴வந்த்யஹராக³மே ।
ராத்ர்யாக³மே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்தஸஞ்ஜ்ஞகே ॥ பூ⁴த

க்³ராம: ஸ ஏவாயம் பூ⁴த்வா பூ⁴த்வா ப்ரலீயதே ।
ராத்ர்யாக³மேऽவஶ: பார்த² ப்ரப⁴வத்யஹராக³மே ॥ (17-18-19)

ப-ரை] பார்த்த ஓ அர்ஜுன (எவர்கள்) அஹோராத்ரவித³:— பகல்ராத்திரிகளின் கணக்கைத்தெரிந்த, ஜநா: ஜனங்களோ, தே— அவர்கள், யத்—எது, ப்³ரஹ்மண: ப்ரஹ்மாவினுடைய, அஹ: பகலோ, (அதை) ஸஹஸ்ரயுக³பர்யந்தம் ஆயிரம் சதுர்யுகமளவாக, ராத்ரிம் ராத்திரியையும், யுக³ஸஹஸ்ராந்தாம் ஆயிரம் சதுர்யுகமளவுள்ளதாயும், விது³: தெரிந்துகொள்ளுகிறார்கள் அஹராக³மே பகல் வரும் பொழுது, ஸர்வா: எல்லா, வ்யக்தய: ப்ரகாஶமான வஸ்துக்களும், அவ்யக்தாத் ப்ரக்ருதியின் பரிணாமமாகிய ப்ரஹ்மாவின் ஶரீரத்திலிருந்து, ப்ரப⁴வந்தி உண்டாகின்றன, ராத்ர்யாக³மே ராத்திரி வரும் பொழுது, அவ்யக்தஸஞ்ஜ்ஞகே அவ்யக்தம் என்று பெயரை உடைய, தத்ரைவ அந்தப்ரஹ்மாவினுடைய ஶரீரத்திலேயே, ப்ரலீயந்தே லயத்தை அடைகின்றன, ஸோऽயம் அந்த இந்த, பூ⁴தக்³ராம: ப்ராணிகளின் கூட்டங்களே அஹராக³மே பகல் வரும் பொழுது, ப்ரப⁴வதி உண்டாகின்றன. ராத்ர்யாக³மே ராத்திரி வரும்பொழுது, அவஶ: பரவஶமாக, பூ⁴த்வா பூ⁴த்வா உண்டாகி உண்டாகி, ப்ரலீயதே லயத்தை அடைகின்றன. 17-18-19.

பா] எவர்கள் மனுஷ்யன் முதல் சதுர்முகன் வரையிலுள்ள வஸ்துக்

தா] இந்த மூன்று ஶ்லோகங்களுக்கும் முடிவான அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'ப்ரஹ்மலோகம் வரையிலுமுள்ள' என்று ஆரம்பித்து. ப்ரஹ்மா ஸ்வதந்த்ரனாகையினால் ஸத்யலோகம் ஸ்திரமாக இருக்கலாமே? என்கிற ஆக்ஷேபத்தை விலக்குவதற்காகச்சொல்லுகிறார்—'பரம புருஷனுடைய ஸங்கல்பத்தினலேற்படுத்தப்பட்ட' என்று. பகவான்

களுக்கு என்னுடைய ஸங்கல்பத்தினால் ஏற்படுத்தப்பட்ட பகல், ராத்திரி இவைகளின் ஏற்பாட்டைத்தெரிந்த ஜனங்களோ. அவர்கள் சதுர்முக

ஸ்வதந்த்ரனாக இருப்பதே அதிகம் குறைவு இல்லாமல் பகல் ராத்திரி முதலிய விசித்திரங்களான ஏற்பாட்டிற்குக்காரணம், அப்படியே 1 'காலஸ்யஹி ச ம்ருத்யோஸ்ச' 2 'காலசக்ரம் ஜகச்சக்ரம்' என்பவை முதலிய வசனங்களினால் சொல்லப்படுகிறது. இப்படியே மற்றோரி டத்திலும் 3 'ததோ யுகஸஹஸ்ராந்தே ஸம்ஹரிஷ்யே ஜகத் புந: । க்ருத்வா மத்ஸ்தாநி ஸர்வாணி ஸ்தாவராணி சராணி ச ॥' என்பவை முதலான து சொல்லப்பட்டது. மனுஸ்ம்ருதியில 4 'தத்யுகஸஹஸ்ராந்தம் ப்ராஹ்மம் புண்யமஹர்விது: । ராத்ரிஞ்ச தாவதீமேவ தே அஹோராத்ர விதோ ஜநா: ॥' என்று சொல்லி இருக்கிறதே அவ்விடத்தில் 'யே' என்று சொல்லி இருப்பதினால் காமப்படியே அன்வயம் சொல்லலாம். ஸஹஸ்ர' என்னும் இந்த ஸ்லோகத்தில 'யத்' என்னும் பதத்திற்கு 'அஹ:' என்பதோடு அன்வயம் பொருந்தும். ஆகையினால் 'தே' என்பதற்கு 'யே' என்னும் பதம் முன்பு இருக்கவேண்டியது அவசி யம். அப்படியிருந்தாலும் 'யேவிது: தே அஹோராத்ர விதோஜநா:' (எவர்கள் தெரிந்து கொள்ளுகிறார்களோ அவர்கள் பகலிரவு தெரிந்த வர்கள்) என்று அன்வயம சொல்லில் இவ்விடத்தில் ப்ரஸ்தாவமில் லாத பகலிரவைத் தெரிந்தவர்கள் இன்னார் என்று காட்டுகிறதாகவும், அவர்களை ஸ்தோத்திரம் பண்ணுகிறதாகவும், இந்த ஸந்தர்ப்பத்திற்குப் பொருந்தாத வாக்யமாகும். ஆகையினால யேஅஹோராத்ரவிதோஜநா:

---

1 மஹாபாரதம் உத்யோகபர்வம் 37-13 காலஸ்ய-காலத்துக்கும். ம்ருத்யோ ஸ்ச-யமனுக்கும், (பகவான் யஜமானனாகிறான், என்று சேர்த்துககொள்ளவும்

2 மஹாபாரதம் உத்யோகபர்வம் 67-21 காலசக்ரம்-காலசக்ரத்தையும, ஜகச்சக் ரம்-ஜகச்சக்ரத்தையும், பகவான் ஏவுகிறான் என்று சேர்த்துக்கொள்ளவும்.

3 தத:-பிறகு, யுகஸஹஸ்ராந்தே ஆயிரம் சதுர்யுகங்களின் கடைசியில், சராணி சரங்களும், ஸ்த்தாவராணி-ஸ்த்தாவரங்களுமாகிய, பூதாநி- ஜந்துக்களை, மத்ஸ்த் தாநி-என்னிடத்திலிருப்பவைகளாக, க்ருத்வா, செய்து, புன:-மறுபடியும், ஜகத்-லோ கத்தை, ஸம்ஹரிஷ்யே-ஸம்ஹாரம் செய்யப்போகிறேன்.

4 மனுஸ்ம்ருதி, 9-23 எவர்கள், யுகஸஹஸ்ராந்தம்-ஆயிரம் சதுர்யுகங்களில் முடிவாகிறதாக, புண்யம்-பரிசுத்தமான, ப்ராம்ஹம் ப்ரும்ஹாவினுடைய, , தத், அந்த-அஹ:-பகலை, விது:- தெரிந்துகொள்ளுகிறார்களோ, ராத்ரிஞ்ச-ராத்திரியை யும், தாவதீமேவ அவ்வளவாகவே, (தெரிந்துகொள்ளுகிறார்களோ,) தே-அவர்களை, அஹோராத்ரவித:-பகலிரவைத் தெரிந்த ஜநா:-ஜனங்கள்.

ப்ரஹ்மாவுக்கு எது பகலோ அதை ஆயிரம் சதுர்யுகம் வரையிலுள்ள தாகவும், ராத்திரியையும் அப்படிப்பட்டதாகவுமே தெரிந்துகொள்ளுகி ருர்கள். அதில் ப்ரஹ்மாவுக்குப் பகல் வரும்போழுது மூன்று லோகங் களுக்குள்ளடங்கிய தேஹங்கள், இந்திரியங்கள், அனுபவிக்கப்படும் வஸ்

தேஹோராத்ரவிதோ ஜநா:' (எவர்கள் பகலிரவைத்தெரிந்தவர்களோ அவர்களி ப்படிச்சொல்லுகிறர்கள்) என்கிற அன்வயமே இப்படிக்காலத்தினேற் பாடு,ப்ரமாணத்தை அனுஸரித்தது,என்றுகாட்டக்கூடியதாகையினுல் இவ்விடத்திலேயப்புக்கொள்ளத் தகுந்தது. என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'எவர்கள்' என்று ஆரம்பித்து. இங்கே அனுவதிக்கப்ப டுகிற பகல் ராத்திரிகளைத் தெரிந்தவனுக இருக்கை ப்ரஸித்தியை அனு ஸரித்து, எல்லோரையும் பற்றியதாகவே இருக்கவேண்டும். இத்தால் இது ப்ரஹ்மாவுக்கும் மனுஷ்யர்களுக்கும் ஸமானம், என்பது காட்டப் பட்டதாகவுமாம், என்கிற அபிப்ராயத்தினுல்'மனுஷ்யன் முதல்'என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்டது. இவ்விடத்திலிருக்கும் ப்ரஹ்மா என் னும பதம் பரமாத்மாவைச்சொல்லுகிறது, என்கிற ப்ரமத்தை நீக்குவ தற்காக'சதுர்முகன்' என்னும் பதம் சொல்லபபட்டிருக்கிறது. அவருக் கல்லவோ ஆயிரம் யுகங்களென்கிற ஏற்பாட்டோடுகூடிய பகல் ராத்தி ரிகளின் பிரிவு ப்ரஸித்தமாக இருக்கிறது, என்று தாத்பர்யம். விசேஷ ணத்தோடு கூடிய விதியும், விலக்கும், விசேஷணத்திலும் அன்வயிக் கும் என்கிற ந்யாயத்தினுலும் 'யேஹோராத்ரவிதோ ஜநா:' என்று பகலிரவைத்தெரிந்துகொண்டவர்களாகஇருக்கை அனுவதிக்கப்படுகிற படியினுலும். ஆயிரம் சதுர்யுகம் வரையிலுள்ள தென்பதைத் தெரிந்து கொள்ளுகையே இங்கே விதிக்கப்படுகிறது, என்கிற அபிபராயத்தி னுல் 'அதை ஆயிரம் சதுர்யுகம் வரையிலுள்ளதாகவும்' என்று இவை முதலியது சொல்லப்பட்டது. ஆயிரம் யுகங்கள் எதற்கு அளவோ அது 'ஸஹஸ்ரயுகபர்யந்தம்' என்று சொல்லப்படுகிறது. யுக என்னும் பதம் இவ்விடத்தில், மற்ற பரமாணங்களை அனுஸரித்துச் சதுர்யுகங்களைச் சொல்லுகிறது. ப்ரஹ்மாவுக்குப் பகலிரவுகளி னேற் பாடு இப்படியே இருக்கட்டும், இத்தால், கீழ் ப்ரஸ்தாவித்ததற்கு என்ன ஸாதகம்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் 'அவ்யக்தாத்' என்கிற ஶ்லோகம் அதின் அர்த்தத்தைச் சொல்லுகிறுர்—'அதில்' என்று ஆரம்பித்து. இதின் கருத்தாவது. இவ்விடத்தில் 'வ்யக்தய:' என்னும் பதமானது மஹான் முதலியதைப் பற்றியதல்ல. அவை ப்ர ஹ்மாவுக்கு முன்னமேயே உண்டாகிறபடியினுல்; ஆகையினுல் ப்ரஹ்

துக்கள், அனுபவிக்குமிடங்கள், ஆகிய இந்த வஸ்துக்கள், ப்ரஹ்மாவுக்குத்தேஹமாக மாறி இருக்கும் ப்ரக்ருதியினிடத்தில் இருந்து உண்டாகின்றன. அந்த ப்ரக்ருதியின் மாறுதலாகிய ப்ரஹ்மாவினுடைய தேஹத்திலேயே ராத்திரி வரும்பொழுது லயத்தை அடைகின்றன. கர்மங்களுக்கு வஸப்பட்ட இந்தப்ராணிகளின் கூட்டம் பகல் வரும்பொழுது உண்டாகி

மாவினால் ஸ்ருஷ்டிக்கப்படுகிற வஸ்துக்களைப் பற்றியதே இந்தப்பதம். ப்ரகாஸம் செய்யப்படுகின்றன என்கிற வ்யுத்பத்தியினால் 'வ்யக்தய:' என்று சொல்லப்படுகின்றன. அதிலும் ஸத்யலோகம் முதலியவைகளை நீக்கி, ஒவ்வொரு கல்பத்திலும் நாஸமில்லையாதலால் மூன்று லோகங்களுக்கு உள்ளடங்கிய தேஹம் இந்த்ரியம் முதலிய வஸ்துக்களை மாத்ரம் சொல்லுகிறது, என்று ஒப்புக்கொள்ள வேண்டியது. அவைகளுக்கு உத்பத்தியும் ப்ரஹ்மாவின் ஸரீரத்திலிருந்தே. ஆகையினாலேயே 'அவ்யக்த' என்னும் பதமும் மூலப்ரக்ருதியைச் சொல்லுகிறதல்ல. பின்னை எதையென்னில் அவைகளுக்கு உபாதான காரணமாகிய ப்ரஹ்மாவின் ஸரீரத்தையே சொல்லுகிறது, ஸரீரத்தில் 'அவ்யக்த' என்னும் பதத்தை ப்ரயோகிக்கலாமென்பது ஸூத்ரத்திலேயே 1 'ஸூக்ஷ்மந்து ததர்ஹத்வாத்' என்று நிரூபிக்கப்பட்டது. இப்படிப்பட்ட ஸ்ருஷ்டி ப்ரளயம், இவைகளுக்குக் காரணத்தையும் அதற்கு நாஸமில்லாமையினால் ஸ்ருஷ்டி ப்ரளயமிவைகளின் வரிசை இடைவிடாமலிருக்கிறது என்பதையும், செய்யப்படாத கர்மங்களுக்குப் பலமும் வரலாம், செய்யப்பட்ட கர்மங்களுக்குப் பலமில்லாமலும் போகலாமே, என்கிற ஆக்ஷேபங்களுக்குப் பரிஹாரத்தையும், இப்படிக் கீழ்ச்சொன்ன அர்த்தம் எல்லாக் கல்பங்களிலும் ஸமமாகவே வ்யாபரித்து இருக்கிறது என்பதையும், முன்போலவே ஸ்ருஷ்டிக்கிறான் என்பதையும், 'பூதக்ராம:' என்கிற ஸ்லோகம் சொல்லுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'கர்மங்களுக்கு' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் 'பூத' என்னும் பதமானது, அசேதனங்களோடு சேர்ந்திருக்கும் ஜீவாத்மாக்களைச் சொல்லுகிறது. இங்கு ஸ்ருஷ்டிக்கப்படுவதற்கும் ஸம்ஹரிக்கப்படுவதற்கும் காரணமாகிய பரவஸமாக இருக்கை கர்மங்களைப் பொறுத்ததே என்கிற அபிப்ராயத்தினால் 'கர்மங்களுக்கு வஸப்பட்ட' என்று சொல்லப்பட்டது. 'அஹராகமே' என்னும் பதத்தை 'பூத்வா' என்கிற இடத்திலும் சேர்த்துக்கொள்ள வேண்டியது. என்கிற அபிப்ராயத்தினால் 'பகல் வரும்பொழுது உண்டாகி' என்று

---

1 ஸாரீரகஸூத்ரம் 1-4-2. ஸூக்ஷ்மமான அவ்யக்தமே ஸரீரமாகிறது அப்படியானபிறகே காரியங்களுக்குத் தகுதியாகிறபடியினால்.

உண்டாகி ராத்திரி வரும்பொழுது லயத்தை அடைகிறது. மறுபடியும் பகல் வரும்பொழுது உண்டாகிறது. அப்படியே நூறாவது வருஷத்தின் முடிவாகிய, ஆயிரம் சதுர்யுகங்களின் கடைசியில் ப்ரஹ்மலோகம் வரையிலுமுள்ள லோகங்களும் ப்ரஹ்மாவும் * பூமி, ஜலங்களில் லயத்தை அடைகிறது. ஜலங்கள் தேஜஸ்ஸில்லயத்தை அடைகின்றன'' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்களில் சொல்லுகிற க்ரமப்படி, அவ்யக்தம், அக்ஷரம் தமஸ்ஸு வரையிலும் என்னிடத்திலேயே லயத்தை அடைகின்றன. இப்படி என்னைத்தவிர மற்றதெல்லாம் காலங்

அன்வயம் சொல்லப்பட்டது. இந்த நைமித்திக ப்ரளயத்தைச் சொன்னது ஶ்ருதி முதலியவைகளில் சொல்லப்பட்ட ப்ராக்ருத ப்ரளயத்திற்கும் உபலக்ஷணம் ஆகையினால் ஸத்ய லோகத்திற்கும் நாஶம் ஏற்பட்டது. 'ஆப்ரஹ்மபுவநால்லோகா:' என்றல்லவோ ஆரம்பிக்கப்பட்டது. என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அப்படியே' என்று. அதன் றிக்கே 'ராத்ர்யாகமே' (ராத்திரி வரும்பொழுது) என்னும் பதமே ப்ரஹ்மாவின் கடைசி ராத்திரியின் வருதலையும் நேராகவே சேர்த்துச சொல்லுகிறது, என்று தாத்பர்யம். இதுவும்—'நூறாவது வருஷத்தின் முடிவாகிய ஆயிரம் சதுர்யுகங்களின் கடைசியில்' என்பதினால் காட்டப் பட்டது. அப்படியே ஸ்ம்ருதியில் 1 'நிஜேந தஸ்யாப்தமாநேந ஆயுர்வர்ஷஶதம் ஸ்ம்ருதம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியே, 'அஹராகமே' (பகல்வரும்பொழுது) என்னும் பதமும் முதல் பகலையும்சேர்க்கிறது. ப்ருதிவீ முதலிய வஸ்துக்களே நாஶமடையும்பொழுது அவைகளினுலுண்டாக்கப்பட்ட ப்ரஹ்மலோகம் ப்ரஹ்மாவின்ஶரீரம்,ப்ரஹ்மாண்டம் முதலியவைகளுக்கு ப்ரஸ்தாவமேது என்கிற அபிப்ராயத்தினால் ப்ருதிவீ என்று ஆரம்பித்தஶ்ருதிவாக்யம்எடுக்கப்பட்டது. தமஸ்ஸென்னும் தஶையை உடைய அசேதநவஸ்துவுக்கு லயம்பரமனுனதேவனிடத்தில் என்று ஶ்ருதியில் சொல்லப்படுகிறது. இந்தக் கீதையிலும் 2 'அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளய:' என்றிவை முதலானது சொல்லப்படுகிறது, என்கிற அபிபராயத்தினால், 'என்னிடத்திலேயே' என்று சொல்லப்பட்டது. இப்படியே 4 'எவன் முதலில் ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டிக்கிறானோ' என்றும் 3 'ஒரு நாராயணனே இருந்தான் ப்ரஹ்மாவுமில்லை, ருத்திரனுமில்லை,' என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்களில் சொல்லிய க்ரமப்படி மறுபடி ப்ரஹ்மா முதலியவர்களுக்கு ஸ்ருஷ்டியும் மறுபடியும் ப்ரளயமும், என்றிவை முதலியது அறிய

---

* ஸுபாலோபநிஷத, 2,

1 தஸ்ய-அந்த ப்ரம்மாவுக்கு, நிஜேந-தன்னுடையதான, மாநேந-அளவினல்- வர்ஷஶதம்-நூறுவருடங்கள் ஆயு:-ஆயுஸ்ஸாக, ஸ்ம்ருதம்-சொல்லப்பட்டது.

2 பகவத்கீதை 7-6. 3 ஶ்வேதாச்வதரோபநிஷத் 6-18. 4 மஹோபநிஷத் 1-1.

களின் ஏற்பாட்டின்படி என்னிடத்திலிருந்து உண்டாகிறபடியினாலும், என்னிடத்தில் லயத்தை அடைகிறபடியினாலும் அவைகளுக்கு உத்பத்தி நாஶங்களை உடைத்தாயிருக்கை தள்ளமுடியாது. ஆகையினால் ஐஶ்வர்யமாகிற ப்ரயோஜனத்தை அடைந்தவர்களுக்குத் திரும்பி வருதல் பரிஹரிக்கமுடியாது. என்னை அடைந்தவர்களுக்கோ வெனில் திரும்பி வருதலின் ப்ரஸ்தாவமே இல்லை 17-18-19.

பா] பிறகு கைவல்யத்தை அடைந்தவர்களுக்கும் திரும்பிவருதல் இல்லை என்று சொல்லுகிறார்— 20-21.

பரஸ்தஸ்மாத்து பாவோऽந்யோऽவ்யக்தோऽவ்யக்தாத் ஸநாதந: |
ய: ஸ ஸர்வேஷு பூதேஷு நஶ்யத்ஸு ந விநஶ்யதி ||(௨௦)
அவ்யக்தோऽக்ஷர இத்யுக்தஸ்தமாஹு: பரமாம் கதிம் |
யம் ப்ராப்ய ந நிவர்தந்தே தத்தாம பரமம் மம || (௨௧)

ப-ரை] தஸ்மாத் அந்த, அவ்யக்தாத் அசேதநமாகிய ப்ரக்ருதியைவிட, அந்ய: வேறானதாயும், பர: மேலானதாயுமிருக்கிற, பாவ: வஸ்துவானது, அவ்யக்த: வேறொரு ப்ரமாணத்தினாலேயும் அறியத்தகாதது, ஸநாதந: அனாதியானது. ய: எந்த வஸ்துவானது, ஸர்வேஷு எல்லா, பூதேஷு ஆகாஶம் முதலிய பஞ்சபூதங்களானவை, நஶ்யத்ஸு நாஶமடையும் பொழுதும், ந விநஶ்யதி நசிக்கிறதில்லையோ, ஸ: அந்த ஆத்மா, அவ்யக்த: அவ்யக்தம் என்றும், அக்ஷரம் அக்ஷரம் என்றும், உக்த: சொல்லப்பட்டது, தம் அந்த ஆத்மாவை, பரமாம் உயர்ந்த, கதிம் அடையத்தகுந்த வஸ்துவாக, ஆஹு: சொன்னார்கள், யம் எந்த ஜீவா

வேண்டியது. இப்படிப்பட்ட ஸ்ருஷ்டியையும், ப்ரளயத்தையும் நிரூபித்ததற்கு ப்ரக்ருதத்தினுபயோகத்தைக்காட்டுகிறார்—'இப்படி' என்று ஆரம்பித்து. ஸ்ருஷ்டியையும் ப்ரளயத்தையும் சொல்லும் மற்றெல்லா ஸந்தர்ப்பங்களிலும் இதுவே தாத்பர்யம் என்று அறிய வேண்டியது. 'என்னைத் தவிர மற்றதெல்லாம்' என்பதினால் 1'அஹம் க்ருத்ஸ்நஸ்ய' என்று கீழ்ச்சொன்னது ஞாபகப்படுத்தப்பட்டது. மோக்ஷதர்மத்திலும் 2 'நித்யம் ஹி நாஸ்தி ஜகதி பூதம் ஸ்தாவரஜங்கமம் | ருதே தமேகம் புருஷம் வாஸுதேவம் ஸநாதநம்' என்று சொல்லப்பட்டது. ()

1 பகவத்கீதை, 7, 6.

2 மஹாபாரதம், ஶாந்திபர்வம், மோக்ஷதர்மம், 34 32,

ஏகம்- ஒருவனாகிய, ஸநாதனம்- அனாதியாகிய, தம்- அந்த, புருஷம்- புருஷனை, வாஸுதேவம்ருதே- வாஸுதேவனை தவிர, ஜகதி- உலகத்தில், ஸ்தாவரஜங்கமம்- ஸ்தாவரமாகவும் ஜங்கமமாகவுமுள்ள, பூதம்- ப்ராணியானது, நித்யம்- நாஸ்திஹி- நித்யமானதன்றல்லவா, (அழிவுள்ளது) என்று அர்த்தம்.

த்மாவை, ப்ராப்ய அடைந்து, ந நிவர்த்தந்தே திரும்புகிறதில்லையோ, தத் அந்த ஜீவாத்மஸ்வரூபமானது, மம எனக்கு பரமம் மேலான, தாம (நியமிக்கும்) இடம், அன்றிக்கே பரமம் மேலான, தாம ஞானமாகிற ப்ரகாசத்தை உடைய, தத் அந்த ஆத்மாவானது, மம எனக்கு சேஷ பூதம். 20-21

பா] அந்த அசேதனமாகிய ப்ரக்ருதியைவிட ப்ரயோஜனமாக இருக்கை யில் சிறந்ததான ஆத்மா என்னும் வஸ்துவானது, ஞானம் ஒன்றையே ஸ்வரூபமாக உடையதாகையினால் அதைவிட வேறுபட்டது. ஒரு ப்ர

தா] 'பர:' என்று ஆரம்பித்து இரண்டு ஶ்லோகங்களின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'பிறகு' என்று இதின் கருத்தாவது பகவானை அடைந்தவர்களுக்குத் திரும்பிவருதல் இல்லை. என்பது முன்னமே சொல்லப்பட்டது. அவ்யக்தத்தைவிட மேலானதாகச் சொல்லப்பட்ட அக்ஷரமும் ஜீவனுகளை இருக்கவேண்டும் 1 'க்ஷேமயஜீஞவுத்ரஞ' என்பவை முதலியவைகளின் ஞாபகம் வருவதினால், கைவல்யத்தை விரும்புகிறவர்களுக்குத தாழ்ந்த கதியை அடைதல் இல்லாமையினால் திரும்பிவருதல் இல்லையென்று, சொல்லவேண்டியது மட்டு அவஸ்யம்தான். ஆகையினால் அதையே சொல்லுகிறது இவ்விரண்டு ஶ்லோகங்களும், என்று. அவ்யக்தமே முன்பு ப்ரஸ்தாவிக்கப்பட்டபடியினால் இங்கும் 'அவ்யக்தாத்' என்றே பதம் பிரித்துக்கொள்ள வேண்டியது. இதற்கு அவஸ்யம் வேண்டியதாகையினால் 'பரஸ்தஸ்மாத்' என்கிற இரண்டு பதங்களுடனும் அன்வயம் சொல்லிக்கொள்ள வேண்டியது. அதிலும் புனருக்தி என்னும் தோஷத்தை விலக்குவதற்காகச் சிறந்தது என்பதைச் சொல்லிக்கொண்டு அதின் வழியாக ப்ரயோஜனம் என்பதைக் காட்டுகிறது. 'பர:' என்னும் பதம். அதினாலேயே ஸ்வரூபம் வெவ்வேறு என்பது ஏற்பட்டபடியினால் 'அந்ய:' என்னும் பதம் ஸ்வபாவம் வேறு என்பதைக் காட்டுகிறது. அப்படிப்பட்ட வேறான ஸ்வபாவமும் சேதனமாக இருக்கையே என்று பரமாணத்தி லேற்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அந்த' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் 'பாவ:' என்னும் பதமானது வஸ்து என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது. 'வ்யக்த:' என்று பதம் பிரிப்பது யுக்தமல்ல. 'அவ்யக்தோக்ஷர:' என்று இங்கேயே சொல்லப்போகிறபடியினாலும் அறியமுடியாத ஜீவாத்மாவினிடத்தில் 'வ்யக்த:' என்னும் பதத்தை ப்ரயோகிப்பது பொருந்தாதாகையினாலும், என்கிற அபிப்ராயத்தினால்

---

1 பகவத்கீதை 7-5.

மாணத்தினாலும் ப்ரகாஶம் செய்யப்படாததாகையினால் அவ்யக்தம். அதாவது தன்னாலேயே அறியக்கூடிய தனக்கு அஸாதாரணமான ஸ்வபாவத்தை உடையது. உத்பத்தி, நாஶம் இவைகளை அடையத்தகாததாகையினால், நித்யம். எந்த ஆத்மாவானது ஆகாஶம் முதலிய எல்லாப் பூதங்களும் தங்கள் தங்கள்காரணங்களுடனும்,காரியங்களுடனும் நாஶத்தை அடையும்பொழுது, .அந்தந்தப் பூதங்களுக்குள் தான் இருந்தபோதிலும் நாஶம் அடைவதில்லையோ, அந்த ஆத்மா அவ்யக்தம் என்றும் அக்ஷரம்

சொல்லுகிறார்—'ஒரு ப்ரமாணத்தினாலும்' என்று ஆரம்பித்து. ஜீவனை அவ்யக்தம் என்பது யுக்தமல்ல; ப்ரத்யக்ஷம், அனுமானம், ஶாஸ்த்ரங்கள், இவைகளினால் அதனதற்குத் தக்கபடி ஆத்மா ப்ரகாஶம் செய்யப்படுகிறான் ஆகையினால். அப்படிக்கில்லாவிடில் 1 ஆகாஶத்தாமரைப் பூப் போலாகவேண்டும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'தன்னாலேயே' என்று ஆரம்பித்து. மற்ற ப்ரமாணங்கள் பொதுவாக ஆத்மாவை நிரூபிக்கின்றன, என்று தாத்பர்யம். இது நித்யம் என்பதில் இரண்டாவது அத்யாயத்தில் சொல்லப்பட்ட காரணங்களை ஞாபகப்படுத்துகிறது—'உத்பத்திவிநாஶங்களை அடையத்தகாததாகையினால்' என்பது. இவ்விடத்தில் 'பூதேஷு' என்கிற பதம் பஞ்ச பூதங்களைச் சொல்லுகிறது. அவைகள் நாஶமடைந்தபோதிலும் ஆத்மா நிற்கிறது என்று சொல்லுகிறபடியினால் நித்யம் என்பது ஶ்ரமமில்லாமல் கிடைப்பதினால். இவ்விடத்தில் 'ஸர்வேஷு' என்கிற பதத்தினுடைய அபிப்ராயத்தினால் காரணங்களோடு கூட இருக்கையும் காரியங்களோடு கூட இருக்கையும் ஏற்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஆகாஶம் முதலிய' என்று ஆரம்பித்து. ப்ரஸ்தாவத்துக்கு வந்ததேயானால் அப்படிப்பட்ட நாஶம் ஜீவனுக்கு கிடையாது; என்று தடுக்கவேண்டும். அப்படி ஜீவனுக்கு நாஶம் வர வேண்டிய ப்ரஸ்தாவமும், நாஶமடையும் வஸ்துக்களுக்குள் ப்ரவேஶித்திருப்பதினால். எப்படிக்கென்னில், எள்ளு கொளுத்தப்பட்டதேயானால் அதற்குள்ளிருக்கும் எண்ணெய்,எவ்விதம்கொளுத்தப்படுகிறதோ அப்படி; ஆகையினால் 'ஸர்வேஷு பூதேஷு நஶ்யத்ஸு' (எல்லா ப்ராணிகளும் நாஶமடைந்தபோதிலும்) என்பதின் ஸாமர்த்யத்தினால் ஏற்பட்ட அர்த்தம்—'அந்தந்தப் பூதங்களுக்குள் தானிருந்தபோதிலும்' என்று சொல்லப்பட்டது. 'யஸ்ஸ ஸர்வேஷு' என்கிற இடத்தில் 'ஸ:' என்கிற பதத்திற்கு அதிக ப்ரயோஜனமில்லாமையினால் மேலே அவஶ்யம் வேண்டி இருக்கிறபடியினாலும், 'அந்த ஆத்மா அவ்

---

1 இல்லாமல் போகவேண்டும் என்று கருத்து.

என்றும் * 'யே த்வக்ஷரமநிர்தேஶ்யம் அவ்யக்தம் பர்யுபாஸதே † கூடஸ்தோக்ஷர உச்யதே' என்றிவை முதலிய இடங்களில் சொல்லப்பட்டான். அந்த ஆத்மாவையே வேதம் தெரிந்தவர்கள் உயர்ந்த கதியாகச் சொன்னார்கள். இந்த ஆத்மாவே ‡ 'ய: ப்ரயாதி த்யஜந்தேஹம் ஸ யாதி

யக்தமென்றும் அக்ஷரமென்றும்' என்று அன்வயம் சொல்லப்பட்டது. அன்றிக்கே அங்கே இருக்கும் பதத்தை இங்கே இழுத்துக் கொண்டதாகவுமாம். 'சொல்லப்பட்டது' என்பதற்கு எவ்விடத்தில் என்று கேட்கில் ஸமாதானம் சொல்லுகிறார்—"யே த்வ" என்று ஆரம்பித்து இந்த ஸந்தர்ப்பங்களில் 'அக்ஷர:' என்னும் பதம் ஜீவனைச் சொல்லுகிறது என்பது அந்தந்த இடங்களிலேயே தெளிவாக இருக்கிறது. 'உத்தம: புருஷஸ்த்வந்ய:' என்றிவை முதலியவைகளினால் பகவானை விடவேறு என்று சொல்லப்பட்டிருக்கிறபடியினால்; ஆகையினால் இந்த அத்யாயத்திலும், 'அக்ஷரம் ப்ரஹ்ம பரமம்' 'கூடஸ்தோக்ஷர:' என்கிற இடங்களிலிருக்கும் அக்ஷர என்னும் பதங்களினால் பரிபூர்த்தனான ஜீவனே சொல்லப்படுகிறான். "யே த்வ" என்கிற ஶ்லோகத்தில் அவ்யக்த அக்ஷர என்கிற இரண்டு பதங்களையும் ப்ரயோகித்திருக்கிறபடியினால் இவ்விடத்திலும் 'கூடஸ்தோக்ஷர உச்யதே' என்று அந்த இரண்டு பதங்களும் சொல்லப்பட்டிருக்கிறபடியினால் அந்த ஶ்லோகத்தின் ஞாபகம் உண்டாகிறபடியினால், என்று தாத்பர்யம். மேல்வரப் போகிற ஸந்தர்ப்பத்திலிருக்கிற ஶ்லோகம் இவ்விடத்தில் "உக்த:" சொல்லப்பட்டது. என்கிற பதத்தோடு அன்வயித்ததாக எப்படி எடுக்கப்படுகிறது. என்னில் அந்தந்த ஸந்தர்ப்பங்களில் விவரணம் செய்யக்கூடிய ஶ்ருதி வாக்யங்களை நினைத்துக்கொண்டு அந்த அந்த ஶ்லோகங்களை எடுத்திருக்கிறது. அன்றிக்கே 'நிஹதா: பூர்வமேவ' என்பதைப்போலத் தன்னுடைய ஸங்கல்பத்தில் தோன்றி இருக்கிறபடியினால் அப்படிச்சொல்லப்பட்டது. 'ப்ராஹு:' (சொன்னார்கள்) என்கிற இடத்தில் கர்த்தா எவர்கள் என்று அபேக்ஷை உண்டாகில் ‖ 'யதக்ஷரம் வேதவிதோ வதந்தி' என்று கீழ்ப்ரஸ்தாவிக்கப்பட்டதாய் இவ்விடத்திற்கு உசிதமுமான கர்த்தாவைச் சேர்த்துக்கொண்டு சொல்லுகிறார்—'வேதம் தெரிந்தவர்கள்' என்று. 'பரமாம் கதிம்' என்று, பொதுவாகச்சொன்னது இத்தால் விஶேஷித்துக் காட்டப்பட்டது, என்று சொல்லுகிறார்—இந்த 'ஆத்மாவே' என்று ஆரம்

---

* பகவத்கீதை-12-3. † பகவத்கீதை-15-16. ‡ பகவத்கீதை 8-13.
‖ பகவத்கீதை- 8-11.

ஸம்ஸ்திதம்' என்கிற இடத்தில் 'ஸம்ஸ்திதம்' என்கிற பதத்தினுல் சொல்லப்பட்ட ப்ரக்ருதியின் ஸம்பந்தத்தைவிட்டு நீங்கித் தன்னுடைய ஸ்வரூபத்துடன் இருக்கும் ஆத்மா, என்று அர்த்தம். எந்த இப்படிப்பட்ட தன்னுடைய ஸ்வரூபத்துடன் இருக்கும் ஆத்மாவை அடைந்து திரும்பி வருவதில்லையோ அது, எனக்குச் சிறந்த நியமனம் செய்யும் இடம். அதாவது அசேதனமாகிய ப்ரக்ருதி, ஒரு நியமனம் செய்யுமிடம். அவைகளோடு சேர்ந்திருக்கும் ஜீவாத்மா, இரண்டாவது நியமனம் செய்யுமிடம். அசேதனத்தின் ஸம்பந்தத்தை விட்டு நீங்கித் தன்னுடைய ஸ்வரூபத்துடன் கூட இருக்கும் முக்தாத்மாவின் ஸ்வரூபம் மேலான நியமிக்குமிடம்,

---

பித்து. அன்றிக்கே இவ்விடத்தில் 'தஸாஹ:ஸம்ஸ்திதம்' என்று சொன்னது 'ஸ்யாதிஸம்ஸ்திதம்' என்று முன்பு சொன்னதை ஞாபகப்படுத்துவதற்காக, என்று தாத்பர்யமாகவுமாம். அந்த ஆத்மாவினிடத்தில் 'ஸூக்ஷ்மஸம்ஸ்தி' என்னும் பதங்களைப் ப்ரயோகிப்பதற்கு யோக்யதை உண்டு என்று காட்டுகிறார்—'ப்ரக்ருதியின்ஸம்பந்தத்தை' என்று ஆரம்பித்து. திரும்பிவராமைக்குக் காரணமாக இது சொல்லப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினுல், 'இப்படிப்பட்ட' என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்டது. 'தஸ்யஸம்ஸ்த' என்று கேவலம் ஸம்பந்தம் மாத்திரத்தைச் சொல்லுவது முன்னமே ஏற்பட்டிருக்கிறபடியினுலும், இடம், என்றால் எவனுடையது என்கிற கேள்வியை உடையதாகையினுல், '1 எவன்ஆத்மாவிலிருக்கிருனே' என்கிற அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்தில் சொல்லப்பட்ட பகவானுல் அதிஷ்டானம் செய்யக்கூடிய இடம் 'யாஸ' என்னும் பதத்தினுல் சொல்லப்படுகிறது. என்று சொல்லுகிருர்—'நியமனம் செய்யும் இடம்' என்று. வேறு எது நியமனம் செய்யுமிடம்? அந்த இடத்தை விலக்குவதற்காக இங்கே சிறந்த என்னும் பதம் சொல்லி இருக்கிறது? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிருர்—'அசேதனமாகிய' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் 'ஸம்யாஸ' என்று சொல்லி இருக்கிறபடியினுல் பரிசுத்தமான ஆத்மாவைச்சொல்லுகிறது, என்பது ஏற்பட்டது; ஆகையினுல் அபத்தனை ஜீவனும் சிறந்ததல்ல என்றே சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிருர்—'அவைகளோடு சேர்ந்திருக்கும்' என்றுஆரம்பித்து. முக்தியை அடைந்தவனும்பரமாத்மாவுக்குபராதீனுக இருந்தால் அப்பொழுது ஸ்வதந்த்ரனுகிய பரமாத்மாவினுல் மறுபடியும் ஸம்ஸாரமாகிய பள்ளத்தில் தள்ளப்படட்டுமே? என்கிற

---

1 ப்ரஹதாரண்யகம் 5-7-22 மாத்யமதின பாடம்.

என்று அர்த்தம். அதற்கு மேன்மையாவது, திரும்பிவருதலில்லாமை. அதுவுமன்றிக்கே, ‘யஶ’ என்னும் பதமானது ப்ரகாஶம் என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது. இவ்விடத்தில் ப்ரகாஶமாவது ஞானம். ப்ரக்ருதியோடு சேர்ந்தவனாய், சுருங்கிய ஞானத்தையே ஸ்வரூபமாக உடைய ஆத்மாவைவிடச் சுருக்கமில்லாத ஞானத்தை ஸ்வரூபமாக உடையவனாகையினால் முக்தாத்மாவின் ஸ்வரூபம் மேலான ப்ரகாஶம். 20-21

ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம்சொல்லுகிறார்—‘அதற்குமேன்மையாவது’ என்றுஆரம்பித்து. இதின் கருத்தாவது—அவித்யை முதலியன அல்லவோ ஸம்ஸாரத்திற்குக் காரணம், பராதீனனாக இருக்கை மாத்திரம் அல்ல. அவித்யை முதலியவைகள் முழுமையும் நாஶமடைந்து விடுகிறபடியினாலும், பகவானுடைய க்ருபை முதலியவைகள் ஸ்வபாவத்திலேயே உள்ளவைகளாகையினாலும் முக்தனுக்கு ஸம்ஸாரம் என்னும் வாஸனையே இல்லை, என்று அர்த்தம். அன்றிக்கே பகவானை அடைதல் மாத்திரம் திரும்பிவருதலில்லாதது,என்பதில்லை; பின்னை எதெனில்,பரிஶுத்தனான ஜீவாத்மாவை அடைதலும் தாழ்ந்தகதிக்கு வருதலில்லாததினால்அப்படியே, என்று தாத்பர்யம் ‘நியமனம்செய்யுமிடம் என்று தன்னை அடைந்தவனைக் குறித்து விஶேஷணம சொல்வதில் அத்ருப்தியினால் சொல்லுகிறார்—‘அதுவுமன்றிக்கே’என்று ஆரம்பித்து. தேஜஸ்ஸு என்னும் அர்த்தத்தைசசொல்லுகிற ‘யஶ’ என்னும் பதமும்ப்ரகாஶத்தைச் சொல்லட்டும்; அதற்கு இவ்விடத்தில் எபபடி அன்வயம்என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்--‘இவ்விடத்தில் ப்ரகாஶமாவது’ என்று. இந்த விஶேஷணத்தினு லேற்பட்ட அர்த்தத்தைக் காட்டுகிறார்—‘ப்ரக்ருதியோடு சேர்ந்தவனாய்’ என்று ஆரம்பித்து. பரகாஶத்தைசசொல்லுகிறது,என்னும் பக்ஷததில தஐ அநத ‘வரஶ0’ (சிறந்த) ‘யஶ’ (ப்ரகாஶம் என்கிற ஞானத்தை ஸ்வரூபமாக உடைய ஆத்மாவானது ‘மம’ (எனக்கு) (ஶேஷம்) என்று வாக்யத்திற்கு அர்த்தம் சொல்ல வேண்டியது, ‘ஊவஶேஷம்’ என்கிற ஶ்லோகத்தினால் முன்னமேயே, ஆத்மாக்களெல்லாம் தனக்கு ஶேஷம் என்பது சொல்லப்பட்டது ஆனாலும் அவ்விடத்தில் ஸமஷ்டி ஆத்மாக்களை மாத்ரம் பற்றியது என்று தோன்றுகின்றது. இவ்விடத்திலோ முக்தாத்மாவும் தனக்கு ஶேஷபூதன் என்று சொல்லப்படுகிறது. ஆகையினால் புனருக்தி இல்லை. 20-21

பா] ஞானிக்கு அடைய வேண்டிய பலமோவெனில், அதைவிட மிகவும் வேறுபட்டது என்று சொல்லுகிறார்—

புருஷஸ்ஸ பர: பார்த² ப⁴க்த்யா லப்⁴யஸ்த்வநந்யயா ।
யஸ்யாந்த:ஸ்தா²நி பூ⁴தாநி யேந ஸர்வமித³ம் ததம் ॥ (௨௨)

ட-ரை] பார்த² அர்ஜுன, பூ⁴தாநி எல்லா ப்ராணிகளும், யஸ்ய எந்தப்பரம புருஷனுடைய, அந்த:ஸ்தா²நி உள்ளிருக்கின்றனவோ, யேந எந்தப் பரமபுருஷனால், இத³ம் இந்த, ஸர்வம் எல்லாம், ததம் வ்யாபிக்கப்பட்டதோ, ஸ: அந்த, பர: மேலான, புருஷ: புருஷன், அநந்யயா வேறொன்றிலும் செலுத்தாத, ப⁴க்த்யா பக்தியினால், லப்⁴ய: அடையத்தக்கவன். 22

பா] ‘*மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சித³ஸ்தி த⁴நஞ்ஜய। மயி ஸர்வமித³ம் ப்ரோதம் ஸூத்ரே மணிக³ணா இவ॥ † மத்ஸ்தா²நி ஸர்வபூ⁴தாநி’ என்றிவை முதலியவைகளினால் சொல்லப்பட்ட தான எந்தப்பரமாத்மாவின் உள்ளே எல்லாப்ராணிகளும் இருக்கின்றனவோ. எந்தப்பரம புருஷனால் இவை

தா] ‘புருஷஸ்ஸ பர:’ என்கிற ஶ்லோகத்தில் ‘து’ என்கிற பதமிருப்பதினால், வேறு அர்த்தத்தைச் சொல்லுகிறது, என்று ஏற்படுவதினாலும். ‘அநந்யயா ப⁴க்த்யா’ என்கிற பதங்களின் ஸாமர்த்யத்தினாலும், ‘புருஷ:’ என்னும் பதத்திற்கு பரமாத்மாவினிடத்தில், ஶரீரத்தில் வஸித்தல், எங்கும் நிறைந்திருத்தல், எல்லா வஸ்துக்களுக்கும் முந்தி இருத்தல், தன்னை ஆஶ்ரயித்தவனுக்கு அவன் கேட்டதைவிட அதிக பலத்தைக்கொடுத்தல் முதலிய காரணங்களினால் ‘1 ஆயிரம் தலைகளை உடைய புருஷன்’ என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளில் அதிகமாகப்ரயோகம் இருக்கிறபடியினாலும், ‘பரம்’ என்கிற விஶேஷணமிருப்பதினாலும் கீழ்ச்சொல்லிய பலத்தைவிட அதிக பலத்தைச்சொல்லவந்தது இந்த ஶ்லோகம், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘ஞானிக்கு’ என்று ஆரம்பித்து. ‘வேறுபட்டது’ என்பதோடு வேறாக்கக்கூடிய ஸ்வபாவங்களினால் என்று சேர்த்துக்கொள்ளவும், அன்றிக்கே சிறந்தது, என்றாவது அர்த்தம் சொல்லிக்கொள்ளவுமாம். ஆகாஶம் முதலியவைகள் உள்ளே ப்ரவேஶித்திருந்தபோதிலும் அவைகளுக்கு மேன்மை இல்லையாதலால் அது ஸித்திப்பதற்காக ‘யஸ்ய’ என்று ப்ரஸித்தமாக இங்கே சொல்லி இருப்

---

* பகவத்கீதை 7-7. † பகவத்கீதை 7-13.

யெல்லாம் வ்யாபிக்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படிப்பட்ட பரம புருஷன் '‡ ஈடநந்யவெதாஹ்லநதஂ' என்று சொல்லியபடிக்கு வேறொரிடத்திலும் செலுத்தாதபக்தியினால் அடையத்தக்கவன். 22

பா] பிறகு ஆத்மாவினுண்மையைத் தெரிந்துகொண்டவனுக்கும், பரமபுருஷனிடத்தில் நிஷ்டையை உடையவனுக்கும் பொதுவாகிய அர்ச்சிராதிகதியைச் சொல்லுகிறார்; இந்த இருவர்களுக்கும் அர்ச்சிராதிகதி ஶ்ருதியில் சொல்லப்பட்டது. அந்தக் கதியும் திரும்பிவாராமையை லக்ஷணமாக உடையது. அப்படியே பஞ்சாக்னி வித்யையில் * 'எவர்கள இந்த ஜீவாத்மாவை இப்படித் தெரிந்துகொள்ளுகிறார்களோ, எந்த இவர்கள் காட்டிலிருந்து கொண்டு ஶ்ரத்தையோடுகூடியவர்களாய் ப்ரஹ்மத்தை இவ்விதமாக உபாஸிக்கிறார்களோ' இவ்விரண்டு பெயர்களும் அக்னியை அடைகிறார்கள். அக்னியினிடத்திலிருந்து, பகலை அடைகிறார்கள்' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அச்சிராதி கதியினால் சென்றவனுக்கு ப்ரஹ்மத்தைஅடைதலும், திரும்பிவருதலில்லாமையும் † 'அந்த வைத்யுதன் இவர்களை ப்ரஹ்மத்தை அடைவிக்கிறான். இந்த வழியினால் சென்றவர்கள இந்த மனுஷ்யர் முதலியவருடையதான அடிக்கடித் திரும்புகிறதான ஸம்ஸாரத்தைக் குறித்துத் திரும்புகிறதில்லை' என்கிற அர்த்தமுள்ள வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது இந்த அர்ச்சிராதி கதியைச் சொல்லுகிற ஶ்ருதி ப்ரஜாபதி வாக்யம் முதலிய இடங்களில் சொல்லப்பட்டதாய் பரவித்யைக்கு அங்கமான ஆத்மானுபவத்தைப்பற்றிச் சொல்லுகிறதுமல்ல. ‡ 'எந்த இவர்கள் காட்டிற்சென்று ஶ்ரத்தையை உடையவர்களாய் ப்ரஹ்மத்தை இவ்விதமாக உபாஸிக்கிறார்களோ' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்

பது கீழ்ச்சொல்லிய மேன்மையைச் சொல்லுகிறது, என்று காட்டுகிறார்—உஃ' என்று ஆரம்பித்து. அநுவாதம், புரோவாத மிவ்விரண்டும், ஒரே அர்த்தத்தை உடையது என்று தாத்பர்யம் ' 1 எதைவிட வேறு மேலான வஸ்து இல்லையோ' என்று அர்த்தமுள்ள வாக்யம் ஆரம்பித்து, அந்தப் புருஷனால் இவையெல்லாம நிறைந்திருக்கிறது என்றர்த்தமுள்ள வாக்யம். வரையிலுமுள்ள ஶ்ருதி வாக்யங்களை ஞாபகப் படுத்துவதற்காக, ' எந்தப் பரமபுருஷனால்' என்று சொல்லப்பட்டது. 'பக்திவேறொரிடத்திலும் செலுத்தப்படாமை' எபபடிப பட்டது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ஈடநந்யவெதாஃ' என்று ஆரம்பித்து. 22

1 ஶ்வேதாஶ்வதரோபநிஷத் 3-9.

‡ பகவத்கீதை 8-14. * சாந்தோக்யம் 5-10-1. ‡ சாந்தோக்யம் 4-15- 6.

தில் பரவித்யையைத் தனித்துச் சொல்லி இருப்பது வ்யர்த்தமானதினால் பஞ்சாக்னி வித்யையிலும் $ இவ்விதமாக ஐந்தாவது ஆஹுதியில் ஜலங்கள் புருஷனென்று பெயர்பெற்றவைக ளாகின்றன. ‡"நல்ல நடத்தை உடையவர்கள், கெட்ட நடத்தை உடையவர்கள்" என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யங்களினால், புண்யபாவங்களைக் காரணமாக உடைய மனுஷ்யன் முதலியனவாகுகை மற்ற நான்கு பூதங்களுடன் கலந்த ஜலத்திற்கே. ஆத்மாவுக்கோவெனில் அவைகளோடு ஸம்பந்தம் மாத்திரம் தான், என்று அர்த்தமுள்ள வாக்யத்தில் சேதனம். அசேதநம் இதுகளின் பேதத்தைச்சொல்லி இந்த ஆத்மாவை* எவர்கள் இப்படித் தெரிந்துகொள்ளுகிறார்களோ அவர்கள் அக்னியை யடைகிறார்கள்.இந்த ஸம்ஸாரத்தைக் குறித்துத் திரும்புவதில்லை" என்று அர்த்தமுள்ள வாக்யங்களினால் வெவ்வேறான இந்தச்சேதநாசேதன வஸ்துக்களைவிட வேண்டியதாகவும்அடையவேண்டியதாகவும் எவர்களிப்படித் தெரிந்துகொள்ளுகிறார்களோ அவர்களர்ச்சிராதி கதியினால் போகிறார்கள் மறுபடித் திரும்புவதில்லை. என்று சொல்லப்பட்டது. ஆத்மாவினுண்மையைத் தெரிந்து கொண்டவனுக்கும் பரமபுருஷனிடத்தில் நிஷ்டையைஉடையவனுக்கும்¶ அந்த வைத்யுதன் அவர்களைப்ரஹ்மத்தை அடைவிக்கிறான் என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தில் ப்ரஹ்மத்தை அடைதல் உண்டு,என்று சொல்லி இருப்பதினாலும் ப்ரக்ருதியைவிட்டு நீங்கின ஆத்மா தத்க்ரது ந்யாயத்தினாலும் தனக்கு அந்தர்யாமியாக உடையதாகையினால் ப்ரஹ்மத்துக்கு ஶேஷமாக இருக்கை ஒன்றையே ஸ்வபாவமாக உடையது, என்று அனுஸந்தானம் செய்ய வேண்டும். பரமாத்மாவுக்கு ஶேஷமாக இருக்கை ஒன்றையே ஸ்வபாவமாக உடையது, என்பதும், ‡‡ 'எவன் ஆத்மாவினிடத்தி லிருந்து கொண்டு' என்று அர்த்தமுள்ள வாக்யமாரம்பித்து, 'எவனுக்கு ஆத்மா ஶரீரமோ' என்று அர்த்தமுள்ள வாக்யம் வரையிலுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளினால் ஏற்பட்டது.

யத்ர காலே த்வநாவ்ருத்திமாவ்ருத்திஞ்சைவ யோகிந: |
ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப || (உ௩)

அக்நிர்ஜ்யோதிரஹ: ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம் |
தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா: || (உ௪)

$ சாந்தோக்யம், 5-11-1 ‡ பாந்தோக்யம், 510-7 * சாந்தோக்யம், 5-9-1.
¶ சாந்தோக்யம் 4-15-6 ‡‡ சதபதப்ராஹ்மணம் 14-6-5-30
நிஷத்து 3-9. ஶ்வேதாஶ்வதரோபநிஷத்து 3-9.

ப-ரை] ஹாதஷ்ய—ஓ அர்ஜுன, யத்ர—எந்த, காலே—வழியில், ப்ரயாதா:—போன, யோகிந:—யோகிகள், அநாவ்ருத்திம்—திரும்பி வாராமையையும், ஆவ்ருத்திமேவ—திரும்பிவருதலையும், யாந்தி—அடைகிறார்களோ, தம்—அந்த, காலம்—வழியை, வக்ஷ்யாமி—சொல்லப்போகிறேன், அக்நி:—அக்னி என்கிற, ஜ்யோதி:—ப்ரகாசமுள்ளவஸ்துவும், அஹ:—பகலும், ஶுக்ல:—சுக்கிலபக்ஷமும், ஷண்மாஸா:—ஆறுமாதங்களடங்கிய, உத்தராயணம்—உத்திராயணமும், (ஆகிய) தத்ர—அந்த வழியில், ப்ரயாதா:—போன, ப்ரஹ்மவித:—ப்ரஹ்மத்தை உபாஸநம்செய்த, ஜநா:—ஜனங்கள், ப்ரஹ்ம—ப்ரஹ்மத்தை, கச்சந்தி—அடைகிறார்கள். 23-24

தா] 'யத்ர காலே' என்று ஆரம்பித்து 1 'யோகயுக்தோ பவார்ஜுந' என்கிற வரையிலும் உள்ள க்ரந்தத்தின் தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார்—'பிறகு' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் தூமாதி மார்க்கத்தைச் சொன்னது, இது விடத்தக்கது என்று, தெரிவிப்பதற்காக அர்ச்சிராதி மார்க்கத்தைச் சொன்னதோவெனில் அதை அநுஸந்தானம் செய்யவேண்டியதற்காக. ஆகையினால் இந்த அர்ச்சிராதி மார்க்கத்தைச்சொல்லுவதிலேயே தாத்பர்யம், என்று கருத்து. பரமபுருஷனிடத்தில் நிஷ்டையை உடையவனுக் கல்லவோ அர்ச்சிராதிகதி. அது இவ்விடத்தில் பொது, என்று எபபடிக்குச் சொல்லப்படுகிறது. என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'இந்த இருவர்களுக்கும்' என்று. ஆத்மாவை உபாஸிக்கிறவனுக்குத் திரும்பிவருதல் இல்லையென்று முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறபடியினால் அவனுக்கும் அர்ச்சிராதிகதிதான், என்று காட்டுவதற்காகச் சொல்லுகிறார்—'அந்தக்கதியும்' என்று. பொது என்பதற்கும் திரும்பி வருதலில்லை என்பதற்கும் ப்ரஶ்நதியைக் காட்டுகிறார்—'அப்படியே' என்று. அங்கியின் ப்ரயோஜனமோ அங்கத்திலும் சொல்லப்படுகிறது, என்றுபேக்ஷித்துக் கொண்டு ஸமாதானம் சொல்லுகிறார்—'இந்த அர்ச்சிராதிகதியை' என்று ஆரம்பித்து. காரணத்தைச் சொல்லுகிறார்—'எந்த இவர்கள்' என்று ஆரம்பித்து. அங்கியின் பலத்தையே அங்கத்திலும் சொல்வது யுக்தம் தான், ஆனாலும் அங்கியோடு கூட அங்கத்தை ஸமமாகத் தனித்துச் சொல்லி, அந்த அங்கியின் பலத்தை அங்கத்திற்குச் சொல்வது ஸரியல்ல, என்று தாத்பர்யம்.

1-பகவத்கீதை 8-27.

இத்தால் முதல் ஆறு அத்யாயங்களில் சொல்லப்பட்ட ஜீவாத்மாவின் அனுபவத்தைவிட இவ்விடத்தில் சொல்லப்படுகிற ஜீவாத்மாவின் உண்மையைப் பற்றிய அனுஸந்தானம் வேறு, என்று காட்டப்பட்டது. "எவர்கள்" என்று ஆரம்பிக்கும் ஶ்ருதிவாக்யம் ஜீவாத்மாவி னிடத்தில் நிஷ்டையை உடையவர்களைச் சொல்லுகிறது, என்பது எப்படி? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'பஞ்சாக்னி வித்யையிலும்' என்று ஆரம்பித்து. 'ஜலங்கள் புருஷன் என்று பெயர் பெற்றவைகளாகின்றனவோ' என்று, த்ரிவ்ருத்கரணம் செய்யப்பட்ட ஜலங்களை சொல்லப்படுகிறபடியினால் மற்ற பூதங்களோடு ஸம்பந்தமுமேற்பட்டது. 'ஜலத்திற்கே' என்று, ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தில் மாறுதல் இல்லை என்று நீக்குவதற்காகச் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட ஶரீரத்தின் ஸம்பந்தம் கூட வேறொரு காரணத்தினால் ஏற்பட்டது, என்று தெரிவிப்பதற்காகச் சொல்லுகிறார்—'புண்யபாபங்களைக் காரணமாக உடைய' என்று. 'நல்ல நடத்தையை உடையவர்கள் நல்ல ஜன்மத்தை அடைகிறார்கள்.' 'கெட்ட நடத்தையைஉடையவர்கள்கெட்ட ஜன்மத்தைஅடைகிறார்கள்'. என்று அர்த்தமுள்ள வாக்யங்களிருக்கிற படியினால் இந்த ஸம்பந்தம் கேவலம் அசேதனங்களை மாத்திரம் பற்றியதல்ல. 'அந்த ஜீவாத்மாவை எவர்களிப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ எவர்கள் காட்டில் ஶ்ரத்தையுடன் ப்ரஹ்மத்தை இவ்விதமாக உபாஸிக்கிறார்களோ' என்று அர்த்தமுள்ள வாக்யங்களி லிருக்கும் 'யெ' (எவர்கள்) என்கிற இரண்டு பதங்களின் அர்த்தங்களும் "அவர்கள் அர்ச்சிஸ்ஸை" என்கிற வாக்யத்திலிருக்கும் 'தே' (அவர்கள்) என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறபடியினால் அர்ச்சிராதிகதி இவ்விருவருக்கும் ஸமம், என்றுதெரிவிப்பதற்காக அந்த இரண்டுவாக்யங்களுமெடுக்கப்பட்டது கள்'இப்படி' என்பதினால் அனுவதிக்கப்பட்ட கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஆகாரத்தைக் காட்டுகிறார்—'வெவ்வேறான' என்று ஆரம்பித்து. அந்தப்புருஷன் அமானவன். அவன் இவர்களை ப்ரஹ்மத்தை அடைவிக்கிறான். 'என்று அர்த்தமுள்ள வாக்யத்தினால அர்ச்சிராதிகதியினால் சென்றவனுக்கு ப்ரஹ்மத்தை அடைதல் ஶ்ருதியில் சொல்லப்படுகிறது. அப்படியிருக்க, ஜீவாத்மாவை மாத்திர முபாஸனம் செய்தவனுக்கு ப்ரஹ்மத்தை அடைவிக்கக் கூடிய அர்ச்சிராதிகதியை அடைதல் எவ்வாறு ஸம்பவிக்கும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ஆத்மாவின் உண்மையை' என்று ஆரம்பித்து. இந்

தப் பஞ்சாக்னி வித்யாநிஷ்டன் கேவலம் ஜீவாத்மாவை மாத்திரம் உபாஸிக்கிறவனல்ல. பின்னை எப்படி எனில்? ப்ரஹ்மத்தைத் தனக்கு அந்தர்யாமியாக உடைய தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்தை உபாஸனம் செய்கிறவன், என்று தாத்பர்யம். அப்படிக்கில்லாவிடில் தத்க்ருது ந்யாயத்திற்கு விரோதம் வரும். என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'தத்க்ருது ந்யாயத்தினாலும்' என்று 'ந்யாயத்தினாலும்' என்பதினால் இவை இரண்டும் சேர்ந்து காரணம், என்று ஏற்படுகிறது. உள்ளபடியே இருக்கும் ஆத்மாவை அநுஸந்தானம் செய்வதாவது பகவானுக்கு ஶேஷமாக இருக்கை ஒன்றையே ஸ்வபாவமாக உடையது, என்று அநுஸந்தானம் செய்வது தான், என்பதற்கு ப்ரமாணம் சொல்லுகிறார்— 'எவன் ஆத்மாவினிடத்தில்' என்று ஆரம்பித்து. 'முதலியவைகளினால்' என்னும் பதத்தினால் 'இந்த 1 ப்ரபஞ்சத்திற்கு யஜமானனாகிய' என்றும் 2 'இந்த்ரியங்களுக்கும் யஜமானனாகிய ஜீவனுக்கும் யஜமானன்' என்றும் அர்த்தமுள்ள வாக்யம் முதலான அநேகம் ஶ்ருதி வாக்யங்கள் க்ரஹிக்கப்படுகின்றன. இவ்விடத்தில் ஶாரீரக பாஷ்யம் முதலியவைகளுக்கு விரோதம் வருகிறது, என்று மூடர்களினால் எண்ணப்படுகிறது. இவ்விடத்தில் ஶ்ருதி, ஸூத்ரம், பாஷ்யம் முதலியவைகளிலும், மற்ற க்ரந்தங்களிலும், பஞ்சாக்னி வித்யாநிஷ்டன், பரமாத்மாவை அந்தர்யாமியாக உடைய, தன்னுடைய ஆத்மாவை அநுஸந்தானம் செய்கிறவன் என்பதும், அவனுக்கு அர்ச்சிராதி கதி உண்டு என்பதும், ஸமமாகச் சொல்லப்படுகிறது. அந்த அர்ச்சிராதிகதி ப்ரஹ்மத்தை அடைவிக்கிறது என்பதும் ஶ்ருதி முதலியவைகளிலும் இவ்விடத்தில் 'தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா:' என்பதினாலும் ஏற்படுகிறபடியினால் பஞ்சாக்னி வித்யாநிஷ்டனுக்கும் பரமாத்மாவை அடைதல் உண்டென்றே ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படி அடைவதில் ஞானிகளுக்குப் பரமாத்மா, தன்னை ஶரீரமாக உடையவனாக அநுபவிக்கப்படுகிறான். ஜீவாத்மாவின் உண்மையில் நிஷ்டையை உடையவர்களுக்கோவெனில் தன்னுடைய ஸ்வரூபமே முதலில் அநுபவிக்கப்படுகிறது. வஸு முதலியவர்களின் ஸ்தானத்தை முதலில் அடைந்து, அப்புறம் ப்ரஹ்மத்தை அடைவதற்கு ஸாதனமாகிய மதுவித்யை முதலியவைகளைப் போலவே கடைசியில் ப்ரஹ்மத்தை அடைதலுண்டாகிறது. இப்படிப்பட்ட வரிசை க்ரமத்தின் ஏற்பாடும் முன்பு உண்டான ஆஶையின் வ்யவஸ்தயா

1 தைத்திரீயம் நாராயணம் 6-11-3. 2 ஶ்வேதாஶ்வதரம் 3-9.

ஸத்திருல், அதுவும் பழைய கர்மவிசேஷத்திருல் என்று 1'ச தாவிஷ் பாஹஜஞோ' என்கிற ஸ்லோகத்தில் முன்னமே சொல்லப்பட்டது. இவ்விடத்தில் ஆத்மாவின் உண்மையைத் தெரிந்து கொண்டவன் ஜ்ஞானியைவிட வேறுபட்டவன் என்று பாஷ்யத்தில் சொல்லப்படவில்லை. ஜ்ஞானிக்குத் தெரிந்துகொள்ள வேண்டியதாக நிர்ச் சொல்லப்பட்ட வ்யாபார விஸர்க்கம் இவைகளே, இவ்விடத்திலும் பந்தாக்னி விஷயமாகச் சொல்லியிருக்கிறபடியினால். ஈடுவிழும் ஸதால் பத்தை விரும்புகிறவனுக்கே தலைமையிருக்கும் காரியினால் வெளிக்கிளம்புதலும், திரும்பிவருதலில்லாமையும் சொல்லப்பட்டது. ஆத்மயாதாத்ம்ய, அக்ஷரயாதாத்ம்ய, என்கிற பதங்கள் வெவ்வேறு அர்த்தங்களைச் சொல்வன அன்று. அவன் செய்யு முபாஸனத்தில் கொஞ்சம் விசேஷமுண்டு. அதாவது, ஆத்மாவின் உண்மையை உபாஸிக்கிறவர்கள் பரமாத்மாவுக்கு சரீரமாக இருக்கும் தன்னுடைய ஆத்மாவை உபாஸனம் செய்கிறவர்கள். ஞானிகளோவெனில் தன்னுடைய ஆத்மாவை சரீரமாகவுடைய பரமாத்மாவை உபாஸனம் செய்கிறவர்கள். இப்படிப்பட்ட விசேஷம்தான், 2'எவர்கள் இப்படித் தெரிந்துகொள்ளுகிறார்களோ, எவர்கள் காட்டிலுபாஸிக்கிறார்களோ' என்று பிரித்துச் சொல்லி இருப்பதின் அபிப்ராயம். என்று ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் சொல்லப்பட்டது. வேதாந்த ஸாரத்திலும் 3'உபயேபிஹி பரிபூர்ணம் ப்ரஹ்மோபாஸதே முகபேதேந ஸ்வாத்மஶரீரகம் ப்ரஹ்ம கேசந, ப்ரஹ்மாத்மகஸ்வாத்மாநமிதரே' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினாலேயே ஏழாவது அத்யாயத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஜ்ஞானி பரமாத்மாவையே அடையவேண்டும் என்கிற ஆசையை உடைய ஞானியைவிட வேறுபட்டவனாதலினால் பரமாத்மாவை அந்தர்யாமியாக உடையது என்கிற அனுஸந்தானமில்லாமல் கேவலம் தன்னுடைய ஆத்மாவை மாத்திரம் உபாஸிக்கிறவன், என்று ப்ரமிக்க வேண்டியதில்லை. அவனையும் உதாரர்களின் கூட்டத்தில் சேர்த்தது, தன்னுடைய ஆத்மாவை அனுபவிப்பதினாலுண்டான தாமதத்தைப் பொறுக்காத ஞானியைவிட வேறுபட்டவனாகையினால். அர்ச்சிராதிகதி

1 பகவத்கீதை 7-16. சாந்தோக்யம 5-10-1.

3-வேதாந்தஸாரம், 4-3-14 உபயேபிஹி இருவரும், முகபேதேந வெவ்வேறு வழியாக, பரிபூர்ணம் நிறைந்த, ப்ரஹ்ம ப்ரம்மத்தை, உபாஸதே உபாஸிக்கிறார்கள், கேசந சிலர், ஸ்வாத்மசரீரகம் தன்னுடைய ஆத்மாவை சரீரமாக உடைய, ப்ரஹ்ம ப்ரம்மத்தையும், இதரே மற்றவர்கள் ப்ரஹ்மாத்மகஸ்வாத்மாநம் ப்ரம்மத்தை அந்தர்யாமியாக உடைய தன்னுடைய ஆத்மாவையும், உபாஸிக்கிறார்கள்.

இல்லை என்று, சொல்லி இருப்பதேதோவெனில் பரஹ்மத்தை அந்தர்யாமியாக உடையவன் என்கிற அநுஸந்தானமில்லாமல் தன்னுடைய ஆத்மாவை மாத்திரம் உபாஸிக்கிறவனைப்பற்றியது. இதுவும் பாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் சொல்லப்பட்டது. 1 'தஸ்மாத³சித்³விமிஶ்ரம் கேவலம் வா விவிக்தஸ்வபா⁴வம் ஸ்வாத்மானம் ப்³ரஹ்மாத்மகதயோபாஸீநாந் நயதி, இதரேஷாம் ப்³ரஹ்மோபாஸீநாநாம் ப்ரக்ருதிவியுக்தம் ஸ்வாத்மானம் ச ப்³ரஹ்மாத்மகமுபாஸீநாநாம் ச ஆதிவாஹிகோ க³ணோ நயதி' என்றிவை முதலிய வாக்யங்களில் வ்யக்தமாகச் சொல்லப்பட்டது. 2 'யத்ர ருஷய: ப்ரத²மஜா யே புராணா: ... ச்யவநபுராணா:' என்று, சொல்லி இருக்கிறதே யெனில்? அவ்விடத்திலும் ஆத்மாவை மாத்திரம் அநுபவிப்பதினு லுண்டாகும் ஸுகம் ஸ்த்திரமில்லை யாதலால் 'ச்யவநபுராணா:' (நழுவுதலேயே ஸ்வபாவமாக உடையவர்கள் என்று சொல்லப்பட்டது. அதினால் மறுபடி ஸம்ஸாரமுண்டாகும் என்கிற ப்ரஸ்தாவமில்லை. 3 'இந்த்³ரலோகாத் பரிப்⁴ரஷ்டோ மமலோகபராயண:। ஸர்வஸம்ஸாரை: ப்ரமுக்தோ மம லோகம் ச க³ச்ச²தி॥' என்கிற வசனத்திலும் 4 'இந்த ஜீவன் இந்த லோகத்தைவிட்டு நழுவினவனாகித் தேவலோகத்தை அடைகிறான்' என்று அர்த்த

1-ஶாரீரகபாஷ்யம், 4-3-16 தஸ்மாத் ஆகையினால், அசின்மிச்ரம் அசேதனத்தோடு சேர்ந்தாவது, கேவலம்வா அதைவிட்டுப் பிரிந்தாவதிருக்கிற, சித்வஸ்து ஆத்மாவை. ப்ரம்மத்ருஷ்ட்யா இதுவே ப்ரம்மம் என்கிற அனுஸந்தானத்தினாலும் தத்வியோகேந அந்த அனுஸந்தானமில்லாமலாவது, யே எவர்கள் உபாஸதே உபாஸிக்கிறார்களோ, தாந் அவர்களை நயதி அழைத்துக்கொண்டு போவதில்லை, அபிது பின்னையென்னவெனில், பரம் ப்ரம்ஹ பரப்ரம்மத்தை, உபாஸீநான் உபாஸனம்செய்தவர்களையும் ப்ரக்ருதி வியுக்தம் ப்ரக்ருதியை விட்டு நீங்கின, ஆத்மாநஞ்ச ஜீவாத்மாவையும், ப்ரம்மாத்மகம் ப்ரம்மத்தை அந்தர்யாமியாக உடையதாக, உபாஸீநான் உபாஸித்தவர்களை ஆதிவாஹிகோகண:—ஆதிவாகிகர் என்றுசொல்லப்பட்ட கூட்டம், நயதி அழைத்துக்கொண்டு போகிறது.

2-இரண்டாவது வால்யூம் 53-வது பக்கம் பார்க்க.

3, வராஹபுராணம், 139, 98.

இந்த்ரலோகாத்-இந்த்ரலோகததிலிருந்து, பரிப்ரஷ்ட: - நழுவினவனாய், மமலோகபராயண:-என்னுடைய லோகததையே அடையவேண்டிய ஸ்தானமாக உடையவனாய், ஸர்வஸம்ஸாரை:-எல்லா ஸம்ஸாரங்களினாலும், ப்ரமுக்த:-விடப்பட்டவனாய், மம-என்னுடைய, லோகம்-லோகத்தை, கச்சதி-அடைகிறான்.

4, யஜுர்வேதம், 6 வது காண்டம், முதல் ப்ரஶ்னம, முதல் அனுவாகம், 5 வது பஞ்சாதி

முள்ள ஶ்ருதி வாக்யத்திலும் போல மேன்மேலும் சிறந்த இடத்தை அடைந்தபோதிலும் முன்னிருந்த இடத்தைவிட்டு நீங்கின மாத்திரத்திலே நழுவுதலையடையும் ஸ்வபாவமுடையவன், என்று சொன்னதற்கு விரோதமில்லை. ஸ்வல்பஸுகத்தை அனுபவிப்பதினாலுண்டான தாமதத்தினால் அந்த ஸமயத்திலெல்லையில்லாத ஸுகத்தின் அனுபவத்தைவிட்டதினால் அப்படி நிந்தித்திருக்கிறதாகவுமாம். உபாஸிக்கும் பொழுது அனுபவிக்கப்பட்ட பரமாத்மாவைப்பற்றிப் பலத்தை அனுபவிக்கும் பொழுது சிலகாலம் இடையில் அனுபவமில்லாமல் விட்டுப்போனதினால் கிடைத்ததின் தவறுதலாகிய, நழுவுதலை அடையும் ஸ்வபாவமுடையவன் என்பதும் பொருந்தும். 'வ்ருத்திஸ்தஸ்ய மோக்ஷஹாஸ:' என்பதினால் ஞானி இடையில் ஒன்றினாலும் தாமதமில்லாமல் மோக்ஷத்தை அடைகிறான் என்பது ஏற்படுகிறது. அதைமாத்திரம் கொண்டு இந்த ஜ்ஞாஸுவுக்கு மோக்ஷம் இல்லை என்பது இல்லை. 1 'புக்த்வா ச விபுலாந் போகாந் த்வமந்தே மத்ப்ரஸாதத: | மமாநுஸ்மரணம் ப்ராப்ய லோகமவாப்ஸ்யஸி ||' என்கிற இடத்தில்போல் இங்கும் விரோதம் இல்லையாகையினால். எப்படி மோக்ஷத்தை விரும்புகிற சிலருக்கு நடுவில் ப்ரமமாவின் ஶரீரத்தை அடைதலாகிய ஸுகம் சொல்லப்படுகிறதோ அப்படியே இவ்விடத்திலும் ஓரிடத்தில் நின்று தன்னுடைய ஆத்மாவை அனுபவிப்பதினாலுண்டாகிய தாமதமும் சொல்லப்படுகிறது. 2 'அதவா நேச்சதே தத்ர ப்ரஹ்மகாயநிஷேவணம் | உத்க்ராமதி ஸ மார்க்கஸ்த: ஶீதீபூதோ நிராமய:' என்றிவை முதலிய வசனங்களினால் ப்ரஹ்மாவின் ஶரீரத்தை அடைவதினாலுண்டாகுமாசையிலிருந்து விடுபட்டவன் தேவயானம் என்கிற வழியினால் பரமபதம் போகிறான் என்று சொல்லப்படுகிறதோ அப்படியே இவ்விடத்திலும் தன்னுடைய ஆத்மாவை அனுபவிக்குமிடத்திலிருந்து நழுவினவனுக்குப்

1, விஷ்ணுபுராணம், 5, 19, 26.

விபுலான்-விசேஷமான, போகான்-ஸுகங்களை, புக்த்வா-அனுபவித்து, த்வம்-நீ, அந்தே-கடைசியில் மத்ப்ரஸாதத: - என்னுடைய அனுக்ரஹத்தினால், என்னுடைய, அனுஸ்மரணம்-த்யானத்தை, ப்ராப்ய-அடைந்து, மம-என்னுடைய, லோகம்-லோகத்தை. அவாப்ஸ்யஸி-அடையப்போகிறாய்.

2, அதவா- அதுவுமில்லாமல், தத்ர - அவ்விடத்தில், ப்ரஹ்மகாயநிஷேவணம்-ப்ருஹ்மாவின் ஶரீரத்தை அடைதலை, நேச்சதே - ஆசைப்படவில்லையேயானால், மார்க்கஸ்த: - வழியை அடைந்தவனாய், ஶீதீபூத: - குளிர்ந்த ஸ்வாபவமுடையவனாய், நிராமய: - ஒருவித வியாதியுமில்லாமல், உத்க்ராமதி-வெளிக்கிளம்புகிறான்.

பரமபதம் அடைதலும் ஸம்பவிக்கும். இவனுக்கு அர்ச்சிராதிகதியும் இடையில்வந்த பலத்தை அநுபவித்த பிறகு உண்டாகிறது, என்றும் சொல்லலாம். அன்றிக்கே அர்ச்சிராதிகதியின் நடுவில் தக்ஷிணாயனத்தில் மரணம் அடைந்தவனுக்குச் சந்திரனுடைய ஸாயுஜ்யம் வருவதுபோல விடாய்தீர்தல் மாத்திரம், இந்த நடுவில் வந்த பலத்தை அநுபவிப்பது. என்றுமாகவுமாம். இந்த இரண்டு விதத்திலும் எவ்வித விரோதமுமில்லை. இத்தால் இந்த ஆத்மாநுபவத்தை அநுபவித்த பின்புதான் இவன் அப்ராக்ருதகாலம்பனன் ஆகிறான், என்பதும் நிராகரிக்கப்பட்டது. மதுவித்யையைப் போலவே ஆரம்பத்திலேயே அது பொருந்துமாதலால். ஆத்மாவை அநுபவிக்கும் இடம் மோக்ஷத்தை அநுபவிக்கும் இடத்தைவிடத் தாழ்ந்தது, என்று ருஷிகள் 1 யோகிநாமம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்மஸந்தோஷகாரிணாம் । ஏகாந்திந: ஸதா ப்ரஹ்மத்யாயிநோ யோகிநோ ஹி யே ॥ தேஷாம் தத்பரமம் ஸ்தாநம் யத்வை பச்யந்தி ஸூரய: ॥ என்று சொல்லி இருக்கிறார்கள். அம்ருதம் என்று சொல்லப்பட்ட ஆத்மாவை அநுபவிக்குமிடத்திலிருக்கிறவர்களை முக்தர்கள் என்று சொல்லியிருப்பதும், கிழத்தனம் மரணம் இவைகள் இல்லாமையினாலும், மறுபடியும் ஜன்மத்துக்குக் காரணமான புண்ணியபாபம் இல்லாமையினாலும். ஸ்தூலமான தேஹத்தை விட்டவர்களுக்கும் சிற்சில உபாஸநங்களினால் உண்டாகக் கூடிய மோக்ஷத்தைவிடத் தாழ்ந்த பலங்கள் உண்டு, அவைகளையும் ப்ரக்ருதி லயம் முதலிய பதங்களினால் ஸாங்க்யர்கள் 2 தர்மேண கமநமூர்த்வம் கமநமதஸ்தாத்பவத்ய

1 விஷ்ணுபுராணம், 1, 6 38.

ஸ்வாத்மஸந்தோஷகாரிணாம்- தன்னுடைய ஆத்மாவினால் ஸந்தோஷத்தை அடைகிற, யோகிநாம்- யோகிகளுடைய, அம்ருதம்-அழிவில்லாத, ஸ்த்தானம்- இடம், யே-எவர்கள், ஸதா - எப்பொழுதும், ப்ரஹ்மத்யாயிந: - ப்ரஹ்மத்தை தியானம் செய்துகொண்டிருக்கிற, ஏகாந்தின: - ஒரே நிச்சயத்தை உடைய, யோகிந: - யோகிகளோ, தேஷாம் - அவர்களுக்கு, யத் - எந்த இடத்தை ஸூரய: - நித்யஸூரிகள், பச்யந்தி - பார்க்கிறார்களோ, தத் - அப்படிப்பட்ட, பரமம் - உயர்ந்த, ஸ்த்தானம் - இடம்.

2, ஸாங்க்யதத்வகௌமுதீ.

தர்மேண- தர்மத்தினால், ஊர்த்வம்-மேலே, கமனம் - போகுதலும், அதர்மேண - அதர்மத்தினால், அதஸ்தாத்-கீழே, கமனம்- போகுதலும், பவதி- உண்டாகிறது. ஜ்ஞானேந ச- ஜ்ஞானத்தினால், அபவர்க்க: - மோக்ஷமும், விபர்யயாத்- அஜ்ஞானத்தினால், பந்த: - ஸம்ஸாரபந்தமும், இஷ்யதே - ஒப்புக்கொள்ளப்படுகிறது, வைராக்யாத் - விரகதியினால், ப்ராக்ருதிலய: - ப்ராக்ருதிலயமும்,

ணா। ஜ்ஞாநேந வாயவ்யேநாவிபர்யாஸிஷ்யதே பயஸ:॥ ஸௌராஜ்யா த்வக்ருதிஷ்வபஸம்ஸாரோ பவதி ராஜஸாத்ராகாத்। ஐச்வர்யாதவிகாதோவிபர்யயாத்விபர்யய:। 'என்கிற இடத்தில் சொல்லியிருக்கிறார்கள். விபர்யாஸிஷ்யதே பயஸ: என்கிற இடத்தில் வாசஸ்பதி என்பவரால் விபர்யாஸ: தத்வஜ்ஞானமில்லாமையினால் பயஸ:ஸம்ஸார பந்தம் உச்யதே ஒப்புக்கொள்ளப்படுகிறது. அந்தபந்தம் ப்ராக்ருதிகம், வைக்ருதிகம், தாக்ஷிணிகம், என்று மூன்றுவிதம். அதில் ப்ராக்ருதியில் ஆத்மா என்கிற ஜ்ஞானத்தினால் ப்ரக்ருதியை எவர்கள் உபாஸிக்கிறார்களோ. அவர்களுக்கு ப்ராக்ருதிக பந்தமுண்டாகிறது. இதுதான் புராணத்தில் ப்ரக்ருதிலயங்களை நிரூபிக்க ஆரம்பித்து 1 'பூர்ணம் வர்ஷஸஹஸ்ரம் திஷ்டந்த்யவ்யக்தசிந்தகா:' என்று சொல்லப்படுகிறது. எவர்கள் ப்ரக்ருதியின் விகாரங்களாகிய பஞ்சபூதங்கள், இந்த்ரியங்கள், அஹங்காரம், புத்தி, இவைகளை இது ஆத்மா என்கிற புத்தியினால் உபாஸிக்கிறார்களோ, அவர்களுக்கு வைக்ருதிகபந்தம் உண்டாகிறது. அவர்களைக் குறித்துப் புராணத்தில் 2 'தச மந்வந்தராணீஹ திஷ்டந்தீந்த்ரியசிந்தகா:। பௌதிகாஸ்து சதம் பூர்ணம் ஸஹஸ்ரம் த்வாபிமாநிகா:। பௌத்தா தசஸஹஸ்ராணி திஷ்டந்தி விகதஜ்வரா:।' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எவர்களுக்கு வைக்ருதிகபந்தமுண்டாயிருக்கிறதோ அவர்கள் தேஹமில்லாதவர்கள், என்று வ்யாக்யானம் செய்யப்பட்டது. இப்படியே ப்ரக்ருதி முதலிய வஸ்துக்களை உபாஸிக்கிறவர்களுக்குப் போலவே ஜீவாத்மாவை உபாஸிக்கிறவர்களுக்கும் அதற்குத் தகுந்த இடத்தில் அதற்குத்தகுந்தகாலம் வரையிலும் கீழ்ச்சொல்லியவைகளை

ராஜஸாத்- ரஜோகுணத்தினு லுண்டாகிற, ராகாத- ஆசையினால், ஸம்ஸார: - ஸம்ஸாரமும், பவதி- உண்டாகிறது, ஐச்வர்யாத்- ஸாமர்த்தியத்தினால், அவிகாத: - தடை இல்லாமையும், விபர்யயாத்- ஸாமர்த்திய மில்லாமையினால், விபர்யய: - தடங்கலும், பவதி - உண்டாகிறது.

1, அவ்யக்தசிந்தகா:-ப்ரக்ருதியை த்யானம செய்கிறவர்கள், பூர்ணம்-நிறைந்த, வர்ஷஸஹஸ்ரம்-ஆயிரம் வருஷம், திஷ்டந்தி - நிற்கிறார்கள்.

2, இந்த்ரியசிந்தகா:இந்த்ரியங்களை த்யானிப்பவர்கள, இஹ-இந்த லோகத்தில், தச மந்வந்தராணி- பத்து மந்வந்தரகாலம, திஷ்டந்தி- இருக்கிறார்கள், பௌதிகாஸ்து - பஞ்சபூதங்களை உபாஸிக்கிறவர்களோவெனில், பூர்ணம் - நிறைந்த,சதம்-நூறு மன்வந்தரகாலம் திஷ்டந்தி-இருக்கிறார்கள், ஆபிமானிகா: - அஹங்காரத்தை உபாஸிக்கிறவர்கள், ஸஹஸ்ரம்-ஆயிர மன்வந்தரங்களும், பௌத்தா:-புத்தியைஉபாஸிக்கிறவர்களும்,விகதஜ்வரா:-தாபமில்லாதவர்களாய், தச ஸஹஸ்ராணி-பதினாயிரம் மன்வந்தரங்கள், திஷ்டந்தி- இருக்கிறார்கள்.

விட மேலான பலம் கிடைக்கிறது, என்பது உசிதம் தான். ஆகையிலேயே 1 பூமவித்யையில் ஜீவாத்மாவை உபாஸிக்கிறவனை அதிவாதி, என்று சொல்லியிருக்கிறது. ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாக உடைய தன்னுடைய ஆத்மாவை அநுஸந்தானம் செய்தால் அது, ப்ரஹ்மத்தை அடைதலில் முடிகிறபடியினால், மறுபடியும் திரும்பிவருதல் இல்லையென்பது விசேஷம். ஆகையினாலேயே இந்த ஆத்மானுபவம் அழியக் கூடியதாகில், அதை விரும்புகிறவன் ஐஸ்வர்யத்தை விரும்புகிறவனைப் போல, மோக்ஷத்தை விரும்பும் அதிகாரியைவிட வேறானவன் என்பது எப்படிப்பொருந்தும்? என்கிற ஆக்ஷேபமும் நிராகரிக்கப்பட்டது. வெளியில் இருக்கும் அனுபவிக்கத்தக்க வஸ்துக்களுடையவும், உள்ளிருக்கும் அனுபவிக்கத்தக்க வஸ்துக்களுடையவும் வ்யத்யாஸத்தினாலும், திரும்பிவருவதற்குத்தக்க போக்யதையினுடையவும் திரும்பிவாராமைக்குத்தக்க போக்யதையினுடையவும், வ்யத்யாஸத்தினாலும், இவ்விருவருக்கும் வ்யத்யாஸமுண்டாகையினால். காலதாமதத்தையும் பொறுக்காதவர்களுக்கோவெனில் 2 'ஸர்வதர்மாம்ஸ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஸ்ச ஸாக்ஷராந் । லோகவிக்ராந்த சரணௌ ஶரணம் தே வ்ரஜம் விபோ' என்று சொல்லப்பட்டநிஷ்டை. 3 'கைவல்யம் பகவந்தம் ச மந்த்ரோऽயம் ஸாதயிஷ்யதி।' என்றிவை முதலிய இடங்களில் கைவல்ய பதத்தினால் ஆத்மாவை மாத்திரம் அனுபவிப்பதினாலுண்டான ஸுகம், அத்தை விரும்புகிறவர்களினால் அடையத் தகுந்தது, என்று சொல்லப்பட்டது. இதுவும் கடைகளில்ஒன்றாகையினால் ஞானிகள் முதலியோலையே உக்கத்தை உடையவர்களாய் இத்தைப் பரிஹரிக்கிறார்கள். சிலர், ப்ரஹ்மத்தின் அனுபவமில்லாமல் ஆத்மாவை மாத்திரம் அனுபவிப்பதினாலுண்டாகும் ஸுகம் நித்யம் என்று சொல்லுகிறார்கள். இந்த விஷயத்தில் பாஷ்யகாரர் முதலியவர்களின் ஸம்ப்ரதாயத்தைபாவது ப்ரமா

---

1 சாந்தோக்யோபநிஷத்தில் 7 ப்ரபாடகத்தில் சொல்லப்படுகிற ப்ரஹ்ம வித்யை

2 ஸர்வதர்மாம்ச எல்லா தர்மங்களையும் ஸாக்ஷராந் கைவல்யத்துடன் கூடிய, ஸர்வகாமாம்ச எல்லா ப்ரயோஜனங்களையும், ஸந்த்யஜ்ய விட்டு, லோகவிக்ராந்த லோகங்களை அளந்த விபோ பகவானே தே உம்முடைய சரணௌ திருவடிகளை சரணம் சரணமாக அவ்ருஜம் அடைந்தேன்.

3 வ்ருத்தஹாரீத ஸ்ம்ருதி 3-40 அயம் இந்த மந்த்ர: மந்திரமானது கைவல்யம் கைவல்யத்தையும் பகவந்தம்ச பகவானையும் ஸாதயிஷ்யதி ஸாதிக்கப்போகிறது.

பா] இவ்விடத்தில் 'காலே' என்னும் பதமானது இந்த வழி, பகல் முதலாக வருஷம் வரையிலுமான காலத்துக்கு அபிமானி தேவதைகளினால் நிறைந்திருப்பதினால் வழியைக் குறிக்கிறது எந்த வழியில் சென்ற உபாஸனம் செய்தவர்கள் திரும்பி வாராமையையும், புண்யகர்மங்களைச் செய்தவர்கள் திரும்பி வருதலையும் அடைகிறார்களோ, அந்த வழியைச்

னைத்தைகபாவது, யுக்தியைபாவது, நாம் கண்டறியவில்லை எனெனில், கர்மங்கள் மிகுதி இல்லாமல் நசித்துவிட்டால் ஸ்வபாவத்திலே இருக்கிற ஆகாரம் ப்ரகாசிக்கிறபடியினாலே ப்ரஹ்மத்தின் அநுபவம் அவஸ்யமாக இருக்கவேண்டியதாகையினாலும், மிகுதிகர்மம் இருந்தால் ஸம்ஸாரம் வரவேண்டியது அவஸ்யமாகையினாலும் கிழத்தனம் ஜன்மம் இவை முதலியவைகளுக்குக் காரணமான கர்மம் முழுமையும் நசித்துவிடுகிறபடியினால் ஸம்ஸாரமில்லை, அவ்வளவு மாத்திரத்தைக் கொண்டு மோக்ஷத்தை அடைந்தவன் என்று சொல்லப்படுகிறது. ப்ரஹ்மத்தை அநுபவிப்பதற்குத் தடையான கர்மங்கள் நாஸம் அடையவில்லையாதலினால் அந்த ப்ரஹ்மத்தின் அநுபவம் இல்லை, எனில்? இப்படியே இருக்கட்டுமே ஆனாலும் இந்தக் கர்மம் மேலும் நஸிக்கப்போகிறதில்லை என்பதற்கு ஒரு காரணமும் இல்லை. என்று இப்படியே ஊஹித்துக்கொள்ளவும் 1 'பகவானை அடைதல் முதலியது இல்லாமல் நித்யமாக ஒரு கைவல்யத்தைக் கல்பிப்பது ஸூத்ரம் பாஷ்யம் ஶ்ருதி ஸ்ம்ருதி இவைகளுக்கு விரோதமில்லாமல் ஸித்திக்காது. ஆகையினால் அதிகாரிகள் வெவ்வேறு என்கிற காரணத்தினால், வெவ்வேறு தன்மையை அடைந்த, ஜீவாத்மாவைப் பற்றிய வேறொரு வழியையும் நம் பூர்வாசாரியர்கள் கல்பித்தார்கள். அவைகளோ, திரும்பி வருதல் பகவானை அடையாதிருத்தல் முதலியவைகளால் பொருந்தாதாகையினால் நாம் சொன்ன அர்த்தமே ஶ்ருதி ஸ்ம்ருதி முதலிய க்ரந்தங்களுக்கு ரஸாயனம் போல இனிது, என்று அறிக.

---

1 தேசிகனருளிச் செய்த சுருக்கமான ஶ்லோகங்களின் அர்த்தமிங்கே எழுதப்பட்டிருக்கிறது அந்த ஶ்லோகங்களை இங்கே எழுதுகிறேன் [illegible]

சொல்லப்போகிறேன் என்று அர்த்தம் 'அக்நிர்ஜ்யோதிரஹஸ்ஸுக்ல: ஷண்மாஸா உத்தராயணம்' என்று சொன்னது வருஷம் முதலியவைகளையும் குறிக்கிறது. 23-24

தா] அர்ச்சிராதி மார்க்கத்தைச் சொல்லுகிறார் என்று எப்படிச்சொல்லப்படுகிறது 'யத்ர காலே' என்று ஆரம்பத்தில் காலம் அல்லவோ சொல்லப்படுகிறது? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—இவ்விடத்தில் 'காலே' 'என்னும் பதம்' என்று. ஶாரீரக ஸூத்ரத்தில் தக்ஷிணாயனம் முதலிய காலங்களில் மரணம் அடைந்தவனுக்கும் மோக்ஷம் உண்டு என்று 2 'அதஶ்சாயநேபி தக்ஷிணே' என்கிற ஸூத்ரத்தில் சொல்லப்பட்டது. இந்தக் கீதையிலும் 3 'ஶுக்லக்ருஷ்ணே கதீஹ்யேதே' என்று மேலே சொல்லப்போகிறார். அப்படிக்கு மார்க்கத்தைச் சொல்லாவிடில் 'அக்நிர்ஜ்யோதி:' என்பதோடு விரோதமும் வரும். 4 'நைதே ஸ்ருதீ பார்த்த ஜாநந்' என்று வழியை சொல்லுகிற பதத்தினால் ஏகவாக்யமும் செய்யப்படுகிறது. என்று தாத்பர்யம். 'யத்ர காலே' என்பதற்கு 'ப்ரயாதா:' என்கிற தூரத்தில் இருக்கும் பதத்தோடு அன்வயத்தைக் காட்டிக்கொண்டு யோகிகளுக்குத் திரும்பி வருதல் எப்படி ஸம்பவிக்கும், என்கிற ஆக்ஷேபத்தையும் பரிஹரித்துக் கொண்டு 'யத்ர காலே' என்கிற ஶ்லோகத்திற்கு அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'எந்த வழியில்' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் யோகிகளாவது ஞானிகளும், புண்ய கர்மங்களைச் செய்தவர்களும். இவ்விடத்தில் ஒரேமாதிரிகளானபதங்களுக்கு ஒரே வேற்றுமையில் ஒரு பதம் மிகுதியாக இருக்கிறது. அன்றிக்கே புண்ய கர்மங்கள் செய்தவர்கள் என்று வைத்துக் கொள்ளப்பட்டதாகவுமாம். 5 'அவர்கள் அக்நியை அடைகிறார்கள். அக்நியினிடத்திலிருந்து பகலையும், பகலிலிருந்து ஶுக்லபக்ஷத்தையும், ஶுக்லபக்ஷத்திலிருந்து, எந்த ஆறு மாஸங்களை வடக்குதிக்கில் ஸூர்யன் சேருகிறானோ அந்த ஆறு மாஸங்களையும், அந்த மாஸங்களிலிருந்து வருஷத்தையும் அடைகிறான். என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்தை அநுஸரித்து வருஷம் முதலியவைகளையும் குறிக்கிறது, என்று சொல்லப்பட்டது. இதின் விரிவு 'அர்ச்சிராதி பாதத்தில்' காண்க. அவ்வி

---

2 ஶாரீரக ஸூத்ரம் 4-2-19 அதஶ்ச ஆகையினாலேயே தக்ஷிணே அயநேபி தக்ஷிணாயனத்தில் (மரணமடைந்தவனுக்கும் மோக்ஷமுண்டு) என சேர்த்துக் கொள்ளவும்.

3 பகவத்கீதை 8-26 4 பகவத்கீதை 8-27 5 சாந்தோக்யோபநிஷத் 5-10-1.

தூமோ ராத்ரிஸ் ததா க்ருஷ்ண: ஷண்மாஸா தக்ஷிணாயநம் |
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர் யோகீ ப்ராப்ய நிவர்த்ததே ||25

ப] யோகீ—புண்யங்களைச் செய்தவன், தூம:—புகை, ராத்ரி:—இரவு, ததா—அப்படியே, க்ருஷ்ண:—கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயநம்-தக்ஷிணயனம் என்று சொல்லப்பட்ட, ஷண்மாஸா:—ஆறுமாஸங்கள், தத்ர—அந்த மார்கத்தில், சாந்த்ரமஸம்—சந்திரனாகிய, ஜ்யோதி:—ப்ரகாசத்தையும். ப்ராப்ய—அடைந்து, நிவர்த்ததே—திரும்புகிறான். 25

பா] இதுவும் தூமாதி மார்க்கத்திலிருக்கிற பித்ருலோகம் முதலியவைகளைக் குறிக்கிறது. இவ்விடத்தில் யோகீ என்னும் பதம் புண்ய கர்மங்களுடன் சேர்ந்தவர்களைச் சொல்லுகிறது. 25

டத்தில் வரதகுருஎன்னும் அம்மாளால் 1 'அர்சிரஹஸ்ஸிதபக்ஷாந் உதகயநாப்தஸுரேசதேந்தூந் அசிரவித்வருணேந்த்ர ப்ரஜாபதீநாதி வாஹிகாநாஹு:॥' என்று சுருக்கிச் சொல்லப்பட்டது. 'அக்நிர்ஜ்யோதி:' என்பதற்கு அக்னியாகிய ஜ்யோதிஸ்ஸு என்று அர்த்தம். இத்தால் தேவயானவழியில் முதலிலிருக்கும் அர்ச்சிஸ்ஸு சொல்லப்பட்டது. ஆகையினால் அக்னி ஜ்யோதிஸ்ஸு இவை இரண்டும் தனித்தனி தேவதைகள் என்றும், காலத்திற்கு அபிமானி தேவதைகள் என்றும், சொல்லுகிறவர்கள் நிராகரிக்கப்பட்டார்கள். 23-24

'பித்ருலோகம் முதலியவைகளை' என்னுமிடத்தில், முதலிய என்னும் பதத்தினால் ஆகாசம சந்திரன் இவைகள் சொல்லப்படுகிறதுகள் யோகிக்குத் தூமாதி மார்கமும் திரும்பி வருதலும் உண்டு என்று எப்படிச் சொல்லப்படுகிறது, என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'இவ்விடத்தில் யோகீ என்னும் பதம்' என்று இவ்விடத்தில் யோக என்னும் பதம் உபாயங்களைச் சொல்லுகிறது. ஸம்பந்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம். தூமாதி மார்கத்தின் ஸக்தியினால் புண்யகர்மமாகிற, 'ஸம்பந்தத்தை உடையவஸ்து ஏற்பட்டது, என்று தாத்பர்யம். பிறகு எந்த அவர்கள் க்ராமத்திலிருந்து யாகங்கள், குளம் வேட்டுதல் முதலியவை, தானம் செய்தல், முதலியவைகளைச் செய்கிறார்களோ அவர்கள் தூமத்தை அடைகிறார்கள், என்று அர்த்தமுள்ள ஸ்ருதி வாக்யம் முதலியவை விவரிக்கப்பட்டன. 25

---

1 தத்வஸாரம் 101 ஸ்லோகம்.

ஶுக்லக்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகத: ஶாஶ்வதே மதே |
ஏகயா யாத்யநாவ்ருத்திம் அந்யயாவர்த்ததே புந: || 26

பா] ஏதே-இந்த, ஶுக்லக்ருஷ்ணே-ப்ரகாசத்தோடு கூடியதும் இருண்டதுமான, கதீ- வழிகள், ஜகத:- உலகத்திலுள்ள ஜனங்களுக்கு, ஶாஶ்வதே-ஸ்த்திரங்களாக, மதே-எண்ணப்பட்டதுகள், ஏகயா-ஒரு வழியினால், (சென்றவன்), அநாவ்ருத்திம்- திரும்பி வராமையை, யாதி-அடைகிறான், அந்யயா-மற்றொரு வழியினால், (சென்றவன்), புந:-மறுபடியும், ஆவர்த்ததே-திரும்புகிறான். 26

பா] ப்ரகாசமுடைய கதியாவது அர்ச்சிராதிகதி. இருண்ட கதியாவது, தூமாதிகதி. ப்ரகாசமுடைய கதியினால் சென்றவன் திரும்பி வராமையை அடைகிறான். இருண்டகதியினாலோவெனில் திரும்பி வருகிறான் இந்த ப்ரகாசமுள்ளதாயும் இருண்டதாயு மிருக்கிற இரண்டு கதிகளும் ஜ்ஞானிகளுக்கும், அனேகர்களானப் புண்ய கர்மங்களைச் செய்தவர்களுக்கும், ஶ்ருதியில் ஸ்த்திரங்களாகச்சொல்லப்பட்டன. எப்படியெனில் † அந்த ஆத்மாவை எவர் இப்படித் தெரிந்துகொள்ளுகிறார்களோ, எந்த இவர்கள் காட்டில் ஶ்ரத்தையோடு ப்ரஹ்மத்தை இப்படி உபாஸிக்கிறார்களோ அவர்கள அக்னியை அடைகிறார்கள்." என்றும் ¶ "பிறகு எந்த இவர்கள் க்ராமங்களி லிருந்துகொண்டு யாகம் முதலியவைகளையும் குளம் வெட்டுதல் முதலியவைகளையும் தானம் கொடுத்தல் முதலியவைகளையும் செய்கிறார்களோ அவர்கள் தூமத்தை அடைகிறார்கள்" என்று. 26

தா] *கீழ்ச் சொல்லிய இருவிதங்களான வழிகளும் ஶ்ருதியில் ப்ரஸித்தங்கள், என்பதைக் காட்டுகிறார் இந்த ஶ்லோகத்தினால்—இவ்விடத்தில் ஶுக்லபக்ஷம் க்ருஷ்ணபக்ஷம் இவைகளின் ஸம்பந்தம் இருப்பதினாலாவது, ஶுத்தமானது அஶுத்தமானது, என்கிற தாத்பர்யத்தினாலாவது, அபிமானி தேவதைகளின் ஸ்வபாவமாகிய ப்ரகாசத்தை அவைகளினால் அபிமானிக்கப்படும் மார்க்கத்தில் ஆரோபணம் செய்ததாவது, வழிகளை ஶுக்ல, க்ருஷ்ண, என்கிற பதங்களினால் சொல்லி இருக்கிறது. இந்த வழியில் அதிகாரமுள்ள இரண்டு வகுப்பினரையும் சொல்லுகிற "ஜகத:" என்கிற பதத்தின் அபிப்ராயத்தில் இருக்கிற அர்த்தத்தைக் காட்டி இருக்கிறது.* 'ஜ்ஞானிகளுக்கும் அனேகர்களான புண்ய கர்மங்களைச் செய்தவர்களுக்கும்'*என்றது.* 1 "*யாகம்முதலியவைகளையும், குளம் வெட்டுதல் முதலியவைகளையும், தானம்*

† *சாந்தோக்யம்,* 5.10-1 ¶ *சாந்தோக்யம்,* 5-10-3
1 *சாந்தோக்யம்,* 5-10-3

நைதே ஸ்ருதீ பார்த்த ஜாநந் யோகீ முஹ்யதி கஶ்சந।
தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ பவார்ஜுந ॥

பதவுரை] பார்த்த-ஓ அர்ஜுன, ஏதே-இந்த, ஸ்ருதீ-வழிகளை, ஜாநந்-தெரிந்துகொண்ட, கஶ்சந-ஒரு, யோகீ-யோகியும், ந முஹ்யதி-மோஹத்தை அடைவதில்லை, அர்ஜுந-ஓ அர்ஜுன, தஸ்மாத்-ஆகையினால், ஸர்வேஷு-எல்லா, காலேஷு-ஸமயங்களிலும், யோகயுக்த:-இந்த வழிகளை த்யானம் செய்துகொண்டு, பவ-இரு, 27

பா] இந்த வழிகளைத் தெரிந்துகொண்ட யோகீ ஒருவனும் மரணகாலத்தில் மோஹத்தை அடைவதில்லை. மற்றெப்படியேனில் தன்னுடையதாகிய, தேவயான வழியினாலேயே போகிறான். ஆகையினால் தினந்தோறும் அர்ச்சிராதிகதியை த்யானம் செய்வதாகிய யோகத்தைச் செய்து கொண்டிரு.

தா] முதலியவைகளையும் செய்கிறார்களோ" என்று அர்த்தமுள்ள ஸ்ருதிவாக்யத்தில் சொல்லப்பட்ட அந்தந்தக்கர்மங்களில் நிஷ்டையுடையவர்களுடைய வ்யத்யாஸங்களை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு 'அனேகர்களான' என்று சொல்லப்பட்டது "ஹி" என்னும் பதத்தினால் ஸ்ருதியில் ப்ரஸித்தமாக இருத்தல் காட்டப்படுகிறது, என்று நினைத்து 'ஸ்ருதியில்' என்று சொல்லப்பட்டது ஸ்திரமாகவிருத்தலாவது பரம்பரையாக ஆற்றின் பெருக்கைப் போல ஆரம்பமும் முடிவுமில்லாமல் எப்பொழுதும் நடந்துகொண்டு இருத்தல் 26

"நைதே ஸ்ருதீ" என்கிற ஸ்லோகத்தில் அர்ச்சிராதி வழியை த்யானம் செய்வதும் உபாஸனத்தைப் போலவே பகவானுடைய ப்ரீதிக்காகவே ஏற்பட்டது. ஆனாலும் வழியை அறிவது போகிறவன் ஸந்தேஹமில்லாமல் போவதற்கு, என்பது உலகவழக்கத்தில் ஏற்பட்டது. இவ்விடத்திலும் அப்படிப்பட்ட உபகாரம் ஸம்பவிக்கும்பொழுது அது விடத்தக்கதல்ல. அதுவும் அந்தப் பகவானுடைய ஸங்கல்பத்தினாலேயே ஸித்திக்கிறது, என்று சொல்லுகிறார், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார் —இந்த என்று ஆரம்பித்து—மோஹத்தை அடைவதில்லை' என்பதற்கு 1 'தத்ருகாஸ்ரிகூஊாரஃ' என்று சொல்லி

---

1 சாரீரகஸூத்ரம் 4-2-16 தத் அந்தப்பகவானால், ப்ரகாஸித ப்ரகாசம் செய்யப்பட்ட, த்வார:-வழியை யுடையவனுபக் கொண்டு, போகிறான என்று சேர்த்துக சொல்லவும்.

பா] பிறகு இந்த இரண்டு அத்யாயங்களிலும் சொல்லப்பட்ட ஸாஸ்த்ரார்த்தத்தைத் தெரிந்து கொள்வதின் பலத்தைச் சொல்லுகிறார்.

வேதேஷு யஜ்ஞேஷு தப:ஸு சைவ
தாநேஷு யத்புண்யபலம் ப்ரதிஷ்டம் |
அத்யேதி தத்ஸர்வமிதம் விதித்வா
யோகீ பரம் ஸ்தாநமுபைதி சாத்யம் || (28)

ஸ்ரீ கண்ணபிரான் அருளிச் செய்த
ஸ்ரீ பகவத்கீதையில், எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ப-ரை] வேதேஷு—வேதங்களிலும், (அதாவது வேதங்களை ஜபம் செய்வதிலும்), யஜ்ஞேஷு—யஜ்ஞங்களிலும், தப:ஸுசைவ—தபஸ்ஸுக்களிலும், தாநேஷு—தானத்திலும், யத்—எந்த, புண்யபலம் புண்ய கர்மங்களின் பலம், ப்ரதிஷ்டம்—சொல்லப்பட்டிருக்கிறதோ, இதம்—இந்தக் கீழ்ச்சொல்லிய அர்த்தத்தை, விதித்வா—தெரிந்து கொண்டு, தத்—அந்த, ஸர்வம்—எல்லாவற்றையும், அத்யேதி—தாண்டிச் செல்லுகிறான், யோகீ—ஞானியாகி, பரம்—மேலான, ஆத்யம்—அநாதியான, ஸ்தாநம்—இடத்தை, உபைதி—அடைகிறான். 28

பா] ருக்கு, யஜுஸ்ஸு, ஸாமம், அதர்வணம், ஆகிய, வேதங்களை ஆவ்ருத்திசெய்தல் யஜ்ஞம், தபஸ்ஸு, தானம்செய்தல், முதலிய, எல்லாப்

தா] இருக்கிறபடியே ஸ்பஷ்டமான வழியை உடையவனாகிறான், என்று அர்த்தம். இரண்டு வழிகளையும் தெரிந்து கொள்வது விடவேண்டிய வழியை விடுவதற்காக, என்கிற அபிப்ராயத்தினால்சொல்லுகிறார்.— 'மற்றேப்படியேனில்' என்று. அர்ச்சிராதிகதியை த்யானம் செய்வதற்குப் பலத்தைச் சொல்லி, "தஸ்மாத்" (ஆகையினால்) என்று அதைக் காரணமாக எடுத்துக்கொண்டு உபாஸனத்தை விதிப்பது, பொருந்தாதாகையினால் யோக என்னும் பதம் இவ்விடத்தில் த்யானம் செய்தலை மாத்திரம் சொல்லுகிறது. அந்த த்யானமும் கீழ் ப்ரஸ்தாவிக்கப் பட்ட அர்ச்சிராதிகதியை நினைத்துக் கொண்டிருத்தலாகவே இருக்க வேண்டும், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஆகையினால்' என்று ஆரம்பித்து.

புண்ணிய கர்மங்களிலும் எந்தப்பலம் சொல்லப்பட்டதோ அவை எல்லா வற்றையும் இந்த இரண்டு அத்யாயங்களிலும் சொல்லப்பட்ட பகவா னுடைய மஹிமையைத் தெரிந்து கொண்டுத் தாண்டுகிறான். இதைத் தெரிந்து கொள்வதிலுண்டான ஸுகத்தின் மிகுதியினால் அவை யெல் லாவற்றையும் த்ருணம் போல எண்ணுகிறான். ஞானியுமாகி, ஞானிக்கு அடையத் தகுந்ததாயும், சிறந்ததாயும், முதன்மையுமான, இடத்தை அடைகிறான். 28

பகவத் ராமானுஜன் என்னும் உடையவர் அருளிச் செய்த ஸ்ரீ கீதா பாஷ்யத்தில் எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ ஶ்ரீமதே ராமானுஜாய நம:

தா] 'ஜ்ஞாத்வா' (இதைத் தெரிந்துகொண்டு) என்று பொது வாகச் சொல்லி இருப்பதினாலும் வேறொரு விசேஷமில்லாமையினா லும், ஒரே ஸந்தர்ப்பமாகிய இந்த இரண்டு அத்யாயங்களுடையவும் அர்த்தம் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லு கிறார்—'பிறகு' என்று ஆரம்பித்து. 'வேதேஷு' என்று யஜ்ஞம் முத லியவைகளைப் போலவே பலத்திற்குக் காரணமாக எடுத்திருக்கிறதே யல்லாமல், பலத்தைச சொல்லுகிறபடியினால் அல்ல. அப்படிக் கிருந் தால் யஜ்ஞம்முதலியவைகளின் பலத்தைத் தவிரமற்றவைகளின் பலத் தைப் பற்றியது, என்று அர்த்தத்தைச் சுருக்கிச சொல்ல வேண்டிய தாகும். வேதத்தை ஆவ்ருத்தி செய்வதும் பாபத்தைப் போக்குதல் முதலிய பலங்களைக் கொடுக்கிறது, என்று ஶ்ருதி முதலியவைகளில் ஏற்பட்டிருக்கிறது. யஜ்ஞம்முதலியவைகளின் பலங்களைச சொல்லுகிற படியினால் வேதத்தை இங்கே எடுத்திருக்கிறது என்னில். இப்பொ ழுது ப்ரஸ்தாவிக்கும் இரண்டு அத்யாயங்களின் அர்த்தமும் வேதங் களின் அர்த்தமாகையினால் அதைத் தாண்டுகிறது பொருந்தாதாகை யினால் அதிலிருந்தும் சுருக்கிச் சொல்ல வேண்டியதாகும், இவை எல் லாவற்றையும் மனதில் வைத்துக்கொண்டு, வேதங்களை ஆவ்ருத்தி செய் தல்' என்று, சொல்லப்பட்டது. தானேஷு' என்கிற இடத்தில் இருக் கும் 'ச' என்பது, இங்கு சொல்லப்படாததையும் சேர்த்துக் கொள் வதற்காக, என்பதைத் தெரிவிப்பதற்காக 'முதலிய' என்னும் பதம் 'புண்ய ஃபலம்' என்கிற இடத்தில 'புண்ய' என்னும் பதத்தினால் பலங்களுக்கு விசேஷணங்களாக யஜ்ஞம் முதலிய புண்ணியகர்மங்க ளைப் பொதுவாகச சொல்லி இருப்பது, பலம் சிறந்தது, என்று காட்

டுவதற்காக, என்கிற அபிப்ராயத்தினால் 'யஜ்ஞம் முதலிய எல்லாப் புண்ணிய கர்மங்களிலும்' என்று சொல்லப்பட்டது. 'இந்த இரண்டு அத்யாயங்களிலும் சொல்லப்பட்ட பகவானுடைய மஹிமையை' என்றதற்கு, ஏழாவது அத்யாயத்தின் ஆரம்பத்தில் பகவானுடைய மஹிமை ஆரம்பிக்கப்பட்டது. அதனுடன் சேர்ந்ததாகையினால் மற்றதெல்லாம் சொல்லப்பட்டது, என்று தாத்பர்யம் 'வாஸுதேவஸ்ஸர்வமிதி' என்று உபாஸனம் செய்வதினால் உண்டாக்கப்படுகிற ஸாக்ஷாத்கார பலம் தனித்துச் சொல்லப்படுகிறபடியினாலும், இங்கும் அதனையே சொல்லில் புனருக்தி வருகிறபடியினாலும், அதிகமான புண்ணியங்களின் பலத்தை அடைகிறான், என்று சொல்லில் லக்ஷணையின் மேல் லக்ஷணை சொல்ல வேண்டும் ஆகையினாலும், ஸம்ஸாரம் நிவ்ருத்திக்கிறது, என்று அர்த்தம் சொல்லில், புண்யபலம் என்கிற பதத்தினால் பாப பலத்தையும் சேர்த்துச் சொல்ல வேண்டியதாகிறபடியினாலும், 'தத்ஸர்வமத்யேதி' என்கிற இந்த பதத்தினால் உண்டாகிற விரக்தியைச் சொல்லுகிறது. மேலான பலத்தைத் தெரிந்துக் கொள்வது 1 'மந:ப்ரீதிரநாயாஸாத்' என்கிற ந்யாயத்தினால் மற்ற பலங்களில் ஆசை இல்லாமைக்குக் காரணம் ஆகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இதைத் தெரிந்து கொள்வதிலுண்டான' என்று பகவானுடைய மஹிமையைத் தெரிந்து கொள்வது மேலான இடத்தை அடைவதற்குக் காரணமாகையில் கீழ சொல்லிய விசேஷமான ஞானமாகிய வழியை 'யோகீ' என்பதினால் காட்டி இருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் 'ஞானியாகி' என்று, சொல்லப்பட்டது. இடத்திற்கு மேன்மையாவது, தேசம், காலம், இவைகளின் ஸம்பந்தத்தினால். 2 ஸூர்யனுடைய வர்ணம் போன்ற வர்ணமுடையதாய் ப்ரக்ருதிக்கு மேலே இருக்கிற' என்றும் 3 'அது அழிவில்லாத மேலான ஆகாசத்தில் (உள்ளது)' என்றும் 'அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்களும்' 4 'திவ்யம் ஸ்தாநமஜரஞ்சாப்ரமேயம்' 5 ஏதேவை நிர

I. அநாயாஸாத் - வருத்தமில்லாமையினால், மந:ப்ரீதி: - மனஸ்ஸுக்கு ப்ரீதி உண்டாகிறது. 2, புருஷஸூக்தம், 3, தைத்திரீய நாராயணம், 6 1, 2.

4. மஹாபாரதம், மௌஸலபர்வம், 5, 27, அஜரம் - நாஶமில்லாததாயும் அப்ரமேயம் - அளவிடமுடியாததுமான, திவ்யம் உயர்ந்த, ஸ்தாநம - இடத்தை, (அடையும் என்று சேர்த்துக்கொள்ளவும்.

5. மஹாபாரதம், ஶாந்திபர்வம், மோக்ஷதர்மம், 196, 31, தாத - ஓ குழந்தாய், பரமாத்மன:-பகவானுடைய, ஸ்த்தாநஸ்ய-இடத்திற்கு, ஏதே-இந்த ஸ்வர்க்கம் முதலிய லோகங்கள், நிரயா:- நரகங்கள்.

யாத்ஸாத்ஸாநஸ்ய வாராணஸிநஃ, என்றிவை முதலிய வசனங்கள் இருப்பதினாலும். 'ஆதி' என்பதற்கு அநாதியான என்று அர்த்தம். ஆதியில் இருக்கிற அதாவது காரணமான ப்ரஹ்மத்தை, என்று மற்றவர்கள் சொன்ன அர்த்தமோவெனில் ஸ்தானம் என்னும் பதம் பொருந்தாததாகையினால் யுக்தமல்ல. 28

ஸ்ரீமத் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

தாத்பர்ய சந்த்ரிகையில் எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

श्रीज्ञानानन्दमये नमः

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த கீதார்த்த ஸங்க்ரஹஶ்லோகம்.

எட்டாவது அத்தியாயம் ஸங்க்ரஹம்.

ऐश्वर्याक्षरयाथात्म्यभगवच्चरणार्थिनाम् ।
वेद्योपादेयभावानामष्टमे भेद उच्यते ॥ 12

ப-ரை] ऐश्वर्याक्षरयाथात्म्यभगवच्चरणार्थिनाम् ऐश्वर्य ஐஶ்வர்யம், अक्षर—ஜீவாத்மாவின், याथात्म्य—உண்மை, அதாவது கைவல்யம், भगवच्चरण—பகவானுடைய திருவடிகள், இவைகளை, अर्थिनाम्—விரும்புகிறவர்களுக்கு, वेद्योपादेयभावानाम् वेद्य—அறியத் தகுந்தவைகளும், उपादेय—அனுஷ்டிக்கத் தகுந்தவைகளுமான, भावानाम्—வஸ்துக்களினுடைய, भेदः—வ்யத்யாஸமானது अष्टमे—எட்டாவது அத்யாயத்தில், उच्यते—சொல்லப்படுகிறது. 12

ஸ்ரீ மந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த
கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை.

ஐஶ்வர்யமாவது இவ்விடத்தில் இந்த்ரன் ப்ரஹ்மா, ருத்ரன், இவர்களின் லோகங்களைவிட மேற்பட்ட லோகம். அக்ஷரயாதாத்ம்யமாவது, பரிஶுத்தமான ஜீவாத்மாவின் ஸ்வரூபம். அறியவேண்டியவைகளாவது 1 'अक्षरं ब्रह्म परमं' என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்ட பரிஶுத்தமான ஜீவாத்மாவின் ஸ்வரூபம் முதலியவைகள். அனுஷ்டிக்க வேண்டியவைகளாவது:— அவரவர்களால் விரும்பப்பட்ட பலங்களுக்குத் தக்கபடிப் பகவானை த்யானம் செய்தல், அந்திம ப்ரத்யயம், வழிகளை த்யானம் செய்தல், முதலியவைகள். 'भावाः' இவைகளாகிற வஸ்துக்கள் அவைகளின் வ்யத்யாஸங்களாவன. அவரவர்கள் அதிகாரத்திற்குத் தகுந்த விஶேஷங்கள். 12

ஸ்ரீ மந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த
கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷையில் எட்டாவது அத்யாயம்
சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

1. பகவத்கீதை, 8, 3.

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான திருவடிகளே ஶரணம்.

ஆராதசெல்வமும் ஆருயிர்காணு மரும்பயனும்
பேராததன்கழற் கீழமரும் பெருவாழ்ச்சிகளும்—
சோராதுகந்தவர் தூய்மதிகொள்வதுஞ் செய்வனவும்
தோராவிசயனுக்குத் திருநாரணன் செப்பினனே. 9

ப-ரை] திருநாரணன்—ஸ்ரீயபதியான நாராயணன், ஆராத—தன்னிலேதான் பூர்ணமாகாத, அல்லது திருப்தியைப் பெறாத, செல்வமும்—ஐஶ்வர்யத்தையும்; ஆர்—நிறைந்த, உயிர்---ஜீவாத்மாவை, காணும்—அனுபவித்தலாகிற, அரும்---அருமையான, பயன்---ப்ரயோஜனத்தையும், பேராத---விட்டுப்பிரியாத அதாவது புனராவ்ருத்தி இல்லாத, தன்--தன்னுடைய, கழற்கீழ்---திருவடிகளின் கீழே அமரும்---அமர்ந்திருக்கிற, பெரு---பெரிய, வாழ்ச்சிகளும்---புருஷார்த்தங்களையும், சோராது--விடாமல், உகந்தவர்---ஆசைப்பட்டவர்கள், தூய்---பரிஶுத்தமான மதி---புத்தியில், கொள்வனவும்---அறியத் தக்கவைகளையும், செய்வனவும்---செய்யத் தக்கவைகளையும், தோரா---தோல்வியை அடையாத, விஜயனுக்கு---அர்ஜுனனுக்கு, செப்பினன்---சொன்னான். 9

க-ரை] ஆர்தல்-பூர்ணமாகுதல், ஆராத-தான்பூர்ணமாகாத, என்பதினால், ஐஶ்வர்யத்திற்காக பகவானை உபாஸிக்கிறவர்களுக்கு அந்த ஐஶ்வர்யம் தானே பூர்ணமாகாமல் மோக்ஷபர்யந்தம் ஆகும் என்று ஏழாவது அத்யாயம், இருபத்தி மூன்றாவது ஶ்லோகத்தில் அருளிச் செய்தது ஜ்ஞாபகப்படுத்தப்பட்டது அன்றிக்கே, ஆராத-த்ருப்தி இல்லாத, என்று அர்த்தம் சொல்லில் இந்த்ரன் ப்ரஹ்மா முதலியவர்களின் ஐஶ்வர்யத்தைவிட மேலான ஐஶ்வர்யத்தை பகவான் கொடுப்பதினால் அவைகளை அனுபவிப்பதினால் த்ருப்தி பிறப்பதில்லை என்றுத் தாத்பர்யமாவதினால், 1 "அதிதைவதம்" என்கிற பதத்தின் கருத்து விவரிக்கப்பட்டது. "அதிதைவதம்" இந்திரன் முதலியவர்களின் போகங்களுக்கு மேற்பட்ட போகங்களை அனுபவிக்கிற ஜீவன், என்றல்லவோ பாஷ்யத்தில் அர்த்தம் அருளிச் செய்யப்பட்டது. ஆருயிர் ஆர்-பூர்ணமான உயிர்-ஜீவாத்மா. இங்கே பூர்ணமாகுகையாவது 2 "யம்ல

1. பகவத்கீதை, 4-8. 2. பகவத்கீதை, 6-22.

ஸ்வாபாவ்யமாஹம் ஹ்ருதேநாபிகச்சதி” என்று சொல்லுகிறபடியே இந்த ஜீவாத்மாவை அநுபவிக்கப்புக்கால் இதைவிட மேலான ப்ரயோஜனம் ஒன்றுளது என்று தோற்றுதபடி ஸுகம் நிறைந்திருக்கை. அன்றிக்கே 1 “தத்ஸ்வாபாவ்யம்” என்கிற ச்லோகத்தில் அநுஸந்தித்தபடிக்கு எல்லா வஸ்துக்களிலும் உள்ள ஜ்ஞானத்தை ஸ்வபாவமாக உடைத்தாய் இருக்கை. அப்பொழுது, ஆத்மபூத ஜ்ஞானத்தினால் எல்லா வஸ்துக்களிலும் நிறைந்த, என்று அர்த்தம் சொல்லிக்கொள்ளவும். அன்றிக்கே தனக்கு ஸ்வபாவத்திலேயே ஏற்பட்ட, கர்மங்களுக்கு வசப்பட்டிராமை, கிழத்தனமில்லாமை, மரணமில்லாமை, துக்கமில்லாமை, பசி இல்லாமை, தாஹமில்லாமை, ஸத்யகாமனாக இருக்கை, ஸத்ய ஸங்கல்பனாக இருக்கை, ஆகிய; எட்டு குணங்களும் நிறைந்த, என்றதாகவுமாம். அரும்பயனும், என்பதினால் மிகவும் ச்ரமப்பட்டு ஸம்பாதிக்கவேண்டும் என்பது ஏற்பட்டது இதனால் மற்ற பலன்களைப் போலவே இதற்கும் துக்கமூலத்வம் என்னும் தோஷம் உண்டு என்று காட்டப்பட்டது இது உபலக்ஷணம் இதற்கு அல்பமாயிருத்தல் முதலிய மற்ற தோஷங்களும் உண்டு என்று, தாத்பர்யம் பகவத் ப்ராப்தியைவிட மிகவும் தாழ்ந்ததான ஆத்மாநுபவ ஸுகத்திற்காகப் படும் கஷ்டங்கள் எல்லாம் மலையைக் கல்லி எலியைப் பிடிப்பாரைப்போல என்று, பரிஹாஸம் செய்வதில் தாத்பர்யம். “சோராதுகந்தவர்” என்பதினால், பகவானையும் அவனுடைய கல்யாண குணங்களையும் அநுபவிக்கச் செய்தே, தான் வந்த காரியத்தை மறந்து ஒரு திருவாட்டிபிள்ளை பெற்றவாறு என்னென்று விஸ்மயப்பட்ட விச்வாமித்ர மஹர்ஷியைப்போல, 2 “காலாழும் நெஞ்சழியும், கண்சுழலும்” என்று முன்னடி தோற்றாமல் நிற்கவேண்டி இருக்கத் தாங்கள் கொண்டதையே பிடித்துக்கொண்டு அவனுடைய போகப்பதையில் நெஞ்சம் செல்லாமல் இருப்பதே, என்கிற திருவுள்ளத்தினால் 3 “பிறவித் துயரற ஞானத்துள் நின்று, துறவிச்சுடர் விளக்கம் தலைப்பெய்வார், அறவனை ஆழிப்படை அந்தணனை, மறவியையின்றி மனத்துவைப்பாரே” என்று ஆச்சர்யப்படுகிறார். “தூய்மதி கோளவதும்” என்கிற இடத்தில் புத்திக்குத் தூய்மையாவது, 4 “காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தேऽந்யதேவதா:” என்று சொல்லுகிறபடியே 5 “அ

1. பகவத்கீதை, 8-21. 2. பெரியதிருவந்தாதி, 34பாட்டு. 3. திருவாய்மொழி, 1 பத்து, 7-1. 4. பகவத்கீதை, 7-20. 5. திருவாய்மொழி, 1-1-4.

வாஞ்சிதத்தைத் தருமவன் வஸ்துக்களை, அவரவர் இச்சையளவென்ன” அடி அடை பாயல் பகவானை ஸர்வபலப்ரதன் ஆகையினால் எல்லாப் பலங்களுக்கும் அவனை ஆராதிக்கத்தக்கவன், என்று தெரிந்துகொள்ளுதல். 1“ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்” என்றல்லவோ அருளிச்செய்யப்பட்டது. 9

ஸ்ரீ- உ- சேட்லூர் வித்வான், பகவத்விஷய,

நரஸிம்ஹாசாரியர், செய்த ஸ்ரீகீதார்த்தஸங்க்ரஹ

வ்யாக்யானத்தில், எட்டாவது பாட்டுக்கு

வ்யாக்யானம் முற்றிற்று.

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

1. பகவத்கீதை, 7-16.

ஸ்ரீமத்பகவத்கீதை.

ஸ்ரீ:

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஒன்பதாவது அத்தியாயம்.

பா] உபாஸனம் செய்கிறவர்களின் வ்யத்யாஸங்களைப் பொறுத்த விசேஷங்கள் நிரூபிக்கப்பட்டன இப்பொழுது உபாஸிக்கப்படுகிற பரமபுருஷனுடைய மஹிமையையும் ஜ்ஞானிகளின் விசேஷத்தையும் தெளிவாக நிரூபித்து, பக்தியாகிய உபாஸனத்தின் ஸ்வரூபமும் சொல்லப்படுகிறது

தா] 1 ஸ்வமாஹாத்ம்யம் மநுஷ்யத்வே பரத்வம் ச மஹாத்மநாம் । விசேஷோ நவமே யோகோ பக்திரூப: ப்ரகீர்த்தித: ॥ என்கிற ஸங்க்ரஹ ஶ்லோகத்தை வ்யாக்யானம் செய்துகொண்டு அதை அனுஸரித்து, எட்டாவது, ஒன்பதாவது அத்யாயங்களுக்கு ஸங்கதியைச் சொல்லுகிறார்—"உபாஸனம் செய்கிறவர்களின்" என்று ஆரம்பித்து. "விசேஷங்களாவது" அறியவேண்டியவைகளுடையவும், அனுஷ்டிக்கவேண்டியவைகளுடையவும் வ்யத்யாஸங்கள் பகவானுடைய மஹிமையும் ஜ்ஞானிகளின் விசேஷமும் முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறபடியினால், அதைத் தெளிவாக நிரூபித்தல் மாத்திரம் இவ்விடத்தில் உபாஸனத்தோடும் அதின் பலத்தோடும், சேர்ந்ததாகையினால் செய்யப்படுகி

---

1. கீதார்த்த ஸங்க்ரஹம், 16 ஶ்லோகம்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 - பகவானாகிய ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.

𑌇𑌦𑌂 𑌤𑍁 𑌤𑍇 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌨𑌸𑍂𑌯𑌵𑍇 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌹𑌿𑌤𑌂 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇𑌽𑌶𑍁𑌭𑌾𑌤𑍍

ப-ரை] 𑌅𑌨𑌸𑍂𑌯𑌵𑍇--- 'பொறாமை இல்லாத,தே-உனக்கு, 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂-மறைக்க வேண்டியவைகளுக்குள் மிகவும்முக்கியமான,𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌹𑌿𑌤𑌂---விசேஷமான ஜ்ஞானங்களோடு கூடிய, 𑌇𑌦𑌂---இந்த 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂---ஜ்ஞானத்தை, 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿---சொல்லப் போகிறேன்,𑌯𑌤𑍍---, எந்த பக்தியாகிய ஜ்ஞானத்தை 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾---அறிந்து, 𑌅𑌶𑍁𑌭𑌾𑌤𑍍---பாபங்களிலிருந்து, 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇---விடுபடப் போகிறாயோ.

ரஹ. இந்த அத்யாயத்துக்கு முக்யமான அர்த்தமோவெனில், உபாஸனத்தின் ஸ்வரூபத்தை நிரூபித்ததேல, என்கிற அபிப்ராயத்தினால், 'தெளிவாக நிரூபித்து' என்று பிரித்துச் சொல்லி 'பக்தியாகிய' என்று தனித்துச் சொல்லப்பட்டது. இந்த அத்யாயத்திலும், மற்ற ஸந்தர்ப்பங்களிலும், ஒரே அர்த்தத்தைப்பற்றி,பக்தி,உபாஸனம்,என்கிற பதங்களை உபயோகித்து இருக்கிறபடியினால் ஸ்ருதியில் ஏற்பட்ட உபாஸனத்திற்கே பக்தி என்னும் பதத்தினால் விசேஷம் சொல்லப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் பக்தியாகிய உபாஸனத்தின் என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் "𑌇𑌦𑌂 𑌤𑍁 𑌤𑍇 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂" என்று ஜ்ஞானத்தைப்பற்றியே ஆரம்பிக்கிறபடியினாலும், 1 "𑌮𑌨𑍍𑌮𑌨𑌾𑌭𑌵" என்று முடிக்கப்படுகிறபடியினாலும், இடையிலும் அநேக இடங்களில் பக்தியே அடிக்கடி சொல்லப்படுகிறபடியினாலும், ப்ரத்யக்ஷம்போலிருக்கை, மிகவும் ப்ரியமாக இருக்கை, திருநாமங்களைச் சொல்லுதல், அவனுடைய கைங்கர்யங்களில் ப்ரயத்தினம் செய்தல், நமஸ்காரம் செய்தல், முதலிய புதிய பக்தியின் ஸ்வரூபத்திற்குட்பட்ட விசேஷங்கள் சொல்லப்படுகிற படியினாலும், இதினால் உண்டாக்கப் படுகிற மிகவும் சிறந்த ப்ரயோஜனத்தைச் சொல்லுகிறபடியினாலும், 2 "𑌰𑌾𑌜𑌵𑌿𑌦𑍍𑌯𑌾" என்று ஆரம்பித்து இதைப்பற்றியே ஸ்தோத்திரமாகிய அர்த்தவாதமிருக்கிறபடியினாலும் இந்த அத்யாயத்தில் ஆரம்பம் முடிவு முதலிய, அடையாளங்களினால் பக்தியின் ஸ்வரூபத்தைச் சொல்வதிலேயே இந்த அத்யாயத்திற்குத் தாத்பர்யம். அத்துடன் சேர்ந்திருக்கிறபடியினால் மற்றதும் இந்த அத்யாயத்தில் சொல்லப்படுகிறது, என்று தாத்பர்யம்.

1. பகவத்கீதை, 9-43. 2. பகவத்கீதை, 9-2.

பா] இந்த மறைக்கத் தக்கவைகளுக்குள் மிகவும் சிறந்ததான, பக்தியாகிய உபாஸனம் என்று பெயரையுடைய ஞானத்தை, அந்த உபாஸனத்தைச் சேர்ந்த விசேஷ ஞானத்தோடு கூட, பொறாமை இல்லாத உனக்குச் சொல்லப்போகிறேன். அதாவது என்னைப் பற்றிய மற்றெல்லா

தா] 'வக்ஷ்யதே' என்கிற இடத்தில் மேல் சொல்லப்போகிறதே புத்தியில் தோன்றி இருக்கிறபடியினால் 'இதம்' (இது) என்று சொல்லப்பட்டது. 1 'இவனை அதிவாதம் செய்கிறான்' என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்தில் ஜீவாத்மாவை உபாஸிக்கிறவனை விடப் பரப்ரஹ்மத்தை உபாஸிக்கிறவன் மேலானவன் என்று ஏற்படுவதைப்போல இவ்விடத்திலும் 'து' என்னும் பதத்தினால் கர்மயோக ஞானயோகங்களைவிட மேல் சொல்லப்போகிறது மேலானது, என்று ஏற்படுகிறது. அவைகளுள், ஒன்று மறைக்க கூடியது, மற்றொன்று மறைக்கக்கூடியதுள் சிறந்தது. இதுவோவெனில், மறைக்கக் கூடியவையுள் மிகவும் சிறந்தது. இதுவும், அதிகமான, கேட்கவேண்டுமென்கிற ஆசையை உண்டாக்குவதற்காகவும், அதிகமாக மறைக்க வேண்டியது என்பதற்காகவும் சொல்லப்பட்டது. இதனால் விவரிக்கப்படுகிற வேதாந்த வாக்யங்களிலே போல இவ்விடத்திலும் ஞான என்னும் பதம் மேலே சொல்லப்போகிற விசேஷமான ஞானத்தில் முடிவு பெறுகிறது, என்று தெரிவிப்பதற்காக--பக்தியாகிய உபாஸனம் என்று பெயரை உடைய' என்று சொல்லப்பட்டது. 'உபாஸனத்தைச் சேர்ந்த விசேஷ ஞானத்தோடு கூட' என்பது. 2 முன்பு சொன்ன விஜ்ஞானத்தைவிட இவ்விடத்தில் சொல்லப்பட்ட விஜ்ஞானத்திற்கு பேதம். அதாவது முன்பு சொல்லிய விஜ்ஞானம், உபாஸனம் செய்யப்படுகிற வஸ்து முதலியவைகளின் விசேஷங்களைப் பற்றிய ஜ்ஞானம். இந்த உபாஸனத்தைச் சேர்ந்த விசேஷங்களைப் பற்றியது. அதாவது உபாஸனம் செய்யும் மாதிரி. இந்த ஸந்தர்ப்பத்திற்கு உபயோகமான பொறாமை இல்லாமையின் மாதிரியைக் காட்டுகிறார்---'என்னைப்பற்றிய' என்று ஆரம்பித்து. குணங்களைத் தோஷமாக ப்ரகாஶப்படுத்துவதற்குக் காரணமான மனதின் வ்யாபாரம், பொறாமை, அதில்லாமையாவது குணங்களைக்குணமாக எண்ணுதல் அல்லவோ, என்று தாத்பர்யம். இதனால் உபதேஶம் செய்யத் தக்கவன், தகாதவன், இவர்களைப் பிரித்துச் சிஷ்யர்களுக்குத் தெரிவித்திருக்கிறது. வித்யைகள் சொல்லும் வார்த்தையாக 3 'அஸூயகாய மாம் மா தா:' என்று ஸ்ம்ருதிகளில் சொல்லி இருக்கிறார்

---

1 சாந்தோக்யம், 7-16 2 பகவத்கீதை 7-2. 3 அஸூயகாய-பொறாமைக்காரனுக்கு மாம்-என்னை, மாதா:—கொடுக்காதே.

பா] வஸ்துக்களையும் விடச்சிறந்ததாயும், அளவிடமுடியாத விசேஷங்களை உடையதாகவுமிருக்கிற மஹிமையைக் கேட்டு இப்படிக்கே இருக்கிறது, என்று நினைத்துக் கொண்டிருக்கிற உனக்குச் சொல்லப்போகிறேன் என்று அர்த்தம். எந்த ஜ்ஞானத்தை அனுஷ்டிக்கும் வரையிலாக அறிந்து கொண்டு, என்னை அடைவதற்குத் தடையான எல்லாப் பாபங்களிலிருந்தும், விடுபடப் போகிறாயோ. 1

ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்ரமிதமுத்தமம் ।
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்துமவ்யயம் ॥ (2)

ப-ரை] இதம்-இது, ராஜவித்யா-வித்யைகளுக்குள் ராஜா, (அதாவது சிறந்தது) ராஜகுஹ்யம்-மறைக்க வேண்டியவைகளுக்குள் சிறந்தது, உத்தமம்-மிகவும் சிறந்த, பவித்ரம்-பரிசுத்தியைக் கொடுக்கக்கூடியது, ப்ரத்யக்ஷாவகமம்-ப்ரத்யக்ஷமாகக்கூடிய விஷயத்தை உடையது, தர்ம்யம்-தர்மத்தைவிட்டு விலகாதது. (அதாவது மேலானநன்மையைக் கொடுக்கக் கூடியது) என்று தாத்பர்யம்), கர்தும்-செய்வதற்கு, ஸுஸுகம்-மிகவும் ஸுகமானது, அவ்யயம்-அழிவில்லாதது. 2

தா] கள். இந்தக் கீதையிலும் 1 'இதந்து தே குஹ்யதமம்' என்று ஆரம்பித்து 'நவமோ(அ)த்யாய:' என்று சொல்லப்போகிறார். 'வேதக்ஷாமி' என்பதற்கு எல்லாவற்றையும் ஸகலமாகவும் ப்ரகாசமாகவும் சொல்லப்போகிறேன் என்று அர்த்தம். 'எந்தஜ்ஞானத்தை அனுஷ்டிக்கும்வரையிலாகஅறிந்துகொண்டு' என்பதற்குஅனுஷ்டிக்கவேண்டியதைத் தெரிந்துகொண்ட மாத்திரத்தினால், அதைஅனுஷ்டித்ததினாலுண்டாகும் பலம் உண்டாகாது அல்லவா, ஆகையினால் உபாஸனத்தின் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டு அதை அனுஷ்டித்து அதின் வழியாக மோக்ஷத்தை அடையப்போகிறாய், என்று சொல்லப்படுகிறது, என்று தாத்பர்யம். கர்மம் முதலியவைகளினால் பக்தி உண்டாவதற்குத் தடையான பாபம்போக்கப்படுகிறது. பக்தியினாலோ என்னில், பகவானை அடைவதற்குத் தடையான பாபமெல்லாம் போக்கப்படுகிறது, என்றல்லவோ ப்ரமாணத்தில் ஏற்பட்டிருக்கிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'என்னை அடைவதற்குத் தடையான எல்லாப் பாபங்களிலிருந்தும்' என்று சொல்லப்பட்டது. 'அசுபம்' என்னும் பதம் இவ்விடத்தில் ஸ்வர்கம் முதலியவைகள் என்று பெயரை உடைய மோஹத்தை உண்டாக்கக்கூடிய நரகங்களுக்குக் காரணமாகிய, புண்யம் என்கிற பதத்தினால் சொல்லப்படுகிற பாபங்களையும் பற்றியது. என்பதும், 'எல்லா' என்கிற பதத்தினால் சொல்லப்படுகிறது. 1

1 பகவத்கீதை 18-67.

பா] வித்யைகளுக்குள் ராஜா, மறைக்கவேண்டியவைகளுக்குள்ராஜா, அதுவன்றிக்கே, ராஜாக்களுடைய வித்யை என்றும் சொல்லவுமாம். ராஜாக்கள் விஶாலமாயும் கம்பீரமாயுமுள்ள மனதை உடையவர்கள் அல்லவா, ஆகையினால் பெரிய மனதை உடையவர்களுடைய வித்யை இது, என்றும் அர்த்தம் பெரிய மனதை உடையவர்களே மறைக்க

தா] மற்ற உபாயங்களைவிட இந்த உபாயத்திற்கு மேன்மையை இந்த ஶ்லோகத்தினால் சொல்லுகிறார்--இவ்விடத்தில் ராஜா என்னும் பதமானது க்ஷத்திரியன் என்கிற ஜாதியை மாத்ரம் சொல்லுகிறதாக இருந்தாலும் 1 "விஶேஷவிதிர்விஶேஷநிஷேதாய பவதி" என்கிற ந்யாயத்தினால், ப்ராஹ்மணன் முதலியவர்களுக்கு அதிகாரம் இல்லாமல் போக வேண்டியதாகும் ஆகையினால் ராஜாக்களின் வித்யை என்பதை அனுசரித்துவிட்டு அர்த்தம் சொல்லுகிறார்— 'வித்யைகளுக்குள் ராஜா, மறைக்க வேண்டியவைகளுக்குள் ராஜா' என்று காமதாரய ஸமாஸத்தின் தாத்பர்யத்தை அனுஸரித்து இது சொல்லப்பட்டது. பதத்திற்கு நேரான அர்த்தமோ வென்னில், ராஜாவாகிய வித்யை என்று சொல்லவேண்டியது, அன்றிக்கே 2 "ராஜதந்தாதிஷு" என்கிற பதங்களின் ஸமூஹத்தில் படிக்கப்பட்டது, என்று ஊகித்துக்கொள்ளவும். "ஶ்ரேஷ்டோத்தமம்" என்கிற இடத்திலிருக்கும் உத்தம என்னும் பதத்தின் அர்த்தத்தையே இங்கும்சொல்லவேண்டியது அவசியமானதினால், இவ்விடத்தில் ராஜா என்னும் பதம் சிறந்தது, என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது. இப்படி ப்ரஸித்தமல்லாத அர்த்தத்தை சொல்வதினாலுண்டான வருத்தத்தைப் பொறுக்காதவராய்ச் சொல்லுகிறார்-ராஜாக்களுடைய வித்யை' என்று ப்ராஹ்மணன் முதலியவர்களுக்கு இதில் அதிகாரமில்லை, என்று மறுத்ததாகிறதே என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரிப்பதற்காக (இது உபசாரமாகச் சொல்லி இருக்கிறது என்று மனதில் வைத்துக்கொண்டு) அப்படிக்கு உபசாரமாகச் சொல்வதற்குக் காரணமான குணத்தைக் காட்டுகிறார்—'ராஜாக்கள்' என்று ஆரம்பித்தது. ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார் 'பெரியமனதை உடையவர்களு

1 பொதுவான ந்யாயம், தனித்து ஒருவனுக்குமாத்திரம் ஒன்றை விதித்தால் மற்றவர்களுக்கு அது இல்லை என்று தெரிவிக்கிறது. இங்கே ராஜாக்களுக்கு மாத்திரம் விதித்ததினால் மற்ற வர்ணத்தினருக்கு இல்லை என்பது அறியக்கடவதாகும்.

2 ராஜதந்த: என்று ஒருபதம் இம்மாதிரியான பதங்களுடன் ராஜபதத்தைச் சேர்த்தால் தந்தராஜ: என்று வருவதற்குப் பதிலாக ராஜதந்த: என்பதுபோல ராஜ பதம் முன்பே வரும் என்பது பொருள்.

வேண்டியவைகளை மறைத்தலில் ஸாமர்த்யமுடையவர்கள். ஆகையி
னால், இது அவர்களாலேயே மறைக்கத்தக்கது. என்னை அடைவதற்குத்
தடையான எல்லாப் பாபங்களையும் போக்கக்கூடியது. “அவகம்யதே”
(அறியப்படுகிறது) என்னும் வ்யுத்பத்தியினால், “அவகமம்” என்றால்
விஷயம்: ப்ரத்யக்ஷமாகத் தெரியும் விஷயத்தை உடையது. அதாவது
பக்தியாகிய உபாஸனத்தினால் உபாஸிக்கப்படுகிற நான், அப்பொழுதே
உபாஸனம் செய்கிறவனுக்கு ப்ரத்யக்ஷமாகப் பார்க்கக் கூடியவனாய்

டைய’ என்று ஆரம்பித்து. இங்கு 1 அஜஹல்லக்ஷணையாவது கௌணீ
வ்ருத்தியாவது, சொல்லவேண்டும் என்று தாத்பர்யம். மற்றவர்களினால்
அறிய முடியாததாகையினால், என்று அபிப்ராயம். இந்த விக்ஞை, ராஜகுஹ்
யம், என்பதற்கும் ப்ரயோஜனம் உண்டாவதற்காக ஔபசாரிகமான அர்
த்தத்தைக் காட்டுகிறார்—‘பெரிய மனதை உடையவர்களே’ என்று.
உபாயத்திற்குத் தடையான பாபங்களை, நிவ்ருத்தி செய்யுமவைகளை
யும், சிற்சில பாபங்களை நிவ்ருத்தி செய்யுமவைகளையும், விலக்குவதற்
காக—‘உத்தமம்’ என்னும் பதத்தோடு சேர்ந்த—‘பவித்ரம்’ என்னும்
பதத்தின் தாத்பர்யத்தைச் சொல்லுகிறார்—‘என்னை அடைவதற்கு’
என்று ஆரம்பித்து. ‘ப்ரத்யக்ஷாவகமம்’ என்கிற இடத்தில் ப்ரத்யக்ஷ
மாகிற ஞானத்தைச் சொல்லுகிறதாக இருந்தால், ஒன்றன்பால், பொ
ருந்தாததாகையினாலும், ஞானமே விசேஷ்யமாதலினால், ப்ரத்யக்ஷ
மான ஜ்ஞானத்தை உடையது, என்று பஹுவ்ரீஹிஸமாஸம் சொல்வ
தும் பொருந்தாததாகையினாலும், ‘அவகமம்’ என்கிற பதத்திற்கு அறியப்படு
கிற வஸ்து, என்று அர்த்தத்தைச் சொல்லி பஹுவ்ரீஹி ஸமாஸத்
தைப் பொருந்தச் செய்கிறார்—‘அவகம்யதே’ என்று ஆரம்பித்து.
இது யுக்தமல்ல. உபாஸனம் என்பது, இடைவிடாமல் நினைத்துக்
கொண்டு இருப்பது ஆகையினாலும், உபாஸிக்கப்படுகிற வஸ்து ப்ரத்
யக்ஷமாகத் தெரியாது, என்று ஶ்ருதியில் சொல்லி இருப்பதினாலும்,
ப்ரத்யக்ஷமான மற்ற வஸ்துக்களுக்கு பக்தியில் ஸம்பந்தமில்லையாத
லாலும், என்கிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் சொல்லுகிறார்—
‘அதாவது’ என்று ஆரம்பித்து. 2 ‘ஜ்ஞாதுந்த்ரஷ்டுஞ்ச’ என்றிவை
முதலியது இங்கே நினைக்கத்தக்கது. ‘அப்பொழுதே’ என்று ஸமீபகால
த்திலுண்டாவதினால் சொல்லப்பட்டது. தானே ப்ரயோஜனமாக இரு
ப்பவைகளுக்கு வேறு ப்ரயோஜனங்களுக்கு ஸாதனமாக இருக்கையா

---

1 அஜஹல்லக்ஷணை, முதல்வால்யூம் 507-வது பக்கத்தின் புட்நோட்டைப்பார்க்க. கௌணீவ்ருத்தியாவது ஒன்றின்குணம் மற்றொன்றில் இருக்குமாயின் இதை அதுவாகவே சொல்லுதல. 2 பகவத்கீதை 11-54.

இருக்கையை அடைகிறேன், என்று அர்த்தம். அப்படிக்கிருந்தாலும் தர்ம த்தைவிட்டு விலகாதது. தர்மம் என்பது, நன்மைக்கு ஸாதனமாக இருப் பது. ஸ்வரூபத்திலேயே மிகவும் ப்ரியமாகையினாலும், அப்படியேஎன் னுடைய ப்ரத்யக்ஷத்தை உண்டாக்கிறபடியினாலும்,தானே நன்மையாக இருந்தாலும் மேலான நன்மையாயும், அழிவில்லாததாயும் இருக்கிற என்னை அடைவதற்கு ஸாதனம் என்று அர்த்தம். ஆகையினாலே ஸுக

கிற தர்மமாக இருத்தல் பொருந்தாது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அப்படிக்கிருந்தாலும்' என்று 1 'ய..' என்கிற ஸூத்ரத்தை அனுஸரித்து 'ய..' என்னும் பதத்திற்கு அர்த்தத்தைச் சொல்லுகிறார் — ' தர்மத்தைவிட்டு விலகாதது ' என்று. அபிப்ராயத்தை விவரணம் செய்கிறார்— ' தர்மமென்பது ' என்று ஆரம்பித்து. ப்ரீதி என்னும் அர்த்த முடைய ' ய..யைச் சொல்லுகிற தாதுவின்மேல் காரணம் என் னும் அர்த்தத்தைச் சொல்வதாகத் தர்ம என்னும் பதம் ஏற்பட்டது, என்று தாத்பர்யம். பெரியோர்களாலும் 2 '..' என்று சொல்லப்பட்டது. அந்த நன்மைக்கு இவ்விடத்தில் ஒரு வித அளவும் இல்லாமையினாலும் 3 '..' என்று நிகண்டுவில் சொல்லி இருக்கிறபடியி னாலும் 'மேலான நன்மையாயும்' என்றிவை முதலானது சொல் லப்பட்டது—'ஆகையினாலேயே' என்பதற்குத் தன்னுடைய ஸ்வ ரூபத்தினாலும், தன்னாலுண்டாக்கப்படுகிற வஸ்துவினாலும், ப்ர யோஜனமாக இருக்கிறபடியினால், என்று அர்த்தம். "..ஸுஸுகம்" என்பதற்குச் செய்யும் பொழுதே ஸுகமாக இருக் கிற, என்று அர்த்தம். செய்த பின்பு ஸுக முண்டாகிறது, என் கிற அர்த்தம், என்கிற ப்ரமத்தை விலக்குவதற்காகச் சொல்லு

1 வ்யாகரணம், அஷ்டாத்யாயீ, 4-4-92. தர்ம, பதி, அர்த்த, ந்யாய, இவைக ளோடு, விட்டுப்பிரியாத என்னும் அர்த்தத்தில், ய, என்பதுவரும். தர்ம்ய, பத்ய முதலியன.

2 தர்ம இதி-தர்மம் என்கிற, உபஸம்ஹாரியே - லக்ஷ்யத்தில், யத்-எந்த, ஶ்ரேயஸ்கரபாஷணம்-நன்மையைக் கொடுக்கிறதுஎன்று சொல்லி இருக்கிறதோ, தத்-அது, தர்மபத வாச்யார்த்த நிரூபணவிவக்ஷயா-தர்மம் என்னும் பதத்தினால் சொல்லப்படுகிற அர்த்தத்தை நிரூபிக்கவேண்டும் என்கிற எண்ணத்தினால்.

3 நாமலிங்கானுஶாஸனம், முதல்காண்டம், ஸ்வர்க்கம், 46 ஶ்லோகம், இந்த முக்தி: கைவல்யம், நிர்வாணம், ஶ்ரேயஸ், நிஶ்ரேயஸம, அம்ருதம், முதலிய பதங் கள் மோக்ஷத்தைச் சொல்லுமவை.

மாகச் செய்யக்கூடியது. அதாவது மிகவும் ப்ரியமாய் அனுஷ்டிக்கத் தகுந்தது. அழிவு இல்லாதது. என்னை அடைதலாகிய பலத்தைக் கொடுத்தும் தான் நாசிக்கிறதில்லை. அதாவது இப்படிப்பட்ட உபாஸனத்தைச் செய்தவனுக்கு என்னைக் கொடுத்த பிறகும் நம்மால் இவனுக்கு ஒன்றும் செய்யப்படவில்லையே, என்று எப்பொழுதும் எனக்குத் தோன்றுகிறது. 2

அஶ்ரத்தாநா: புருஷா: தர்மஸ்யாஸ்ய பரந்தப।
அப்ராப்ய மாம் நிவர்தந்தே ம்ருத்யுஸம்ஸாரவர்த்மநி ॥

ப-ரை] பரந்தப-சத்ருக்களை ஜயிக்கும் ஸ்வபாவமுடைய அர்ஜுனா, அஸ்ய-இந்த, தர்மஸ்ய-தர்மத்தின் விஷயத்தில், அஶ்ரத்தாநா:-ஶ்ரத்தை இல்லாத, புருஷா:-புருஷர்கள், மாம்-என்னை, அப்ராப்ய-அடையாமல் 'ம்ருத்யுஸம்ஸாரவர்த்மநி-ம்ருத்யுவாகிய ஸம்ஸாரத்தின் வழியில், நிவர்தந்தே-எப்பொழுதும் இருக்கிறார்கள். 3

பா] மிகவும் ப்ரியனான என்னைப்பற்றியதாகையினால் தானும் மிகவும் ப்ரியமாகவும், சிறந்த நன்மையாகிய என்னை அடைவதற்கு ஸாதனமாக

தா] கிறார்—'ஸுகமாகச் செய்யக்கூடியது' என்று. "ஸு" என்னும் உபஸர்கத்தினுடையவும் ஸுக என்னும் பதத்தினுடையவும், அபிப்ராயத்தி லிருக்கும் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'மிகவும்' என்று ஆரம்பித்து. ஸ்வரூபத்தினாலும் விஷயத்தினாலும் மிகவும் அனுகூலமாக இருக்கிறபடியினால், ஸுகமாக அனுஷ்டிக்கத் தக்கது என்று அர்த்தம். மற்ற எல்லாக் கர்மங்களும அதனின் ப்ரயோஜனத்தினால் நாசம் செய்யக்கூடியதல்லவா? இதுவோவெனில் ஸுலபமாகச் செய்யக்கூடியதாக இருந்தாலும் பலத்தினாலும் நாசம் செய்யப்படுகிறதில்லை. மோக்ஷமாகிய பலமும், இதற்குப் போதாது, என்று இதன் மேன்மையைச சொல்லுகிறது—"அவ்யயம்" என்னும் பதம், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அழிவில்லாதது' என்று. அத்தை விவரிக்கிறா 'என்னை அடைதலாகிய' என்று ஆரம்பித்து. ஆனால், இத்தைவிட வேறாயும் மேலானதாயும் இதனாலுண்டாக்கப்படுகிற ப்ரயோஜனம் என்ன, என்று ஆக்ஷேபம் வரினிதின் அபிப்ராயத்தைச் சொல்லுகிறார்—'இப்படிப்பட்ட' என்று ஆரம்பித்து. 2

கீழ்ச்சொல்லியபடி ஶ்ரத்தைவைக்கக்கூடிய ஜ்ஞானமும், அனுஷ்டானமும் இல்லாவிடில் மோக்ஷம்ஸித்திக்காது, என்றுகாட்டிக்கொண்டு ஸ்வரூபத்தினாலும் ப்ரயோஜனத்தினாலும் எல்லையில்லாதஸுகமாகிய இதை எல்லோரும் அனுஷ்டிக்காமல் இருப்பதற்குக்காரணத்தையும் சொல்லிக்கொண்டு 1 'மோக்ஷத்திற்கு வேறு வழி இல்லை' என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்தை இந்த ஶ்லோகத்தினால் விவரிக்கிறார்—

---

1 புருஷஸூக்தம்.

வும், அழிவு இல்லாததாயும் இருக்கிற, இந்த உபாஸனம் என்று பெயரை உடைய தர்மத்தை அனுஷ்டிக்கத்தகுந்த தசையை அடைந்து, ச்ரத்தையுடன் கூடிய. த்வரை இல்லாத புருஷர்கள், என்னை அடையாமல், ம்ருத்யுவாகிய ஸம்ஸாரத்தின் வழியில், எப்பொழுதும் இருக்கிறார்கள். ஐயோ இது மிகவும் ஆஶ்சர்யம் என்று அர்த்தம். 3

'அஸ்ய' (இந்த) என்பது, கீழ்ச்சொல்லிய எல்லா ஸ்வபாவங்களையும் குறிக்கிறது என்கிறார்—'மிகவும் ப்ரியனை' என்று ஆரம்பித்து. 'புருஷா:' என்று, பொதுவாய் ஸம்பந்தங்களைக் குறிக்கிற ஆறும்வேற்றுமைக்கு ஸரியான அன்வயத்தைக் காட்டுவதற்காகச் சொல்லுகிறார்—'அனுஷ்டிக்கத் தகுந்த தசையை அடைந்து' என்று. அன்றிக்கே, ஶ்ரத்தை இல்லை என்று மறுத்தது அதற்கு ப்ரஸ்தாவம் வருமானாலல்லவோ பொருந்தும், என்று அபிப்ராயமாகவுமாம். காரணமில்லாமற் போனது, கார்யமாகிய அனுஷ்டானமு மில்லாமற்போகுமளவும் முடிவுபெறும் என்று காட்டுவதற்காக ஶ்ரத்தையுடன் கூடியத்வரையில்லாதவர்கள், என்று சொல்லப்பட்டது. 'ம்ருத்யுவாகிய' என்பதற்கு, பாதகமாகிய என்று அர்த்தம். அதுவுமன்றிக்கே, மரணத்தையும் தன்னுள்ளடக்கிக் கொண்டிருப்பதினால் ம்ருத்யுவாக இருக்கை பொருந்தும், 'நிவர்த்தந்தே' என்கிற இடத்தில் திரும்பிவருகிறார்கள், என்று அர்த்தம் சொல்லில், எதிலிருந்து என்கிற கேள்வி உண்டாகிறபடியினால், அதை இங்கே சொல்லாமையினாலும், 'அப்ராப்ய' (என்னை அடையாமல்) என்று தனித்துச் சொல்லி இருக்கிறபடியினால், பகவானிடத்திலிருந்து, என்று கல்பிப்பது பொருந்தாதாகையினாலும், 'ஸம்ஸாரவர்த்மநி' (ஸம்ஸாரவழியில்) என்று ஏழாம் வேற்றுமை, அதிலிருக்கும் வஸ்து, ஒன்றை எதிர்பார்க்கிறபடியினாலும், உபஸர்கங்களுக்கு அநேக அர்த்தங்கள் உண்டாகையினாலும், 'எப்பொழுதும் இருக்கிறார்கள்' என்று சொல்லப்பட்டது. ஸ்வரூபத்தினாலும் ப்ரயோஜனத்தினாலும் மேலான புருஷார்த்தமாய் ஸுலபமாகச் செய்யக்கூடியதுமான உபாஸனத்தைத் தெரிந்துகொண்டும் ப்ரயோஜனங்களின் வ்யத்யாஸத்தைத் தெரிந்துகொண்ட புருஷர்களுங்கூட இத்தைவிட்டு மிகவும் துக்கமாகிய ஸம்ஸாரத்தை ப்ரீதியுடன் அடைகிறார்களே, என்கிற ஆஶ்சர்யத்தோடுகூடிய பகவானுடைய வார்த்தை இது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஐயோ' என்று. பாபங்களின் ப்ரபாவம் மிகவும் ஆஶ்சர்யம், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'மிகவும் ஆஶ்சர்யம்' என்று. ஶ்ரத்தை இல்லாமைக்குக் காரணமாகிய மனதிலிருக்கும் ஶத்ருக்களும் உன்னால் நிராகரிக்கத் தக்கவைகள், என்று, 'சத்ருக்களை ஜயிக்கும் ஸ்வபாவமுடைய' என்று, அழைத்ததின் அபிப்ராயம். 3

பா] இப்பொழுது அடையப்படுகிறவனாகிய என்னுடைய, மற்றொருவரா
லும் நினைக்கமுடியாத மஹிமையைக் கேள். 4

𑌮𑌯𑌾 𑌤𑌤𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌦𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌨𑌾 ।
𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌚𑌾𑌹𑌂 𑌤𑍇𑌷𑍍𑌵𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥ (4)
𑌨 𑌚 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌭𑍂𑌤𑌭𑍃𑌨𑍍𑌨 𑌚 𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑍋 𑌮𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨𑌃 ॥

ப-ரை] 𑌇𑌦𑌂-இந்த, 𑌸𑌰𑍍𑌵𑌂-எல்லா, 𑌜𑌗𑌤𑍍-லோகமும், 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌨𑌾-ப்ரகாசமில்லாத ஸ்வரூபத்தை உடைய, 𑌮𑌯𑌾-என்னால், 𑌤𑌤𑌂-வ்யாபிக்கப்பட்டது, 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿-எல்லா ப்ராணிகளும், 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿-என்னிடத்திலிருக்கின்றன. 𑌅𑌹𑌂-நான், 𑌤𑍇𑌷𑍁-அந்த ப்ராணிகளுக்குள், 𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃-இருக்கவில்லை, 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿-அந்த ப்ராணிகள், 𑌨𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿-என்னிடத்திலிருக்கவுமில்லை, 𑌮𑍇-என்னுடைய, 𑌐𑌶𑍍𑌵𑌰𑌂-பகவானென எனக்கே அஸாதாரணமான, 𑌯𑍋𑌗𑌂- ஸ்வபாவத்தை, 𑌪𑌶𑍍𑌯- பார். (நான்) 𑌭𑍂𑌤𑌭𑍃𑌤𑍍-எல்லா ப்ராணிகளையும் தரிப்பவன், 𑌨𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌃—அந்த ப்ராணிகளுக்குள்ளிருப்பவனல்ல, 𑌮𑌮-என்னுடைய, 𑌆𑌤𑍍𑌮𑌾-ஸங்கல்பமானது, 𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨𑌃-எல்லா ப்ராணிகளையும் தாங்குவதும் நியமிப்பதும்

தா] இப்படி இந்த அத்யாயத்திற்கு முக்யமான அர்த்தமாகிய உபாஸனத்தின் மஹிமை சொல்லப்பட்டது பிறகு இத்தால் அடையப்படுகிற வஸ்துவின் மஹிமையைக்கொண்டும் அதுவே உறுதி செய்யப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இப்பொழுது' என்று ஆரம்பித்தது. '𑌇𑌦𑌂𑌸𑌰𑍍𑌵𑌂' (இந்த எல்லாம்) என்று சொன்னது, ப்ரமாணத்தினாலேற்பட்ட எல்லா வஸ்துக்களையும் சொல்லுகிறது, என்கிற அபிப்ராயத்தினால்—'சேதனம் அசேதனமாகிய' என்று சொல்லப்பட்டது. '𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌨𑌾' என்று விக்ரஹத்தைச் சொல்வதாய் இருந்தால் இவ்விடத்தில் உபயோகம் இல்லையாதலால், ஸ்வரூபத்தைப்பற்றி இது உபசாரமாக ப்ரயோகித்திருக்கிறது, என்று காட்டுவதற்காக—'ப்ரகாசம் செய்யப்படாத ஸ்வரூபத்தை உடைய' என்று சொல்லப்பட்டது. ஆகாசம்போல் உள்ளிருப்பது மாத்திரமாகிய வ்யாபித்திருக்கையை விலக்குவதற்காக, அநேக ப்ரமாணங்களிலே ஏற்பட்ட வ்யாபித்திருக்கையின் மாதிரி, '𑌮𑌯𑌾' என்பதினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது, என்று சொல்லுகிறார்—'அந்தர்யாமியாக'

பா] சேதனம் அசேதனமாகிய, இந்த லோகமெல்லாம், ப்ரகாசம் செய்யப்படாத ஸ்வரூபத்தை உடைய அந்தர்யாமியாகிய என்னால், இந்த லோகத்தைத் தரிப்பதற்காகவும், நியமனம் செய்வதற்காகவும், ஶேஷியாகி இருந்துகொண்டு வ்யாபரிக்கப்பட்டது. என்று, அர்த்தம். அப்படியே அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் † எவன் ப்ரதிவியி லிருந்துகொண்டு... எவனை ப்ரதிவீ தெரிந்துகொள்ளவில்லையோ, ‡ எவன் ஆத்மாவி லிருந்து

என்று. கீழ்ச்சொல்லியவிதமாக வ்யாபரித்திருப்பதற்கு ப்ரயோஜனத்தையும், காரணத்தையும் காட்டுகிறார்—'இந்த லோகத்தை' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் தரித்தல்மேல் க்ரந்தத்தி லேற்பட்டது. அதினாலேயே நியமிப்பதும் தானாகவே ஏற்பட்டது. தரிப்பதும், நியமித்துக்கொண்டே, என்பது ஶ்ருதியில் சொல்லப்படுகிறது. ஶேஷியாக இருக்கையோ வெளில முன்னமே சொல்லப்பட்டது. இவைகளை ஶரீரமாக உடையவன் என்பதினால் தானாகவும் ஏற்பட்டது. ப்ரகாஶம் செய்யப்படாத ஸ்வரூபத்தை உடையவனாகவும் நியமித்துக்கொண்டும் எல்லாவற்றிலும் வ்யாபரித்து இருக்கை ஶ்ருதியில் சொல்லியிருக்கிறது, என்று காட்டுகிறார்—'அப்படியே' என்று ஆரம்பித்து. பரதிவியை உதாஹரணமாகக் காட்டி இருக்கிறது, அந்த ஸந்தர்ப்பத்தில் சொல்லப்பட்ட எல்லா அசேதனங்களையும் குறிப்பதற்காக. கீழ்ச சொல்லியபடி வ்யாபரித்து இருப்பதைக் காரணமாக வைத்துக்கொண்டு 'ஈதாநி' என்பதினால் லோகம் தனித்து நிற்கிறது என்பது நிராகரிக்கப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—ஆகையினால், என்று ஸ்ரீ விஶ்வரூபாத்யாயம் முதலிய இடங்களில் எல்லா வஸ்துக்களும் பகவானுடைய விக்ரஹத்தை அடைந்திருக்கின்றன, என்பதும் சொல்லப்படுகிறது. இவ்விடத்திலோ வெளில் ஸ்வரூபத்தில நிற்கின்றன, என்று சொல்லப்படுகிறது, ஆகையினால் புனருக்தி என்னும் தோஷம் இல்லை என்று, தெரிவிப்பதற்காக 'அந்தர்யாமியாகிய என்னிடத்தில்' என்று சொல்லப்பட்டது. இந்தத் தரிப்பதும் நியமிப்பதும் வ்யாபரித்து இருப்பதுடன் கூடவே ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது, என்று, சொல்லுகிறார்—'அந்த அந்தர்யாமி ப்ராஹ்மணத்திலேயே' என்று. 'அவனுக்குவஶப்பட்ட ஸ்திதியும், அவன் நியமிக்கிறான் என்பதற்கு அவனுக்குவஶ

---

† *ப்ருஹதாரண்யகம்*, 5-7-3.

‡ *ஶதபத ப்ராம்மணம், மாத்யம் தினபாடம்*, 14-6.

கொண்டு...எவனை ஆத்மா, தெரிந்துகொள்ளவில்லையோ' என்று அர்த்தமுள்ள வாக்யத்தில், சேதனம் அசேதனமாகிய வஸ்துக்களின் கூட்டங்களினால் பார்க்கப்படாத அந்தர்யாமியினால் அந்தந்த இடங்களில் வ்யாபிக்கப்பட்டமை சொல்லப்பட்டது. ஆகையினால் எல்லா ப்ராணிகளும் அந்தர்யாமியாகிய என்னிடத்தில் இருக்கின்றன. அந்த அந்தர்யாமி ப்ராஹ்மணத்திலேயே † "எவனுக்கு ப்ரதிவீ ஶரீரமோ, எவன் ப்ரதிவியை உள்ளிருந்துகொண்டு நியமிக்கிறானோ, ‡ 'எவனுக்கு ஆத்மா ஶரீரமோ! எவன் ஆத்மாவை உள்ளிருந்துகொண்டு நியமிக்கிறானோ' என்று அர்த்தமுள்ள வாக்யத்தில் ஶரீரமாக இருந்துகொண்டு நியமிக்கப்பட்டிருக்கையைச் சொல்லுகிறபடியினால் அவனுக்கு வஶப்பட்ட ஸ்த்திதியும், அவன் நியமிக்கிறான் என்பதும், அவனே ஶேஷீ என்பதும், சொல்லப்பட்டன நானோவெனில் அவைகளுக்கு வஶப்பட்ட ஸ்த்திதியை உடையவன் அல்ல.

ப்பட்ட ஸ்திதியும், ப்ரவ்ருத்தியும் என்று, அர்த்தம். இவைகள் ஶரீரம், அவன் இவைகளை ஶரீரமா உடையவன், என்று சொல்லி இருக்கிறபடியினால், அவன் தரிக்கிறான், என்பதும், அவனே ஶேஷி, என்பதும் ஏற்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஶேஷியாக இருக்கையும்' என்று. "மயா ததமிதம் ஸர்வம்" (இந்த எல்லாம் என்னால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது, என்று சொல்லி, உடனே, "ந சாஹம் தேஷ்வவஸ்தித:" (நான் அவைகளுக்குள் இருக்கவில்லை) என்று சொல்லி இருப்பது. ஒன்றுக்கொன்று விருத்தமாக இருக்கிறதே, "எவன் ப்ரதிவியில் இருந்துகொண்டு. என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளுக்கும் விருத்தமாக இருக்கிறதே? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—நானோவெனில், என்று ஆரம்பித்து. 'மத்ஸ்தாநி ஸர்வபூதாநி' என்று கீழ்ப்ரஸ்தாவிக்கப்பட்டமாதிரியான ஸ்திதி இங்கே மறுக்கப்படுகிறது. 1 'ஓ பகவானாகிய ஆசார்யனே அந்தப்பகவான் எதிலிருக்கிறார்?' என்கிற ஶிஷ்யனுடைய கேள்விக்கு ஸமாதானமாக 2 'தன்னுடைய ப்ரபாவத்திலேயே இருக்கிறார் அன்றிக்கே ஒரு ப்ரபாவத்திலுமிருக்கவில்லை' என்றர்த்தமுள்ள வாக்யம் ஶ்ருதியில் சொல்லப்படுகிறதல்லவா என்று தாத்பர்யம். கீழ்ச்

---

† ப்ருஹதாரண்யகம்- 5-7.

‡ சத்பதப்ராம்மணம்-14-6.

1 சாந்தோக்யம்- 7-24-1.

2 ப்ருஹதாரண்யகம்- 1-2-1.

அதாவது என்னுடைய ஸ்வரூபம் நிற்பதற்கு அவைகளால் ஒருவித உபகாரமுமில்லை, என்று அர்த்தம். அந்தப்ராணிகள் என்னிடத்தி லிருக்கவுமில்லை. ஜலம்முதலிய வைகளைக் குடம் முதலியவைகள்போல நான் அவைகளைத்தாங்கிக்கொண்டிருப்பவனுமல்ல. மற்றெப்படியென்னில்? என்னுடைய ஸங்கல்பத்தினாலேயே.வேறொரிடத்திலும் ஸம்பவிக்காத எனக்கே அஸாதாரணமும் ஆஶ்சர்யமுமான யோகத்தைப்பார். என்ன

சொன்னதை விவரிக்கிறார்.—'என்னுடைய இருப்புக்கு' என்று 'ஒரு' என்பதற்கு ஸ்வரூபத்தினாலாவது, ஸங்கல்பத்தினாலாவது, அத்ருஷ்டத்தினாலாவது, என்று தாத்பர்யம். மத்ஸ்தாநி, ந ச மத்ஸ்தாநி (என்னிடத்திலே இருக்கின்றன. என்னிடத்தி லிருக்கவில்லை) என்பதும் ஒன்றுக்கொன்று விருத்தமாக இருக்கிறதே என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ஜலம் முதலியவைகளை' என்றாரம்பித்து, ரூபமுள்ள வஸ்து வல்லவோ மற்றொரு ரூபமுள்ள வஸ்துவைக் கீழே விழாமல் தாங்கிக்கொண்டிருக்கிறது. இவ்விடத்திலப்படி இல்லை என்று தாத்பர்யம். லோகத்தில் கண்டதற்கு விருத்தமாக ஸம்பவிக்காதே என்கிற அபிப்ராயத்தினாலாக்ஷேபிக்கிறார்—'எப்படி' என்று ஶரீரம் ஆத்மா இவைகளுக்குப போல ஸம்பவிக்கும் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'என்னுடைய ஸங்கல்பத்தினால்' என்று தன்னுடைய இஷ்டத்தினால் தாங்கிக் கொண்டிருத்தலல்லவோ விதிக்கப்படுகிறது. அயலாருக்குக் கீழ்ப்படிந்து தரித்துக்கொண்டிருத்தல் இல்லை என்று மறுக்கப்படுகிறது. ஆகையினால் விரோதமில்லை என்று கருத்து 'ஐஶ்வரம்' என்பதினால் வேறொருவருக்கும் ஸாதாரணமல்ல என்பது ஏற்பட்டது, 'பஶ்ய' என்பதினால் ஆஶ்சர்யம் என்பதும் காட்டப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'வேறொரிடத்திலும்' என்றாரம்பித்து [1] 'யோக: ஸந்நஹநோபாயத்யாநஸங்கதியுக்திஷு' என்று சொல்லி யிருக்கிறபடியினால் த்யானமாகிய ஸங்கல்பம இவ்விடத்தில் யோகம் என்று சொல்லப்படுகிறது. அன்றிக்கே உபாஸனம் செய்யப்படுகிற வஸ்துவின் ஸ்வபாவமாகவுமாம். 'பஶ்ய மே யோகம்' (என்னுடைய யோகத்தைப்பார்) என்று சொன்ன பிறகு அந்த யோகத்தின் ஸ்வரூபமே சொல்லத் தக்கது ஆகையினால் அதற்குத்தகுந்த கேள்வியைக்காட்டுகிறார்—'என்னயோகமென்னில்' என்று. 'ந ச மத்ஸ்தாநி பூதாநி' என்கிறவிடத்தில் அர்த்தத்துக்கு உசிதமாக இருக்கிறபடியினால் அஹம்(நான்)என்பதே விஶே

---

1 நாமலிங்கானுஶாஸனம் 3காண்டம் நாநார்த்தவர்க்கம் 109 யோகம் என்னும் பதம் உத்ஸாஹம், உபாயம், ஸம்பந்தம்,த்யானம், யுக்தி இவைகளைச் சொல்லும்.

யோகம் என்னில்? எல்லாப்ராணிகளையும் தரிப்பவன் நான். அவைகளால் எனக்கு ஒருஉபகாரமும் இல்லை. என்னுடைய மனஸ்ஸாகிய ஸங்கல்பமே எல்லாப்ராணிகளையும் தாங்குவதும் நியமிப்பதும். (4-5)

ஷ்யமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டியது. அன்றிக்கே ‘மமாத்மா பூதபாவந:’ என்கிற இடத்திலே போல ‘மமாத்மா’ என்று சொல்லப்பட்ட ஸங்கல்பமே விஶேஷ்யமானாலும் அதினால் கிடைத்த அர்த்தத்தைச் சொல்லியிருக்கிறதாகவுமாம்—‘எல்லாப்ராணிகளையும் தாங்குகிறவன் நான், என்றிவை முதலியது ‘ஆத்மா’ என்று விஶேஷித்துச் சொன்னது பரிஸங்க்யாவிதியின் ந்யாயத்தை அநுஸரித்து இதைத் தவிர மற்றொரு ஒத்தாசைக் காரணமில்லை என்று மறுப்பதற்காக என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—ஸங்கல்பமே என்று. மமாத்மா (என்னுடைய ஆத்மா) என்று தன்னைவிட வேறாகச் சொல்லியிருப்பதின் ஸ்வாரஸ்யத்தினால் ஏற்பட்ட ஆத்மா என்னும் பதத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—‘மனஸ்ஸாகிய ஸங்கல்பமே’ என்று இத்தால் லோகத்தாரின் ஜ்ஞானத்தை அநுஸரித்து தேஹம் முதலியவைகளின் கூட்டத்தில் நான் என்பதற்கு அர்த்தமாக இருக்கையை ஆரோபணம் செய்துகொண்டு சொல்லியிருக்கிறார்---என்று சங்கராசாரியர் சொல்லிய அர்த்தம் நிராகரிக்கப்பட்டது. மனஸ்ஸினால் உண்டாக்கப்படுவதாக வேறு இடங்களில் ப்ரஸித்தமாயிருக்கிற ஸங்கல்பமே இவ்விடத்தில் மனஸ்ஸைச் சொல்லுகிற ஆத்மா என்னும் பதத்தினால் சொல்லப்பட்டது. அன்றிக்கே இவ்விடத்தில் ஆத்மா என்னும் பதம் ஸங்கல்பம் என்கிற தசையையுடைய மனஸ்ஸைச் சொல்லுகிறதாகவுமாம் 1 ‘மநஸைவ ஜகத்ஸ்ருஷ்டிம் என்கிறவசனமும்’ 2 அந்தப்ரஹ்மம் (இப்படி) ஆகக்கடவேன் என்று மனஸ்ஸைச் செய்தது என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலிய ப்ரமாணங்களுமிருக்கிறபடியினால், இந்த அர்த்தத்தை ஞாபகப்படுத்துவதற்காக—‘மனஸ்ஸாகிய என்கிற பதம். தரிப்பதும், நியமனம் செய்வதுமே கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்டபடியினால் அடுத்த மேல் ஶ்லோகத்திலும் சொல்லப்படுகிறபடியினால் ஸ்ருஷ்டிப்பதை அதற்கு அடுத்த ஶ்லோகத்தில் சொல்லப்போகிறபடியினால் பகவானுக்கு வஶப்பட்ட ஸ்திதியையும் நியமிக்கப்பட்டிருப்பதையும் குறிக்கிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘தரிப்பதும்நியமிப்பதும்’ என்று அன்றிக்கே பூதப்ருந்நபூதஸ்த: என்பதற்கே இது அர்த்தமாகவுமாம். 4-5

---

1. விஷ்ணுபுராணம் 5-22-15. மனஸ்ஸினாலேயே ஜகத்ஸ்ருஷ்டியும் லோகங்களின் ஸ்ருஷ்டியை (செய்கிறான்) என்று சேர்த்துக்கொள்ளவும்.

2. ப்ருஹதாரண்யகம்-1-2-1.

பா] இவையெல்லாம் தனக்கு வஶப்பட்ட ஸ்த்திதி ப்ரவ்ருத்தி இவைகளையுடையது, என்பதற்கு உதாஹரணம் சொல்லுகிறார்.—

யதாகாஶஸ்திதோ நித்யம் வாயுஸ்ஸர்வத்ரகோ மஹாந்।
ததா ஸர்வாணி பூதாநி மத்ஸ்தாநீத்யுபதாரய ॥ (சு)

ப-ரை] மஹாந் பெரிய, வாயு: காற்று, யதா-எப்படி, ஆகாஶஸ்தித: ஆகாசத்தில் இருந்துகொண்டு, ஸர்வத்ரக: எல்லாஇடத்திலும் ஸஞ்சரிக்கிறதோ, ததா அப்படியே ஸர்வாணி எல்லா, பூதாநி ப்ராணிகளும், மத்ஸ்தாநி என்னிடத்திலிருக்கின்றன, இதி என்று, உபதாரய தெரிந்துகொள்

பா] ஆதாரமில்லாத ஆகாசத்தில் பெரியகாற்று இருந்துகொண்டு எல்லாவிடத்திலும்ஸஞ்சரிக்கிறதோ, ஆதாரமில்லாதஅந்தக்காற்று, எனக்குவஶப்பட்ட ஸ்த்திதியையுடையதுஎன்று, எப்படி அவஶ்யமாய் ஒப்புக்கொள்ள வேண்டியதோ. என்னாலேயே தரிக்கப்படுகிறது என்றும் தெரிந்துகொள்ள

தா] இந்தஶ்லோகத்தில் தன்னிடத்தில் எல்லாப்ராணிகளுமிருப்பதற்கு, ஆகாசத்தில் காற்று இருப்பது உதாஹரணமாகச் சொல்லப்படுகிறது, என்று சிலர் சொன்னார்கள்; அது யுக்தமல்ல, ஏனெனில் ஆகாசத்திற்கு காற்றைக்குறித்து நியமனம் செய்யும் தன்மையும், தரிக்கும் தன்மையுமில்லாமையாலும், அப்படிப்பட்ட ஸ்த்திதியே இங்கு கீழே ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறபடியினாலே அதற்கு உதாஹரணம் காட்டுவதற்காக இந்தஶ்லோகம், என்பதே உசிதமாகையினாலும், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘இவையெல்லாம்’ என்றாரம்பித்து. ‘ஆகாஶஸ்தித: ஸர்வத்ரக:’ (ஆகாசத்திலிருக்கிற, எல்லாஇடத்திலும் ஸஞ்சரிக்கிறதோ,) என்னும் பதங்களினால் பகவானொருவனாலேயே தரிக்கத்தகுந்ததாயிருக்கையும், நியமனம் செய்யத்தகுந்ததாயிருக்கையும், சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்— ‘ஆதாரமில்லாத ஆகாசத்தில்’. என்று பெரிதாயிருக்கையும மற்றவர்களால் இப்படிச் செய்யமுடியாதென்று தெரிவிப்பதற்காகச் சொல்லப்பட்டது. அபிப்ராயத்திலிருக்கும் உதாஹரணத்தின் மாதிரியை விசதப்படுத்துகிறார்—‘ஆதாரமில்லாத அந்தக்காற்று’ என்றாரம்பித்து. எப்படி ஆதாரமில்லாத ஆகாசத்தில் பக்ஷியின் ஶரீரம் முதலியவைகள் ஒருவித சேதனனால் அதிஷ்டானம் செய்யப்படுகிறதோ, அப்படியே காற்று முதலியவைகளும், என்று தாத்பர்யம். ‘அவர்களால் பார்க்கப்படாத’ என்பதினால் நமக்குத் தெரியாமையினால் அப்படியில்லை என்று சொல்லுவதை நிராகரிப்பதற்காக, கீழ்ச்சொல்லிய ஶ்ருதி முதலியவை

ப்படுகிறதோ, இப்படியேஎல்லாப்ராணிகளும் அவைகளால்பார்க்கப்படாத என்னிடத்தில் இருக்கின்றன, என்னாலேயே தரிக்கப்படுகின்றன, என்று தெரிந்துகொள். இப்படியே வேதம் தெரிந்தவர்கள் 'ஜ்யோதிஷாம் ஸம்ப்ரவ்ருத்திர்நேத்ராவிந்த்ராக்ஷ: ஸூர்யசந்த்ரமஸோ: । விஷ்ணுமாயாமதி ரக்ஷோமேவிந்த்ரோக்ஷாவித்ரா: ஸுஸவணதிரோயா: ॥ ' என்று சொன்னார்கள். ஊயா: என்பதற்கு வேறொருவருக்கும் ஸாதாரணமாகாத விஷ்ணுவினுடைய பெரிய ஆச்சர்யங்கள என்று அர்த்தம், ‡ ஓகார்கியே இந்த அக்ஷரத்தினுடைய நியமனத்தில் ஸூர்யன் சந்திரன் இவைகள்

களிலேற்பட்ட பாரக்கத்தகாமையைக் காட்டியிருக்கிறது. பகவானைப் பற்றிய அனுமானத்தை ஒப்புக்கொள்ளாதவர்களுக்கு இந்த உதாஹரணம் காட்டுவது எப்படிப்பொருந்தும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—இப்படியே என்றாரம்பித்து. வேதத்தை அனுஸரித்ததான, இப்படிக்கு ஸம்பவிக்கும் என்கிற யுக்தியைக்காட்டுகிறதென்று தாத்பர்யம். 'வேதம்தெரிந்தவர்கள்' என்பதினால் அவர்களால் அத்யயனம் செய்யப்படுகிறவேதத்தின் அர்த்தத்தை விவரிக்கிறதிது, என்பது காட்டப்பட்டது. நம்போலியர்களுக்குத் தெரியாத காரணங்கள், ஒத்தாசைக்கருவிகள், ப்ரயோஜனங்கள், இவை முதலியவைகளையுடைய ஒரேக்ஷணகாலத்தில் எல்லாதிக்குக்களிலும பரவுகிறமேகங்கள் உண்டாகுதல், எல்லா லோகங்களையும் மிதக்கச செய்யக்கூடிய ஸமுத்திரத்தின் ஆகாசத்தையளாவிக்கிளம்புகிற அலைகள் கரையினருகில் அடங்கித் திரும்புதல், ஒரேவிதமான ஏற்பாட்டையுடைய கலைகளின் வ்ருத்தி, குறைவு, நுனிகள் உயர்ந்துதோன்றுதல், முதலிய சந்திரனுடைய பிரிவுகள், இவ்விதமாகவரும் என்று நம்மால் யோசிக்க முடியாததாய் புல், மலை, மரங்களின் கூட்டம், இவைகளையெல்லாம் முறிக்கக்கூடிய பெருங்காற்றுமுதலியவைகள் உண்டாகுதல், நெருப்பு, ஸூர்யன், சந்திரன், முதலிய வெளிச்சமுள்ள வஸ்துக்களொன்றுமில்லாத மழைககாலததில் ராத்திரிகளில் முன்பின் நிமிஷங்களில் தெரியாத மின்னல்களின் பிரிவுகள், ஆதாரமில்லாத ஆகாசததில் மிகவும் பெரிதான ஸூர்யமண்டலம், ஒரேவிதமான ஏற்பாடுகளுடைய பகல், இரவு, மாஸம், அயனம், வருஷம், முதலியவைகளைக் காட்டும்படி ஸஞ்சரிப்பது, இப்படிப்பட்ட இன்னும் சில பரிவேஷம், க்ரஹணம், பச்சைவில், கல்மழை, மேகத்தின் கர்ஜனம், இடிவிழுதல், பூகம்பம், காற்

‡ மனுஸ்ம்ருதி, 1-8.

தாங்கப்பட்டவைகளாக நிற்கின்றன' என்றும் இந்தப் பகவானிடத்தி லிருந்து பயத்தினால் காற்றுவீசுகிறது. பயத்தினால் சூர்யன் உதயமாகிறான் அக்னியும் இந்திரனும் இவனிடத்திலிருந்து பயத்தினால் (தன்தன்காரியங் களைச் செய்கிறார்கள்.) என்றும் அர்த்தமுள்ளவாக்யம் முதலியவைகளும் ஶ்ருதியிலிருக்கின்றன.

பா] மற்றொன்றையும் அபேக்ஷிக்காத பகவானுடைய ஸங்கல்பத்தினால் எல்லா வஸ்துக்களுடையவும் ஸ்த்திதியும், ப்ரவ்ருத்தியும்,உண்டாகிறது என்று சொல்லப்பட்டது. அப்படியே அந்தப்பகவானுடைய ஸங்கல்பத் தினாலேயே எல்லாவஸ்துக்களுடைய உத்பத்தியும், லயமும்,உண்டாகிற து என்று சொல்லுகிறார்.—

ஸர்வபூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்|
கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம் || (7)

ப-ரை] கௌந்தேய அர்ஜுன, ஸர்வபூதாநி எல்லாப்ராணிகளும், கல்பக்ஷயே கல்பம் முடியும்பொழுது, மாமிகாம் என்னுடையதான, ப்ரக்ருதிம் மூலப்ரக்ருதியை, யாந்தி-அடைகின்றன, தாநி-அந்தப்ராணிகளையே, கல்பாதௌ-கல்பத்தினாரம்பத்தில், புந: புந: - மறுபடி மறுபடியும், அஹம் நான், விஸ்ருஜாமி-அநேகவிதமாக ஸ்ருஷ்டிக்கிறேன். (7)

றின் சுழல்கள், முதலிய மிகவும் ஆஶ்சர்யமான ஸ்வபாவமுடைய எல் லாம், எல்லாவற்றிலும் வ்யாபித்தவனும், எல்லா ஶக்தியையுமுடை யவனுமிருக்கிற விஷ்ணுவினுடைய விசித்திரங்களான வஸ்துக்களை ஸ்ருஷ்டிக்கக் கூடிய ஶக்தியினாலுண்டானவைகளாக இருக்கவேண் டும்,என்று இந்த ஶ்லோகத்திற்கு அர்த்தம். 'மாயா:' என்னும் பதம் பொய் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பதை நிராகரிப்பதற் காகச்சொல்லுகிறார்---'விஷ்ணுவினுடைய' என்றாரம்பித்து. பொது வான ஸம்பந்தம் நியமிக்கப் பட்டதாயிருக்கை, ஆகிற விஶேஷத்தில் முடிவாகிறது, என்று ,தெரிவிப்பதற்காக 'இப்படியே வேதம் தெரிந்த வர்கள சொல்லுகிறார்கள்' என்பதினால் அபிப்ராயத்தில் கொள்ளபபட்ட அர்த்தத்தை விவரிக்கிறார்---'ஓ - கார்கியே' என்று நியமனமாவது இவ்விடத்தில் ஒருவிதமான ஸங்கல்பம்—

பா] ஸ்த்தாவரம் ஜங்கமங்களாகிய எல்லா ப்ராணிகளும் தமஸ்ஸு என்னும் பதத்தினால் சொல்லக் கூடியதாயும் பேர்ருபம் இவைகளால் பிரிக்க முடியாததாயும் எனக்கு ஶரீரமாகவும் இருக்கிற ப்ரக்ருதியை ப்ரஹ்மாவின் ஆயுஸ்ஸு முடிவு பெறும் காலத்தில் என்னுடைய ஸங்கல்பத்தினால் அடைகின்றன. அந்த ப்ராணிகளையே கல்பத்தின் ஆரம்பத்தில் மறுபடி

தா] இவ்விடத்தில் ப்ரஸ்தாவமில்லாத ஸ்ருஷ்டியையும், ப்ரளயத்தையும் சொன்னதற்கு ஸங்கதி சொல்லுகிறார்—'மற்றொன்றையும்' என்று ஆரம்பித்து. ப்ரவ்ருத்தியும், என்பது, ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லி இருக்கிறது. 'மாமிகாம்' (என்னுடையதான) என்பதினால் 'ஶேஷம்' என்பது ஏற்பட்டது. அதுவும் ஶரீரமாக இருப்பதினால், என்று 1'எவனுக்கு தமஸ் ஶரீரமோ' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தினால் அறியப்பட்டது, ஆகையினால்—எனக்கு ஶரீரமாகவும் இருக்கிற' என்று சொல்லப்பட்டது. 'ஸர்வபூதாநி' என்னும் பதத்தினால் கார்யதசையை உடைய எல்லா வஸ்துக்களும் சேர்த்துச் சொல்லப்பட்டபடியினால்—'தமஸ் என்கிற பதத்தினால் சொல்லக்கூடியதாயும், என்று சொல்லப்பட்டது 2'தமஸ் ஒன்றுபடச் சேர்ந்து விடுகிறது' என்பதைக்காட்டி இருக்கிறது—பேர், ரூபம் இவைகளினால் பிரிக்க முடியாததாயும், என்று. 'ஸர்வபூதாநி' என்னும் பதத்தினாலும் 'ப்ரக்ருதிம் யாந்தி' என்று சொல்லி இருப்பதினாலும், மஹாப்ரளயமே இவ்விடத்தில் சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிறார்—'ப்ரஹ்மாவின் ஆயுள் முடிவுபெறும் காலத்தில்' 'கல்பக்ஷயே' என்பதற்கு, ப்ரஹ்மாவின் கடைசியான, தினம் முடியும் பொழுது, என்று அர்த்தம். அன்றிக்கே கல்பங்களின் முடிவில் என்றும் சொல்லலாம். அதுவுமன்றிக்கே இவ்விடத்தில் கல்ப என்னும் பதம் ப்ரஹ்மாவின் ஆயுளைச் சொல்வதாகவுமாம். 3 'ஸம்ஹர்த்தா ச ஸ்வயம் ப்ரபு:' 4 'மநஸைவ ஜகத்ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரஞ்ச கரோதிய:' என்றிவை முதலானது சொல்லி இருக்கிறபடியினாலும், இவ்விடத்திலேயே 'புநஸ்தாநி விஸ்ருஜாமி' என்று சொல்லி இருக்கிறபடியினாலும், என்னுடையதான ப்ரக்ருதியை அடைகிற

1. ப்ருஹதாரண்யகம்- 5-7-13.

2. ஸுபாலோபநிஷத்- 5.

3. விஷ்ணுபுராணம்- 1-2-67 ப்ரபு பகவான் ஸ்வயம்தானே ஹர்த்தாச ஸம்ஹாரம் செய்கிறவனும்.

4. விஷ்ணுபுராணம்- 5-22-15. மனஸைவ-மனஸ்ஸினாலேயே, ஜகத்ஸ்ருஷ்டிம்- லோகங்களினுடைய ஸ்ருஷ்டியையும், ஸம்ஹாரம்ச- ஸம்ஹாரத்தையும், ய: எவன், கரோதி- செய்கிறானோ.

யும் அனேக விதங்களாக நான் ஸ்ருஷ்டிக்கிறேன். அப்படியே மனு * 'ஆஸீதி³த³ம் தமோபூ⁴தம்' என்றும் 'ஸோऽபி⁴த்⁴யாய ஶரீராத் ஸ்வாத்' என்றும்சொன்னர். ஶ்ருதியும் † 'எவனுக்கு அவ்யக்தம் ஶரீரமோ' என்றும், ‡அக்ஷரம்அவ்யக்தத்தில் லயத்தை அடைகிறது'என்றும்அர்த்தமுள்ள வாக்யம் முதலியவைகளில் சொல்லி இருக்கிறது. ¶ தமஸ் இருந்தது முதலில் பரப்ரஹ்மம் தமஸ்ஸினல் மறைக்கப்பட்டது' என்றும் சொல்லி இருக்கிறது. 7

றேன், என்று அபிப்ராயம் அத்தையே சொல்லுகிறர்—'என்னுடைய ஸங்கல்பத்தால் அடைகின்றன' என்று 'அந்த' என்பதற்கு அவைகளைப் போன்ற என்று அர்த்தம். இந்த அபிப்ராயத்தினலேயே 'அந்த ப்ராணிகளையே' என்று சொல்லப்பட்டது. 1 யதா²ர்த்தாவ்ருதுலிங்கா³நி நாநாரூபாணி பர்யயே। த்³ருஶ்யந்தே தாநி தாந்யேவ' என்பதைப் போல. எப்படி,குந்தியினுடைய ஶரீரத்திலிருந்து நீ பிறந்ததுஉன்னல் அறியப்படாமல் இருந்தாலும் ஆப்தர்களின் வார்த்தையினல் உறுதியாக அறியப்பட்டதோ, அப்படியே என்னுடைய ஶரீரத்தில் இருந்து உலகம் உண்டானது, என்பதை, என்னுடைய வார்த்தையினலேயே நம்பக்கடவாய், என்று 'ஸ்ருஜாமி' என்பதின் அபிப்ராயம். எனக்கு ஶரீரமாகவும், தமஸ் என்னும் பதத்தினல் சொல்லக்கூடியதாயும் என்று, தான் சொன்ன அர்த்தத்தை, மருந்துபோல ஜனங்களுக்கு நன்மையைத்தரும் மனுவினுடைய வசனத்தினல் உறுதிப்படுத்துகிறர்—அப்படியே, என்று ஆரம்பித்து. 'ஆஸீதி³த³ம்'என்பதுமுதல் ஏழு ஶ்லோகங்களில் நாராயணனே முதன்மையான காரணம் என்பதும், ப்ரஹ்மா முதலிய மற்றெல்லாம் அவனல் ஸ்ருஷ்டிக்கப்பட்டது என்பதும், வ்யக்தமாகச் சொல்லப்பட்டது, என்பதை அறியவேண்டியது காரணமான தஶையை அடைந்த அசேதன வஸ்துவும் பரமாத்மாவுக்குச் ஶரீரமாகையினல் மிகவும் வேறுபட்டது, என்கிற விஷயத்திலும் தமஸ், என்கிற பதத்தினல் சொல்லப்படுகிறது என்பதிலும், மனுவினல் விவரிக்கப்படுகிற ஶ்ருதியைக்காட்டுகிறர்—ஶ்ருதியும், என்று. 7

---

* மனுஸ்ம்ருதி-1-5. † ஸுபாலோபநிஷத் - 7. ‡ஸுபாலோபநிஷத் - 2.
¶ அஷ்டகம் 8 ப்ரச்னம் 9 அனுவாகம்.

1 விஷ்ணுபுராணம், 1-6-65. யதா எப்படி ருதுக்களில் ருதுலிங்கானி ருதுக்களினடையாளங்கள், நாநாரூபாணி-அனேகவிதங்களாகின்றனவோ,(அப்படியே) பர்யயே—கற்பங்களிலும், தாநிதாந்யேவ-அந்தந்த வஸ்துக்களே, த்ருஶ்யந்தே காணப்படுகின்றன.

ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந:|
பூதக்ராமமிமம் க்ருத்ஸ்நமவஶம் ப்ரக்ருதேர்வஶாத் || 8

ப-ரை] இமம் இந்த, ப்ரக்ருதே: ப்ரக்ருதியின், வஶாத் வசத்தினால், அவஶம் பராதீனமாக இருக்கிற, க்ருத்ஸ்நம் எல்லா, பூதக்ராமம் ப்ராணிகளின் கூட்டத்தை, ஸ்வாம் என்னுடையதான, ப்ரக்ருதிம் ப்ரக்ருதியை, அவஷ்டப்ய அதிஷ்டானம் செய்துகொண்டு, புந: புந: அடிக்கடி, விஸ்ருஜாமி விசித்திரமாக ஸ்ருஷ்டிக்கிறேன். 8

பா] என்னுடையதான விசித்ரங்களான மாறுதல்களை உடைய ப்ரக்ருதியை அதிஷ்டானம்செய்து, எட்டுவிதங்களான பரிணமங்களை அடையும்படியாகச்செய்து இப்படி நான்குவிதங்களான தேவதை, பசு, மனுஷ்யன், ஸ்தாவரம், இவைகளாகிய, என்னுடையதான மோஹத்தை உண்டாக்

தா] 'விஸ்ருஜாமி' என்று கீழே சொல்லப்பட்ட ஸமஷ்டியும், வ்யஷ்டியுமாகிய ஸ்ருஷ்டியின் மாதிரி இந்த ஶ்லோகத்தினால் தெரிவிக்கப்படுகிறது. 1 'விகாரங்களை உண்டாக்கக்கூடியதும், அறிவு இல்லாததும், எட்டு விதங்களான பிரிவுகளை உடையதும், உத்பத்தி இல்லாததும், அழிவு இல்லாததுமான இந்த ப்ரக்ருதியை, ஸங்கல்பிக்கிறார். 'அந்தப் பகவானால் அதிஷ்டானம் செய்யப்பட்ட ப்ரக்ருதி விஸ்தாரமாகச் செய்யப்படுகிறது. மறுபடியும் ஸ்ருஷ்டிக்காக ஏவப்படுகிறது. அந்தப் பகவானாலேயே, அதிஷ்டானம்செய்யப்பட்ட ஆத்யந்தமில்லாத வ்யஷ்டி ஸமஷ்டி ஸ்ருஷ்டிகளுக்குக் காரணமாகிய அந்த ப்ரக்ருதி உலகத்தையும், புருஷார்த்தத்தையும் உண்டாக்குகிறது' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளை அனுஸரித்து இந்த ஶ்லோகத்துக்கு அர்த்தம் சொல்லுகிறார்.—'என்னுடையதான' என்று உபாதான காரணமாகிய வஸ்துவைக்கர்த்தா, அங்கீகரித்தல், அதிஷ்டானம். அதாவது, தனக்கு இஷ்டமான கார்யத்தைச்செய்யத்தக்க மத்யமமான தசையை அடையும்படிக்குச் செய்தல்தான், என்கிற அபிப்ராயத்தினால், எட்டு விதங்களான பரிணமங்களை அடையும்படியாகச்செய்து, என்று சொல்லப்பட்டது. 2 'பூமிராப:' என்று ஆரம்பித்து இந்த எட்டுவிதங்களும் முன்னமே சொல்லப்பட்டது. இப்படித்தானகவே ஏற்பட்ட ஸமஷ்டி ஸ்ருஷ்டியின் மாதிரி சொல்லப்பட்டது. 'பூதக்ராமம்' என்னும் பதம் இவ்விடத்தில் தேவதைமுதலிய ஜாதிகளை உடையவ்யஷ்டியான ஜீவாத்மாக்களின் கூட்டத்தைச் சொல்லுகிறது, அசேதனத்தைச் சொல்லுவதாயிருந்தால், 'ப்ரக்ருதேர்வஶாதவஶம்' (ப்ரக்ருதியின் வசத்தினால்

1 மாந்த்ரிகோபநிஷத். 2 - பகவத் கீதை - 7 - 4.

கக்கூடிய ஸத்வம் முதலிய குணங்கள் நிறைந்த ப்ரகிருதியின் வஶத்தி ஞல் பராதீனப்பட்ட ப்ராணிகளின் கூட்டத்தை அந்தந்தக் காலங்களில் அநேகவிதமாக ஸ்ருஷ்டிக்கிறேன். 8

பா] இப்படிக்கு ஆனுல் வ்யத்யாஸமாக ஸ்ருடித்தல் முதலிய காரியங் கள் தயை இல்லாமைமுதலிய தோஷங்களை உண்டாக்குவதினுல் உம் மைத் தோஷத்திற்கு உள்ளாக்குமே? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதா னம் சொல்லுகிருர்.—

ந ச மாம் தாநி கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய ।
உதாஸீநவதாஸீநமஸக்தம் தேஷு கர்மஸு ॥ 9

ப-ரை] தநஞ்ஜய ஓ அர்ஜுன, தாநி அந்த, கர்மாணி ஸ்ருஷ்டி முதலிய காரியங்கள், உதாஸீநவத் உதாஸீனனுக இருப்பவன்போல,

---

பராதீனப்பட்ட) என்பதோடு அன்வயிக்காதாகையினுல். அதின் உட்பி ரிவுகளோடுகூடிய நான்கு விதங்களையும் சேர்த்துச சொல்வதற்காக 'க்ருத்ஸ்நம்' என்னும் பதம். இவ்விதமாகக கார்யமாக இருப்பதற்கும் ப்ரக்ருதிக்குவஶப்பட்டு இருப்பதற்கும், இந்தபராணிகள் தகுந்தவைக ளாகஇருக்கின்றன, என்று காட்டுவதற்காக 'இமம்' (இந்த) என்று சொ ல்லி இருக்கிறது, என்கிற அபிபராயத்திஞல் 'இந்த நான்கு விதமான' என் று இவை முதலியது சொல்லப்பட்டது. நான்குவிதம் என்பதை விவரி க்கிருர்.—'தேவதை' என்ருரம்பித்து. 'ப்ரக்ருதேர்வஶாத்' என்கிறஇட த்தில் அபிப்ராயத்தில்கொள்ளப்பட்டதும் 1'ப்ரக்ருதிம்மோஹிநீம் ஶ்ரி தா:' என்கிற இடத்தில்நேராகவே சொல்லப்பட்டதுமான பராதீனமாக இருக்கைக்குக்காரணம் 'மோஹத்தை உண்டாக்கக்கூடியதுமான' என் று சொல்லப்பட்டது. அதற்கும காரணம் ஸத்வம் முதலிய குணங் கள்நிறைந்திருக்கைஎன்பது 2 'த்ரிபிர்குணமயைர்பாவை:' என்றிவை முத லிய இடங்களிற் சொல்லப்பட்டது. 'புந: புந:' (மறுபடி மறு படி) என்பதிஞல் அவைகள் உண்டாவதற்கும் ப்ரளயத்தை அடைவ வதற்கும் தகுந்த இரண்டு பரார்த்தம், ஆயிரம் சதுர்யுகம் முதலிய ஏற்பாடுகளை உடைய ஆதியந்தமில்லாமல் ஒரேவிதமாகப் பெருகிக்கொ ண்டிருக்கும்காலத்தின் ஒருவித அளவுகள் சொல்லப்படுகின்றன, என் கிற அபிப்ராயத்திஞல்சொல்லுகிருர்.—'அந்தந்தக் காலங்களில்' என்று. 'விஸ்ருஜாமி' என்பதற்கு அனேகவிதங்களாக ஸ்ருஷ்டிக்கிறேன், அதா வது விசித்திரங்களான பேர் ரூபம், இடம், காலம், அனுபவம் இவை முதலியவைகளை உடையவைகளாகச் செய்கிறேன் என்று அர்த்தம். 8

---

1 பகவத்கீதை - 9-12. 2-பகவத்கீதை-7-13.

ஆஸீநம் இருக்கிற, தேஷு அந்த, கர்மஸு ஸ்ருஷ்டி முதலிய காரியங்களில், அஸக்தம் பற்றுதல் இல்லாமல் இருக்கிற, மாம் என்னை, நிபத்நந்தி தோஷத்திற்குள்ளாக்காது. 9

பா] அந்த வ்யத்யாஸமான ஸ்ருஷ்டி முதலிய காரியங்கள், என்னிடத்தில். தயை இல்லாமை முதலியவைகளை உண்டாக்காது. ஏனெனில் ஜீவாத்மாக்களினுடைய முன்செய்த கர்மங்களே தேவன் முதலிய வ்யத்யாஸங்களுக்குக் காரணங்களாகையினால். நாஞேவெனில் அந்த வ்யத்

தா] 'நசமாம்' என்கிற இந்த ம்லோகம் புண்யபாபங்களாகிற கர்மங்களைப் பற்றியதல்ல. அது கீழே ப்ரஸ்தாவிக்கப்படாததாகையினாலே, அவைகளை 'தாநி' (அந்த) என்று சொல்வது பொருந்தாததாகையினால். ஸ்ருஷ்டி ஸம்ஹாரம முதலியவைகள் கீழே ப்ரஸ்தாவிக்கப்பட்டபடியினால், அவைகளைச் சொல்வதே உசிதமாகும். அவைகளை தோஷம, என்பதும் ஸ்ருஷ்டிக்கப்படும் வஸ்துக்களின் தேவன் முதலிய வ்யத்யாஸங்களினால், என்றும் கீழே காட்டப்பட்டது. ஆகையினால் அதை நிராகரிப்பதற்காக இந்த ம்லோகம் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—அப்படிக்கானால், என்று ஆரம்பித்தது. 'ஸ்ருஷ்டித்தல் முதலிய' என்கிற இடத்தில் முதலிய என்பதினால், காத்தல், ஸம்ஹரித்தல், ரக்ஷித்தல், அனுக்ரஹித்தல் முதலியவை சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. 'தயை இல்லாமை முதலிய' என்னுமிடத்தில் இருக்கிற முதலிய என்னும் பதத்தினால், பக்ஷபாதம் உள்ளவனாக இருத்தல், மனவுறுதி இல்லாதவனாக இருத்தல் முதலியவை சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. 'நிபத்நந்தி' என்பதினால் ஸம்ஸாரமாகிய பந்தம் சொல்லப்படவில்லை. லோகத்தை ஸ்ருஷ்டித்தல் முதலியன ஸம்ஸாரத்திற்குக் காரணம் என்பது ம்ருதியில் சொல்லப்படாமையினாலும், மற்றவர்கள் சொல்லியபடி தர்மம் அதர்மம் இவைகளின் ஸம்பந்தம் உண்டு என்கிற ஸந்தேஹத்திற்கு ப்ரஸ்தாவமே இல்லாமையினாலும், பகவானுக்குக் கெட்ட ஸ்வபாவமிருந்தபோதிலும் வேறொருவன் நியமிக்கிறவன் இல்லாமையினாலும். ஆகையினால் தயை இல்லாமை முதலிய தோஷங்களின் ஸம்பந்தமே இவ்விடத்தில் ஸந்தேஹிக்கப்பட்டது. அதுவே தடுக்கப்படுகிறது, என்று சொல்லுகிறார்.—'என்னிடத்தில்' என்று ஆரம்பித்து 'ச' என்பது, ஸந்தேஹத்தின் நிவ்ருத்தியைக்காட்டுகிறது. ஸ்ருஷ்டியில் வ்யத்யாஸம உண்டாவதற்குக்காரணமாக நினைக்கப்பட்டதைச் சொல்லுகிறார்.

யாஸங்களில் பற்று இல்லாதவன். அந்த விஷயத்தில் உதாஸீனன்போல இருப்பவன். இப்படியே ஸூத்ரக்காரரும் † '𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑌨𑍈𑌰𑍍𑌘𑍃𑌣𑍍𑌯𑍇 𑌨 𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ‡ 𑌨 𑌕𑌰𑍍𑌮𑌾𑌵𑌿𑌭𑌾𑌗𑌾𑌦𑌿𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨𑌾𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍' என்றும் சொல்லி இருக்கிறார். 9

'ஏனெனில்' என்று ஆரம்பித்து 1 '𑌅𑌸𑌕𑍍𑌤𑌵𑌦𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍' 2 '𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌵𑍈𑌚𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑍈𑌃. 3 '𑌆𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾 𑌜𑌗𑌦𑌨𑍍𑌤𑌰𑍍𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃। 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮𑌜𑌨𑌿𑌤𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌶𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌃॥ 4 '𑌵𑌾𑌚𑌿𑌕𑍈𑌃 𑌪𑌕𑍍𑌷𑌿𑌮𑍃𑌗𑌤𑌾𑌂.' 5 '𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌨𑍍𑌯𑌾 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌯𑌯𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌸𑌾 𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾 𑌨𑍃𑌪 𑌸𑌰𑍍𑌵𑌗𑌾॥ 𑌸𑌂𑌸𑌾𑌰𑌤𑌾𑌪𑌾𑌨𑌖𑌿𑌲𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌤𑌿𑌸𑌨𑍍𑌤𑌤𑌾𑌨𑍍 । 𑌤𑌯𑌾 𑌤𑌿𑌰𑍋𑌹𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌾॥ 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌭𑍂𑌪𑌾𑌲 𑌤𑌾𑌰𑌤𑌮𑍍𑌯𑍇𑌨 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇' என்றிவைமுதலிய வசனங்களினால்இவ்வர்த்தம் ஏற்பட்டது. '𑌤𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑍍𑌵𑌸𑌕𑍍𑌤𑌂' என்கிற இடத்தில, தனக்குக்கர்த்ருத்வம் இல்லை, என்கிற ப்ரமம் உண்டாகும், அதை நிராகரிப்பதற்காக 'அந்த வ்யத்யாஸங்களில், என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்டது. 'பற்றுதல் இல்லாதவன், என்பதற்குக் காரணமாக இருக்கையாகிற ஸம்பந்தம் இல்லாதவன், என்று அர்த்தம். அப்படிப்பற்றுதலில்லாமைக்கு உதாஹரணம் சொல்லப்படுகிறது. உதாஸீனன் போல, என்று.எப்படி ஒருகாரியத்தில் உதாஸீனனாக இருப்பவன் அதில் காரணமாக இருக்கையாகிற ஸம்பந்தம் இல்லாமல் இருப்பானோ, அப்படியே இந்தப பகவான் கர்த்தாவாக இருந்தபோதிலும், அந்த வ்யத்யாஸம் என்கிற பாகத்தில் உதாஸீனன்போல இருக்கிறான் என்று அர்த்தம். இத்தால் கர்மங்களை அனுஷ்டிக்கும்பொழுது அதின்வ்யத்யாஸங்களில் பகவான்

---

† முதல் வாலயூம் 345-பக்கம் 1 புட்நோட்டைப்பாக்க.

‡ 345-பக்கம் 2 புட்நோட்டைப்பாக்க!

1 முதல்வால்யூம் 498 பக்கம் புட்நோட்டைப்பார்க்க.

2 முதல்வால்யூம் 499 பக்கம் 3 புட்நோட்டைப்பார்க்க.

3 விஷ்ணுதர்மம் 104 அத்யாயம் 23 ஆப்ரஹ்ம ப்ரஹ்மா முதல ஸ்தம்பபர்யந்தா: புழுவரையிலுள்ள ஜகதந்தர்வ்யவஸ்திதா: உலகங்களுக்குள்பட்ட பிராணிந: ப்ராணிகள் கர்மஜநித ஸம்ஸார வசவர்த்திந: கர்மத்தினால் உண்டாக்கப்பட்ட ஸம்ஸாரத்திற்கு வசப்பட்டவைகள்.

4 மனுஸ்ம்ருதி 12-9 வாசிகை: வாயினாலுண்டாகும் பாவங்களினால் பக்ஷிம்ருகதாம் பக்ஷியாயும் ம்ருகமாயும் இருக்கையை (அடைகிறான்.)

5 முதல்வால்யூம் 609 பக்கம் 1 புட்நோட்டைப்பார்க்க.

மயாத்⁴யக்ஷேண ப்ரக்ருதி꞉ ஸூயதே ஸசராசரம் |
ஹேதுநாநேந கௌந்தேய ஜக³த்³ விபரிவர்ததே || 10

ப-ரை] 'கௌந்தேய' குந்தியின் குமாரனான அர்ஜுநா, 'ப்ரக்ருதி:'— ப்ரக்ருதியானது, 'அத்⁴யக்ஷேண' எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிற, 'மயா' என்னாலே, (பார்க்கப்பட்டதாய்க் கொண்டு) 'ஸசராசரம்' ஸ்த்தாவர ஜங்கமங்களோடுகூடிய (லோகத்தை) 'ஸூயதே' உண்டாக்குகிறது, 'அநேந' இந்த, 'ஹேதுநா' காரணத்தினால், 'ஜக³த்'லோகமானது, 'விபரிவர்த்ததே' மாறிமாறி வருகிறதல்லவா, 10

பா] ஆகையினால் ஜீவாத்மாக்களின் கர்மங்களுக்குத் தகுந்தபடி ஸத்ய ஸங்கல்பனும், எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாகப்பார்க்கக்கூடியவனுமான, என்னால், பார்க்கப்பட்டதும், என்னுடையதுமான ப்ரக்ருதி ஜங்கமஸ்த்தாவரங்களுடன்கூடிய உலகத்தை உண்டாக்குகிறது. இந்தஜீவாத்மாக்களின் கர்மங்களுக்குத் தக்கபடி என்னுடைய பார்வையாகிற காரணத்தினால் லோகம் மாறிமாறி வருகிறது ஆகையினால் நான் எஜமானன் என்பதும், ஸத்ய ஸங்கல்பன் என்பதும், தயை இல்லாமை முதலிய தோ

தா]உதாஸீனனாகஇருக்கிறான்; என்பதுசொல்லப்படுகிறது. வ்யத்யாஸமான ஸ்ருஷ்டி கர்மங்களை (அபேக்ஷிக்கிறது, என்கிற விஷயத்திலும் ஜீவாத்மாக்களும் அவரவர்களின் கர்மங்களுடைய வரிசைகளும் அநாதியாகையினால் அவைகள் ப்ரளயகாலத்திலும் இருக்கின்றன, என்கிற விஷயத்திலும், இரண்டு ஸூத்ரங்களை ப்ரமாணமாகக் காட்டுகிறார்— 'இப்படியே' என்று ஆரம்பித்து. 9

வ்யத்யாஸமான ஸ்ருஷ்டி அவனவன் கர்மங்களுக்கு அநுகுணமாக இருந்ததேயானால், மாறுதலை அடைதலையே ஸ்வபாவமாக உடைய ப்ரக்ருதியே அவரவர் கர்மங்களுக்குத் தக்கபடி மாறுதலை அடையட்டுமே, உம்மால் என்ன ப்ரயோஜனம் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் இந்த ஶ்லோகத்தினால் சொல்லபபடுகிறது. 'ஸர்வபூ⁴தாநி' என்று ஆரம்பிக்கப்பட்ட ஸ்ருஷ்டி ப்ரளயங்கள் தன்னுடைய ஸங்கல்பத்திற்கு வசப்பட்டு நடக்கின்றன, என்பதை முடிக்கிறது, இந்த ஶ்லோகம், என்று தெரிவிப்பதற்காகச் சொல்லுகிறார்—ஆகையினால், என்று. 'மயாத்⁴யக்ஷேண' என்கிற இரண்டு பதங்களின் அபிப்ராயத்தினால் ஏற்பட்டதும் ஶ்ருதியில் சொல்லப்பட்டதுமான அர்த்தத்தைச் சொல்லுகிறார்.—'ஸத்யஸங்கல்பனும்'என்று ஆரம்பித்து,பார்க்கப்பட்

ஷங்கள் அற்றவன் என்பதும், மற்றுமிவை முதலிய, வஸுதேவருக்குப் பிள்ளையாக அவதாரம் செய்த என்னுடைய பகவானுக்கு அஸாதாரண மான ஸ்வபாவங்களைப் பார். அப்படியே ம்ருதியிலும் † மாயைக்கு எஜ மானனுகிய பகவான் இந்த ப்ரக்ருதியிலிருந்து இந்த ப்ரபஞ்சத்தை ஸ்ரு

டதும், என்கிற வரையிலும். "1 கர்மங்களைப்ரத்யக்ஷமாக அறிகிறவனு ம், எல்லா ப்ராணிகளுக்கும் இருப்பிடமானவனும்" என்றும். 2 'எவன் இந்த ப்ரபஞ்சத்தை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறானே' என்றும் 3 'அவன் ப்ரக்ருதியை ஸங்கல்பிக்கிறான், அவனால் அதிஷ்டானம் செய்யப்பட்ட ப்ரக்ருதி' என்றும் அர்த்தமுள்ள ம்ருதிவாக்யம் முதலியவைகள் இங் கே நினைக்கத்தக்கவைகள். அதிகமாக அனுபவிக்கிறபடியினால் அத்ய க்ஷன் என்று சொல்லபடுகிறான், என்று சிலர் சொல்லுகிறார்கள். அந்த அர்த்தத்திலும் இந்த உலகத்தை என்று சேர்த்துக் கொள்ள வேண்டியது. முதல் பாதியில் சொல்லியிருக்கும் 'ஸசராசரம்' என் னும பதமானது, மேல் பாதியில் சொல்லியிருக்கும் 'ஜகத்' என்ப தோடும் அன்வயிக்கிறது என்கிற அபிப்ராயத்தினால், 'ஸ்தாவரஜங்க மங்களோடு கூடிய உலகத்தை' என்று சொல்லப்பட்டது. 'ஸூயதே' என்னும் பதத்தினால், 3 'ப்ரயோஜனங்களை உண்டாக்குகிறது' என்று அர்த்தமுள்ளம்ருதிவாக்யம் ஞாபகப்படுத்தப்பட்டது முன்பாதியில், ஸ்ருஷ்டிக்குக் காரணமாகச் சொல்லப்பட்டதே மேல்பாதியிலும் ஸம் ஹாரத்திற்குக் காரணமாக 'ஹேதுநாநேன' (இந்தக்காரணத்தினா ல்) என்று சொல்லத்தக்கதேயல்லாமல், ப்ரதானமாகச் சொல்லப்பட்ட ஸ்ருஷ்டி சொல்லத்தக்கதல்ல. அது ப்ரளயம் முதலியவைகளைக் குறி த்துக் காரணமல்லவாகலால், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகி றார்.—'இந்த' என்று ஆரம்பித்து. இத்தால் இவ்விடத்தில் அத்யக்ஷ என்னும் பதம் விகாரமில்லாத ஜ்ஞானம் மாத்திரத்தைச் சொல்லுகி றது, என்று சொல்லுகிறவர்கள் 4 நிராகரிக்கப்பட்டார்கள். கர்மவச த்தினால் ஜீவர்களுக்கு போக்ஷமாகிய இந்த உலகத்திற்கு ஈச்வரனன் என்பது எவ்வாறு பொருந்தும்? மிகுந்த கருணை உடையவனாக இரு ந்தபோதிலும் கர்மங்களை அனுஸரித்துத் துக்கத்தை உண்டாக்குகிற

---

† ச்வேதாச்வதரம் 4 9,10

1 ச்வேதாச்வதரம் 6 11. 2 ருக்வேதம் 7-7-10. 3 மாந்திரிகோபநிஷத் 3 5.

4 கீழ்ச்சொல்லிய ப்ரமாணஙகளினால் பகவான் இதை அதிஷ்டானம் செ ய்கிறான் என்று ஏற்படுகிற படியினால்

ஷ்டிக்கிறான். அந்த ப்ரபஞ்சத்தில் மற்றொருவன் மாயையினால் தடுக்கப்பட்டிருக்கிறான் மாயையை ப்ரக்ருதி என்று அறியவேண்டும்; மாயியை மஹேஶ்வரன் என்று அறியவேண்டும். என்று அர்த்தமுள்ள வாக்யமும் சொல்லப்பட்டிருக்கிறது. 10

அவஜாநந்தி மாம் மூடா: மாநுஷீம் தநுமாஶ்ரிதம் |
பரம் பாவமஜாநந்தோ மம பூதமஹேஶ்வரம் || 11

ப-ரை] மூடா: அறிவில்லாதவர்கள, மாநுஷீம் மனுஷ்யர்களுடையதாகிய, தநும் ஶரீரத்தை, ஆஶ்ரிதம் அடைந்திருக்கிற, பூதமஹேஶ்வரம் ப்ராணிகளுக்கு ஈஶ்வரனாகிய, மாம் என்னை, பரம் உயர்ந்த, பாவம் ஸ்வபாவத்தை, அஜாநந்த: தெரிந்து கொள்ளாதவர்களாய், அவஜாநந்தி அவமதிக்கிறார்கள். 11

உமக்கு ஸத்ய ஸங்கல்பனாக இருக்கை எவ்வாறு பொருந்தும், என்கிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'நான் எஜமானன் என்பதும்' என்று ஆரம்பித்து 'பஶ்யமே யோகம்' என்று கீழே ஆரம்பித்ததை நிரூபிக்கிறது இது, என்று தெரிவிப்பதற்காக 'என்னுடைய' என்பது முதல் சொல்லப்பட்டது. 'அவஜாநந்திமாம்' என்கிற மேல் ஶ்லோகத்திலிருக்கும் 'மே' என்கிற பதத்தை நினைத்துக்கொண்டதினால் இங்கும் 'மே' (என்னுடைய) என்று சொன்னது, எல்லையில்லாத ஸௌலபனாக இருக்கும் தன்மையினால் மறைக்கப்பட்ட ஈஶ்வரனாக இருக்கும் தன்மையை உடைய இந்த க்ருஷ்ணாவதாரத்தை நினைக்கிறது. என்று நினைத்து 'வஸுதேவருக்குப் பிள்ளையாக அவதாரம் செய்த' என்று சொல்லப்பட்டது. இத்தால் 'மநுஷ்யத்வே பரத்வஞ்ச' என்கிற ஸங்க்ரஹ ஶ்லோகத்தின்பாகம் நினைக்கப்பட்டது. 'யுஜ்யதே' (பகவானிடத்தில் பொருந்துகிறது) என்கிற வ்யுத்பத்தியினால் தான் எஜமானனாக இருக்கை முதலியதும் இவ்விடத்தில் 'யோக' என்னும் பதத்திற்கு அர்த்தம், என்று சொல்லப்பட்டது. ப்ரக்ருதி பகவானுக்கு வஶபட்டு மாறுதலை அடைகிறது, என்பதிலும் ஜீவாத்மாக்கள் அவரவர்கள் கர்மங்களுக்குத் தக்கபடி ப்ரக்ருதிக்கு வஶப்பட்டு இருக்கிறார்கள் என்பதிலும் ஶ்ருதியை ப்ரமாணமாக உதாஹரிக்கிறார்.— 'அப்படியே' என்று ஆரம்பித்து 10

1 கீதார்த்த ஸங்க்ரஹம் 13.

பா] இப்படி எல்லாப்ராணிகளுக்கும் ஈஶ்வரனாகவும், எல்லாம் தெரிந்தவனாகவும், ஸத்யஸங்கல்பனாகவும்,எல்லாலோகங்களுக்கும் ஒரேகாரணமாகவும், மிகுந்த கருணையை உடையவனாதலால் எல்லோராலும் ஆஶ்ரயிக்கத்தகுந்தவனாவதற்காக மனுஷ்யர்களின் ஶரீரத்தைஅடைந்தவனாகவும் இருக்கிற என்னைத்தங்களால்செய்யப்பட்ட பாபகர்மங்களினால் மூடர்களாக இருப்பவர்கள் அவமதி செய்கிறார்கள். ஸாதாரண மனுஷ்யர்களுக்கு ஸமமாக நினைக்கிறார்கள், அதாவது எல்லா ப்ராணிகளுக்கும்

தா] மஹாத்மாக்களின் விஶேஷத்தைச்சொல்லுவதற்காக இந்த இரண்டுஶ்லோகங்களினால் மூடர்களின் ஸ்வபாவம் சொல்லப்படுகிறது. கீழ் ப்ரஸ்தாபித்ததோடு ஸங்கதி சொல்லவேண்டியதற்காக 'இப்படி' என்று சொல்லப்பட்டது. 'பூதமஹேஶ்வரம்' என்னும் பதம் 'பாவம்' என்னும் பதத்திற்கு விஶேஷணம் என்று சொல்வது பொருந்தாதாகையினால், தூரத்திலிருந்தபோதிலும் அதற்கு 'மாம்'என்பதோடு அன்வயம் சொல்லவேண்டும்.'பூதமஹேஶ்வரம்' என்கிற பதத்தில் அபிப்ராயத்திலேற்பட்ட அர்த்தத்தைச்சொல்லி இருக்கிறது—'எல்லாம்தெரிந்தவனாகவும்' என்பது முதல். 'மனுஷ்யர்களுடையதாகிய' என்பதற்கு மனுஷ்யர்களுடைய ஶரீரத்தைப்போன்ற அமைப்பை உடைய, என்று அர்த்தம். எப்படிப் பொன்குடம், மண்குடம், இவ்விரண்டும் வஸ்து வெவ்வேறாக இருந்தபோதிலும் அமைப்பு ஸமமாக இருக்கிறதோ? அவ்விதமாகவே இவ்விடத்திலும். இதுவும் மத்ஸ்யம் முதலியவைகளின் ஶரீரத்தை அடைந்து இருத்தலையும் குறிக்கிறது. மூடனாக இருக்கையும் பகவானால் உண்டானதாகையினால், அதினாலுண்டான தோஷத்தை விலக்குவதற்காக — 'தங்களால் செய்யப்பட்ட பாபகர்மங்களினால்' என்று சொல்லப்பட்டது. அவமானம் செய்வதற்குக் காரணத்தைச்சொல்லுகிறார்.—'ஸாதாரண'என்று ஆரம்பித்து. 'பரம்பாவமஜாநந்த:' என்பதினால் ப்ரமிக்கக் காரணமாகிய பேதம் தெரிந்துகொள்ளாமை சொல்லப்படுகிறது. 'மாநுஷீம்தநுமாஶ்ரிதம்' என்பதினால் மற்றொன்றைப்போலிருக்கை சொல்லப்படுகிறது. இவை இரண்டுகளாலும் ஸாதாரணமான மனுஷ்யனுக்கு ஸமமானவன், என்கிற ப்ரமம் ஏற்படுகிறது. அதனால், நேராகத் தெரியும் மேன்மையை எவ்விதத்தினாலாவது மறைத்துத் தாழ்வைச் சொல்வதாகிய அவமதிப்பு உண்டாகிறது. இவை எல்லாவற்றையும் விஶதப்படுத்துகிறார்.—'அதாவது'என்று ஆரம்பித்து. மனுஷ்யனாதஶையை

ரம்வரனாகிய என்னுடைய எல்லையில்லாத கருணை, ஔதார்யம், ஸௌசீல்யம், ப்ரீதி. இவைகளைக்காரணமாகக்கொண்டு மனுஷ்யனான தசையை அடைந்திருப்பதாகிய இந்த மேலான ஸ்வபாவத்தைத் தெரிந்து கொள்ளாதவர்களாய் மனுஷ்யனான தசையை அடைந்திருக்கிற மாத்ரத்தினால், என்னை மற்றவர்களுக்கு ஸமமாக எண்ணி அவமதிக்கிறார்கள், என்று அர்த்தம். 11

மோகாஶா மோககர்மாணோ மோகஜ்ஞாநா விசேதஸ:|
ராக்ஷஸீமாஸுரீம் சைவ ப்ரக்ருதிம் மோஹிநீம் ஶ்ரிதா:|| 12

ப-ரை] மோஹிநீம் மோகத்தை யுண்டாக்குகிற, ராக்ஷஸீம் ராக்ஷஸர்களுடையதாயும், ஆஸுரீம் சைவ அஸுரர்களுடையதாயுமிருக்கிற, ப்ரக்ருதிம் ஸ்வபாவத்தை, ஶ்ரிதா: அடைந்தவர்கள், மோகாஶா: வீணான ஆசையையுடையவர்களாகவும், மோககர்மாண: வீணான காரியங்களையுடையவர்களாகவும், மோகஜ்ஞாநா: வீணான ஜ்ஞானத்தையுடையவர்களாகவும், விசேதஸ: ஜ்ஞானமில்லாதவர்களாகவும், (ஆகிறார்கள்.) 12

பா] மனுஷ்யனாக அவதரித்திருக்கும் பொழுதே மிகுந்த தயை முதலிய என்னுடைய மேன்மையை மறைக்கிற ராக்ஷஸர்களுடையதாகவும்

அடைந்து இருப்பதாகிய' என்பதற்குத் தன்னுடைய ஸ்வபாவங்களை விடாமல், மற்றொருவருக்கும் ஸாதாரணமில்லாத இப்படிப்பட்ட மனுஷ்யனான தசையை அடைதலும் வாஸ்தவத்தில மேன்மையிலேயே சேர்ந்தது, என்று தாத்பர்யம். 11

தா] இந்த ஶ்லோகத்தினால் கீழ் ப்ரஸ்தாவித்ததற்குக் காரணமும் ப்ரயோஜனமும் சொல்லப்படுகிறது. மோஹத்தை யுண்டாக்குகிற ஸ்வபாவத்தை யடைந்திருக்கையன்றோ பரயோஜனமில்லாத ஆசையையுடையவர்களாயிருக்கை முதலியவற்றுக்குக் காரணம் ஆகையினால மேல்பாதிக்கு முதலில் வ்யாக்யானம் செய்கிறார். 'ராக்ஷஸீம்' ராக்ஷஸர்களுடையதாகிய, தமோகுணம் மேலிட்ட 'ஆஸுரீம்' அஸுரர்களுடையதாகிய ரஜோகுணம் மேலிட்ட அதாவது கோபம் லோபம் இவைகள் நிறைந்த என்று அர்த்தம். 'ப்ரக்ருதிம்' என்பதற்கு ஸ்வபாவத்தை என்று அர்த்தம். 1 'யஜந்தே ஸாத்விகா தேவாந் யக்ஷரக்ஷாம்

---

1 பகவத்கீதை. 17-4

அஸுரர்களுடையதாகவு மிருக்கிற ஸ்வபாவத்தை அடைந்தவர்கள் ப்ர யோஜனமில்லாத ஆசையை யுடையவர்களாகவும், ப்ரயோஜனமில்லாத ஆரம்பங்களை யுடையவர்களாகவும், என்னைச் சேர்ந்த ஜங்கம ஸ்த்தாவர ங்களாகிய எல்லா வஸ்துக்களின் விஷயத்திலும் மாறுன ஜ்ஞானத்தை யுடையவர்களாதலினுல் ப்ரயோஜனமில்லாத ஜ்ஞானத்தை யுடைய

விராஜஸா:। ஶ்ருத்வாநு வ்ருத்தமண்ணாம் ஸ்வாந்யஜ்ஞாதாஸாஜநா:' 1 'த்வாம் ஹி மந்யே ராக்ஷஸம் க்ருஷ்ண தாமஸாத்மகம் । யஸ்மாத் க்ஷிபஸி கோவிந்தம் பாண்டவம் ச தநஞ்ஜயம்' என்றிவை முதலிய இடங்களிலே போல இங்கும் கண்டுகொள்வது. 'மோஹிநீம்' (மோஹத்தையுண் டாக்குகிற) என்பதினுல் பகவானுடைய மேன்மையை மறைப்பது முதலியவை நினைக்கப்பட்டன. 'மோகாஶா:' என்கிற பதத்திற்குள் ளடங்கியிருக்கு மிரண்டு பதங்களுக்கும் அர்த்தம் சொல்லியிருக்கி றது—'ப்ரயோஜனமில்லாத' என்றாரம்பித்து. ப்ரயோஜனமுண்டாகும் வரையிலும் கர்மங்களின் ஸ்வரூபமே ஸித்திக்காது, என்கிற அபிப்ரா யத்தினுல் 'ப்ரயோஜனமில்லாத ஆரம்பத்தை யுடையவர்களாகவும்' என்று சொல்லப்பட்டது. ஆரம்பம் முதல் ப்ரயோஜன மற்ற வ்யா பாரத்தை யுடையவர்கள், என்றர்த்தம். ஜ்ஞானத்திற்கு ப்ரயோஜன மில்லாமையாவது தனக்குத்தான் ஸ்வாதீனமாக ப்ரவ்ருத்திப்பதாகிய, தான் எண்ணியிருந்த ப்ரயோஜனமில்லாமை. அதுவும் அந்த ஜ்ஞா னம் உண்மையல்ல வாகையினுல் உண்டானது, அதற்கு விஷயம் இன்னதென்று விஶேஷித்து குறிக்காமையினுல் எல்லாவற்றையும்பற் றியது என்பதே உசிதம், என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்— 'என்னைச்சேர்ந்த' என்றாரம்பித்து. ஜ்ஞானம் மாறுகயிருக்கையாவது; ஸ்வாதீனமில்லாத ஆத்மாவை ஸ்வாதீனம் என்கையும், மற்றொருவ னுக்கு ஶேஷமாகிய ஆத்மாவைத் தனக்கு ஶேஷமென்கையும், தனக் குத்தானே ப்ரகாஶமாகவும் நித்யமாகவும் இருக்கும் ஆத்மாவை ஜடம் அநித்யம் என்கையும், அஸ்திரமான தேஹத்தை ஸ்திரமான ஆத்மா என்கையும், இவை முதலியவைகளும் என்றறிந்துகொள்ள வேண்டி யது. 'மோகஜ்ஞாநா:' (ப்ரயோஜனமில்லாத ஜ்ஞானத்தை யுடைய வர்களாகவும்) என்பதினுல் ஒருவகையான ஜ்ஞானமுண்டென்று

1யஸ்மாத் எந்தக்காரணத்தினுல் கோவிந்தம் க்ருஷ்ணனையும் பாண்டவம் பா ண்டுவின் பிள்ளையாகிய தநஞ்ஜயமச அர்ஜுனனையும் க்ஷிபஸி நிந்திக்கிறுயோ (ஆகையினுல்) த்வாம் உன்னை தாமஸாத்மகம்தமோ குணம்மேலிட்ட ராக்ஷஸம் ராக்ஷஸனுக மந்யே. எண்ணுகிறேன்.

வர்களாகவும், அப்படியே எல்லா விஷயத்திலும் உண்மையான ஜ்ஞான மில்லாதவர்களாகவும், (ஆகிறார்கள்) எல்லாவற்றிற்கும் ஈச்வரனாகிய என்னை மற்றவர்களுக்கு ஸமமாகவெண்ணிஎன்னைப்பற்றி என்ன செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறார்களோ, எதை உத்தேசித்துக் காரியங் களைச் செய்ய ஆரம்பிக்கிறார்களோ, அவையெல்லாம் ப்ரயோஜன மற்ற தாய் விடுகிறது, என்றர்த்தம். 12

மஹாத்மாநஸ்து மாம் பார்த² தை³வீம் ப்ரக்ருதிமாஶ்ரிதா:|
ப⁴ஜந்த்யநந்யமநஸோ ஜ்ஞாத்வா பூ⁴தாதி³மவ்யயம்|| 13

ப-ரை] பார்த² அர்ஜுன, தை³வீம் தேவதைகளுடையதாகிய, ப்ரக்ருதிம் ஸ்வபாவத்தை, ஆஶ்ரிதா: அடைந்திருக்கிற, மஹாத்மாந: மஹாத்மாக்களோ வெனில், பூ⁴தாதி³ம் எல்லா ப்ராணிகளுக் கும் காரணமாகியும், அவ்யயம் அழிவில்லாதவனாகவுமிருக்கிற, மாம் என் னை, ஜ்ஞாத்வா அறிந்துகொண்டு, அநந்யமநஸ: வேறு விஷயத்தில் மன தைச் செலுத்தாதவர்களாய், ப⁴ஜந்தி பக்திசெய்கிறார்கள். 13

சொல்லப்பட் டிருக்கிறபடியினாலும் அதினாலேயே ஜ்ஞானத்திற்குக் காரணமே இல்லை என்று மறுப்பதும் முடியாதாகையினால் 'விசேதஸ:' என்று மறுத்தது கீழ்க்குறித்த ப்ரயோஜனமில்லாத ஜ்ஞானம் தவிர மற்ற ஜ்ஞானமில்லை என்று காட்டுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அப்படியே எல்லாவிஷயத்திலும் உண்மையான ஜ்ஞா னமில்லாதவர்களாகவும்' *என்று. ப்ரயோஜனமில்லாத ஆசையையுடைய வர்கள் என்பது முதலியவை ஏற்படாது. ஏனெனில்? ஸ்வர்கம் பசு முதலிய இஷ்ட பலங்கள் ஸித்திக்கிறபடியினாலும், அவைகளுக்கு உபா யங்களாகிய யாகம் முதலியவைகளைப்பற்றி உண்மையான ஜ்ஞான முண்டாகிறபடியினாலும், என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம்சொல் லுகிறார்*—'எல்லாவற்றிற்கும்' *என்றாரம்பித்து. இவ்விடத்தில் உண் மையான ஜ்ஞானமில்லாமையினால் ப்ரயோஜனமற்ற ஜ்ஞானத்தை யுடையவர்களாகையும், அதினாலேயே ப்ரயோஜனமில்லாத ஆசையை யுடையவர்களாகையும், ப்ரயோஜனமில்லாத ஆரம்பத்தை யுடையவர்க ளாகையும் உண்டாகிறது என்று வரிசைக்ரமம் அறியவேண்டியது.* 12

பா] எவர்கள் தங்களால் செய்யப்பட்ட புண்யங்களின் கூட்டத்தினால் என்னையே ஶரணமாக அடைந்து எல்லாப் பாவங்களின் பந்தத்தைப் போக்கிக் கொண்டவர்களாகி தேவதைகளினுடையதான ஸ்வபாவத்தை அடைந்த மஹாத்மாக்களோ; அவர்கள் வாக்குக்கும் மனதிற்கும் எட்டாத,பேர்,வ்யாபாரம், ஸ்வரூபம்,இவைகளையுடையவனும்,மிகுந்த தயையையுடையனாகையினால் ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்காக மனுஷ்யனாக அவதாரம் செய்துமிருக்கிற என்னை அறிந்துகொண்டு என்னிட

தா] *இப்படி உம்மை அவமானம் செய்வதற்குப் ப்ரவ்ருத்தி செய்கிற மூடர்கள் நிறைந்த இந்த லோகத்தில் உம்முடைய அவதாரம் ப்ரயோஜன மற்றது, என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமாக, தன்னுடைய அவதாரத்தை ப்ரயோஜனத்தோடு கூடியதாகச் செய்கிற மஹாத்மாக்களின் நடத்தையைச் சொல்லுகிற வ்யாஜத்தினால் இந்த ஶ்லோகத்தினால் பக்தியை ப்ரஸ்தாவிக்கிறார்:—:மஹாத்மாந:' என்னும் பதத்தினாலும் 'து' என்பதினாலும் ஏற்பட்ட பக்தி செய்வதற்குக் காரணமாகிய மேன்மையைக் காட்டிக்கொண்டு இந்த ஶ்லோகத்தில் அநுவாதம் செய்யப்படுகிற பாகம் விதிக்கப்படுகிறபாகம் இவைகளைப் பிரித்துக்காட்டுகிறார்:—*'எவர்கள்' *என்றாரம்பித்து* 1 *'ஜநாஸ்ஸுக்ருதிந:* 2 *'மாமேவயே ப்ரபத்யந்தே' என்றிவை முதலாக முன்பு சொன்னதை ஞாகப்படுத்துகிறார்—*'தங்களால்செய்யப்பட்ட புண்யங்களின் கூட்டத்தினால் என்னையே ஶரணமாக அடைந்து' *என்று.* 'தேவதைகளினுடைய தான' *என்பதற்கு ஸத்வகுணம் மேலிட்ட என்றர்த்தம்'ப்ரக்ருதிம்' என்பதினால் நாம் உபாஸனம் செய்யமுடியாத மேன்மை சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிறார்—*'வாக்குக்கும் மனதிற்கும்' *என்றாரம்பித்து. 'மாம்' என்பதினால் அவதாரம் வரையிலும் வருகிற ஸுலபனாயிருக்கும் தன்மையைக் காரணத்துடன் சொல்லுகிறார்—*'மிகுந்த தயையை யுடையவனாகையினால்' *என்றாரம்பித்து. அவதாரம் தயை முதலியவைகளைக் காரணமாக வுடையது, கர்மத்தைக் காரணமாகவுடையதல்ல ஆகையினால் அதில் ஜ்ஞானத்தின் சுருக்கம் முதலியவைகளில்லாமை 'அவ்யயம்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது. வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தாம லிருத்தலைக் காரணத்துடன் விவரிக்கிறார்—*'என்னிடத்தி

---

1 பகவத்கீதை 7-16. 2 பகவத்கீதை 7-14.

த்தில் உண்டான ப்ரீதியின் மிகுதியினால் என்னைக்குறித்து பக்திசெய்யா விடில் தங்களுடைய ஆத்மா மனது வெளி இந்திரியங்கள் இவைகளைத் தரிப்பதையே அடையாதவர்களாய் என்னைக்குறித்து பக்தி செய்வதையே ப்ரயோஜனமாக உடையவர்களாய் பக்தி செய்கிறார்கள். 13

ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்3ருட4வ்ரதா: ।
நமஸ்யந்தஶ்ச மாம் ப4க்த்யா நித்யயுக்தா உபாஸதே ॥ 14

ப-ரை] ப4க்த்யா பக்தியினால் ஸததம் எப்பொழுதும், மாம், என்னை கீர்த்தயந்த: சொல்லிக்கொண்டும், த்3ருட4வ்ரதா: உறுதியான ஸங்கல்பத்தை உடையவர்களாய், யதந்தஶ்ச (என்னைச் சேர்ந்த கைங்கர்யங்களில்) ப்ரயத்னம் செய்துகொண்டும், நமஸ்யந்தஶ்ச நமஸ்காரங்களைச் செய்துகொண்டும், நித்யயுக்தா: எப்பொழுதும் என்னுடன் சேர்ந்திருக்கவேண்டும் என்கிற ஆசையுள்ளவர்களாய், மாம் என்னை, உபாஸதே உபாஸனம் செய்கிறார்கள். 14

பா] அதிகமாக என்னிடத்தில் உண்டான ப்ரீதியினால் என்னைச் சொல்லுவது, என்னுடைய காரியங்களில் ப்ரயத்னம் செய்வது, என்னை நமஸ்

லுண்டான' என்றாரம்பித்து. இவ்விடத்தில் ஆர்த்தன் முதலிய வேறு அதிகாரிகளை விலக்கவேண்டியதற்காக வேறு ப்ரயோஜனத்தை அபேக்ஷிக்காதவனாய் என்பதைத் தாத்பர்யமாகக் கொள்வதே உசிதம் என்று சொல்லுகிறார்—'என்னைக் குறித்து பக்தி செய்வதையே ப்ரயோஜனமாக உடையவர்களாய்' என்று. 'மஹாத்மா' என்னும் பதத்தினால் இந்த்ரனுக்குப்பிள்ளையாகிய தீ தேவதைகளின் ஸ்வபாவமுள்ளவன் என்று காட்டப்பட்டது. 13

தா] 'ஸஜந்தி' என்று கீழ் உபாஸனம் ப்ரஸ்தாவிக்கப்பட்டது, பிறகு அதுவே நாமங்களைச் சொல்வது ப்ரயத்னம் செய்வது நமஸ்காரம செய்வது இவைகளில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்துகொண்டு அதிகமாக ப்ரியமாயிருக்கும் தசையையடைகிறதென்று விசேஷித்து இந்த ஶ்லோகத்தில் சொல்லப்படுகிறது. சொல்வது முதலிய மூன்றும் வாக்குமனது சரீரம் இவைகளுடைய காரியம் என்பதையும், அவைகளுக்கே மற்ற ஸந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருக்கும் விசேஷத்தையும், 'ஸததம்' (எப்பொழுதும்) என்பது; சொல்வது, ப்ரயத்னம் செய்வது, நமஸ்காரம் செய்வது, தன்னோடு எப்பொழுதும் சேர்ந்திருக்கவேண்டும் என்கிற ஆசையை யுடையவர்களாயிருக்கை,உபாஸனம் செய்தல், இவைகளோடு ஸமமாக அன்வயிக்கிறதென்பதையும் சொல்லுகிறார்—'அதிகமாக' என்றாரம்பித்து. 'அதிகமாக என்னிடத்தில் உண்டான ப்ரீதியினால்'என்பது 'ப4க்த்யா' என்பதின் அர்த்தம். ஒரு நிமிஷத்தை பூமி

காரம் செய்வது, இவைகளில்லாவிடில் ஒரு நிமிஷத்தின் அல்பபாகத்திலும் தன் ஆத்மாவைத் தரிப்பதை அடையாதவர்களாய் என்னுடைய குண விஶேஷங்களைச் சொல்லுகிற என்னுடைய நாமங்களை நினைத்துக் கொண்டு நெறித்த மயிர்களையுடைய எல்லா அங்கங்களை யுடையவர்களாய் ஸந்தோஷத்தினால் மழமழத்த ஸ்வரத்தை யுடையவர்களாய் நாராயண, க்ருஷ்ண, வாஸுதேவ, என்றிவை முதலியவைகளை எப்பொழு

முதலியவைகளைப் போலப் பெரியவஸ்துவாகக் கல்பனை செய்து அதின் கடைசியாய்ச் சிறியபாகம் 'ஒரு நிமிஷத்தின் அல்பபாகத்திலும்' என்று சொல்லப்பட்டது. நாமங்கள் அதிக இனிமையுள்ளவைகள் என்று தெரியப்படுத்துவதற்காக 'என்னுடைய குணவிஶேஷங்களைச்சொல்லுகிற' என்று சொல்லப்பட்டது. நாமங்களைச்சொல்வது என்பது வ்யாபாரங்களைச் சொல்வதையும் குறிக்கிறது. குணங்களை அநுஸந்தானம் செய்யாமற்போனாலும் ஸ்வரூபத்தினாலேயே ப்ரீதியை யுண்டாக்கும் என்று தெரிவிப்பதற்காக மறுபடியும் 'என்னுடைய நாமங்களை' என்று சொல்லியிருக்கிறது. 'நெறித்தமயிர்களை யுடைய எல்லா அங்கங்களையுமுடையவர்களாய்' என்பது முதலியது ஆங்காங்கு சொல்லியிருக்கும் பதங்களை எடுத்துக்காட்டியிருக்கிறது. அப்படியே 1 'தந்நாமஸ்மரணோத்பூத புளகஶ்சேதிபூமிப:' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'ஸந்தோஷத்தினால் மழமழத்த ஸ்வரத்தை யுடையவர்களாய்' என்பதினால் '2 ஸ்வரநேத்ராங்கவிக்ரியா' என்றிவை முதலாக பக்தியின் லக்ஷணம் சொல்லியிருக்கும் க்ரந்தத்தை ஞாபகப்படுத்தியிருக்கிறது. 3 'க்ருஷிர்பூவாசக: ஶப்தோ ணஶ்ச நிர்வ்ருதிவாசக:' என்று சொல்லியிருக்கிறபடியினால் க்ருஷ்ண என்கிற பதம் ப்ரயோஜனங்களுக்குக் காரணம் என்று சொல்லிக்கொண்டு பரம் வ்யூஹம் முதலிய எல்லா தசைகளுக்கும் பொது, என்று தெரியப்படுத்துவதற்காக வ்யாபகங்களான நாமங்களின் நடுவில் சொல்லப்பட்டது. மற்ற அவதாரங்களிலும் க்ருஷ்ண என்னும் பதம் 4 'அநேகம் கைகளையுடைய வராஹரூபியான க்ருஷ்ணனால் எடுக்கப்பட்டவளாகிறாய்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்

---

1 தத் அந்தபகவானுடைய நாம பெயர்களின் ஸ்மரண நினைத்துக்கொள்வதினால் உத்பூத உண்டான புளக: மயிர் நெறிப்பையுடைய சேதி பூமிப: சிசுபாலன்.

2 ஸ்வர ஸ்வரங்களுடையவும் நேத்ர கண்களுடையவும் அங்க அவயவங்களுடையவும் விக்ரியா மாறுதல். 3 2-வது வால்யூம் 57 பக்கம 1 புட்நோட்டைப்பார்க்க. 4 தைத்திரீயம் நாராயணம் 1 அநுவாகம்.

னும் சொல்லிக்கொண்டு, அப்படியே என்னுடைய கைங்கர்யங்களாகிய ஆராதனம் முதலியவைகளிலும் அதற்கு உபகாரமாகிய கோயில் கட்டு

யத்தில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. அன்றிக்கே 'நாராயண' என்பதினால் மேன்மையை அனுஸந்தானம செய்திருக்கிறது, 'க்ருஷ்ண வாஸுதேவ' என்பதினாலோ வெனில் அவதார விசேஷத்தைச் சொல்லுகிறபடியினால் ஸுலபனாயிருக்கும் தன்மையை அனுஸந்தானம் செய்திருக்கிறது. '1 யஜ்ஞேசாச்யுத கோவிந்த மாதவாநந்த கேசவ। க்ருஷ்ண விஷ்ணோ ஹ்ருஷீகேசேத்யாஹ ராஜா ஸ கேவலம்॥' '2 நாம்நோ(அ)ஸ்தி யாவதீ சக்தி: பாபநிர்ஹரணே ஹரே:' '3 கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்க சக்ரபாணே' '4 ஏதாவதாலமகநிர்ஹரணாய பும்ஸாம்' '5 ஸங்கீர்த்ய நாராயணசப்தமாத்ரம்' என்றிவை முதலிய எல்லா இடங்களிலும் நாமங்களைச் சொல்லுவதின் ப்ரபாவம் ப்ரஸித்தமாக இருக்கிறது. ஏகாந்தத்திலும் ஜனங்கள் இருக்கும் இடத்திலும் வெட்கம் முதலியவை இல்லாமையும் ஸததம் (எப்பொழுதும்) என்பதினால் காட்டப்பட்டது. 'அப்படியே' என்பதற்கு எப்பொழுதும் பக்தியினால் என்று அர்த்தம் 'என்னுடையகாரியங்களாகிய - என்பது முதல் பக்தியோகத்திற்கு அஸாதாரணமான ப்ரயத்

---

1 யஜ்ஞேச யாகங்களுக்கு எஜமானனே அச்யுத கோவிந்த மாதவ அனந்த கேசவ க்ருஷ்ண விஷ்ணுவேஇதி என்று ஸ: அந்த ராஜா ராஜன் ஆஹ சொன்னான்.

2 ஹரே: பகவானுடைய நாம்ன: நாமத்திற்கு பாபநிர்ஹரணே பாபத்தைப் போக்குவதில் யாவதீ எவ்வளவு சக்தி: சக்தி அஸ்தி இருக்கிறதோ, (அவ்வளவு பாபம் நம்மால் செய்யமுடியாது) என்று மேலே வாக்யம்.

3 விஷ்ணு புராணம் 7-33 யமபடர்களைப்பார்த்து யமன் சொல்லுகிறான் ஓ படர்களே கமலநயன தாமரைப் புஷ்பங்களைப் போன்ற கண்களையுடையவனே வாஸுதேவ விஷ்ணுவே தரணிதா பூமியைத்தரித்துக் கொண்டிருப்பவனே அச்யுத சங்க சக்ரபாணே சங்க சக்ரங்களைக்கையில் தரிப்பவனே (இப்படி எவர்கள்) சொல்லுகிறார்களோ அவர்களை தூரத்தில் விட்டுவிடுங்கள்) என்று மேல்வாக்யம்.

4 ச்ரீபாகவதம் 6-3-24 பும்ஸாம் மனிதர்களுடைய அகநிர்ஹரணாய பாபங்களைப்போக்குவதற்கு ஏதாவதா இவ்வளவு (அதாவது பகவானுடைய நாமத்தைச்சொல்வது) மாத்ரம்) அலம்போதும்.

5 நாராயண சப்தமாத்ரம் நாராயண என்னும் பதத்தைமாத்திரம் ஸங்கீர்த்ய சொல்லி (துக்கத்தை நீக்கி ஸுகத்தை அடைகிறார்கள்) என்று மேல்வாக்யம்.

வது, பூந்தோட்டம் உண்டாக்குவது, முதலியவைகளிலும், உறுதியான ஸங்கல்பத்தை யுடையவர்களாய் ப்ரயத்னம் செய்துகொண்டும், பக்தியின் மிகுதியினுல் வணக்கப்பட்ட மனது புத்தி அஹங்காரம் இரண்டு கால்கள் இரண்டு கைகள் தலை ஆகிய எட்டங்கங்களினுலும் தூசி சேறு பருக்காங்கல் இவைகளை யோசிக்காமல் பூமியில் தடிபோல் விழுந்து நமஸ்காரம் செய்துகொண்டும், எப்பொழுதும் என்னை, என்னோடு எப்பொழுதும் சேர்ந்திருக்கவேண்டும் என்கிற ஆசையை யுடையவர்களாய், அதாவது தங்கள் ஆத்மா உள்ளவரையிலும் எனக்குக் கைங்கரியம் செய்ய வேண்டும் என்கிற ஆசையை யுடையவர்களாய் உபாஸனம் செய்கிறார்கள். 14

னத்தின் விஷயத்தைக் காட்டியிருக்கிறது. அவனுடைய காரியங்களில் ப்ரயத்னம் செய்யும்போது உறுதியான ஸங்கல்பத்தை யுடையவர்களாகை பெரிய ஆபத்து வந்தாலும் ஸம்பத்து வந்தாலும் வேறொன்றை அடைவதைப் பரிஹரிப்பதற்காக. 'பக்தியின் மிகுதியினுல் வணக்கப்பட்ட' *என்பது முதல் நமஸ்காரம் செய்வது தன்னுசையினுல் ஏற்பட்டது என்று தெரிவிப்பதற்காகச் சொல்லியிருக்கிறது.* 1 'மநோபுத்த்யபிமாநேந ஸஹ ந்யஸ்ய தராதலே| கூர்மவச்சதுர: பாதாந் ஶிரஸ்தத்ரைவ பஞ்சமம்' *என்று அஷ்டாங்க நமஸ்காரம் சொல்லப்பட்டது.* 'நித்யயுக்தா:' *என்பது ஆசையைச் சொல்லுகிற க்த என்னும் ப்ரத்யயத்தை முடிவிலுடையது என்று சொல்லுகிறார்*—'எப்பொழுதும் என்னோடு சேர்ந்திருக்கவேண்டும் என்கிற ஆசையை யுடையவர்களாய்' *என்று* 2 'தாஸபூதா:' *என்றிவை முதலிய இடங்களில் சொல்லப்பட்ட ஸ்வரூபத்திற்குத் தக்கபடி நித்யமான ஸம்பந்தத்தை விஶேஷித்துச் சொல்லுகிறார்*—'தங்கள் ஆத்மா உள்ளவரையிலும்' *என்றாரம்பித்து.* 14

---

1 *பாஞ்சராத்ரம் ஸாத்வதஸம் ஹிதை* 6-187 *மனோபுத்த்ய பிமாநேந மனது புத்தி அஹங்காரம் இவைகளோடு சதுர: நான்கு பாதான் கால்களையும் கைகளிரண்டையும் சேர்த்து நான்கு என்று சொல்லியிருக்கிறது) கூர்மவத் ஆமையைப் போல் தத்ர அதில் பஞ்சமம் ஐந்தாவதாக சிரச்சைவதலையையும் தராதலே பூமியில் ஸந்ந்யஸ்ய கூடவைத்து.*

2 *மந்த்ரராஜபதஸ்தோத்ரம் (எல்லா ஆத்மாக்களும் பகவானுக்கு) தாஸபூதா: அடிமையானவர்கள்.*

ஜ்ஞாநயஜ்ஞேந சாப்யந்யே யஜந்தோ மாமுபாஸதே ।
ஏகத்வேந ப்ருதக்த்வேந பஹுதா விஶ்வதோமுகம் ॥ 15

ப-ரை] அந்யே அபி சில மஹாத்மாக்கள், ஜ்ஞாநயஜ்ஞேந ச ஜ்ஞானமாகிய யாகத்தினாலும், யஜந்த: ஆராதனம் செய்துகொண்டு, பஹுதா அனேக உட்பிரிவுகளையுடைய, ப்ருதக்த்வேந வ்யத்யாஸத்தினால், விஶ்வதோமுகம் ப்ரபஞ்சரூபமாயிருக்கிற, மாம் என்னை, ஏகத்வேந ஒருவனாக, உபாஸதே உபாஸனம் செய்கிறார்கள். 15

பா] வேறு சில மஹாத்மாக்கள் முன்சொல்லிய நாமம் சொல்லுவது முதலியவைகளோடு ஜ்ஞானமென்கிற பேருடைய யாகத்தினாலும் ஆராதனம் செய்துகொண்டு என்னை உபாஸனம் செய்கிறார்கள் எப்படி? யெனில் லோகங்களாகிற ஆகாரத்தினால் ப்ரபஞ்சத்தை விஶேஷணமாக உடைய

தா] 1'பஜந்த்யநந்யமநஸ:' என்று உபாஸனம் வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தாமல் இருக்கவேண்டும் என்று விஶேஷித்துச் சொல்லப்பட்டது, பிறகு நாமம் சொல்லுவது முதலிய அங்கங்களைக்கொண்டு நிரூபிக்கப்பட்டது, இப்பொழுது த்யானம் செய்யப்படுகிற ஆகாரத்தைக் காண்பித்துக்கொண்டு அதுவே விஶேஷித்துச் சொல்லப்படுகிறது—இந்த ஶ்லோகம் முதல் 19 வது ஶ்லோகம் வரையிலும். 'ச' என்பது முன்பு சொன்ன நாமம் சொல்லுவது முதலியவைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவிப்பதற்காக. 'அபி' என்பது 'அந்யே' என்பதோடு அன்வயிக்கிறது, இல்லாவிடில் வ்யர்த்தமாய் விடுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்-'வேறு சில' என்று. வேறு என்கிறபதம் பூர்ணமாக உபாஸிக்கிறவர்களைச் சொல்லுகிறது. 'யஜந்த:' என்பதற்கு ப்ரீதி உண்டுபண்ணிக்கொண்டு என்று அர்த்தம். 'பஹுதா' 'ப்ருதக்த்வேந' என்பதினால் ஸமஷ்டி, வ்யஷ்டி அதின் உட்பிரிவுகள் ஆகிய எல்லாவற்றையும் சேர்த்துச்சொல்லியிருக்கிறது, என்று சொல்லுகிறார்—'லோகங்களாகிறஆகாரத்தினால்' என்று. 'விஶ்வதோமுகம்' என்பதற்கு இந்த ஸந்தர்ப்பத்தில் கூடச் சேர்ந்திருக்கும் பதங்களுக்கு அனுகுணமான தாத்பர்யத்தைச் சொல்லுகிறார்—'ப்ரபஞ்சத்தை விஶேஷணமாக உடைய' என்று ஒருவனாகவும் தனித்தனியாகவும் உபாஸிக்கிறார்கள், என்று ஏன் அர்த்தம் சொல்லவில்லை; ஒன்றாக இருப்பதற்கே அனேகமாக இருப்பது எப்படிப் பொருந்தும்? அப்படியாகில் விகாரத்தை அடைந்திருக்கை ஸம்ஸாரியாயிருக்கை முதலிய

---

1 பகவத்கீதை 9-12:

என்னை ஒருவனாக உபாஸிக்கிறார்கள். இத்தால் சொல்லப்பட்டதாவது; பகவானாகிய வாஸுதேவனே பேர் ரூபம் இவைகளால் பிரிக்கமுடியாத மிகவும் ஸூக்ஷ்மமான சேதனம் அசேதனம் இவைகளைத் தனக்கு சரீரமாக உடையவனாய்க் கொண்டு ஸத்யஸங்கல்பனாகிய அந்த ஒருவனே அனேக விதங்களாகப் பிரிக்கப்பட்ட பேர ரூபம் இவைகளை உடைய ஸ்தூலமான சேதனம் அசேதனம் ஆகிய வஸ்துக்களை சரீரமாக உடையவனாகக் கடவேன் என்று ஸங்கல்பித்து தேவதை, பசு, மனுஷ்யன் ஸ்த்தாவரம் என்று பேருடைய விசித்திரமான லோகத்தை சரீரமாக உடையவனாக இருக்கிறான். என்று அனுஸந்தானம் செய்துகொண்டும் என்னை உபாஸிக்கிறார்கள், என்று. 15

தோஷங்களும் வருமே? அனேகமாக இருப்பதை ஒன்றென்று உபாஸனம் செய்கிறவனுக்கு 1 த்ருஷ்டிவிதியை ச்செய்பவனுக்குப்போல ப்ரமமும் வருமோ? என்கிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் சொல்லுகிறார்:- 'இத்தால்சொல்லப்பட்டதாவது' என்றாரம்பித்து. இத்தால் மற்றவர்கள் சொன்னமாதிரியாக உபாஸனத்தின் மூன்றுவிதமான பிரிவுகளைச் சொல்லுகிறது என்பதும் பேதமும் அபேதமும் சொல்லப்பட்டதென்பதும் நிராகரிக்கப்பட்டது. 'பகவானாகிய' என்பதினால் ஸ்ருஷ்டிப்பது முதலியவைகளுக்கு உபயோகமான குணங்களின் கூட்டத்தைக்காட்டியிருக்கிறது. 'வாஸுதேவன்' என்னும் பதத்தில், வாஸு' என்கிற முதல் பாகத்தினால் எல்லா வஸ்துக்களுடன் சேர்த்துசசொல்லுவதற்குக் காரணமாகிய எல்லாவற்றையும தனக்குச் சரீரமாக உடையவனாய்க் கொண்டு எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்திருக்கை சொல்லப்படுகிறது 'தேவன்' என்கிற இரண்டாவது பாகத்தினால் ஸ்ருஷ்டிப்பதற்கு ப்ரயோஜனம் தன்னுடைய லீலையே என்று சொல்லப்படுகிறது. இந்த இரண்டு பாகங்களினாலும் வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தாமல் உபாஸனம் செய்கிற ஏகாந்திகள் எப்பொழுதும் த்யானம் செய்துகொண்டிருக்கும் மந்திரமும் ஞாபகப்படுத்தப்பட்டது. பூமி முதலிய வஸ்துக்கள் அனேகம் என்பது மாத்திரம் ப்ரத்யக்ஷம் முதலியவைகளாலேயே ஏற்பட்டிருக்கிறபடியினால் ஒன்றாயிருக்கிற வஸ்துவே அனேகமாக யிருக்கிறது என்பதல்லவோ மாஸ்திரத்தினாலறியவேண்டியது. ஆகையினால அப்படிப்பட்ட ஒன்றாகயிருக்கையிலேயே வாக்யத்திற்குத் தாத்பர்யம், அதுவும் ஒன்றே எல்லாவற்றிற்கும் ஆத்மா என்கிற காரணத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது ஆகையினால் ஒரு தோஷமுமில்லை. 15

---

1 முதல் வால்யூம் 514 வது பக்கம் புட்நோட்டைப்பார்க்க.

பா] அப்படியே நான் ப்ரபஞ்சத்தை சரீரமாக உடையவனாக இருக்கிறேன் அல்லவா என்று சொல்லுகிறார்.—

𑌅𑌹𑌂 𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑌹𑌂 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌹𑌮𑌹𑌮𑍌𑌷𑌧𑌮𑍍 ।
𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍋𑌽𑌹𑌮𑌹𑌮𑍇𑌵𑌾𑌜𑍍𑌯𑌮𑌹𑌮𑌗𑍍𑌨𑌿𑌰𑌹𑌂 𑌹𑍁𑌤𑌮𑍍 ॥ 16

ப-ரை] 𑌕𑍍𑌰𑌤𑍁𑌃 யாகம், 𑌅𑌹𑌂 நான், 𑌯𑌜𑍍𑌞𑌃 மஹாயஜ்ஞம், 𑌅𑌹𑌂 நான், 𑌸𑍍𑌵𑌧𑌾। ஸ்வதா என்னும் மந்திரம், 𑌅𑌹𑌂 நான், 𑌔𑌷𑌧𑌂 செடி முதலியவைகளிலுண்டாகும் ஹவிஸ்ஸும், 𑌅𑌹𑌂 நான், 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 மந்திரம், 𑌅𑌹𑌂 நான், 𑌆𑌜𑍍𑌯𑌂 நெய், 𑌅𑌹𑌮𑍇𑌵 நானே, 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 அக்னி, 𑌅𑌹𑌂 நான், 𑌹𑍁𑌤𑌂 ஹோமம், 𑌅𑌹𑌂 நான். 16

பா] ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்கள் நானே மஹாயஜ்ஞங்களும் நானே பித்ருக்களின் கூட்டத்திற்குத் திருப்தியையுண்டாக்குகிற ஸ்வதா

தா] பரம் வ்யூஹம் முதலிய ரூபங்களினால் ஒன்றாயிருக்கையும் அநேகமா யிருக்கையும் சொல்ல முடியும், ஆனாலும் மேலக்ரந்தத்தை அனுஸரித் திருக்கிறபடியினால் சொன்னதே அர்த்தம் என்கிற அபிப்ராயத்தினால் '𑌅𑌹𑌂𑌕𑍍𑌰𑌤𑍁𑌃' என்றாரம்பித்து நான்கு ஶ்லோகங்களுக்கு இந்தஸந்தர்ப்பத்தில் ஸங்கதியையும்அர்த்தத்தையும் சொல்லுகிறார்— 'அப்படியே' என்றாரம்பித்து. 'ஜ்யோதிஷ்டோமம் முதலிய' என்பதினாலும், 'மஹாயஜ்ஞங்களும்' என்பதினாலும் அர்த்தம் வெவ்வேறு என்று தெரிவித்திருக்கிற படியினால் '𑌕𑍍𑌰𑌤𑍁𑌃 𑌯𑌜𑍍𑌞𑌃' என்னும் பதங்களுககுப் புனருக்தி என்னும் தோஷத்தைப் பரிஹரித்திருக்கிறது. சரீரத்தினால் செய்யப்படுகிற கர்மம் மனதினால் செய்யப்படுகிற கர்மம் என்றும், ஶ்ருதியில் சொல்லிய கர்மம ஸ்ம்ருதியில் சொல்லிய கர்மம் என்றும் பிரித்தது ப்ரஸித்தியை அனுஸரித்ததல்ல என்று தாத்பர்யம். மஹாயஜ்ஞமாவது ப்ரம்ஹயஜ்ஞம் முதலிய 1 ஐந்து யஜ்ஞங்கள் '𑌅𑌹𑌂' என்பது பொதுவாக எல்லா இடத்திலும் அன்வயிக்கிறது. யாகங்களையும் அதின் அங்கங்களையும் ப்ரஸ்தாவித்திருக்கிற படியினாலும், '𑌸𑍍𑌵𑌧𑌾' என்னும் பதத்தோடு சேர்த்துச் சொல்லியிருக்கிற படியினாலும், நெய்யைத் தனித்து மேலே சொல்லியிருக்கிற படியினா

---

1 ப்ருமஹயஜ்ஞம், தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், மனுஷ்ய யஜ்ஞம், பூதயஜ்ஞம் ஆக ஐந்தும் பஞ்சமஹா யஜ்ஞங்கள் என்று சொல்லப்படுகிறது.

என்னும் மந்திரமும் நானே செடி முதலியவைகளிலிருந்து உண்டாகிற ஹவிஸ்ஸும் நானே மந்திரமும் நானே நெய்யும் நானே இது மற்றவைகளையும் குறிப்பதற்காக, ஸோமம் முதலிய ஹவிஸ்ஸும் நானே என்று அர்த்தம். ஆஹவநீயம் முதலிய அக்னியும் நானே ஹோமமும் நானே. 16

𑌪𑌿𑌤𑌾𑌹𑌮𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍋 𑌮𑌾𑌤𑌾 𑌧𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 ।
𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑍋𑌂𑌕𑌾𑌰 𑌋𑌕𑍍 𑌸𑌾𑌮 𑌯𑌜𑍁𑌰𑍇𑌵 𑌚 ॥ 17

ப-ரை] 𑌅𑌸𑍍𑌯 இந்த, 𑌜𑌗𑌤𑌃 லோகத்திற்கு, 𑌪𑌿𑌤𑌾 தகப்பனும், 𑌮𑌾𑌤𑌾 தாயும், 𑌧𑌾𑌤𑌾 உத்பத்திக்கு ஒத்தாசைக்காரணமும், 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 பாட்டனும், 𑌅𑌹𑌂 நான், 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 பரிசுத்தியைக் கொடுக்கக்கூடிய, 𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 அறியத்தகுந்த வஸ்துவும், (நான்) 𑌓𑌂𑌕𑌾𑌰𑌃 ப்ரணவமும், (நான்) 𑌋𑌕𑍍 ருக்வேதமும், 𑌸𑌾𑌮 ஸாமவேதமும், 𑌯𑌜𑍁𑌃 யஜுர்வேதமும் (நான்) 17

னும், இங்கிருக்கும் '𑌔𑌷𑌧𑌂' என்னும் பதம் செடி முதலியவைகளிலிருந்து உண்டாகும் ஹவிஸ்ஸைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்.—'செடி முதலியவைகளி லிருந்து உண்டாகும் ஹவிஸ்ஸும்' என்று. இத்தால் '𑌸𑍍𑌵𑌧𑌾, 𑌔𑌷𑌧𑌂' என்னும் பதங்கள் அன்னத்தையும் மருந்தையும் சொல்லுகின்றன என்று வ்யாக்யானம் செய்தது நிராகரிப்பட்டது. ஒன்றைத் தனித்துச் சொன்னது மற்றது இல்லை என்று தெரிவிப்பதற்காகவோ என்கிற ஸந்தேஹத்தைப் பரிஹரிக்கிறார்.—'மற்றவைகளையும் குறிப்பதற்காக' என்று. இப்படியே மேலும் பிதாமஹன் முதலியவர்களைச் சொன்னதுப்ரபிதாமஹன் முதலியவர்களையும் குறிப்பதற்காக என்றறிந்து கொள்ளவும். இவ்விடத்தில் '𑌅𑌗𑍍𑌨𑌿𑌃' என்னும் பதம் இந்த ஸந்தர்ப்பத்தை அனுஸரித்து மூன்றாவது பூதமாகிய நெருப்பை மாத்திரம் சொல்லுகிறது என்பது யுக்தமல்ல, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார். 'ஆஹவநீயம் முதலிய அக்னியும்' என்று ஹவிஸ்ஸுக்கள் முன்பே சொல்லப்பட்டிருக்கிற படியினால் '𑌹𑍁𑌤𑌂' என்னும் பதம் ஹோமத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்.—'ஹோமமும்' என்று. 16

பா] ஸ்த்தாவரமும் ஜங்கமமுமாகிய இந்த லோகத்திற்கு அந்தந்த இடத்தில் தகப்பகனுவும் தாயாகவும் உத்பத்திக்கு ஒத்தாசைக் காரணமாகவும் பாட்டனுகவும் இருப்பவன் நானே. இவ்விடத்தில் யாதா என்னும் பதம் தகப்பன் தாய் இவர்களைத் தவிர வேறயும் உத்பத்திக்கு ஒத்தாசைக் காரணமுமான ஜீவனைச்சொல்லுகிறது. பரிசுத்தியைக்கொடுக்கக்கூடிய

தா] 'வஷிதாஹஸ்ய' என்றிவை முதலிய இடங்களில் பகவான் தானே நேரில் பிதா என்பது சொல்லப்படவில்லை, பின்னை எதென்னில் பிதாவாக லோகத்தில் கண்டறியப்பட்டவைகள் தன்னை அந்தர் யாமியாக உடையதுகள் என்பது சொல்லப்படுகிறது, அப்படியிருந்தால் தான் இந்த ஸந்தர்ப்பத்துக்குப் பொருந்தும் என்கிற அபிப்ராயத்தினுல்சொல்லுகிறர்—'ஸ்த்தாவரமும்'என்றாரம்பித்து. ஸ்தாவரங்களிலும் அந்தந்தக்காரணங்கள் பகவானுக்குச் சரீரங்கள் ஆகையினுல் அவைகளிலும் பகவான் பிதா என்று சொல்லியிருக்கிறது. 'யாதா' என்னும் பதம் எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கிற ஒருஜீவனைசசொல்லுகிறது என்று ப்ரஸித்தமாயிருக்கிறது. அப்படியாகில் இவ்விடத்தில் புனருக்திவரும் என்று ஆக்ஷேபித்துக்கொண்டு ஸமாதானம் சொல்லுகிறர்—'இவ்விடத்தில்' என்று. 1 கோபலீவர்தந்யாயத்தினுல் என்று தாத்பர்யம். ஒருவனே எல்லாவற்றிற்கும் பிதா என்பதில்லாமையால் தனித்தனியான பிதாவைச்சொல்லுகிறதென்று தெரிவிப்பதற்காக 'அந்தந்த இடத்தில்' என்று சொல்லப்பட்டது. 'இவ்விடத்தில்' என்பதற்கு பிதா முதலியவர்களோடு சேர்ந்திருக்கிறபடியினுல் என்று அர்த்தம்.ருத்ரன் இந்த்ரன் முதலியவர்களோடு சேர்ந்திருந்தாலல்லவோ சதுர்முகனைச் சொல்லும் என்று தாத்பர்யம். தாதுவின் அர்த்தமாகிய தரிப்பதின் மூலமாக உத்பத்திக்கு ஒத்தாசைகாரணமாயிருத்தல் சொல்லப்படுகிறது. அறியத்தக்கது என்பது எல்லாவற்றிற்கும் ஸாதாரணம் ஆகையினுல் இவ்விடத்தில் ஸம்பவிக்கக்கூடியதாகத் தோன்றுகிற 'வஷித்ரம் வேத்யம்' என்கிற பதங்கள் ஒன்றுக்கொன்று விசேஷண விசேஷ்யங்களாக அன்வயிக்கின்றன என்பது, அதற்கு ஒருபாதகமும் இல்லாமையினுல் விடத்தகுந்ததல்ல என்கிற அபிப்ராயத்தினுல்சொல்லுகிறர்—'பரிசுத்தியைக்கொடுக்கக்கூடியதும்' என்றாரம்பித்து. வேதத்தை மேலே சொல்லப்போகிறபடியினுலும் பரிசுத்தியைக் கொடுக்கக்கூடியது என்

1 முதல் வால்யும் 423 வது பக்கம் 1 புட்னேட்டைப்பார்க்க.

தாய் வேதங்களைக்கொண்டு அறியத்தக்கவஸ்து எதுவோ, அதுவும் நானே அப்படிப்பட்ட வஸ்துவைத்தெரிவிக்கிற தாயும் வேதங்களுக்குக் காரணமுமாகிய ப்ரணவமும் நானே ருக்ஸாம யஜுஸ் ஆகிய வேதமும் நானே.

𑌗𑌤𑌿𑌰𑍍𑌭𑌰𑍍𑌤𑌾 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌨𑌿𑌵𑌾𑌸𑌃 𑌶𑌰𑌣𑌂 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍।
𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 𑌪𑍍𑌰𑌲𑌯𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌨𑌿𑌧𑌾𑌨𑌂 𑌬𑍀𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥ 18

ப-ரை] 𑌗𑌤𑌿𑌃 அடையவேண்டிய இடம், 𑌭𑌰𑍍𑌤𑌾 தரிப்பவன், 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 நியமிக்கிறவன், 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 எல்லாவற்றையும் நேராகப் பார்க்கிறவன், 𑌨𑌿𑌵𑌾𑌸𑌃 வஸிக்கும் இடம், 𑌶𑌰𑌣𑌂 காப்பாற்றுகிறவன், 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍 நன்மையை விரும்புகிறவன், 𑌪𑍍𑌰𑌭𑌵𑌪𑍍𑌰𑌲𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 உத்பத்தியையும் ப்ரளயத்தையும் அடையும் இடம், 𑌨𑌿𑌧𑌾𑌨𑌂 அதில் உத்பத்தியையும் ப்ரளயத்தையும் அடையும் வஸ்து, 𑌅𑌵𑍍𑌯𑌯𑌂 அழிவில்லாத, 𑌬𑍀𑌜𑌂 காரணம், (இவை எல்லாம் நான் என்று சேர்த்துக் கொள்ளவும்). 18

கிற பதத்தின் ஸாமர்த்யத்தினாலும் 'வேதங்களைக்கொண்டு அறியத்தக்க' என்று சொல்லப்பட்டது. ஒன்றன் பாலாகச்சொல்லியிருக்கிற படியினாலும் விசேஷித்துச் சொல்லுவதற்குக்காரணமில்லாமையினாலும் இங்கு சொல்லப்படாதவைகளாய் வேதங்களைக்கொண்டு அறியத்தக்க எல்லா வஸ்துக்களையும் சேர்த்துச் சொல்லியிருக்கிற திதுவென்று தெரிவிப்பதற்காக 'எதுவோ' என்று சொல்லியிருக்கிறது. 'பவித்ரம்' என்னும் பதம் அர்த்தத்தை சுருக்கிச் சொல்லவேண்டியதாகிய ஒரு வஸ்துவின் பெயரைச் சொல்லுகிறது என்பதை விலக்குவதற்காக 'பரிசுத்தியைக் கொடுக்கக்கூடியதாய்' என்று சொல்லப்பட்டது. மற்றொரு வஸ்துவின் ஸம்பந்தத்தைக் கொண்டு நிரூபிக்கவேண்டிய வஸ்துக்களின் நடுவே யிருக்கிறபடியினால் இதுவும் மற்றொரு வஸ்துவின் ஸம்பந்தத்தைக்கொண்டு நிரூபிக்கவேண்டிய வஸ்துவையே சொல்லுகிறது என்று தெரிவிப்பதற்காக 'அப்படிப்பட்ட வஸ்துவைத் தெரிவிக்கிற' என்று சொல்லப்பட்டது. ருக்வேதம் ஸாமவேதம் யஜுர்வேதம் இவைகளைத் தனித்துச் சொல்லியிருந்தபோதிலும் அவைகளுக்குள்ளடங்கிய ப்ரணவத்தைத் தனித்துச் சொல்லியிருப்பதற்கு அபிப்ராயமென்ன என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'வேதங்களுக்குக்காரணமாகிய' என்று.

பா] ஗ம்யதே (அடையப்படுகிறது) என்கிற வ்யுத்பத்தியினால் ஗திஃ என்பதற்கு அந்தந்த இடங்களில் அடையவேண்டிய இடம் என்று அர்த்தம். தரிப்பவன் நியமிக்கிறவன் நேராகப் பார்த்துக்கொண்டிருப்பவன் வஸிக்கும் இடமாகிய வீடு முதலியன; ஶரணம் ஆவது இஷ்டத்தைக்கொடுப்ப

தா] ஗திஃ என்னும் பதம் இவ்விடத்தில் முன்பு சொன்னதை அநுஸரித்துப் பின் சொன்னதும் இருக்கவேண்டும் என்கிற ந்யாயத்தினால் வஸ்துவைச் சொல்லுகிறது என்பதே உசிதமாகையினால் போவது ஆகிய கார்யத்தைச் சொல்லுகிறதல்ல, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்.—'஗ம்யதே' என்றாரம்பித்து. எல்லா ஜனங்களுக்கும் ஸாதாரணங்களான வஸ்துக்களைச சொல்லிக்கொண்டு வரும்பொழுது அதின் நடுவில் ஸ்திரீகளுக்கு மாத்திரம் ஸம்பந்தமுள்ள (கணவன் என்னும்) வஸ்துவைச் சொல்லுவது யுக்தமல்ல ஭ிருஞ் என்னும் தாதுவுக்கு தரிக்கிறான் என்னும் அர்த்தம் ப்ரஸித்தமாயிருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்.—'தரிப்பவன்' என்று '஭ர்தா' என்னும் பதம் இவ்விடத்தில் ஸமர்த்தன் என்கிற அர்த்தத்தைச் சொல்லுவதா யிருந்தால் 1 'ஜக஡ஃ' என்னும் பதத்தோடு அன்வயிக்காது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்.—நியமிக்கிறவன்' என்று. 'நேராகப் பார்த்துக் கொண்டிருப்பவன்' என்பதற்கு2'ஸாக்ஷாத்ரஷ்டரி ஸம்ஜ்ஞாயாம்' என்றல்லவோ 'ஸாக்ஷீ' என்னும் பதம் விதிக்கப்பட்டிருக்கிறது, என்று தாத்பர்யம். 'வஸிக்கும் இடமாகிய' என்பதற்கு இவ்விடத்திலும் வஸிப்பதாகிய காரியத்தைச் சொல்லுவது உசிதமல்ல ஆகையினால் இடத்தைச் சொல்லுகிறது இது, என்று தாத்பர்யம். ஗திஃ என்கிற பதத்தோடு புனருக்தியைப் பரிஹரிப்பதற்காக 'வீடு முதலியன' என்று சொல்லப்பட்டது. ஗திஃ என்னும் பதமோவெனில் ஸ்வர்கம் முதலிய போக வேண்டிய இடத்தைச் சொல்லுகிறதென்று முன்பே சொல்லப்பட்டது. அன்றிக்கே அந்தந்த இடங்களில் அநுபவிக்க வேண்டிய போக்யமான வஸ்துவைச் சொல்லுகிறதாகவுமாம். ஶரணம் என்னும் பதம் இவ்விடத்தில் நிவாஸஃ என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட வீடு முதலிய அசேதனத்தைச் சொல்லுகிற தென்பதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்.—'இஷ்டத்தை' என்றாரம்பித்து. இஷ்டத்தைக் கொடுத்தலும் அநிஷ்டத்தைத் தடுப்பதும் இஷ்டப்படி தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்தும் அன்வயிக்கிறது (அதாவது இஷ்டத்தைக் கொடுப்பதற்கு மாத்திரமும்

---

1 பகவத்கீதை 9-17.

2 அஷ்டாத்யாயீ 5-2-91 நேராகப்பார்த்தவனைப்பற்றி ப்பெயராகச்சொல்லும் பொழுது ஸாக்ஷீ என்று பதமாகிறது என்று கருத்து.

தற்காகவும் அநிஷ்டத்தைத் தடுப்பதற்காகவும் ஆஶ்ரயிக்கத்தகுந்த ஜீவன் எதுவோ அதுவும் நானே நன்மையை விரும்புகிறவனும் (நானே) எந்தவஸ்துவும் உத்பத்தியை அடைவதற்கும் ப்ரளயத்தை அடைவதற்கும் எதேது இடமோ, அதுவும் நானே. நிரூபதே (சேர்க்கப்படுகிறது) என்கிற வ்யுத்பத்தியினால் அதிலிருந்து உண்டாக்கப்படும் வஸ்துவும் அதில் ப்ரளயத்தை

அநிஷ்டத்தைத் தடுப்பதற்கு மாத்திரமும் இவை யிரண்டுக்காகவும் ஆஶ்ரயிக்கத்தக்க என்று அன்வயித்துக் கொள்ளவும்) 1 'ஶரணம் க்ருஹரக்ஷித்ரோ:' என்று சொல்லியிருக்கிற படியினால் இவ்விடத்தில் 'ஶரணம்' என்னும் பதம் காப்பாற்றுகிறவனைச் சொல்லுகிறது. 'நன்மையை விரும்புகிறவன்' என்பதற்கு, நல்லமனதை யுடையவன் என்றல்லவோ ஸுஹ்ருத் என்னும் பதத்திற்கு அர்த்தம், மனதிற்கு நன்மையாவது நன்மையை நினைத்துக் கொண்டிருக்கை தான், என்று தாத்பர்யம், 'எந்த வஸ்துவும்' என்பதற்கு கேவலம் ப்ரஹ்மா முதலியவர்களுக்காவது அவ்பக்தம் முதலிய வற்றுக்காவது உத்பத்தி அடைவதற்கும் ப்ரளயத்தை அடைவதற்கும் எது இடமோ அது என்று அர்த்தமல்ல, என்று அபிப்ராயம். ப்ரபவ: என்று பிரித்து மற்றவர்கள் சொன்ன பாடாந்தரம் ப்ரஸித்தமல்ல ஆகையினாலும் இந்த இடத்திற்குச் சேர்ந்திராமையாலும் தள்ளப்பட்டது. 'ப்ரபவப்ரளய ஸ்தாநம்' என்று கீழே ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிற படியினால் அந்த இடத்தில் எது உண்டாகிறதோ எது லயத்தை அடைகிறதோ அது இவ்விடத்தில் 'நிதாநம்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்.—'நியீபதே' என்றாரம்பித்து. இந்தப் பதத்தின் முடிவிலிருக்கும் ல்யுட் என்னும் விகுதி கர்மம் என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது. இத்தால் நிதாநம் என்னும் பதம் ப்ரளயஸ்தாநம் என்பதற்கு விஶேஷணமாகையினால் பேர்ரூபம் இவைகளால் பிரிக்கப்படாத ப்ரக்ருதியைச் சொல்லுகிறதென்பது நிராகரிக்கப்பட்டது. ப்ரபவப்ரளயஸ்தாநம் என்கிற பதம் உபாதான காரணத்தைச் சொல்லுவதா யிருந்தால் பீஜம் என்கிற பதம் பொதுவாகக் காரணம் மாத்திரத்தைச் சொல்லுகிறது, பீஜம் என்கிற பதம் உபாதான காரணத்தைச் சொல்லுகிறது என்று ஒப்புக்கொள்

1 நாமலிங்காநுசாஸனம்.3 காண்டம் நாநார்த்தவர்கம் 209 ஶ்லோகம்சரணம் என்னும் பதம் வீட்டையும் காப்பாற்றுகிறவனையும் சொல்லும் என்று இதின் கருத்து.

அடைவிக்கப்படும் வஸ்துவும் நானே என்று அர்த்தம். அந்தந்த வஸ்துவில் அழிவில்லாதகாரணம் எதுவோ அதுவும் நானே. 18

தபாம்யஹமஹம் வர்ஷம் நிக்ருஹ்ணாம்யுத்ஸ்ருஜாமி ச ।
அம்ருதம் சைவ ம்ருத்யுஶ்ச ஸதஸச்சாஹமர்ஜுந ॥ 19

ப-ரை] அர்ஜுந அர்ஜுன, அஹம் நான், தபாமி வெப்பத்தை உண்டாக்குகிறேன், அஹம் நான் வர்ஷம் மழையை, நிக்ருஹ்ணாமி அடக்குகிறேன், உத்ஸ்ருஜாமி ச விடுகிறேன், அம்ருதம் உயிரோடிருப்பதற்குக் காரணமும், ம்ருத்யுஶ்ச மரணத்தை அடைவதற்குக் காரணமும், (நானே)ஸத் இருப்பதும், அஸச்ச இல்லாததும், அஹம் நான். 19

பா] நெருப்பு ஸூர்யன் முதலியவைகளாக இருந்துகொண்டு நானே வெப்பத்தை உண்டாக்குகிறேன். க்ரீஷ்மம் முதலிய ருதுக்களில் நானே மழையை அடக்குகிறேன், அப்படியே வர்ஷாகாலங்களில் மழையை

ளும் பக்ஷத்தில் ப்ரபவ ப்ரளயஸ்தானம் என்கிற பதம் விதைக்கு ஆதாரமாகிய பூமி முதலிய இடத்தைச் சொல்லுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார் — 'அந்தந்த வஸ்துவில்' என்றாரம்பித்து. 18

தா] இப்படி [1]'ப்ராதாந்யத:' என்று மேலே சொல்லப்போகிற மாதிரியாக லோகத்தில் அந்தந்தப் பதங்களினால் சொல்லப்படுகிறவைகளாக ப்ரஸித்தங்களான சிறந்த வஸ்துக்களின் இருப்பு தன்னுடைய அதீனம் என்று சொல்லப்பட்டது, பிறகு அவைகளின் ப்ரவ்ருத்தி தனக்கு அதீனம் என்று இந்த ஶ்லோகத்தினால் சொல்லப்படுகிறது. ஸ்வரூபத்தினால் வெப்பத்தை உண்டாக்கக்காரணமல்லஆகையினால் மற்றொன்றை சரீரமாக உடைய ஸ்வரூபத்தில் அதைக் காட்டுகிறார்—'நெருப்பு ஸூர்யன் முதலிய' என்றாரம்பித்து. 'முதலிய' என்பதினால் நெருப்பு முதலியவைகளினால் கொளுத்தப்பட்ட வஸ்துவைச் சொல்லியிருக்கிறது. ஒருவனால்செய்யப்படுகிற ஒன்றுக்கொன்று விருத்தங்களான காரியங்களைச் சொல்லி யிருந்தால் அதைக் காலங்கள் வெவ்வேறு என்று ஏற்படுத்தவேண்டும்என்கிற அபிப்ராயத்தினால்சொல்லுகிறார்'க்ரீஷ்மம்முதலிய, ருதுக்களில்' 'வர்ஷாகாலங்களில்' என்று 'அஹம் க்ரது:' என்றாரம்பித்து இதுவரையிலும் அதியஜ்ஞம் அதிபூதம் அத்யாத்மம் அதிதைவதம் இவைகளைச் சொல்லியிருக்கிறது என்று சிலர் சொல்லுகிறார்கள்.

1 பகவத்கீதை 10-19.

நானே விடுகிறேன், எதனால் இந்தலோகம் உயிரோடிருக்கிறதோ, எதனால் மரணத்தை அடைகிறதோ,அவையிரண்டும் நானே. இந்த விஷயத்தில் அதிகமாகச் சொல்லி என்ன ப்ரயோஜனம்; எதிருக்கிறதோ, எதுமுன்னிருந்ததோ எது இனி உண்டாகப்போகிறதோ, எல்லா அவஸ்தைகளையும் உடையவைகளாக இருக்கிற அந்த எல்லாச் சேதனமும் அசேதனமுமாகிய வஸ்துக்களைச் ஶரீரமாக உடையவனாகையினால் அந்தந்த ரூபமாக

பிறகு ஸாதகமாகவும் பாதகமாகவும் சுருக்கிச் சொல்லப்படுகிறது. 'அம்ருதம்சைவ ம்ருத்யுஶ்ச,என்று. ம்ருத்யு:'என்னும்பதத்தோடு சேர்த்துச்சொல்லியிருக்கிறபடியினால் மரணத்தைத் தடுக்கிறவஸ்துவைச் சொல்லுகிறது இந்த அம்ருதம் என்னும் பதம், வாஸ்தவமானஅம்ருதத்தைச்சொல்லுவதாயிருந்தால் விஷத்தைச்சொல்லுகிற பதத்தோடு சேர்த்துச் சொல்லியிருக்கவேண்டும்; அம்ருதம் என்னும் பதத்தோடு சேர்த்துச் சொல்லப்பட்டபடியினால் ம்ருத்யு:என்னும் பதமும் யமன் முதலியவற்றைச் சொல்லுகிறதென்பதும் யுக்தமல்ல, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எதனால்' என்றாரம்பித்து.மூன்றுகாலங்களிலுமிருக்கும் எல்லா வஸ்துக்களையும் சுருக்கமாகச் சொல்லி முடித்திருக்கிறதிது வென்பதைக்காட்டுகிறார்—'இந்த விஷயத்தில்' என்றாரம்பித்து. இவ்விடத்தில் ஸத் என்னும் பதத்தைப்போலவே அஸத்என்னும் பதமும், இந்த மதத்தில் மற்றொரு வஸ்துவே இன்னொருவஸ்துவின் அபாவம் என்று சொல்லுகிறபடியினால் ஒருவிதமான வஸ்துவைச் சொல்லுகிறது, அப்படிக்கில்லாவிடில் நான்என்று தன்னோடு சேர்த்து சொல்லியிருப்பது பொருந்தாது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—எது இருக்கிறதோ எது முன்னிருந்ததோ, எது இனி உண்டாகப் போகிறதோ' என்று. அஸத் என்னும் பதம் இவ்விடத்தில் இப்பொழுதிருக்கும் வஸ்துக்களைத் தவிர மற்ற வஸ்துக்களைச் சொல்லுகிறது. மற்ற இடங்களிலேபோல இந்தப் பதங்கள் சேதனங்களையும் அசேதனங்களையும் சொல்லுகின்றன என்று ஏன் சொல்லவில்லை ? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'எல்லா அவஸ்தைகளையும் உடையவைகளாக இருக்கிற' என்றாரம்பித்து. எல்லாம் பகவானை ஆத்மாவாக உடையது, என்பதல்லவோ கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்டது, மூன்று காலங்களிலுமிருக்கும் எல்லா வஸ்துக்களையும் சேர்த்துச்

---

1 இங்கு எல்லாம் தனக்கு சரீரங்களாகையினால் அவைகள் நான் என்றுசேர்த்துச்சொல்லப்பட்டிருக்கிறது அபாவம் என்பது வஸ்துவல்ல ஆகையினால்அப்படி சேர்த்துச் சொல்லியிருப்பது பொருந்தாது என்று கருத்து.

நானே இருக்கிறேன் என்று அர்த்தம். இப்படி அனேகவித வ்யத்யாஸமுள்ளவைகளாகவும் பிரிக்கப்பட்ட பேர் ரூபம் இவைகளை உடையவைகளாகவும் இருக்கிற எல்லா லோகத்தையும் சரீரமாக உடையவனாகையினால் அந்தந்த ரூபமாக நானேஇருக்கிறேன் என்று ஒன்றேன்கிற ஜ்ஞானத்தினால் அனுஸந்தாநம் செய்துகொண்டு என்னை உபாஸனம் செய்கிறார்கள். 19

பா] இப்படி பகவானை அனுபவிப்பது ஒன்றையே ஸுகமாக உடைய மஹாத்மாககளாகிய ஜ்ஞானிகளின் நடவடிக்கையைச்சொல்லி அவர்களுக்கே விஶேஷத்தைத் தெரிவிப்பதற்காகத் தெரியாதவர்களாய் காம்ய பலங்களை விரும்புகிறவர்களின் நடவடிக்கையைச் சொல்லுகிறார்—

𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌮𑌾𑌂 𑌸𑍋𑌮𑌪𑌾𑌃 𑌪𑍂𑌤𑌪𑌾𑌪𑌾
𑌯𑌜𑍍𑌞𑍈𑌰𑌿𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌨𑍍𑌤𑍇 ।
𑌤𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌲𑍋𑌕
𑌮𑌶𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌦𑌿𑌵𑌿 𑌦𑍇𑌵𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 ॥ 20
𑌤𑍇 𑌤𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌲𑍋𑌕𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌂
𑌕𑍍𑌷𑍀𑌣𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌂 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 ।
𑌏𑌵𑌂 𑌤𑍍𑌰𑌯𑍀𑌧𑌰𑍍𑌮𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾
𑌗𑌤𑌾𑌗𑌤𑌂 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑌾 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 ॥ 21

சொல்லுவது உசிதமாகையினால் இப்பொழுதிருப்பவை முதலியவைகளை அர்த்தமாகச் சொன்னபோதிலும் சேதனங்களையும் அசேதனங்களையும் விட்டுவிடவில்லை, இந்தவஸ்துக்களே அந்தந்ததசைகளையுடையவைகளாய்க் கொண்டு அந்தப் பதங்களுக்கு அர்த்தமாகிறபடியினால். அன்றிக்கே ‘எல்லா’ என்பது முதல் 1 ‘𑌅𑌹𑌂 𑌕𑍍𑌰𑌤𑍁𑌃’ என்றாரம்பித்துச்சொல்லப்பட்ட எல்லா ஶ்லோகங்களின் அர்த்தத்தைச் சொல்லியிருப்பதாக நினைத்துக் கொள்ளவேண்டியதாகவுமாம். எல்லாம அந்தப் பகவானுக்கு அதீனமாக இருக்கிறது என்று சொல்லி யிருப்பதை கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட உபாஸனத்தோடுசேர்க்கிறார்.—‘இப்படி அனேகவித’ என்றாரம்பித்து எல்லாவற்றையும் சரீரமாகஉடையவஸ்து ஒன்று என்பது இங்கே சொல்லப்படுகிறதேயல்லாமல்ப்ரளயதசையை அடைந்ததாய் பேர்ரூபம் இவைகளின் பிரிவு இல்லாத வஸ்து ஒன்றென்று சொல்லப்படவில்லை. கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஜ்ஞான யஜ்ஞம் இது என்று தெரிவிப்பதற்காக ‘ஜ்ஞானத்தினால் அனுஸந்தானம் செய்து கொண்டு’ என்று சொல்லப்பட்டது. 19

---

1 பகவத்கீதை 9-16.

ப-ரை] த்ரைவித்யா: ருக்யஜுஸ்ஸாம என்கிற மூன்று வேதங்களில் நிஷ்டையையுடையவர்கள், ஸோமபா: ஸோமலதையின் ரஸத்தைப் பானம் செய்தவர்களாய், பூதபாபா: போக்கப்பட்ட பாவங்களை யுடையவர்களாய், மாம் என்னை, யஜ்ஞை: யாகங்களினால், இஷ்ட்வா ஆராதனம் செய்து, ஸ்வர்கதிம் ஸ்வர்கலோகத்தையடைவதை, ப்ரார்த்தயந்தே ப்ரார்த்திக்கிறார்கள், தே அவர்கள், புண்யம் ஸுகமான, ஸுரேந்த்ரலோகம் தேவேந்திரனுடைய லோகத்தை, ஆஸாத்ய அடைந்து திவ்யான் ஸ்வர்கத்திலுண்டான, தேவபோகான் தேவதைகளாலனுபவிக்கக்கூடிய வஸ்துக்களை, திவி அந்த ஸ்வர்கலோகத்தில், அச்நந்தி அனுபவிக்கிறார்கள், தே அவர்கள், தம் அந்த, விசாலம் விசாலமான, ஸ்வர்கலோகம் ஸ்வர்கலோகத்தை, புக்த்வா அனுபவித்துவிட்டு, புண்யே புண்யம், க்ஷீணே நாசத்தை அடைந்தபொழுது, மர்த்யலோகம் மனுஷ்யலோகத்தை, விசந்தி அடைகிறார்கள், ஏவம் இப்படி, காமகாமா: காம்யபலங்களை விரும்புகிற, த்ரயீதர்மம் மூன்று வேதங்களிலும் சொல்லியிருக்கிற தர்மங்களை, அநுப்ரபந்நா: அடைந்தவர்கள், கதாகதம் போக்குவரத்தை, லபந்தே அடைகிறார்கள். 20-21

பா] ருக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் இம்மூன்றும் த்ரைவித்யம் என்னப்படுகிறது. இந்த த்ரிவித்யையில் நிஷ்டையையுடையவர்கள் த்ரைவித்யா: என்னப்படுகிறார்கள். வேதாந்தங்களில் நிஷ்டையையுடையவர்

தா] 'ஸததம் கீர்த்தயந்த:' என்றதற்குப் பிறகு 'த்ரைவித்யா:' என்பது முதலியது பொருத்தமில்லாதது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமாக முன்பின் க்ரந்தங்களில் தொடர்ந்து வருகிற இந்த ஸந்தர்ப்பத்தின் அர்த்தத்தைத் தெரிவித்துக்கொண்டு ஸங்கதியையும் சொல்லுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'பகவானை அனுபவிப்பது ஒன்றையே ஸுகமாக உடைய, மஹாத்மாக்களாகிய, ஜ்ஞானிகளுடைய' என்கிற மூன்று பதங்களினாலும் '1 மஹாத்மாநஸ்து' 'ஜ்ஞாநேந' 1 'அநந்யமநஸ:' என்று முன்பு சொன்னதை ஞாபகப்படுத்தி யிருக்கிறது. '2 அவஜாநந்தி' என்றிவை முதலியவைகளில் சொல்லியிருப்பதைவிட '1 மஹாத்மாநஸ்து' என்றிவை முதலியவை ஜ்ஞானிகளின் பக்தி செய்வது, விசேஷத்தைச் சொல்லுவதா யிருந்தபோதிலும் முதலியவை பக்தர்களின் ஸ்வரூபத்தை நிரூ நாமங்களைச் சொல்லுவது

1 பகவத்கீதை 9-13. 2 பகத்கீதை 9, 11.

பிக்கிறபடியினால்—'நடத்தையைச்சொல்லி' என்று சொல்லப்பட்டது. மேலே சொல்லப்போகிற எல்லையில்லாத மேன்மையையுடைய ப்ரயோஜனம், ஸுலபமாகச் செய்யக்கூடியதாயிருக்கை முதலியவைகளும் இப்படி நிரூபிக்கப்பட்ட ஸ்வரூபத்தையுடைய அந்த மஹாத்மாக்களுக்கே விசேஷமாக யிருக்கவேண்டியது என்றெண்ணி—'அவர்களுக்கே விசேஷத்தைக் காட்டுவதற்காக' என்று சொல்லப்பட்டது. 'தெரியாதவர்களாய்' என்பதினால் '2 மாமஜாநந்த:' என்று முன்பு சொல்லப்பட்டவர்களே இவ்விடத்தில் அல்பமான பலங்களையுடைய யாகம் முதலியவைகளாலும் விஸ்தாரமாகச் சொல்லப்படுகிறார்கள், என்று காட்டப்பட்டது. 'த்ரைவித்யா:' என்கிற இடத்தில் இருக்கிற ஒரு விதக்கணக்கின் ப்ரஸித்தியினாலும், 'த்ரயீதர்மம்' என்று மேலே சொல்லியிருப்பதைஅநுஸரித்தும் வித்யைகள் இன்னதென்றுகாட்டிக்கொண்டு பதத்தினர்த்தத்தைச் சொல்லுகிறார்—'ருக்வேதம்' என்றாரம்பித்து. இம்மூன்று வித்யைகளும் சேர்த்துச் சொல்லப்பட்டன, என்றறியவும் த்விகுஸமாஸமாகையினால் 'த்ரிவித்யம்' என்று ஒருமையும், நபும்ஸகலிங்கமும் ... ஒன்றன்பாலும் உண்டானது. அகாரத்தைக் கடைசியிலுடைய பதம் முடிவில்வந்தால் பெண்பாலாகச் சொல்லவேண்டும் என்பதற்கு பாத்திரம் முதலிய கணங்களில் சொல்லப்பட்ட பதங்களுக்கு அப்படியில்லை என்று சொல்லவேண்டும் என்று அபவாத சாஸ்த்ரம் உண்டு. '1 ததீதே தத்வேத' என்கிற ஸூத்ரத்தினால் 'அண்' என்னும் விகுதி வந்திருக்கிறது என்று நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'த்ரிவித்யையில் நிஷ்டையை யுடையவர்கள்' என்று. எல்லா வேதங்களையும் சொல்லுவதா யிருந்தால் விரோதம் வருகிறபடியினால் கர்மபாகத்தை மாத்திரம் சொல்லுகிறது என்று தெரிவிப்பதற்காக 'கேவலம்' என்னும் பதம். இதையே விசதப்படுத்துகிறார்—'வேதாந்தத்தில் நிஷ்டையை யுடையவர்களல்ல' என்று. இப்படி விஷயங்களை ஏற்படுத்துவதற்காக முன்பு சொல்லிய மஹாத்மாக்களும் வேதங்களின் ஒருபாகத்தில் நிஷ்டையை யுடையவர்கள் என்பதையும், எல்லாவேதங்களும் அந்தந்த வஸ்துக்களின் வழியாய் பகவானைச் சொல்லுகிறதென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், சொல்லிக்கொண்டும், உண்மையான ஜ்ஞானத்தினால் விசேஷபலமாகிய மோக்ஷ

1 அஷ்டாத்யாயீ. 4, 2, 59, தத் அத்தை, அதீதே ஓதுகிறான். தத்—அத்தை, வேத தெரிந்துகொள்ளுகிறான், என்கிற அர்த்தத்தில் அண் என்னும் ப்ரத்யயம் வரும் என்று சேர்த்துக்கொள்ளவும்.

களல்ல, வேதாந்தங்களில் நிஷ்டையையுடைய மஹாத்மாக்களோவென்னில் முன்பு சொல்லியபடி எல்லா வேதங்களினாலும் அறியத்தகுந்தவனாகிய என்னையே அறிந்துகொண்டு அதிகமான என்னிடத்தில் உண்டான ப்ரீதியினால் செய்யப்பட்ட நாம கீர்த்தனம் முதலியவைகளினாலும் ஜ்ஞானயஜ்ஞத்தினாலும்என்னையேப்ரயோஜனமாகஉடையவர்களாய்க்கொண்டேஎன்னையே உபாஸிக்கிறார்கள். மூன்றுவேதங்களில் நிஷ்டையையுடையவர்களோ வென்னில் வேதங்களில் சொல்லப்படுகிற கேவலம் இந்திரன் முதலியவர்களைக் குறித்துச்செய்யப்பட்ட யாகத்தில் மிகுதியான ஸோமத்

மென்கிற ப்ரயோஜனத்தில் ஆசையையும், அதின் உபாயத்தில் நிஷ்ட்டையையும் உடையவர்கள் என்கிற மாத்திரமாகிய விஶேஷத்தினால் வேறுஸித்தாந்தத்தில் நிஷ்ட்டையை யுடையவர்கள் என்கிற ப்ரமத்தையும் விலக்கிக்கொண்டும் கேவலம் வேதங்களில் சொல்லிய தர்மங்களில் நிஷ்ட்டையையுடையவர்களின் நடத்தையைச் சொல்லும்பொழுது அதினால் விலக்கப்பட்ட எல்லா ஆகாரங்களையும் காட்டுகிறார்.—‘ வேதாந்தங்களில் நிஷ்ட்டையையுடைய*’ என்றாரம்பித்து. இத்தால் வேறு ஸந்தர்பங்களில் நான்காவது வித்யை என்று மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய உபநிஷத்துக்களில் சொல்லப்படுகிற வித்யையே சொல்லப்படுகிறது, என்று தெரிவிக்கப்பட்டது அப்படியே ஜனகருக்கு யாஜ்ஞவல்க்யர் 1 ‘ஏஷா தே ந்வீக்ஷிகீ வித்யா சதுர்த்தீ ஸாம்பராயிகீ’ என்றும், 2 ‘சதுர்த்தீ ராஜஶார்தூல வித்யைஷா ஸாம்பராயிகீ’ என்றும் சொல்லியிருக்கிறார்.*‘வேதங்களில் சொல்லப்படுகிற’ *என்பதற்கு கர்மபாகத்தில் மாத்திரம் சொல்லப்படுகிற என்று அர்த்தம். மஹாத்மாக்களும் உபாஸனத்திற்கு அங்கமாகிய கர்மங்களில் ஸோமத்தைப்பானம் செய்வது உண்டாகையினால் அதை விலக்குவதற்காக* ‘கேவலம் இந்திரன் முதலியவர்களைக் குறித்துச் செய்யப்பட்ட யாகத்தில் மிகுதியான’ *என்று சொல்லப்பட்டது. யஜ்ஞத்தின் மிகுதியில்லாத ஸோமத்தைப்பானம் செய்தல் அதர்மமாதலால்*·யாகத்

1 *மஹாபாரதம், ஶாந்திபர்வம், மோக்ஷதர்மம்,* 3234,7 *தே உனக்கு* **ஏஷா** *இந்த, ஆன்வீக்ஷிகீ நீதியைச்சொல்லுகிற, வித்யா வித்யையும், சதுர்த்தீ நான்காவதாகிய, ஸாம்பராயிகீ மோக்ஷத்தைக்கொடுக்கக்கூடிய, வித்யையும் சொல்லப்படுகிறது, என்று சேர்த்துக்கொள்ளவும்.*

2 *மஹாபாரதம், ஶாந்திபர்வம், மோக்ஷதர்மம்,* 323, *ராஜசார்தூல ஓராஜஶ்ரேஷ்டனே,சதுர்த்தீ நான்காவதாகிய ஏஷா இந்த வித்யா—வித்யை,ஸாம்பராயிகீ மோக்ஷத்தைக்கொடுக்கக்கூடியது.*

தைப்பானம் செய்தவர்களாய் ஸ்வர்கம்முதலியவற்றை அடைவதற்குத் தடையான பாவங்களிலிருந்து விடுபட்டவர்களாய் கேவலம் இந்திரன் முதலியவர்களையே தேவதையாக உடையவை என்று தங்களால் நினைக்கப்பட்ட அந்த யாகங்களினுல் வாஸ்தவத்தில் அந்தத் தேவதைகளைச்சரீரமாக உடைய என்னை ஆராதனம் செய்து அப்படியிருக்கிற என்னைத்தெரிந்து கோள்ளாதவர்களாய் ஸ்வர்கத்தை அடைவதை ப்ரார்த்திக்கிருர்கள்.

தில் மிகுதியான' என்று சொல்லியிருக்கிறது 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌨𑍍𑌤𑍇 (ஸ்வர்கத்தை அடைவதை ப்ரார்த்திக்கிருர்கள்) என்று மேலே சொல்லப்போகிறபடியினுல் அதற்குத் தடையான பாவங்களைப்போக்குவது மாத்திரம் தான் இவ்விடத்தில் ஸோமபானத்திற்குச் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினுல்'ஸ்வர்கம் முதலியவற்றை அடைவதற்குத் தடையான பாவங்களிலிருந்து விடுபட்டவர்களாய்' என்று சொல்லப்பட்டது. இங்கு ஸ்வர்க என்னும் பதம் மற்றவைகளையும் குறிக்கிறது என்று தெரிவிப்பதற்காக 'முதலியவற்றை' என்னும்பதம். 𑌪𑍂𑌤𑌪𑌾𑌪𑌾𑌃 என்பதற்குப்பரிசுத்தம்செய்யப்பட்ட பாவங்களை யுடையவர்களாய் என்று அர்த்தம் பாபங்களுக்குப் பரிசுத்தம் செய்யப்பட்டிருக்கையாவது போக்கப்பட்டிருக்கை தான் அதுவே புருஷனுக்கும் பரிசுத்தம் செய்யப்பட்டிருக்கை என்கிற அபிப்ராயத்தினுல், 'பாவங்களிலிருந்து விடுபட்டவர்களாய்' என்று சொல்லப்பட்டது. ஸ்வர்கம் முதலியவற்றை விரும்புகிறவர்களுக்கு பகவானைப்பற்றி உண்மையான ஜ்ஞானமில்லை என்பதும், பகவானைக்குறித்து யாகங்களைச் செய்பவர்களுக்கு பகவானை அடைவது உண்டாகும் என்பதும், கேவலம் இந்திரன் முதலியவர்களைக் குறித்துச் செய்யும் யாகங்களும் வாஸ்தவத்தில் பகவானுக்கு ஆராதனங்கள் என்பதும், இப்படி இவர்கள் தெரிந்து கொள்ளாமையினுல் அவைகளுக்குப்பலம் பூர்த்தியாக உண்டாவதில்லை என்பதும் 1 '𑌯𑍇𑌽𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌕𑍍𑌤𑌾𑌃' என்பது முதல் மூன்று ஸ்லோகங்களில் சொல்லப்போகிற படியினுல் '𑌯𑌜𑍍𑌞𑍈𑌰𑌿𑌷𑍍𑌟𑍍𑌵𑌾' (யாகங்களினுல் என்னை ஆராதனம் செய்து) என்பது பகவானுடைய நினைவினுல் உண்டான வார்த்தையல்லது யாகம்செய்கிறவனுடைய நினைவினுலுண்டான வார்த்தையல்ல. என்று தெரிவிப்பதற்காக 'கேவலம் இந்திரன் முதலிய தேவதைகளையே' என்பது முதல் 'தேரிந்துகோள்ளாதவர்களாய்' என்பது வரையிலும் சொல்லப்பட்டது. யாகங்களை அனு

1 பகவத்கீதை, 9,23.

அவர்கள் துக்கத்தின் ஸம்பந்தமில்லாத தேவேந்திரனுடைய லோகத்தை அடைந்து அந்தந்த இடங்களில் ஸ்வர்கத்திலுண்டான தேவதைகளின்

ஷ்டிப்பது அதின் பலங்களில் ஆசையை முன்னிட்டதாக இருந்த போதிலும், யாகம் முடிந்த பிறகே பலத்தைக்கொடு, என்று அந்தத் தேவதையை ப்ரார்த்திக்கிறதாகையினால், 'யாகம்செய்து ப்ரார்த்திக்கிறார்கள்' என்று சொல்லி இருக்கிற க்ரமம் உசிதம்தான். புண்யகர்மங்களையும், அதினாலுண்டாகும் அபூர்வங்களையும் புண்யமான லோகம் என்று சேர்த்துச் சொல்வது பொருந்தாதாகையினாலும், பலமாக இருக்கும் தேவலோகம் பரிசுத்தமானது, என்றுசாஸ்திரங்களில் சொல்லப்படாமையினாலும், அதிக துக்கத்தின் ஸம்பந்தமில்லாதது, என்று சாஸ்திரத்தில் சொல்லி இருப்பதினாலும், இந்தப் புண்யம், என்னும் பதமானது புண்யத்தினால் போக்கக்கூடிய பாபத்தின் கார்யமான துக்கம் இல்லை, என்பதைக் காட்டுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'துக்கத்தின் ஸம்பந்தமில்லாத' என்று சொல்லப்பட்டது. அன்றிக்கே புண்யத்தினாலுண்டாக்கப்படும் ஸுகம் நிறைந்தது, என்று லக்ஷணையாக அர்த்தம் சொல்லில் துக்கமில்லை, என்பது தானாகவே ஏற்பட்டதாகவுமாம், புண்யங்களினாலுண்டாக்கக்கூடிய என்று அர்த்தம் சொல்லில் புனருக்தி என்னும் தோஷம்வரும், 'தேவேந்திரனுடைய லோகத்தை அடைந்து' என்று சொல்லி இருந்தபோதிலும் மறுபடியும் 'திவி' (ஸ்வர்கலோகத்தில்) என்று சொல்லி இருப்பது விசித்திரங்களான போகங்களுக்கு இடமாகிய அதின் உட்பிரிவான இடங்களைக் குறிக்கிறது என்பது உசிதம், என்று நினைத்து 'அந்தந்த இடங்களில்' என்று சொல்லப்பட்டது. 'திவ்யாந்' என்றது மோஹத்தை உண்டாக்கத்தக்கது என்று தெரியப்படுத்துவதற்காக, 'பூமியிலுண்டானபோகங்களைவிட உயர்ந்தவை'என்று சொல்லி இருக்கிறது. 'திவ்யாந்' ஸ்வர்கலோகத்திலுண்டான 'தைவஹோமாந்' தேவதைகளால் அனுபவிக்கக்கூடிய வஸ்துக்களை என்று அர்த்தம். தேவதைகளால் அனுபவிக்கக்கூடிய பசு, புரோடாசம் முதலிய பூமியிலுண்டான வஸ்துக்களை விலக்குவதற்காக திவ்யாந், என்னும் பதம் சொல்லி இருக்கிறதாகவுமாம். தேவதைகள். ஸ்வரூபத்தினாலும் காலத்தினாலும் அளவிடப்பட்ட தங்களுடைய போகங்களை அல்லவோ தங்களைக் குறித்து யாகம் செய்கிறவர்களுக்கும் கொடுக்கிறார்கள். 'அச்நந்தி' என்பதற்கு ஸாப்பிடுகிறார்கள்' என்று அர்த்தம், அதாவது அனுபவிக்கிறார்கள் என்று அர்த்தம். 'ஸுக்ஷா' என்றல்லவோ மேலேயும் சொல்லப்படு·

போகங்களை அனுபவிக்கிறார்கள். அவர்கள் அந்தவிசாலமான ஸ்வர்கலோகத்தை அனுபவித்து அதை அனுபவிப்பதற்குக் காரணமான புண்யம் நாசமடைந்தபொழுது மறுபடியும் மனுஷ்யலோகத்தை அடைகிறார்கள். இப்படி வேதாந்தங்களில் ஏற்பட்ட ஜ்ஞானமில்லாதவர்களாய் காம்யங்களான ஸ்வர்கம் முதலியவைகளில் ஆசையுள்ளவர்களாய் கேவலம் வேத

கிறது. 'விஸாலம்' என்பதினால் பூமியிலுண்டான ஸுகங்களைவிட அதிகமானது என்று காட்டி இருக்கிறது 'ஸ்வர்கலோகத்தை அனுபவித்து' என்பதற்கு ஸ்வர்கலோகத்திலுண்டான போகங்களை அனுபவித்து என்று அர்த்தம். ஸ்வர்கத்தை அனுபவிப்பதினால், ஸம்ஸாரபந்தத்தை உண்டாக்கக் கூடியமற்ற புண்யங்கள் நாஸத்தை அடைவதில்லை. கர்மங்களின் மிகுதியினால், உயர்ந்த ஜாதி முதலியவைகளை அடைவதும் ஸ்ருதியில் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'அதை அனுபவிப்பதற்குக் காரணமான' என்று சொல்லப்பட்டது. இத்தால் 1 'ஸ்வர்கேபி பாதபீதஸ்ய' என்றிவை முதலியது காட்டப்பட்டது. 'மர்த்யலோகம்' என்னும் பதத்தினால், பூலோகமும் அஸ்திரம் என்பது காட்டப்பட்டது 'ஏவம்' (இப்படி) என்கிற பதத்தில் அபிப்ராயத்திலேற்பட்ட காரணத்தினால் 'த்ரயீ' என்னும் பதத்தின் அர்த்தத்திற்குச் சுருக்கத்தையும், காம்யமான பலங்களை ஆசைப்படுவதற்குக் காரணத்தையும் காட்டுகிறார். 'இப்படி வேதாந்தங்களிலேற்பட்ட ஜ்ஞானமில்லாதவர்களாய்' என்று. இப்படி அனுவாதம் செய்ததும் ஸ்வரூபத்தில் மோக்ஷத்திற்குக் காரணமான தர்மமும் வேறு மாதிரியாக மாறுவதினால் திரும்பிவருவதற்குக் காரணமாகிறது, என்று தெரியப்படுத்துவதற்காக. 'காமகாமா:' என்னும் பதத்தில் முதலிலிருக்கும் காம என்னும் பதம் ஆசைப்படக்கூடிய வஸ்துக்களைச் சொல்லுகிறது. என்று சொல்லுகிறார்.—காம்யங்களான ஸ்வர்கம் முதலியவைகளில் ஆசையுள்ளவர்களாய், என்று மோக்ஷமும் பலமாகையினால், ஆசைப்படக்கூடியதாகையினாலே அதை விலக்குவதற்காக 'ஸ்வர்கம் முதலிய' என்னும் பதம். 'கேவலம்' என்னும் பதத்தினால். வேதாந்தங்களிலேற்பட்டதாய் இவைகளுக்கு அங்கியுமாகிய உத்தமமான தர்மம் இல்லை, என்று சொல்லி இருக்கிறது. 'கதம்' என்றால் போகுதல், 'ஆகதம்' திரும்பிவருதல். இத்தையே அடைகிறான்,

---

1 விஷ்ணுபுராணம், 6, 5, 50 ஸ்வர்கேபி ஸ்வர்கலோகத்திலும், பாதபீதஸ்ய விழுவதிலிருந்து பயந்தவனுக்கு, ஸுகமில்லை, என்று சேர்த்துக்கொள்ளவும்.

ங்களில் சொல்லிய தர்மங்களை அடைந்தவர்கள் போக்குவரத்தை அடைகிறார்கள்; அதாவது அல்பமும் அஸ்திரமுமான ஸ்வர்கம் முதலியவைகளை அனுபவித்துவிட்டு மறுபடிமறுபடி திரும்புகிறார்கள் என்றர்த்தம். 20-21

பா] மஹாத்மாக்களோ வெனில் எல்லையில்லாத ப்ரியமாகிய என்னுடைய த்யானத்தைச் செய்து, எல்லையில்லாத மேன்மையை உடைய ஆனந்தமாகிய என்னை அடைந்து, மறுபடியும் திரும்பிவருவதில்லை, என்று அவர்களுடைய விசேஷத்தைக காட்டுகிறார்—

𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌯𑍇 𑌜𑌨𑌾𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌵𑌹𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥ 22

ப-ரை] 𑌯𑍇 எந்த 𑌜𑌨𑌾𑌃 ஜனங்கள், 𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌃 வேறொரு ப்ரயோஜனத்தையும் உடையவர்களாக அல்லாமல், 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑌃 நினைத்துக்கொண்டு, 𑌮𑌾𑌂 என்னை, 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 பூர்த்தியாக உபாஸிக்கிறார்களோ, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 எப்பொழுதும் என்னுடன் சேர்ந்து கொண்டிருக்க வேண்டுமென்கிற ஆசையை உடைய, 𑌤𑍇𑌷𑌾𑌂 அவர்களுக்கு, 𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 என்னை அடைவதாகிய யோகத்தையும், அது நீடித்திருத்தலாகிய க்ஷேமத்தையும், 𑌅𑌹𑌮𑍍 நான், 𑌵𑌹𑌾𑌮𑌿 கொடுக்கிறேன். 22

என்று அர்த்தம். போகுதலும் திரும்பிவருதலும் மாத்திரம் தோஷமல்லவே, என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'அல்பமும்' என்று ஆரம்பித்து. அவைகளை அனுபவிக்கும் பொழுதும் மிகவும் அல்பமாகையினாலும். 1 '𑌪𑌶𑍁 எப்படியோ அப்படியே இவன் தேவதைகளுக்கு' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தில் சொல்லி இருக்கிற மாதிரியாகவும் இதைவிட மேலான ப்ரஹ்மா முதலியவர்களின் ஸுகத்தைத் தெரிந்துகொள்வதினாலும் துக்கமாக இருக்கிறது. அதுவும் அஸ்திரம் என்று தெரிந்துகொள்வதினால் அதிக துக்கமாக இருக்கிறது. அதற்கு அழிவு உண்டாகும் பொழுதோ வெனில் மிகவும் அதிக துக்கமாக இருக்கிறது. ஏற்றத்தைப்போல அடிக்கடித் திரும்பிவருவதினாலும் கர்பத்தில் வஸிப்பதினாலும்வ்யாதி நாசம்இவை முதலியவைகளினாலுண்டாகும் துக்கம் சொல்லவே முடியாது. இப்படி எண்ணிறந்ததாய் பரம்பரையாக நடந்துகொண்டு இருக்கிறது என்று தாத்பர்யம். 20-21

---

1 ப்ருஹதாரண்யகம், 3, 4, 10.

பா] வேறொரு ப்ரயோஜனத்தையுமுடைத்தாகாதவர்களாய், என்னை த்யானம் செய்யாவிடில் ஆத்மாவைத் தரிப்பதே கிடையாமையினால், என்னை த்யானம் செய்வதொன்றையே ப்ரயோஜனமாக உடையவர்களாய், என்னை. எந்த மஹாத்மாக்கள் த்யானம் செய்து கொண்டு எல்லாக் கல்யாண

தா] உபாயமே ஸாதகமாகயினாலும், ப்ரயோஜனம் அழிவில்லாததாகவும், எல்லையில்லாத ஆனந்தமாகவும் இருப்பதினாலும் மஹாத்மாக்களுக்குவிசேஷம் சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிறார்—'மஹாத்மாக்களோவெனில்' என்று ஆரம்பித்து. 'அநந்யா:'என்கிற விசேஷணத்தினால் த்யானம் எல்லையில்லாத ஸாதகம் என்பது ஸித்தித்தது. 'மாம்' (என்னை) முதலிய பதங்களினால் யோகக்ஷேமம் என்கிற பதத்தின் தாத்பர்யம் ஏற்பட்டது, 1 'யேப்யந்யதேவதா' என்று மேலே சொல்லப்படுகிறதை அநுஸரித்து இவ்விடத்திலும் வேறு தேவதைகளே தோன்றுகின்றன. ஆனாலும் கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட காம்ய கர்மங்களை விலக்கவேண்டியதாகையினால், இவ்விடத்தில் உபாயத்தோடு சேர்ந்ததும் அதைவிட வேறானதுமான பலத்தை விலக்குவதற்காக 'அநந்யா:' என்னும் பதம். ஆகையினாலேயே ஒன்று என்கிற அநுஸந்தானத்தைச் சொல்லுகிறது, என்பதும் யுக்தமல்ல, என்று காட்டுகிறார்—'வேறொரு ப்ரயோஜனத்தையு முடைத்தாகாதவர்ளாய்' என்று. அதின் காரணத்தைச் சொல்லுகிறார்—'என்னை த்யானம் செய்யாவிடில்' என்று. 'அநந்யாஶ்சிந்தயந்த:' என்று சேர்த்துச்சொல்லியிருப்பதினால், த்யானம் செய்வதைவிட வேறொரு ப்ரயோஜனமுமில்லை, என்று ஏற்பட்டது. ஒரு விசேஷணமுமில்லாத 'ஜநா:'என்னும் பதம் ஒருவிதமான மனிதர்களுடைய கூட்டத்தில் ப்ரயோகிக்கப்படுகிறபடியினால் அதை விலக்குவதற்காக இந்த ஸந்தர்ப்பத்தில் ஏற்பட்ட அர்த்தம்—'எந்த மஹாத்மாக்களாகிய ஜனங்கள்' என்று சொல்லப்பட்டது. அவர்களுக்கு அல்லவோ ஜன்மமடைந்ததின் ப்ரயோஜனமுண்டு, என்று தாத்பர்யம். 'பர்யுபாஸதே' என்கிற இடத்தில் ப்ரயோகிக்கப்பட்ட பரி என்னும் உபஸர்கம் வ்யர்த்தம் என்பது பொருந்தாதாகையினால், அறதகாக ஸர்வத: என்று பிரித்து எல்லாவிதத்தாலும், என்கிற தாத்பர்யத்தை வைத்துக்கொண்டு வேறு ப்ரமாணங்களிலேற்பட்ட விசேஷத்தைக் காட்டுகிறார்—'எல்லாக் கல்யாணக் குணங்

---

1 பகவத்கீதை, 9, 23.

குணங்களோடும் கூடியவனுகவும் எல்லா விபூதிகளையுமுடையவனுன என்னைக் குறைவில்லாமல் உபாஸிக்கிறுர்களோ, எப்பொழுதும் என்னுேடு சேர்ந்திருக்கவேண்டுமென்கிற ஆசையையுடைய அவர்களுக்கு, நான் என்னை அடைவதாகிய யோகத்தையும் திரும்பிவருதலில்லாமையாகிய க்ஷேமத்தையும் கொடுக்கிறேன். 22

𑌯𑍇 𑌽𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌕𑍍𑌤𑌾 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 |
𑌤𑍇𑌽𑌪𑌿 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌯𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 || 23

ப-ரை] 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 ஓ அர்ஜுன, 𑌯𑍇 𑌽𑌪𑌿 எவர்கள், 𑌅𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌕𑍍𑌤𑌾𑌃 இதர தேவதைகளிடத்தில் பக்தியுள்ளவர்களாய், 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 ஶ்ரத்தையோடு, 𑌅𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 கூடியவர்களாய், 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 யாகம் செய்கிறுர்களோ, 𑌤𑍇𑌽𑌪𑌿 அவர்களும், 𑌅𑌵𑌿𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 ஶாஸ்திரத்தைமுன்னிடாமல், 𑌮𑌾𑌮𑍇𑌵 என்னையே, 𑌯𑌜𑌨𑍍𑌤𑌿 யாகம் செய்கிறுர்கள். 23

களோடும்' என்று ஆரம்பித்து. 1 ப்ரதிகோபாஸனத்தை விலக்குவதற்காக இது சொல்லப்பட்டது என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'குறைவில்லாமல்' என்று. குணங்கள் விபூதிகள் இவைகளில் ஒன்றும் குறைவில்லாமல் என்று அர்த்தம். '𑌅𑌹𑌂' (நான்) என்பதினுல் மிகுந்த ஔதார்யம் ஸௌஶீல்யம் முதலிய குணங்கள் சொல்லப்படுகின்றன. மோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்கு அவர்கள் விரும்பாமலிருக்கத்தானே போகங்களைக் கொடுத்தபோதிலும் மோக்ஷத்திற்கு உபயோகமில்லாத தேஹயாத்ரை முதலிய யோகக்ஷேமங்கள் கொடுக்கவேண்டியவைகளல்லவே, என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'என்னை அடைவதாகிய' என்று ஆரம்பித்து. இதுவரையிலும் கிடைக்காத வஸ்து கிடைத்தல் யோகம். கிடைத்ததைக்காப்பாற்றுதல் க்ஷேமம். இவை இரண்டையும் சேர்த்துச் சொல்லி இருப்பதினுல் ஒருமையாகச் சொல்லியிருக்கிறது. '𑌵𑌹𑌾𑌮𑌿' என்பதற்குக் கொடுக்கிறேன், என்று அர்த்தம். 22

---

1 பகவானுக்கு சரீரங்களாகிய சேதனுசேதனங்களை மாத்திரம் உபாஸனம் செய்தல்.

பா] இந்த்ரன் முதலிய தேவதைகளிடத்தில் பக்தியை உடைய கேவலம் வேதத்தில் நிஷ்டையைஉடைய எவர்கள் ஸ்ரத்தையோடு கூடியவர்களாய் இந்தரன் முதலிய தேவதைகளைக் குறித்து யஜ்ஞம் செய்கிறார்களோ அவர்களுக்கும் முன்பு சொல்லிய ந்யாயத்தினால், எல்லாம் எனக்கு ஸரீரமாகையினால் என்னையே ஆத்மாவாக உடையவைகளாகையினாலும் இந்த்ரன் முதலிய பதங்களும் என்னையே சொல்லுகிறபடியினால், உண்மையில் என்னைக்குறித்தே யாகம் செய்கிறார்கள். ஆனால் விதியை முன்னிடாமல் யாகம் செய்கிறார்கள். இந்த்ரன் முதலிய தேவதைகளுக்குக் கர்மங்களில் ஆராதிக்கப்படுகிறபடியினால் ஸம்பந்த முண்டு என்று "நான்கு ஹோதாககளை உடைய கர்மங்கள் எந்தப் பகவான் ஆத்மாவாக இருக்கும்பொழுது தேவதைகளினால் பெருமையை அடைகின்றனவோ' என்று அர்த்தமுள்ள வாக்யம் முதலிய வேதாந்த வாக்யங்கள் எப்படி

தா] எல்லாத் தேவதைகளும் உமக்கு ஸரீரமாகையினால் 'தைவ விஷ்ணா ஈாஂ' என்று கீழே சொல்லியபடிக்கு உண்மையில அவைகள் உம்முடைய ஆராதனம் என்று தெரிந்துகொண்ட நீர் கேவலம் கர்மங்களைச் செய்தவர்களுக்கும் மோக்ஷமாகிய யோகக்ஷேமத்தை ஏன் கொடுப்பதில்லை. என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் இந்த இரண்டு ஸ்லோகங்களினால் சொல்லப்படுகிறது. 'து' என்பது ஆக்ஷேபத்திற்கு பரிஹாரத்தைக் காட்டுகிறது. 'அந்யதேவதாபக்தா:' என்பதின் சேர்க்கையினால் ஏற்பட்டது 'இந்த்ரன் முதலிய தேவதைகளை' என்பது. 'முன்பு சொல்லிய ந்யாயத்தினால்' என்பதற்கு '1 மயி ஸர்வம்' என்றிவை முதலிய இடங்களிலும், இந்த அத்யாயத்திலும் '2 மயா ததமிதம் ஸர்வம்' என்றிவை முதலிய இடங்களிலும். என்று தாத்பர்யம். 'என்னைக்குறித்தே யாகம் செய்கிறார்கள்' என்கிற வரையிலும் ஆக்ஷேபத்தை அனுவாதம் செய்கிறது. மேல்பாகம் விதிக்கிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஆனால்' என்று. விதி, தன்னைப்பற்றிய ஞானத்தின் வழியாய் எந்த அனுஷ்டானத்திற்குக் காரணமாக இருக்கிறதோ அது 'விதிபூர்வகம்' (விதியை முன்னிட்டது). அப்படிக் கல்லாதது 'அவிதிபூர்வகம்' (விதியை முன்னிடாதது). ஸாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட கர்மங்களுக்கு விதியை முன்னிடாமை எப்படிப் பொருந்தும், என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்— 'இந்த்ரன் முதலிய தேவதைகளுக்கு' என்று ஆரம்பித்து. 'அதை முன்

1 பகவத்கீதை, 7, 7. 2 பகவத்கீதை, 9, 4.

விதிக்கின்றனவோ அதை முன்னிட்டுக்கொண்டு யாகம் செய்கிறதில்லை. வேதாந்த வாக்யங்கள் பகவானுக்கு ஶரீரமாக இருக்கிற இந்த்ரன் முதலிய தேவதைகளே ஆராதிக்கப்படுகிறார்கள் என்பதைவிதித்துக்கொண்டு அவைகளுக்கு ஆத்மாவாகிய பகவானே நேரில் ஆராதிக்கத் தகுந்தவன் என்பதை விதிக்கின்றன. நான்கு ஹோதாக்களை உடைய கர்மங்களாவன அக்னிஹோத்ரம், தர்ஶ பூர்ணமாஸம் முதலிய கர்மங்கள். எந்தப் பரமாத்மா அந்தர்யாமியாக இருந்தால் மட்டும் அவனுக்கு ஶரீரமாகிய இந்த்ரன் முதலிய தேவதைகளினால் பெருமையை அடைகின்றனவோ,

---

னிட்டுக்கொண்டு' என்பதற்கு, *அப்படிப்பட்ட விதியின் ஞானத்தை முன்னிட்டுக்கொண்டு, என்று அர்த்தம்.* எப்படி விதிக்கின்றனவோ *என்று கீழ்ச் சொல்லியதை விவரிக்கிறார்*—'வேதாந்த வாக்யங்கள்' *என்று ஆரம்பித்து. இந்த்ரன் முதலிய தேவதைகள் ஆராதிக்கப்படுகிறார்கள் என்பது மாத்திரம் கர்மபாகத்திற் சொல்லப்பட்டது. அந்தத்தேவதைகளின் உண்மையான ஸ்வரூபம் வேதாந்தங்களில் சொல்லப்படுகிறது; ஆகையினால் விரோதமில்லை.* 'நேரில்' *என்பதற்கு ஒரு காரணமுமில்லாமல் என்று அர்த்தம். அன்றிக்கே முக்யம் என்று ஆகவுமாம். ஹவிஸ்ஸுக்கு தேவதையாகிய பகவானுக்குவிஶேஷணமாகையினால்,இந்த்ரன்முதலியவர்களும் தேவதைகளாகச்சேர்க்கப்பட்டார்கள். ப்ரதர்தனவித்யை முதலியவைகளில் எப்படி உபாஸிக்கத் தகுந்தவர்களாகச் சேர்க்கப்பட்டார்களோ அப்படியே, என்றுதாத்பர்யம். கீழ்ச் சொல்லிய ஶ்ருதிவாக்யத்திற்கு இதுவே அர்த்தம் என்பதெப்படி, என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்*—நான்குஹோதாக்களை உடைய கர்மங்களாவன'*என்று ஆரம்பித்து. இது உபலக்ஷணம் என்று நினைத்து* 'அக்னிஹோத்ரம்தர்ஶபூர்ணமாஸம்' *என்று சொல்லப்பட்டது.* "1 *எல்லா ஜனங்களுக்கும் உள்ளே ப்ரவேஶித்து நியமிக்கிறவன், ஆகையினால் எல்லாவற்றிற்கும் ஆத்மா" என்றிவை முதலிய இடங்களில் ப்ரஸித்தமான* 'யத்' *என்னும் பதத்தின் அர்த்தம் சொல்லப்படுகிறது,* 'எந்தப் பரமாத்மா' *என்று ஆரம்பித்து* "2 *எவனுக்கு ஸூர்யன் ஶரீரமோ" என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளை நினைத்துக்கொண்டு,* 'அவனுக்கு ஶரீரமாகிய' *என்றிவை முதலியது சொல்லப்பட்டது. கர்மங்களுக்குத் தேவதைகளினால் உண்டாக்கப்படுகிற பெருமையாவது அவர்களுக்கு ஆராதனம் என்கிற மேன்மைதான். அதாவது கடைசியில் பலத்திற்கு ஸாதன*

---

1 *யஜுர்வேதம், ஆரணம்,* 3, 10, 2. *ப்ரஹதாரண்யகம்* 5, 7, 9.

அதாவது இந்தக் கர்மங்கள் இந்த்ரன் முதலிய தேவதைகளுக்கு ஆராதனங்கள், என்கிற இந்தப் பெருமையை அடைகின்றனவோ, என்று அர்த்தம். 23

பா] ஆகையினால் மூன்று வேதங்களிலும் நிஷ்டையை உடையவர்கள் இந்தக் கர்மங்கள் இந்த்ரன் முதலியவர்களை ஶரீரமாக உடைய பகவானுடைய ஆராதனங்கள் ஆராதிக்கப்படுகிறவனும் அந்தப்பகவானே. என்று தெரிந்துகொள்வதில்லை. அவர்கள் அல்பபலத்தை அடைந்தவர்களாயும் நழுவுதலையே ஸ்வபாவமாக உடைவர்களாகவுமாகிறார்கள். இத்தையே சொல்லுகிறார்—

அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச |
ந து மாமபிஜாநந்தி தத்த்வேநாதஶ்ச்யவந்தி தே || 24

ப-ரை] அஹம்ஹி நானல்லவோ, ஸர்வயஜ்ஞாநாம் எல்லா யஜ்ஞங்களுக்கும், போக்தா ச அனுபவிக்கிறவனும், ப்ரபுரேவ ச பலத்தைக் கொடுக்கிறவனும், மாம் என்னை, தத்த்வேந இவ்விதமாக, நாபிஜாநந்தி தெரிந்துகொள்வதில்லை, அத: ஆகையினால், தே அவர்கள் ச்யவந்தி நழுவுகிறார்கள். 24

பா] 'ப்ரபுரேவ ச' என்பதற்கு அந்தந்தக் கர்மங்களிலும் பலத்தைக்

மாகும் தன்மையிலேயே முடிவுபெறுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்.—'அதாவது' என்று ஆரம்பித்து. 23

தா] 'அஹம்ஹி' என்கிற ஶ்லோகம், விதியை முன்னிடாதது, என்பதை விவரிக்கிறது என்பதையும், அப்படிப்பட்ட கர்மம் மிகவும் ப்ரயோஜனமற்றதோ, என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரிக்கிறது, என்பதையும் காட்டுகிறார்—'ஆகையினால்' என்று ஆரம்பித்து. 'ஸர்வ' என்னும் பதத்தினால் இந்த்ரன் முதலியவர்களைக் குறித்துச் செய்கிறவர்களுக்கும் என்று தாத்பர்யம். 'ஆராதிக்கப்படுகிறவனும்' என்று 'போக்தா ச' என்கிற பதத்தின் தாத்பர்யத்தைச் சொல்லி இருக்கிறது. 'ச்யவந்தி' (நழுவுகிறார்கள்) என்பதினால் வேறோரிடத்திலிருந்து என்று ஏற்பட்டது. அந்த இடமும் அந்தந்தக் கர்மங்களினா லுண்டாக்கப்படுகிற அஸ்திரமான பலமே என்பது 'யாந்தி' என்கிற மேல் ஶ்லோகத்தினாலும் வேறு ப்ரமாணங்களினாலும் ஏற்பட்டது. அத்தையே சொல்லுகிறார். 'அல்பபலத்தை' என்று ஆரம்பித்து. பலம் அல்பமாக இருக்கை

கொடுக்கிறவனும் நானே, என்று அர்த்தம். 24

பா] அஹோ இது பெரிய விசித்திரம்? எது வென்னில் ஒரே கர்மத்தில் இருப்பவர்கள் ஸங்கல்பம் மாத்ரம் வேறுபட்டதினாலேயே சிலர் மிகவும் அல்பமான பலத்தை அடைந்தவர்களாயும் நழுவுதலை அடையும் ஸ்வபாவமுள்ளவர்களாயும் ஆகிறார்கள், சிலர் எல்லை இல்லாதமேன்மையை உடைய ஆனந்தமான பகவானை அடைதலாகிய பலத்தை அடைந்தவர்களாகவும், திரும்பிவராதவர்களாகவும் ஆகிறார்கள், என்கிற இது, என்று சொல்லுகிறார்—

யாந்தி தேவவ்ரதா தேவாந் பித்ரூந் யாந்தி பித்ருவ்ரதா: ।
பூதாநி யாந்தி பூதேஜ்யா: யாந்தி மத்யாஜிநோऽபி மாம் ॥ 25

ப-ரை] தேவவ்ரதா: தேவதைகளை ஆராதனம் செய்கிறோம் என்கிறஸங்கல்பமுடையவர்கள், தேவாந் தேவதைகளை, யாந்தி அடைகிறார்கள், பித்ருவ்ரதா: பித்ருக்களை ஆராதனம் செய்கிறோம் என்கிற ஸங்கல்பமுடையவர்கள், பித்ரூந் பித்ருக்களை, யாந்தி அடைகிறார்கள், பூதேஜ்யா: பூதங்களைக்குறித்து யாகம் செய்கிறவர்கள், பூதாநி பூதங்களை, யாந்தி அடைகிறார்கள், மத்யாஜிந: என்னைக்குறித்து யாகம் செய்கிறவர்களும் மாம் என்னை, யாந்தி அடைகிறார்கள். 25

யாவது. இடத்தினாலும், காலத்தினாலும், ஸ்வரூபத்தினாலும். ஆகையினால் அதை அடைந்தவர்களுக்கு, நழுவுதலை அடையும் ஸ்வபாவத்தை உடைத்தாய் இருக்கை. இவ்விடத்தில் 'ப்ரபு:' என்னும் பதம் 'ப்ரதிஷ்டாப்ய ப்ரபு:' என்கிற இடங்களிலேபோல நியமிக்கிறவன், என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது. என்பதை விலக்குவதற்காக இவ்விடத்திற்குப் பொருத்தமுள்ள அர்த்தத்தைச் சொல்லுகிறார்— 'அந்தந்தக் கர்மங்களிலும்' என்று ஆரம்பித்து. ஸூத்ரமும், 1 'பலமத உபபத்தே:' என்றுசொல்லி இருக்கிறது. எப்படி இந்த்ரன் முதலியவர்களுக்கு ஆராதனமாகச் செய்தபோதிலும் அந்தந்தக்கர்மங்களிலும் பலத்தைக் கொடுக்கிறவன் நானேயோ, அப்படி என்னுடைய ஆராதனத்தில் பலத்தைக்கொடுக்கிறவன் வேறொருவனும் இல்லை, என்று 'ச' என்பதின் அர்த்தம். 24

---

1 ஶாரீரகஸூத்ரம், 3, 2, 37, அத:—இந்தப்பகவானிடத்திலிருந்து, பலம் ப்ரயோஜனம் (கிடைக்கிறது) உபபத்தே:—யுக்திக்குப் பொருந்தி இருக்கிறபடியினால்.

பா] இங்கே 'வ்ருதா:' என்னும் பதம் ஸங்கல்பத்தைச் சொல்லுகிறது. எவர்கள் தர்ஶபூர்ணமாஸம் முதலிய கர்மங்களினால், இந்த்ரன் முதலிய வர்களை யாகம் செய்கிறோம், என்று, இந்த்ரன் முதலியவர்களைக் குறித்து யாகம் செய்வதில் ஸங்கல்பமுடையவர்களோ, அவர்கள் இந்த்ரன் முதலிய வர்களை அடைகிறார்கள். எவர்கள் பித்ரு யஜ்ஞம் முதலியவைகளினால் பித்ருக்களைக் குறித்து யாகம் செய்கிறோம் என்று பித்ருக்களைக்குறித்து யாகம் செய்ய ஸங்கல்பமுடையவர்களோ, அவர்கள் பித்ருக்களை அடைகிறார்கள். எவர்கள் யக்ஷர் ராக்ஷஸர்கள் பிசாசங்கள் முதலிய பூதங்களைக் குறித்துயாகம் செய்கிறோம் என்று பூதங்களைக்குறித்து யாகம் செய்வதில் ஸங்கல்பமுடையவர்களோ, அவர்கள் பூதங்களை அடைகிறார்கள். எவர்கள் அந்த யஜ்ஞங்களினாலேயே தேவதைகள் பித்ருக்கள் பூதங்கள் இவைகளை

தா] ஒரே கர்மத்திற்கு போகம் மோக்ஷங்களாகிய விருத்தங்களான பலங்களுக்கு ஸாதனமாக இருக்கை எப்படி ஸம்பவிக்கும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமாக, ஸங்கல்பம் என்கிற பெயரை உடைய ஒத்தாஸைக் காரணம் விசித்திரமாகையினால், அது பொருந்தும், என்று நினைத்து ப்ரயோஜனங்களின் வ்யத்யாஸம் இந்த ஶ்லோகத்தினால் காட்டபபடுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்— 'அஹோ இது பெரிய விசித்திரம்' என்று ஆரம்பித்து. ஸங்கல்பம் வெவ்வேறாக இருப்பதினால், விசித்திரங்களான பலங்களுக்கு ஸாதனமாக இருக்கை 1 ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்களிலும் ஸித்தமாக ஏற்பட்டிருக்கிறது. 'வ்ருதா:' என்னும்பதம் ஸங்கல்பத்தைச சொல்லு கிறது, என்பதற்கு இவ்விடத்தில் ஸங்கல்பம் வெவ்வேறாக இருப்பதி னால் அல்லவோ பலம் வெவ்வேறாக இருக்கிறது, என்று தாத்பர்யம். 'தேவவ்ரதா:' என்றிவை முதலியஇடங்களில் யாகமும், 'ஸ்ருதேஜ்யா:' என்கிற இடத்தில் ஸங்கல்பமும் வேண்டி இருக்கிறபடியினாலே சேர்க்கப்பட்டது. இவ்விடத்தில் 'ஸ்ருத' என்னும் பதம் ப்ராணிகளைச் சொல்லுகிறது, என்பதை விலக்கி, ரஜோகுணம் மேலிட்டவர்களினாலும் தமோகுணம் மேலிட்டவர்களினாலும், ஆராதனம் செய்யத்தகுந்தவைகளின் கூட்டத்தைக்காட்டுகிறது, என்று தெரிவிக்கிறதற்காக 'யக்ஷர்' என்றிவை முதலியது சொல்லப்பட்டது. தேவதைகளைக்குறித்து யாகம் செய்தல, பித்ருக்களைக்குறித்து யாகம் செய்தல் முதலியவைகளைப் போல, இவ்விடத்தில் கர்மங்களின் ஸ்வரூபத்திற்கே பேதம் இல்லை, என்பது 'அந்த யஜ்ஞங்களினு

---

1 ஜ்யோதிஷ்டோமம் எல்லாப் பலங்களையும் கொடுக்கும் என்று ஶாஸ்திரங்களிலேற்பட்டிருப்பதினால், எவன் எந்தப் பலத்திற்காக, என்று ஸங்கல்பித்துக் கொள்ளுகிறானோ அந்தப் பலமுண்டாகிறது என்று ஏற்பட்டது,

ஶரீரமாக உடையவனுகவும், பரமாத்மாவாகவும், பகவானுகவு மிருக்கிற வாஸுதேவனை ஆராதனம் செய்கிறேம் என்று எண்ணி என்னை ஆராதனம் செய்கிறுர்களோ, என்னைக் குறித்து யாகம் செய்கிற அவர்கள், என்னையே அடைகிறுர்கள. தேவதை முதலியவர்களை ஆராதனம் செய்கிறேம் என்கிற ஸங்கல்பமுடையவர்கள், தேவதை முதலியவர்களை அடைந்து அவர்களோடேகூட அல்பமான ஸுகத்தை அனுபவித்து அவர்கள் நாஶமடையும் காலத்தில் அவர்களோடேகூட நாஶமடைந்தவர்களாகிறுர்கள். என்னைக் குறித்து யாகம் செய்கிறவர்களோ வெனில், ஆத்யந்தமில்லாதவனுயும், எல்லாம் தெரிந்தவனுயும், ஸத்யஸங்கல்பனுயும், எல்லையில்லாத மேன்மையை உடைய, எண்ணிறந்த கல்யாணகுணங்

லேயே' என்று சொல்லப்பட்டது. வேறு வாக்யங்களினுல் விதிக்கப்பட்ட தேவதைகளைக்குறித்த யாகம் முதலியவைகளை அனுவாதம் செய்துகொண்டு இவ்விடத்தில் அவைகளுக்கு வேறே ப்ரயோஜனம் காட்டப்படுகிறதே யல்லாமல், ஜ்யோதிஷ்டோமம் முதலியவைகளை விதிக்கிற வாக்யங்களைப்போல் ப்ரயோஜனத்திற்காகப் புதிதாய் உபாயம் விதிக்கப்படுகிறதில்லை, என்று தெரிவிப்பதற்காக, எவர்கள், அவர்கள், என்கிற பதங்களைச் சேர்த்துகொண்டு வ்யாக்யானம் செய்யப்பட்டது. எவர்களுக்கு ஸங்கல்பம்தேவதைகளிடத்திலேயே அவர்கள் தேவவ்ருதர் என்று சொல்லப்படுகிறுர்கள். எவர்களுடைய யாகங்கள் பூதங்களைக்குறித்தோ அவர்கள் பூதேஜ்யர் என்று சொல்லப்படுகிறுர்கள் அவரவர்களினுல் அடையத்தகுந்தவர்களின் வ்யத்யாஸத்தைச் சொல்லி இருப்பது, அவரவர்களுக்கு ஸமமான இடம், காலம் போகம் இவைகளைச சொல்லுவதற்காக, என்று காட்டுகிறுர்.—தேவதை முதலியவர்கள்' என்று ஆரம்பித்து. 'ஆத்யந்தமில்லாத' என்பதினுல், அடையத்தகுந்த வஸ்து அநித்யம் என்னும் காரணத்தைக கொண்டு திரும்பிவருதல் இல்லை, என்று பரிஹரித்திருக்கிறது. 'எல்லாம் தெரிந்தவனுயும்' என்பதினுல், விரோதிகளைத் தெரிந்துகொள்ளவில்லை என்கிற காரணத்தைக்கொண்டும், ஸத்யஸங்கல்பனுயும், என்பதினுல், அஶக்தியைக் காரணமாகக்கொண்டும், பகவான் ஸ்வதந்த்ரன் என்பதினுல் ஸந்தேஹிக்கக்கூடியதுமான திரும்பிவருதல் இல்லை, என்றுதெரிவித்திருககிறது. பக்தர்களைத்திருப்பி அனுபபமாட்டேன்' என்கிற ஸங்கல்பமும் ஸத்யம் தான் என்று தாத்பர்யம். ஸ்வரூபத்தினுல்அல்பமாக இருக்கையினுல், உண்டாகக்கூடிய ஸுகமும் அல்பம், என்கிற

களின் கூட்டங்களுக்கு இருப்பிடமாயும், எல்லையில்லாத மேன்மையை உடைய ஆனந்தமாயு மிருக்கிற என்னை அடைந்து மறுபடியும் திரும்புவ 25
தில்லை, என்று அர்த்தம்.

பா] என்னை ஆராதிப்பவர்களுக்கு இந்த விஷேமும் இருக்கிறது, என்று சொல்லுகிறார்—

𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿।
𑌤𑌦𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃॥ 26

ப-ரை] 𑌪𑌤𑍍𑌰𑌂 இலையையாவது, 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 பூவையாவது, 𑌫𑌲𑌂 பழத்தையாவது, 𑌤𑍋𑌯𑌂 ஜலத்தையாவது, 𑌯𑌃 எவன், 𑌮𑍇 எனக்கு, 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 பக்தியினால், 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 கொடுக்கிறானோ, 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌂 பக்தியினால் ஸமர்ப்பிக்கப்பட்ட, 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 பரிஶுத்தமான மன தை உடையவனுடைய, 𑌤𑌤𑍍 அந்த வஸ்துவை, 𑌅𑌹𑌂 நான், 𑌅𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 ஸாப்பிடுகிறேன். 26

பா] எல்லோருக்கும் ஸுலபமாகக் கிடைக்கக்கூடிய இலையையாவது, பூவையாவது, பழத்தையாவது, ஜலத்தையாவது எவன் பக்தியினால்

ஸந்தேஹத்தை விலக்குவதற்காக, 'எல்லையில்லாத' என்று ஆரம்பித்து இரண்டு விஶேஷணங்கள் சொல்லப்பட்டன. இதனால் வேறு வஸ்துக் களில் ஆஶையுண்டாகாமைக்கும் காரணமாதலினால், தன்னுடைய இஷ்டத்தைக் காரணமாகக்கொண்டும் திரும்பிவருதல் இல்லை, என்று விலக்கப்பட்டது. 25

தா] வருத்தம் ஸமமாக இருந்தபோதிலும் பரயோஜனத்தில் வ்யத்யாஸம் சொல்லப்பட்டது. பிறகு உபாயத்தில் வ்யத்யாஸம் சொல்லப் படுகிறது, என்று சொல்லுகிறார்—'என்னை ஆராதிப்பவர்களுக்கு' என்று ஆரம்பித்து. என்னை ஆராதனம் செய்தலையே ஸ்வபாவமாக உடைய வர்களுக்கு, என்று அர்த்தம். 'இதுவும்' என்பதற்கு உபாஸிக்கப்படும் வஸ்து அதிக ஸுலபமாக இருப்பதினாலுண்டாகிய உபாயம் ஸுலப மாக செய்யக்கூடியதாய் இருக்கையாகிற இதுவும் என்று அர்த்தம். இலை, பூ, பழம், இவைகளுக்குள் முதலில் சொல்லப்பட்டதினால் பின் னாலே சொல்லப்பட்டது உண்டாக்கப்படுகிறபடியினால், வரிசையாகச் சொல்லப்பட்டது. அவைகளுக்குள் அந்தந்தக் காலத்திற்குத் தக்கபடி ஸம்பவிக்கக்கூடிய ஏதாவதொன்று கிடைக்கும் என்று தாத்பர்யம். பத்ரம் முதலிய பதங்களை ஒரே பதமாகச் சேர்த்துச் சொல்லாமையி

னாலும், வ முதலியவை இல்லாமையினாலும் ஒவ்வொன்றே போதுமானது என்று காட்டப்பட்டது. இதை ப்ரகாசப்படுத்துவதற்காக 'இலையையுமாவது' என்பது முதல் சொல்லப்பட்டது. ஒவ்வொன்றினாலேயே பகவான் ஸந்தோஷத்தை அடைகிறான் என்றல்லவோ 1"அந்யத் பூர்ணாதபாம் கும்பாத் அந்யத் பாதாவநேஜநாத் । அந்யத் குஶலஸம்ப்ரஶ்நாத் நசேச்சதி ஜநார்தந:॥" என்கிற வசனத்தில் சொல்லப்படுகிறது. மற்றொன்றுமில்லாவிட்டாலும் ஜலம் ஸுலபமாகக்கிடைக்கக்கூடியது என்கிற அபிப்ராயத்தினால் அத்தைக் கடைசியில் சொல்லி இருக்கிறது. இது பொருள் செலவு முதலியவைகளினால் ஸம்பாதிக்கக்கூடியதாகையினால் தரித்திரர்களுக்குக் கிடைக்கத்தகாதது, என்பதில்லை, என்கிற அபிப்பிராயத்தினால், எல்லோருக்கும் ஸுலபமாகக் கிடைக்கக்கூடிய, என்று சொல்லப்பட்டது. வேறு இடத்திலும் 2 "பத்ரேஷு புஷ்பேஷு பலேஷு தோயேஷ்வக்ரீதலப்யேஷு ஸதைவ ஸத்ஸு । பக்த்யேகலப்யே புருஷே புராணே முக்த்யை கிமர்த்தம் க்ரியதே ந யத்ந:॥" என்று சொல்லுகிறார்கள். 'ய:' (எவன்) என்று பொதுவாகச்சொல்லியிருப்பதினால், அபராதம் செய்தவன், அபராதம் செய்யாதவன், மூடன், பண்டிதன் முதலிய வ்யத்யாஸங்களை நான் பார்ப்பதில்லை என்றபிப்ராயம். 3 'யேऽபி ஸ்யு: பாபயோநய: । ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா ஶூத்ரா:' என்றிவை முதலியது மேலே சொல்லப்போகிறாரல்லவா? 'அஶ்நாமி' என்பதினால் த்ருஷ்டத்திலாவது, அத்ருஷ்டத்திலாவது வரும் தோஷ

1, மஹாபாரதம், உத்யோக பர்வம், 87, 13 ஜநார்தந:-பகவான், பூர்ணாத் நிறைந்த, அபாம் கும்பாத் அந்யத் தண்ணீர்க்குடத்தைத் தவிர வேறொன்றையும் (அதாவது பூர்ண கும்பம்கொண்டு எதிர்வருதல் தவிரவேறொன்றையும் என்று அர்த்தம்) பாதாவநே ஜநாத் அந்யத் திருவடிகளை அலம்புதல் தவிரவேறொன்றையும், குஶலஸம் ப்ரஶ்நாத் அந்யத் குஶலப்ரஶ்னம் பண்ணுதல் தவிர வேறொன்றையும், நேச்சதி விரும்புவதில்லை.

2 கருடபுராணம், பூர்வகண்டம், 219,34 அக்ரீதலப்யேஷு விலைக்குவாங்காமல் கிடைக்கக்கூடிய, பத்ரேஷு இலைகள், புஷ்பேஷு பூக்கள், பலேஷு பழங்கள், தோயேஷு ஜலங்களும், ஸதைவ எப்பொழுதும் ஸத்ஸு இருக்கும்பொழுது பக்த்யேகலப்யே பக்தி ஒன்றினாலேயே அடையக்கூடிய, புராணே அனாதியான புருஷே பகவான், ஸத்யபி இருக்கும்பொழுதும், கிமர்த்தம் ஏன் முக்த்யை மோக்ஷத்திற்காக, யத்ந:-ப்ரயத்தினம், நக்ரியதே செய்யப்படுகிறதில்லை.

3 பகவத்கீதை 9-32.

எனக்குக்கொடுக்கிறானோ, அதாவது அதிகமாகிய என்னிடத்திலுண்டான ப்ரீதியினால், அவைகளை ஸமர்ப்பித்தால் அல்லது ஆத்மதாரணத்தையே அடையாதவனாகையினால் அவைகளை ஸமர்ப்பிப்பதொன்றையே ப்ரயோஜனத்தைப் பரிஹரிப்பது, மற்றொரு ப்ரயோஜனம் இவைகளுக்குக் காரணமாக என்பது விலக்கப்பட்டது, இத்தையே ப்ரகாசப்படுத்துகிறார்— 'அதிகமாகிய என்னிடத்திலுண்டான ப்ரீதியினால்' என்று. "ப்ரயதாத்மந:" என்கிற பதத்திற்கு வ்யாக்யானம்செய்கிறார்—அவைகளை 'ஸமர்ப்பிப்பதொன்றையே' என்று ஆரம்பித்து 1 "தஸ்ய தாம்ரதலௌ தாத சரணௌ ஸுப்ரதிஷ்டிதௌ । ஸுஜாதம்ருதுரக்தாபிரங்குலீபிரலங்க்ருதௌ ॥" "ப்ரயதேந மயா மூர்த்நா க்ருஹீதாவபிவந்திதௌ ॥" என்றிவை முதலிய விடங்களிலே போல வேறுப்ரயோஜனங்களிலாசையில்லாமையாகிற அஶுத்தி யில்லாமையே இங்குப் பரிசுத்தமாக இருத்தல், என்று அர்த்தம். புண்யகர்மங்களிலும் ப்ரயோஜனத்திலாசையே மனஸ்ஸுக்கு அஶுத்தி. அதையும் 2 "தபோ நகல்கோऽத்யயநம் நகல்க: ஸ்வாபாவிகோ வேதவிதிர் நகல்க: । ப்ரஸஹ்ய வித்தாஹரணம் நகல்க: தாந்யேவ பாவோபஹதாநி கல்க: ॥" என்று சொன்னார்கள். "பக்த்யுபஹ்ருதம்" (பக்தியினால் ஸமர்ப்பிக்கப்பட்ட) என்று மறுபடியும் சொல்லியிருப்பது பகவானால் ஆதரிக்கத்தகுந்ததாக இருப்பதற்குக்காரணம் இதுவே, என்று தெரிவிப்பதற்காக அப்படியே 3 "அண்வப்யுபஹ்ரு

1 தஸ்ய அந்தப்பகவானுடைய, தாம்ரதலௌ சிவந்த உள்ளங்கால்களை உடைய ஸுப்ரதிஷ்டிதௌ நன்றாக அமைக்கப்பட்ட, ஸுஜாதம்ருதுரக்தாபி: அழகாகவும், ம்ருதுவாகவும், சிவந்துமிருக்கிற, அங்குலீபி:-விரல்களினால், அலங்க்ருதௌ அலங்கரிக்கப்பட்ட, சரணௌ திருவடிகள், ப்ரயதேந பரிஶுத்தனாக இக்கிற மயா என்னாலே, மூர்த்நா தலையினால், க்ருஹீத்வா பிடித்து அபிவந்திதௌ ஸேவிக்கப்பட்டதுகள்.

2 மஹாபாரதம், ஆதிபர்வம், 1,301, தப:-தபஸ்ஸு, நகல்க:-தோஷமல்ல, அத்யயனம் வேதாத்யயனம் செய்தல், நகல்க:-தோஷமல்ல, ஸ்வாபாவிக:-ஸ்வபாவத்திலேயே ஏற்பட்ட, வேதவிதி:வேதங்களில்சொல்லப்பட்டகர்மானுஷ்டானம், நகல்க: தோஷமல்ல, ப்ரஸஹ்ய பலாத்காரம் செய்து, வித்தாஹரணம் கொள்ளையடித்தலும், நகல்க: தோஷமல்ல, தான்யேவ அவைகளே? பாவோபஹதாநி எண்ணத்தினால் கெடுக்கப்பட்டதுகளாய், கல்க: தோஷமாகின்றன.

3 பாஞ்சராத்திரம். பக்தை:-பக்தர்களினால், உபஹ்ருதம் கொண்டுவரப்பட்டது, அண்வபி ஸ்வல்பமாக இருந்தபோதிலும், மம எனக்கு, போகாய ஸுகத்தின்பொருட்டு, ஜாயதே ஆகிறது, அபக்தோபஹ்ருதம் அபக்தனால் கொண்டுவரப்பட்டது, பூர்யபி அதிகமாக இருந்தபோதிலும், மே எனக்கு, போகாய ஸுகத்தின்பொருட்டு, நஜாயதே ஆகிறதில்லை.

ஜனமாக உடைய எவன், எனக்கு இலை முதலியவற்றை ஸமர்ப்பிக்கிறானோ அவைகளை ஸமர்ப்பித்தலொன்றையே ப்ரயோஜனமாக எண்ணுகையாகிற பரிஶுத்தியுடன்கூடிய மனதை உடைத்தான அவனுடைய அப்படிப்பட்ட பக்தியினால் ஸமர்ப்பிக்கப்பட்ட அந்த வஸ்துவை ஸர்வேஶ்வரனாயும், ஸர்வலோகங்களுடையவும் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், இவைகளை லீலையாக உடையவனாகவும், எல்லா இஷ்டங்களையும் அடைந்தவனாகவும், ஸத்ய ஸங்கல்பனாகவும், எல்லை இல்லாதமேன்மையையுடைய எண்ணிறந்த கல்யாண குணங்களின் கூட்டங்களைஉடையவனாகவும் ஸ்வபாவத்திலேற்பட்ட எல்லை இல்லாத மேன்மையை

தம் ஹவிக்ஷேபுக்ஷஹோமாயஜாயதே। ஸர்வயஜ்ஞவ்ரஹ்மக்ஷாவஹ்ருத்தூர்ஜ ஹோமாயஜாயதே" என்று தானே சொல்லி இருக்கிறார். பலத்திலாசையுள்ளவர்களுக்கும் ஒருவித பக்தியுண்டு ஆகையினால் அதை விலக்குவதற்காக "தஸ" என்று சொல்லி இருக்கிறது. என்கிற அபிப்ராயத்தினால் 'அப்படிப்பட்ட பக்தியினால் ஸமர்ப்பிக்கப்பட்ட' என்று சொல்லப்பட்டது. இலை முதலிய அல்ப வஸ்துக்களை அங்கீகரிப்பதற்கு விரோதியாகிய ஸ்வபாவங்கள் "ஸஹம்" என்கிற பதத்தினால் சொல்லப்படுகின்றன, என்று காட்டுவதற்காக 'ஸர்வேஶ்வரனாயும்' என்றிவை முதலியது சொல்லப்பட்டது. 'ஸர்வேஶ்வரனாயும்' என்பதற்கு இந்த்ரன் முதலியவர்கள் தங்களுக்கு ஶக்தி வ்ருத்தியடைவதற்காக ஹவிஸ் முதலியவற்றை எபபடி அங்கீகரிக்கிறார்களோ, அப்படியல்ல நான். எல்லா வஸ்துக்களையும் ... எக்காலத்திலுமுள்ள நியமன ஶக்தியை உடையவனல்லவோ, என்று தாத்பர்யம். 'ஸர்வலோகங்களுடையவும் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவைகளை லீலையாக உடையவனாகவும்' என்பதற்கு, என்னுடைய லீலைக்குக் கருவியாகிய வஸ்துவைத் தவிர வேறாகிய இலை முதலியது எனக்கு ஸமர்ப்பிக்கப்படுகிறதில்லையல்லவா, என்று தாத்பர்யம். 'எல்லா இஷ்டங்களையும் அடைந்தவனாகவும்' என்பதற்கு இதுவரையிலும் அடையப்படாததாய் இனி அடையவேண்டியதாகிய வஸ்து ஒன்றுமில்லை, என்று தாத்பர்யம். 'ஸத்யஸங்கல்பனாயும்' என்றதற்கு என்னால் ஸம்பாதிக்க முடியாததாயும், அயலாரால் ஸமர்ப்பிக்கப்பட்ட தொன்றும் என்னால் அங்கீகரிக்கப்படவில்லையல்லவா, என்று தாத்பர்யம். 'எல்லையில்லாத' என்றிவை முதலிய வாக்யத்திற்குக் குணங்களினாலும் ஸ்வரூபத்தினாலும் எல்லையில்லாத ஆனந்தத்தை அனுபவித்து த்ருப்தியடைந்திருக்கிற எனக்கு இந்த இலை முதலியது எவ்வளவு, என்று தாத்பர்யம். 'ஸ்வபாவத்திலேற்பட்ட' என்பதினால் வேறொரு காரணம் வேண்டியதில்லை என்ப

உடைய ஆனந்தமயமான என்னுடைய ஸ்வரூபத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவனாயுமிருந்தபோதிலும் நான், நம்முடைய ஆசைக்குக்கிட்டாததான ப்ரியமான வஸ்துவை அடைந்தாற்போல ஸாப்பிடுகிறேன். அப்படியே மோக்ஷதர்மத்தில் ‡ "யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யு: ஏகாந்தகதபுத்திபி: । தா: ஸர்வா: ஶிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம்" என்று சொல்லப்பட்டது. 26

தும். 'அனுபவித்துக்கொண்டிருப்பவனாயுமிருந்தபோதிலும்' என்பதினால் நிவ்ருத்தி செய்யமுடியாதென்பதும் சொல்லப்படுகிறது. 1"பரிபூர்ணோபி பகவாந் ஸ்வல்பம் ஸமர்பிதம் । ஸாபேக்ஷவத் பக்தேப்யோ ப்ரீத: ஆதத்தே" என்கிற வசனத்தின் அர்த்தத்தை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்கிறார்—'ஆசைக்குக்கிட்டாததான' என்று 'ஸாப்பிடுகிறேன்' என்பது அனுபவிக்கிறதை லக்ஷணையாகக் குறிக்கிறது. இதனால், நிவேதனம் செய்யக்கூடிய வஸ்து கிடைக்காவிட்டால், இலை முதலியதும் நிவேதனம் செய்யக்கூடியதாகும், என்று காட்டப்படுகிறது. வேறு பலங்களைவிரும்பும் ஜனங்களினால் ஸமர்ப்பிக்கப்பட்ட வஸ்துக்கள் பகவானுடைய திருவடியைச்சேருகின்றன என்று 2 "தத்ஸர்வம் தேவதேவஸ்ய சரணாவுபதிஷ்டதே" என்கிற ஶ்லோகத்தில் சொல்லி, பரமைகாந்திகளால் ஸமர்ப்பிக்கப்பட்டவைகள் பகவானால், அதிக ப்ரீதியுடன் தலையினால் அங்கீகரிக்கப்படுகின்றன, என்பது மோக்ஷ தர்மத்தில் சொல்லப்பட்டது, என்று சொல்கிறார்—'அப்படியே' என்று ஆரம்பித்து. 26

‡ மஹாபாரதம், ஶாந்திபர்வம், மோக்ஷதர்மம், 353, 64 தேவ:-பகவான், ஏகாந்தகதபுத்திபி:-ஒரே நிஶ்சயத்தை அடைந்த புத்தியுள்ளவர்களினால், யா:-எந்த, க்ரியா:-ஆராதனங்கள், ஸம்ப்ரயுக்தாஸ்யு:-செய்யப்பட்டதுகளோ, தா:-அவைகளை, ஸர்வா:-எல்லாவற்றையும், ஸ்வயம் தானே, ஶிரஸா தலையினால், ப்ரதிக்ருஹ்ணாதி அங்கீகரிக்கிறார்.

1 மஹாபாரதம், ஶாந்திபர்வம், மோக்ஷதர்மம், 353, 64, பகவான் பகவானனவர் பரிபூர்ணோபி எல்லாம் நிறைந்தவராக இருந்தபோதிலும், பக்தே:-பக்தர்களினால், கிஞ்சித் ஸ்வல்பமாகிய யத் எது, ஈரிதம் ஸமர்ப்பிக்கப்பட்டதோ, தத் அத்தை ஸாபேக்ஷவத் ஆசையுள்ளவர்போல, ஆதத்தே அங்கீகரிக்கிறார், தேன அதினால் ப்ரீத:-ப்ரீதி அடைந்தவராய்க்கொண்டு, அலம் அதிகமாக, ததாதி கொடுக்கிறார்.

2 மஹாபாரதம், ஶாந்திபர்வம், மோக்ஷதர்மம 353, 63 தத்ஸர்வம் அவையெல்லாம், தேவதேவஸ்ய பகவானுடைய சரணௌ திருவடிகளை உபதிஷ்டதே அடைகின்றன.

பா] எந்தக் காரணத்தினால் மஹாத்மாக்களாகிய ஜ்ஞானிகளுடைய இந்த விசேஷமும் வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் எட்டாததோ, ஆகையினால் நீயும் ஜ்ஞானியாக இருந்து கீழ்ச்சொல்லிய அடையாளமுடைய பக்தியின் மிகுதியினால் வணக்கப்பட்ட உன்னையும் உன்னைச் சேர்ந்த வஸ்துக்களையு முடையவனாய்க் கொண்டு, என்னுடைய நாமங்களைச் சொல்லுதலையும், என்னுடைய கார்யங்களில்ப்ரயத்தினம் செய்வதையும், ஆராதனம் செய்வதையும், நமஸ்காரம் செய்வதையும் எப்பொழுதும் செய்துகொண்டே லோகத்தில் ஏற்பட்டதும் வேதத்திலேற்பட்டதுமான, நித்யநைமித்திக கர்மங்களை இவ்விதமாகச் செய், என்று சொல்லுகிறார்.—

யத்கரோஷி யதஶ்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் ।
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம் ॥ 27

ப-உரை] கௌந்தேய-ஓ அர்ஜுந, கரோஷி(இதி) - செய்கிறாய் (என்பது) யத்- எதுவோ, அஶ்நாஸி (இதி)- ஸாப்பிடுகிறாய் (என்பது) யத்-எதுவோ, ஜுஹோஷி (இதி)- ஹோமம் செய்கிறாய் (என்பது) யத்-எதுவோ, ததாஸி (இதி)-தானம் பண்ணுகிறாய் (என்பது), யத்-எதுவோ, தபஸ்யஸி (இதி) - தவம் செய்கிறாய் (என்பது) யத் - எதுவோ, தத்-அதையே, மதர்பணம் என்னிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்டதாக, குருஷ்வ - செய். 27

பா] தேஹயாத்ரைக்கு அங்கமாக லோகத்திலேற்பட்ட கார்யங்களைச் செய்வதையும்,தேஹத்தைத் தரிப்பதற்காக ஸாப்பிடுக்கிறாயே அதையும், வேதத்தில் சொல்லப்பட்ட ஹோமம், தானம், தபஸ்ஸு முதலியவைகளைச் செய்வதையும், இவை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்டதாகச் செய். 'அர்ப்யதே' (ஸமர்ப்பிக்கப்படுகிறது) என்கிற வ்யுத்பத்தியினால் அர்ப்பணம், என்று சொல்லப்படுகிறது, அதாவது,

---

தா] *கீழ்ச்சொல்லிய அர்த்தங்களினால் முடிவாக ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறதென்று மேல் ஶ்லோகத்திற்கு ஸங்கதி சொல்லுகிறார்*—'எந்தக் காரணத்தினால்' *என்றாரம்பித்து. மஹாத்மாக்களின் விசேஷம் கீழே சொல்லப்பட்டது, பிறகு அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பக்தியோகத்தைச் சொல்லுவதற்காக அதற்கு அங்கமாகிய ஒரு வித புத்தியைச் சொல்லுகிறார், என்கிற அபிப்ராயத்தினால்* 'இவ்விதமாகச் செய்' *என்று சொல்லப்பட்டது. 'யத்கரோஷி' என்கிற* இந்த *ஶ்லோகத்தினால் ஸ்வபாவத்தினாலேற்பட்டவைகளும், ப்ரயோஜனத்திற்காக ஏற்பட்டவைகளும், ஶாஸ்திரங்களினால் ஏற்பட்டவைகளுமாகிய எல்லாக் கர்மங்களையும் பகவானிடத்தில் ஸமர்ப்பிப்பதைக் குறிக்-*

கிற மந்திரமும் ஞாபகப்படுத்தப்பட்டது. இந்த ஶ்லோகத்தையே 1'யத்கரோமி' என்று மாற்றி கௌந்தேய என்பதற்குப்பதிலாக பகவந் என்று சேர்த்துக்கொண்டு மதர்ப்பணம் என்பதை த்வதர்ப்பணம் என்று மாற்றி மந்திரமாகச் சிலர் அநுஸந்தானம் செய்கிறார்கள். இவ்விடத்தில் 'யத்கரோஷி' என்பது கோபலீவர்தந்யாயத்தினால் சுருக்கப்பட்டதாய் 2 ஸ்வபாவத்தினாலேற்பட்ட கர்மங்களை மாத்திரம்சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'தேஹயாத்ரைக்கு' என்றாரம்பித்து. 'அஶ்நாஸி' என்கிற இது 3ப்ரயோஜனத்திற்காக ஏற்பட்ட கர்மங்களின் கூட்டத்தைக் குறிக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'தேஹத்தைத் தரிப்பதற்காக' என்றாரம்பித்து. 'யஜ்ஜுஹோஷி' என்பது முதலியது ஶாஸ்திரத்தினால் ஏற்பட்ட எல்லாக் கர்மங்களையும் குறிக்கிறது என்பதையும் அப்படியே குறிக்கப்படுகிறவைகளைச் சேர்த்துச் சொல்லுகிற ஆகாரத்தையும் காட்டுகிறார்—'வேதத்தில் சொல்லப்பட்ட' என்பது முதல். இவ்விடத்தில் யத் என்னும் பதங்களெல்லாம் க்ரியையைச் சொல்லுகின்றன அர்ப்பணம் என்னும் பதமும் ஸமர்ப்பிக்கிறதாகிற க்ரியையைச் சொல்லுவதாயிருந்தால் என்னிடத்தில் ஸமர்ப்பிக்கிறதை உடையவைகளாக என்று வ்யதிகரணபஹுவ்ரீஹி என்னும் ஸமாஸம் சொல்லவேண்டிய ப்ரயாஸம் வருகிறபடியினாலே தத்புருஷன் என்னும் ஸமாஸம் சொல்லுவதற்குத்தக்கபடி கர்ம என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிற ப்ரத்யயத்தை முடிவிலுடையது, என்று வ்யுத்பத்தி சொல்லுகிறார்:—'அர்ப்யதே' என்றாரம்பித்து. 4 'க்ருத்யல்யுடோ பஹுளம்' என்கிற ஸூத்ரத்தில் சொல்லியபடி கர்ம என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிற ல்யுட் என்னும் ப்ரத்யயம் இது. என்னிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்டதாகச்செய், என்று பதத்திற்கு அர்த்தம். ஸமர்ப்பிக்கிறதாவது வேறு இடத்தில் இருக்கிற நிலை நின்ற வஸ்துவை மற்றொரு இடத்தில் வைப்பதல்லவா, அது இவ்விடத்தில் ஒரு நிமிஷம் மாத்திரம் நிற்கக்கூடிய கர்மங்களில் எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்:—'அதாவது' என்றாரம்பித்து. ஜீவாத்மா

1 யத்கரோமி யதஶ்நாமி யஜ்ஜுஹோமி ததாமி யத். யத்தபஸ்யாமி பகவந் தத்கரோமி த்வதர்ப்பணம்॥ என்றனுஸந்திக்கிறார்கள்.

2 தேஹத்தின் ஸ்வபாவத்தினாலேற்பட்ட இமைக்கொட்டல் மூச்சுவிடுதல் முதலியவைகள். 3 பசிமுதலியவைகள் நீங்குவது முதலிய ப்ரயோஜனத்திற்காக ஏற்பட்டசாப்பிடுதல் முதலிய காரியங்கள். 4 அஷ்டாத்யாயீ 3-3-13

லௌகிகங்களாயும், வைதிகங்களாயு மிருக்கிற, எல்லாக்கர்மங்களுக்கும், கர்த்தாவாக இருக்கையும், ஆராதிக்கப்படுகிறவனாக இருக்கையும், எப்படி என்னிடத்தில், ஸமர்ப்பிக்கப்பட்டதாகிறதோ, அப்படிச் செய். இத்தால் சொல்லப்பட்டதாவது. யாகம், தானம் முதலிய கர்மங்களில், ஆராதிக்கப்படுகிறவர்களாகத் தோன்றுகிற தேவதை முதலியவர்களும் அந்தக் கர்மங்களுக்குக் கர்த்தாவாகவும், அதின் பலங்களை அனுபவிக்கிறவனாகவுமிருக்கிற நீயும், எனக்கு ஶேஷபூதர்களாகையினாலும், என்னுடைய ஸங்கல்பத்துக்கு வஶப்பட்ட ஸ்வரூபம், ஸ்திதி, ப்ரவ்ருத்தி இவைகளை உடையவர்களாகையினாலும் முக்யமான ஶேஷியாயும் முக்யமான கர்த்தாவாயுமிருக்கிற என்னிடத்திலேயே கர்த்தாவாகவும் போக்தாவாகவும் ஆராதனம் செய்கிறவனாகவு மிருக்கிற உன்னையும் ஆராதிக்கப்படுகிற

கர்த்தா என்பதும், போக்தா என்பதும் 1 'கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத்' என்கிற அதிகரணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது, இந்திரன் முதலியவர்கள் ஆராதிக்கப்படுகிறவர்கள் என்பதும் ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது, அப்படியே தேவதைகள் வெவ்வேறு என்பதும் விசாரிக்கப்பட்டது. அவனிடத்தில் இல்லாததை அவனிடத்தில்இருப்பதாகஅனுஸந்தானம் செய்தால் ப்ரமமே ஏற்படும் ஆகையினால் எப்படி பகவானிடத்தில் அவைகளை ஸமர்ப்பிப்பது; என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்:—'இத்தால் சொல்லப்பட்டதாவது'*என்றாரம்பித்து.* 'முக்யமான கர்த்தாவாயுமிருக்கிற'*என்பதினால் 2* 'ஶாஸ்த்ரதத்வஹேதஃ' *என்கிற அதிகரணத்தின் அர்த்தம் ஞாபகப்படுத்தப்பட்டது.* 'கர்த்தாவாகவும், போக்தாவாகவும், ஆராதனம் செய்கிறவனாகவுமிருக்கிற' *என்பவைகளுக்கு முன், க்ரியைகளுக்கு, அதின் பலத்தை, அதைக்கொடுப்பவர்களை,என்பவைகளை முறையே சேர்த்துக்கொள்ளவேண்டியது முக்யமான கர்த்தாவாகையினால் கர்த்தாவாகஇருக்கையை ஸமர்ப்பிக்கவேண்டியது,முக்யமான ஶேஷியானபடியினால் ஆராதிக்கப்படுகிறவனாக இருக்கையை ஸமர்ப்பிக்கவேண்டியது, கர்த்தாவாகஇருக்கை முதலியவைகளை உன்னிடத்தில் ஸமர்ப்பித்துவிட்டால் நேராகக்கர்த்தாவான ஜீவாத்மா விஷயத்திலும்ஆராதிக்கப்படுகிற உமக்கு விஶேஷணங்களாகிய இந்திரன் முதலிய தேவதைகளின் விஷயத்திலும் அனுஸந்தானம் செய்யவேண்டியது என்ன? என்கிற கேள்விக்கு ஸமாதானமாக ஸமர்*

1, 2 *முதல் வால்யூம் 393-வது பக்கம்* 1, 2-*வது புட்னோட்டுக்களைப் பார்க்க.*

தேவதைகளின் கூட்டத்தையும், ஆராதனமாகிற காரியங்களின் கூட்டத்தையும், இவை யெல்லாவற்றையும் ஸமர்ப்பணம் செய். அதாவது நீ என்னால் நியமிக்கப்படுகிறவன் என்கிறதைமுன்னிட்டு, நீ எனக்கு ஶேஷமாக இருக்கை ஒன்றையே ஸ்வரூபமாக உடையவன் என்பதையும், ஆராதிக்கப்படுகிற தேவதை முதலியவைகளும் கீழ்ச்சொல்லிய ஸ்வபாவமுடையவைகள, என்பதையும் அதிக ப்ரீதியுடன் கூடியவனாக அனு
ஸந்தானம் செய்; என்பது. 27

𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌫𑌲𑍈𑌰𑍇𑌵𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 𑌕𑌰𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌨𑍈𑌃।
𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑌾𑌮𑍁𑌪𑍈𑌷𑍍𑌯𑌸𑌿 ‖ 28

ப-ரை] 𑌏𑌵𑌂 இப்படி ஸந்ந்யாஸயோகயுக்தாத்மா ஸமர்ப்பிக்கிறதாகிறயோகத்தைச் செய்து கொண்டிருக்கிற மனதையுடையவனாகி 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌫𑌲𑍈𑌃 நல்லதாயும் கெட்டதாயுமிருக்கிற பலங்களையுடைய 𑌕𑌰𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌨𑍈𑌃 கர்மங்களாகிற பந்தங்களால் 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 விடப்பட்டவனாகப்போகிறாய் 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 அவைகளால் விடப்பட்டவனாய் 𑌮𑌾𑌂
என்னை 𑌉𑌪𑍈𑌷𑍍𑌯𑌸𑌿 அடையப்போகிறாய். 28

பா] இப்படி ஸமர்ப்பிப்பதாகிய யோகத்தைச் செய்து கொண்டிருக்கிற மனதை உடையவனாய் தன்னை எனக்கு ஶேஷமாயிருக்கை என்னால் நியமிக்கப்படுகிறவனாயிருக்கை இவைகளையே ஸ்வரூபமாக உடையனாகவும் எல்லாக் கர்மங்களையும் எனக்கு ஆராதனங்களாகவும் அனுஸந்தானம் செய்து கொண்டு லோகத்தில் ஏற்பட்ட கர்மங்களையும் வேதங்களில்

ர்ப்பிப்பதை நன்றாக நிரூபித்துக்காட்டுகிறார்:—'நீ எனக்கு' என்றாரம்பித்து பக்தியைச்சொல்லும் ஸந்தர்ப்பமாகையினால் ப்ரீதியுடன் கூடியவனாக என்று சொல்லியிருக்கிறது. 27

தா] 'ஸந்ந்யாஸயோகயுக்தாத்மா' என்பது பலத்தை விதிப்பதற்காக முன் ஶ்லோகத்தில் சொல்லிய அர்த்தத்தை அனுவாதம் செய்திருக்கிறதே யல்லாமல் ஜ்ஞானயோகம் கர்மயோகம் இவைகளைச் சொல்லுகிறதல்ல, என்கிற அபிப்ராயத்தினால் அன்வயத்தைச்சொல்லுகிறார்:— 'இப்படி' என்றாரம்பித்து. இவ்விடத்தில் யோக என்னும்பதம் அனுஸந்தானத்தைச்சொல்லுகிறது. அதுவே கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஸமர்ப்பணத்தைச சொல்லுகிற ஸந்ந்யாஸ என்னும் பதத்தினால் விஶேஷித்துச சொல்லப்படுகிறது. 'தன்னை' என்பது முதல் அதையே விவரணம் செய்கிறது. 'லோகத்தில் ஏற்பட்ட' என்பது முதல் ஸ்வபாவத்தில் ஏற்பட்டவைகளுக்கும ப்ரயோஜனத்திற்காக ஏற்பட்டவைக

சொல்லப்பட்ட கர்மங்களையும் செய்து கொண்டிருந்து நல்லதாயும் கெட்டதாயுமிருக்கிற பலங்களையுடைய எண்ணிறந்த பழைய கர்மங்கள் என்கிற பேரையுடைய என்னை அடைவதற்குத்தடையான எல்லாப் பந்தங்களாலும் விடுபடப்போகிறாய், அவைகளினால் விடப்பட்டவனாய் என்னையே அடையப்போகிறாய். 28

பா) மிகவும் உத்தமமான லோகத்திலில்லாத என்னுடைய இந்த ஸ்வபாவத்தைக்கேள்—

னுக்கும் பொதுவாகச் சொல்லியிருக்கிறது. 'நல்லதாயும் கெட்டதாயும் இருக்கிற பலங்களையுடைய' என்பதற்கு அநுகூலமாயும் விரோதமாயும் இருக்கிற பலங்களையுடைய என்றர்த்தம். 'எண்ணிறந்த' என்பது பன்மையாகச் சொல்லியிருப்பதின் கருத்தைச் சொல்லியிருக்கிறது. ஸமர்ப்பிக்கப்படுகிறது என்கிற புத்தியுடன் செய்யப்படுகிற கர்மங்கள் பந்தத்தை உண்டாக்காதாகையினால் அவைகளை விலக்குவதற்காக 'பழைய' என்னும் பதம். இஷ்டப்பட்ட இடத்துக்குப்போகாமலிருப்பதற்குக்காரணமல்லவோ பந்தம், என்கிற அபிப்ராயத்தினால் 'என்னை அடைவதற்குத் தடையான' என்று சொல்லப்பட்டது. இத்தால் உபாயத்தைச் செய்யத்தடையான பாவங்கள் விலக்கப்பட்டன. இத்தாலேயே நல்ல பலத்தைக்கொடுக்கக்கூடிய கர்மங்களும், அதைவிடமேலான பலத்தை அடைவதற்குத்தடங்கலாகையினால் அவைகளும் விடத்தக்கவைகள் என்று காட்டப்பட்டது 'மாமுபைஷ்யஸி' (என்னை அடையப்போகிறாய்) என்பதின் ஸாமர்த்யத்தினால் 'எல்லா' என்று சொல்லப்பட்டது. 'மோக்ஷ்யஸே' என்று சொல்லப்பட்ட அர்த்தமே 'விமுக்த:' என்று அநுவாதம் செய்யப்படுகிறது, ஆகையினால் புனருக்தியில்லை என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்:—'அவைகளால் விடப்பட்டவனாய்' என்று. இவ்விடத்தில் விமுக்த: என்னும்பதம் 1 ஜீவன் முக்தியைச்சொல்லுகிறது என்று சொல்லுகிறவர்கள், அந்த ஜீவன் முக்தி ஸம்பவிக்காதாகையினாலேயே நிராகரிக்கத்தக்கவர்கள். கர்த்தாவாக இருக்கை, பலத்தைக்கொடுக்கிறவனாயிருக்கை, இவைகளைப்போலவே பலமாக இருக்கையும் தனக்கே என்கிற அபிப்ராயத்தினால் என்னையே அடையப்போகிறாய்' என்று சொல்லப்பட்டது. க்ரமமாக அடைவதினாலுண்டாகும் தாமதத்தை விலக்குவதற்காக என்னையே என்பது. 2 'மாமேவைஷ்யஸி' என்று மேலே சொல்லப்போகிறார். 28

---

1. இந்த லோகத்தில் உயிரோடிருக்கும்பொழுதே அத்வைதஜ்ஞானத்தினால் முக்தனாய் விடுகிறான் என்றும் அவர்களுக்கு ஜீவன்முக்தர்கள் என்று பேர் என்றும் அத்வைதிகள் சொல்லுகிறார்கள். 2 பகவத்கீதை 9 34.

ஸமோऽஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோऽஸ்தி ந ப்ரிய:।
யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம் ॥ 29

ப-ரை) அஹம் நான், ஸர்வபூதேஷு எல்லா ப்ராணிகளிடத்திலும் ஸம: ஸமமானவன், மே எனக்கு த்வேஷ்ய: த்வேஷம் செய்யத்தகுந்தவன் நாஸ்தி இல்லை, ப்ரிய: ப்ரியனானவனும், ந இல்லை, யே து எவர்கள் மாம் என்னை, பக்த்யா ப்ரீதியினால், பஜந்தி உபாஸனம் செய்கிறார்களோ, தே அவர்கள், மயி என்னிடத்தில (இருக்கிறார்கள்) அஹமபி நானும், தேஷு அவர்களிடத்தில் (இருக்கிறேன்) 29

பா] தேவதை, பசு, மனுஷ்யன், ஸ்தாவரம் இவைகளாகப் பிரிந்திருக்

தா] *கிடைக்கத்தகாதது, ஸுலபமாகக் கிடைக்கத்தக்கது. உயர்ந்தது, தாழ்ந்தது என்பவை முதலிய வஸ்துக்களின் தாரதம்யத்தைப் பாராமல் அங்கீகரிப்பது 1 'பத்ரம்' என்னும் ஶ்லோகத்தினால சொல்லப்பட்டது. அத்தால் ஸௌலப்யம் என்னும் குணம்சொல்லப்பட்டதாகிறது. 2 'யத்கரோஷி' என்றிவை முதலிய ஶ்லோகங்களினால் ஏற்கனவே செய்யப்படுகிற கர்மங்களே ஒருவிதமான அநுஸந்தானம் மாத்திரத்தினால் பகவானுக்கு ஆராதனங்களாய் விடுகிறபடியினால் அந்த ஸௌலப்யம் உறுதிப்படுத்தபபட்டது பிறகு பக்தியோகம்செய்யும் அதிகாரியை ஸ்தோத்ரம் செய்கிற 'ஸமோஹம்' என்கிற இந்த ஶ்லோகத்திலேயெனில் ஜாதி ஆகாரம் முதலிய தாரதம்யத்தைப்பாராமல் பக்தர்களோடு தான் கலந்திருததல சொலலப்படுகிறது; இத்தால் ஸௌசீல்யம் என்னும் குணம் சொல்லப்பட்டதாகிறது. கம்ஸன் முதலியவர்களைக் கொன்றபடியினாலும் 2'தாந்ஹம் த்விஷத: 3க்ஷிபாம்யஜஸ்ர' என்றிவை முதலாகச் சொல்லியிருக்கிறபடியினாலும் உண்டாகிய,பகவானுக்கும் ப்ரீதி, த்வேஷம் இவைகள் உண்டோ என்கிற ஸந்தேஹம் நிராகரிக்கத்தக்கது,என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்— மிகவும் உத்தமமான' என்றாரம்பித்து. இவ்விடத்தில 'அஹம்' என்னும் பதம் தன்னைத் தவிர மற்றவர்களுக்கு இப்படிப்பட்ட ஸ்வபாவமில்லை என்று மறுக்கிறது,என்கிற அபிப்ராயத்தினால் 'லோகத்திலில்லாத' என்று சொல்லப்பட்டது. 'ஸமோஹம்' என்பதற்கு எதிர்த்தட்டான வ்யத்யாஸம் 'ஸர்வ' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது, என்கிறஅபிப்ராயத்தினால்சொல்லுகிறார்:—'தேவதை' என்றாரம்பித்து.*

1 *பகவத்கீதை* 9-26. 2 *பகவத்கீதை*, 9-27. 3 *பகவத்கீதை*, 9-28.

கிற, ஜாதியினாலும், ஆகாரத்தினாலும், ஸ்வபாவத்தினாலும், ஜ்ஞானத்தினாலும், மிகவும் உயர்ந்தவைகளாகவும் தாழ்ந்தவைகளாகவும் இருக்கிற எல்லா ப்ராணிகளிடத்திலும் ஆஶ்ரயிக்கத் தகுந்தவனாக இருக்கையில் நான் ஸமமானவன். இவன் ஜாதி ஆகாரம் ஸ்வபாவம் ஜ்ஞானம் முதலியவைகளினால் தாழ்ந்தவன் என்று ஆஶ்ரயிப்பதில் எனக்கு த்வேஷம்

'ஜாதியினாலும்' என்பதற்கு தேவதை, மனுஷ்யன், ப்ராஹ்மணன், க்ஷத்திரியன் என்பவை முதலியவைகளினாலும் என்றர்த்தம் 'ஆகாரத்தினாலும்' என்பதற்கு அழகுள்ளவன், ஸ்திரீ, புருஷன், ஸமமான அவயவங்களை உடையவன், ஏற்ற குறைவுள்ள அவயவங்களை உடையவன், என்பவை முதலியவைகளினாலும் என்றர்த்தம். 1 'யேஷிஸு்யுஃஃவாவ யொகயஃ | ஸ்ஷியொவெஶுாஷ்யாஶூஃ' என்று மேலேசொல்லப்போகிறாரல்லவா. ஸ்வபாவத்தினாலும்' என்பதினால் ஸத்வகுணம் மேலிட்டிருக்கை, ரஜோகுணம் மேலிட்டிருக்கை முதலியது சொல்லப்படுகிறது. தேவதை முதலியவர்களுக்கும் பகவானை ஆஶ்ரயிப்பது உண்டென்று 2 'தஉுவயுவிவாஉராயணஸுஃஹவாக' என்கிற அதிகரணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அதிக புண்யத்தினாலுண்டான விஶேஷ ஜ்ஞானமுடைய கஜேந்த்ரன் ஸுக்ரீவன் முதலியவர்களிடத்திலும் ப்ரஸித்தமாக இருக்கிறது ஆகையினால் திர்யகதிகரணத்திற்கும் விரோதமில்லை. ஸ்தாவரங்களிலும் சாபம் முதலிய காரணங்களினால் உண்டான சிலரிடத்தில் ஜ்ஞானமுண்டென்று மஹர்ஷிகள் சொல்லுகிறார்கள். ஆகையினால் மனதின் வ்யாபாரமாகிய பகவானை ஆஶ்ரயித்தல் எல்லாவற்றிலும் ஸம்பவிக்கும். 3 ''நமெஒெஉ வெஷ்யாஷ்ஷி நவியஃ''என்கிற நிஷேதம் அவைகளின் ப்ரஸ்தாவத்தை அபேக்ஷிக்கிறபடியினால், ஜாதிமுதலியவைகளினால் உண்டான மேன்மையும் தாழ்வும் இங்கே மறுக்கப்படுகிற த்வேஷம் ப்ரியம் இவைகளின் ப்ரஸ்தாவத்திற்குக் காரணமாகச் சொல்லப்பட்டன, என்று சொல்லுகிறார்—'இவன்' என்று ஆரம்பித்து. த்வேஷம் செய்யத் தகுந்தவனாக இருக்கையும் ப்ரியனாகஇருக்கையும் விடத்தகுந்தவனாவதற்கும் க்ரஹி

1 பகவத்கீதை, 9-32.

2 சாரீரகஸூத்ரம், 1-3-25. தத் - அந்த பகவானுடைய, உபாஸனம் உபரி- நமக்கு மேலாகிய தேவதைகளிடத்திலும் உண்டு. ஸம்பவாத் அவர்களுக்கும் மோக்ஷத்தில் ஆசை உண்டாகலாமாகையினால் (என்று) பாதராயண:- வ்யாஸர் எண்ணுகிறார். 3 பகவத்கீதை, 7-17

செய்யத்தக்கவன் இல்லை, அதாவது அருவருக்கத் தக்கவனானபடியினால் விடத்தக்கவன் இல்லை, அப்படியே என்னை ஆஶ்ரயித்தவன் என்பதைத் தவிர ஜாதி முதலியவைகளினால் மிகவும் உயர்ந்தவன் இவன் என்று அவைகளையுடையவனாகையினால் என்னை ஆஶ்ரயிப்பதில் ப்ரியன் ஒருவனும் இல்லை அதாவது அங்கீகரிக்கத்தக்கவன் ஒருவனும் இல்லை. ஆனால் அதிகமாக என்னிடத்தில் உண்டான ப்ரீதியினால் என்னை உபாஸனம் செய்யாவிட்டால் ஆத்மாவைத் தரிப்பதையே அடையாதவர்களாகையினால் என்னை உபாஸிப்பது ஒன்றையே ப்ரயோஜனமாக உடையவர்களாய் எவர்கள் என்னை உபாஸிக்கிறார்களோ அவர்கள் ஜாதி முதலியவைகளினால் உயர்ந்தவர்களாயிருந்தபோதிலும், தாழ்ந்தவர்களாயிருந்தபோதிலும் எனக்கு ஸமமான குணங்களை உடையவர்களைப் போல

க்கத் தகுந்தவனாவதற்கும் காரணங்கள். ஆகையினால் காரணங்களாகிய த்வேஷமும் பரிபமும் இல்லை, என்று நிஷேதித்ததினால் அவைகளின் கார்யங்களும் இல்லை என்று ஏற்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் 'அருவருக்கத் தகுந்தவனாகையினால், விடத்தகுந்தவன் இல்லை' என்றும் 'க்ரஹிக்கத்தகுந்தவன் இல்லை' என்றும் சொல்லப்பட்டது. தன்னை ஆஶ்ரயிப்பதினாலுண்டாகும் ப்ரீதியைத் தடுக்கிறது, என்று அர்த்தமாகப்போகிறது, என்கிற பயத்தினால 'ஆஶ்ரயித்தவன் என்பதைத் தவிர' என்று சொல்லப்பட்டது. ப்ரீதிக்குக் காரணங்களான ஜாதி முதலியவைகளினாலுண்டான மேன்மையினால் ப்ரீதி இல்லை என்றால், வேறு எத்தால் ப்ரீதி உண்டாகிறது, வேறொன்றினாலும் இல்லையெனில் 'ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் (?) ப்ரியஃ' என்றிவை முதலிய ஶ்லோகங்களுக்கு விரோதம் வருகிறதே. என்கிற ஆக்ஷேபத்தை நிராகரிப்பதற்காக 'து' என்னும் பதம், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார். 'ஆனால்' என்று. 'ஸக்த்யா ஸஜந்தி' என்கிற இரண்டு பதங்களுக்கும் புனருக்தி என்னும தோஷத்தைப் பரிஹரிப்பதற்காக அன்வயத்தைச்சொல்லுகிறார்—'அதிகமாக' என்று ஆரம்பித்தது. "யே" (எவர்கள்) என்கிற இது, தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்கிற ஏற்பாடு இல்லை. என்கிற அபிப்ராயத்தைக் காட்டுகிறது, என்று சொல்லுகிறார்—அவர்கள் ஜாதி முதலியவைகளால்' என்று ஆரம்பித்தது. ஸமானமானவர்களைப் போல ஒருவர்க்கொருவர் கலந்திருக்கை மயி என்றாரம்பித்துச் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் 'எனக்கு ஸமமான குணங்களை உடையவர்களைப்போல ஸுகமாக' என்று சொல்லப்பட்டது. யஜமானனாக உம்மை அநுஸந்தானம் செய்துகொண்டு பக்தி செய்கிறவர்கள் ஸம

ஸுகமாக என்னிடத்தில் இருக்கிறார்கள், நானும் அவர்களிடத்தில் என்னை விட உயர்ந்தவர்களிடத்திலே போல இருக்கிறேன். 29

ரா-பா) அதிலும்.

அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் ।
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ: ॥ 30

ப-ரை) ஸுதுராசாரோபி-அதிகக் கெட்ட நடத்தையை உடையவனாயிருந்தபோதிலும், மாம்-என்னை, அநந்யபாக் - வேறொரு ப்ரயோஜனத்தையும் பற்றாமல், பஜதே சேத்- பக்திசெய்கிறானேயானால், ஸ:-அவன் ஸாதுரேவ- நல்லவனாகவே, மந்தவ்ய:- பஹுமானம் செய்யத்தக்கவன் ஹி-.எந்தக்காரணத்தினால், ஸ:- அவன் ஸம்யக்- நன்றாக, வ்யவஸித:- நிஶ்சயமுள்ளவனோ? 30

பா] அந்தந்த ஜாதிகளில் பிறந்தவனுக்கு, எந்தெந்த நன்னடத்தை அங்கீகரிக்கத் தக்கதோ, எது விடத்தக்கதோ, அவைகளை மீறி நடப்பவனாக இருந்தபோதிலும், கீழ்ச்சொல்லியபடி பக்தி செய்வதொன்றையே ப்ரயோ

மான குணங்களை உடையவர்களைப்போல உம்மிடத்தில் இருக்கிறார்கள். என்பது எப்படிப் பொருந்தும், என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் 'தேஷு சாப்யஹம்' என்பதினால் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'நானும்' என்று ஆரம்பித்து. அதிகமான ஸௌசீல்யத்தினால் என்னைவிட உயர்ந்தவர்களைப்போல நான் 'ஶிரஸாதேஷு வ: ஆஶிருஹ்ணாமி' என்று சொல்லி இருக்கும் விதமாக அவர்களை வெகுமதிக்கிறேன். அதினால் அவர்கள் என்னுடைய ஸர்வேஶ்வரனாயிருக்கும் தன்மையை அனுஸந்தானம் செய்வதினாலுண்டாகும் பயமில்லாதவர்களாய் ஸுகமாக என்னை உபாஸனம் செய்கிறார்கள், என்று தாத்பர்யம். நானும் அவர்களும் பிதா, புத்ரன் இவர்களைப்போல் ஒருவர்க்கொருவரிடத்தில் வைக்கப்பட்ட பாரத்தை உடையவர்கள், என்று திரண்ட பொருள். அவரவர் ஜாதிக்கு ஏற்பட்ட தர்மங்களைக்கொண்டு பக்தி செய்கிறபடியினால் தாழ்ந்த ஜாதியைச் சொல்லி இருக்கிறதற்கு விரோதமில்லை. 29

தா] இப்படிதன்னை ஆஶ்ரயிப்பதை அங்கீகரிப்பதில் ஜாதிமுதலியவைகளினாலுண்டான தாழ்மை ஒருவிதபாதகமும் செய்யாது என்று சொல்லப்பட்டது. அதற்குமேலே நடத்தையினாலுண்டான தாழ்மையும் ஒருவிதபாதகஞ்செய்யாது என்று இந்தஶ்லோகத்தினால் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அதிலும்' என்று.

ப்ராஹ்மணன் முதலியவர்களுக்கு நல்லதர்மமாக இருப்பதே ஶூத்ரன் முதலியவர்களுக்கு அதர்மமாகிறது, ஶூத்ரன் முதலியவர்களுக்கு நல்லதர்மமாக இருப்பதே ப்ராஹ்மணன் முதலியவர்களுக்கு அதர்மமாகிறது. இப்படியே ப்ராஹ்மணன் முதலியவர்களுக்கு விலக்கப்பட்ட, கள் மாம்ஸம், ஶூத்ரன் முதலியவர்களுக்கு விலக்கப்படவில்லை, ஶூத்ரன் முதலியவர்களுக்கு விலக்கப்பட்ட,கபிலைமாட்டின்பால்,ப்ராஹ்மணனுக்குச் சிறந்தது. ஆகையால் தங்கள்தங்கள் ஜாதி நியமத்திற்குக் கெடுதலானநடத்தை உள்ளவனுகஇருக்கைதோஷமாகும் என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்— ‘அந்தந்த’ என்றுரம்பித்து. விதிக்கப்பட்டகார்யத்தைச் செய்யாமையும், தடுக்கப்பட்ட கார்யத்தைச்செய்தலும, இவை இரண்டும் கெட்டநடத்தைதான், என்று தெரிவிப்பதற்காக, அங்கீகரிக்கத்தக்கதோ,விடத்தக்கதோ,என்றுசொல்லப்பட்டது. இவ்விடத்தில்“பஜதே” என்னும் பதம் ப்ரயோஜனமற்றது, என்பதைப்பரிஹரிப்பதற்காக,‘ஸுதுராசாரோऽபி ஸந் பஜதே’என்று அன்வயம் காட்டப்பட்டது. ‘கீழ்ச்சோல்லியபடி’ என்பதற்கு எப்பொழுதும் நாமங்களைச்சொல்வது முதலியவைகளினுல், என்று அர்த்தம். இந்த ஸந்தர்ப்பத்தினுல் விஶேஷித்துக்காட்டபபட்ட ‘அநந்யபாக்’ என்பதின் அர்த்தம்,பக்திசெய்வதொன்றையே ப்ரயோஜனமாக உடையவனுய்’ என்பது. அதினுலேயே வேறு தேவதைகளிடத்தில் பக்திசெய்வதற்கு ப்ரஸ்தாவமே தூரத்தில் நிராகரிக்கப்பட்டது. அப்படியே [1] ஸர்வாகமாநாமாசார: ப்ரதமம் பரிகல்பிதம்’ என்று சொல்லப்பட்டிருக்கிறது.[2] ஆசாரப்ரபவோ தர்மோ தர்மஸ்ய ப்ரபுரச்யுத:।’ [3] ஆசாரஹீநம் ந புநந்தி வேதா:’ [4] ‘ஸந்த்யாஹீநோऽஶுசிர்நித்யமநர்ஹ: ஸர்வகர்மஸு

1. முதல் வால்யூம் 308 பக்கம் 1 புட்நோட்டைப் பார்க்க.

2. பாரதம் ஆனுசாஸனிகபர்வம் 149 ஸஹஸ்ரநாமாத்யாயம் 124, தர்ம: - தர்மம் ஆசாரப்ரபவ: ஆசாரத்தைக்காரணமாக உடையது. தர்மஸ்ய- தர்மத்துக்கு- ப்ரபு: எஜமானன் அச்யுத: - பகவான்.

3. வாஸிஷ்டஸ்ம்ருதி 6-3 ஆசாரஹீனம் - ஆசாரமில்லாதவனை, வேதா: - வேதங்கள், நபுநந்தி பரிசுத்தம் செய்யாது.

4. தக்ஷஸ்ம்ருதி 2-22, ஸந்த்யாஹீந: - ஸந்த்யாவந்தனம் செய்யாதவன், நித்யம் எப்பொழுதும், அஶுசி: - பரிசுத்தமில்லாதவன்,ஸர்வகர்மஸு-எல்லாக் கர்மங்களிலும் அநர்ஹ: - தகாதவன்,

ஜனமாக உடையவனாய் பக்தி செய்கிறானேயானால், அவன் வைஷ்ண வர்களுக்குள் சிறந்தவனாகவே பஹுமானம் செய்யத்தக்கவன். அதாவது கீழ்ச் சொல்லியவர்களுடன் ஸமமானவன், என்று அர்த்தம். இது எத்தா

வதுகஶிதுஷ' என்றிவை முதலிய வசனங்களிருக்கும்பொழுது, கெட்ட நடத்தை உள்ளவனுக்கு எவ்விதத்தினால் ஸாதுவாக இருக்கை பொருந்தும், என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—வைஷ்ணவர்களுக்குள் சிறந்தவனாகவே' என்று. வேறொரு ப்ரயோஜனமுமில்லாமல் பக்திசெய்தல் வைஷ்ணவர்களுக்குள் சிறந்தவனாகுகைக்குக் காரணம். 1 'ஸாயவஃ க்ஷீணதோஷாஃ' என்று பகவானுகியபராசரர் சொல்லியிருப்பதினாலும் நாசமடைந்த பாவங்களை உடையவர்களுக்கு க்ருஷ்ணனிடத்தில் பக்தி உண்டாகும் என்று சொல்லி இருப்பதினாலும் இவ்விடத்தில் ஸாது என்னும்பதம் வைஷ்ணவர்களுக்குள் சிறந்தவனைச்சொல்லுகிறது என்று எப்படிச்சொல்லப்பட்டது? நல்ல ஆசாரமில்லாதவனை ஶிஷ்டர்கள் அங்கீகரிக்க மாட்டார்களாகையினால் அவன் ஸாதுவல்ல, என்பதே உசிதம். என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் 'ஶதவ்யஃ' என்று சொல்லப்படுகிறது, என்று காட்டுகிறார்- பஹுமானம் செய்யத்தக்கவன்' என்று. தானாகவே ஏற்பட்டதாகிய அறியத்தக்கவன் என்பதை மாத்திரம் சொல்லுவது ப்ரயோஜனமற்றது. ஸம் என்னும் உபஸர்கத்தை முன்னே உடைய 'மதி' என்னும் தாதுவுக்கு பஹுமானம் அர்த்தம். உபஸர்க்கத்தின் அர்த்தமும் தாதுவுக்குள்ளேயே அடங்கி இருக்கிறது, என்று தாத்பர்யம். ஶிஷ்டர்கள் அங்கீகரிக்காவிட்டாலல்லவோ அஸாது என்னும் ஆக்ஷேபமுண்டாகிறது, அதுவே இல்லை என்று சொல்லுகிறார்—கீழ்ச்சொல்லியவர்களுடன் ஸமமானவன்' என்று. 2 'விஷ்ணுவாகவே ஆகி' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலிய இடங்களில் ஸமம் என்கிற அர்த்தத்திலும் 'ஸாவ' என்பது ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது, என்று தாத்பர்யம். 'கீழ்ச்சொல்லியவர்களுடன்' என்பதற்கு மஹாத்மாக்களுடன், என்று அர்த்தம். நல்ல நடத்தை உடையவர்களும் கெட்டநடத்தை உடையவர்களும், பூர்ணமான உபாயத்தைச் செய்தவர்களும் குறைவான உபாயத்தைச் செய்தவர்களுமாகையினால் அவர்கள் உபாயத்தினால் ஸமமானவர்கள், என்பது இல்லை. ஆகையினாலேயே பரயோஜன

---

1 விஷ்ணுபுராணம் க்ஷீணதோஷாஃ தோஷமில்லாதவர்கள் ஸாதவஃ ஸாதுக்களாக ஸ்யுஃ ஆவார்கள்.

2 யஜுர்வேதம் 2 காண்டம் 1 ப்ரச்னம் 3 அனுவாகம் 13 பஞ்சாதி.

லேயேனில், எந்தக்காரணத்தினால் அவனுடைய நிஶ்சயமானது மிகவும் நல்லதோ.அதாவது பகவானாகிய நாராயணனே,எல்லா லோகங்களுக்கும் ஒரேகாரணம்,பரப்ரம்ஹம்,ஸ்த்தாவரம் ஜங்கமம் இவைகளுக்குஶேஷீ, எனக்கு.ஸ்வாமீ, எனக்கு ஆசார்யன், எனக்கு ஸ்நேஹிதன், எனக்கு

த்தினால் ஸமமானவர்கள் என்பதுமில்லை, என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் 'ஸுத்யகூ' என்று ஆரம்பிக்கப்படும் வாக்யம்,என்று அவதாரிகை சொல்லுகிறார். 'இது எத்தாலேயேனில்' என்று. எந்தக்காரணத்தினால்' என்பதற்கு 'ஹி' என்னும் பதம் காரணத்தைச் சொல்லுகிறது, என்று தாத்பர்யம். அவனுடைய நிஶ்சயம் நல்லது, என்பதை ப்ரதானமாக அறியப்படுகிற விஷயங்களைக்கொண்டு விசதப்படுத்துகிறார்- 'பகவானாகிய' என்று ஆரம்பித்து. பகவான் என்பதற்கு3 இரண்டுவிதங்களான அடையாளங்களையும் உடையவர் என்று அர்த்தம். எல்லாலோகங்களுக்கும் ஒரேகாரணம்' என்பதினால், இதுவே ப்ரம்ஹம் என்பதற்கு ஸாதகமாகிய ஶ்ருதியில் சொல்லப்படுகிற லக்ஷணம் சொல்லப்பட்டது. இத்தால் 1 'ஜ்ஞாதவ்யம்' என்று முன் சொன்னதும் ஞாபகப்படுத்தப்பட்டது. பொதுவான ஶப்தம் ஒரே ஸந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஶேஷத்திலேயே முடிவுபெறுகிறது,என்பதையும் 2 'நாராயணனே பரப்ரம்ஹம்' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலிய தத்துவத்தைப்பற்றிய நிஶ்சயத்தை உண்டாக்குகிற வாக்யங்களையும் அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு 'பரப்ரஹ்ம்' என்று சொல்லப்பட்டது. 'ஸ்த்தாவரம் ஜங்கமம் இவைகளுக்கு ஶேஷீ' என்கிற இடத்தில் 3 'லோகங்களுக்கு ஶேஷியாகவும் தனக்குத்தானே ஈஶ்வரனாகிய' என்றும் 4 'நமக்கு ஶேஷிகளானவர்களுக்கும் ஶேஷியாகிய'என்றும்அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைஅறியத்தக்கது இப்படிமேன்மையைப்பற்றியநிஶ்சயம்சொல்லப்பட்டது. பிறகுஸௌலப்யத்தைப்பற்றிய நிஶ்சயம் சொல்லப்படுகிறது-'எனகது ஸ்வாமீ' என்றாரம்பித்து. நான் அவனுடைய விபூதிக்கு வெளிப்பட்டவனல்லவே,தனக்கு ஶேஷமாகிய என்னை அடைவதற்கு இவன்தானே யத்னம் செய்கிறான் என்று தாத்பர்யம். இப்படி இரண்டு பதங்களினாலும் ஸ்வபாவத்தினாலேயே ஏற்பட்ட ஸம்பந்தம் காட்டப்பட்டது. மிகவும் மூடனாகிய எனக்கு நல்ல ஜ்ஞானத்தைக்கொடுத்து ப்பெரிய உபகாரம் செய்தவன் இவன் என்கிற அபிப்ராயத்தினால் 'எனக்கு ஆசார்யன்' என்று சொல்லப்பட்டது. எண்ணிறந்த மஹாபாதங்களைச் செய்துகொண்டிருக்கிற என்னிடத்திலும் நல்ல எண்ணத்துடன் கூடிய மனதை உடையவன் இவன் என்கிற அபிப்ராயத்தினால் 'எனக்கு ஸ்நேஹிதன்' என்று சொல்லப்பட்டது. மிகவும் அல்பமாயும்

---

1 பகவத்கீதை.9-13 2 தைத்திரீயம் நாராயணம் 6-11

3 தைத்திரீயம் நாராயணம்.6-11 4 ச்வேதாச்வதரம். 6-7.

மிகவும் சிறந்த அநுபவிக்கத்தக்க வஸ்து, என்று ஒருவராலும் அடையக் கூடாத இந்த நிஶ்சயம், இவனால் செய்யப்பட்டதோ. அதின் கார்யமாகிய

துக்கத்துடன் கலந்ததாயும் அழியக்கூடியதாயுமிருக்கிற ஸுகத்தின் திவலையில் ஆசையையுடைய எனக்கு எல்லையில்லாத மேன்மையை யுடைய தோஷங்களொன்றுமில்லாத அழிவில்லாத ஸுகத்திற்குஸமுத்திரமாகிய தன்னைக் காட்டித்தந்தான் என்கிற அபிப்ராயத்தினால் 'எனக்கு மிகவும் சிறந்த அநுபவிக்கத்தக்க வஸ்து' என்று சொல்லப் பட்டது. ஆசார்யனாகயிருக்கையும் ஸ்நேஹிதனாகயிருக்கையும் தன்னை அடைவிக்கும் தன்மையுள்ளவனாவதற்குக் காரணங்கள் அநுபவிக்கத்தக்கவனாயிருக்கையேயொவெனில் அடையப்படும் தன்மையுள்ளவனாவதற்குக்காரணம். 'ஒருவராலும் அடையக்கூடாத' என்பதற்குஉலகத்தை நிறைந்திருப்பவர்களிடத்திலும் இப்படிப்பட்ட நிஶ்சயம் கண்டறியப்படவில்லை, பொன்விளையும் இடத்திலும் கல்லின் துணுக்கை க்ரஹிக்கத்தக்கதல்ல, குப்பையிலும் ரத்னம் ஆதரிக்கததக்கது என்று தாத்பர்யம். 1 'பஹூநாம் ஜந்மநாமந்தே' என்றல்லவோ இப்படிப்பட்ட நிஶ்சயம் சொல்லப்பட்டது. ஸ்ரீபௌஷ்கரஸம்ஹிதையிலும் 2 'யேஜந்மகோடிபிஸ்ஸித்தா:' என்றும் 3 'அநேகஸம்ஸாரசிதே பாபௌகஸஞ்சயே। நாஸ்த்யக்ஷீணே' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீசுகரைகுறித்து ஜனகரும் 4 'ஜ்ஞாநஞ்ச வ்யவஸாயஶ்ச த்வௌ பரப்ராப்திஹேதுகௌ। வ்யவஸாயாத்ருதே ப்ரஹ்ம நாஸாதயதி தத்பரம்' என்று சொல்லியிருக்கிறார். நிஶ்சயம் உண்டானமாத்திரத்தினால் பக்தி செய்துகொண்டிருப்பவர்களோடு ஸமமாக இருத்தல் எப்படி ஸம்பவிக்கும் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்- 'அதின் கார்யமாகிய' என்று. 'ஸஞ்ஜாதோ' என்கிற இடத்தில் நிஶ்சயமும்,

1 பகவத்கீதை, 7-19.

2 ஸ்ரீபௌஷ்கரஸம்ஹிதை என்னும் பாஞ்சராத்ரஸம்ஹிதையே எவர்கள் ஜன்மகோடிபி: கோடி ஜன்மங்களினால ஸித்தா:ஸித்தியையடைந்தவர்களோ தேஷாம் அவர்களுக்கு அந்தே கடைசியில் அத்ர இந்தபக்தியில் ஸ்திதி:இருப்பு (உண்டாகிறது.)

3 அநேக ஸம்ஸாரசிதே அநேக ஜன்மங்களில் சேர்க்கப்பட்டபாபஸமுச்சயே பாவங்களின் கூட்டம் சித்தே மனதில் அக்ஷீணே நாசமடையாதிருக்கும்பொழுது நாஸ்தே (பகவான்) இருபதில்லை.

4 மஹாபாரதம் சாந்திபர்வம் மோக்ஷதர்மம் 334-47 ஜ்ஞானம் ஜ்ஞானமும் வ்யவஸாயச்சநிஶ்சயமும் த்வௌ இவையிரண்டும் பரப்ராப்திஹேதுகௌ. பகவானை அடைவிக்கக்கூடியவைகள் வ்யவஸாயாத்ருதே நிஶ்சயமில்லாவிட்டால் தத்அந்த ஜ்ஞானம் பரம் உயர்ந்த ப்ரம்ஹப்ரம்ஹத்தை நாஸாதயதி அடைவிக்கிறதில்லை.

வேறொரு ப்ரயோஜனத்தையும் அபேக்ஷிக்காத இடைவிடாத பக்தியும், அவனுக்கு இருக்கிறதோ. ஆகையினால், அவன் ஸாதுவாகவே பஹுமானம் செய்யத் தக்கவன். இப்படிப்பட்ட நிஶ்சயமும், அதின் கார்யமாகிய கீழ்ச்சொல்லிய விதமான பக்தியும் உண்டாயிருக்கும் பக்ஷத்தில் அவனுக்கு ஆசாரத்தை மீறி நடத்தல் ஸ்வல்பமான குறைவானதினால், அவ்வளவு மாத்திரத்தினாலேயே அவன் அநாதரவு செய்யத்தக்கவனல்ல. பின்னை எப்படியெனில் பஹுமானம்செய்யத்தக்கவனே என்று அர்த்தம்.

ப] கெட்ட நடத்தையிலிருந்து ஓய்வை அடையாதவனும், காமக்ரோதங்களின் வேகங்களை அடக்காதவனும் ஸாவதானமில்லாத மனதை உடையவனும் அடக்கப்பட்டமனதை உடைத்தாகாதவனும்ஜ்ஞானத்தினால் அவனை அடையமாட்டான்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவை களிருக்கிறபடியினால் நல்ல நடத்தையை மீறி நடந்தால் மேன்மேலே பக்தி உண்டாவதின் தொடர்ச்சியைத்தடுத்து விடுமே என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சோல்லுகிறார்—

க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா ஶஶ்வச்சாந்திம் நிகச்சதி।
கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணஶ்யதி॥ 31

வ்யவஸித:' என்கிற இடத்தில் பக்தியும் உள்ளடங்கியவைகள். வேறொரு ப்ரயோஜனத்தையும் உத்தேசிக்காமல் பக்தி செய்வதினாலுண்டாகக்கூடிய பஹுமானம் செய்யத்தகுந்தவனாவதற்குக்காரணமாகவன்றோ இந்த நிஶ்சயம் சொல்லப்பட்டது என்று தாத்பர்யம். குறைவில்லாமல் அநுஷ்டானம் செய்பவனைப்போலக் குறைவாக அநுஷ்டானம் செய்பவன் எப்படிபஹுமானம் செய்யத்தகுந்தவனாவான் என்கிறஆக்ஷேபத்திற்கு ஸமாதானம்சொல்லுகிறார்.-'அப்படிப்பட்ட'என்றாரம்பித்தது. இப்படிப்பட்ட புருஷன் விஷயத்தில் ஸ்வல்பமான குறையைக் காரணமாகக்கொண்டு அநாதரம் செய்வதே பெரிய அபசாரமாகும் என்று தாத்பர்யம். 1 'ஸ்ம்ருத: ஸம்பாஷிதோ வாபி பூஜிதோ வா த்விஜோத்தம:' 2 'ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம்' என்றிவை முதலிய ப்ரமாணங்களைக்காட்டவேண்டுமே என்கிற அபிப்ராயத்தினால்முடிக்கிறார்— 'பின்னை யெப்படி என்னில்' என்றாரம்பித்து. 30

---

1 (என்னுடைய பக்தன) ஸ்ம்ருத: நினைக்கப்பட்டவனாலும் ஸம்பாஷித: வா அபி வார்த்தை சொல்லப்பட்டவனாலும் பூஜித: வா பூஜைசெய்யப்பட்டவனாலும் த்விஜோத்தம ப்ராமஹண ச்ரேஷ்டனே பரிசுத்தம் செய்கிறான்.

2. காருடபுராணம் பூர்வகாண்டம் 219 அத்தியாயம் அஹம்யதா நான் எப்படியோ (அப்படியே) ஸ: ச அவனும பூஜ்ய: பூஜிக்கத்தக்கவன்.

ப-ரை] क्षिप्रं-சீக்கிரமாக, धर्मात्मा-பக்தியோகத்திலேயே மனதை உடையவனாக, भवति-ஆகிறான், शश्वत्-அழிவில்லாத, शान्तिं-சாந்தியை निगच्छति-அடைகிறான், कौन्तेय-ஓ அர்ஜுன, मे भक्तः-'என்னுடைய பக்தன், न प्रणश्यति-நாசமடைகிறதில்லை, (என்று) प्रतिजानीहि-நீ ப்ரதிஜ்ஞைசெய். 31

பா] என்னிடத்திலுண்டான அதிகமான ப்ரீதியினால் வேறொரு ப்ரயோஜனத்தையும் விரும்பாமல் என்னிடத்தில் பக்தி செய்வதினால் போக்கப்

தா] *மற்றவர்களுக்கு பஹுமானம் செய்யத்தக்கவன் என்பது இருக்கட்டும் தனக்குக் கார்யம் ஸித்திக்காதே, என்கிற ஆக்ஷேபத்தைமுன்னிட்டுக்கொண்டு மேல் ஶ்லோகத்திற்கு அவதாரிகை சொல்லுகிறார்-'கெட்ட நடத்தையிலிருந்து' என்று ஆரம்பித்து. ஶ்ருதிவாக்யத்திற்கு பகவானை அடைவதைமாத்திரம் மறுப்பதில் அபிப்ராயமில்லை. மற்று ஞானமும் உண்டாகாது, என்பதில் தாத்பர்யம். என்கிற அபிப்ராயத்தினால், 'மேன்மேலும் பக்தி யுண்டாவதின் தொடர்ச்சியை' என்று சொல்லப்பட்டது. அப்படியே 1'पापं प्रज्ञां नाशयति क्रियमाणं पुनः पुनः । नष्टप्रज्ञः पापमेव नित्यमारभते द्विज' என்று சொல்லப்படுகிறது. தடையாகிய ரஜஸ்தமோகுணங்களுக்குக் காரணமாகிய பாவங்களைப் போக்குவதற்காக அல்லவோ நல்ல ஆசாரம். அந்தப்பாவமும், என்னிடத்திலுண்டான பக்தியினாலேயே நிவ்ருத்தி செய்யப்பட்டிருக்கும்பொழுது உபாஸனம் செய்வதற்கு ஒரு தடையுமில்லை, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்-'என்னிடத்திலுண்டான அதிகமானப்ரீதியினால்' என்று ஆரம்பித்து அங்கங்களினால் குறைந்த கார்யத்திற்குப் பலமுண்டாகத்தாமதிக்குமே, என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரிப்பதற்காக 'क्षिप्रं' (சீக்ரம)என்று சொல்லியிருக்கிறது. இவ்விடத்தில் 'धर्म' என்னும் பதம் இந்த ஸந்தர்ப்பத்தை அனுஸரித்து வேறொருபலத்தையும் விரும்பாமல் செய்கிற பக்தியைச சொல்லுகிறது. 'आत्मा' என்னும் பதமும் அதற்குக்கருவியாகிய மனதைச்சொல்லுகிறது. 'यत्नात्मवः' 'आत्मा नास्त्यव' என்றல்லவோ*

1 *மஹாபாரதம் உதயோகபர்வம* 35-73 *புன:புன: அடிக்கடி க்ரியமாணம் செய்யப்படுகிற பாபம் பாவமானது ப்ரஜ்ஞாம்ஜ்ஞானத்தை நாசயதிநாசம் செய்கிறது. தவிஜப்ராம்ஹணனேநஷ்டப்ரஜ்ஞ: நாசமடைந்த ஜ்ஞானத்தையுடையவன் பாபமேவபாவததையே காத்தும் செய்ய ஆரபதே ஆரம்பிககிறான்.*

பட்ட பாவங்களை உடையவனுதலினல் அடியோடு போக்கப்பட்ட ரஜோ குணத்தையும் தமோ குணத்தையு முடையவனுய்க்கொண்டு சீக்கிரத்திலேயே தடை இல்லாததாயும் அங்கங்களுடன் கூடியதாயு மிருக்கிற என்னைக்குறித்து பக்திசெய்வதொன்றிலேயே மனதை உடையவனுகிருன். இப்படிப்பட்ட பக்தியே அல்லவோ † 'ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம்' என்று இந்த அத்யாயத்தின் ஆரம்பத்திலேயே தர்மம் என்னும் பதத்தினுல் சொல்லப்பட்டது. அழிவில்லாததாய் அதாவது மறுபடியும் திரும்பி உண்டாகாத தான என்னை அடைவதற்கு விரோதியான கெட்ட ஆசாரங்களின்

கிழும் மேலும் சொல்லி இருக்கிறது. பக்தியே பக்தியுண்டாவதற்குத்தடைசெய்கிறவைகளை நிவ்ருத்திசெய்கிறது, என்பது எப்படிப்பொருந்தும், என்கிற ஆக்ஷேபமும் ஸரியல்ல. ஏனெனில் பரிபூர்ணமான பக்தியே ப்ரயோஜனமாகையினுலும் பக்தியிலாரம்பம் காரணமாகையினுலும், இத்தையே 'சொல்லுகிருர்-'சீக்கிரத்திலேயே' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் தர்ம என்னு பதம்வர்ணுஸ்ரமதர்மங்களை மாத்திரம் சொல்வதாக இருக்கக்கூடாது' என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிருர்-'இப்படிப்பட்ட' என்ருரம்பித்து பொதுவான பதம் அந்த ஸந்தர்ப்பத்தில் ஏற்பட்ட விஸேஷத்தைச் சொல்லுகிறதென்பதே ந்யாயத்தை அனுஸரித்தது. இதே பதம் இந்த அத்யாயத்தின் ஆரம்பத்தில் பக்தியாகிற விஸேஷத்தைப்பற்றியதாக ப்ரயோகிக்கப்பட்டது. என்று தாத்பர்யம். பக்தியின் ப்ரபாவத்தினுல் பாவங்கள் நிவ்ருத்தியடைகின்றன என்பதிருக்கட்டும் அனுதாபமும் இல்லாமல் புத்தி பூர்வகமாகத் தொடர்ச்சியாகச் செய்யப்படுகிற கெட்ட நடத்தைகளின் கூட்டம் எப்படித்தடங்கல் செய்யாது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதான் 'ஶஶ்வச்சாந்திம் நிகச்சதி' என்பது. என்னை அடைவதற்கு விரோதியான கெட்ட ஆசாரங்களின் நிவ்ருத்தியை' என்பது இந்த ஸந்தர்ப்பத்திலேற்பட்ட 'ஶாந்திம்' என்கிற பதத்தின் அர்த்தம். 'ப்ரதி ஜாநீஹி' என்கிற இடத்தில் அறி என்று மாத்திரம் விதிக்கிறதாக இருந்தால் 'ப்ரதி' என்னும் உபஸர்கம் வ்யர்த்தமாகிறபடியினுலும் 'வாஸ்தோஷ்பதியே என்னைத்தெரிந்துகொள்' என்று அர்த்தமுள்ள ஸ்ருதிவாக்யத்தில் வேறுகதி இல்லாமையினுல் உபஸர்கம் வ்யர்த்தம் என்பதை ஒப்புக்கொண்டு இருக்கிறபடியினுலும் இவ்விடத்தில் தெரிந்துகொள், என்று விதிப்பதற்கு ப்ரயோஜனமில்லாமையினுலும் க்ரம

† பகவத்கீதை 9-33.

நிவ்ருத்தியை அடைகிறான். அர்ஜுனா? இந்த விஷயத்தில் நீயே ப்ரதிஜ்ஞை செய். என்னைக்குறித்து பக்திசெய்ய ஆரம்பித்தவன் விரோதமான நடத்தைகள் உள்ளவனாக இருந்தபோதிலும் நாசமடைவதில்லை. பின்னை எப்படியெனில், என்னைக்குறித்துச் செய்யும் பக்தியினுடைய ப்ரபாவத்தினால், எல்லாத்தடைகளுடைய கூட்டத்தையும் நாசம்செய்து அழிவில்

மாகத் தோன்றுகிற ப்ரதிஜ்ஞைசெய் என்கிற அர்த்தம், மிகவும் நிச்சயிக்கப்பட்டது, என்பதை ஸ்தாபிக்கிறபடியினாலே இவ்விடத்தில் அவச்யமாகையினாலும் சொல்லுகிறார்-அர்ஜுனா? இந்த விஷயத்தில் நீயே ப்ரதிஜ்ஞைசெய்' என்று. ப்ரதிஜ்ஞை செய்கிறேன் என்றுதான் ப்ரதிஜ்ஞைசெய்வதைவிட, ப்ரதிஜ்ஞைசெய் என்றுகேட்பவனைப்ரதிஜ்ஞைசெய்யவிதிக்கதற்கு இது மிகவும் ஸ்த்திரம், என்று அபிப்ராயம், என்று தெரிவிப்பதற்காக 'நீயே' என்று சொல்லப்பட்டது. 'நமேபக்த: ப்ரணச்யதி' என்கிற இது ப்ரதிஜ்ஞைசெய்யப்படுகிறவிஷயம், என்று தெரிவிப்பதற்காக, இந்த விஷயத்தில்' என்று சொல்லப்பட்டது. பரிபூர்ணமான உபாஸனத்தைச் செய்பவனுக்கு நாசம் வருவதற்கு ப்ரஸ்தாவமேஇல்லாமையினாலும் 1'நஹிகல்யாணக்ருத்' என்று கீழேசொன்னதே இங்கே சொல்லி இருப்பதினாலும், சொல்லுகிறார் - 'என்னைக் குறித்து பக்திசெய்ய ஆரம்பித்தவன்' என்று. பக்திசெய்ய ஆரம்பித்தவனும் பக்தன் என்று சொல்லப்படுகிறான் அல்லவா. 'பக்தனுக்கு நாசமில்லை' என்று சொன்னது 'ஸ்வல்பமபி' என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்ட விரோதிகள் நாசமுடைவது முதலாக உபாஸனம் பூர்த்தியடையுமளவும் முடிவைக்காட்டுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'பின்னை யெப்படியெனில்' என்று. இவ்விடத்தில் உபரிசரர் முதலியவர்களின் சரித்திரத்தை உதாஹரணமாக எடுத்துக்கொள்ளவேண்டியது. அதாவது பாஞ்சராத்ரதர்மத்தை அனுஷ்டித்துக் கொண்டிருந்த உபரிசரர் ஒரு ஸமயத்தில தேவதைகளுக்கும் ருஷிகளுக்கும் விவாதம் நேர்ந்தபொழுது ' மஹருஷிகளுக்கு விரோதமாக பிஷ்ட பசுவைப் பற்றிய பொய்மைச்சொல்லி கீழே வீழ்ந்தவராய் சீக்கிரத்திலேயே பகவானால் மேலுலகத்திற்கொண்டு விடப்பட்டார். அப்படியே 2'உபமானமசேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாபவத்' என்று ப்ரஸித்தியை அடைந்த ப்ரஹ்லாதனும் ஒரு ஸமயத்தில் பகவானை எதிர்த்து யுத்தம் செய்ய ஆரம்பித்து சீக்கிரத்திலே தானாகவே தெளிவை அடைந்தார். அப்படியே பாபியாகிய க்ஷத்ரபந்துவும் பகவானுடைய திருநாமங்

1 பகவத்கீதை-9-30.

2 விஷ்ணுபுராணம். 1-15-156. ய: எந்த ப்ரஹ்லாதன் அசேஷாணாம் எல்லா ஸாதூநாம் ஸாதுக்களுக்கு உபமானம் உதாஹரணமாக ஸதா எப்பொழுதும் அபவத் இருந்தானோ.

லாத விரோதிகளுடைய நிவ்ருத்தியை அடைந்து சீக்கிரத்திலேயே பரி
பூர்ணமான பக்தியை உடையவனுகிறுன். என்று. 31

𑌮𑌾𑌂 𑌹𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑍇𑌪𑌿 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌪𑌾𑌪𑌯𑍋𑌨𑌯𑌃 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌪𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ॥

𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑌾 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌸𑍁𑌖𑌂 𑌲𑍋𑌕𑌮𑌿𑌮𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌭𑌜𑌸𑍍𑌵 𑌮𑌾𑌮𑍍 ॥ 33

ப-ரை] 𑌪𑌾𑌰𑍍𑌥-அர்ஜுன, 𑌯𑍇-எந்த, 𑌪𑌾𑌪𑌯𑍋𑌨𑌯𑌃- பாவஜன்மத்தில் பிறந்த, 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃-ஸ்த்ரீகளும், 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌃-வைச்யர்களும், 𑌤𑌥𑌾-அப்படியே 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌃-சூத்ரர்களும். 𑌮𑌾𑌂-என்னை, 𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯-அடைந்து, 𑌸𑍍𑌯𑍁𑌃-இருப்பார்களோ, 𑌤𑍇𑌽𑌪𑌿-அவர்களும், 𑌪𑌰𑌾𑌂-மேலான, 𑌗𑌤𑌿𑌂-கதியை, 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿-அடைகிறுர்கள், 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌃-புண்யஜன்மத்தில்பிறந்த, 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 ப்ராஹ்மணர்களும், 𑌤𑌥𑌾-அப்படியே, 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑌃-ராஜருஷிகளும், 𑌭𑌕𑍍𑌤𑌾𑌃 பக்தர்களாகயிருந்துகொண்டு, 𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌃-கேழ்ப்பானேன், அதாவது அவர்கள் பக்திசெய்தால் நல்லகதியை அடைகிறுர்கள் என்பதைப்பற்றிக் கேழ்க்கவேண்டியதில்லை என்று தாத்பர்யம் (ஆகையினுல்) 𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌂-அழியக்கூடியதாயும், 𑌅𑌸𑍁𑌖𑌂- துக்கத்துடன் கலந்ததாயுமிருக்கிற, 𑌇𑌮𑌂-இந்த, 𑌲𑍋𑌕𑌂-லோகத்தை, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯-அடைந்திருக்கிற நீ 𑌮𑌾𑌂-என்னை, 𑌭𑌜𑌸𑍍𑌵 அடை. 32, 33

பா] ஸ்திரீகள் வைச்யர்கள் சூத்ரர்கள் ஆகிய பாவஜன்மத்தில் பிறந்தவர்களும் என்னை ஆஶ்ரயித்து மேலான கதியை அடைகிறுர்கள்.

தா] *களின்ப்ரபாவத்திஞல் அடுத்தஜன்மத்தில்முன்ஜன்மத்திலேநடந்ததை நினைத்துக்கொண்டு அதிகதுக்கத்தை உடையவனுகிப் பகவானைக் குறித்துச் ஶரணுகதிசெய்து மோக்ஷத்தை அடைந்தான். 'என்று' என்பதற்கு இந்த விஷயத்தில் என்பதோடுஅன்வயம் சொல்லவேண்டியது.*

'𑌕𑌷𑌿𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿𑌷𑍁 𑌪𑌾𑌪𑍇𑌷𑍁' என்று நடுவில் நேர்ந்தபாவங்களைச் சொல்லி இருக்கிறது. பிறகு பிறப்பிலேயே பாபிகளாக இருப்பவர்களுக்கு ஜாதி முதலியவைகளினுல் தாழ்வு இருந்தபோதிலும் தன்னை ஆஶ்ரயித்த மாத்திரத்திஞல் பலம் ஸித்திக்கும் என்று கீழே ப்ரஸ்தாவித்ததை விஸ்தாரமாக நிரூபித்து ஆகையினுலேயே ஜாதி முதலியவைகளினுல்மேன்மையும் இருந்து பக்தி பூர்ணமாகஇருந்தபோதிலும் கைமுதிகந்யாயத்தையும் சொல்லி ஜாதி முதலியவைகளினுல் மேன்மையை உடைய நீ பலத்தில் ஸந்தேஹமில்லாமல் உபாயத்தைச்செய், என்று இந்த இரண்டுஶ்லோகங்களினுலே சொல்லப்படுகின்றது. ஸ்த்ரீ, வைஶ்ய சூத்ரர்களுக்கு மேலானகதிக்கு விரோதமாக ஸந்தேஹிக்கப்பட்ட ஆகாரங்களை அநுவாதம் செய்வதற்காக '𑌪𑌾𑌪𑌯𑍋𑌨𑌯𑌃' என்

புண்ய ஜன்மத்தில் பிறந்த ப்ராஹ்மணர்களும் ராஜருஷிகளும் என்னி டத்தில் பக்திசெய்துகொண் டிருப்பவர்களாய் (மேலான கதியை அடை கிறார்கள் என்பது) கெழ்க்கவேண்டியதில்லை. ஆகையினுல்ராஜருஷியாகி யும் அழியக்கூடியதாய் தாபத்ரயங்களினுலேகெடுக்கப்பட்டிருக்கிற படியி

னும் பதம். இவ்விடத்தில் 'புண்யா: ப்ராஹ்மணா: பக்தா:' என்று அன்வயம் சொல்லவேண்டியது. மூன்று வர்ணங்களுக்குட்பட்டவனும் வித்யை முதலியவைகளை உடையவனுகவுமிருக்கிற வைஶ்யனை ஶூ த்ரன் முதலியவர்களுடன்கூட பாபஜன்மத்தில் பிறந்தவர்களாக எண்ணி இருப்பது அவனுக்குஸத்ரமென்னும் யாகத்தில் அதிகாரமில் லாமையினுல். ஸத்ரத்தில்,யஜமானர்களெல்லோரும் ருத்விக்குகள் அல் லவோ. அப்படி ருத்விக்காக இருக்கக்கூடிய தன்மையும் ப்ராம்மணர் களுக்கே உள்ளது. அப்படிப்பட்ட ஸத்ரத்தில் அதிகாரமாகிய மேன் மையும் 1 ஆகையினுல் வாஜபேயயாகம் செய்த க்ஷத்ரியன் ருத்விக்கு ஆவதற்குரியவன்' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தில் க்ஷத்ரிய னுக்கும் உண்டு, என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'பாபயோநி:'என் கிறபதத்திற்கு ப்ரதிபாக இருப்பதினுல், 'புண்யா:' என்னும் பதம் புண்யஜன்மத்தில் பிறந்தவர்கள் என்பதைச் சொல்லுகிறது, என்று காட்டப்பட்டது. 'கிம்புந:' என்று ஆரம்பித்துக் கைமுதிகந்யாயத் தைச் சொல்லி இருப்பதினுல் அவர்களுக்கு ஆயாஸமில்லை,என்பதைக் காட்டி இருக்கிறது. ராஜருஷிகளைக் குறித்திருப்பது அர்ஜுனனுக் குப் பலம் ஸித்திக்கும் என்று. சொல்வதற்காக, என்கிற அபிப்ராயத் தினுல் சொல்லுகிருர்—'ஆகையினுல்' என்று ஆரம்பித்து. ராஜருஷி யாகியும் என்னும்பதத்தினுல் ஸாமர்த்தியமுண்டு, என்று காட்டப்பட் டது.'அழியக்கூடியதாயும்' என்பது முதலிய வாக்கியத்தினுல் பலத்தில் ஆசை உள்ளவனுக இருக்கை சொல்லப்படுகிறது. 'அநித்யம் என்னு ம் பதம்' 2 'ஸததவிக்ரியா' என்று சொல்லி இருக்கிறபடி அடிக்கடி மாறுதலடையும் ஸ்வபாவத்தை உடையதென்று சொல்லுகிறது, என் று தெரிவிப்பதற்காக 'அழியக்கூடியதாயும்' என்று சொல்லி இருக்கிற து, இவ்விடத்தில் அஸுகம் என்னும் பதம் ஸுகத்தைவிட வேறுன து என்கிற அர்த்தத்தினுல் துக்கத்தைச்சொல்லுகிறது, என்பதையும் ஸம்ஸாரத்திலுண்டாகும் ஸுகமும் துக்கத்திலேயே சேர்ந்ததாகை யினுல் ஸுகமில்லை, என்று சொல்லுகிறது என்பதையும், அபிப்ராயத் தில் வைத்துக்கொண்டு சொல்லுகிருர்- 'தாபத்ரயங்களினுல்' என்று ஆரம்பித்து. இமம் (இந்த) என்பதினுல் மிகவும் அல்பமானது, என்று காட்டப்பட்டது. ப்ராப்ய (அடைந்து) என்பது அனுவாதம், என்று

1 யஜுர்வேதம் அஷ்டகம். 2 பரமஸம்ஹிதை.

ணுல் துக்கரூபமாகிய இந்த லோகத்தை அடைந்திருக்கிற நீ என்னை அடை. 32-33

பா] பக்தியின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறூர்—

மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு |
மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண: || 34

ஸ்ரீகண்ணபிரான் அருளிச்செய்த கீதையில
ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீகிருஷ்ணுய பரமாத்மனே நம:

[ப-ரை] மத்பக்த:-என்னிடத்தில் பக்தி உள்ளவனுய்க்கொண்டு, மந்மநா:-என்னிடத்தில் செலுத்தப்பட்டமனதை உடையவனுகவும், மத்யாஜீ-என்னை ஆராதனம் செய்பவனுகவும், பவ-ஆகிவிடு, மாம்-என்னை, நமஸ்குரு-நமஸ்காரம் செய், மத்பராயண:- என்னையே முக்யமான ஆதாரமாக உடையவனுய்க்கொண்டு, ஏவம்-இப்படி, ஆத்மாநம்-மனதை, யுக்த்வா-என்னிடத்தில் செலுத்தி, மாமேவ-என்னையே, ஏஷ்யஸி-அடையப் போகிறுய். 34

[பா - எல்லாவற்றிற்கும் ஈஶ்வரர்களாக இருப்பவர்களுக்கு மீஶ்வரனுக

[தா] தெரிவிப்பதற்காக 'அடைந்திருக்கிற' என்று சொல்லப்பட்டது. இப்படி அநித்யமாக இருப்பதையும் ஸுகமில்லாமலிருப்பதையும், அல்பமாக இருப்பதையும் அறிந்துகொள்வதினுல் பக்திசெய்வதில, பராங்முகனுக இருப்பது நிவ்ருத்தித்துவிடும். (அதாவது பக்திசெய்ய ஆசையுண்டாகிவிடும்) என்று தாத்பர்யம். 32-33

'மத்ஜ' என்று கீழ்ச்சொல்லிய பகதியின் ஸ்வரூபததைப் பற்றிய நிருபணம் அடுத்த ஶ்லோகததில் செய்யப்படுகிறதென்று ஸங்கதியைக் காட்டுகிறூர்—'பக்தியின் ஸ்வரூபத்தைச்சொல்லுகிறூர்' எனறு. பொதுவாக எலலாப பரவித்யைகளிலும உபாஸிக்கததககவைகளாகவும அதற்கு உபயோகமுள்ளவைகளாகவும் அனேக ப்ரமாணங்களினுல் நிருபிக்கபபடட ஸ்வரூபம், ரூபம், குணம முதலியவைகள இங்கு மத் என்னும் பதத்தினுல் சொல்லபபடுகின்றன என்கிற அபிபராயததினுல் சொல்லுகிறூர்—'எல்லாவற்றிற்கும்' என்றூரம்பித்து 1 'ஈஶ்வரர்களுக்கும் உயர்நத மஹேஶ்வரனுகிய அவனை' என்றும் 2 'அவனுக்கு ஒருவனும் ஈஶ்வரனுவதிலலை' என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்களின் அர்த்தத்தைச் சொலலுகிறூர்—எல்லாவற்றிற்கு மீஶ்வரர்களாக இருப்பவர்களுக்கு மீஶ்வரனுகவும்' என்று ஸாமர்த்தியமிலலாதவர்களை உபாஸிப்பதினுல் ஒரு பலமும் கிடைககாதல்லவா வேறு ப்ரம்ஹாண்டத்துககு ஈஶ்வராகளாகாத பரம்ஹா ருத்ரன் இவர்கள் மோக்ஷத்தைக்

1 ஶ்வேதாஶ்வதரம 6 7. 2 தைத்திரீயம நாராயணம் 1 9.

வும், எல்லாக்கேட்ட குணங்களுக்கும் விரோதமாகவும், கல்யாணகுண ங்களுக்குமுக்யமான இடமாகவும்,எல்லாம் தெரிந்தவனுகவும், ஸத்யஸங் கல்பனுகவும், எல்லாலோகங்களுக்கும் ஒரே காரணமாகவும், பரப்ரும்ம

கொடுக்க ஸக்தர்களல்லஎன்று தாத்பர்யம். 1, க்ஷேத்ரஜ்ஞஸ்ய ஈஸ்வரஜ்ஞா நாத்விஸுத்திஃபரமாமதா’ என்றல்லவோ சொல்லப்படுகிறது. கெட்ட குணங்களுக்கிருப்பிடமாயும் நல்ல குணங்களில்லாதவனுகவும் இருப்ப வன்உபாஸிக்கத்தக்கவனல்ல ஆகையினுல் மற்றவர்களைவிட வ்யத்யாஸம் ஏற்படுவதற்காக 2 ‘ஸகுண ஸ்ருதிகளுக்கும் நிர்குணஸ்ருதிகளுக்கும் விஷயங்கள் ஏறபட்டிருக்கிறபடியினுல் 3 இரண்டுவித அடையாளங்கள் உள்ளவன் என்பதைசசொல்லுகிருர் —‘எல்லாக்கெட்ட குணங்களுக் கும்’ என்றுரம்பித்து.‘எல்லா அனிஷ்டங்களையும் நிவ்ருத்தி செய்கிறவ னுகையினுலும் எண்ணிறந்த அனுபவிக்கத்தக்க குணங்கள் நிறைந்தவ ஞ யிருப்பதினுலும் இவனே உபாஸிக்கத்தக்கவன் என்றபிப்ராயம். எண்ணிறந்த கல்யாண குணங்களைக்காட்டுவதற்காக, த்யானிக்கத்தக்க வஸ்துவுக்கு லக்ஷணங்களாகச்சொல்லப்பட்ட லோகங்களுக்குக்காரண மாக இருக்கைக்கும் மோக்ஷத்தைக்கொடுக்கிறவனுக இருக்கைக்கும் உபயோகமான இரண்டு குணங்களும் ‘எல்லாம் தெரிந்தவனுகவும் ஸத் யஸங்கல்பனுகவும்’ என்று சொலலப்பட்டன. 4 ‘எவன் எல்லாவற் றையும் தெரிநதுகொண்டவனே எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாகபபார் க்கிருனே எவனுடைய ஸங்கல்பம் ஜ்ஞானரூபமோ அவனிடத்திலிரு ந்து பேர்ரூபம் இவைகளையுடையதாய் ஜீவர்களால் அனுபவிக்கக்கூடிய இந்த ப்ரக்ருதி உண்டாகிறது, என்றும் 5 ‘ஸதயகாமன் ஸத்ய ஸங்கல் பன’ என்றும் அர்த்தமுள்ள ஸ்ருதிவாக்யங்கள் இதில் ப்ரமாணங்கள் அனிஷ்டத்தைப்போக்குதல் முதலிய காரியங்களில் இவனுக்குத்தெரி யாததும் ஒத்தாசையை எதிர்பார்க்க வேண்டியவனுக இருக்கையும இல்லை என்று தாத்பர்யம். 6 ‘எந்த வஸ்துவினிடத்திலிருநது இநத ப்ராணிகளுண்டாகின்றனவோ’ என்றுரம்பித்து ‘அதை உபாஸனம் செய்’ என்றும் 7 ‘காரணமாகிய வஸ்துவே த்யானம் செய்யத்தககது’ என்றும் அர்த்தமுள்ள ஸ்ருதிவாகயங்களை நினைத்துக்கொண்டு ‘எல் லாலோகங்களுக்கும் ஒரேகாரணமாகவும்’ என்று சொல்லப்பட்டது.

---

1 யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி 3-1-34 க்ஷேத்ரஜ்ஞஸ்ய ஜீவாத்மாவுக்கு ஈச்வரஜ் ஞானத் பகவானை அறிவதினுல் பரமா உயர்ந்த விசுத்தி: சுத்தியாகமதா எண்ணப் பட்டது.

2 முதல் வால்யூம் 306வது பக்கம் 1 புட்னேட்டைப்பார்க்க.

3 முதல் வால்யூம் 456 வது பக்கம் 1 புட்னேட்டைப்பார்க்க.

4 முண்டகோபநிஷத் 1-1-9. 5 சாந்தோக்யம் 8-1-5. 6 தைத்திரீயம் ப்ருகு வல்லீ 1. 7 அதர்வசிகா

மாகவும்,புருஷோத்தமனாகவும்,தாமரைப்பூவின்இதழ்கள்போலத் தெளிந்தும்விஶாலமுமானகண்களைஉடையவனாகவும்,அழுக்கற்றகறுத்த மேகத்திற்கு ஸமமானவர்ணத்தை உடையவனாகவும்,ஒரேகாலத்திலுதித்த ஆயி

'எல்லா' என்னும் பதத்தினால் அவ்யக்தம் முதலியவைகளையும் ப்ரம்ஹா ருத்ரன் முதலியவர்களையும் சேர்த்துச்சொல்லியிருக்கிறது. மும்மூர்த்திகளைவிட மேலான ஆகாசம் உண்டென்றும் பரம்ஹம் குணங்களற்றது என்றும் சொல்லுகிற வாதங்களை நிராகரித்திருப்பதையும் ஒரே இடத்திலிருக்கும் பொதுவான பதமும் விஶேஷத்தைச் சொல்லுகிற பதமும் ஒரே அர்த்தத்தைச்சொல்லும் என்பதையும் நினைத்துக் கொண்டு 'பரப்ரம்ஹமாகவும் புருஷோத்தமனாகவும்' என்று சொல்லப் பட்டது. இத்தால் எல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாக இருக்கையும் எல்லாவற்றையும் விட வேறுபட்டவனாக இருக்கையும் விருத்தங்களல்ல என்று காட்டப்பட்டது நாராயணானுவாகமும் புருஷ ஸூக்தம் முதலியதும் ஞாபகப் படுத்தப்பட்டது. இவ்வளவால் எல்லாவற்றிற்கும் மேலான ஸ்வரூபம் சொல்லப்பட்டது, பிறகு எல்லா வேதங்களிலும் ஓதப்படுகிற புருஷஸூக்தம் முதலியவைகளில் ஏற்பட்டதும் ஶுபாஶ்ரயத்தைப்பற்றிச் சொல்லுமிடங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டதுமான திவ்யமங்கள விக்ரஹமும், அதின் குணம் முதலியவைகளும் சொல்லப்படுகிறது. 1 'அவனுடைய கண்கள் ஸூர்யனால் மலரச்செய்யப்பட்ட தாமரைப்பூ எப்படியோ அப்படி (யிருக்கின்றன) என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில் சொல்லப்பட்ட மேன்மையின் அடையாளத்தைச் சொல்லுகிறார்.—'தாமரைப் பூவினிதழ்கள்போல' என்றாரம்பித்து. 'அழுக்கற்ற' என்பது முதலிய வாக்யத்தினால் 2 'கறுத்தநிறமுள்ள மேகத்தை நடுவிலே உடைய' என்றாரம்பித்துச் சொல்லுகிற ஶ்ருதிவாக்யம் நினைக்கப்பட்டது, அழுக்கற்றிருக்கையாவது ரத்தினம் கண்ணாடி ஜலம் முதலியவைகளைப் போல தூரத்திலிருக்கும் வஸ்துக்களை ப்ரகாசம் செய்யக் கூடியதுமான ஒருவிதமான தெளிவு 3 'திவி ஸூர்ய ஸஹஸ்ரஸ்ய' என்று மேலே சொல்லப் போகிறதையும்' 4 ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற அவனையே எல்லாம் அனுஸரித்து ப்ரகாசிக்கின்றன. என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்தையும் அபிப்ராயத்தில் வைத்துக் கொண்டு 'ஒரே காலத்திலுதித்த' என்றாரம்பித்துச் சொல்லப் பட்டது. கைகள் உதாரமா யிருக்கையாவது ஶ்ருதி முதலியவைகளில் ஏற்பட்ட பலமுள்ளவைகளாக இருக்கையும் இஷ்டமான பலங்களைக் கொடுக்கையும் எந்த இடத்தில் வேறு ரூபம் சொல்லப்பட வில்லையோ அந்த இடத்தில் இந்தக் கீதையைச் சொல்லுகிற க்ருஷ்ணனுடைய ரூபமே சொ

1 சாந்தோக்யம் 1-6-7. 2 தைத்திரீயம் நாராயணம் 11-1 2.3 பகவத்கீதை 11,12. 4 முண்டகோபநிஷத் 2,2,10.

ரம் ஸூர்யன்களுக்கு ஸமமான காந்தியை உடையவனாகவும், அழகாகிற அம்ருதம்நிறைந்த ஸமுத்திரமாகவும், உதாரமாயும், பருத்துமிருக்கிற நான்கு புஜங்களை உடையவனாகவும், மிகவும் ப்ரகாஶமுள்ள பீதாம்பரத்தைத் தரித்தவனாகவும், நிர்மலமான கிரீடம், மகர குண்டலங்கள், ஆரங்கள், தோள்வளைகள், கடகங்கள் இவைகளால் அலங்கரிக்கப் பட்டவனாயும், அளவில்லாத காருண்ணியம், ஸௌஶீல்யம்; ஸௌந்

ல்லப்படுகிறது. அதுவும் மற்ற எல்லா அவதாரங்களையும் குறிக்கிறது. நான்கு கைகளை உடைத்தாயிருக்கை பகவானுடைய க்ருஷ்ணனுக்கும் பரவாஸுதேவ ரூபத்திற்கும் ஸ்வபாவத்திலேற்பட்டது. இரண்டு கைகளை உடைத்தா யிருக்கை ஆயிரம் கைகளை உடைத்தாயிருக்கை முதலியவைகளெல்லாம் அந்தந்த ஸமயங்களில் வைத்துக்கொண்டவைகள் என்கிற அபிப்பிராயத்தினால் 'நான்கு புஜங்களை யுடையவனாகவும்' என்று சொல்லப்பட்டது. 1'அபவாபி வதுர்புஜம்' 2ஹேவாஜெஸுதுர்ஃபிர்புஜெகுபேதம் விஶிஷ்டம் திவி ஸம்ஸ்திதம் வ। ஹெஷதம் ஷ்பஜயதா ரூபெயம் ஸதாஹிந்வஸாமிதெஹொ ॥ என்பதுமுதலியது இவ்விடத்தில் நினைக்கத் தக்கது. திவ்யமான பீதாம்பரத்தின் சேர்த்தியைச் சொலலுகிறார். 'மிகவும் ப்ரகாசமுள்ள' என்றாரம்பித்து. சிரஸ்ஸுமுதல் திருவடி வரையிலும் திவ்ய அவயவங்களிலிருக்கும் எல்லா ஆபரணங்களின் கூட்டங்களைக் குறிப்பதற்காகக் கிரீடம் முதலியவைகளைச்சொல்லியிருக்கிறது. 3 "ஙெயஸ்ஸதா என்றாரம்பித்து' " கெயூரவாந் மகரகுண்டலவாந் கிரீடீ என்பது முதலியது அறியத் தக்கது. மகரகுண்டலங்கள், என்னும் பதம் மகரம்

1. அதவாபி அதுவுமல்லாமல், சதுர்புஜம் நான்குகைகளை உடையவராக இருக்கிற,

2 தேவா:—ஓ தேவர்களே, சதுர்பி:—நான்கு, புஜை:—கைகளோடு, ஸமுபேதம் கூடிக்கொண்டதாயும், விஶிஷ்டம் 'உயர்ந்ததாயும், திவி பரமபதத்தில், ஸம்ஸ்திதம்ச இருப்பதாயுமிருக்கிற, அப்ரமேயம் அளவிடமுடியாத, ஏதத் இந்த, பூமௌ பூமியில், கதம் இருக்கிற, ரூபம் - ரூபத்தை, அர்ச்சயத - அர்ச்சனைசெய்யுங்கள், ஹி - எந்தக்காரணத்தினால், தஸ்மின் - அந்த ரூபத்தில், ஸதா - எப்பொழுதும் நிவஸாமி - வஸிக்கிறேனோ.

3 நாரஸிம்மபுராணம், 62,17, ஶ்லோகம், த்யேயஸ்ஸதா ஸவித்ருமண்டல மத்யவர்த்தீ நாராயணஸ்ஸரஸிஜாஸனஸன்னிவிஷ்ட:, கேயூரவான் மகரகுண்டலவான் கிரீடீஹாரீஹிரண்மயவபுர்த்ருத ஶங்கசக்ர: ஸவித்ருமண்டலமத்யவர்த்தீ ஸூர்யமண்டலத்தின் நடுவிலிருக்கிற, ஸரஸிஜாஸனஸன்னிவிஷ்ட:—தாமரைப்பூவாகிற ஆஸனத்தில் எழுந்தருளி இருக்கிற கேயூரவான் - தோள்வளைகளை அணிந்திருக்கிற மகரகுண்டலவான் - மகரகுண்டலத்தைச்சாற்றிய, கிரீடீ - கிரீடமணிந்திருக்கும், ஹாரீ—ஆரங்களை அணிந்திருக்கும், ஹிரண்மயவபு:—ஸ்வர்ணமயமான திருமேனியை உடைய, த்ருதஶங்கசக்ர:—ஶங்கசக்ரங்களைத்தரித்துக்கொண்டிருக்கும், நாராயண:—பகவான், ஸதா—எப்பொழுதும்த் யேய:—த்யானம் பண்ணத் தகுந்தவர்.

தர்யம், மாதுர்யம், காம்பீர்யம், ஔதார்யம், வாத்ஸல்யம், இவை களுக்கு ஸமுத்திரமாகவும், வ்யத்யாஸங்களை யோசிக்காமல் எல்லா

போன்ற ஆகாரத்தை யுடைய குண்டலங்களைச் சொல்லுகிறது, தேஜஸ்ஸு நிறைந்திருக்கையையும் விரோதிகளால் பார்க்க முடியாமையையும் அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு 'ஒரேகாலத்தி லுதித்த' என்பது முதலியது சொல்லப்பட்டது. 'அழகாகிற' என்பது முதலிய வாக்யத்தினாலோ வெனில் அதுவே ப்ரீதியுள்ளவர்களுக்கு அநுபவிக்கத்தக்கது என்பதும் மனதை இழுக்கத் தக்கது என்பது முதலியது சொல்லப்படுகிறது. கண்களுக்கு ஆனந்தத்தைத் தருகிற விசேஷமானதே ஜஸ்ஸல்லவோ அழகு என்று சொல்லப்படுகிறது. ஆகையினாலல்லவோ | '¹ தே சைநமநுஜக்முர்ஹி ஆத்ருஷ்டிவிஷயாத்புந: | லோசநைரநுஜக்முஸ்தம் ப்ரீதிஸமந்விதா: | அத்ருப்தமநஸாமேவம் தேஷாம் கேசவதர்சநே | க்ஷிப்ரமந்தர்ததே சௌரிஸ்சக்ஷுஷாம் ப்ரியதர்சந: | அம்ருதஸ்யேவ நாத்ருப்யந் ப்ரேக்ஷமாணா ஜநார்தநம் | '² நஹி தஸ்மாந் மந: கஸ்சிச்சக்ஷுஷீ வா நரோத்தமாத் | நர: சக்நோத்யபாக்ரஷ்டுமதிக்ராந்தேऽபி ராகவே' என்று சொல்லப்படுகிறது. 'அளவில்லாத' என்பது முதலிய வாக்யத்தினால்ஸௌலப்யத்துக்கு உபயோக முள்ளவைகளாகவும் அளவில்லாதவைகளாகவும் ஸௌந்தர்யம் முதலியவைகளோடு சேர்ந்தவைகளாகவும் ஆச்ரயிக்கதக்கவனாயிருப்பதற்கு அவச்யம் வேண்டினவைகளாகவும் இருக்கிற ஸ்வரூபம் ரூபம் இவைகளின் குணங்கள்சொல்லப்பட்டன. 3 'ஸர்வலோகசரண்யாய'

---

1 தே அந்த ராஜாக்கள் தம் அந்த க்ருஷ்ணனை, ஆத்ருஷ்ட்டி பதாத்புந:— கண்ணுக்குத்தெரியுமளவுமோ வெனில், லோசனை:—கண்களினால், அநுஜக்மு:— பின் சென்றார்கள். ப்ரீதிஸமன்விதா:—ப்ரீதியோடு கூடியவர்களாய், க்ருஷ்ணம் க்ருஷ்ணனை, மனோபிசமனதுகளினாலும், அநுஜக்மு:—பின்சென்றார்கள், கேசவதர்சனே-க்ருஷ்ணனைப்பார்ப்பதில், ஏவம் - இப்படி, அத்ருப்தமனஸாம் -த்ருப்தி இல்லாதமனதை உடைய, தேஷாம் - அவர்களுடைய, சக்ஷுஷாம் - கண்களுக்கு, ப்ரியதர்சன:—ப்ரியமான பார்வையை உடைய, சௌரி:—க்ருஷ்ணன், க்ஷிப்ரம்மசீக்ரமாக, அந்தர்ததே - மறைந்தார், ஜனார்தனம் - க்ருஷ்ணனை, ப்ரேக்ஷமாணா:—பார்த்துக்கொண்டிருக்கிற அந்த அரசர்கள், அம்ருதஸ்யேவ. — அம்ருதத்தின் விஷயத்திலேபோல, நாத்ருப்யன்-த்ருப்த்தியை அடையவில்லை.

2 ஸ்ரீமத் ராமாயணம், அயோத்தியா காண்டம், 17, 13, ராகவே ராமன், அதிக்ராமதி தாண்டிச் செல்லும் பொழுது, கஸ்சித்:- ஒரு - நர:-மனிதனும், நரோத்தமாத்-புருஷோத்தமனாகிய, தஸ்மாத், அந்த ராமனிடத்தி லிருந்து, மன:-மனதையும், சக்ஷுஷீ வா - கண் காலையாவது, அபாக்ருஷ்ட்டும் இழுத்துக்கொள்ள, நஹி சக்னோதி - சக்தியுள்ளவனாக வில்லை யல்லவா,

3 ஸ்ரீமத் ராமாயணம், யுத்த காண்டம் — ஸர்வலோகஎலலாலோகத்துக்கும் சரண்யாய சரணமாக அடையத் தகுந்தவனாகிய,

லோகங்களுக்கும் ஶரண்யனுகவும், எல்லாவற்றிற்கும் ஸ்வாமியாகவும் இருக்கிற என்னிடத்தில் எண்ணெயின் தாரையைப் போல் இடை விடாமல் வைக்கப்பட்ட மனதை உடையவனாக இரு·

---

1 'ஸதோஷோவாப்யதோஷோவா' 2 'விபீஷணோ வா ஸுக்ரீவ யதிவா ராவண:ஸ்வயம்' என்பவை முதலியவைகளை நினைத்துக்கொண்டு காருண்யம் முதலியவைகளினுல் ஏற்பட்ட குணத்தைச் சொல்லுகிறார் 'வ்யத்யாஸங்களை' என்றாரம்பித்து. தன்னை ஆஶ்ரயித்தவர்களைக் காப்பாற்றுவதைத் தன்னுடைய லாபமாக எண்ணி ப்ரவ்ருத்திக்கிறான் என்கிற அபிப்ராயத்தினுல் 'எல்லாவற்றிற்கும் எஜமானனுகவும்' என்று சொல்லப்பட்டது. 3 க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதமிதம் விஶ்வம் சராசரம் என்று சொல்லப்பட்டது. 4 'த்யானம் செய்யத் தக்கவன்' என்றும் 5 'த்யானம் செய்யக்கடவன்' என்றும் 6 'இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருத்தல்' என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் 7 'ஆவ்ருத்திரஸக்ருதுபதேஶாத்' என்கிற ஸூத்ரம் இவை முதலியவைகளை நினைத்துக்கொண்டு இவ்விடத்தில் மந: என்னும் பதம் த்யானம் என்கிற பேருடைய மனதின் ஒருவித வ்யாபாரத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'எண்ணெயின் தாரையைப்போல்' என்றாரம்பித்து. என்னிடத்திலேயே மனதைச் செலுத்து என்று சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் 'மாமேவைஷ்யஸி' என்று பலத்தில் என்னையே என்று சொல்லியிருக்கிறபடியினுல் உபாயத்திலும் என்னையே என்பது சொல்லப்படுகிறதென்று தோன்றுகிறது. அத்தால் வேறொன்றில் மனதைச் செலுத்தாமலிருத்தல் ஏற்பட்டது. அதினுலேயே எண்ணெயின் தாரையைப் போல இடைவிடாமலிருத்தலும் ஏற்பட்டது என்று தாத்பர்யம். 8 'இந்தப் பகவான் எவனை வரிக்கிறானே அவனுல் அடையத் தக்கவன்' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்தின் ·அர்த்தத்தை

---

1 ஸ்ரீமத் ராமாயணம், யுத்தகாண்டம் 18-5 (இந்த ராக்ஷசன்) ஸதுஷ்டோ வா மிகவும் துஷ்டவனுக இருந்தாலும் ஸரி அதுஷ்டோவா நல்லவனுக இருந்தாலும்சரி. (நமக்கு என்ன கெடுதி செய்யமுடியும்).

2 ஸ்ரீமத் ராமாயணம், யுத்தகாண்டம் 18-35 சுக்ரீவ ஓ சுக்ரீவா விபீஷணோவா விபீஷணனுக இருந்தாலும் சரி ராவண: ராவணன் ஸ்வயம் யதிதானே வந்திருந்தாலும் சரி (அழைத்துக்கொண்டுவா). 3 முதல்வால்யூம் - 452 வது பக்கம் புட்னோட்டைப்பார்க்க 4 ப்ருஹதாரண்யகம். 6-5-6 5 முண்டகோபநிஷத் 2-2-6. 6 சாந்தோக்யம் 7-26-2. 7 சாரீரக ஸூத்ரம் 4-1-1 (த்யானத்தின்) ஆவ்ருத்தி ஆவ்ருத்திசெய்வது அசக்ருத் அடிக்கடி (செய்யவேண்டியது) உபதேசாத் ஶ்ருதியில் சொல்லியிருக்கிறபடியினுல். 8 கடவல்லீ 1-2-23.

இதையே விசேஷித்துச் சொல்லுகிருர்—"மத்பக்த:" என்று அதிகமாக என்னிடத்தி லுண்டான ப்ரீதியோடு கூடியவனுய், என்னிடத்தில் செலுத்தப்பட்ட மனதை உடையவனுக இரு என்று அர்த்தம். மறு படியும் விஶேஷித்துச் சொல்லுகிருர் —"மத்யாஜீ". என்று. எல்லை இல் லாத மேன்மையை உடைய ப்ரியமாகிய என்னைப் பற்றிய அனுபவத்தி ஞல் செய்விக்கப்பட்ட என்னுடையஆராதனத்தில் எப்பொழுதும் ஆசை உள்ளவனுக இரு. ஆராதனமாவது பரிபூர்ணமான கைங்கர்யம். அதா

விசதப்படுத்துகிறது, என்றபிப்ராயத்தில் வைத்துகொண்டு சொல் லுகிருர்—'இதையே' என்று. பக்தியும் ஒரு விதமானஜ்ஞானமாகையி ஞல் த்யானத்தை விசேஷித்துச் சொல்லுகிருர் என்பது பொருந்தும் என்கிற அபிப்ராயத்திஞல் சொல்லுகிருர் 'அதிகமாக' என்ருரம்பித்து. தனியான வேறர்த்தத்தை விதிக்கிறதோ என்கிற ஸந்தேஹத்தை நிராகரிப்பதற்காகச் சொல்லுகிருர்— 'மறுபடியும்' என்று பக்தியின் ஸ்வரூபத்தின் விஶேஷத்தை நிரூபிக்கிற படியிஞல்அதற்கு அஸாதார ணமாயும் விஶேஷமான ஶாஸ்த்ரங்களில் நிரூபிக்கப்பட்டதாயு மிருக் கிற விசேஷமான பூஜையைச் சொல்லுகிறது இந்த யாஜீ என்னும் பதம் என்கிற அபிப்ராயத்திஞல் சொல்லுகிருர்—'ஆராதனமாவது' என் ருரம்பித்து. இதுவும் 1 'பத்ரம் புஷ்பம் பலம் தோயம்' என்பது முத லியவைகளால் காட்டப்பட்டதும் பஞ்சராத்ரஶாஸ்த்ரத்தில் விஸ்தாரமா கச் சொல்லப்பட்டதுமான ஆராதனத்தைப் பற்றிய சுருக்கமான விதி ஆகையிஞல் இவ்விடத்தில் யாஜீ என்னும் பதம் தர்ஶபூர்ணமாஸம்முத லிய யாகங்களைச் சொல்லுகிற தென்று ப்ரமிக்க வேண்டிய தில்லை. 2 'யஜ தேவபூஜாயாம்' என்றே படிக்கப்பட்டிருக்கிறது. தேவதை யைக் குறித்து த்ரவ்யத்தைக் கொடுத்தல் யாகம் என்று சொல்லுகி ருர்கள். அக்னி ஹோத்திரம் முதலியவைகளைவிட வேருகிய பஞ்சம ஹாயஜ்ஞங்களிலும் யாகம் என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட் டிருக்கி றது. வேறிடத்திலும் 3 'க்ருஷ்ணவாக்யைரிஜ்யதே ஸம்ப்ரஶ்னை:" என்றிவை முதலான ப்ரயோகங்களு மிருக்கின்றன. ஆகையி ஞல் இந்த இடத்தில் பஞ்சராத்ர ஶாஸ்த்ரம் முதலியவைகளில் விஸ் தாரமாகச் சொல்லப்பட்ட ஆரதனத்தைப பற்றியதே இந்த யாஜீ என்னும் பதம், என்கிற அபிப்ராயத்திஞல் சொலலுகிருர்—அதாவது

---

1 பகவத்கீதை 9-26 2 முதல் வால்யூம் 489 வது பக்கம் பார்க்க

3 மஹாபாரதம் ஆனுசாஸனிக பர்வம். 18-6 ஸம்ப்ரஶ்னை: பரம்ஹத்தை விசாரிக்கிறவர்களிஞலே க்ருஷ்ண: க்ருஷ்ணன் வாக்யை: வார்த்தைகளிஞல் இஜ்யதே ஆராதனம் செய்யப்படுகிருன்.

வது ஔபசாரிகம் ஸாம்ஸ்பர்ஶிகம், ஆப்யவஹாரிகம், முதலிய எல்லா உபசாரங்களையும் ஸமர்ப்பித்தலாகிய யாகம். எப்படி என்னைப் பற்றிய அனுபவத்தினு லுண்டாக்கப் பட்ட எல்லை இல்லாத மேன்மையை உடைய ப்ரீதியினுல் செய்விக்கப்படுகிற என்னுடைய ஆராதனத்தில் ஆசையுள்ளவனாக ஆகிருயோ அப்படி என்னிடத்தில் செலுத்தப்பட்ட மனதை உடையவனாய் இரு, என்று சொல்லப்பட்டதாகிறது. மறுபடியும் அத்தையே விசேஷிக்கிருர்—"ஶம நமஸ்குரு" என்று. எல்லையில்லாத மேன்மையையுடைய ப்ரியமாகிய என்னைப் பற்றிய அனுபவத்தினுல் செய்விக்கப் பட்ட மிகவும் ப்ரியமான எல்லாக் கைங்கர்யங்களிலும் த்ருப்தியை யடையாமல் அந்தராத்மாவாகிய என்னிடத்தில் அதிகமா

என்று ஆரம்பித்து. ஔபசாரிகம் ஆவது (உபசாரத்திற்காக ஸமர்ப்பிக்க வேண்டிய ஆரத்தி முதலியவைகள். ஸாம்ஸ்பர் சிகம், ஆவது (தொட்டு அனுபவிக்கத் தக்க) மாலை சந்தனம் முதலியவை. ஆப்யவஹாரிகம், ஆவது (நிவேதனம் செய்யக்கூடிய) தளிகை முதலியவைகள். முதலிய, என்னும் பதத்தினுல். ஸாந்த்ருஷ்டிகமாகிய (பார்த்து அனுபவிக்கக் கூடிய தீபம் முதலியவைகளும் சேர்த்துச் சொல்லப்படுகிறது. வெளி இந்த்ரியங்களினுல் செய்யப்படுகிற கார்யத்தைச் சொல்லுகிற 'யாஜீ' என்னும் பதத்தினுல் மனதைச் செலுத்துகிறது எப்படி விசேஷிக்கப்படுகிறது, என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிருர்—எப்படி என்று ஆரம்பித்து. மறுபடியும், என்பது முதலியதும் முன்போலவே. முன் சொலலப்பட்டதைவிட அதிகமானது, என்று காட்டுவதற்காக 'த்ருப்தியை அடையாமல், என்கிற வரையிலும் சொல்லப்பட்டது. மிகவும் ப்ரியமான, என்பதினுல் அந்தக்கைங்கர்யம் ஸ்வரூபத்திற்குத்தகுந்தது, என்று சொல்லப்படுகிறது. 'அதிகமான, என்னும் பதத்தினுல் அந்த வணக்கம் எல்லை இல்லாத ஸுகம், என்பது காட்டப்பட்டது. மூன்று விதங்களான வணக்கங்களையும் சேர்த்துச்சொல்வதற்காக 'நம' என்னும் தாதுவின் ஸ்வரூபத்தை நிரூபணம் செய்து வணக்கம்என்னும்பதம்ப்ரயோகிக்கப்பட்டது. 'ப்ரேக்ஷாவத: ப்ரவ்ருத்திர்யா ப்ரஹ்வீபாவாத்மிகா பரம். உத்க்ருஷ்டம் பரமுத்திஶ்ய தந்நம: பரிகீயதே' என்றல்லவோ நம: என்னும் பதம் வ்யாக்யானம்செய்யப்பட்டது. ஞானத்தையே விசேஷிக்கிறது, என்று தெரிவிக்கிறதற்காக 'நிஶ

4 அஹிர்புத்ன்ய ஸம்ஹிதை 52-10 உத்க்ருஷ்டம் உயர்ந்தவனாகிய பரம்உத்திஶ்ய பரமாத்மாவைக்குறித்து ப்ரேக்ஷாவத: புத்திமானுடைய ப்ரஹ்வீ பாவாத்மிகா வணக்கமாகிய பராஉயர்ந்த ப்ரவ்ருத்தி: வ்யாபாரம் யாஎதுவோதத் அது நம: நமஸ்காரம் (என்று) பரிகீயதே சொல்லப்படுகிறது.

ன வணக்கத்துடன் கூடிய நிஶ்சயத்தைச் செய். எவனுக்கு முக்யமாக அடைய வேண்டியவன் நானேயோ அவன் மத்பராயண: என்று சொல்லப்படுகிறான். என்னை விட்டுப் பிரிந்து ஆத்மாவைத் தரிப்பதே ஸம்பவிக்காதாகையினால் என்னையே ஆஶ்ரயித்தவனாய் என்றர்த்தம். இப்படி மனதைச் செலுத்தி என்னை ஆஶ்ரயித்துக் கொண்டிருக்கிற நீ இப்படி எல்லையில்லாத மேன்மையை யுடைய ப்ரீதியினால் என்னை அனுபவிக்கும் ஸாமர்த்யமுடைய மனதை அடைந்து என்னையே அடையப் போகிறாய். இவ்விடத்தில் ஆத்மா என்னும் பதம் மனதைச்சொல்லுகிறது. இப்படிப் பட்ட மனதினால் என்னை த்யானம் செய்து கொண்டும் என்னை நமஸ்காரம்செய்து கொண்டும் என்னை ஆஶ்ரயித்துக்கொண்டும் இருந்துஎன்னையே அடையப் போகிறாய் என்றர்த்தம். ஆகையினால் இப்படி லோகத்தில் ஏற்பட்ட

சயத்தை' என்று சொல்லுகிறது. 'பராயண:' என்கிற இடத்தில் பர என்கிற விஶேஷணத்தினுடைய ஸாமர்த்யத்தினால், 'என்னையே' என்பது அபிப்ராயமாகக் கொள்ளப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் 'நானேயோ' என்று சொல்லப்பட்டது. ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'என்னைவிட்டுப்பிரிந்து' என்று ஆரம்பித்து. இதுவே பக்தியின் உயர்ந்ததசை. பகவானை அடைவதற்கு அடுத்த முன்ஸமயத்தில வரக்கூடியது. ஆகையினால் பலத்தைப் பற்றிய ஆஶையைத் தெரிவிப்பதற்காக 'மத்பராயண:' என்று சொல்லி இருக்கிறார் என்று அபிப்ராயம். 'ஏவம்' என்னும் பதத்தினால் அனுவதிக்கப்படுகிறஅர்த்தத்தைசசொல்லுகிறார்—'எல்லை இல்லாத' என்று ஆரம்பித்து. 'ஆத்மாநம் யுக்த்வா' என்கிற பதங்களுக்கு இவ்விடத்தில் உசிதமான அர்த்தத்தைக்காட்டிஇருக்கிறது—'மனதை அடைந்து' என்று.'யுக்த்வா' என்பது அடைதல் என்கிற அர்த்தத்தையாவது யோகம் என்னும் அர்த்தத்தையாவது சொல்லுகிறது. இவ்விருவகையினாலும் 'மந்மநா:' என்று கீழ்ச்சொல்லிய அர்த்தத்தைச் சொல்லுகிறது, என்பது 'ஏவம், ஆத்மாநம்' என்கிற அனுவாதத்தினால் தோன்றுகிறது. என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இவ்விடத்தில் ஆத்மா என்னும் பதம்' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் மனதைச்சொன்னது த்யானத்திற்கு ஆதாரமாக இருப்பதினால்,என்று காட்டிக் கொண்டு ஶ்லோகத்தின் மொத்த அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'மத்பர:' என்று விஶேஷணம் சொல்லி இருப்பதினால் ஸுகமாக இருக்கிறது ; என்று ஏற்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால், என்னை அனுபவித்துக்கொண்டும், என்று சொல்லப்பட்டது. இனி ஸுகமாகத் தெரிந்துகொள்வதற்காக இந்த அத்யாயத்திற்கு முக்யமான அர்த்த

சரீரத்தைத்தரிப்பதற்காக ஏற்பட்ட கர்மங்களையும் வேதங்களில்ஏற்பட்ட நித்திய நைமித்திக கர்மங்களையும் என்னுடைய ப்ரீதிக்காக எனக்கு சேஷமாக இருக்கை ஒன்றையே ஸ்வரூபமாக உடைய நீ என்னால் செய்விக்கப்படுகிறாய் என்று செய்துகொண்டும் எப்பொழுதும் என்னுடைய நாமங்களைச் செல்லுவது என்னுடைய காரியங்களில் ப்ரயத்தினம் செய்வது என்னை நமஸ்காரம் செய்வது முதலியவற்றையும் ப்ரீதியினால் செய்துகொண்டும் என்னால் நியமிக்கப்படுகிற எல்லா லோகங்களும் எனக்கு சேஷமாக இருக்கையையே ஸ்வரூபமாக உடையது என்று அனுஸந்தானம் செய்து கொண்டும் மிகவும் ப்ரியமான என்னுடைய குணங்களின் கூட்டத்தையும் அனுஸந்தானம் செய்துகொண்டும் கீழ்ச் சொல்லிய

மாகிய எல்லா அங்க உபாங்கங்களோடும், ப்ரயோஜனத்தோடும்கூடிய பக்தியின் ஸ்வரூபத்தைச் சுருக்கமாக நிஷ்கர்ஷித்துச் சொல்லிக்கொண்டு முடிக்கிறார்—'இப்படி' என்று ஆரம்பித்து. 'ஆகையினால்' என்பதற்கு நீ, துக்கம் நிறைந்த ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தில் விழுந்து இருக்கிறபடியினாலும் மேன்மை ஸௌலப்யம் முதலியவைகளை உடையநான், எல்லாத் துக்கங்களாகிற ஸமுத்திரத்தைதாண்டிக்கரை சேர்ப்பதில் கப்பற்காரனாக இருப்பதினாலும், உபாயமும் மிகவும் ஸுலபமாகச்செய்யக்கூடியதாக இருக்கை முதலிய குணங்களை உடைத்தாய் இருப்பதினாலும், என்று அர்த்தம். 'இப்படி' என்பதற்கு முன் கிரந்தங்களில் சொல்லியபடி, என்று அர்த்தம். 'லோகத்திலேற்பட்ட' என்று ஆரம்பித்து, 'செய்துகொண்டும்' என்கிறவரையிலும் 1 'யத்கரோஷி' என்பவை முதலியவையின் அர்த்தம். 'என்னால் நியமிக்கப்படுகிற' என்பவை முதலியது. 2 'மயா ததம்' என்பவை முதலியதின் அபிப்ராயத்தைச் சொல்லி இருக்கிறது. 'மிகவும் ப்ரியமான' என்பது. 3 'ஸமோஹம்' 4 'பத்ரம் புஷ்பம்' என்பவை முதலியதின் அர்த்தம். குணங்களை அனுஸந்தானம் செய்யும்படிச் சொல்லி இருப்பதும், புருஷனால் செய்யக்கூடிய கார்யமாகையினால், உபாஸனம் என்கிற பதத்தின் அர்த்தம் என்பது உசிதம்தான் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்— 'என்னுடைய குணங்களின் கூட்டத்தையும்' என்று. 5 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:' என்பது முதலியது இங்கே நினைக்கப்பட்டது. 'கீழ்ச்சொல்லிய விதமான' என்பது முதலியது 'ஸததம் கீர்த்தயந்த:' என்பதின் தாத்பர்யம். மரணமடையும் தினம்வரையிலும் செய்ய

---

1 *பகவத்கீதை* 9-27. 2 *பகவத்கீதை* 9-4. 3 *பகவத்கீதை* 9-29. 4 *பகவத்கீதை* 9-26. 5 *பகவத்கீதை* 10-8.

விதமான இந்த உபாஸனத்தை தினந்தோறும் செய்து கொண்டிருந்து என்னையே அடையப்போகிறாய். 34

பகவத் ராமாநுஜன் என்னும் உடையவர் அருளிச்செய்த
ஸ்ரீகீதா பாஷ்யத்தில் ஒன்பதாவது அத்யாயம்
முற்றிற்று.

ஸ்ரீ பகவத்பாஷ்யகாராய நம:.
எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

வேண்டியது, என்று ஏற்படவேண்டியதற்காக 'தினந்தோறும் செய்து கொண்டிருந்து' என்று சொல்லப்பட்டது. 'கீழ்ச்சொல்லிய விதமான' என்பதற்கு வேறொரு ப்ரயோஜனத்தையும் ஆசைப்படாமலும், நமஸ்க்காரம் முதலியவைகளில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்யக்கூடியதும் என்னை ஒருவனையே தாரகனாக உடைத்தாய் இருக்கையாகிய தசைவரையிலுமான, எல்லை இல்லாத ப்ரியமாக இருக்கிற, என்று அர்த்தம். 34

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த
தாத்பர்ய சந்த்ரிகையில் ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஶ்ரீமத்யாமுநமுநயே நம:

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த கீதார்த்த ஸங்க்ரஹ ஶ்லோகம்

ஒன்பதாவது அத்யாயம், ஸங்க்ரஹம்.

ஸ்வமாஹாத்ம்யம் மநுஷ்யத்வே பரத்வம் ச மஹாத்மநாம் |
விஶேஷோ நவமே யோகோ பக்திரூப: ப்ரகீர்த்தித: 13

ஸ்வமாஹாத்ம்யம் தன்னுடைய மஹிமையும் மநுஷ்யத்வே மனுஷ்யனாக அவதரித்திருக்கும் தசையிலேயே பரத்வஞ்ச மேன்மையும் மஹாத்மநாம் ஜ்ஞானிகளுடைய விஶேஷ: விசேஷமும் பக்திரூப: பக்தியாகிய யோக: யோகமும் நவமே ஒன்பதாவது அத்யாயத்தில் ப்ரகீர்த்தித: சொல்லப்பட்டது.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிக னருளிச் செய்த

ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹரக்ஷை

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாயநம:

தன்னுடைய மஹிமை 1 'மயா ததமிதம் ஸர்வம்' என்றிவை முதலிய ஶ்லோகங்களில் நிரூபிக்கப்பட்டது. 2அவஜாநந்தி மாம் மூடா மாநுஷீம் தநுமாஶ்ரிதம் । பரம்பாவமஜாநந்தோ மமாவ்யயமநுத்தமம் என்று மனுஷ்யனாக அவதரித்திருக்கும் தசையிலும் தன்னுடைய மேன்மைக்கு அழிவில்லை என்பது சொல்லப்பட்டது. இப்பொழுதிருக்கும் அவதாரத்தில் தாத்பர்யத்தினால் மனுஷ்யனாக இருக்கும் தசையைச் சொல்லியிருக்கிறது. அதின் மூலமாக எல்லா அவதாரங்களிலேயும் மேன்மையாகிய ஸ்வபாவம் அழியாதது என்று குறிக்கப்பட்டது. இது கூரத்தாழ்வானாலும் 3'பரோ வா வ்யூஹோ வா விபவ உத வார்ச்சாவதரணோ

---

1 பகவத்கீதை 9-4. 2 பகவத்கீதை 9-11.

ஆரம்பித்து. 'எல்லாவஸ்துக்களும்' என்று ஆரம்பிக்கும் வாக்யத்தில் நியமனமாவது அவைகளைக்கொண்டு நிரூபிக்கவேண்டியதாக இருக்கிற படியினால் உத்பத்தி முதலியவைகளோடு சேர்த்து 'என்பதாகிய விபூதியை' என்று சொல்லி இருக்கிறது. உத்பத்தியும் ஸ்த்திதியும் பகவானுடைய ஸங்கல்பத்திற்கு அதீனமாக நடக்கிறபடியினால் நியமனத்துக்கு உட்பட்டவைகளே. ப்ரவ்ருத்தியாவது, தன்னுடைய கார்யத்திற்காகச் செய்யும் வ்யாபாரம், அசங்குதல் முதலியது எல்லா இடங்களிலும் ஸம்பவிக்காததாகையினால். 'விபூதிர்பூதிரைஶ்வர்யம்' என்று நிகண்டுவில் சொல்லி இருக்கிறது. விபு என்னும் பதமும் நியமிக்கிற புருஷனிடத்தில் ப்ரயோகிக்கப்படுகிறது. ஆகையினால் இவ்விடத்தில் விபுவாக இருக்கையாகிய நியமிக்கும்தன்மையையேசொல்லுகிறது. அதற்கு வ்யாபாரத்தைச்சொல்வதில் ஸ்வாரஸ்யமிருக்கையினாலும் அதற்கு ஒரு விரோதமும் இல்லாமையினாலும், வேறொருவஸ்துவைச் சொல்லும் பதங்களோடு சேர்க்குச் சொல்லப்பட்ட விபூதி என்னும் பதத்தில் நியமிக்கப்படுகிற வஸ்துக்களைச் சொல்வதாக மேலே சொல்லப்படுகிறது. 'யுஜ்யதே' (பகவானிடத்தில் சேர்ந்திருக்கிறது) என்னும் வ்யுத்பத்தியினால் இரண்டு விதங்களான அடையாளங்களை உடையவனாக இருக்கை இவ்விடத்தில் யோகம் என்று சொல்லப்பட்டது. பகவானிடத்தில் பகவானல்லாத வஸ்துக்களின் ஸ்வபாவங்களாகிய, பராதீனனாக இருக்கை, துக்கம், அஜ்ஞானம், முதலியவைகளை ஆரோபணம் செய்வதையும், பகவானல்லாத வஸ்துவினிடத்தில் ஈஶ்வரனுக்கு அதீனனாக இராமை, ஸ்வதந்த்ரனாக இருத்தல், தானாகவே உண்டானவனாக இருத்தல் முதலியவைகளை ஆரோபணம் செய்தலையும் விட்டு, என்று 'தத்த்வத:' என்பதின் தாத்பர்யம். 'ஸோ(அ)விகம்பேந' என்கிற இடத்தில் தனக்குச் சலிப்பதில்லை, என்கிற அர்த்தத்தை மாத்திரம் நீக்கி, அனேகங்களான விரோதங்களினாலும் சலிப்பிக்கத் தகாமை சொல்லப்படுகிறது, என்று காட்டுவதற்காக, 'அசைக்க முடியாத' என்று சொல்லப்பட்டது. முன்பின் ஸந்தர்ப்பங்களை யோசித்துப்பார்த்தும், உபாஸனம் செய்கிறவனைப்பற்றிச் சொல்லுகிறயோக என்னும் பதம் பக்தியோகமாகிற விஶேஷத்தைப் பற்றிச் சொல்லுகிற

---

1 ஸீதார்த்தஸங்க்ரஹம், 14.

யே அறிகிறேனோ, அவன் அசைக்கமுடியாத பக்தியோகத்தோடு சேருகி றான். இதில் ஸம்ஶயம் இல்லை, என்னுடைய விபூதியைப் பற்றியதும் கல்யாணகுணங்களைப் பற்றியதுமான ஜ்ஞானம் பக்தியோகத்தை வ்ருத் திசெய்கிறது, என்பதை நீயே பார்க்கப்போகிறாய், என்று அபிப்ராயம். 7

பா] விபூதியைப்பற்றிய ஜ்ஞானத்தின் பரிபாகமாகிய பக்தியின் வ்ருத்தியைக் காட்டுகிறார்—

𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌂 𑌬𑍁𑌧𑌾 𑌭𑌾𑌵𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥ 8

ப-ரை] 𑌅𑌹𑌂 நான், 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 எல்லா வஸ்துவுக்கும், 𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 உத்பத்திக்குக்காரணம், 𑌸𑌰𑍍𑌵𑌂 எல்லாம், 𑌮𑌤𑍍𑌤𑌃 என்னாலேயே, 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ப்ரவ்ருத்தி செய்கிறது, 𑌇𑌤𑌿 என்று, 𑌮𑌤𑍍𑌵𑌾 அறிந்துகொண்டு, 𑌬𑍁𑌧𑌾𑌃 ஜ்ஞானிகள், 𑌭𑌾𑌵𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ஆசையோடு கூடியவர்க ளாய், 𑌮𑌾𑌂 என்னைக்குறித்து, 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 பக்தி செய்கிறார்கள். 8

பா] நான் விசித்ரங்களாயிருக்கிற சேதநா சேதனங்களாகிய எல்லா ப்ர பஞ்சங்களுடையவும் உத்பத்திக்குக்காரணம், எல்லாம் என்னாலேயே

து, என்று சொல்லுகிறார்.— ‘பக்தியோகத்தோடு’ என்று. ஶாஸ்த்ரத் திலேற்பட்ட அர்த்தமும் ப்ரத்யக்ஷமாகப் பார்த்தபொழுதே அதிக விஶதமாகத்தெரியும், என்கிற அபிப்ராயத்தினால் ‘𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃’ என்பதின் அபிப்ராயத்தை விஶதப்படுத்துகிறார்.—‘என்னுடைய’ என்று ஆரம்பித்து. 7

தா] *கீழ்ச்சொல்லிய அர்த்தத்திற்கு மேலே உதாஹரணங்களைக் காண் பித்துக்கொண்டு விஸ்தாரமாக நிரூபணம் செய்யப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்.—‘விபூதியைப்பற்றிய’ என்றாரம்பித் து. அந்த ஜ்ஞானமே பக்தியாகமாறுகிறது என்கிற அபிப்ராயத்தினால் ‘ஜ்ஞானத்தின் பரிபாகமாகிய’ என்று சொல்லியிருக்கிறது. சுருக்கிச் சொல்லுவதற்குக் காரண மில்லாமையினால் 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 என்னும் பதம் கார்யங்களான ப்ரம்ஹா முதலிய எல்லா வஸ்துக்களை யும் சொல்லுகிறது என்கிற அபிப்ராயத்தினால் ‘ விசித்ரங்களா யிருக்கிற என்பதுமுதல் சொல்லப்பட்டது’ 𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 என்னும் பதம் இவ்விடத்தில் உத்பத்தி என்கிற க்ரியையை மாத்திரம் சொல்லுகிறது என்பதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்.—‘உத்பத் திக்குக்காரணம்’ என்று. இவ்விடத்தில் மேலே சொல்லப்போகிறபடி*

ப்ரவ்ருத்தி செய்கின்றன. என்று இப்படிப்பட்ட என்னுடையதாகிய ஸ்வபாவத்திலேயே ஏற்பட்ட தடை இல்லாத ஐஶ்வர்யத்தையும், ஸௌஶீல்யம் ஸௌந்தர்யம், வாத்ஸல்யம் முதலிய கல்யாண குணங்களின் சேர்க்கையையும் தெரிந்துகொண்டு ஜ்ஞானிகள் பாவத்தோடு கூடியவர்

யே ஸ்ருஷ்டிப்பதற்கு உபயோகமான கல்யாண குணங்களையுடையவனாக இருக்கையும் உள்ளடங்கியிருக்கிறது. ப்ரம்ஹா முதலியவர்களுடையவும் தங்கள் கார்யங்களில் ப்ரவ்ருத்தி செய்யும் சக்தி எனக்கு அதீனமானது, என்று 'ப்ரவர்த்ததே' என்பதினால் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எல்லாம் என்னாலேயே' என்று ஆரம்பித்து. முன்பு சொன்ன விபூதிமுதலியவைகளை அனுவாதம் செய்திருக்கிறது இது, என்பதைக்காட்டுகிறார்.—'என்று இப்படிப்பட்ட' என்பது முதல் 'ஸ்வபாவத்திலேயே ஏற்பட்ட தடை இல்லாத' என்னும் இரண்டு பதங்களினாலும், தாழ்ந்தவர்களான தேவதைகளை விலக்குவதற்காக ப்ருதியில் ஏற்பட்ட ஒரு காரணத்தினால் உண்டானதல்ல என்பதும், இதற்கு மேற்பட்டதில்லை என்பதும், சொல்லப்படுகின்றன. இப்பொழுது சொல்லுகிற க்ருஷ்ணாவதாரத்தின் ஸௌலப்யத்தைச் சொல்லுகிற 'மாம்' (என்னை) என்னும் பதத்தினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டதும் 'பஜந்தே' என்று மேலே சொல்லப்போகிற பக்திக்கு அதிக உபயோகமானதுமாகிய கீழேசொல்லிய 'மாம'என்னும்பதத்திற்கு அர்த்தமாகிய குணத்தைச் சொல்லுகிறார்—'ஸௌஶீல்யம்' என்று ஆரம்பித்து. 'ஸௌஶீல்யம் வாத்ஸல்யம்' என்றது பகவானுடைய ஸ்வரூபத்திலிருக்கும் குணங்களின் கூட்டத்தைக் குறிப்பதற்காக. 'ஸௌந்தர்யம்' என்றது பார்ப்பவர்களின் மனதைக் கவரக்கூடிய திவ்யமங்கள விக்ரஹத்தினுடைய குணங்களின் கூட்டத்தைக் குறிப்பதற்காக. இவ்விடத்தில் 'புதா:' என்னும் பதத்தினால் கீழ்ப்ரஸ்தாவிக்கப்பட்ட விஶேஷமான ஜ்ஞானத்தை உடைய முன்பு சொல்லிய மஹாத்மாக்கள் சொல்லப்படுகிறார்கள். என்கிற அபிப்ராயத்தினால் 'ஜ்ஞானிகள்' என்று சொல்லப்பட்டது. 'பாவஸமந்விதா:' (தெரிந்துகொண்டு, பாவத்தோடு கூடியவர்களாய்) என்று அன்வயம் சொல்லிக்கொள்ள வேண்டியது. இப்படிப்பட்ட ஜ்ஞானம் பக்திக்கு ஸாதனம் என்று சொல்வதில் இந்த ஶ்லோகத்திற்குத் தாத்பர்யமானதினால், 'மாம்' என்பதினால் இவ்விடத்தில் பக்தி செய்யும் பொழுது அனுஸந்தானம் செய்யத்தக்க குணங்களின் கூட்டங்களோடுகூடிய ஸ்வரூபம் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தி

களாய், எல்லாக் கல்யாண குணங்களையுமுடைய என்னைக்குறித்து பக்தி செய்கிறார்கள். பாவமாவது மனதின் ஒருவிதமான வ்யாபாரம் அதாவது என்னிடத்தில் ஆசை உடையவர்களாய் என்னைக்குறித்து பக்தி செய்கிறார்கள் என்று அர்த்தம். 8

பா] எப்படி—

மச்சித்தா: மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம்|
கதயந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச || 9

ப - ரை] மச்சித்தா: - என்னிடத்தில் வைக்கப்பட்ட மனதை உடையவர்களாய், மத்கதப்ராணா: - என்னிடத்திலேயே இருக்கிற ப்ராணனை உடையவர்களாய், பரஸ்பரம்-ஒருவருக்கொருவர், போதயந்த: - தெரிவித்துக்கொண்டும், மாம் - என்னை, நித்யம் - எப்பொழுதும், கதயந்தஶ்ச - சொல்லிக்கொண்டும், துஷ்யந்தி - (சொல்லுகிறவர்கள்)ஸந்தோஷத்தை அடைகிறார்கள், ரமந்தி-(கேட்பவர்களும்)த்ருப்தியைஅடைகிறார்கள், 9

பா] என்னிடத்தில் செலுத்தப்பட்ட மனதை உடையவர்களாய், என்னிடத்திலேயே இருக்கிற ப்ராணனை உடையவர்களாய், அதாவது, என்னைப் பிரிந்து ஆத்ம தாரணத்தையே அடையாதவாகளாய் என்றுஅர்த்தம்'

ஞல் 'எல்லாக் கல்யாணகுணங்களையு முடைய' என்று சொல்லப்பட்டது. அனேக அர்த்தங்களைச் சொல்லுகிற பாவ என்னும் பதத்திற்கு இந்த ஸந்தர்ப்பத்திற்கு அனுகுணமான அர்த்தத்தைச் சொல்லுகிறார்-'பாவமாவது' என்று ஆரம்பித்து. அந்த ஒருவிதமான வ்யாபாரத்தையே விஶதமாகச் சொல்லுகிறார்—'என்னிடத்தில் ஆசையை உடையவர்களாய்' என்று. 8

தா] 'பாவஸமந்விதா:' என்று கீழ்ச்சொல்லி இருப்பதற்கு விஸ்தாரமாகிய நிரூபணமே மேலே செய்யப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் அதைப்பற்றிய கேள்வியைக் காட்டுகிறார், 'எப்படி' என்று. •பக்தியின் பரிபாகம் வருகிற வரிசைக்ரமத்தினாலேற்பட்ட ஆகாரங்கள் 'மச்சித்தா:' என்கிற நான்கு விஶேஷணங்களினால் காட்டப்படுகின்றன, என்கிற அபிப்ராயத்தினால்—'என்னிடத்தில் செலுத்தப்பட்ட மனதை உடையவர்களாய்' என்பது முதலியது சொல்லப்பட்டது. 'மத்கதப்ராணா:' என்பதின் தாத்பர்யத்தைக் காட்டுவதற்காகப் பதத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'என்னிடத்திலேயே இருக்கிற' என்று ஆரம்பித்து. பக்தர்களிடத்திலிருக்கிற ப்ராணன் பகவானிடத்திலிருக்கிறது, என்பது எப்படிக்குப் பொருந்தும், என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானத்தைச் சொல்லுகிறார்—'என்னைப் பிரிந்து' என்று ஆரம்பித்து. 'போதய

தங்கள்தங்களால் அனுபவிக்கப்படுகிற என்னுடையகுணங்களை ஒருவர்க்கொருவர் தெரிவித்துக்கொண்டவர்களாயும், என்னுடைய, திவ்யங்களாயும், ரமணீயங்களாயுமிருக்கிற, கார்யங்களைச் சொல்லிக்கொண்டும், சொல்லுகிறவர்கள் வேறொரு ப்ரயோஜனமுமில்லாமல் அதைச் சொல்வதினாலேயே ஸந்தோஷத்தை அடைகிறார்கள். கேட்கிறவர்களும், எல்லை இல்லாத மேன்மையை உடைய, ப்ரியமாகிய அவர்கள் சொல்வதைக் கேட்பதினாலேயே த்ருப்தியை அடைகிறார்கள். 9

யஜ꞉ கயயஜ꞉' என்கிற இரண்டு பதங்களும் ஒரே அர்த்தத்தைச் சொல்வதாக இருந்தால் புனருக்தி தோஷம் வருமாகையினால் வெவ்வேறு அர்த்தம் சொல்லவேண்டும், அதில் 'பொயய ஜ꞉' என்பதினால் தெரியாத அர்த்தத்தைத்தெரிவிக்கிறதும் 'கபயஜ꞉' என்பதினால் நடந்த சரித்திரத்தைச் சொல்வதும் ஸ்வாரஸ்யமாகத் தோன்றுகின்றன, என்கிற அபிப்ராயத்தினால், 'தங்கள் தங்களால்' என்பது முதலியது சொல்லப்பட்டது. 'திவ்யங்களாயும்' என்பதினால் மனுஷ்யர்களால் செய்யமுடியாமையினாலேற்பட்ட ஆஶ்சர்யமாக இருக்கை சொல்லப்படுகிறது. அதுவே போக்யமாக இருக்கிறது என்பது 'ரமணீயங்களாயுமிருக்கிற' என்பதினால் சொல்லப்பட்டது. 'துஷ்யந்தி, ரமந்தி' என்கிற இரண்டு பதங்களும், சொல்லுகிறவர்களைப் பற்றியதாகவே இருந்தால் இவைகளுக்கு அதிக வ்யத்யாஸமுள்ள அர்த்தமில்லை யாதலினால் அதிக ப்ரயோஜனம் இல்லாமல் போய்விடுமாதலினால், ஒன்று சொல்லுகிறவர்களைபபற்றிய தென்பதும், மற்றொன்று சொல்லுகிறது, என்பதினால் ஏற்பட்ட கேட்கிறவர்களைப்பற்றியது; என்பதும் யுக்தம். அதிலும் தனக்கு வேறு பரயோஜனத்துக்கு ஸாதனமான அயலாருடைய ப்ரீதிக்காக அல்லவோ லோகத்தில் கதை சொல்வது பாக்கப்பட்டிருக்கிறது. 'தொஷ' என்னும் பதமும் அதிக ஆஶை இல்லாமையைக்காட்டுகிறது. ஆகையினாலிவ்விடத்தில் 'துஷ்யந்தி' என்பது வேறொரு ப்ரயோஜனததையும் எதிர்பாராமல் சொல்லுகிறவர்களைப்பற்றியது, மிகுதியாக இருக்கிறபடியினால் 'ரமந்தி' என்பது கேட்பதினாலுண்டானது, என்பது மேற்பட்டது. 'துஷ்யந்தி, ரமந்தி' என்கிற இவை இரண்டும் 'உவக்தார꞉' என்று கீழ்ச்சொல்லியதுபோல ஒரே புருஷனால் செய்யப்படுகின்றன, என்பதும் சொல்லுவதும் கேட்பதும் ஒரே மனுஷ்யனிடத்தில் வெவ்வேறு காலங்களில் ஸம்பவிக்குமாகையினால் விடப்படவில்லை. இவை யெல்லாவற்றையும்மனதில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'சொல்லுகிறவர்கள்' என்று ஆரம்பித்து, த்ருப்தியை அடைகிறார்கள். என்கிறவரையிலும். 9

தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் |
ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே || 10

ப - ரை] ஸததயுக்தாநாம் - எப்பொழுதும் என்னுடன் சேர்ந்திருக்க வேண்டும் என்கிற ஆசையையுடைய, பஜதாம் - பக்திசெய்துகொண்டிருக்கிற, தேஷாம் - அவர்களுக்கு, தே - அவர்கள், யேந - எந்த புத்தியோகத்தினால், மாம் - என்னை, உபயாந்தி - அடைகிறார்களோ, தம் - அந்த, புத்தியோகம் - புத்தியோகத்தை, ப்ரீதிபூர்வகம் - ப்ரீதியுடன், 10
ததாமி - கொடுக்கிறேன்.

பா] என்னிடத்தில் எப்பொழுதும்சேர்ந்திருக்கவேண்டும்என்கிறஆசையை உடையவர்களாய், என்னைக்குறித்து பக்தி செய்து கொண்டிருக்கிற அவர்களுக்கு, நான் அப்படிப்பட்ட பரிபாக தசையை அடைந்த புத்தியோகத்

தா] *பகவானுடைய குணங்களையும் விபூதியையும் பற்றிய ஜ்ஞானம் பக்தி உண்டாவதற்கும் வ்ருத்தி அடைவதற்கும் காரணம், என்பது சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட வ்ருத்தியை அடைந்த பக்தி பகவானை அடைவதற்கு முன்பு உண்டாகிற மிகவும் விசதமாகிய ப்ரத்யக்ஷமாகிய தசைக்குக் காரணம், என்பதும் அப்படி அதற்குக் காரணமாகுகையும் பகவானுடைய அநுக்ரஹமாகிய நடுவில் உண்டாகும் கார்யத்தை முன்னிட்டு என்பதும் இந்த ச்லோகத்தினால் சொல்லப்படுகிறது. 'என்னிடத்தில் எப்பொழுதும் சேர்ந்துகொண்டிருக்கவேண்டும் என்கிற ஆசையை உடையவர்களாய்' என்பதற்கு, எப்பொழுதும் ஸமாதியாகிய யோகம் செய்ய முடியாது. 'ஸததம்' என்னும் பதத்தினால் தினந்தோறும் என்று சொல்லப்படுகிறது, என்பதும் அவ்வளவு ரஸமல்ல, பகவானை அடைவதாகிய, எப்பொழுதுமுள்ள ஸம்பந்தம் இப்பொழுது உண்டாகவில்லை ஆகையினால் ஆசையை உடையவர்கள் என்கிற அர்த்தத்தைச் சொல்வதே உசிதம், என்று தாத்பர்யம். 'அப்படிப்பட்ட' என்பதற்கு அவர்களால் ஆசைப்படப்பட்ட என்று அர்த்தம், எப்பொழுதும் சேர்ந்திருக்கவேண்டும் என்கிற ஆசையினால் பக்தி செய்யும் பொழுது, அது ப்ரியமாக இருக்கும் என்று ஏற்பட்டபடியினால் 'ப்ரீதிபூர்வகம்' (ப்ரீதியோடு) என்பதற்கு, 'பஜதாம்' (பக்தி செய்கிற) என்கிற பதத்தோடு அன்வயம் சொல்லில் அவ்வளவு ப்ரயோஜனமில்லை. 'ததாமி' (கொடுக்கிறேன் என்கிற பதத்தோடு அன்வயம் சொல்லிலோவெனில், பக்தி செய்வதினால் நடுவில் உண்டாகக்கூடிய வ்யாபாரத்தைச் சொல்லுகிறபடியினாலும் மிகுந்த ஔதார்யம் முதலிய பகவானுடைய குணங்களை ப்ரகாசம் செய்கிற*

தை ப்ரீதியோடு கொடுக்கிறேன், எந்தப் புத்தியோகத்தினால் அவர்கள் என்னை அடைகிறார்களோ. 10

பா] மேலும்:

𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌮𑌹𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 𑌤𑌮𑌃 |
𑌨𑌾𑌶𑌯𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑍇𑌨 𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑌾 ‖ 11

ப - ரை] 𑌤𑍇𑌷𑌾𑌂 அவர்களுக்கு, 𑌅𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌂 அனுக்ரஹம் செய்வதற்காக, 𑌅𑌹𑌂 நான், 𑌆𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑌃 தங்கள் தங்கள் மனதிலிருந்து கொண்டு, 𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑌾 ப்ரகாஶித்துக்கொண்டிருக்கிற, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑍇𑌨 ஜ்ஞானமாகிற விளக்கினால், 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 கர்மத்தினாலுண்டான, 𑌤𑌮𑌃 இருட்டை, 𑌨𑌾𑌶𑌯𑌾𑌮𑌿 நாஶம்செய்கிறேன். 11

பா] அவர்களுக்கு அனுக்ரஹம் செய்வதற்காக நான், அவர்களின் மனதினுடைய வ்யாபாரத்தில் விஷயமாக இருந்துகொண்டு என்னுடைய கல்

தா] படியினாலும் அதிக ப்ரயோஜனம் இருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌦𑌦𑌾𑌮𑌿 ப்ரீதியோடு கொடுக்கிறேன் என்று அன்வயம் சொல்லப்பட்டது. ‘𑌉𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿’ என்கிற இடத்தில் பதங்கள் பதங்களின் அர்த்தங்கள் இவைகளை யோசிக்காத மூடர்களினால், ஐக்யத்தை அடைகிறார்கள் என்று வ்யாக்யானம்செய்யப்பட்டது. 10

கீழ்ச்சொல்லிய புத்தியோகம் உண்டாவதற்குத் தடையாயிருப்பதை நிராக்ரிக்கிறார் என்பது இந்த ஶ்லோகத்தினால் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்.—‘மேலும்’ என்று இவ்விடத்தில் ‘𑌅𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾’ என்னும் பதத்தினால் அனிஷ்டத்தைப் போக்கி இஷ்டத்தைக் கொடுப்பதற்குக்காரணமாய் 1 ‘𑌮𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌯’ என்று மேலே சொல்லப்போகிற விஶேஷமான கருணை சொல்லப்படுகிறது, ஸ்வபாவத்திலேயே ஏற்பட்ட கருணை மாத்திரத்தைச் சொல்லுகிறதா யிருந்தால், ‘𑌅𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌂’ (அனுக்ரஹம் செய்வதற்காக) என்பது வ்யர்த்தமாய்ப் போகிறபடியினால், என்கிற அபிப்ராயத்தினால் ‘அனுக்ரஹம் செய்வதற்காக’ என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் ‘𑌅𑌹𑌂’ (நான்) என்னும் பதத்தினால் அனுக்ரஹம் செய்வதற்கு உபயோகமான ஜ்ஞானம் சக்தி கருணை திவ்யமங்கள விக்ரஹம் முதலியவைகளோடு கூடிய ஸ்வரூபம் சொல்லப்படுகிறது. ‘மனதினுடைய வ்யாபாரத்தில்’ என்பதற்கு, ‘𑌆𑌤𑍍𑌮𑌭𑌾𑌵’ என்னும் பதம் இவ்விடத்தில் ஜீவாத்மாவின் ஸ்வபாவம் முதலியவைகளைச் சொல்லுவதாயிருந்தால் அதிக ப்ரயோஜனமில்லை, மனதினுடைய வ்யாபாரத்தைச் சொல்லுகிற

---

1 · பகவத்கீதை 11 · 1.

யாண குணங்களின் கூட்டங்களை ப்ரகாஶமாக்கிக்கொண்டு என்னைப் பற்றிய ஜ்ஞானமாகிற ப்ரகாஶித்துக்கொண்டிருக்கிற விளக்கினால் ஜ்ஞானத்திற்குத்தடையான பழய கர்மமாகியஅஜ்ஞானத்தினாலுண்டான, என்னைவிட வேறாகிய முன்பு பழகிய விஷயங்களில் ஆஶையாகிய இருட்டைநாஶம் செய்கிறேன். 11

தென்பதேதாவெனில் புத்தியோகத்தை உண்டாக்குவதற்கு மிகவும் உபயோகமானது, என்று தாத்பர்யம். எங்கும் வ்யாபித்து நிற்கிற பகவானுக்கு இதில் புதிதான இருப்பாவது எப்படிப்பட்டது என்கிறஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் 'விஷயமாக' என்று சொல்லப்பட்டது. விளக்காக நிரூபித்துச் சொல்லப்பட்ட ஜ்ஞானம் ப்ரகாஶித்துக்கொண் டிருக்கையாவது எங்கும் ப்ரகாசத்தை உண்டாக்குதல் அதாவது எல்லா ஸ்வபாவங்களையும் ப்ரகாசம் செய்தலாகவே இருக்கவேண்டும் அப்படிப்பட்ட விஶதமான அனுபவத்தினால் அஜ்ஞானம் நிவ்ருத்தியாவதும், ஶப்தம் முதலிய ப்ரக்ருதியின் ஸம்பந்தமுள்ள குணங்களில்ஆசை நிவ்ருத்தியாவதும் உண்டாகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'என்னுடைய கல்யாணகுணங்களின் கூட்டங்களை ப்ரகாசமாக்கிக்கொண்டு'*என்று. காரணமாகவும் காரியமாகவும் சொல்லியிருக்கிறபடியினாலே'அஜ்ஞாந''தம:' என்னும்பதங்களுக்கு வெவ்வேறு அர்த்தம் சொல்லவேண்டியது ஜ்ஞானத்திற்கு விரோதியாகையினால் கர்மத்தில் 'அஜ்ஞாந' என்னும் பதம் ப்ரயோகிக்கப்படுகிறது, அப்படியே 1 'அவித்யாகர்மஸம்ஜ்ஞாந்யா' என்று சொல்லப்பட்டிருக்கிறது கர்மத்தினாலுண்டாக்கப்படுகிறதும் பகவானை ப்ரத்யக்ஷமாகப் பார்ப்பதற்குத் தடங்கலாகவும் இருக்கிற தமஸ்ஸாவது வஸ்துவின் ஸ்வபாவத்தை அனுஸரித்து வேறு விஷயங்களிலாசையே, எல்லையில்லாத போக்யமாகிய பகவானைப்பற்றிய ஜ்ஞானம் மற்ற போக்யங்களில் ஆசையை நிவ்ருத்தி செய்கிறதென்பதுவும் யுக்தமே 2 'ஸ்திதேரவிந்தே' என்று சொல்லப்பட்டிருக்கிற நியாயத்தினால்; இவையெல்லாவற்றையும் அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு* 'ஜ்ஞானத்திற்குத் தடையான' *என்றிவை முதலியது சொல்லப்பட்டது. தம: என்னும் பதத்தினால் அவித்யையின் வ்யாபாரம் லக்ஷணையாகச் சொல்லப்படுகிறது என்றிவை முதலிய பக்ஷங்கள் நிராகரிக்கப்பட்டன. விஷயங்களில் ஆசை நிவ்ருத்தியடைந்த பிறகு பக்தியுண்டாகிறது; அப்படியிருந்தபோதிலும் மிகுதியான வாஸனையினால் தொடாந்திருக்கிற ஸூக்ஷ்மமான ஆசை இங்கு பக்தியினால் போக்கப் படுகிறதென்று சொல்லப்பட்ட தாகையினால் அந்யோந்யாஶ்ரயதோஷம இல்லை.* 11

1 விஷ்ணுபுராணம் 6 7 61. 2 ஸ்தோத்ரரத்னம் 27.

பா] இப்படி மற்றெல்லா வஸ்துக்களையும்விட வேறானதாகவும், பகவானுக்கே அஸாதாரணமாகவும், கேழ்ப்பவர்களுக்கு எல்லையில்லாத ஆனந்தத்தை உண்டுபண்ணுகிறதாகவும் இருக்கிற கல்யாண குணங்களின் ஸம்பந்தத்தையும் அவனுடைய ஐஶ்வர்யத்தின் ஸமூஹத்தையும் கேட்டு அவைகளின் விஸ்தாரத்தைக் கேழ்க்கவேண்டுமென்கிற ஆசையை உடைய அர்ஜுனன் சொன்னான்—

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 — அர்ஜுனன் சொன்னான்—

𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌂 𑌧𑌾𑌮 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌭𑌵𑌾𑌨𑍍 ।
𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌮𑌜𑌂 𑌵𑌿𑌭𑍁𑌮𑍍 ॥ 12
𑌆𑌹𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌮𑍃𑌷𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌰𑍍𑌨𑌾𑌰𑌦𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌅𑌸𑌿𑌤𑍋 𑌦𑍇𑌵𑌲𑍋 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌚𑍈𑌵 𑌬𑍍𑌰𑌵𑍀𑌷𑌿 𑌮𑍇 ॥ 13

ப-ரை] 𑌪𑌰𑌂 - உயர்ந்த, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - ப்ரஹ்மமும், 𑌪𑌰𑌂 - உயர்ந்த, 𑌧𑌾𑌮 - தேஜஸ்ஸும், 𑌪𑌰𑌮𑌂 - மேலான, 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 - பரிசுத்தியை உண்டாக்குகிற வஸ்துவும் 𑌭𑌵𑌾𑌨𑍍 - நீர், 𑌤𑍍𑌵𑌾𑌂 - உம்மை, 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 - அழிவில்லாத, 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 - புருஷனாகவும், 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 - பரமபதத்திலிருப்பவராகவும், 𑌆𑌦𑌿𑌦𑍇𑌵𑌂 - லோகங்களுக்குக் காரணமான தேவனாகவும், 𑌅𑌜𑌂 - பிறப்பில்லாதவனாகவும், 𑌵𑌿𑌭𑍁𑌂 - எங்கும் நிறைந்தவராகவும், 𑌸𑌰𑍍𑌵𑍇 - எல்லா, 𑌋𑌷𑌯𑌃 - ருஷிகளும், 𑌆𑌹𑍁𑌃 - சொன்னார்கள் 𑌤𑌥𑌾 - அப்படியே, 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌃 - தேவருஷியாகிய, 𑌨𑌾𑌰𑌦𑌃 - நாரதரும், 𑌅𑌸𑌿𑌤𑌃 - அஸிதரும், 𑌦𑍇𑌵𑌲𑌃 - தேவலரும், 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 - வ்யாஸரும் (சொன்னார்கள்), 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌚𑍈𑌵 - நீரும், 𑌮𑍇 - எனக்கு, 𑌬𑍍𑌰𑌵𑍀𑌷𑌿 - சொல்லுகிறீர் 12-13

பா] பரப்ரஹ்மம் என்றும், உயர்ந்த தேஜஸ் என்றும், உத்தமமான ஶுத்தியை உண்டாக்கும் வஸ்து என்றும், எந்த வஸ்துவை ஶ்ருதிகள் சொ

தா] '𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' என்று ஆரம்பித்து, '𑌅𑌮𑍃𑌤𑌂' என்னுமளவாக அர்ஜுனன் வார்த்தைக்கு முன்பின்ஸந்தர்ப்பத்தோடு ஸங்கதியைக் காட்டுகிறார்—'இப்படி' என்று ஆரம்பித்து 1 '𑌯𑍋𑌽𑌜𑌂' என்பது முதலியவைகளை நினைத்துக்கொண்டு 'மற்றெல்லா வஸ்துக்களையும் விட' என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்டது 2 '𑌤𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌰𑌮𑌨𑍍𑌤𑌿 𑌚' என்பதினால் சொல்லப்பட்டதைச் சொல்லுகிறார்— 'கேழ்ப்பவர்களுக்கு'

1 பகவத்கீதை 10-3 2 பகவத்கீதை 10-9

ல்லுகின்றனவோ. அந்த வஸ்து நீரல்லவோ * 'எந்தவஸ்துவினிடத்திலிரு ந்து இந்த ப்ராணிகளுண்டாகின்றனவோ, உண்டான ப்ராணிகள் எதி னுல் ஜீவிக்கின்றனவோ, லயத்தை அடையும்பொழுது எந்தவஸ்துவை அடைகின்றனவோ அதைத் தெரிந்துகொள். அதுவே ப்ரஹ்மம்' என்றும் † 'ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொண்டவன் மேலான ப்ரஹ்மத்தை அடைகி

என்று ஆரம்பித்து. 1 'விஸ்தரேணாத்மநோ யோகம்' 2 'விஸ்தரஶ:' என்று கேட்கிறவனாலும், பதில் சொல்லுகிறவராலும 'விஸ்தர' என் னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டபோதிலும் மேலே சொல்லப்போகிறது அர்த்தத்தின் விஸ்தாரமாகையினால் இங்கே இருக்கும் விஸ்தார என்னும் பதத்திற்கு அர்த்தத்தின் விஸ்தாரத்திலேயே தாத்பர்யம் என்று தெரிவிப்பதற்காக 'அவைகளின் விஸ்தாரத்தைக் கேட்கவே ண்டும் என்கிற ஆசையை உடைய' என்று சொல்லப்பட்டது. விஸ் தாரத்தைக் கேட்கவேண்டும் என்கிற ஆசையை உடைய அர்ஜுனன் சுருக்கமாக 'முன் சொல்லப்பட்ட விஷயம் தன்னால் அறியப்பட்டது என்பதையும், அது உண்மை 'என்கிற நிஶ்சயம் இருப்பதினால்' அதில் தனக்குப் பொறுமை இல்லை, என்பதையும் 'பரம் ப்ரஹ்ம' என்றிவை முதலிய ஶ்லோகங்களினால் காட்டுகிறான். இவ்விடத்தில் 'பவாந்' (நீர்) என்பது முதல் வேற்றுமையாக இருக்கிறபடியினால் 'ஆஹு:' (சொன்னார்கள்) என்று மேலே சொல்லியிருப்பதோடு இதற்கு அன் வயம் சொல்லமுடியாது 'பரம் ப்ரஹ்ம' என்பது முதலிய பதங்கள் முதலி லிருக்கிறபடியினால் அனுவாதம் செய்யப்படுகின்றன என்ப தும் 'பவாந், என்பதே விதிக்கப்படுகிற தென்பதும் ஏற்படுகிறது அனுவாதம் செய்யப்படுகிறவைகள் முன்னமேயே ஸித்தமாக இருக்கவேண்டியது; ஆகையினால் சொல்லுகிறர்—'எந்த வஸ்துவை ஶ்ருதிகள் சொல்லுகின்றனவோ அந்தவஸ்து நீரல்லவோ' என்று. இந்த மூன்று விஷயங்களிலும் முறையே ஶ்ருதி வாக்யங்களை எடுத் துக்காட்டுகிறார்—அதில் 'எந்தவஸ்துவி னிடத்திலிருந்து' என்றாரம் பித்து, உபாஸிக்கப்படுகிற ப்ரஹ்மத்தின் லக்ஷணத்தைச் சொல்லு கிற வாக்யம் குறிக்கப்பட்டது. இதற்குப் புரோவாதமாகவும் உபாஸிக்கப்படுகிற ப்ரஹ்மமே அடையத்தகுந்தது என்று தெரிவிப்ப தற்காகவும் 'பரம்' (மேலான) என்கிற விஶேஷணம் ஏற்பட வேண் டியதற்காகவும் 'ப்ரஹ்மத்தைத் தெரிந்து கொண்டவன்' என்பது முத

* தைத்திரீயம் ப்ருகுவல்லீ 1

† தைத்திரீயம் ஆனந்தவல்லீ 1.

1 பகவத்கீதை 10-18 2 பகவத்கீதை 10-19

றான்’ என்றும் *‘எவன் அந்தமேலான ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொள்ளுகிறானோ அவன்ப்ரஹ்மமாகவேஆகிறான்’என்றும்சொல்லியிருக்கிறது,அப்படியே‘மேலானதேஜஸ்’என்றும்,சொல்லி இருக்கிறது.‘பா:’என்பது தேஜஸ்

லியது சொல்லப்பட்டது. இரண்டு விஷயத்திலும் மிகவும் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிற வாக்யம் ‘எவன்’ என்றாரம்பித்துச் சொல்லப்பட்டது. ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் சாரீரக பாஷ்யத்தில் வ்யாக்யானம் செய்யப்பட்டது ஸ்வபாவம் ஒன்றாக இருக்குமிடத்திலும் ‘இது அந்தமாடுதான்’ என்பது முதலிய இடத்திலேபோல அதுவே என்று முக்யமாகச் சொல்லுவதுண்டு, ஆகையினால் ப்ரஹ்மத்துடன் மிகவும் ஸமமாக இருக்கிறபடியினால் ப்ரஹ்மமாகவே என்று ப்ரயோகித்திருப்பது முக்யமான ப்ரயோகம் போலவே என்று தாத்பர்யம் ‘இது அந்தமாடுதான்’ என்றுதாஹரணம் காட்டியிருப்பதுவும் ஸமமாக இருக்கையைக் காரணமாக உடைய வ்யவஹாரத்தைப் பற்றியதே. அன்றிக்கே இவ்விடத்தில் ‘ஸம’ என்பதற்கு போல என்றே அர்த்தம் சொல்லலாம் என்று சிலர் சொல்லுகிறார்கள் ஏனெனில் 1 ‘[illegible]’ என்று நிகண்டுவில் சொல்லியிருக்கிற படியினாலும், 2 ‘விஷ்ணுவைக் குறித்து வாமனம் என்கிற பசுவைக்கொண்டு யாகம் செய்யவேண்டும் சண்டை செய்துகொண்டு விஷ்ணுவாகவே இருந்து இந்த லோகங்களை ஜயிக்கிறான் என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்தில் அப்படியே ப்ரயோகித்திருக்கிற படியினாலும். பசுவைக்கொண்டு யாகம் செய்த மாத்திரத்தினால் இவன் விஷ்ணுவே ஆகவில்லையல்லவா. சண்டை செய்பவனுக்கு மோக்ஷத்தில் அதிகாரமே இல்லை. விஷ்ணுவாகவே ஆகிறான் என்றிவ்வளவு மாத்திரம் பலமாகச் சொல்லப்படவில்லை, பின்னை எதென்னில் இந்த லோகங்களை ஜயிக்கிறான் என்று ஸம்ஸாரத்திலுண்டான ப்ரயோஜனம் சொல்லப்பட்டது. ஆகையினால் பராக்ரமம்முதலிய குணங்களின் ஸம்பந்தத்தினால்விஷ்ணுவுக்கு ஸமமாகி இந்த லோகங்களை ஜயிக்கிறான், என்றே வாக்யத்திற்கு அர்த்தம். ஆகையினால் ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்று ஸமமாக இருக்கையினால் சேர்த்துச் சொல்லியிருக்கிறது. 3 ‘மேலான ஸாம்யத்தை அடைகிறான்’ என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்ய மிருக்கிறது. 4 ‘ஸாதர்ம்யமாகதா:’ என்று மேலேயும் சொல்லப்போகிறார் என்று தாத்பர்யம். ஶ்ருதியைக் காட்டுவதற்காக விஷயத்தை நிரூபிக்கிறார்—‘அப்படி

---

* முண்டகோபநிஷத் 3-2-9.

1-2 யஜுர்வேதம் 2-காண்டம் 1-17

3 முண்டகம் 3-1-3 4 பகவத்கீதை 14-2

என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது *'பிறகு இந்த ஆகாசத்திற்குமேல் எந்தத் தேஜஸ் ப்ரகாசிக்கிறதோ' என்றும், † 'மேலான தேஜஸ்ஸை அடைந்து தன்னுடைய ஸ்வரூபத்தோடு சேர்ந்தவன் ஆகிறான்' என்றும், ‡ அவனைத் தேவதைகள் தேஜஸ்ஸுக்க ளெல்லாவற்றிற்கும் மேலான

யே' என்றாரம்பித்து. (பகவானைச் சொல்லுகிற பதத்துடன்) சேர்த்துச் சொல்லி யிருக்கிறபடியினாலும் வேறு பதங்களோடு சேர்த்துச் சொல்லப்படாமையினாலும் ஸ்ருதிவாக்யங்களில் சொல்லப்பட்ட பகவானுடைய மேன்மையின் ப்ரகாரங்களை ப்ரகாசப்படுத்துவதில் தாத்பர்யமாகையினாலும் இவ்விடத்தில் 'பாஸ' என்னும் பதம் இடம் முதலிய அர்த்தத்தைச் சொல்லுகிறதென்பது யுக்தமல்ல, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'பாஸ என்னும் பதம்' என்றாரம்பித்து. 1 'விஷ்ணு என்று பேருடைய எல்லாவற்றிற்கும் ஆதாரமாகிய தேஜஸ்ஸு' என்றர்த்தமுள்ள வாக்யம் முதலியவற்றில் 'பாஸ' என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட் டிருந்தபோதிலும் 'பரம்பாஸ' என்கிற விசேஷணத்தோடு சேர்ந்த ப்ரயோகமில்லாததினால் அதற்கு ஸமமான பதமுள்ள வாக்யத்தைக் காட்டுகிறார்—'மேலான தேஜஸ்ஸை அடைந்து' என்றாரம்பித்து. 'பிறகு இந்த ஆகாசத்திற்குமேல்' என்றாரம்பிக்கும் வாக்யத்தினால் ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத லோகம் முதலியவைகளை உடையவனாக இருக்கையும், 2 'எல்லா ப்ராணிகளும், இவனுக்குக் கால்பாகம் என்றர்த்தமுள்ள வாக்யமிருக்கிற படியினால் புருஷ ஸூக்தத்தின் ஸந்தர்ப்பத்தில் சொல்லுகிற அர்த்தங்களையே இங்கும் சொல்லுகிறதென்று ஏற்படுகிறபடியினால் இஷ்டமான மற்றெல்லா அர்த்தங்களும ஏற்பட்டன. 'மேலானதேஜஸ்ஸை அடைந்து' என்றாரம்பிக்கும் வாக்யத்தினால் முக்தர்களினால் அடையத்தகுந்தவனாக இருக்கை முதலியதும் 'பரம்' என்கிற விசேஷணத்தோடு சேர்ந்த ப்ரயோகமும் ஏற்பட்டது. 'அவனைத்தேவதைகள்' என்றாரம்பிக்கும் வாக்யத்தினால் தேவதைகளினால் உபாஸிக்கத் தகுந்தவன் என்பதைச் சொல்லிக்கொண்டு அதின் மூலமாய் தேஜஸ்ஸுக்களுக்கெல்லாம் தேஜஸ்ஸு என்பதினால் மேலானது என்பதும் தானாகவேஏற்பட்டது. பகவானுக்கு அஸாதாரணமாயும் 'பரம்' என்னும் பதத்தினால் விசேஷித்துச் சொல்லப்பட்டதாக இருக்கிற பாவநமாக இருக்கையைக் காட்டுவதற்காகவும் 'பவித்ரம்' என்னும் பதம் பேர் என்பதை விலக்குவதற்காகவும் சொல்லுகிறார்—

* சாந்தோக்யம் 3-13-7
† சாந்தோக்யம் 8-12-2.
‡ ப்ருஹதாரண்யகம் 6-1-16.
1. 2. சாந்தோக்யம் 3-12-6

தேஜஸ்ஸாக உபாஸிக்கிறார்கள்' என்றும் சொல்லியிருக்கிறது, அப்படியே 'உத்தமமான பரிஶுத்தியைக் கொடுக்கக்கூடியவஸ்துவாகவும்அதாவது தன்னைநினைக்கிறவனுக்கு எல்லாப் பாவங்களையும்ஸம்பந்தப்படாமல்செய்பவனாகவும் நாஶம் செய்பவனாகவும் சொல்லியிருக்கிறது. *'எப்படி த்தாமரை இலையில்ஜலங்களொட்டுகிறதில்லையோ அப்படியேஇவ்விதமாகத்தெரிந்துகொண்டவனிடத்தில் பாபகர்மங்கள்ஒட்டுகிறதில்லை' என்றும் †'நெருப்

'உத்தமமான பரிசுத்தியைக்கொடுக்கக்கூடிய வஸ்து' என்று 'நாஶம் செய்பவனாகவும்' என்கிற இடத்திலும் 'எல்லாப் பாவங்களையும்' என்பதைப் பிரித்துச் சேர்த்துக் கொள்ளவும். 'கொளுத்தப்படுகின்றன' என்பதற்கு நாஶமடைகின்றன என்று தாத்பர்யம். ஸூத்ரமும் 1 'ததயிகம உத்தரபூர்வாகயோரஶ்லேஷவிநாஶௌ தத்வ்யபதேஶாத்' என்று சொல்லியிருக்கிறது. தத்வத்தைப் பற்றிய நிஶ்சயத்தை உண்டாக்குவதில தாத்பர்யமுள்ள நாராயணனுவாகத்திலும் பரப்ஹ்மமாக இருக்கை முதலியது 'ஹவாநு' (நீர்) என்று சொல்லப்பட்ட விஶேஷமான தேவதைக்கே என்பதை உறுதிப்படுத்துகிறார்—'நாராயணனே' என்றாரம்பித்து .இந்த வாக்யங்களில் முதலிலிருக்கும் நாராயண என்னும பதம் தொக்கியிருக்கும் வேற்றுமையை யுடையது. முதல் வேற்றுமையையுடைய மேல்வாக்யங்களுடன் சேர்த்துச்சொல்லப்பட் டிருக்கிறபடியினாலும் வேறு ஶ்ருதிகளில் முதல் வேற்றுமையுடனே படிக்கப்பட் டிருக்கிறபடியினாலும் முதல வேற்றுமையை யுடையதென்பதும் ஏற்பட்டது. இத்தால் நாராயணனைவிட மேலான ப்ரஹ்மம் என்று அர்த்தம் சொல்லும் பகவானிடத்தி த்வேஷமுள்ளவன் நிராகரிக்கப்பட்டான், ஶ்ருதி, ஸ்ம்ருதி, ஸூத்ரம், ந்யாயம் இவைகளுக்கு விரோதமாக இருககிறபடியினால். 'இப்படியல்லவோ ஶ்ருதிகள் சொல்லுகின்றன' என்கிற இடத்தில 'எந்த வஸ்துவினிடத்திலிருந்து' என்று அர்த்தமுள்ள வாக்யம் முதலாக கீழ்ச்சொல்லிய எல்லா வாக்யங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டியது. அந்தந்த அர்த்தம் விஶதமாவதற்காக அங்கங்கே வெவ்வேறு

* சாந்தோக்யம் 4-14-3. † சாந்தோக்யம் 5-24-3.

1 சாரீரக ஸூத்ரம் 4-1-13 தத் அந்த வித்யையின் அதிகமே ஆரம்பிக்கும் பொழுதே உத்தரபூர்வாகயோ: பின்னால் செய்யப்போகிற பாவங்களுக்கும் முன்பு செய்த பாவங்களுக்கும் அஶ்லேஷவிநாஶௌ ஒட்டாமல் இருத்தலும் நாசமும் உண்டாகின்றன அதாவது இனி செய்யப்போகிறபாவங்கள் ஒட்டுவதில்லை,முன்பு செய்தவைகள். நாசமடைகின்றன. என்றர்த்தம் தத் வ்யபதேசாத் அப்படி ஶ்ருதியில் சொல்லி யிருக்கிறபடியினால்.

பில்போடப்பட்ட தூலங்கள் எப்படி கொளுத்தப்படுகின்றனவோ அவ்விதமாகவே இவனுடைய எல்லாப் பாவங்களும் கொளுத்தப்படுகின்றன' என்றும் * 'நாராயணனே மேலான ப்ரஹ்மம், நாராயணனே மேலான தத்வம், நாராயணனே மேலான தேஜஸ்ஸு, நாராயணனே பரமாத்மா,' என்றுமிப்படி யல்லவோ ஶ்ருதிகள் சொல்லுகின்றன. உயர்ந்த தத்வம், தாழ்ந்த தத்வம் இவைகளின் உண்மையைத் தெரிந்த எல்லா ருஷிகளும் உம்மையே அழிவில்லாதவனாகவும், திவ்யனான புருஷனாகவும், எல்லாவற்றிற்கும் காரணமாகிய தேவனாகவும், பிறப்பில்லாதவனாகவும், எங்கும் நிறை

வாக்யமாக முடிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஶ்ருதியில ஏற்பட்ட அர்த்தம் ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் இவைகளாக இருக்கிற மஹருஷிகளின் வாக்யங்களாலும் ஶ்ருதியைப்போலவே மற்றொன்றை எதிர்பாராமல் ப்ரமாணமாகிய ஸர்வஜ்ஞனாகிய பகவானுடைய வார்த்தையினாலும் ஏற்பட்டது. என்று சொல்லுகிறார்,— 'புருஷம்' என்பது முதல் ஒன்றரை ஶ்லோகத்தில். 'எல்லா' என்பதினால் ஒருவருக்கும் இதில விவாதமில்லை என்பது சொல்லப்படுகிறது. 'உயர்ந்த தத்வம்' என்பது முதல் 'ருஷய:' என்பதின் அபிப்ராயத்தினாலேற்பட்டதைச் சொல்லி இருக்கிறது. இத்தால் அவர்களின் வார்த்தை நம்பத்தக்கதென்பது சொல்லப்பட்டது 'த்வாம்' (உன்னை) என்று சொன்னது ப்ரஹ்மா ருத்ரன் முதலான விஶேஷமான தேவதைகளை விலக்குவதற்காக, என்கிற அபிப்ராயத்தினால் 'உன்னையே' என்று சொல்லப்பட்டது. அன்றிக்கே அவதாரம் செய்திருக்கிற உம்மையே என்றர்த்தமாகவுமாம். 'ஶாஶ்வதம்' என்பதற்கு நித்யனான என்றர்த்தம். 'திவ்யம்' என்பதற்கு பரமபதத்திலிருக்கிற என்றர்த்தம். 'புருஷம்' என்பதற்கு. 1 'மேலானவர்களைவிட மேலானவனும் ஶரீரத்திற்குள் வஸிப்பவனுமாயிருக்கிற புருஷனைப் பார்க்கிறான்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில சொல்லப்பட்ட புருஷனாகவும் என்றர்த்தம். 'அழிவில்லாதவனாகவும் திவ்யனான புருஷனாகவும்' என்று மாறி எடுத்தது, பரமபதத்திலிருக்கிற புருஷன் புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் அழிவில்லாத இந்த லீலாவிபூதியைவிட மூன்று மடங்கதிகமான விபூதியுடன் கூடினவனாகவே நித்யன் என்பது இவ்விடத்தில்சொல்லப்படுகிறது, என்று தெரிவிப்பதற்காக. 'ஆதிதேவம்' என்பதற்கு ஆதியாகிய தேவன் அதாவது லோகங்களுக்குக்காரணமாயும் தனக்குவிளை

---

* தைத்திரீயம் நாராயணம் 11-3.

1 ப்ரஶ்நோபநிஷத் 6–5

ந்தவனாகவும் சொன்னார்கள். அப்படியே தேவருஷியாகிய நாரதரும் அஸிதரும், தேவலரும், வ்யாஸரும், சொன்னார்கள். * 'யே ச வேதவிதோ விப்ரா: யே சாத்யாத்மவிதோ ஜநா:। தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்॥ பவித்ராணாம் ஹி கோவிந்த: பவித்ரம் பரமுச்யதே। புண்யாநாமபி புண்யோ(அ)ஸௌ மங்களாநாஞ்ச மங்களம்॥ த்ரைலோக்யம் புண்டரீகாக்ஷோ தேவதேவஸ்ஸநாதந:। ஆஸ்தே ஹரிரசிந்த்யா

யாட்டாகிய லோகங்களை ஸ்ருஷ்டித்தல் முதலிய வ்யாபாரங்களை உடையவனாயிருப்பவன் என்றர்த்தம். ருஷிகளும் 1'க்ரீடதே பாலகோ யத்வத்' 2'க்ரீடா ஹரேரிதம் ஸர்வம்' 3'பாலஃ க்ரீடநகைரிவ' என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஸூத்ரகாரராலும் 4 'லோகவத்து லீலாகைவல்யம்' என்று சொல்லப்பட்டது. இத்தால் தேவஜாதிக் குட்பட்டவர்களாகிய ப்ரஹ்மா முதலியவர்களும் பகவானுடைய விளையாட்டுக்குக் கருவிகள்

** பாரதம் ஆரண்ய பர்வம் 76. 26, 27, 28 யேச எவர்கள் வேதவித: வேதம் தெரிந்த விப்ரா: ப்ராம்மணர்களோ யேச எவர்கள் அத்யாத்மவித: வேதாந்த சாஸ்த்ரம் தெரிந்தஜநா: ஜனங்களோ தே அவர்கள் மஹாத்மானம் மஹாத்மாவாகிய க்ருஷ்ணம் க்ருஷ்ணனை ஸநாதநம் அநாதியான தர்மம் தர்மமாக வதந்தி சொல்லுகிறார்கள் கோவிந்த: க்ருஷ்ணன் பவித்ராணாம் பரிசுத்தியை யுண்டாக்குகிற வஸ்துக்களுக்கெல்லாம் பவித்ரம் பரிசுத்தியை யுண்டாக்குகிறவனாக உச்யதே சொல்லப்படுகிறான் அஸௌ இந்த க்ருஷ்ணன் புண்யாநாம் புண்யங்களுக்கெல்லாம் மேலான புண்ய: புண்யமாகவும் மங்களாநாஞ்ச மங்களங்களுக்கெல்லாம் மேலான மங்களம் மங்களமாகவும் (சொல்லப்படுகிறான்) ஸநாதந: அநாதியாகிய தேவதேவ: தேவதைகளுக்கெல்லாம் தேவதையாகிய புண்டரீகாக்ஷ: தாமரைப் பூவைப்போன்ற கண்களையுடைய க்ருஷ்ணன் த்ரைலோக்யம் மூன்றுலோகங்களும் (அவைகளுக்குக் காரணம்) அசிந்த்யாத்மா நம்மால்) நினைக்கமுடியாத ஸ்வரூபத்தையுடைய மதுஸூதன: மது என்கிற அஸுரனைக் கொன்றவனாகிய ஹரி: க்ருஷ்ணன் தத்ரைவ அந்த லோகத்திலேயே ஆஸ்தே இருக்கிறான்.*

1 *விஷ்ணுபுராணம் 1-2-18 க்ரீடத: விளையாடுகிற பாலகஸ்யேவ குழந்தையினுடையபோல (அவனுடைய வயாபாரத்தைப்பார் என்று மேலே சேர்த்துக் கொள்ளவும்.*

2

3 *பாரதம் ஸபாபர்வம் 90-31 பால: சிறு குழந்தை க்ரீடநகைரிவ விளையாடும் கருவிகளாலே போல (இந்த ப்ராணிகளினால் பகவான் விளையாடுகிறான்) என்று மேலே சேர்த்துக்கொள்ளவும்.*

4 *சாரீரக ஸூத்ரம் 2-1-33 லோகவத் இந்த லோகத்திலேபோல லீலா கைவல்யம் கேவலம் விளையாட்டு மாத்திரம் தான் (பகவான் லோகங்களை ஸ்ருஷ்டிப்பதற்கு ப்ரயோஜனம்).*

த்ர தத்ரைவ மதுஸூதந: *'ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரா
ர்ணவநிகேதந:। நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் பு
ரீம்॥ புண்யா த்வாரவதீ தத்ர யத்ராஸ்தே மதுஸூதந:। ஸாக்ஷா
த்தேவ: புராணோऽஸௌ ஸ ஹி தர்ம: ஸநாதந:' என்றும் அப்படியே
† 'யத்ர நாராயணோ தேவ: பரமாத்மா ஸநாதந: தத்ர க்ருத்ஸ்நம்

என்பதும் பகவானால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்கள் என்பதும் சொல்லப்பட்டதாகிறது. 1 'நாராயணனிடத்திலிருந்து ப்ரஹ்மா உண்டாகிறான் நாராயணனிடத்திலிருந்து ருத்ரன் உண்டாகிறான்' என்றும் 2 'நாராயணன் ஒருவனே இருந்தான் ப்ரஹ்மாவுமில்லை ருத்ரனுமில்லை.' என்றும் 3 'அந்தப் பகவானிடத்திலிருந்து அனேக விதர்களான தேவ

---

* ஹரிவம்சம் 54-50, 51 ஸ்ரீமாந் எப்போதும் லக்ஷ்மியோடு கூடின க்ஷீரார்ணவநிகேதந: க்ஷீரஸமுத்ரத்தை இருப்பிடமாக உடையஏஷ: இந்த நாராயண: நாராயணன் நாகபாயங்கம் ஆதிசேஷனாகிய படுக்கையை உத்ஸ்ருஜ்ய விட்டு மதுராம் புரீம் மதுராபட்டணத்தைக் குறித்து ஆகத: வந்தாரல்லவா. யத்ர எந்த இடத்தில் மதுஸூதந: க்ருஷ்ணன் ஆஸ்தே இருக்கிறாரோ தத்ர அவ்விடத்தில் புண்யாபுண்யமான த்வாரவதீ த்வாரகாபட்டணம் அஸௌ இந்த க்ருஷ்ணன் ஸாக்ஷாத் ப்ரத்யக்ஷமான புராண: அனாதியான தேவ: தேவன் ஸ: ஹி அவரே ஸநாதந: அனாதியான தர்ம: தர்மம்.

† பாரதம் ஸபாபர்வம் 49 - 23 பார்த்த அர்ஜுன ஸநாதந: அனாதியான பரமாத்மா பரமாத்மாவாகிய தேவ: தேவனாகிய நாராயண: நாராயணன்யத்ர எவ்விடத்தில் (இருக்கிறாரோ) தத்ர அவ்விடத்தில் க்ருத்ஸ்நம் எல்லா ஜகத் லோகமும் தீர்த்தாநி புண்யதீர்த்தங்களும் ஆயதநாநிச கோவில்களும் (இருக்கின்றன) தத் அந்த இடமே புண்யம் புண்யமானது தத் அதுவே பரம் ப்ரஹ்ம பரப்ரஹ்மம் தத் அதுவே தீர்த்தம் புண்யதீர்த்தம் தத் அதுவே தபோவனம் தபஸ்ஸு செய்யும் காடுதத்ர அந்த இடத்தில் தேவர்ஷய. தேவருஷிகளும் ஸித்தா: ஸித்தர்களும் ஸர்வே எல்லா தபோதநாப்ச ருஷிகளும் (வஸிக்கிறார்கள்) ஆதிதேவ: ஆதியான தேவனாகிய மஹாயோகீ எல்லாக் கல்யாணகுணங்களும் நிறைந்த மதுஸூதந: க்ருஷ்ணன் யத்ர எந்த இடத்தில் ஆஸ்தே இருக்கிறாரோ தத் அது புண்யாநாமபி புண்யங்களுக்கெல்லாம் மேலான புண்யம் புண்யம் அத்ர இந்த விஷயத்தில் தே உனக்கு ஸம்ஶய: ஸந்தேஹம் மாபூத் உண்டாகவேண்டாம். க்ருஷ்ண ஏவ ஹி க்ருஷ்ணனே லோகாநாம் லோகங்களுக்கு உத்பத்தி: உண்டாகும் இடம் அப்யய: லயிக்கும் இடம் இதம் இந்த சராசரம் ஜங்கம ஸ்த்தாவரங்களாகிய விஶ்வம் லோகம் க்ருஷ்ண ஸ்யக்ருதேஹி க்ருஷ்ணனுக்கு ஶேஷபூதமல்லவா

1 நாராயணோபநிஷத் 1 2 மஹோபநிஷத் 1-1

3 முண்டகோபநிஷத் 2-1-7

[illegible]

ைதகளும் ஸாத்யர்களும் மனுஷ்யர்களும். பசுக்களும் பக்ஷிகளும் உண்டானதுகள் என்றும் அர்த்தமுள்ள ப்ரஶ்ருதிவாக்யங்களும் 1 '[illegible]' 2 '[illegible]' என்றிவை முதலிய வசனங்களும் இப்படியே சொல்லுகின்றன. 'இப்படி 3 காரண வாக்யங்களின் அர்த்தம்சொல்லப்பட்டது. 4 சோதக வாக்யங்களின் அர்த்தத்தைக் காட்டுகிறார்—'அஜ' என்பதற்குக் கர்மங்களினா லுண்டாக்கப் பட்ட பிறப்பு முதலியவைக ளில்லாதவன் என்றர்த்தம் அன்றிக்கே ஸ்வரூபத்தைப்பற்றி விகாரங்களில்லாதவன் என்பது சொல்லப்படுகிறதாகவுமாம். எங்கும் நிறைந்தவனாகவும் என்பதற்கு 5 '[illegible]' என்று சொல்லியிருக்கிறபடியே எல்லா இடத்திலும் வ்யாபித்திருக்கிறவன் என்றாவது, எல்லாவற்றையும் நியமிக்கிறவன் என்றாவது அர்த்தம். இத்தால் காரணமாக இருப்பதற்கு அனுகுணங்களாயும் அந்தர்யாமிப்ராஹ்மணத்தில் சொல்லப்பட்டதாயுமிருக்கிற எங்கும் வ்யாபித்திருத்தல் நியமனம் செய்தல் முதலியது ஞாபகப்படுத்தப்பட்டது. இந்தப் பதங்களினால் '6 இவன் எல்லா ப்ராணிகளுக்கும் அந்தராத்மாவாகவும் கர்மங்களில்லாதவனாகவும் பரமபதத்திலிருப்பவனாகவும் இருக்கிற ஒரு தேவனாகிய நாராயணன்'

1-பாரதம் சாந்திபர்வம் மோக்ஷதர்மம் விபுதஶ்ரேஷ்டௌ தேவதைகளுக்குள் உயர்ந்தவர்களான ஏதௌ இந்தத்வௌ ப்ரஹ்மாருத்ரன் ஆகிய இரண்டுபேர்களும் ப்ரஸாதக்ரோதஜௌ அனுக்ரஹத்தினாலும் நிக்ரஹத்தினாலும் உண்டானவர்களாக ஸ்ம்ருதௌ எண்ணப்பட்டார்கள்.

2 ஹரிவம்சம் விஷ்ணுபர்வம் 132-48 கைலாஸயாத்ரையில் க்ருஷ்ணனைக் குறித்து ருத்ரன்சொன்ன வார்த்தை க: என்று ப்ரஹ்மாவுக்குப் பெயர் நான் எல்லா ப்ராணிகளுக்கும் ஈசன் என்று பெயருடையவன் ஆவாம் நாங்களிருவரும் தவ உம்முடைய அங்கே சரீரத்தில் ஸம்பூதௌ உண்டானவர்கள் தஸ்மாத் ஆகையினால் கேஶவநாமவான் கேஶவன் என்று பெயருடையவராக (ஆனீர்) 3,4 முதல்வால்யூம் 307 வது பக்கம் 4, 5, அடையாளமுள்ள புட்நோட்டுக்களைப் பார்க்கவும்.

5 ஆகாசவத் ஆகாசத்தைப்போல ஸர்வகதஶ்ச எல்லா இடத்திலும் வ்யாபித்திருக்கிறார் நித்ய: அழிவில்லாதவர்.

6 ஸுபாலோபநிஷத் 7 கண்டம்

நாரதோபி தத்வர்ண்யம் ஶாஶ்வதஸம் ஸமயோத்ருகே ॥ க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய:। க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூத

என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் குறிக்கபபட்டது. 'எல்லா' என்று பொதுவாகச் சொல்லியிருந்தபோதிலும் மிகவும் ஆப்தர்கள் என்கிற அபிப்ராயத்தினால் நாரதர் முதலியவர்களைத் தனித்துசசொல்லி யிருக்கிறது. 'தேவருஷியாகிய' என்னும் பதத்தினால ஜாதியினாலும் ஸத்வ குணம் மேலிட்டவர் என்பது காட்டப்படுகிறது. அதிலும் இவர் 1 'தேவர்ஷீணாஞ்ச நாரத:' எனறு சொல்லும்படி மிகவும் சிறந்தவர். அஸிதருடையப் பிதா தேவலர். வ்யாஸரும் இவ்விடத்தில் பகவானாகிய பாராசாருடைய குமாரர். 'ஸர்வம் ஸ்வாத்மவிஷயஸ்யைவ' என்பதற்கு ப்ர மாணத்தைக்காட்டுகிறார்—'ரிஷய' என்றாரம்பித்து. 'வேதவித:' என் பதற்குக் கர்மபாகததை அறிந்தவர்கள், என்றும் 'அத்யாத்மவித:' என்ப தற்குவேதாந்தங்களின் அர்த்தத்தை அறிந்தவர்கள் என்றும அர்த்தம் 'மஹாத்மாநம் க்ருஷ்ணம், ஸநாதநம், புருஷம்' என்று அன்வயம் சொல்ல வேண்டியது 'மஹாத்மாநம்' என்பதினால் எல்லாவற்றையும் விடமேற் பட்ட மிகுந்த ஐஶ்வர்யம் முதலியது சொல்லப்படுகிறது. மஹானாகிய ஆத்மா என்பதினால் பரமாத்மா என்பதாவது சொல்லப்படுகிறது 2 'அப்படிப்பட்ட இந்தப் புருஷன் பிறப்பில்லாத மஹானாகிய ஆத்மா என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யமிருக்கிறபடியினால். இடத்தினாலும் காலத்தினாலும் அளவிடப்பட்ட பலங்களைக்கொடுக்கிற யாகம் தானம் முதலிய தர்மங்கள் தாங்களும் அழிவுள்ளவைகள், அழிவில்லாத எல் லையில்லாத பலத்தைக் கொடுக்கிற இவனொருவனில் தானும் நித்யன் என்கிற அபிப்ராயத்தினால் 'ஸநாதநம்' என்று 'புருஷம்' என்பதற்கு விஶேஷணமாகச் சொல்லப்பட்டது. 'பவித்ரம்' என்னும் பதம் இவ் விடத்தில் யாவங்களைப்போக்குகிற வஸ்துவைசசொல்லுகிறது. 'பூர்ண:' என்னும் பதம் இஷ்டமான பலத்திற்கு ஸாதநததைச்சொல்லு கிறது. 'தாம' என்னும் பதம் தான் ஸமீபத்திலிருபபது மாத்தி ரத்தினால் எல்லா ஸம்பத்துக்களுக்கும் காரணமான உத்தமமான வஸ்துவைச் சொல்லுகிறது. லோகங்கள் காரியம் பகவான் கார ணம் என்பதினாலாவது, லோகங்கள் சரீரம் பகவான் ஆத்மா என்பதி னாலாவது 'த்ரைலோக்யம் ஸசராசரம்' என்று சேர்த்துச் சொ ல்லி யிருக்கிறது. மூன்றுவிதங்களான லோகங்களும் 'த்ரைலோக்யம்' என்று சொலலப்படுகிறது. பத்தர், முக்தர், நித்யர், என்று மூன்று

1 பகவத்கீதை 10-26 2 ப்ருஹதாரண்யகம் 6-4

ஈஶம் விஶ்வரூபம்' என்றும் சொன்னார்கள். அப்படியே நீரும் * 'பூ-
மிராபோऽநலோ வாயு: கம் மநோ புத்திரேவ ச | அஹங்கார இதீயம் மே

வித ஜீவாத்மாக்கள என்றர்த்தம். அன்றிக்கே பூமி ஆகாயம் முதலிய லோகங்கள் உபலக்ஷணமாகச் சொல்லப்படுகின்றன ஆகவுமாம். 'பு-ண்டரீகாக்ஷ:' என்னும் பதத்தினால் அந்தராதித்யவித்யையில் சொல்லப்பட்ட மிகவும் சிறந்த விக்ரஹத்தை உடையவனாக இருக்கை காட்டப்பட்டது. 1 'அவனுக்குக் கப்யாஸமான தாமரைப்பூ எப்படியோ இப்படியே கண்கள்' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்திற்கு த்ரமிட பாஷ்யகார ரருளிச்செய்த ஆறர்த்தங்களில் மூன்றர்த்தங்கள் ஸித்தாந்தமாக பாஷ்யகாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டவைகள், அப்படியே வேதார்த்த ஸங்கரஹத்தில்2 'கம்பீராம்பஸ்ஸம்பூத ஸம்ருஷ்ட நாள ரவிகர விகஸித புண்டரீக தளாமலாயதேக்ஷண:' என்று வ்யாக்யானம்செய்யப்பட்டது. இதுவும் வரதகுருவினால் தத்வஸாரத்தில் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டது. 'நாராயண:' என்னும் பதத்தினால் பரதத்வத்தைநிஶ்சயம் செய்வதிலேயே அபிப்ராயமுடைய நாராயணனுவாகம் குறிக்கப்பட்டது. 'ஸ்ரீமத்க்ஷீரார்ணவநிகேதந:' என்னும் பதங்களினால் 3 'பூமியும் லக்ஷ்மியும் உனக்குப் பத்னிகள்' என்னும், 4 'கரையில்லாத ஜலத்தில்' எனறும், 'எவனை ஸமுத்திரத்தின் நடுவில்' என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகள ஞாபகப்படுத்தப்பட்டன. 'உத்ஸஜ்ஜ்யாமத:' என்பதினால் இது அவதாரம் மாத்திரம், என்பது சொல்லப்படுகிறது. ஏனெனில் க்ருஷ்ணனாக அவதரித்திருக்கும்பொழுதும் க்ஷீரஸமுத்திரத்தில் ஆதிஶேஷனாகிய படுக்கையில் சயனித்துக்கொண்டிருக்கிற ரூபம் அப்படியே இருக்கிறபடியினால் 'ஸாக்ஷாத்' என்பதற்கு ஔபசாரிகமாகவும் அல்ல, வேறொரு ஜீவாத்மாவுக்குள் மறைந்து கொண்டுமல்ல என்று அர்த்தம் 'அப்படியே' என்பது இது வேறு ப்ரகரணம் என்று தெரியப்படுத்துவதற்காக. 'தேவகீநந்தநஸ்ஸ்வயம்' என்று மூலத்தில் பிரிவு ஏற்பட்டிருக்கிறபடியினால் அதை அனுஸரித்

---

* பகவத்கீதை 7-4. 1 சாந்தோக்யம் 1-6-7

2 வேதார்த்த ஸங்க்ரஹம் கம்பீரம்பஸ்ஸம் பூத ஆழமான ஜலத்தில் உண்டானதாயும், ஸம்ருஷ்டநாள நன்றாகப் பருத்ததண்டில் இருப்பதாயும் ரவிகரவிகஸித ஸூர்யனுடைய கிரணங்களினால் மலர்த்தப்பட்டதுமான புண்டரீகதள தாமரைப்பூவின் இதழைப்போல அமல அழுக்கற்ற ஆயதநீண்ட ரக்ஷண: கண்களை உடைய

3 தைத்திரீயம், நாராயணம் 4 தைத்திரீயம் நாராயணம் 1-3

ந்நா ப்ரக்ருதிரஷ்டதா' என்று ஆரம்பித்து, * 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே' என்னுமளவாகச்சொல்லுகிறீர். 12-13

ஸர்வமேதத்ருதம் மந்யே யந்மாம் வதஸி கேஶவ |
ந ஹி தே பகவந் வ்யக்திம் விதுர்தேவா ந தாநவா: || 14

ப-ரை] கேஶவ க்ருஷ்ண, மாம் என்னைக்குறித்து, யத் எதை, வதஸி சொல்லுகிறாயோ, ஏதத் இந்த, ஸர்வம் எல்லாவற்றையும், ருதம் உண்மையாக. மந்யே எண்ணுகிறேன், பகவந் பகவானே, தே உம்முடைய, வ்யக்திம் ப்காசம் செய்யும் விதத்தை, (அதாவது உம்மை உள்ளபடி அயலாருக்குத்தெரிப்படுத்தும் விதத்தை) தேவா: தேவதைகள், ந விது: அறியவில்லை, தாநவா: அஸுரர்களும், ந அறியவில்லை 14

பா] ஆகையினால் என்னைக்குறித்து எந்த வேறொருவருக்கும் ஸாதாரணமில்லாததும் எல்லையில்லாத மேன்மையையுடையதும் ஸ்வபாவத்தினலேயே ஏற்பட்டதுமான உம்முடைய ஐஶ்வர்யத்தையும் கல்யாண குணங்கள் எண்ணிறந்தவை என்பதையும் சொல்லுகிறீரோ, இதையெல்லாவற்றையும் உள்ளபடியே இருக்கிற வாஸ்தவத்தைச் சொல்லு

தே அப்படிப்பட்ட பிரிவினாலேயே அவர்களால் சொல்லப்பட்ட வார்த்தைகளையும் எடுத்துக்காட்டுகிறோம் என்று காட்டப்பட்டது. 'ருதம் ஸத்யம்' என்பது முதலியது நாராயணனை எல்லாவற்றிற்கு மிருபபிட மாகையினாலாவது, எல்லாவிதங்களான மேன்மைகளையு முடையவனாகையினாலாவது சொல்லப்பட்டது. 'தத்வ புண்யம்'(அதுவே புண்யம்) என்பது முதலியது ப்ரஹ்ம என்னும் பதத்தை அனுஸரித்து நாராயணனைப் பற்றியதாகவுமாம். இந்த ஸந்தர்ப்பத்தை அனுஸரித்து நாராயணனால் அடையப்பட்ட இடத்தை ஸ்தோத்ரம் செய்கிறதாகவுமாம் 'நீரே' என்பதற்கு ஸ்வபாவத்தினாலேயே எல்லாம் தெரிந்தவனாகவும் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் ஆசார்யனாகவுமிருக்கிற நீரேஎன்று அர்த்தம். 'ஸுராவ:' என்றிவை முதலிய இடங்களில் எல்லாவற்றிற்கும் ஶேஷியாக இருக்கை, எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கை, எல்லாவற்றையும் சரீரமாக உடையவனாக இருக்கை என்றிவை முதலியது சொல்லப்பட்டது. 12-13

ஸங்கதியைத் தெரிவிப்பதற்காகச்சொல்லுகிறார்.— 'ஆகையினால்' என்று. மிகவும் நம்பத்தகுந்த வேதங்களாலும் மஹருஷிகளாலும் உம்மாலும் சொல்லப்பட்டபடியினால் என்று தாத்பர்யம். 'ருதம் மந்யே'

* பகவத்கீதை 10-8.

கிறதாகவே எண்ணுகிறேன் ஸ்தோத்திரம் செய்வது முதலிய அபிப்ராயத்தினால் சொன்னதாக எண்ணவில்லை. ஆகையினால் எல்லையில்லாத ஜ்ஞானம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ்ஸு இவைகளுக்கு

என்பதின் அபிப்ராயத்தைச் சொல்லுகிறார்.—'ஸ்தோத்திரம் செய்வது முதலிய அபிப்பிராயத்தினால் சொன்னதாக எண்ணவில்லை' என்று. மற்றவர்களிடத்திலல்லவோ பகவானுடைய குணங்களை ஆரோபணம் செய்து ஸ்தோத்திரம் செய்யவேண்டும் என்றபிப்ராயம். 'ஸர்வ' என்பதினால் 1 'சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்' என்பது முதல் கீழ்சொன்னது நினைக்கப்பட்டது. 'வதஸி' என்பது இவ்விடத்தில கீழ்சொன்னதை அநுவாதம் செய்துகொண்டும் உபதேசம் செய்கிறாய் என்னும் அர்த்தத்தைச் சொல்லிக்கொண்டும் இரண்டு கர்மங்களை உடையது. இப்படி கீழ்சொன்னதை அநுவாதம் செய்தது மேலே விசேஷமான உபதேசத்தைப்ராரத்திப்பதற்காக. 'வேறொருவருக்கும்' என்பது முதல் இரண்டு விசேஷணங்களினால் ஸமமானதும் மேற்பட்டதும் இல்லை என்பதும் 'ஸ்வபாவத்தினாலேயே ஏற்பட்டதுமான' என்பதினால் வேறொருவருக்கும் வசப்பட்டதில்லை என்பதும் சொல்லப்படுகிறது. 'ஆகையினால் அறியவில்லை' என்றன் வயம் சொல்லிக்கொள்ள வேண்டியது. 2 'ஜ்ஞாநசக்தி பலைச்வர்ய வீர்ய தேஜாம்ஸ்யசேஷத: | பகவச்சப்த வாச்யாநி விநா ஹேயைர் குணாதிபி: ||' என்கிற பகவானாகிய பராசரருடைய வசனத்தை அநுஸரித்து தேவதை முதலியவர்களினால் அறியத்தகாதது என்று தெரிவிப்பதற்காக 'பகவந்' என்னும் பதத்தினர்த்தத்தைக்காட்டுகிறார்:—'எல்லையில்லாத' என்றாரம்பித்து. 'வ்யக்தி:' என்னும் பதம் இவ்விடத்தில் 3 'கிமாத்மிகா பகவதோ வ்யக்தி:' என்பது முதலிய இடங்களிலேபோல விக்ரஹம் முதலியவற்றைச்சொல்லுகிறதல்ல, அதற்கு இங்கே ப்ரஸ்தாவமில்லாமையினாலும் மேலேயும் கேழ்க்கப்படாமையினாலும், ஆகையினால 4 வக்துமர்ஹஸ்யசேஷேண' என்று மேலே சொல்லப்போகிறவனுக்கு,

1 பகவத்கீதை 2-7

2 விஷ்ணுபுராணம் 6-5-79 ஹேயை: கெட்டகுணேர்விநா குணங்களைத்தவிர ஜ்ஞானம்சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ்ஸு இவைகள் அசேஷத: முழுமையும் பகவச்சப்தவாச்யாநி பகவான் என்னும் பதத்திற்கு அர்த்தங்கள்.

3 ஏஷா இந்த பகவத: பகவானுடைய வ்யக்தி: விக்ரஹம் கிமாத்மிகா எப்படிப்பட்ட ஸ்வரூபத்தை உடையது.

4 பகவத்கீதை 10-16

இருப்பிடமாகிய க்ருஷ்ண உம்மைப்ரகாஸப்படுத்துகிற விதத்தை அல்பமான ஜ்ஞானமுள்ள தேவதைகளும் அஸுரர்களும் அறியவில்லை அல்லவா? 14

𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑍇𑌤𑍍𑌥 𑌤𑍍𑌵𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 ।
𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨 𑌭𑍂𑌤𑍇𑌶 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑍇 ॥ 15

ப - ரை] 𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨 - ப்ராணிகளை உண்டாக்குகிற, 𑌭𑍂𑌤𑍇𑌶 - ப்ராணிகளுக்கு நியந்தாவாகிய, 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 - தேவதைகளுக்கெல்லாம் தேவதையாகிய, 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑍇 - லோகங்களுக்கு எஜமானனாகிய, 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 - புருஷர்களுக்குள் உத்தமனாகிய க்ருஷ்ண 𑌤𑍍𑌵𑌂 நீர், 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 - உம்மாலேயே, 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 - ஸ்வபாவத்தினாலேயே, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂-உம்மை, 𑌵𑍇𑌤𑍍𑌥 - அறிகிறீர். 15

பா] ஓ புருஷோத்தமனே நீர் உம்மாலேயே உம்மை உம்முடையதாகிய ஜ்ஞானத்தினாலேயே அறிகிறீர். எல்லா ப்ராணிகளையும் உண்டாக்குகிறவ

மற்றவர்கள் உம்மைப்பற்றிச் சொல்லும் விதத்தையே அறியவில்லை, ப்ரத்யக்ஷம்போலக் காட்டும் விதத்தைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை என்கிற இந்த அர்த்தம் அவச்யமாகச் சொல்லவேண்டியதாகையினால் இதுவே ஒப்புக்கொள்ளத்தக்கது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ப்ரகாஸப்படுத்துகிற விதத்தை' என்று. '𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌯𑍋𑌰𑍍𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌮𑍍 𑌇𑌚𑍍𑌛𑌾𑌮𑍍𑌯𑌰𑌿𑌨𑍍𑌦𑌮। 𑌉𑌪𑌲𑌬𑍍𑌧𑍁𑌂'[1] என்பதைப்போல. 'அல்பமான ஜ்ஞானமுள்ள' என்பது தாத்பர்யத்தைச் சொல்லியிருக்கிறது. 14

தேவதை முதலியவர்களுக்கு பகவானுடைய வைபவத்தைச் சொல்லுவதற்கு யோக்யதை இல்லை என்று கீழே நிராகரிக்கப்பட்டது, பிறகு பகவானுக்கே தன்னுடைய வைபவத்தைச் சொல்லுவதற்கு யோக்யதை உண்டு என்று இந்த ஸ்லோகத்தினால் சொல்லுகிறார்— இதில் '𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮' என்பது பெயர் மற்றப் பதங்களோவெனில் அந்தப் பெயர் பொருந்துவதற்குக் காரணங்களாகிய குணங்களைச் சொல்லுகின்றன, என்று பிரித்துக் காட்டுவதற்காக முதலிலேயே 'ஓ புருஷோத்தமனே' என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் [2] 'நீர் எப்படிப்பட்டவராக இருக்கிறீரோ அப்படிப்பட்டவராக இருக்கிறீர்' என்று

---

1 அரிந்தம - சத்ருக்களைக் கொல்லுகிற ஓ ராஜனே அக்ஷராக்ஷரயோ: அக்ஷரம்க்ஷரம் இவைகளின் வ்யக்திம் ப்ரகாசத்தை உபலப்தும் அறிவதற்கு இச்சாமி விரும்புகிறேன்.

2 யஜுர்வேதம் காடகம்.

ராகவும், எல்லா ப்ராணிகளுக்கும் நியந்தாவாகவும், தேவதைகளுக்கெல்லாம் மேலான தேவதையாகவும் அதாவது எப்படி மனுஷ்யர்கள் ம்ருகங்கள் பக்ஷிகள் பாம்புகள் முதலியவைகளைவிட ஸௌந்தர்யம் ஸௌசீல்யம்முதலிய நல்ல குணங்களின் கூட்டங்களிஞல் தேவதைகள் மேலான

உம்மை நீரே தெரிந்துகொள்ளுகிறீர்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தை ஞாபகப்படுத்தவேண்டும் என்கிற அபிப்ராயத்திஞல் 'ஆத்மாநம்' என்பதற்கு உம்மை என்று அர்த்தம் சொல்லப்பட்டது. 'ஸ்வயமேவ' என்பதிஞல் ஏற்பட்ட அர்த்தத்தைச சொல்லியிருக்கிறது—'உம்முடையதாகிய ஜ்ஞானத்திஞலேயே' என்றது. 'ஆத்மநா' என்பதற்கு வேறொருவரால் ஒத்தாசை செய்யப்படாமல் என்று அர்த்தம். எப்படி மற்றவர்களுக்கு 1 'மத்த: ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச' என்று சொல்லப்படுகிறதோ அப்படி இவருக்கில்லை என்று தாத்பர்யம் அன்றிக்கே 'ஆத்மநா' என்பதற்கு 'ஜ்ஞானத்திஞல்' என்பதுவ்யாக்யானமாகவுமாம். 2 'ஆத்மாஜீவே' என்றாரம்பித்து, 'யத்நேர்கேக்நௌ மதௌ வாயௌ' என்று படிக்கப்பட்டிருக்கிறபடியிஞல், 'பாவந' என்னும்பதம நினைத்துக்கொண்டிருத்தல் என்கிற அர்த்தத்தைசசொல்லுகிறது என்பதை விலக்குவதற்காகச் சொல்லுகிருர்—'உண்டாக்குகிறவராகவும்' என்று 'பூதேஶ' 'ஜகத்பதே' என்னும் பதங்களுக்குப்புனருக்தி யென்னும் தோஷத்தை நீக்குவதற்காக 'நியந்தாவாகவும்,' 'எஜமானஞகவும்' என்று சொல்லியிருக்கிறது. காப்பாற்றுகிறவன் என்கிற அர்த்தத்தைச சொல்லுவதாக இருந்தபோதிலும் 'பதி:' என்னும்பதம எஜமானனுக்கு இடுகுறிப்பெயர். 3 'அவன் காரணம் இந்த்ரியங்களுக்கு எஜமானஞகிய ஜீவனுக்கும் எஜமானன்' என்றும், 4 'ஈஶ்வரர்களுக்கெல்லாம் சிறந்த மஹேஶ்வரஞகவும் தேவதைகளுக்கெல்லாம் மேலான தேவதையாகவும், எஜமானர்களுக்கெல்லாம் மேலான எஜமானஞகவும் லோகங்களுக்கு ஈஶ்வரஞகவும் ஸ்தோத்திரம் செய்யத்தக்கவஞகவும் இருக்கிற அந்தத்தேவனை மேலானவஞக அறிகிறேம்' என்றுமர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தில் ஏற்பட்ட நான்கு அர்த்தங்களும் 'பூதபாவந' என்பது முதலாக நாலுபதங்களிஞல சொல்லப்படுகின்றன, என்று தெரியப்படுத்துவதற்காக 'தேவதைகளுக்கெல்லாம் மேலான தேவதையாகவும்' என்று ஶ்ருதிவாக்யத்திலிருக்கும் பதங்களால் வ்யாக்யானம் செய்யப்

---

1 பகவத்கீதை 15-15

2 ஆத்மா என்னும் பதம் ஜீவாத்மாவையும் ப்ரயத்தினத்தையும் ஸூர்யனையும் அக்னியையும் புத்தியையும் காற்றையும் சொல்லும்.

3 ச்வேதாச்வதரம் 6-8 4 ச்வேதாச்வதரம் 6-7

வர்களாக இருக்கிறார்களோ, அப்படியே அந்த எல்லாத் தேவதைகளையும் விட அந்தந்த குணங்களினால் மேலானவனாக இருப்பவனாகவும் லோகங்களுக்கு எஜமானனாகவும் இருப்பவனே. 15

𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑍍𑌯𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 ।
𑌯𑌾𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌭𑌿𑌰𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑌿𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌸𑌿 ॥ 15

ப - ரை] 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌃 திவ்யங்களான 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 உம்முடைய நியமனங்கள் (எவைகளோ அவைகளை) 𑌅𑌶𑍇𑌷𑍇𑌣 முழுமையும் 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 சொல்லுவதற்கு 𑌅𑌰𑍍𑌹𑌸𑌿 தகுந்தவராகிறீர், 𑌯𑌾𑌭𑌿𑌃 எந்த, 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌭𑌿𑌃 நியமனங்களுடன் கூடினவராய்க்கொண்டு, 𑌤𑍍𑌵𑌂 நீர், 𑌇𑌮𑌾𑌨𑍍 இந்த, 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 லோகங்களை, 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 வ்யாபித்துக்கொண்டு, 𑌤𑌿𑌷𑍍𑌠𑌸𑌿 இருக்கிறீர். 16

பா] திவ்யங்களாகவும உமக்கே அஸாதாரணங்களாகவு மிருக்கிற நியமனங்கள் எவைகளோ, அவை எல்லாவற்றையும் நீரே சொல்லத்தகுந்தவ

பட்டது. தேவதை என்னும் பதம் ஒருவிதமான ஜாதியைச் சொல்லுகிறதாகையினாலே இன்னாருக்கு தேவதை என்று மற்றவரைக்கொண்டு நிரூபிக்கவேண்டியதில்லாமையினால் இரண்டாவது தேவதை என்னும் பதம் மேன்மையைச்சொல்லிக்கொண்டு உபசாரமாக ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது, என்கிற அபிப்ராயத்தினால் முக்யமான அர்த்தத்திலும் கௌணமான அர்த்தத்திலும் ஒரேவிதமான உபசாரமாகச் சொல்லியிருப்பதின் காரணத்தைக்காட்டுகிறார்—'எப்படி' என்றாரம்பித்து. ஒன்றுக்கொன்று இருக்கும் வ்யத்யாஸம் ப்ரயோஜனமற்றது என்று தெரிவிப்பதற்காகவும், இவைகளுக்கும் தேவதைகளுக்கும் அதிக வ்யத்யாஸமுண்டு என்று காட்டுவதற்காகவும், ம்ருகம் பக்ஷி மலைப்பாம்பு இவைகளை எடுத்தது. தேவதைகளுக்குப் புழு எப்படியோ அப்படியே பரமாத்மாவுக்குத் தேவதைகள். 5 𑌕𑍀𑌟𑌪𑌕𑍍𑌷𑌿𑌸𑌰𑍀𑌸𑍃𑌪𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌷𑍁 என்றல்லவோ சொல்லியிருக்கிறார்கள். 'ஸௌந்தர்யம் ஸௌசீல்யம்' என்றது தேஹத்தின் குணங்களையும் ஸ்வரூபத்தின் குணங்களையும் குறிப்பதற்காக. 15

தா] '𑌆𑌤𑍍𑌮' என்னும் பதம் வேறொருவரின் நியமனம் என்பதை விலக்குவதற்காக என்று சொல்லுகிறார்—'உமக்கே அஸாதாரணங்களாகவும்' என்று. '𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃' என்னும் பதம் முதல் வேற்றுமையையுடையதாகையினாலே '𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿' என்பதோடு அன்வயிக்கா தாகையினால் 'எவைகளோ' என்னும் பதம் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அது

---

1 *யத்ர எந்த பகவான் த்ருஷ்டே பார்க்கப்பட்டிருக்கும்பொழுது ஸமஸ்தா: எல்லா ஸுரா: தேவதைகளும் கீடா: புழுக்களோ.*

ராகிறீர்; அதாவது நீரே ப்ரகாஶம் செய்யும் என்று அர்த்தம். எண்ணிறந்த எந்த நியமன விஶேஷங்களுடன் கூடினவராய்க் கொண்டு இந்த லோக

வும், எந்தக் காரணத்தினால் திவ்யங்களோ; ஆகையினா லவச்யம் சொல்லத்தக்கவைகள், ஆகையினால் நீர் சொல்லத்தகுந்தவர், என்று வாக்யத்தைத் திருப்பிச் சொல்லிக்கொள்ள வேண்டியது, என்று தெரிவிப்பதற்காக. 'அர்ஹஸி' என்பதினால் தகுந்தவர் என்று சொல்லியிருப்பதினாலேயே சொல்லவேண்டும் என்கிற ப்ரார்த்தனையும் குறிக்கப்படுகிறது ஆகையினால், பகவானாலும் முழுமையும் சொல்லவும், அர்ஜுனனாலே ழ்க்கவும் முடியாதாகையினால் வார்த்தையினாலும் அனுக்ரஹத்தினாலும் ப்ரகாசம் செய்யவேண்டு மென்பது இங்கே ப்ரார்த்திக்கப் படுகிறது. 1 'ந ஹி தே பகவந் வ்யக்திம்' என்றல்லவோ முன்பு சொல்லப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'நீரே ப்ரகாஶம் செய்யும் என்று அர்த்தம்' என்று. பன்மையாகச் சொல்லியிருப்பதைச் சுருக்கிச் சொல்லுவதற்குக் காரணமில்லாமையாலும், 'அசேஷேண' (முழுமையும்) என்று சொல்லியிருப்பதினாலும், 2 'நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே' என்றிவை முதலாக மேலே சொல்லப்போகிறதை அனுஸரித்தும், எண்ணிறந்த தென்பது இங்கே சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால—'எண்ணிறந்த' என்று சொல்லப்பட்டது. 'வி' என்னும் உபஸர்கத்தை முன்னே உடைய 'பூதி:' என்னும் பதம் 'க்திந்' ப்ரத்யயத்தைக் கடைசியி லுடையதாகையினால் நியமனத்தைச் சொல்லுகிறதென்று முன்னமே சொல்லப்பட்டது, இவ்விடத்தில் வேறு அர்த்தமும் பொருந்தாது, நியமிக்கப்படுகிற வஸ்துவைச் சொல்லுகிற பதத்தோடு சேர்த்துச் சொல்லப்படாமையினால், என்கிற அபிப்ராயத்தினால் 'எந்த நியமன விஶேஷங்களுடன்' என்று சொல்லப்பட்டது. அதிகமான நியமனங்களைப்பற்றிக் கேழ்ப்பதில் அதிக ஸந்தோஷம் என்று தெரிவிப்பதற்காக. 'விஶேஷ' என்னும் பதம். இவ்விடத்தில் மூன்றும்வேற்றுமை காரணம் என்பது முதலிய அர்த்தத்தைச் சொல்லுகிறதென்பது பொருந்தாதாகையினால் 3 'இத்தம்பூதலக்ஷணம்' என்னும் அர்த்தம் அந்த வேற்றுமையினால் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் 'கூடினவராய்க்கொண்டு' என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் விபூதி எனனும் பதம் நியமிக்கப்படுகிற வஸ்துக்களைச் சொல்லுவதாக இருந்தால் அரச மரம் முதலியவை லோகங்களில் பகவான் வ்யா

1 பகவத்கீதை 10-14 2 பகவத்கீதை 10-19

3 இப்படிப்பட்ட அடையாளங்களை உடையவன்.

ங்களை நீர் நியந்தாவாக வ்யாபித்துக்கொண் டிருக்கிறீர். 16

க஥ம் வித்₃யாமஹம் யோகி³ம்ஸ்த்வாம் ஸதா³ பரிசிந்தயந் |
கேஷு கேஷு ச பா⁴வேஷு சிந்த்யோऽஸி ப⁴க³வந்மயா || 17

ப - ரை] ப⁴க³வந் பகவானுகிய க்ருஷ்ண, அஹம் நான், யோகி³ந் யோகத்தைச் செய்துகொண்டு, த்வாம் உம்மை, ஸதா³ எப்போழுதும், பரிசிந்தயந் த்யானம் செய்வதற்காக, க஥ம் எப்படி, வித்₃யாம் அறியக்கடவேன், கேஷு கேஷு ச எந்தெந்த, பா⁴வேஷு வஸ்துக்களில், மயா என்னால், சிந்த்ய: எண்ணத்தகுந்தவராக, அஸி ஆகிறீர். 17

பா] நான் பக்தியோகத்தில் நிஷ்டையையுடையவனுக இருந்துகொண்டு

தா] பித்திருப்பதற்குக் காரணமல்ல, அவைகளோடு கூடிய பகவானும் காரணமல்ல, அவைகளோடு சேர்ந்தே மற்ற வஸ்துக்களில் வ்யாபித்திருக்கிறுன் என்பது மில்லை, நியமிக்கப்படுகிறவஸ்துக்கள்வ்யாபித்திருக்கையைத் தெரிவிக்கக்கூடிய அடையாளங்கள் என்பதுமில்லை ப்ரயோஜனமில்லாமையினுல், நியமன விசேஷங்களோவெனில் ஶ்ருதியை அனுஸரித்திருப்பதினுலும் ஆகாசம் முதலியவைகள் வ்யாபித் திருப்பதைப் போல அல்ல இது என்று தெரிவிப்பதற்குக் காரணமாகையினுலும் வ்யாபித் திருப்பதைத் தெரிவிக்கக்கூடிய அடையாளம் என்பது பொருந்தும் என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்.—'நியந்தாவாக வ்யாபித்துக்கொண்டு' என்று 1 'ஜனங்களுக்கு உள்ளே ப்ரவேசித்துக்கொண்டு நியமிக்கிறவன்' என்றும் 2 'உள்ளே இருந்துகொண்டு நியமிக்கிறுன்' என்றும், 3 ' அந்தர்யாமியாகவும் அழிவில்லாதவனுகவும் இருப்பவன்' என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்களில் இது சொல்லப்படுகிறது. 'வ்யாப்ய திஷ்ட²தி' என்பதனுல் 4 'நாராயணன் வ்யாபித்துக் கொண்டிருக்கிறுன்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் ஞாபகப்படுத்தப்பட்டது. 16

யோகி³ந் என்னும் பதம் இந்த ஸந்தர்ப்பத்தினுலும், 'த்வாம்ஸதா³ பரிசிந்தயந்' என்பது முதலிய பதங்களின் ஸாமர்த்தியத்தினுலும் விசேஷமான யோகியைச்சொல்லுகிறது என்று சொல்லுகிறுர். —'பக்தியோகத்தில் நிஷ்டையையுடையவனுக இருந்துகொண்டு' என்று. 'இருந்துகொண்டு' என்பதனுல் பரிபூர்ணமான யோகத்தை உடையவனைச் சொல்லுகிறதுஎன்பது விலக்கப்பட்டது. இவ்விடத்தில் 'யோகி³நு' என்

---

1 யஜுர்வேதம் ஆரணம் 3-10 2 ப்ருஹதாரண்யகம் 5-7
3 ஸுபாலோபநிஷத் 7 4 தைத்திரீயம் நாராயணம் 11

பக்தியினால் உம்மை எப்பொழுதும் த்யானம்செய்ய ஆரம்பித்தவனாய் த்யானம் செய்த்தகுந்தவனாகவும் பரிபூர்ணமான ஐஶ்வர்யம் முதலிய கல்யாணகுணங்களின் கூட்டங்களையுடைய உம்மை எப்படி அறியக்கடவேன். முன்புசொல்லிய புத்தி ஜ்ஞானம் முதலிய வஸ்துக்களைத் தவிர இன்னம் மற்றெந்த வஸ்துக்களில் என்றால் நியந்தாவாக நினைக்கத்தகுந்தவராகிறீர். 17

விஸ்தரேணாத்மநோ யோகம் விபூதிம் ச ஜநார்தந।
பூய: கதய த்ருப்திர்ஹி ஶ்ருண்வதோ நாஸ்தி மேऽம்ருதம்॥ 18

ப - ரை] ஜநார்தந - ஸ்ரீக்ருஷ்ண, ஆத்மந: - உம்முடைய, யோகம் - கல்யாணகுணத்தையும், விபூதிம் ச - நியமனத்தையும், பூய: - மறுபடியும், விஸ்தரேண - விஸ்தாரமாக, கதய - சொல்லும், அம்ருதம் - (உம்முடைய மஹிமையாகிற) அம்ருதத்தை, ஶ்ருண்வத:-கேழ்க்கிற, மே- எனக்கு, த்ருப்தி: - போதும் என்கிற எண்ணம், நாஸ்திஹி - இல்லையல்லவா. 18

று மற்றவர்களின் பாடம் ருஷிசொல்லியதல்ல, 'ஸதா'(எப்பொழுதும்) என்கிற விஶேஷணத்தின ஸாமர்த்தியத்தினால் 'பக்தியினால்' என்பது ஏற்பட்டது. அறிவதற்கு முந்தி த்யானம்செய்ய முடியாதாகையினாலே 'கதம் வித்யாம்' என்பது த்யானம் செய்வதற்குக்காரணமாகையினாலும், 1 'லக்ஷணஹேத்வோ: க்ரியாயா:' என்று 'ஶத்ரு' என்னு ப்ரத்யயம் விதிக்கப்பட்டிருக்கிறபடியினாலும் 'த்யானம்செய்ய ஆரம்பித்தவனாய்' என்று சொல்லப்பட்டது. 'த்வாம்' (உன்னை) என்று வஸ்து இன்னதென்று அறியப்பட்டபடியினால் அதின் ஸ்வபாவங்களின் விஶேஷங்களைப்பற்றி அறியவேண்டுமே என்கிற ஆசை இருக்கிறது, என்று தெரிவிப்பதற்காக 'பரிபூர்ணமான' என்பது முதல் சொல்லப்பட்டது. கேழ்வி அறியப்படாத விஶேஷங்களை அறிவிப்பதற்காக அல்லவா என்று நினைத்து 'முன்புசொல்லிய' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டது. 'நியந்தாவாக' என்பது 'பாவேஷு' என்கிற இடத்தில் இருக்கும் ஏழாம் வேற்றுமையின் அபிப்ராயத்தைச் சொல்லியிருக்கிறதாகவுமாம். அன்றிக்கே கீழ் ஶ்லோகத்தில் ப்ரஸ்தாவித்ததைச் சேர்த்துக் கொண்டு சொல்லியிருக்கிறதாகவுமாம். 17

---

1 அஷ்டாத்யாயீ 3-2-126 க்ரியாயா: கார்யத்திற்கு லக்ஷணஹேத்வோ: அடையாளம், காரணம் என்னும் அர்த்தங்களைச் சொல்லும் பொழுது (ஶத்ரு என்னும் ப்ரத்யயம் வரும்)

பா] * 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே' என்று சுருக்கமாகச் சொல்லப்பட்ட உம்முடைய ஸ்ருஷ்டிக்கிறவனாக இருக்கை முதலிய யோகத்தையும் நியமனத்தையும் மறுபடியும் விஸ்தாரமாகச் சொல்லும், உம்மால் சொல்லப்படுகிற உம்முடைய மஹிமையாகிற அம்ருதத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிற எனக்கு த்ருப்தியில்லையல்லவா, என்னுடைய அத்ருப்தி உம்மாலேயே அறியப்பட்டது. 18

ஸ்ரீபகவாநுவாச பகவானாகிய ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.—

ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்மவிபூதய: |
ப்ராதாந்யத: குருஶ்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே ||

ப-ரை] குருஶ்ரேஷ்ட குருவம்சத்தில் பிறந்தவர்களுக்குள் சிறந்தவனாகிய அர்ஜுன, தே உனக்கு, ஆத்ம: என்னுடைய, ஶுபா: மங்களங்களான, விபூதீ: விபூதிகளை, ப்ராதாந்யத: முக்யமானவற்றை, கதயிஷ்யாமி சொல்லப்போகிறேன், ஹந்த ஆச்சர்யம், மே என்னுடைய, (விபூதிகளின்) விஸ்தரஸ்ய விஸ்தாரத்திற்கு, அந்த: முடிவு, நாஸ்தி இல்லை. 19

பா] குருவம்சத்தரசர்களுக்குள் சிறந்தவனாகிய அர்ஜுன? என்னுடைய

தா] விரோதியான ஜனங்களை நரகம் முதலியவைகளை அடைவிக்கிறபடியினாலாவது, ப்ரீதியுள்ள ஜனங்களினால அவரவர்கள் இஷ்ட பலத்தை ப்ரார்த்திக்கப் படுகிறபடியினாலாவது ஜநார்தனன் என்னப்படுகிறான். விஸ்தாரத்தை அறியவேண்டும் என்கிற ஆசைக்குக் காரணத்தைத தெரிவிப்பதறகாகவும், யோகம் என்னு பதத்தினால் சொலலபபடுகிற அர்த்தத்தை ப்ரகாசப் படுத்துவதற்காகவும், 'பூய:' என்னும் பதத்தினால ஏற்பட்ட அர்த்தத்தைச சொல்லுகிறார்—'அஹம்ஸர்வஸ்ய' என்றாரம்பித்து அம்ருதம் என்னும் பதம் இவ்விடத்தில த்ருப்தியில்லை என்பதோடு சேர்ந்திருக்கிறபடியினால் மஹிமை போக்யம் என்பதைச சொல்லுகிறது. மிகவும்போக்யம் என்று தெரிவிப்பதற்காக 'உம்மால் சொல்லப்படுகிற' என்று சொல்லப்பட்டது. உம்முடையமுகமாகிறசந்திரனிடத்திலிருந்து பெருகிவருகிற என்று தாத்பர்யம். 'ஹி' என்னும் பதத்தின் அபிப்ராயத்தை விவரிக்கிறார்.—'என்னுடைய' என்றாரம்பித்து. 18

இப்படி த்ருப்தியில்லாமையினால் கேழ்க்கிற அர்ஜுனனைக்குறித்து மிகவும் அனுக்ரஹத்தை உடையபகவான் அந்த அர்ஜுனனுடைய

---

* பகவத்கீதை 10-8

வைகளாய் மங்களங்களா யிருக்கிற விபூதிகளை முக்யமானவற்றை உனக்குச் சொல்லப்போகிறேன் இவ்விடத்தில் ப்ராதாந்யத: என்னும் பதத்தினால் மேன்மை சொல்லப்படுகிறது. * ஸரஸாமஸ்மி ஸாகர:' என்றல்லவோ மேலே சொல்லப்போகிறார் லோகத்தில் சிறந்த சில விபூதிகளைச் சொல்லப்போகிறேன், என்றர்த்தம். விஸ்தாரமாகச் சொல்லுவதற்கும் கேழ்ப்பதற்கும் முடியாது, அவைகளுக்கு முடிவில்லையாகை

உயர்ந்த குலத்தில பிறப்பு முதலியவைகளைச்சொல்லிக்கொண்டு அதின் மூலமாக அவனுக்கு இதைக்கேட்க யோக்யதை உண்டென்று காட்டிக்கொண்டு விபூதிகளை விஸ்தாரமாகத் தனித்தனியே சொல்லவும் கேழ்க்கவும் முடியாதாகையினால் சில ஆகாரங்களினால் சுருக்கப் பட்ட விபூதிகளைச் சொல்லப்போகிறேன் என்று இந்த ஶ்லோகத்தினால் சொல்லுகிறார்—'தே' (உனக்கு) என பதற்கு. பொறுமையில்லாமை ப்ரீதியை யுடையவனாக இருக்கை த்ருப்தி யில்லாதவனாக இருக்கை முதலிய குணங்கள் நிறைந்த உனக்கு, என்று தாத்பர்யம். குணங்களைக் குறித்து ஶேஷியாக இருக்கையாகிய ப்ரதானமாயிருக்கை சொல்லப்படுகிறதென்னில் எல்லா உதாஹரணங்களிலும் நிறைந்திராமையினாலும், குணங்களையும் ப்ரதானங்களாக மேலே சொல்லப்போகிறபடியினாலும், எல்லாவற்றையுஞ்சேர்த்துக்கொள்ளக்கூடிய அர்த்தத்தைச்சொல்லுகிறார்—'ப்ராதாந்யத: என்னும் பதத்தினால்' என்றாரம்பித்து. அதுவே சொல்லப்படுகிறதென்பதை மேலே சொல்லப்போகிறதைக் கொண்டு உறுதிப்படுத்துகிறார்—'ஸரஸாமஸ்மி ஸாகர:' என்றாரம்பித்து. மொத்தார்த்தத்தைச் சொல்லுகிறார்—'லோகத்தில்' என்றாரம்பித்து. விஸ்தாரமாகச் சொல்லும் என்று கேட்டவனைக் குறித்து முக்யமானவற்றைச் சொல்லப்போகிறேன் என்று எப்படி சொல்லப்படுகிறது? என்று ஆக்ஷேபம் வரில் அதற்கு ஸமாதானம் 'நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே' என்று சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் 'விபூதீநாம்' (விபூதிகளின்) என்று சேர்த்துக்கொள்ளவேண்டியது, 2 'விபூதேர்விஸ்தரோ மயா' என்றல்லவோ மேலே சொல்லப்போகிறார்—'நாஸ்தி' என்னும் பதத்தினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்ட முடியாமையைக் காட்டுகிறார்—'விஸ்தாரமாகச் சொல்லுவதற்கும்' என்றாரம்பித்து. இது சொல்லுகிறவருடையவும் கேழ்க்கிறவனுடையவும் ஶக்தியில்லாமையா லேற்பட்டதல்ல என்று சொல்லுகிறார்—'அவைகளுக்கு முடிவில்லை யாகை

---

* பகவத்கீதை 10-24. 2 பகவத்கீதை 10 40.

யினால். விபூதியாயிருக்கையாவது நியமிக்கப்படுவதாயிருக்கை. எல்லா ப்ராணிகளுடையவும் புத்திமுதலிய தனித்தனியான பாவங்கள் எனக்கு வசப்பட்டே உண்டாகின்றன என்று சொல்லி * 'ஏதாம் விபூதிம் யோகஞ்ச மம யோ வேத்தி தத்த்வத:' என்று சொல்லியிருக்கிறபடியினால். அப்படியே அவ்விடத்தில் யோகம் என்னும் பதத்தினால் சொல்லப்பட்டதாவது ஸ்ருஷ்டிப்பவனாகயிருக்கை முதலியது, விபூதி என்னும்

யினால்' என்று. இதுவே 'நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே' என்று சொல்லப்பட்டது. மேலே சொல்லப்போகிற வஸ்துக்களில் விபூதி என்னும் பதத்தை ப்ரயோகித் திருப்பதற்குக் காரணத்தைச் சொல்லுகிறார்— 'விபூதியா யிருக்கையாவது' என்றாரம்பித்து. நியமிக்கப்படுகிற வஸ்துக்களைப்பற்றிச் சொல்லும் விபூதி என்னும் பதம் விபுவாக இருப்பதற்கு விஷயங்கள் என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறது. வேறு இடத்திலும் 1 'ப்ரஹ்மா தக்ஷாதய: கால:' 2 'விஷ்ணுர் மந்வாதய: கால:' 3 'ருத்ர: காலாந்தகாத்யாஶ்ச' என்றிவை முதலிய இடங்களில் 'ஜநார்த்தந விபூதய:' என்று நியமிக்கப்படுகிற வஸ்துக்களைப்பற்றி 'விபூதி' என்னும் பதத்தை ப்ரயோகித்திருப்பது காணப்பட்டிருக்கிறது. எத்தாலே என்னில் சொல்லுகிறார்—'எல்லா ப்ராணிகளுடையவும்' என்றாரம்பித்து. கீழே ப்ரஸ்தாவிக்கப் பட்டதாகிய பகவானுக்கு அதீனமாக யிருக்கை அல்லவோ 'ஏதாம்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று தாதபர்யம். அடுத்த ஶ்லோகத்தைக்கொண்டும் இந்த ஶ்லோகம் இந்த அர்த்தத்தையே சொல்லுகிறது, என்பதைக் காட்டுகிறார்—'அப்படியே' என்றாரம்பித்து. முன்பு இந்த ஶ்லோகத்தின் வ்யாக்யானத்தில் 'ஸௌஶீல்யம் வாத்ஸல்யம் ஸௌந்தர்யம் முதலிய கல்யாண குணங்களின் ஸம்பந்தத்தை' என்று அர்த்தம்சொல்லப்பட்டது, இவ்விடத்திலோவெனில் 'யோகம் என்னும் பதத்தினால் சொல்லப்பட்டதாவது ஸ்ருஷ்டிப்பவனாக இருக்கை முதலியது' என்று அர்த்தம் சொல்லப்படுகிறது, இவையிரண்டும் எப்படிப்பொருந்தும் என்னில்; இரண்டிடங்களிலும் இவையிரண்டும் முதலிய என்னும்

2 பகவத்கீதை 10 7.

1, 2, 3, விஷ்ணுபுராணம் 1-22-31, 32, 33 ப்ருஹ்மாதக்ஷ ப்ரஜாபதி முதலியவர்கள் காலம் விஷ்ணு மனு முதலியவர்கள், காலம் ருத்ரன் யமன் முதலியவர்கள். பகவானுடைய விபூதிகள்.

பா-அ] பதத்தினால் சொல்லப்பட்டதாவது அவனால் நியமிக்கப்படுவதாயிருக்கை என்றல்லவோ சொல்லப்பட்டது மறுபடியும் * அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்ததே। இதி மத்வா பஜந்தே மாம் புதா பாவஸமந்விதா:’ என்று. 19

அதில் எல்லா ப்ராணிகளையும் ப்ரவ்ருத்திப்பிக்கிறதாகிய நியமனமாவது ஆத்மாவாக இருந்துகொண்டு என்கிற இந்த அர்த்தத்தையும், யோகம் என்னும் பதத்தினால் சொல்லப்பட்டதாவது எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிப்பவனாக இருக்கையும், காப்பாற்றுகிறவனாக இருக்கையும், ஸம்ஹாரம் செய்கிறவனாக இருக்கையும் என்பதையும் நன்றாக ஸ்பஷ்டமாகச்சொல்லுகிறார்—

அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்தித:।
அஹமாதிஶ்ச மத்யம் ச பூதாநாமந்த ஏவ ச ॥

ப - ரை) குடாகேஶ சோம்பலை ஜயித்தவனாகிய, அல்லது தூக்கத்தை ஜயித்தவனாகிய அர்ஜுன, அஹம் நான், ஸர்வபூதாஶயஸ்தித: எல்லா ப்ராணிகளுடையவும் ஹ்ருதயத்திலிருக்கிற, ஆத்மா ஆத்மா, அஹம் நான், பூதாநாம் எல்லா ப்ராணிகளுக்கும், ஆதி: காரணம், மத்யம் ஸ்திதிக்குக்காரணம், அந்தஶ்ச ப்ரளயத்திற்கும் காரணம். 20

பதத்தினால் சேர்த்துக்கொள்ளப்படுகிறதாகையினாலே ஒரே அர்த்தத்தைச்சொல்லுகிறபடியினால் பொருந்தும், ஆகையினாலேயே ‘ஏதாம் விபூதிம் யோகஞ்ச’ என்கிற இடத்தில் ‘கெட்டகுணங்களுக்கு விரோதமாகிய கல்யாணகுணங்களாகிற யோகத்தையும்’ என்று மொத்தமாகச் சேர்த்துச் சொல்லப்பட்டது. 1‘ஏதாம் விபூதிம்’ என்பதற்கு முன்பு நியமனத்தைச்சொல்லுகிறதாக வ்யாக்யானம் செய்திருந்தபோதிலும் இவ்விடத்தில் அதை எடுத்தது, ஸம்பத்து முதலிய வேறு அர்த்தங்களை விலக்கிக்கொண்டு வி என்னும் உபஸர்கத்தோடுகூடிய தாதுவின் அர்த்தத்தைப்ரகாசப்படுத்துவதற்காக. ‘விஷ்ணோர்ஜ்ஞாத்வா நாமயோகம் விபூதிஞ்ச’ என்னுமிடத்திலோவெனில் ‘யாபிர்விபூதிபி:’ என்று கீழ் ஶ்லோகத்தில் சொல்லிய அர்த்தத்தையே சொல்லுவதுஸ்வாரஸ்யமுடையது ஆகையினால் நியமனம் என்னும் அர்த்தத்தைச்சொல்லுகிறதாகச் சொல்லப்பட்டது. ஆகையினால் கேள்விக்கும் பதிலுக்கும் உள்ள ஸ்வல்பவ்யத்யாஸம் ஸஹிக்கத்தக்கதுதான். 19

1 பகவத்கீதை 10-8,

பா] எனக்குச் சரீரங்களாக இருக்கிற எல்லாப்ராணிகளுடையவும் ஹ்ருதயத்தில் நான் ஆத்மாவாக இருக்கிறேன். ஆத்மாவாவது, சரீரத்திற்கு எல்லாவிதத்தாலும் ஆதாரமாகவும், நியமிக்கிறவனுகவும் ஶேஷியாகவும் இருப்பவன்அப்படியே '* ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட: மத்த: ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநம் ச । † ஈஶ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி । ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா ॥' என்றுமேலே சொல்லப்போகிறுர். ஶ்ருதியிலும் ‡ 'எவன் எல்

தா] 1 'விஸ்தரேணாத்மநோ யோகம் விபூதிம்' என்றுகேழ்க்கப்பட்ட இரண்டு அர்த்தங்களையும் விஸ்தாரமாக நிரூபிப்பதற்காக அதற்குஸமாதானமாகிய இரண்டர்த்தங்களும் 'அஹமாத்மா' என்கிற ஶ்லோகத்திலை சுருக்கிச சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்திலை சொல்லுகிறுர்—'அதில்' என்றுரம்பித்து. இத்தால் முன்பு சொல்லப்பட்டதும் இனிச சொல்லப்போகிறதுமாகிய ஒன்று சேர்த்துச் சொல்லியிருக்குமிடங்களில் ஆங்காங்கு ஸம்பவிக்கிறதற்குத் தக்கபடி இரண்டுவித காரணங்கள் சொல்லப்பட்டதாகிறது. 'ஆத்மாவாக இருக்கிறேன்' என்றது தாதபர்யத்திலேற்பட்ட அர்த்தத்தைக் காட்டியிருக்கிறது.'ஆத்மா' என்னும் பதம் அனேக அர்த்தங்களைச் சொல்லுகிறதாக யிருந்தபோதிலும் சரீரத்தை உடையவனுக இருக்கும் ஆத்மாவைப்பற்றிக் சொல்லுகிறதாகவே அதிக ப்ரஸித்தி இருக்கிறபடியினுல் அத்துடன் சேர்ந்ததாகிய சரீரத்தை வேண்டுகிறது, ஆகையினுல் ஒரே பதத்தின் நடுவிலிருந்தபோதிலும், 'பூத' என்னும் பதம் யுக்தியினுலே பிரித்து இங்கே சேர்த்துக்கொள்ளத்தக்கது, என்கிற அபிப்ராயத்தினுல் 'எல்ப்ராணிகளுக்கும்'என்று சொல்லப்பட்டது ஜீவாத்மாக்களுக்குசசரீரங்களாக இருக்கிற எல்லா 'ப்ராணிகளையும் ஜீவாத்மாவையும் குறித்து ஆத்மாவாக இருக்கை பகவானுக்கு எப்படிப் பொருந்தும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமாக ஆத்மாவின் லக்ஷணத்தைக் காட்டுகிறுர்—'ஆத்மாவாவது' என்றுரம்பித்து. மூன்றும் சேர்ந்து ஒரே லக்ஷணம் என்று சிலர் சொல்லுகிறுர்கள். அப்படிச் சொல்லும் பக்ஷத்தில் ஶ்ருதிவாக்யம் முதலியவைகளை அனுஸரித்து உத்பத்திககுககாரணமாகயிருக்கை முதலிய மூன்றும் ப்ரஹ்மத்திற்கு லக்ஷணம் என்று சொல்லுகிற பக்ஷத்திலேபோல ஸந்தேஹத்தை மாத்திரம் விலக்குகிறபடியினுலே மூன்றுக்கும் ப்ரயோஜனம் உண்டென்று நினைக்க

* பகவத்கீதை 15-15. † பகவத்கீதை 18-61. ‡ ப்ருஹதாரண்யகம் 5-7-15.

லாப்ராணிகளிடத்திலும் இருந்துகொண்டு எல்லா ப்ராணிகளுக்கும் உள்ளே இருக்கிறானே. எவனை எல்லா ப்ராணிகளும் அறியவில்லையோ, எவனுக்கு எல்லாப்ராணிகளும் சரீரமோ, எவன் எல்லாப்ராணிகளையும் உள்ளே இருந்துகொண்டு நியமிக்கிறானோ, இவன் அழிவில்லாதவனும் உனக்கு அந்தர்யாமியுமான ஆத்மா’ என்றும் † எவன் ஆத்மாவினிடத்தில்

வேண்டியது. மற்றவர்கள் மூன்றும் தனித்தனியே மூன்றுலக்ஷணங்கள் என்று சொல்லுகிறார்கள். அந்தப் பக்ஷத்தில் லக்ஷணத்தைப் பிரித்துச்சொல்லிக்கொள்ளவேண்டியது. 1‘யஸ்ய சேதநஸ்ய யத் த்ரவ்யம் ஸர்வாத்மநா ஸ்வார்தே நியந்தும் தாரயிதும் ச ஶக்யம்’ என்றிவை முதலான சரீரத்தின் லக்ஷணத்தைச்சொல்லுகிற வாக்யமும் இங்கே நினைக்கத்தக்கது. சரீரத்துக்குச்சொல்லி இருக்கிற மற்றலக்ஷணங்கள் ஆங்காங்கு விஸ்தாரமாக நிராகரிக்கப்பட்டன. ஜ்ஞானத்தை உடைய வஸ்துவுக்கு விட்டுப்பிரியாத விஶேஷணமாகிய வஸ்து சரீரம், என்று பாஷ்யத்தில் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டதாகிய நம்முடைய நிஷ்கர்ஷம் இவ்விடத்தில் ‘ஸர்வபூத’ என்னும் பதத்தினால் சரீரங்கள் மாத்திரம் சொல்லப்படுகின்றன, என்னும்ஸந்தேஹத்தை நீக்குவதற்காகவும், ஆஶய என்னும் பதம் ஹ்ருதயத்தைச்சொல்லுகிறது, என்பதை ப்ரகாசப்படுத்துவதற்காகவும், ஆதாரமாக இருக்கை நியந்தாவாக இருக்கை ஆத்மாவுக்கு லக்ஷணம் என்பது ஸித்திப்பதற்காகவும், சொல்லுகிறார்.— ‘அப்படியே’ என்றாரம்பித்து. ‘ஸர்வஸ்ய சாஹம்’ என்கிற ஶ்லோகத்திற்குப்பிறகு 2 ‘த்வாவிமௌ புருஷௌ’ என்றாரம்பித்து 2‘க்ஷரஸ்ஸர்வாணி பூதாநி’ என்று சொல்லியிருக்கிறபடியினால் ‘ஸர்வபூத’ என்னும் பதம் எப்படி அசேதனத்தோடு சேர்ந்த ஜீவனைச்சொல்லுகிறது, என்று நிஶ்சயிக்கப்படுகிறதோ, அப்படியே இவ்விடத்திலும். அப்படியே அந்த ஸந்தர்ப்பத்திலே தானே ‘உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத:’ என்றாரம்பித்து, 3 ‘யோ லோகத்ரயமாவிஶ்ய பிபர்த்யவ்யய ஈஶ்வர:’ என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் ‘பிபர்தி’ ‘ஈஶ்வர:’ என்னும் இரண்டு பதங்களாலும் ஆதாரமாக இருக்கையும் நியந்தாவாக இருக்கையும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டன. ‘ஈஶ்வர:’ என்னும் பதத்தின் ரூடிசக்தியினால் எஜமானாக இருக்கையும் ஏற்பட்டது, பாம்புகளை நியமிக்கிற கருடன் முதலியவைகளிடத்தில் பாம்புக்கு ஈச்வரன் என்னும் பதம் ப்ரயோகிக்கப்படுகிற

---

† சதபத ப்ராம்ஹணம 14-5-30.
1 வேதார்த்த ஸங்க்ரஹம் 2 பகவத்கீதை 15-16.
3 பகவத்கீதை 15-17. 4 பகவத்கீதை 71-2.

இருந்துகொண்டு ஆத்மாவுக்குள்ளே இருக்கிறானே, எவனை ஆத்மா அறியவில்லையோ, எவனுக்கு ஆத்மா சரீரமோ. எவன் ஆத்மாவை உளளே இருந்துகொண்டு நியமிக்கிறானோ, அவன் அழிவில்லாதவனும் உனக்கு அந்தர்யாமியுமான ஆத்மா' என்றும் அர்த்தமுள்ள வாக்யத்திலும் சொல்லப்படுகிறது. இப்படி எல்லாப்ராணிகளுக்கும் ஆத்மாவாக இருக்கிற நான் அவைகளின் உத்பத்திக்கும் ஸ்த்திதிக்கும் ப்ரளயத்திற்கும் காரணம் என்று அர்த்தம். 20

பா-அ] இப்படி அந்தந்தப்பதங்களோடு சேர்த்துச் சொல்லுவதற்குக்காரணமாகிய பகவான் தனக்கு விபூதிகளாகிய எல்லாவஸ்துக்களிலும் ஆத்மாவாக இருக்கிறான் என்பதை நிரூபித்து, விபூதி விஶேஷங்களை பகவானைச் சொல்லும் பதங்களோடு சேர்த்துச் சொல்லுகிறார்—பகவான் ஆத்

தில்லையல்லவா. 'ஸம்பூதா:,'என்னும் பதமும் 'அஹம்'என்னும் பதமும் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகின்றன என்பது இங்கே இரண்டு ஶ்லோகங்களையு மெடுத்ததினால் காட்டபபட்டது. இநத ஶ்லோகத்திலிருக்கும் 'ஸர்வபூதாஶய'என்னும் பதம ஜீவாத்மாக்களைசசொல்லுகிறது, 'யஸ்ய ஆத்மா ஶரீரம்'என்று சொல்லியிருக்கிறபடியினால்.' ஸ்தித' என்பதினால் நியந்தாவாக இருக்கை முதலியது ஏற்பட்டது. ஹ்ருதயத்தில் இருக்கிறான் என்று சொல்லியிருக்கிறபடியினால் '1மயிஸர்வமிதம் ப்ரோதம்' என்றிவைமுதலிய இடங்களில சொல்லப்பட்ட ஆதாரமாக இருக்கையும் காட்டப்பட்டது. இப்படி சேதனமும் அசேதனமுமாகிய எல்லா வஸ்துக்களையும் சரீரமாக உடையவன் என்பதை 'ஸர்வபூதாஶய' என்னும் பதத்துடனேயே சொல்லுகிற ஶ்ருதி வாக்யத்தைக் காட்டுகிறார்—'எவன் எல்லா ப்ராணிகளிடத்திலும்' என்றாரம்பித்து. ஜீவாத்மாவையும் அவனுக்கு சரீரம் என்று விவரிக்கிறவாக்யத்தை எடுக்கிறார்—'எவன் ஆத்மாவினிடத்தில்' என்றாரம்பித்து. ஆத்மாவாக இருபபது, உபாதான காரணமாக இருப்பதற்கும் நிமித்தகாரணமாக இருப்பதற்கும் உபயோகமானது ஆகையினால் முன்பாதியுடன் சேர்த்து மேல்பாதிக்கு வ்யாக்யானம் செய்கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'இப்படி...ஆத்மாவாகஇருக்கிறநான்' என்பதனால் மாறுதல்கள் ஒன்றுமில்லாத தானே உபாதான காரணம் என்பதை ஸ்தாபித்திருககிறது. இடத்தினாலாவது, காலத்தினாலாவது ஆதி நடுவு கடைசி என்பது மாத்திரம் உசிதமல்ல ஆகையினால் அவைகளால் உபசாரமாகச் சொல்லப்பட் அர்த்தத்தைச சொல்லுகிறார்—'அவைகளின் உத்பத்திக்கும்' என்றாரம்பித்து. 20

1 பகவத்கீதை 10-8

மாவாக இருக்கும்பொழுது எல்லாப் பதங்களும் அந்தப் பகவானிடத்தி லேயே முடிவு பெறுகின்றன, எப்படி தேவன் மனுஷ்யன் பக்ஷிமரம் என்றிவை முதலிய பதங்கள் சரீரங்களைச் சொல்லிக்கொண்டு அததின் ஆத்மாவினிடத்தில் முடிவை அடைகின்றனவோ, அப்படியே. பகவான் அந்தந்த வஸ்துக்களுக்கு ஆத்மாவாக இருப்பதே அந்தந்தப் பதங்களோடு சேர்த்துச் சொல்லுவதற்குக் காரணம் என்று விபூதியை முடிக்கு மிடத்தி லும் † 'ந ததஸ்தி விநா யத் ஸ்யாத் மயா பூதம் சராசரம்' என்று மேலே சொல்லப்போகிறார், எல்லா வஸ்துக்களும் தானில்லாமல் இருப்பதில்லை என்று சொல்லுகிறபடியினால். விட்டுப் பிரியாமையும் நியமிக்கப்படுவதா யிருக்கிறபடியினால், என்று ‡ 'மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே' என்று ஆரம்பத்தி லேயே சொல்லப்பட்டது:—

ஆதித்யாநாமஹம் விஷ்ணுர்ஜ்யோதிஷாம் ரவிரம்ஶுமாந் |
மரீசிர்மருதாமஸ்மி நக்ஷத்ராணாமஹம் ஶஶீ || 21

ப - ரை | ஆதித்யாநாம் - பன்னிரண்டு ஸூர்யர்களுக்குள் உயர்ந்தவனா கிய, விஷ்ணு: - விஷ்ணு என்னும் ஸூர்யன், அஹம் - நான், ஜ்யோதி ஷாம் - ப்ரகாஶமுள்ள வஸ்துக்களுக்குள், அம்ஶுமாந் - அதிக ப்ரகாஶ முள்ள, ரவி: - ஸூர்யன் (நான்), மருதாம் - நாற்பத்தொன்பது வாயு க்களுக்குள், மரீசி: - மரீசீ என்னும் வாயுவாக, அஸ்மி - ஆகிறேன், நக்ஷத்ராணாம் - அஶ்வினீ முதலிய நக்ஷத்திரங்களுக்கு (பர்த்தாவாகிய), ஶஶீ - சந்திரன், அஹம் - நான். 21

பா] பன்னிரண்டென்று கணக்கிடப்பட்ட ஸூர்யர்களுக்குள் பன்னி ரண்டாவதாகவும் சிறந்தவனாகவும் இருககிற விஷ்ணுவென்றுபேருடைய

தா] 'ஆதித்யாநாமஹம்விஷ்ணு:' என்றாரம்பித்து, 1'யச்சாபி ஸர்வபூதா நாம் பீஜம் ததஹமர்ஜுந' என்கிறவரையிலும் சேர்த்துச் சொல்லி யிருக்கிற ஸந்தர்ப்பத்திற்கு 2 'அஹமாத்மா' என்கிற கீழ் ஶ்லோகத் துடன் சேர்த்து அவதாரிகை சொல்லுகிறார்—'இப்படி' என்றாரம் பித்து. இத்தால் 'அஹமாத்மா' என்றிவை முதலிய எல்லாம் நான்கு விபூதிகள் என்னும் மற்ற மதங்கள் நிராகரிக்கப்பட்டன. 'விபூதி விஶேஷங்களை' என்பதற்கு 3 'ஹந்த தே கதயிஷ்யாமி' என்றல்லவோ ஆரம் பிக்கப்பட்டது. என்று தாத்பர்யம். சரீரத்தைச்சொல்லுகிற சரீரம் என்பது முதலிய பதங்கள் ஆத்மாவினிடத்தில் முடிவு பெறுவதில்லை

† பகவத்கீதை10-39. ‡ பகவத்கீதை10-8.
1 பகவத்கீதை 10-39. 2 பகவத்கீதை 10-20. 3 பகவத்கீதை-10-19.

ஸூர்யன் எவனோ,அவன் நான். லோகத்தில் ப்ரகாஶத்தை உண்டாக்கு கிற வஸ்துக்களுக்குள் அதிக ப்ரகாஶமுடைய ஸூர்யர்களுடைய கூட்

அதைப்போலவே இவ்விடத்திலும் லக்ஷணை ஒப்புக்கொள்ளுவதே நயாயத்தை அனுஸரித்தது சக்திகல்பிப்பது அப்படியல்ல, லாகவம் இருக்கிறபடியினாலும்; என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம்சொல்லுகிறார்-- 'பகவான்'' என்றாரம்பித்து. விட்டுப்பிரியாத விஶேஷணங்களைச்சொல்லுகிறபதங்கள் அந்தந்த விஶேஷணங்களின் வழியாய் அவைகளை உடைய வஸ்துக்களையும் முக்யமான சக்தியினாலேயே சொல்லுகின்றன, என்கிற பொதுவான ஸ்வபாவத்தினாலேயே குணம் முதலியவைகளிலும் இது ஏற்பட்டிருக்கிறபடியினால புதிதாய் சக்தி கல்பிப்பதினாலுண்டாகும் கௌரவமுமில்லை, என்று தாத்பர்யம். இது தான் 'முடிவுபெறுகின்றன' என்று சொல்லப்பட்டது. விடடுபபிரியாத விஶேஷணமாக இருக்கையைக்காரணமாக உடையதாகிய, சரீரத்தைச்சொல்லும் பதங்கள் அததின் ஆத்மாவைச்சொல்லுகின்றன, என்பதைக்காட்டுகிறார்—'தேவன் மனுஷ்யன்' என்றாரம்பித்து. பகவானோடு மற்ற வஸ்துக்களைச்சேர்த்துச்சொல்லியிருப்பது பகவானையே அந்தந்த வஸ்துக்களாக ப்ரமிக்கிறபடியினால், என்கிற ஸந்தேஹத்தை விலக்குகிறார்.— 'பகவான் அந்தந்த வஸ்துக்களுக்கு ஆத்மாவாக இருப்பதே' என்று. ஆரம்பம் முடிவு இவைகளுக்கு விரோதமான அர்த்தம் நடுவில் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல அல்லவா, ப்ரமமாகிற காரணத்தினாலாவது உண்மையாகவாவது ப்ரஹ்மத்திற்கே எல்லாக்கெட்டஸ்வபாவங்களும்நிறைந்தவனாகஇருக்கையைஒப்புக்கொள்ளுவதுயுக்தமுமல்ல,என்று தாத்பர்யம். 'தானில்லாமல் இருப்பதில்லை என்று சொல்லி இருக்கிறபடியினால்: என்பதற்கு ஆத்மாவில்லாமல் சரீரம் 'இருக்காதல்லவா என்று தாத்பர்யம். நெருப்பில்லாமல் புகை முதலிய தில்லை, என்று சொல்லில் புகைமுதலியது பொய் என்றுவது, நெருப்பு முதலியவைகளே தான் புகைமுதலியது என்றுவது அர்த்தம தோன்றுகிற தில்லையல்லவா அதைப்போலவே இவ்விடத்திலும். யஜ்ஞதத்தனல்லாமல வீட்டில் ஒருவருமில்லை, கயிறு அல்லாமல் பாம்பு இல்லை, என்று சொல்லில் ஒன்றே உண்மையானது மற்றது பொய்,என்று எப்படி அர்த்தமாகிறதோ,அப்படியே இவ்விடத்திலும் ஏனிருக்கக்கூடாது என்கிற ஆக்ஷேபத்திற்குஸமாதானம் சொல்லுகிறார்—"விட்டுப் பிரியாமையும்" என்று.விரோதிகள்ஒன்று மில்லாத ஸமயத்தில் உண்டானஆரம்பத்தில் ஏற்பட்டஅர்த்தத்திற்குவிரோதமாகமுடிவில் அர்த்தம்சொல்லக்கூடாது என்பது[1]உபக்கிரமாதி காரணத்தில் ஏற்பட்டதென்றுதாத்பர்யம். 'நியமிக்கப் படுவதாயிருக்கிற படியினால்' என்பதினால் புகை நெருப்புமுதலிய

1 பூர்வமீமாஸா ஸூத்ரம் 3-3-1.

டம் எதுவோ, அது நான்: வாயுக்களுக்குள் சிறந்தவனாகிய மரீசி எவனோ, அவன் நான் 'நக்ஷத்ராணாமஹம் ஶஶீ' என்கிற இடத்தில் இருக்கும் ஆறும் வேற்றுமை அவைகளுக்குள் சிறந்தவனாகிய என்னும் அர்த்தத்

வைகளின் விட்டுப்பிரியாமையை விடவ்யத்யாஸம் காட்டப்பட்டது. இப்படி இவ்வளவுக் ரந்தத்தினால் அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்தித: என்பதினால் எல்லாச்சரீரங்களிலுமிருக்கும் ஜீவர்களும் ப்ரஹ்மத்துடன் ஒன்று என்பது சொல்லப்படுகிறது. என்கிறமதம் நிராகரிக்கப்பட்டது. ஆதித்யாநாம் என்பதற்கு அதிதியின் பிள்ளையாகிய ஸூர்யர்களுக்குள் என்றர்த்தம். 'ஆஜகந்யோ ஜகந்யஜ:' என்றிவை முதலிய வசனங்களை அனுஸரித்து 'பன்னிரண்டாவதாகவும் சிறந்தவனாகவும்' என்று சொல்லப் பட்டது. இவ்விடத்திலும் மேலும் அவர்களுக்குள் என்று தனித்துச் சொல்லுவதற்குக் காரணமாகிய விசேஷத்தைக் காட்டுவதற்காக 'சிறந்தவனாகவும்' என்னும் பதம், அதுவும் 'புரோதஸாஞ்ச முக்யம்' என்று மேலேசொல்லப்போகிற முக்யம் என்னும் பதத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிற தாகையினால் வேண்டின இடங்களி லெல்லாம சேர்த்துக் கொள்ள பட்டது இவ்விடத்தில் தனித்துச் சொல்லப்படுகிற வஸ்துக்களுக்குள் சிலவஸ்துக்கள் ப்ரதானங்கள் என்பது ப்ரத்யக்ஷத்தினாலேற்பட்டது, சில வஸ்துக்கள் ப்ரதானங்கள் என்பதுஶாஸ்த்ரத்தினாலேற்பட்டது. சிலஇடங்களில் நேராகவும், சிலவிடங்களில ஜீவாத்மா மூலமாகவும் அந்தர்யாமியாகச்சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜ்யோதிஷாம் என்கிற பதத்தினால் நக்ஷத்திரங்களைமாத்திரம் சொலலில் அதற்குள் சேராதவனாகவும் அவைகளின் ஸம்பந்தமுமில்லாத அம்ஶுமாந் என்பவனை அவைகளுக்குள் என்றுதனித் தெடுத்திருப்பது பொருந்தா தாகையினால் 'ப்ரகாசத்தை உண்டாக்குகிற வஸ்துகளுக்குள்' என்று பொதுவாகச் சொலலப்பட்டது. லோகங்களுக்குக் காரணமான மேலான ஜ்யோதிஸ்ஸை உத்தேசித்து ஸூர்யன் மினுமினும் பூச்சிக்கு ஸமானமாகையினால் அதை விலக்குவதற்காக 'லோகத்தில்' என்று விஶேஷித்துச் சொல்லப் பட்டது. அம்ஶுமாந் என்கிற இடத்தில் மதுப்ப்ரத்யயத்தினால் தனித்தெடுத்ததற்குக் காரணமாகிய மிகுந்தப் ப்ரகாசத்தின் ஸம்பந்தம் சொல்லப்படுகிறது, அப்படியில்லாவிடில் புனருக்திஎன்னும் தோஷம் வருகிறபடியினால். 'ரவி:' என்னும் பதம் பன்னிரண்டு ஸூர்யர்களுக்கும் பொதுவாகையினால் அதிலிருக்கும் ஒருமை

---

2 பகவத்கீதை 10 - 19. 3 ஜகன்யஜ: கடைசியிலுண்டானவர் அஜகன்ய: உயர்ந்தவர். 4 பகவத்கீதை 10-24.

தைச் சொல்லுகிறதல்ல, 'ஸம்ஹிதாநாமஸ்மிவேதநா' என்பதைப்போல.

கும்பலைக் குறிக்கிறது, என்று காட்டுவதற்காக 'ஸூர்யர்களின் கூட்டம்' என்று சொல்லப்பட்டது. 'மருதர்' என்பதற்கு திதியின் பிள்ளைகளாகிய நாற்பத்தொன்பது வாயுக்கள் என்றர்த்தம், எவர் ஏழேழுபேர்கள் ஒவ்வொரு கணமாகவும் இப்படி ஏழுகணங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறார்களோ. சந்திரனும நக்ஷத்திரமாக இருந்தால் அப்போது நக்ஷத்திரங்களுக்குள் சந்திரன் என்று தனித்தெடுத்துச்சொல்லலாம் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'என்கிற இடத்திலிருக்கும் என்றாரம்பித்து. பின்னை அர்த்த மென்னவெனில் சொல்லுகிறார்—'நக்ஷத்திரங்களுக்கு நாயகனாகிய'என்று 1 'வ்யாஸ்ஃ' என்றல்லவோ ஆரம்பத்திலேயே சொல்லப்பட்டது, என்று தாத்பர்யம். முன்பின் எல்லா இடங்களிலிருக்கும் ஆறும் வேற்றுமைகள் அவைகளுக்குள் என்னு மர்த்தத்தைச் சொல்லுவதாக இருக்கும்பொழுது, நடுவில் ஒன்றுக்கு மாத்திரம் பொதுவாக ஸம்பந்தம் அர்த்தம் என்பது யுக்தமல்ல 'நக்ஷத்' என்னும் பதத்தினால் ராத்திரியில் பாகாசிக்கிற வஸ்துக்களெல்லாம் 'ஸத்ரிணஃ' (குடைபிடித்தவர்கள்) என்கிற இடத்தில சொல்லியிருக்கிற ந்யாயத்தை அனுஸரித்துச்சொல்லத்தக்கவைகள், 2 எவைகள் நக்ஷத்திரங்களோ இவைகள் புண்யம் செய்தவர்களுடைய பாகாசங்கள்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்ய மிருக்கிறபடியினால். மேலும் சந்திரமண்டலமும் ஸ்வர்கத்தை அடைந்தவர்களுக்கு ஸுகத்தை அனுபவிக்கக்கூடிய இடமாகையினால் நக்ஷத்திர மென்னப்படுகிறது. 3 'எவன் இந்த லோகத்தில் யாகம் செய்கிறானோ அவன் அந்த லோகத்தை விடுகிறதே இல்லை. ஆகையினால் நக்ஷத்திரங்கள் என்னப்படுகின்றன, தேவதைகளின் வீடுகளே நக்ஷத்திரங்கள்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்ய மிருக்கிறபடியினால், என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொலலுகிறார்— 'ஸம்ஹிதாநாமஸ்மிவேதநா' என்பதைப் போல' என்று. முக்யமான அர்த்தம் ஸம்பவிக்கும்பொழுது லக்ஷணை சொல்லுவது ந்யாயத்தை அனுஸரித்ததல்ல. இவ்விடத்தில் எல்லா இடங்களிலும் ஆறும் வேற்றுமை அவைகளுக்குள் என்னு மர்த்தத்தைச் சொல்லுகிறதென்பதும் பொருந்தாது. 4 'ஸம்ஹிதாநாமஸ்மிவேதநா' 5 ஸஹஸ்ராணாமாஹிரஸ்ஸஹஸ்ரம் வெவாஹஜனாந' 'ஸாஃ

---

1 பகவத்கீதை 10-19. 2 யஜுர்வேதம் 5 காண்டம் 4-1-3. 3 யஜுர்வேதம் 1-அஷ்டகம் 5-2-10 4 பகவத்கீதை 10-22. 5 பகவத்கீதை 10-32.

நக்ஷத்திரங்களுக்கு நாயகனாகிய சந்திரன் எவனோ, அவன் நான். 21

वेदानां सामवेदोऽस्मि देवानामस्मि वासवः ।
इन्द्रियाणां मनश्चास्मि भूतानामस्मि चेतना ॥ 22

ப - ரை] वेदानां - வேதங்களுக்குள், सामवेदः - ஸாமவேதமாக, अस्मि - ஆகிறேன், देवानां - தேவதைகளுக்குள், वासवः - இந்திரனாக, अस्मि - ஆகிறேன், इन्द्रियाणां - இந்திரியங்களுக்குள், मनः - மனஸ்ஸாகவும், अस्मि - ஆகிறேன், भूतानां - ப்ராணிகளுடைய चेतना - ஜ்ஞானமாக अस्मि - ஆகிறேன். 22

பா] ருக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் அதர்வணவேதம் இவைக

தா] प्रवदतामहम्' 6 'अक्षराणामकारोऽस्मि' 7 'उद्भवश्च भविष्यताम्' 8 'द्यूतं छलयतामस्मि' 8 'तेजस्तेजस्विनामहम्' 8 'जयोऽस्मि व्यवसायोऽस्मि' என்றிவை முதலிய இடங்களில் அவைகளுக்குள் என்னும் அர்த்தமில்லாமையினால், ஆகையினால் இவ்விடத்தில் சந்திரன் நக்ஷத்திரங்களின் ஜாதியில் சேர்ந்தவனல்லாமையினால் அவ்விடத்திலிருக்கும் ஆறும் வேற்றுமையினால் சொல்லப்பட்ட பொதுவான ஸம்பந்தம் ப்ரமாணங்களில் ஏற்பட்ட விசேஷமான ஸம்பந்தத்தில் முடிவை அடைகிறது என்று தாத்பர்யம். 21

கானமல்லவோ ஸாம என்னும் பதத்திற்கு அர்த்தம், அதை வேதங்களுக்குள் தனித்தெடுத்தது எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்தைத்தடுப்பதற்காக 'सामवेदोऽस्मि' என்று சொல்லியிருக்கிறது என்றுகாட்டுகிறார்.—'ருக்வேதம்' *என்றாரம்பித்து. கானத்தை ப்ரதானமாக உடையதாக இருக்கையினாலும் ஆயிரம் சாகைகளை உடையதாக இருக்கையினாலும் ஸாமவேதத்திற்கு மேன்மையும் மற்ற வேதங்களுக்கு இவையில்லாமையினால் தாழ்வும் உண்டு ப்ரமாணமாகவிருக்கையில் தாரதம்யத்தினாலல்ல. 'முதலில் ருக்கும் ஸாமமு மிருந்தன ஸா என்றுபேருடையருக்கு இருந்தது* अमः *என்று பேருடைய ஸாமமும் இருந்தது இவை இரண்டும் ப்ரஜைகளை உண்டாக்குவதற்காக ஒன்று சேர்ந்*

---

6 பகவத்கீதை 10-33. 7 பகவத்கீதை 10-34. 8 பகவத்கீதை 10-36.

ளுக்குள் சிறந்ததாகிய ஸாமவேதம் எதுவோ, அது நான். தேவதைகளுக்குள் இந்திரன் ஆகிறேன் நான். பதினொரு இந்திரியங்களுக்குள் சிறந்ததாகிய மனஸ்ஸு என்கிற இந்திரியம் எதுவோ, அது நான் ஆகிறேன். இது

தது என்று சொல்லுகிறார்கள் அதில்லை என்று சொல்லிற்று ஸாமமே சிறந்தது ஆகையினால் என்னுடைய மஹிமை' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தினால் கானமாகிய ஸாமம் ப்ரதானமாகையினால் கான ரூபமாகிய ஸாமவேதம் ப்ரதானம என்பது சொல்லப்பட்டது. 1 'ருக் வேதத்திலிருந்து வைஶ்யஜாதி உண்டானதாகச் சொன்னார்கள் யஜுர் வேதத்தை க்ஷத்திரிய ஜாதிக்குக்காரணமாகச் சொன்னார்கள் ஸாம வேதம் ப்ராஹ்மணர்களுக்கு உத்பத்தி ஸ்த்தானம் என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யமுமிருக்கிறது 'தேவாநாம்' (தேவதைகளுக்குள்) என்பதினால் ஸ்வர்கத்தில்வஸிப்பவர்கள் சொல்லப்படுகிறார்கள், ப்ரஹ்மா முதலியவர்களைச்சேர்த்துச் சொல்லுவது யுக்தமல்ல ஆகையினால. 'வாஸவ:' என்னும் பதத்திற்கு இந்திரன் என்கிற பதத்தினால் வ்யாக்யானம் செய்தது மேன்மையை ப்ரகாசப்படுத்துவதற்காக, இதி என்னும் தாது மிகுந்த ஐஶ்வர்யத்தைச்சொல்லுகிறதாகையினால். 2 'இந்திரியங்களைவிட விஷயங்கள்மேலானவைகள் விஷயங்களைவிட மனஸ்ஸு மேலானது' என்றும் 3 'இவனிடத்திலிருந்து ப்ராணவாயுவும்மனஸ்ஸும் எல்லா இந்திரியங்களு முண்டாகின்றன' என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலிய இடங்களில் மனஸ்ஸைத்தனியாகச் சொல்லியிருக்கிறபடியினால் 'இந்த்ரியாணாம் மநஶ்சாஸ்மி' என்று இந்திரியங்களுக்குள் என்றுசொல்லியிருப்பது எப்படிப்பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்குஸமாதானம சொல்லுகிறார்—'பதினொரு இந்திரியங்களுக்குள்' என்றாரம்பித்து. இதின் கருத்தாவது 4 'இந்த்ரியாணி தசைகம்ச' 5 ஏகாதசம் மநஶ்சாத்ர' என்றிவை முதலிய இடங்களில மனஸ்ஸும் இந்திரியம என்று சொல்லியிருக்கிறபடியினால். சில இடங்களில் தனியாகச்சொல்லியிருப்பதும கோபலீவர்தந்யாயத்தினால என்று. பஞ்சபூதங்களுக்குள சேதனை என்று பேருடைய பூதம் ஒன்றுமில்லை, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'இதுவும்' என்றாரம்பித்து. இந்த

1 *யஜுர்வேதம் காடகம்* 3-9-50 2 *கடவல்லீ* 1-3-10.

3 *முண்டகோபநிஷத்* 2-1-3, 4 *பகவத்கீதை* 13-5.

5 *விஷ்ணுபுராணம்* 1-2-47 *அத்ர இவைகளுக்குள் ஏகாதசம் பதினொராவது மனஸ்ஸானது.*

வும் அவைகளுக்குள் என்னு மர்த்தத்தைச் சொல்லுகிறதல்ல,அறிவுள்ள வஸ்துக்களுடைய ஜ்ஞானம் எதுவோ,அதுவும் நான் ஆகிறேன். 22

ஆறும் வேற்றுமையும் என்று அர்த்தம். 1 'தேஜஸ்தேஜஸ்விநாம்', 'ஸத்வம் ஸத்வவதாம்' என்றிவைமுதலிய இடங்களிலேபோல விசேஷணம் விசேஷ்யம் சேர்ந்தவஸ்துவில் ஸாரமாகிய விசேஷணபாகம் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'அறிவுள்ளவஸ்துக்களுடைய' என்று சொல்லப்பட்டது. பூதங்களில் ஆறுவது பூதமாகச்சேதனை என்று பேருடைய ஒரு வஸ்து வேறு இடங்களில் சொல்லப்படுகிறது, எப்படியென்னில் 2 'கம் வாயுரக்நிராபஸ்ததா மஹீ | ஷஷ்டஸ்து சேதநாதாதுஸ் ஸப்தம உச்யதே || அஷ்டமேந மநோ ஜ்ஞேயம்' என்றும், அப்படியே 3 'ஷஷ்டஸ்து சேதநாதாதுர் மந இத்யபிதீயதே' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் சேதனைக்கு மனஸ்ஸு ஆதாரமாகையினால் சேதனையை மனதென்று சொல்லியிருக்கிறது, ஆகையினால் விரோதமில்லை. ஆகையினால் 'பூதாநாமஸ்மி சேதநா' என்கிற ஆறும் வேற்றுமை அவைகளுக்குள் என்னும் அர்த்தத்தைச்சொல்லுகிறதென்பது உசிதம் தான், என்னில்? உசிதமல்ல, ஏனெனில் பஞ்சபூதங்களில் ஆறுவது என்று சொல்லியிருக்கிற மாத்திரத்தினால் அது பூதம் தான் என்பது யுக்தமல்ல, வேறாக இருந்தாலும் கணக்கிட்டுச் சொல்லக்கூடுமாகையினால். இவ்விடத்தில் ஏழாவதாகச் சொல்லப்பட்டிருக்கும் ஆத்மாவும், எட்டாவதாகச் சொல்லப்பட்டிருக்கும் மனஸ்ஸும் பூதங்கள் என்று ஒப்புக்கொள்ளப்படாமையினாலும், சேதனை என்னும் பதத்திற்கும் ப்ரஸித்தமில்லாத அர்த்தத்தைச் சொல்லவேண்டியிருப்பதினாலும், ப்ரஸித்தமான அர்த்தத்தை ஒப்புக்கொள்வதே உசிதமாகையினாலும். ஆகையினால் இவ்விடத்தில் ஆறும் வேற்றுமை ஸம்பந்தமாத்திரத்தைச் சொல்லுகிறதென்பதே உசிதம்.

---

1 பகவத்கீதை 10-36.

2 கம் ஆகாயம் வாயு: காற்று அக்னி: தேஜஸ்ஸு ஆப: ஜலம்ததா அப்படியே மஹீபூமியும் ஆகிய மஹாபூதாநி பஞ்சபூதங்களும் சேதநாதாது: சேதனை என்கிற தாதுஷஷ்ட: ஆறுவதாகவும் ஆத்மா ஜீவாத்மா ஸப்தம: ஏழாவதாகவும் உச்யதே சொல்லப்படுகிறது. மன: மனது அஷ்டமம் எட்டாவதாக ஜ்ஞேயம் அறியதக்கது.

3 ஷஷ்ட:து ஆறுவதாகிய சேதனாதாது: சேதனாதுவானது மன:இதி மனஸ்ஸு என்று உபதிஶ்யதே சொல்லப்படுகிறது.

ருத்ராணாம் ஶங்கரஶ்சாஸ்மி வித்தேஶோ யக்ஷரக்ஷஸாம்।
வஸூநாம் பாவகஶ்சாஸ்மி மேருஶ்ஶிகரிணாமஹம் ॥ 23

ப-ரை] அஹம் - நான், ருத்ராணாம் - ருத்ரர்களுக்குள், ஶங்கரஶ்ச - சங்கரன் என்று பேருடைய ருத்ரனாகவும், யக்ஷரக்ஷஸாம் - யக்ஷர்ராக்ஷஸர்கள் இவர்களுக்குள், வித்தேஶ: - குபேரனாகவும், அஸ்மி - ஆகிறேன், வஸூநாம் - வஸுக்களுக்குள், பாவகஶ்ச - பாவகன் என்று பேருடைய வஸுவாகவும், ஶிகரிணாம் - சிகரங்களை உடைய மலைகளுக்குள், மேரு: - மேருபர்வதமாகவும், அஸ்மி - ஆகிறேன். 23

பா] பதினொரு ருத்ரர்களுக்குள் சங்கரன் நான் ஆகிறேன். யக்ஷர் ராக்ஷஸர்கள் இவர்களுக்குள் குபேரன் நான். எட்டு வஸுக்களுக்குள் பாவகன் நான். சிகரங்களினால் சோபையையுடைய மலைகளுக்குள் மேரு நான். 23

தா] ருத்ரர்களுக்குள் ஒருவருக்கு சங்கரர் என்கிற பெயரினாலேயே இவர் சிறந்தவர் என்பது காட்டப்பட்டது. யக்ஷர் ராக்ஷஸர் இந்த இரண்டு ஜாதியரும் அதிக வ்யத்யாஸமில்லாதவர்கள் ஆகையினால் 'யக்ஷர் ராக்ஷஸர் இவர்களுக்குள்' என்று சொல்லப்பட்டதேயல்லாமல் குபேரன் ராக்ஷஸன் என்பதில்லை; அன்றிக்கே 'நக்ஷத்ராணாமஹம் ஶஶீ' என்பதைப்போலவே இரண்டு ஜாதியாருக்கும் எஜமானன் என்பது மாத்திரம் இங்கு சொல்லப்படுகிறதாகவுமாம். 'வித்தேஶ' (பணங்களுக்கு எஜமானன்) என்கிற பெயரினாலேயே குபேரனுக்கு அஸாதாரணமான, ஐஶ்வர்யத்தினாலுண்டான மேன்மை காட்டப்படுகிறது. 1 'ஸ்தாவராணாம் ஹிமாலய:' என்று எல்லா மலைகளையும்பற்றி மேலே சொல்லப்போகிறபடியினால் 'மேருஶ்ஶிகரிணாம்' என்கிற இடத்திலிருக்கும் 'ஶிகரி' என்னும் பதத்தினால் விசேஷமான மலைகள் சொல்லப்படுகின்றன. இந்தப் பதமும் அப்படிப்பட்ட விசேஷத்தைக் காட்டக்கூடியதுதான், என்கிற அபிப்ராயத்தினால் 'சிகரங்களினாலே சோபையையுடைய' என்று சொல்லப்பட்டது. இந்த விகுதி சிறந்தது என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது, என்று தாத்பர்யம். மிகவும் ரத்தினங்கள் தங்கம் இவைகள் நிறைந்த சிகரங்களை உடையதாகையினால் மேரு பர்வதம் சிறந்தது. 23

1 பகவத்கீதை 10-25.

𑌪𑍁𑌰𑍋𑌧𑌸𑌾𑌂 𑌚 𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌮𑍍 ।
𑌸𑍇𑌨𑌾𑌨𑍀𑌨𑌾𑌮𑌹𑌂 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌃 𑌸𑌰𑌸𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌸𑌾𑌗𑌰𑌃 ॥ 24

ப - ரை] 𑌪𑌾𑌰𑍍𑌥 அர்ஜுன, 𑌮𑌾𑌂 என்னை, 𑌪𑍁𑌰𑍋𑌧𑌸𑌾𑌂 புரோஹிதர்களுக்குள், 𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 ப்ரதானராகிய, 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌂 ப்ருஹஸ்பதியாக, 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 அறி, 𑌅𑌹𑌂 நான், 𑌸𑍇𑌨𑌾𑌨𑍀𑌨𑌾𑌂 ஸேநாபதிகளுக்குள், 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌃 ஸுப்ரம்மண்யனாக, 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன், 𑌸𑌰𑌸𑌾𑌂 தேங்குகிற ஜலமுள்ள வஸ்துக்களுக்குள், 𑌸𑌾𑌗𑌰𑌃 ஸமுத்திரமாக, 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன். 24

பா] புரோஹிதர்களுக்குள் சிறந்தவராகிய ப்ருஹஸ்பதி எவரோ, அவர் நானாகிறேன். சேனைத்தலைவர்களுக்குள் ஸுப்ரஹ்மண்யன் நானாகிறேன் ஜலம் தேங்குமிடங்களுக்குள் ஸமுத்திரமாகிறேன். 24

𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌭𑍃𑌗𑍁𑌰𑌹𑌂 𑌗𑌿𑌰𑌾𑌮𑌸𑍍𑌮𑍍𑌯𑍇𑌕𑌮𑌕𑍍𑌷𑌰𑌮𑍍 ।
𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌜𑌪𑌯𑌜𑍍𑌞𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑌿𑌮𑌾𑌲𑌯𑌃 ॥ 25

ப - ரை] 𑌅𑌹𑌂 நான், 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 மஹருஷிகளுக்குள், 𑌭𑍃𑌗𑍁𑌃 ப்ருகுமஹாருஷியாகவும், 𑌗𑌿𑌰𑌾𑌂 வார்த்தைகளுக்குள், 𑌏𑌕𑌂 ஒரு, 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 எழுத்தாகிய ப்ரணவமாகவும், 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன், 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 யாகங்களுக்குள், 𑌜𑌪𑌯𑌜𑍍𑌞𑌃 ஜபமாகிறயாகமாகவும், 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 மலைகளுக்குள், 𑌹𑌿𑌮𑌾𑌲𑌯𑌃 இமயமலையாகவும், 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன். 25

பா] மரீசி முதலிய மஹாருஷிகளுக்குள் ப்ருகுமஹாருஷி நான். அர்த்தத்

தா] ப்ருஹஸ்பதி என்னும் பெயரினாலேயே 𑌬𑍃𑌹𑌤𑌾𑌂 𑌪𑌤𑌿𑌃 என்கிற வ்யுத்பத்தியினால் அவர் சிறந்தவர் என்பது ஏற்பட்டது ; வாக்குக்களுக்கு எஜமானன் அல்லவோ அவர், என்று. 'ஸேநாநீ' என்னும் பதத்தினால் கர்மங்களுக்கு வசப்பட்ட சேனைத்தலைவர்கள் சொல்லப்படுகிறார்கள். ஸுப்ரஹ்மண்யனுக்கு மேன்மையாவது தேவதைகளுடைய ஸேநாபதியாயிருக்கை. 'ஸரஸாம்' என்னும்பதத்தினால் ஓடாமல் ஜலம் தேங்குமிடமெல்லாம் சொல்லப்படுகிறபடியினால் ஸமுத்திரத்தைச் சொல்லியிருக்கிறது. ஓடுகிற ஜலங்களைப்பற்றித் தனித்துச் சொல்லப்போகிறபடியினால். 24

1 'தேவர்ஷீணாம்' என்றும் 2 'முநீநாம்' என்றும் மேலே சொல்லப்போகிறபடியினாலும், மஹா என்னும் பதத்தினால் விசேஷித்துச் சொல்லப்படுகிறபடியினாலும் 'மஹர்ஷீணாம்' என்று ருஷிகளின்

---

1 பகவத்கீதை 10-26. 2 பகவத்கீதை 10-37

தைச் சொல்லுகிற பதங்கள் வார்த்தைகள், அவைகளுக்குள் ஒரு எழுத்

ஒருவிதமான கூட்டம் சொல்லபபடுகிறது, என்கிற அபிப்ராயத்தினுல் 'மரீசி முதலிய' என்று சொல்லப்பட்டது. 'கிரம்' என்று ஓசை மாத்திரம் சொல்லப்படவில்லை, ஸமுத்திரத்தின் ஓசை முதலியவைகளில் 'கிர:' என்னும் பதம் ப்ரயோகிக்கப்படுகிறதில்லை யாதலால், ஆகையினுலேயே எழுத்துக்கள் மாத்திரமுமில்லை. 1 'அக்ஷராணாமகாரோஸ்மி' என்று மேலே சொல்லப்போகிறபடியினுலும், ஆகையினுலேயே'ஏகாக்ஷரம்'என்பதும் அ காரத்தைப்பற்றியதுமல்ல, 2 'ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம' என்றிவை முதலிய இடங்களில் ப்ரணவத்தில் ஏக என்னும் விசேஷணத்துடன் கூடிய 'அக்ஷரம்' என்னும் பதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது, என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'அர்த்தத்தைச் சொல்லுகிற' என்று. அர்த்தத்தைச சொல்லுகிற பதங்களுக்குள் ப்ரணவம் சிறந்தது என்பது. எல்லாவற்றையுமவிட மேலான அர்த்தத்தைச் சொல்லுதல் முதலிய காரணத்தினுலும் 'நரம்புகளினுல் இலைகள்போல், எல்லா வார்த்தைகளும் ப்ரணவத்தினுல் நிறைந்து இருக்கின்றது' என்று ஶ்ருதி சொல்லி இருப்பதினுலும். யாகங்களுக்குள் ஜபயஜ்ஞம் சிறந்தது,என்பது வேறிடங்களில், 3'விதியஜ்ஞாஜ்ஜபயஜ்ஞோ விஶிஷ்டோ தஶபிர்குணை:' என்று சொல்லி இருப்பதினுலேற்பட்டது. மேலும் 4 'குர்யாத்க்ருதபஶும் ஸங்கே குர்யாத்பிஷ்டபஶும் ததா । நத்வேவ து வ்ருதா ஹந்தும் பஶுமிச்சேத்கதாசந' என்றும் 5'பஶுயஜ்ஞை: கதம் ஹிம்ஸ்ரைர்மாத்ருஶோ யஷ்டுமர்ஹதி । ஹிம்ஸாத்மகைஸ்ஸ்வாத்மகைர்யஜ்ஞை: கார்யம் கேஶவ: ।

1 பகவத்கீதை 10-33. 2 பகவத்கீதை 8-13

3 விதியஜ்ஞாத் செய்யப்படுகிற யஜ்ஞத்தைவிட ஜபயஜ்ஞ: ஜபமாகிய யஜ்ஞும்தஶபி: குணை: பத்துமடங்கு விஶிஷ்ட: சிறந்தது.

4 ஸங்கயேயாகத்தில் க்ருதபசும் நெய்யினுல் செய்யப்பட்ட பசுவைகுர்யாத் செய்யவேண்டும் ததா அப்படியேபிஷ்டபசும் மாவினுல்செய்யப்பட்ட பசுவைகுர்யாத் செய்யவேண்டும் வ்ருதாவீணுக பசும் பசுவை ஹந்தும் கொல்லுவதற்கு நது இச்சேத் ஆசைப்படக்கூடாது.

5 மாத்ருச: என்னைப்போன்றவன் ஹிம்ஸ்ரை' ஹிம்ஸாருபங்களாகிய பசுயஜ்ஞை: பசுவைக்கொண்டு செய்யும் யஜ்ஞங்களினுல் யஷ்டும் யாகம் செய்யகதம் எப்படி அர்ஹதி தகுந்தவனுகிருன். தஸ்ய அந்த மஹாத்மன: மஹாத்மாவுக்குஹிம்ஸாத்மகை: ஹிம்ஸாருபங்களானயஜ்ஞை: யாகங்களினுல் கிம் என்ன கார்யம் ப்ரயோஜனம் யேநஅவனுல் ப்ரஸ்வாபேச தூக்கத்திலும் ப்ரபோதேச விழித்துக்கொண்டிருக்கும்பொழுதும் கேசவ: பகவான்பூஜித: பூஜைசெய்யப்பட்டாரோ.

தாகிய ப்ரணவம் நானாகிறேன். யாகங்களுக்குள் சிறந்த ஜபயஜ்ஞமாகிறேன் மலைகளுக்குள் இமயமலை நான். 25

[illegible]' என்றுமிவை முதலிய வசனங்களினால் அஹிம்ஸாரூபமாகிய யஜ்ஞங்களைச் செய்ய யோக்யதை இல்லாதவர்களுக்கு ஹிம்ஸாரூபமாகிய யஜ்ஞங்களைச்செய்ய அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளிலும் ஶாஸ்த்ர விதியினால் ப்ரவ்ருத்திக்கிறபடியினாலும், பஶுக்களுக்கு அபகாரம் செய்ய வேண்டும் என்கிற எண்ணமில்லாமையினாலும், உபகாரமுண்டாகிறது என்று ஶ்ருதியில் சொல்லி இருக்கிறபடியினாலும், தேவதைக்கு ப்ரீதியை உண்டாக்குகிறபடியினாலும், தோஷமில்லை. பலத்தை விரும்புகிறவர்களுக்கோ வெனில் அததின் பலம் அல்பமாகவும் அஸ்திரமாகவும் துக்கத்தோடு கலந்ததாகவு மாகிறது அஹிம்ஸா ரூபங்களான யஜ்ஞங்களோவெனில் விஶேஷமான அதிகாரிகளைப் பொறுத்தவைகள். பகவானுக்கு மிகவும் ப்ரீதியை உண்டாக்கக் கூடியவைகளாகையினால் மோக்ஷத்திற்கு நெருங்கினவைகள். ஆகையினாலல்லவோ உபரிசரர் முதலியவர்கள் பிஷ்ட பஶுக்களைக் கொண்டு யஜ்ஞம் செய்தார்கள். இப்படி மற்ற யஜ்ஞங்களில் ஹிம்ஸைக்கு ப்ரஸ்தாவமும், விஶேஷமான அதிகாரிகள் முதலிய காரணத்தினால் விஷயத்தை ஏற்படுத்துவதும்முதலிய அதிகஷ்டங்களுண்டு. ஜபயஜ்ஞத்திலோவென்றால் அவைகளுக்கு ப்ரஸ்தாவமேஇல்லாமையினாலும், சீக்கிரத்தில் அர்த்தம்தோன்றுகிறபடியினாலே ஸபீஜயோகத்தின்வழியாய் ஶீக்கிரத்தில் ஸமாதியில் மனதைச்செலுத்துவதற்குக் காரணமாகையினாலும் மற்ற யஜ்ஞங்களைவிட ஜபயஜ்ஞம் எல்லா ஆஶ்ரமத்திற்கும் பொதுவாகையினாலும் மிகவும்சிறந்தது [1]'ஜப்யேனைவ து ஸம்ஸித்த்யேத் ப்ராஹ்மணோ நாத்ர ஸம்ஶய: | குர்யாதந்யந்ந வா குர்யாந்மைத்ரோ ப்ராஹ்மண உச்யதே'' என்று விதுரன் முதலியவர்களுக்கும் ஸித்தி உண்டாவதற்குக்காரணம் என்றுசொல்லி இருக்கிறபடியினால். சில மலைகள் முன்பு சொல்லப்பட்டபடியினாலும், மரங்களைப்பற்றி மேலே சொல்லப் போகிறபடியினாலும், இவை இரண்டையும் விலக்குவதற்காகவும், இமயமலைக்குஶைலராஜன் என்கிற ப்ரஸித்தி இருப்பதை அனுஸரித்தும் மலைகளுக்குள் என்று சொல்லப்பட்டது. 25

1 மனுஸ்ம்ருதி 2-86,87 எந்த ப்ராஹ்மண: ப்ராம்மணன் ஜப்யேனைவ ஜபத்தினாலேயே ஸம்ஸித்யேத் ஸித்தியை அடையக்கடவனோ அத்ர இதில் நஸம்சய: ஸந்தேஹ மில்லையோ அந்யத்வேறொன்றைகுர்யாத் செய்தாலும் செய்யட்டும் நவாகுர்யாத் செய்யாமற் போனாலும் போகட்டும் (அவன்) மைத்ர: மைத்ரன் என்று பேருடைய ப்ராக்ஹ்மண: ப்ராம்மணனாக உச்யதே சொல்லப்படுகிறான்.

அஶ்வத்த²: ஸர்வவ்ருக்ஷாணாம் தே³வர்ஷீணாஞ்ச நாரத³: |
க³ந்த⁴ர்வாணாம் சித்ரரத²: ஸித்³தா⁴நாம் கபிலோ முநி: || 26

ப-ரை] ஸர்வவ்ருக்ஷாணாம் மரங்களெல்லாவற்றிலும், அஶ்வத்த²: அரசமரமும், தே³வர்ஷீணாம் தேவருஷிகளுக்குள், நாரத³: நாரதமுனியும், க³ந்த⁴ர்வாணாம் கந்தர்வர்களுக்குள், சித்ரரத²: சித்ரரதனும், ஸித்³தா⁴நாம் சித்தர்களுக்குள், கபில: கபிலர் என்று பெயரை உடைய முநி: ருஷியும் (நான்). 26

பா] மரங்களுக்குள் பூஜிக்கத்தகுந்ததாகிய அரசமரம் நான்; தேவருஷிகளுக்குள் நாரதர் நான். 26

உச்சை:ஶ்ரவஸமஶ்வாநாம் வித்³தி⁴ மாமம்ருதோத்³ப⁴வம் |
ஐராவதம் க³ஜேந்த்³ராணாம் நராணாஞ்ச நராதி⁴பம் || 27

ப-ரை] மாம் என்னை அஶ்வாநாம் குதிரைகளுக்குள் அம்ருதோத்³ப⁴வம் ஜலத்தில் உண்டான உச்சை:ஶ்ரவஸம் உச்சைஶ்ரவஸ் என்னும் குதிரையாகவும் க³ஜேந்த்³ராணாம் உத்தமமான யானைகளுக்குள் ஐராவதம் ஐராவதம் என்னும் யானையாகவும் நராணாம் மனுஷ்யர்களுக்குள் நராதி⁴பம் ராஜாவாகவும் வித்³தி⁴ அறி. 27

தா] ஸர்வவ்ருக்ஷாணாம் (எல்லா மரங்களுக்குள்) என்றது உசிதமல்ல, பாரிஜாதம் முதலிய மரங்களைவிட அரசமரம் தாழ்ந்ததாகையினால் என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானமாக 'பூஜிக்கத்தகுந்ததாகிய' என்று சொல்லப்பட்டது. பாரிஜாதம் முதலிய மரங்களுக்கும் அரசமரத்தைப்போலப் பூஜிக்கத்தகுந்த யோக்யதையில்லை என்று தாத்பர்யம். தேவதைகளாக இருந்துகொண்டே மந்த்ரங்களைக்கண்டறிந்தவர்கள் தேவருஷிகள். தேவருஷிகளுக்குள் நாரதருக்கு அனேகவிதமான மேன்மையுண்டென்பது மஹாபாரதத்திலேயே அனேக இடங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டது. சித்ரரதன் என்பவன் கந்தர்வர்களுக்கு அரசன். ஸித்³தா⁴நாம் என்கிற இடத்தில் ஸித்தியாவது முன்பு செய்த ஸுக்ருத வசத்தினால் பிறப்பிலேயே அணிமா முதலிய அஷ்டைஶ்வர்யங்களின் ஸித்தி. ஆதிவித்வான் ஸித்தர் என்று கபிலரைச்சொல்லுகிறார்கள் '1 மஹானாலேயே உண்டாக்கப்பட்ட கபிலரென்ற ருஷியை' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யமிருக்கிறது '2 ஜக்³ருஶு: கபிலம் தத்ர வாஸுதே³வம் ஸநாதநம்' என்றும் சொல்லி இருக்கிறார்கள் இவரும் பரசுராமன் முதலியவர்களைப்போலவே. 26

1-ஶ்வேதாஶ்வதர-5-2. 2-ஸ்ரீமத்ராமாயணம் பாலகாண்டம் -40-24 தத்ர அவ்விடத்தில் ஸநாதநம் அனாதியான வாஸுதேவம் வாஸுதேவனாகிய கபிலம் கபில ருஷியைத் தத்ருசு: பார்த்தார்கள்.

𑌆𑌯𑍁𑌧𑌾𑌨𑌾𑌮𑌹𑌂 𑌵𑌜𑍍𑌰𑌂 𑌧𑍇𑌨𑍂𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 ।
𑌪𑍍𑌰𑌜𑌨𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪𑌃 𑌸𑌰𑍍𑌪𑌾𑌣𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌵𑌾𑌸𑍁𑌕𑌿𑌃 ॥ 28

ப - ரை] 𑌅𑌹𑌂 - நான், 𑌆𑌯𑍁𑌧𑌾𑌨𑌾𑌮𑍍 - ஆயுதங்களுக்குள், 𑌵𑌜𑍍𑌰𑌂 - வஜ்ராயுதமாகவும், 𑌧𑍇𑌨𑍂𑌨𑌾𑌮𑍍 - பசுமாடுகளுக்குள், 𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍-காமதேனுவாகவும், 𑌪𑍍𑌰𑌜𑌨𑌃 - ப்ரஜைகள் உண்டாவதற்குக் காரணமான, 𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪𑌃 𑌚 - மன்மதனாகவும், 𑌸𑌰𑍍𑌪𑌾𑌣𑌾𑌮𑍍 - ஸர்பங்களுக்குள், 𑌵𑌾𑌸𑍁𑌕𑌿𑌃 - வாஸுகியாகவும், 𑌅𑌸𑍍𑌮𑌿 - ஆகிறேன். 58

பா] காமதேனுவாவதிவ்விடத்தில் ஸ்வர்கத்திலிருக்கும் ஸுரபி. ப்ரஜைகள் உண்டாவதற்குக் காரணமாகிய மன்மதனாகிறேன். ஸர்பங்களாவது ஒருதலையையுடைய பாம்புகள். 28

தா] 𑌉𑌚𑍍𑌚𑍈𑌃𑌶𑍍𑌰𑌵𑌸𑌂 என்பதினால் பிறப்பினால் மேன்மை காட்டப்படுகிறது. 𑌅𑌮𑍃𑌤𑌂 என்பது இவ்விடத்தில் ஜலம், அல்லது கடையப்படுகிற தசையையுடைய அம்ருதமாகவுமாம் 𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑍍 (உத்தமமான யானைகளுக்குள்) என்பதினால் திக்கஜங்கள் சொல்லப்படுகின்றன, அவைகளுக்குள் ப்ரதானமாகையினால் திக்பாலகர்களுக்கு எஜமானனாகிய தேவேந்திரனுக்கு வாஹனம் ஐராவதம். 𑌉𑌚𑍍𑌚𑍈𑌃𑌶𑍍𑌰𑌵𑌸𑌂 என்பது காக்கையின் கண்ணைப்போல ஐராவதத்திலும் அன்வயிக்கிறது. ரதந்தரம் என்னும் ஸாமத்திலிருந்து உண்டானது என்பதும் அறியத்தக்கது. 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪𑌂 என்னும் பதத்தினாலேயே நியமிக்கிறவனாக இருக்கையாகிற மேன்மை ஏற்பட்டது. 27

'𑌆𑌯𑍁𑌧𑌾𑌨𑌾𑌮𑍍' என்பது ஸாதாரணங்களான ஆயுதங்களைச் சொல்லுகிறது, ஸுதர்சனமென்னும் பகவானுடைய சக்ரம் முதலிய ஆயுதங்களைவிடத் ததீசி ருஷியின் எலும்பினாலுண்டான வஜ்ரமும் தாழ்ந்ததாகையினால் '𑌧𑍇𑌨𑍂𑌨𑌾𑌮𑍍' என்பதற்கு பசுக்களுக்குள் என்றர்த்தம் 'ஸ்வர்கத்திலிருக்கும் ஸுரபி' என்பதற்கு இஷ்டத்தைக் கொடுக்கிற என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிற '𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍' என்னும் பதமானது இவ்விடத்தில் ஸுரபி ஒன்றைச் சொல்லுகிறது, என்று தாத்பர்யம். '𑌪𑍍𑌰𑌜𑌨𑌃' என்பதினால் ப்ரஜைகள் உண்டாவதற்குக் காரணமாகுகையாகிற மன்மதனுடைய அஸாதாரணமான மேன்மை சொல்லப்பட்டது. அது எனக்கு வசப்பட்டது என்று அர்த்தம். ப்ரஜைகள் உண்டாவதற்குக் காரணமாகாத மன்மதனை விலக்குவதற்காக '𑌪𑍍𑌰𑌜𑌨𑌃' என்று சொல்லியிருக்கிறதாகவுமாம். ஒரே அர்த்தத்தைச்சொல்லுகிற '𑌸𑌰𑍍𑌪, 𑌨𑌾𑌗' என்னும் பதங்களை ஏன் தனித்துச் சொல்லி

அநந்தஶ்சாஸ்மி நாகாநாம் வருணோ யாதஸாமஹம் ।
பித்ருணாமர்யமா சாஸ்மி யம: ஸம்யமதாமஹம் ॥ 29

ப - ரை] நாகாநாம் - நாகங்களுக்குள், அநந்த: - ஆதிசேஷனாகவும் யாதஸாம் - ஜலத்தில் வஸிக்கும் ஜந்துக்களுக்குள், வருண: - வருணனாகவும், அஹம் - நான், அஸ்மி - ஆகிறேன், பித்ருணாம் – பித்ருக்களுக்குள், அர்யமா - அர்யமா என்கிற பெயரை உடையவனாகவும், ஸம்யமதாம்–சிக்ஷிக்கிறவர்களுக்குள், யம: - யமனாகவும். அஹம்-நான், 29
அஸ்மி - ஆகிறேன்.

பா] நாகங்களாவன,அநேகம் தலைகளை உடைய பாம்புகள். 'யாதஸாம்' என்றால் ஜலத்தில் வஸிப்பவர்கள், அவைகளுக்குள் நான் வருணன் 29
சிக்ஷிக்கிறவர்களுக்குள் யமனும் நான்

ப்ரஹ்லாதஶ்சாஸ்மி தைத்யாநாம் கால: கலயதாமஹம் ।
ம்ருகாணாம் ச ம்ருகேந்த்ரோऽஹம் வைநதேயஶ்ச பக்ஷிணாம் ॥

ப - ரை] தைத்யாநாம் அஸுரர்களுக்குள், ப்ரஹ்லாத: ப்ரஹ்லாதனாகவும், கலயதாம் ப்ராணிகளுக்கு அனிஷ்டத்தை எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்குள், கால: ம்ருத்யுவாகவும், அஹம் நான், அஸ்மி ஆகிறேன், ம்ருகாணாம் மிருகங்களுக்குள், ம்ருகேந்த்ர: சிங்கமும்,பக்ஷிணாம் பக்ஷிகளுக்குள், வைநதேய: கருடனும், அஹம் நான் 30

தா]' இருக்கிறது, என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'ஸர்பங்களாவது' என்று. 28

'யாதஸாம்' என்னும் பதத்தினால் வருணனையும் சேர்த்துக்கொள்ளவேண்டியதற்காகச் சொல்லுகிறார்—'யாதஸாம்' என்றால் ஜலத்தில் வஸிப்பவர்கள், என்று. அன்றிக்கே ஜலத்தில் வஸிக்கும் ஜந்துக்கள் மாத்திரம் சொல்லப்படுகிறதாகவுமாம். அவைகளுக்கு யஜமானன் ஆகையினால் வருணனுக்கும் அவைகளோடு ஸம்பந்தம் உண்டு. அவைகளுடைய ஜாதியைச்சேர்ந்தவனல்லாமையினால், என்று அறியவும். அர்யமா என்பவன் பித்ருக்களுக்கு ராஜன். 'ஸம்யமதாம்' என்பதற்கு அடக்குகிறவர்களுக்குள் என்று அர்த்தம். இதைத் தான் சொல்லி இருக்கிறார். 'சிக்ஷிக்கிறவர்களுக்குள்' என்று, 29

பா] 1 'அனிஷ்டத்தைச் செய்யவேண்டும் என்கிற ஆசையினால் எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்குள் ம்ருத்யு நான். 30

பவந: பவதாமஸ்மி ராம: ஶஸ்த்ரப்⁴ருதாமஹம் |
஝ஷாணாம் மகரஶ்சாஸ்மி ஸ்ரோதஸாமஸ்மி ஜாஹ்நவீ || 31

2-ரை] பவதாம் ஸஞ்சரிக்கிற வஸ்துக்களுக்குள் பவந: காற்றும் ஶஸ்த்ரப்⁴ருதாம் ஆயுதங்களைத் தரிப்பவர்களுள் ராம: ராமனும் அஹம் நான் அஸ்மி ஆகிறேன் ஝ஷாணாம் மீன்களுக்குள் மகர: மகரமென்னும் மீனும் அஸ்மி ஆகிறேன் ஸ்ரோதஸாம் ஓடுகிற ஜலங்களுக்குள் ஜாஹ்நவீ கங்கையும் அஸ்மி ஆகிறேன். 31

ஸஞ்சரிப்பதையே ஸ்வபாவமாக உடைய வஸ்துக்களுக்குள் காற்று

தா] 1 'உபமாநமஶேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாऽபவத்' என்றிவை முதலியவைகளினால் ப்ரஹ்லாதனுக்கு மேன்மை சொல்லப்பட்டது. 2 'அஹமேவாக்ஷய:' என்று நித்யமான காலமாகிய வஸ்துவைப்பற்றி மேலே சொல்லப்போகிறபடியினாலும், யமனைப்பற்றி முன்பு சொல்லி யிருக்கிறபடியினாலும், அவர்களைவிட வேறு புருஷன் இவ்விடத்தில் கால: என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறான். அசேதனமாகிய காலத்திற்கு எண்ணிக்கொண்டிருக்கை பொருந்தாது. 'கலயதாம்' என்பது அறியும் தன்மையுள்ளவர்களை யெல்லாம் சொல்லும் பக்ஷத்தில் காலத்தை அவைகளுக்குள் என்று எடுத்தது யுக்தமல்ல, ஆகையினால் அதற்குசிதமான அர்த்தத்தைக்காட்டுகிறார்—'அனிஷ்டத்தை' என்றாரம்பித்து. மரணத்தைவிட மேலான அனிஷ்டமில்லையல்லவா என்று தாத்பர்யம். ம்ருகேந்த்ர என்னும் பதத்தினாலேயே ஸிங்கத்திற்கு மேன்மை ஏற்பட்டது. பக்ஷிகளுக்குள் கருடனுக்கு வேகமதிகமாகையினாலும், வேதஸ்வரூபமாகையினாலும் மேன்மை ஏற்பட்டது. 30

'பவதாம்' என்பதினால் காற்றுக்கே அஸாதாரணமான வீசுதல் ஆகிய க்ரியை சொல்லப்படுகிறதால் அவைகளுக்குள் காற்றை தனித்தெடுத்திருப்பது பொருந்தாதாகையினால் அது உசிதமாவதற்காக 'ஸஞ்சரிப்பதையே ஸ்வபாவமாக உடைய' என்று சொல்லப்பட்டது. அதாவது எப்பொழுதும் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிற என்று அர்த்தம். காற்றினால் தள்ளப்பட்டவைகளாக அன்றோ நக்ஷத்திரம் முதலி

---

1 விஷ்ணுபுராணம் 1-15-156 ய: எந்தப்ரஹ்லாதன் அஶேஷாணாம் எல்லா ஸாதூநாம் ஸாதுக்களுக்கும் உபமாநம் உதாஹரணமாக ஸதா எப்பொழுதும் அபவத் இருந்தாரோ. 2 பகவத்கீதை 10-33.

நான் ஆயுதத்தைத் தரிப்பவர்களுக்குள் ராமன் நான் இவ்விடத்தில் ஆயுதத்தைத்தரிப்பவனாக இருக்கை விபூதி, வேறு வஸ்து வில்லையாதலால் ஸூர்யன்முதலிய ஜீவாத்மாக்களும் அவர்களுக்கு ஆத்மாவாக இருக்கிற பகவானுக்குச் சரீரமாகையினாலே விசேஷணங்களாகையினால் ஆயுதத்தைத் தரிப்பவனாக இருக்கையைப்போலவே. 31

யவைகள் எப்பொழுதும் ஸஞ்சரிக்கின்றன. ஸோமலதையைப்பவனம் செய்தல் முதலிய இடங்களிலே போல பரிசுத்தியைச் செய்துகொண்டு ஸஞ்சரித்தல் இங்கே சொல்லப்படுகிறது. 'ராமஶ்ஶஸ்த்ரப்ருதாம்' என்பதினால் பரசுராமனை ஜயித்தவரும் ராவணனைக்கொன்றவருமான ராமன் சொல்லப்படுகிறார், ஆகையினால் அதற்குத்தகுந்த வீண்போகாத ஆயுதங்களை உடையவராக இருக்கைஆகிற மேன்மையைச் சொல்லுகிறார்—'ஆயுதத்தைத் தரிப்பவனாக இருக்கை விபூதி' என்று. முன்பின் ஸந்தர்ப்பங்களிலே போல ராமனை விபூதியாக ஏன் இருக்கக்கூடாது என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'வேறு வஸ்துவில்லையாதலால்' என்று. அதாவது இவ்விடத்தில் 'ஶஸ்த்ரப்ருத்' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிற,ஒருவித அசேதனமோ, தன்னைவிட வேறு சேதனமோ இல்லையாதலினால், என்று அர்த்தம். வேறு வஸ்துக்களைச் சொல்லிக்கொண்டு வந்து நடுவில் தனக்கே அஸாதாரணமான ஸ்வபாவத்தைச்சொல்லும் பக்ஷத்தில் ஆரம்பித்தக்ரமத்திற்கு விரோதம் வருமே என்கிற ஆக்ஷேபத்திற்குஸமாதானம் சொல்லுகிறார்—'ஸூர்யன் முதலிய' என்றாரம்பித்து. ஆயுதத்தைத் தரிப்பவனாக இருக்கைக்கும் மற்றவைகளுக்கும் பகவானாகிய ஒரு விசேஷ்யத்திற்கு விசேஷணமாக இருக்கை ஸமானம் ஆகையினால ஒரேக்ரமம் தான், சில இடங்களில அவைகளுக்குள் என்று சொல்லியிருப்பதும், சில இடங்களில் அப்படியிலலாததுமாகிய வ்யத்யாஸத்தைப் போலவே இதுவும் அல்பவ்யத்யாஸம் மாத்திரமாகையினால் தோஷமில்லை, என்று தாத்பர்யம் இவ்விடத்தில் 'ஸூர்யன்' என்னும் பதத்தினால் 1 ஜ்யோதிஷாம் ரவிரம்ஶுமாந்' என்று சொல்லப்பட்ட ரவி சொல்லப்படுகிறான், 2 'ஆதித்யாநாமஹம் விஷ்ணு:' என்று சொல்லப்பட்ட விஷ்ணுவேவெனில ராமனுக்கு ஸமமானவன் மகரமாவது, மீன்களுக்குள்சிறந்தது. ஓடுகிற ஜலங்களுக்குள் கங்கைக்கு மேன்மை, பகவானுடைய திருவடியிலிருந்து உண்டாகை, ஸவ்யஸாசி ஜ்ஞன் என்று பேருடைய ருத்ரனுடைய தலையினால் தாங்கப்பட்டிருக்கை, மூன்று லோகங்களிலும் ஓடுகிறது முதலியகாரணங்களினால்.

1 பகவத்கீதை 10-21. 2 பகவத்கீதை 10-21.

ஸர்காணாமாதிரந்தஶ்ச மத்யம் சைவாஹமர்ஜுந|
அத்யாத்மவித்யா வித்யாநாம் வாத: ப்ரவததாமஹம்|| 32

ப - ரை] அர்ஜுந அர்ஜுன ஸர்காணாம் ஸ்ருஷ்டிக்கபடுகிற வஸ்துக்களுடைய ஆதி: காரணமும் அந்தஶ்ச கடைசியும் மத்யஞ்ச நடுவும் அஹம் நான் வித்யாநாம் வித்யைகளுக்குள் அத்யாத்மவித்யா வேதாந்த வித்யையும் ப்ரவததாம் வாதம் செய்கிறவர்களுடைய, வாத: வாதமும், அஹம் நான். 32

பா] 'ஸ்ருஜ்யந்தே' (ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன,) ஆகையினால் 'ஸர்கா:' என்று சொல்லப்படுகின்றன. அவைகளுக்குக்காரணம், அதாவது, எப்பொழுதும் ஸ்ருஷ்டிக்கப்படுகிற எல்லா ப்ராணிகளையும் அந்தந்த இடத்திலிருந்து ஸ்ருஷ்டிக்கிறவர்களும் நானே, என்று அர்த்தம். அப்படியே ஸம்ஹாரம் செய்யப்படுகிற அந்தந்த வஸ்துக்களையும், அந்தந்த இடங்களிலிரு

தா] "ஸர்க" என்னும் பதத்தினால் ஸ்ருஷ்டியைமாத்திரம் சொல்லும் "பக்ஷத்தில் ஆதி: அந்த:" என்கிற பதங்களோடு அன்வயம் பொருந்தாதாகையினால் இவ்விடத்திலிருக்கும் "ஸர்க" என்னும் பதம் ஸ்ருஷ்டிக்கப்படுகிற வஸ்துக்களைச் சொல்லுகிறது, என்றுசொல்லுகிறார்— "ஸ்ருஜ்யந்தே என்று ஆரம்பித்து. "ஆதி மத்ய அந்த" என்னும் பதங்கள் இவ்விடத்தில் பாகங்களைச் சொல்லுகின்றன, என்பது யுக்தமல்ல. அதிக ப்ரயோஜன மில்லாமையினால், கால விசேஷங்களைச் சொல்லுகின்றன என்பது மில்லை. காலத்தை மேலே சொல்லப்போகிறபடியினால், இங்கே தனித்து அதைச் சொல்வதற்கு ப்ரயோஜனமில்லாமையினால். உத்பத்தி முதலிய கார்யங்களை மாத்திரம் சொல்லுகிறது, என்பதுமில்லை. 1 "உத்பவஶ்ச பவிஷ்யதாம்" என்று மேலே சொல்லப்போகிறபடியினால். பகவானே காரணம் என்பது முதலியவை இங்கே சொல்லப்படுகின்றனவென்பதுமில்லை. 2 "அஹமாதிஶ்ச மத்யஞ்ச" என்று, முதல் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறபடியினாலும், இது பொதுவாக முன்பு சொன்னதை நிகமனம் செய்கிறது, என்பது மில்லை மேலேயும் சொல்லப்போகிறபடியினால். ஆகையினால் உத்பத்தி முதலியவைகளுக்குக் காரணங்களாக லோகத்தில் ஏற்பட்டவைகளைச் சொல்லுகின்றன என்பது உசிதம். அதிலும் உபாதான காரணத்தைப்பற்றி 3 "ஸர்வபூதாநாம் பீஜம்" என்று மேலே சொல்லப்போகிறபடியினால், நிமித்தகாரணம் மாத்திரமே இங்கே சொல்லப்படுகிறது. "ஸர்காணாம்" என்று பொதுவாகச் சொல்லி இருக்கிறபடியினால்,

---

1 பகவத்கீதை 10-34.　2 பகவத்கீதை 10-20.　3 பகவத்கீதை 10-39.

ந்து ஸம்ஹாரம் செய்கிறவர்களும் நானே அப்படியே ரக்ஷிப்பதும் நானே அதாவது எப்பொழுதும் ரக்ஷிக்கப்படுகிற வஸ்துக்களை அந்தந்த இடத்தி லிருந்து ரக்ஷிக்கிறவர்களும் நானே. ஜல்பம், விதண்டை முதலியவை களைச்செய்பவர்களுடைய, தத்வத்தை நிஶ்சயம் செயவதற்காக ஏற்பட்ட வாதம் எதுவோ, அதுவும் நான். 33

அக்ஷராணாமகாரோऽஸ்மி த்வந்த்வஸ்ஸாமாஸிகஸ்ய ச |
அஹமேவாக்ஷய: காலோ தாதாஹம் விஶ்வதோமுக: ||

ப - ரை] அக்ஷராணாம் எழுத்துக்களுக்குள், அகார: அகாரமாகவும், ஸாமாஸிகஸ்ய ஸமாஸங்களுடைய கூட்டத்திற்குள், த்வந்த்வ: த்வந்த்வ மேன்னும் ஸமாஸமாகவும், அஸ்மி ஆகிறேன், அக்ஷய: அழிவில்லாத,

---

எல்லா இடங்களிலும எல்லாக காலங்களிலு மிருக்கிற ஸ்ருஷ்டிககப் படுகிற வஸ்துக்களைக் குறித்து நிமித்தகாரணங்களாகிய எல்லா வஸ் துக்களின் கூட்டமும் தனக்கு வசப்பட்டது, என்று அபிப்ராயம்; இவை யெல்லாம் ‘எப்பொழுதும்’ என்று ஆரம்பித்து. மூன்று வாக்கிய ங்களினுல் தாத்பர்யமாகக் கொள்ளப்பட்டது. வேதாநத வித்யையா வது ஜீவாத்மா பரமாத்மா இவைகளின் உண்மையைப்பற்றிய வித்யை அது விஷயத்திலும் ப்ரயோஜனத்திலும் மற்ற வித்யைகளைவிடச சிறந்தது. ‘‘ப்ரவததாம்’’ என்பதினுல் ஒருவருக்கொருவர் கலகம செய்வது மாததிரம சொல்லபபடுகிறதல்ல. அதில் வாதம் என்கிற விசேஷம் சொல்லப்படாமையினுலும். ‘‘அத்யாத்மவித்யா வித்யாநாம்’’ என்று வித்யை ப்ரஸ்தாவம் வநதபடியினுல், அதற்காக ஏறபட்ட ப்ரஸங்கத்தைச் சொல்லுகிறது, என்பதே யுக்தமாகையினுலும். 1 ‘‘த்யூதம் சலயதாம்’’ என்பதைப்போல வாதமாகியஒருவித ப்ரஸங் கத்தைச் செய்கிறவர்களுடைய என்றும் அபிப்ராயமில்லை, மற்றவர் களைவிட இவன் சிறநதவன் என்பதைத் தெரிவிப்பது ஸம்பவிக்கும் பொழுது அத்தை விடுவது உசிதமல்லவாகையினுல். ஆகையினுல ‘‘ப்ரவததாம்’’ என்பதினுல் மூன்று வித ப்ரஸங்கங்களுக்கும ஸாதார ணமான ஸ்வரூபம் இங்கே சொல்லப்படுகிறது. அத்தையே சொல்லு கிறர்—‘ஜல்பம் விதண்டை முதலியவைகளைச் செய்பவர்களுடைய’* என்று. *‘தத்வத்தை நிஶ்சயம் செய்வதற்காக ஏற்பட்ட’* என்பதினுல் அல்பமான ப்ரயோஜனத்தை உடையதாகிய, ஜயிக்கவேண்டுமென்று ஆஶையை உடையவர்களின் ப்ரஸங்கத்தைவிட வாதத்திற்கு, மேலான மோக்ஷத்தில் முடியும்படியான ப்ரயோஜனத்தை உடைத்தாயிருக்கை யினுல் மேன்மை காட்டப்பட்டது.* 32

---

1 *பகவத்கீதை* 10-36.

காலஃ காலமும், அஹமேவ நானே, விஶ்வதோமுகஃ நான்கு திக்குக்களி லும் முகங்களை உடைய, தாதா ப்ரம்மாவும், அஹம் நான், 33

பா] எழுத்துக்களுக்குள் * 'அகராமே எல்லா வார்த்தையும்'என்று அர்த்த முள்ள ஶ்ருதிவாக்யத்திலேற்பட்ட எல்லா அக்ஷரங்களுக்கும் காரணமா கிய அகாரம் நான் ஸமாஸங்களின் கூட்டம் 'ஸாமாஸிகம்' அதற்குள் த்வந்த்வம் என்கிற ஸமாஸம் நான், அது இரண்டு பதங்களினுடைய அர் த்தங்களையும் ப்ரதானமாக உடைத்தானதாகையினுல் சிறந்தது. கலே

தா] பஹ்வ்ருசோபநிஷத்தில் 1 'அ' என்பது ப்ரம்மம்,என்று அர்த்த முள்ள வாக்யம். சொல்லப்படுகிறது. அப்படியே, 2 அகாரமே எல்லா வார்த்தையும். இது ஸ்பர்சங்களினுலும் ஊஷ்மாக்களினுலும் ப்ரகாஶம் செய்யப்பட்டதாய்க்கொண்டு அனேகமாகவும் அனேக ஸ்வபாவமுள்ளதாயும் ஆகிறது" என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக் யத்திலே விஸ்தாரமாகச் சொல்லப்பட்ட எல்லாவற்றிற்கும் காரண மாக இருக்கையைச் சொல்லுகிறுர்—எல்லா அக்ஷரங்களுக்கும் காரண மாகிய' என்று. தனித்துச் சொல்லுவதற்கு உபயோகமான ஸமாஸ ங்கள் அனேகம் என்பதைத் தெரிவிப்பதற்காக ப்ரத்யயத்தின் அர்த் தத்தைக் காட்டுகிறுர்—'ஸமாஸங்களின் கூட்டம்' என்று. முன்பதம், பின்பதம்,இவைஇரண்டையும்விடவேறு பதம், இவைகளை ப்ரதானங்க ளாக உடைய அவ்யயீபாவம் தத்புருஷம் பஹுவ்ரீஹி என்னும்ஸமா ஸங்களைவிட த்வந்த்வஸமாஸத்திற்கு மேன்மையைச் சொல்லுகிறுர்— 'அது' என் றுரம்பித்து. 'அக்ஷயஃ' (அழிவில்லாத) என்பதினுல் 3 'கலைமுகூர்த்தம் காஷ்டை இவைகள்'என்று அர்த்தமுள்ளஶ்ருதி வாக்யத்திலும் 4 'காலஸ்வரூபாநாதிரபர்யந்தஃ' என்கிற ஸ்ம்ருதி வசனத்திலும் ஏற்பட்டவைகளாயும் அனேகவித விகாரங்களாகிய லோகம் நாசமடைவதற்குக் காரணங்களாயு மிருக்கிற எண்ணிறந்த உட்பிரிவுகளிருந்த போதிலும் ஸ்வரூபத்தில் ஆதியுமில்லை அந்தமு மில்லை என்பது சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறுர்—'கலை' என்றுரம்பித்து. 'அநாதிஸ்த்வயா காலஃ

---

1 பஹ்வ்ருசோபநிஷத் 1.

2 தைத்திரீயம்: நாராயணம் 1-8.

3 விஷ்ணுபுராணம் 4-1-84 கலாமுஹூர்த்தம் முதலிய காலம் எந்த நித்ய விபூதியின் மாறுதலுக்குக்காரண மில்லேயோ.

4 விஷ்ணுபுராணம் 1-2-26 பகவான் பகவானுகிய காலஃ காலம் அனுதிஃ அனுதி த்விஜ ஓப்ராம்மண அஸ்ய இந்தக்காலத்திற்கு அந்தஃ முடிவு நவித்யதே இல்லை.

முஹூர்த்தம் முதலியவைகளாகிய அழிவில்லாத காலமும் நானே. எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கிற நான்கு முகங்களை உடைய ப்ரம்மாவும் நானே. 33

ம்ருத்யுஸ்ஸர்வஹரஶ்சாஹமுத்பவஶ்ச பவிஷ்யதாம் ।
கீர்த்திஶ்ஶ்ரீர்வாக்ச நாரீணாம் ஸ்ம்ருதிர்மேதா த்ருதி: க்ஷமா ॥ 34

ப-ரை] ஸர்வஹர: - எல்லா ப்ராணிகளையும், ஸம்ஹாரம் செய்கிற, ம்ருத்யுஶ்ச - ம்ருத்யுவும், பவிஷ்யதாம் - உண்டாகப்போகிற வஸ்துக்களின், உத்பவஶ்ச - உத்பத்தி என்னும் க்ரியையும், அஹம் - நான்-நாரீணாம் - ஸ்திரீகளுக்குள், கீர்த்தி: - கீர்த்தியும், ஶ்ரீ: - லக்ஷ்மியும், வாக்ச - வாக்கும், ஸ்ம்ருதி: - ஸ்ம்ருதியும், மேதா - மேதையும், த்ருதி:, த்ருதியும், க்ஷமா - க்ஷமையும் (நான்).

பா] எல்லா ப்ராணிகளுடையவும் ப்ராணனை அபஹரிக்கிற ம்ருத்யுவும்

தா] நாமதேயஸம்விஜ்ஞாபிக்ஷ்யதே 1 காலோஸ்மி லோகக்ஷயக்ருத்ப்ரவ்ருத்த: நாமஜனயாமிநியமேதமஸ்மிம்'' என்றிவை முதலிய வசனங்களினால் காலத்திற்கு அதிஷ்டாதா என்பது வ்யக்தமாக ஏற்படுகிறது. 'தாதா'' என்னும் பதத்தின் ரூடி சக்தியினாலும் 'விஶ்வதோமுக:' என்கிற விசேஷணத்தினாலும் ப்ரம்ஹாவே இவ்விடத்தில் சொல்லப்படுகிறான்' என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எல்லாவற்றையும்' என்றாரம்பித்து, தாதா என்னும் பதத்தினாலேயே அண்டத்துக்குள்பட்ட எல்லா வஸ்துக்களையும் ஸ்ருஷ்டிப்பவனாக இருக்கையாகிற மேன்மை ஏற்பட்டது என்று தெரிவிப்பதற்காக 'எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கிற' என்று சொல்லப்பட்டது. இத்தால் கர்மங்களின் பலங்களைக் கொடுக்கிறவன் என்று அர்த்தம் சொல்லி யிருக்கும் மற்ற வ்யாக்யானங்கள் நிராகரிக்கப்பட்டன. 'விஶ்வத:' என்பதினால் நான்கு திக்குகள மாத்திரம் இங்கே சொல்லப்படுகின்றன என்று தெரியப்படுத்துவதற்காக 'நான்கு முகங்களை உடைய' என்று சொலலப்பட்டது. நான்கு வேதங்களையும் பரவச்செய்தல் முதலியதும் இத்தால் குறிக்கப்பட்டது.

அவரவர்கள் கர்மங்களுக்குத்தக்கபடி பரிக்ஷைசெய்வதிலும் காலத்தின் அளவிலும் அதிகாரம் பெற்றவர்களாகிய யமனையும் காலனென்று பெயரை உடைய புருஷனையும் பற்றி முன்பே சொல்லப்பட்ட

---

1 பகவத்கீதை 11-32.

நான், உண்டாகப்போகிற வஸ்துக்களின் உத்பத்தி என்று பேருடைய க்ரியையும் நான் லக்ஷ்மியும் நான். கீர்த்தியும் நான். வாக்கும் நான். ஸ்ம்ருதியும் நான். மேதையும் நான். த்ருதியும் நான். க்ஷமையும் நான்.

படியினால் யமனுடைய உத்தரவின்படி நடக்கிறவனும் ப்ராணனை அபஹரிப்பதில் அதிகாரம் பெற்றவனுமாகிய புருஷன் இவ்விடத்தில் 'ம்ருத்யுஸ்ஸர்வஹரஶ்ச' என்று சொல்லப்படுகிறான். என்று தெரிவிப்பதற்காக 'எல்லா ப்ராணிகளுடைய ப்ராணனையும் அபஹரிக்கிற' என்று சொல்லப்பட்டது. ப்ரளயகாலத்தில் எல்லாவற்றையும் ஸம்ஹாரம் செய்கிற ஈஶ்வரன் இவ்விடத்தில் ம்ருத்யு என்னப்படுகிறான், என்று சிலர் சொன்னது அவ்வளவு உசிதமல்ல. 1 'அஹமாதிஶ்ச மத்யஞ்ச' என்று முன்னமேசொல்லி இருக்கிறபடியினால் உத்பத்தியோடு சேர்த்துச் சொல்லி இருப்பதினால் இவ்விடத்தில் ம்ருத்யு என்னும் பதம் மரணத்தைச் சொல்லுகிறது, என்று சிலர் சொல்லுகிறார்கள். 'உத்பவஶ்ச' என்னும் பதம் ஸ்வாரஸ்யமாக உத்பத்திஎன்னும் க்ரியையைச்சொல்லுகிறது. உத்பத்தியாகுமிடம் முதலியதும் நிமித்தகாரணம்உபாதானகாரணம் முதலியதும் இவ்விடத்தில் தனித்துச் சொல்லப்பட்டதாகையினால் க்ரியையைச்சொல்லுகிறதுஎன்பதே உசிதம். என்கிறஅபிப்ராயத்தினால் 'உத்பத்தி என்கிற பெயரை உடையக்ரியை' என்று சொல்லப்பட்டது. குணவிஶேஷங்களாகிய கீர்த்தி முதலியவைகள் இவ்விடத்தில் சொல்லப்படவில்லை. அவைகள் புருஷர்களிடத்திலும் ப்ரகாஶமாக இருக்கிறபடியினாலே 'நாரீணாம்' என்கிற விஶேஷணம் பொருந்தாதாகையினால், இவ்விடத்தில் இருக்கும் 'நாரீணாம்' என்னும் பதம் ஸ்திரீலிங்கமான பதங்களின் அர்த்தங்களை எல்லாம் சொல்லுகிறதுமல்ல. முக்யமான அர்த்தத்திற்கு ஒருவிரோதமுமில்லாமையினால், ஆகையினால்ஸ்த்ரீகளுக்குள் விஶேஷமான ஸ்திரீகளைத் தனித்து எடுத்திருக்கிறது. அதிலும் லக்ஷ்மியே எல்லா ஸ்த்ரீகளிலும் சிறந்தவளாகையினால் அவளே முதலில்சொல்லத்தக்கவள். 'கீர்த்திஶ்ஶ்ரீ:' என்று பாடத்திலேற்பட்ட க்ரமமோவெனில் வஸ்துவின் யோக்யதையைப்பற்றிய க்ரமத்தினால் தடுக்கப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'லக்ஷ்மியும் நான் கீர்த்தியும் நான்' என்று சொல்லப்பட்டது. இவைகள் பகவானுக்கு அஸாதாரணமானபத்னிகள். மற்றவஸ்துக்களிலோவெனில் அவரவர்களின் அபிமானத்தினால் அந்தந்தப்பதம் சொல்லப்படுகிறது.

---

1 பகவத்கீதை 10-20.

𑌬𑍃𑌹𑌤𑍍𑌸𑌾𑌮 𑌤𑌥𑌾 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌂 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 𑌛𑌨𑍍𑌦𑌸𑌾𑌮𑌹𑌮𑍍 ।
𑌮𑌾𑌸𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑍋𑌽𑌹𑌮𑍃𑌤𑍂𑌨𑌾𑌂 𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌕𑌰𑌃 ॥

ப - ரை] 𑌤𑌥𑌾 அப்படியே, 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌂 ஸாமங்களுக்குள், 𑌬𑍃𑌹𑌤𑍍𑌸𑌾𑌮 ப்ருஹத் என்கிற ஸாமமும், 𑌛𑌨𑍍𑌦𑌸𑌾𑌂 சந்தங்களுக்குள் 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 காயத்ரீ என்னும் சந்தமும் 𑌅𑌹𑌮𑍍 நான் 𑌮𑌾𑌸𑌾𑌨𑌾𑌂 மாஸங்களுக்குள், 𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑌃 மார்கழிமாஸமும், 𑌋𑌤𑍂𑌨𑌾𑌂 ருதுக்களுக்குள், 𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌕𑌰𑌃 வஸந்தருதுவும், 𑌅𑌹𑌮𑍍 நான். 35

பா] ஸாமங்களுக்குள் ப்ருஹத்ஸாமம் நான், சந்தங்களுக்குள் காயத்ரீயும் நான், '𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌕𑌰'மாவது வஸந்தருது. 35

தா] ஸாமங்களுக்குள் ப்ருஹத் என்னும் ஸாமம் உயர்ந்தது என்பது ஶ்ருதியிலேயே ஏற்பட்டது. 'முதலில் ப்ருஹத் என்றும்ரதந்தரம் என்னும் ஸாமமும் இருந்தது. வாக்கும் மனஸும் இருந்தது. வாக்கு என்பது ரதந்தரம். மனஸ் என்பது ப்ருஹத்து ப்ருஹத்து என்னும் ஸாமம் முதலில் தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ரதந்தரத்தை நினைத்துகொண்டது. அந்தரதந்தரம் கர்ப்பத்தைத்தரித்தது' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யமிருக்கிறது. காயத்ரீ எல்லாச் சந்தங்களுக்கும் தாயாராகையினால் சிறந்தது என்பது ஶ்ருதிகளிலும், சந்தோவிசிதி என்னும் கிரந்தத்திலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டது. அப்படியே பஹ்வ்ருசோபநிஷத்தில் "காயத்ரீ எல்லாச் சந்தங்களுக்கும் முதன்மையானது என்று' அர்த்தமுள்ள வாக்யம் இருக்கிறது. மாஸங்களுக்குள் மார்கழி மாஸத்திற்கு வருஷத்திற்குக் கர்ப்பமுண்டாகும் காலமாகையினாலும், மாஸங்களுக்குத் தேவதைகளாகிய கேசவன் முதலிய பன்னிருவர்களுக்குள் முதலாவதாகிய கேசவனுடைய மாஸமாகையினாலும் எல்லா வ்ருதங்களும் ஆரம்பிக்கும் காலமாகையினாலும் மேன்மையுண்டு. குஸுமாகர என்னும் பதத்தினாலேயே வஸந்த ருதுவுக்கு ப்ரத்யக்ஷத்திலேற்பட்டதாயும் எல்லா ப்ராணிகளுடையவும் ஸுகத்திற்குக் காரணமாயுமிருக்கிற மேன்மை சொல்லப்பட்டது. "ஒவ்வொரு வஸந்த ருதுக்களிலும் ஜ்யோதிஷ்டோம யாகச் செய்யவேண்டும்" என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்தினாலும் "𑌵𑌸𑌨𑍍𑌤𑍇 𑌦𑍀𑌕𑍍𑌷𑍇𑌯𑍁𑌰𑍍 [illegible] 𑌗𑍍𑌰𑍀𑌷𑍍𑌮𑍇 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌶𑍍𑌚𑍈𑌵" என்கிற வசனம் முதலியவைகளினாலும் மேன்மை யேற்பட்டது. (35)

𑌦𑍍𑌯𑍂𑌤𑌂 𑌛𑌲𑌯𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌮𑌹𑌮𑍍 ।
𑌜𑌯𑍋𑌸𑍍𑌮𑌿 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑍋𑌸𑍍𑌮𑌿 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 ॥ 36

ப - ரை] 𑌅𑌹𑌮𑍍 நான், 𑌛𑌲𑌯𑌤𑌾𑌂 மோசம் செய்பவர்களின். (மோசங்களுக்குள்) 𑌦𑍍𑌯𑍂𑌤𑌂 சொக்கட்டானாகவும், 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌂 பராக்ரமத்தை உடையவர்களுடைய 𑌤𑍇𑌜𑌃 பராக்ரமமாகவும், 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன், (ஜயிக்கிறவர்களின்) 𑌜𑌯𑌃 ஜயமாகவும், 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன், (நிஶ்சயத்தை உடையவர்களுடைய) 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌃 நிஶ்சயமாகவும், 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன், 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌤𑌾𑌂 மனோதைர்யத்தை உடையவர்களுடைய 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 மனோதைர்யமும் 𑌅𑌹𑌮𑍍 நான். 36

பா] மோசம் செய்பவர்களின் மோசத்திற்கு இடமாகிய காரியங்களுக்குள் காய் முதலியவைகளைக் கொண்டு ஆடுகிற சொக்கட்டான் நான்; ஜயிக்கிறவர்களின் ஜயமும் நான் ஆகிறேன்; நிஶ்சயத்தை உடைய

தா] 𑌛𑌲𑌯𑌤𑌾𑌂 என்கிற இடத்தில அதைச்செய்கிறான் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிற, ணிச் என்னும ப்ரத்யயம் வந்திருக்கிறது என்கிற அபிப்ராயத்தினால் 'மோசம் செய்பவர்களின்' என்று சொல்லப்பட்டது. காய்களை நடத்துகிற மாத்திரத்தினால் ஜயம் தோல்வி இவைகளை ஆரோபித்து விடுகிறபடியினால் 𑌛𑌲𑌂 (மோசம்) என்று சொல்லியிருப்பது உசிதம் தான் என்கிற அபிப்ராயத்தினால் 'காய்களைக்கொண்டு ஆடுகிற' என்று சொல்லப்பட்டது. '𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌮𑌹𑌮𑍍' என்றிவை முதலியவைகளைப்போல சொக்கட்டானாடுகிறவர்களின் சொக்கட்டானாட்டம் நான் என்று சொல்லாமல் மோசம் செய்வதை மாத்திரம் சொல்லியிருக்கிறபடியினால் மோசத்திற்கு இடமாகிய விற்றல் வாங்குதல் கடன்வாங்குதல் பங்குபிரித்தல் ப்ரதிஜ்ஞை செய்தல் முதலிய மற்றக்காரியங்களைவிட சொக்கட்டானாடுதல் மேலானதென்பது சொல்லப்படுகிறது. என்கிற அபிப்ராயத்தினால் 'மோசத்திற்கு இடமாகிய காரியங்களுக்குள்' என்று சொல்லப்பட்டது. 'காய்முதலியவைகளை' என்பதனால் ஜீவனோடுகூடியதும் ஜீவனில்லாததுமான வஸ்துகளைக்கொண்டு ஆடுகிற எல்லா ஆட்டங்களும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. அன்றிக்கே ஜீவனில்லாத வஸ்துக்களை மாத்திரம் சொல்லுவதற்காக 'காய் முதலியவைகளை' என்று சொல்லப்பட்டதாகவுமாம். அதற்கு மேன்மையாவது ப்ரயாஸமில்லாமலும் தர்மத்திற்கு விரோதமில்லாமலும் ஒப்புக்கொள்ளுவதினாலேயே எல்லாப் பொருள்களையும் அபஹரிக்க முடியுமாகையினால் 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌂, 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌤𑌾𑌂 என்னும் பதங்கள் 𑌤𑍇𑌜𑌃, 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂, என்னும் பதங்களோடு அன்வயித்துவிட்ட

வர்களுடைய ஸத்வமும் நான் ஸத்வமாவது பெரியமனதை உடையவ னாக இருக்கை. 36

வ்ருஷ்ணீநாம் வாஸுதேவோஸ்மி பாண்டவாநாம் தநஞ்ஜய: |
முநீநாமப்யஹம் வ்யாஸ: கவீநாமுஶநா கவி: || 37

ப — ரை] அஹம் - நான், வ்ருஷ்ணீநாம் - இடையர்களுக்குள், வாஸுதேவ: - வாஸுதேவனாகவும், பாண்டவாநாம் - பாண்டவர்களுக்குள, தநஞ்ஜய: - அர்ஜுனனாகவும், முநீநாம் - ருஷிகளுக்குள், வ்யாஸ: - வ்யாஸராகவும், கவீநாம் - கவிகளுக்குள், உஶநா: - சுக்கிராசார்ய ராகவும் அஸ்மி - ஆகிறேன். 37

பா] இவ்விடத்தில் வஸுதேவருக்குப் பிள்ளையாக இருக்கை விபூதி'

தா]படியினால், ஜயோஸ்மி, வ்யவஸாயோஸ்மி, என்பவைகளோடு அவைக ளுக்கு அன்வயம்சொல்லுவது உசிதமில்லை, ஆகையினால் அதுடன் அன் வயிப்பதற்கு உசிதங்களாகிய ஜயிக்கிறவர்களின், நிஶ்சயத்தை உடைய வர்களின், என்னும் பதங்கள்சேர்த்துக்கொள்ளப்படுகின்றன, என்கிற அபிப்ராயத்தினால 'ஜயிக்கிறவர்களின்' நிஶ்சயத்தை உடையவர்களு டைய' என்று சொல்லப்பட்டது. 'த்ருடவ்யவஸாயேஷு ஸக்த: ஸ்திதஜ்ஞேஷு' என்றிவை முதலிய வசனங்களினால் ஸத்வம் என் னும் பதத்திற்கு அனேக அர்த்தங்கள் ஏற்பட்டிருப்பதினாலும், வ்யவஸாயம் சொல்லப்பட்டபடியினாலும், ஸத்வத்தை உடையவன் என்னும் பதத்தின் ப்ரஸித்தியை அனுஸரித்து அதற்குஅர்த்தத்தைக் காட்டுகிறார். 'பெரிய மனதை உடையவனாக இருக்கை' என்று. இத் தால் அபலாரைத் தோல்வியடையும்படி செய்யக்கூடி சக்தியாகிய தேஜஸ்ஸைவிட ஸத்வத்திற்கு வ்யத்யாஸம் சொல்லப்பட்டது. 36
'வ்ருஷ்ணீநாம் வாஸுதேவோஹம்' என்கிற இடத்திலும் ராமனைப் போலவே நேராகத் தன்னுடைய அவதாரமாகையினால் சொல்லுகி றார்—'இவ்விடத்தில் வஸுதேவருக்குப் பிள்ளையாக இருக்கை விபூதி' என்று. ராமனைப்பற்றிச் சொல்லும்பொழுது முன்னமேயே காரணம் சொல்லப்பட்டது என்று காட்டப்பட்டது. இவ்விடத்தில் வஸுதேவ ருக்குப் பிள்ளை என்கிற இது என்ன விபூதி? பிள்ளையாக இருக்கை மாத்திரத்தினால் மேன்மை இல்லையல்லவா, அது எல்லாரிடத்திலுமிருக் கிறபடியினால்; வஸுதேவரென்கிற தகப்பனுருக்குப் பிள்ளையாக இரு ப்பதினால் மேன்மை என்பதுமில்லை, அதுவும் அனேகம் பிள்ளைகளுக் குப் பொதுவாகையினாலே தனித்துச் சொல்வது பொருந்தாதாகையி

வேறு வஸ்து இல்லாமையினாலேயே பாண்டவர்களுக்குள் அர்ஜுனன் நான் முனிகளாவது மனனம் செல்வதினால் வஸ்துக்களின் உண்

னால், வாஸுதேவன் என்கிற பதத்திற்கு அர்த்தமாக இருக்கை மாத்திரத்தினால் மேன்மை என்பதுமில்லை, அது மேன்மைக்குக் காரணமில்லாமையினால், வஸுதேவருக்குப் பிள்ளை என்பது இவ்விடத்தில் உபதேசிக்கத் தக்கதுமில்லை, அர்ஜுனனால் அது அறியப்பட்டிருக்கிற படியினால், ஆகையினாலேயே ஸாக்ஷாத்தாக அவதாரம் என்பது முசிதமல்ல, ஆகையினாலேதான் இவ்விடத்தில் 'வ்ருஷ்ணீநாஉஹஉஷி' (இடையர்களுக்குள் நானாகிறேன்) என்று சொல்லப்படவில்லை என்னில் இந்த ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் சொல்லுகிறோம் 'வாஸுதேவ' என்னும் பதம் இவ்விடத்தில் லக்ஷணையினால் வஸுதேவர் வீட்டில் நான்கு கைகளையுடையவராக அவதாரம் செய்தது முதலாக மனுஷ்யர்களைவிடச் சிறந்த குணங்கள் விக்ரஹம் பராக்ரமம் முதலிய இடையர்கள் வரையிலும் ப்ரஸித்தமான மேன்மையைக் குறிக்கிறது. அதை அர்ஜுனனுக்குச் சொன்னதும் உதாஹரணம் காட்டுவதற்காக. ஸர்வநாமமாகிய நீ என்பதை விட்டு நேராகப் பெயரையே சொன்னதினால் மிகவும் ஸமீபத்திலிருப்பது முதலியவைகளால மேன்மை இங்கே சொல்லப்படுகிறது. தர்மத்தில தர்மபுத்திரனும் பலத்தில் பீமஸேனனும் அழகு முதலியவைகளில மாத்ரீயின் பிள்ளைகளாகிய நகுல ஸஹதேவர்களும் சிறந்தவர்களாகையினால் 'அர்ஜுனன்' என்கிற ப்ரஸித்தமான பெயரினாலே விவரிக்கப்பட்டது. இத்தால் தனக்கு எதிரிலிருக்கும் அர்ஜுனனைக் குறித்து நீ என்று சொல்லாமையினால் இங்கே தனஞ்சயன் என்பவன் வேறொருவனோ என்கிற ஸந்தேஹம் விலக்கப்பட்டது. இவ்விடத்தில் ப்ரத்யக்ஷமாகத் தெரியவில்லை என்பதுமில்லை, ப்ரத்யக்ஷமாகத் தெரிகிற எலலா வஸ்துக்களை எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிற பகவானால் சொல்லப்படுகிறபடியினால். ருஷியாயிருக்கையாவது ஸுக்ருத விசேஷத்தினால் இந்திரியங்களுக்குத் தெரியாத விஷயங்களைக் கண்டறிதல். அது அநேகமாக முன்னமேயே சொல்லப்பட்டது, ஆகையினால் 'ஊநீநாம்' என்கிற இடத்தில் வேறு அர்த்தம் நிருக்தியை அநுஸரித்தும், 'இந்தப் பகவானைத் தெரிந்துகொண்டு முனியாகிறான்' *என்றர்த்தமுள்ள ச்ருதி வாக்யத்தை அநுஸரித்தும், சொலலப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—*'முனிகளாவது' *என்று ஆரம்பித்து. பகவானாகிய வ்யாஸருக்கு அப்படிப்பட்ட மேன்மையும் அவருடைய வார்த்தையி*

மையைப் பார்க்கிறவர்கள், அவர்களுக்குள் வ்யாஸர் நான் கவிகளாவது புத்திமான்கள். 37

தண்டோ தமயதாமஸ்மி நீதிரஸ்மி ஜிகீஷதாம் |
மௌநம் சைவாஸ்மி குஹ்யாநாம் ஜ்ஞாநம் ஜ்ஞாநவதாமஹம் || 38

ப-ரை] அஹம் நான், தமயதாம் ஶிக்ஷிக்கிறவர்களுடைய, தண்ட: ஶிக்ஷையாக, அஸ்மி ஆகிறேன், ஜிகீஷதாம் ஜயிக்கவேண்டும் என்கிற ஆசையை உடையவர்களுடைய, நீதி: நீதியாகவும், அஸ்மி ஆகிறேன், குஹ்யாநாம் மறைக்கத்தகுந்தவார்த்தைகளை மறைப்பதில், மௌநம் சைவ மௌனமாகவும், அஸ்மி ஆகிறேன், ஜ்ஞாநவதாம், ஜ்ஞானமுள்ளவர்களின் ஜ்ஞாநம் ஜ்ஞானமாகவும், அஸ்மி ஆகிறேன். 38

பா] நியமத்தை மீறிநடந்தால் ஶிக்ஷை செய்பவர்களின் ஶிக்ஷை நான். ஜயிக்கவேண்டுமென்கிற ஆசையை உடையவர்களுடைய ஜயத்துக்

தா] ஞாலேயேஏற்பட்டது ‘க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் | ஏகோ ஹி ஸந்நிஹிதோ யோ நாராயணஸ்ய ||’ என்றிவை முதலியவைகளிலும் ‘தபோவிஶிஷ்டாதபி வை வஸிஷ்டாந் நிஸ்ஸத்தமாத் || ஶக்தேஶ்ச பௌத்ரம் க்ருஷ்ணத்வைபாயநம் ஜ்ஞாநவேதநாத் ||’ என்றும் சொல்லப்பட்டது. இவரும் பகவானுடைய விபவாவதாரமாக ‘வேதவித்வாந் க்ருஷ்ணத்வைபாயந: ப்ரபு:’ என்று எண்ணப்படுகிறார். ‘கவீநாம்’ என்பதினால் பரபந்தம் செய்தவர்கள் என்பது சொல்லப்படவில்லை, அப்படியானால் வால்மீகி முதலியவர்கள் மற்றெல்லோரையும் விடச் சிறந்தவர்களாகையினால், நமக்குத் தெரியாத விஷயங்களைக் கண்டறிகிறவன் கவி, என்று சொல்லப்படுகிறான். என்கிற அபிப்ராயத்தினால், சொல்லுகிறார்—‘கவிகளாவது’ என்று ஆரம்பித்து. புத்திமான்களுக்குள் சுக்கிராசாரியருக்கு மேன்மையாவது நீதிஶாஸ்த்திரத்தில் ஸாமர்த்தியம் முதலியவைகளினால், இதுவும் நக்ஷத்ரேஷு நய தேவாசார்ய ப்ருஹஸ்பதிவாக | ஶேஷம் ஸர்வ திவத்தி ஸ்வபுத்தவதிஷ்டதே’ என்றிவை முதலிய இடங்களில் ப்ரஸித்தமாகச் சொல்லப்படுகிறது. 37

‘நியமத்தை மீறி நடந்தால்’ என்பதினால் ஶிக்ஷிப்பதற்குத் தகுந்தவர்கள் என்பது சொல்லப்படுகிறது, ஶிக்ஷிக்கத்தகாதவர்களை ஶிக்ஷிப்பது நரகத்திற்குக் காரணமாகையினால. நீதியை உடையவர்களின் நீதி ஆகிறேன் என்று சொல்லவேண்டி இருக்க ‘ஜிகீஷதாம்’ (ஜயிக்கவே

குக் காரணமாகிய நீதியும் நானுகிறேன் மறைக்கவேண்டியவைகளின் மறைப்புகளில் மௌனமாகிறேன். ஜ்ஞானமுள்ளவர்களுடைய ஜ்ஞானமும் நான். 38

யச்சாபி ஸர்வபூதாநாம் பீஜம் ததஹமர்ஜுந ।
ந ததஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம் ॥ 39

ப-ரை] அர்ஜுந - அர்ஜுனா, ஸர்வபூதாநாம் - எல்லா ப்ராணிகளுக்கும், பீஜம் - காரணம், யத் - எதுவோ, தச்சாபி - அதுவும், அஹம் - நான், யத் - எந்த, சராசரம் - ஜங்கமமும் ஸ்தாவரமுமாகிய, பூதம் - ப்ராணி, மயா விநா - என்னைவிட்டுப் பிரிந்து, ஸ்யாத் - இருக்குமோ, தத் - அப்படிப்பட்டது, நாஸ்தி - இல்லை. 39

ண்டும் என்கிற ஆசையை உடையவர்களுடைய) என்பதோடு எப்படி அன்வயிக்கிறது, என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—ஜயிக்கவேண்டும் என்கிற ஆசையை உடையவர்களுடைய ஜயத்திற்கு உபாயமாகிய நீதி,என்று. புத்தியின் ஒருவித வ்யாபாரம் இங்கே சொல்லப்படுகிறது. லோகத்தில் ப்ரஸித்தமாகிய வார்த்தை சொல்லாமையாகிய மௌனம் மறைக்கவேண்டியதில்லையாகையினால் மறைக்க வேண்டிய வஸ்துக்களுக்குள் என்று சொல்வது உசிதமல்ல. மௌனம் என்னும் பதம் ஆத்மா முதலியவற்றைப்பற்றிய வித்யை முதலியவைகளைச் சொல்வதாக இருந்தால் ப்ரஸித்தமான அர்த்தத்தை விடவேண்டிவரும், மௌனம் மறைக்கவேண்டிய வஸ்துக்களின் ஸ்வபாவமுமில்லை. அப்படி இருந்தால் ஸத்வம்ஸத்வவதாம், என்பதைப்போலச் சொல்லிவிடலாம் என்கிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'மறைக்க வேண்டியவைகளின் மறைப்புகளில்' என்று மறைக்க வேண்டிய வஸ்துக்களை மறைக்கவேண்டியது என்பதும் மௌனம் ஆறு காதுகள் ஸம்பந்தப்படாமல் யோசனை செய்வதைவிட மறைப்பதற்குச்சிறந்த உபாயம் என்பதும், ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையினால் இவ்விடத்தில் பொதுவாக ஸம்பந்தத்தைச் சொல்லுகிற ஆறும் வேற்றுமை மறைக்கப்படுகிறது, மறைக்கிறது ஆகிற ஸம்பந்தத்தில் முடிவுபெறுகிறது. 'பூதாநாமஸ்மி சேதநா' என்று ஜ்ஞானம்மாத்திரம் முன்பு சொல்லப்பட்டபடியினால், இங்கு 'ஜ்ஞாநம் ஜ்ஞாநவதாம்' என்று புருஷார்த்தத்தை அடைவதற்குக் காரணமாகிய விசேஷமானஜ்ஞானம் சொல்லப்படுகிறது. 'தஜ்ஜ்ஞாநம் அஜ்ஞாநம் அதோந்ய துக்தம்' என்பதைப்போல.

பா] எல்லா அவஸ்த்தைகளையுமுடையவைகளாகிய எல்லா ப்ராணிகளுக்கும் அந்தந்த அவஸ்த்தைகளுக்குக் காரணமாக நமக்குத் தெரிந்ததும் தெரியாததுமாகிய வஸ்து எதுவோ அது நான். எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருக்கிற என்னைவிட்டுப் பிரிந்து எந்த ப்ராணிகளின் கூட்டம் இருக்குமோ அப்படிப்பட்டதில்லை. * ஸஹஸ்ரோ ... என்று ஆரம்பித்திருக்கிறபடியினால் 'நததஸ்தி ...' என்கிற இடத்திலும் ஆத்மாவாக இருப்பதே சொல்லப்படுகிறது. எல்லா அவஸ்த்தைகளையுமுடைய எல்லா வஸ்துக்களின் கூட்டமும் அவைகளுக்கு ஆத்மாவாக இருக்கிற என்னுடன் சேர்ந்தே இருக்கும் என்று அர்த்தம். இத்தால் இங்கே மற்ற வஸ்துக்களுடன் சேர்த்து தன்னைச் சொல்லியிருப்பதெல்லாவற்றிற்கும் அவைக

தா] 'ஸர்வபூதாநாம்பீஜம்' என்று ப்ரக்ருதி மாத்திரம் சொல்லப்படவில்லை, அது நேரில் எல்லா ப்ராணிகளுக்கும் காரணமில்லை ஆகையினால். நெல் முதலிய விரைகளும் சொல்லப்படவில்லை, அது 'ஸர்வபூத' என்னும் பதத்தினால். சொல்லப்படுகிற ஜங்கமங்களிடத்தில் அன்வயிக்காதாகையினால ஆகையினால் பொதுவாக கார்யதசையை யுடையதாய் உபாதானமாகிய வஸ்துவெல்லாம் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எல்லா அவஸ்த்தைகளையுமுடையவைகளாகிய' என்று ஆரம்பித்து. இத்தால் ப்ராக்ருத ஸ்ருஷ்டியும் நைமித்திக ஸ்ருஷ்டியும் 'ஸஹஸ்ரேஷு' என்றாரம்பித்து முன்பு சொல்லப்பட்டபடியினால் இவ்விடத்தில் நியமான ஸ்ருஷ்டிக்குக் காரணங்களாகிய அந்தந்த வஸ்துக்களைச் சரீரமாக உடையவனாகையினால் அவைகளுக்குக் காரணமாக இருக்கையும் சொல்லப்பட்டது. 'யதாபி' என்பதினால் அபிப்ராயத்திற்கொள்ளப்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'நமக்குத்தெரிந்ததும், தெரியாததுமாகிய' என்று. தெரியாதது என்பதற்கு ஊஹித்துத் தெரிந்துகொள்ளக்கூடிய என்று அர்த்தம் 'நததஸ்தி' என்றிவை முதலிய இடங்களில் தன்னைவிட வேறு வஸ்து இல்லை என்பது விதிக்கப்படுகிறது என்கிற ப்ரமத்தை நீக்குவதற்காக விட்டுப்பிரிவதில்லை என்கிற அர்த்தம் சொல்லப்பட்டது. ஆரம்பத்திற்கு விரோதமாக முடிவிருக்காது என்கிற அபிப்ராயத்தினால சொல்லுகிறார்.—'எல்லாவற்றிற்கும்' என்று ஆரம்பித்து. ஆத்மாவாகஇருக்கிற தன்னைவிட்டுப் பிரியாமையை நிரூபிக்கிறார். 'ஸஹஸ்ரேஷு' என்றாரம்பித்து. இப்படி என்னை விட்டுப்பிரிந்திருக்கிற வஸ்து இல்லை என்று சொன்னதினால் ஏற்பட்ட தாத்பர்யத்தைக்காட்டுகிறார்—'எல்லா அவஸ்

ளுக்குத்தான் ஆத்மாவாக இருப்பதே காரணம் என்று ப்ரகாசப்படுத்துகிறார். 39

நாந்தோ(அ)ஸ்தி மம திவ்யாநாம் விபூதீநாம் பரந்தப |
ஏஷ தூத்தேஶத: ப்ரோக்தோ விபூதேர்விஸ்தரோ மயா ||40

ப-ரை] பரந்தப ஶத்ருக்களை வதம் செய்வதையே ஸ்வபாவமாக உடைய அர்ஜுன, மம என்னுடைய, திவ்யாநாம் மங்களங்களாகிய, விபூதீநாம் விபூதிகளுக்கு, அந்த: முடிவு. நாஸ்தி இல்லை, ஏஷ: இந்த, விபூதே: விபூதியின், விஸ்தர: விஸ்தாரமானது, மயா என்னால், உத்தேஶத: சுருக்கமாக, ப்ரோக்த: சொல்லப்பட்டது. 40

பா] என்னுடைய மங்களங்களாகிய விபூதிகளுக்கு முடிவில்லை, இந்த விபூதியின் விஸ்தாரம் என்னால் சில காரணங்களால் சுருக்கமாகச் சொல்லப்பட்டது, 40

யத்யத்விபூதிமத்ஸத்த்வம் ஶ்ரீமதூர்ஜிதமேவ வா |
தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ஶஸம்பவம் || 41

தா] தைகளையுமுடைய’ என்றாரம்பித்து. ஆரம்பத்திலும் முடிவிலும் தன்னைவிட்டுப் பிரிவதில்லை என்று சொல்லியிருப்பதற்குப் பகவானுடைய அபிப்ராயத்திலிருக்கும் ப்ரயோஜனத்தைச் சொல்லுகிறார்.— ‘இத்தால்’ என்றாரம்பித்து. சில இடங்களில் வஸ்துக்களல்லாத குணம் முதலியவைகளோடு சேர்த்துச்சொல்லியிருப்பதும் அவைகளுக்கு ஆதாரங்களான வஸ்துக்களும் பகவானுக்குச் சரீரங்களாகையினால் என்று முன்பே விவரமாக நம்மால் சொல்லப்பட்டது. 39

முன்பு சொல்லப்பட்டதாகிய முழுமையும் சொல்ல முடியாதென்பதையே இந்த ஶ்லோகத்தினால் ஞாபகப்படுத்துகிறார்— திவ்யாநாம்’ என்னும் பதத்தினால் பரமபதத்திலிருக்கிற என்னுமர்த்தம் சொல்லப்படுகிறதாக இருந்தால் முன் எல்லா இடங்களிலுமிருக்கும் வஸ்துக்களையும், பரமபதத்திலில்லாத வஸ்துக்களையும் விவரமாகச் சொல்லியிருப்பது விரோதியாகும், ஆகையினால் ‘மங்களங்களாகிய’ என்று சொல்லப்பட்டது. ‘விபூதீராத்மநஶ்ஶுபா:’ என்றல்லவோ ஆரம்பிக்கப்பட்டது. உத்தேஶத: என்பதற்கு ஏகதேசத்தினால் அதாவது மொத்தமான ஆகாரங்களினால் விபூதிகளை எடுத்து என்று அர்த்தம் அந்த அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—சிலகாரணங்களினால்’ என்றாரம்பித்து.

ப — ரை] யத்யத் - எந்தெந்த, ஸத்வம் - ப்ராணி, விபூதிமத் - விபூதிகளையுடையதோ, ஶ்ரீமத் - காந்தியையுடையதோ, ஊர்ஜிதம் - உத்ஸாஹத்தை உடையதோ, தத்தத்-அதனை, த்வம்-நீ, மம - என்னுடைய, தேஜோம்ஶஸம்பவம் - ஶக்தியினுடைய ஒருபாகத்தினு லுண்டானதாக, அவகச்ச - அறி. 41

பா] எந்தெந்த ப்ராணிகளின்கூட்டம் நியமிக்கப்படும் வஸ்துக்களைஉடையதோ காந்தியையுடையதோ அன்றிக்கே பணமும் தான்யமும் நிறைந்ததோ, நல்ல காரியங்களை ஆரம்பிப்பதில் ப்ரயத்தினம் செய்துகொண்டிருக்கிறதோ அதனை என்னுடைய தேஜஸ்ஸினுடைய அம்சத்தினுலுண்டா

தா] ‘ஹ்ராயாந்ருதஃ’ என்று ஆரம்பித்து, விஸ்தாரமாகச் சொல்லப்பட்ட அர்த்தத்தையே கீழ்ச்சொல்லாதவைகளும், அவஶ்யம் சொல்லவேண்டியவைகளுமான முக்கியமான விபூதிகளின் சுருக்கத்தைச் சொல்லி முடிக்கிறார்—இந்த ஶ்லோகத்தில். விபூதி என்னும் பதத்திற்கு இந்த ஸந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டுவரும் அர்த்தத்தை நினைத்துக்கொண்டு ‘நியமிக்கப்படும் வஸ்துக்களை உடையதோ’ என்று சொல்லப்பட்டது. ஸத்வ என்னும் பதம் இவ்விடத்தில் ஜந்துக்களைச் சொல்லுகிறது. இரட்டித்துச் சொல்லி இருப்பதின் அபிப்ராயத்தை ப்ரகாசப்படுத்துவதற்காக ‘கூட்டம்’ என்னும் பதம் ‘விபூதிமத் ஶ்ரீமத்’ என்னும் பதங்களுக்குப புனருக்தி தோஷத்தைப் பரிஹரிக்கிறார்—‘காந்தியை உடையதோ’ என்று. கோபலீவர் தந்யாயத்தினுல், நியமிக்கப்படும் வஸ்துக்களில் சிலவற்றைச்சொல்லுகிறபடியினுலாவது, புனருக்தி பரிஹரிக்கப்படுகிறது, என்கிற அபிப்பிராயத்தினுல்சொல்லுகிறார்—‘‘பணமும் தான்யமும் நிறைந்ததோ’ என்று. ‘ஊர்ஜிதம்’ என்பதினுல் சிறந்தது என்கிற பொதுவான அர்த்தம் சொல்லப்படும் பக்ஷத்தில் மற்றவைகளைச் சொல்லியிருப்பது வ்யர்த்தமாகிறபடியினுல் விஶேஷமான அர்த்தத்தைச் சொல்லுகிறார்—‘நல்லகாரியங்களை’ என்றாரம்பித்து ‘ஊர்ஜ்’ என்னும் பதம் தளர்ச்சியில்லாமையினுல் எப்பொழுதும் உத்ஸாஹத்தையே ஸ்வபாவமாக உடைத்தா யிருக்கையைச் சொல்லுகிறது ‘விபூதிமத்’ (விபூதிகளையுடையது) என்பது பலத்தைஉடையது முதலியவைகளையும்குறிப்பதற்காக. ‘மமதேஜோம்ஶஸம்பவம்’ என்று சொல்லியிருக்கு மிடத்தில் திவ்யமங்கள விக்ரஹத்தின் தேஜஸ்ஸினுல் உண்டானது என்னும் அர்த்தம்தோன்றும் அதை நீக்குவதற்காக ப்ரக்ருதத்தி லுபயோகமுள்ள ‘தேஜஃ’ என்னும் பதத்

னதாக அறி, தேஜஸ்ஸாவது அயலாரை நிராகரிக்கும் சக்தி. ஒருவராலும் நினைக்கமுடியாத சக்தியையுடைய என்னுடைய நியமனஶக்தியின் ஒரு பாகத்தினாலுண்டானது என்று அர்த்தம். 41

அதவா ப³ஹுநைதேந கிம் ஜ்ஞாதேந தவார்ஜுந ।
விஷ்டப்⁴யாஹமித³ம் க்ருத்ஸ்நமேகாம்ஶேந ஸ்தி²தோ ஜக³த் ॥

ஸ்ரீகண்ணபிரானருளிச்செய்த ஸ்ரீ பகவத்கீதையில் விபூதி

பத்தாவது அத்யாயம்

முற்றிற்று

ஶ்ரீ க்ருஷ்ணாய பரப்³ரஹ்மணே நம:.

தினர்த்தத்தைச்சொல்லுகிறார்—'தேஜஸ்ஸாவது' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில், நிராகரிப்பதாவது என்ன? அதில் பாகம் எப்படி இருக்கும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்.—என்னுடைய, என்று ஆரம்பித்து. 'ஒருவராலும் நினைக்கமுடியாத' என்பதினால் நினைக்கக்கூடிய பாகத்தைத் தெரிவிப்பதற்காக 'ஏக' என்பதின் அபிப்ராயம் விவரிக்கப்பட்டது. இத்தால் எல்லாவற்றையும் பற்றியது, ஒருவராலும் தடுக்கமுடியாதது, வேறொருவராலும் செய்ய முடியாததைச் செய்யக்கூடியது, என்பது முதலியவை ஏற்பட்டன. எப்படி மலைகளையெல்லாம் அசைக்கக்கூடிய ஶக்தியையுடைய பெரும் காற்றிற்குப் புற்களைத்தாக்குவது அல்பவேகத்தினாலேயே உண்டாகிறதோ, அப்படியே இவ்விடத்திலும் என்று தாத்பர்யம். எதற்குத் தேஜஸ்ஸின் அல்ப பாகம் காரணமோ அது தேஜோம்ஶஸம்பவம் என்னப்படுகிறது.

ப - ரை] அர்ஜுந - ஓ அர்ஜுன, தவ - உனக்கு, ஏதேந - இந்த, பஹுநா - அதிகமான, ஜ்ஞாதேந - ஞானத்தினால், கிம் - என்ன ப்ர யோஜனம், அஹம் - நான், இதம் - இந்த, க்ருத்ஸ்நம் - எல்லா, ஜகத் - லோக த்தையும், ஏகாம்சேந - ஒருபாகத்தினால், விஷ்டப்ய - தாங்கிக்கொ ண்டு, ஸ்தித: - இருக்கிறேன் 42

பா] அதிகமாகச் சொல்லப்படுகிற, இந்த ஞானத்தினால், என்ன ப்ரயோ ஜனம், சேதனாசேதனமாகிய கார்யதசையை உடையதும் காரணதசை யை உடையதுமான, ஸ்தூலமும் ஸூக்ஷ்மமாயுமிருக்கிற, இந்த எல்லா லோகமும், ஸ்வரூபம் உண்டாவதிலும், இருப்பதிலும், ப்ரவ்ருத்திகளின் வ்யத்யாஸங்களிலும் எப்படி என்னுடைய ஸங்கல்பத்தை மீறி நடக்

தா] "வ்யாப்ருத:" என்று ஆரம்பித்தது முடிக்கப்பட்டது. பிறகு சுருக்கமாக முக்யமானதும், முக்யமல்லாததுமான எல்லா விபூதிகளை யும் இந்த ஸ்லோகத்தினால் சேர்த்துச்சொல்லுகிறார்—சொல்லப்படுகிற என்பதினால் "ஏதேந" என்கிறபதம் வார்த்தை முடியவில்லை, என் பதைச்சொல்லுகிறது, என்று தாத்பர்யம். விபூதியின் முடிவைத்தெரி ந்து கொள்வதாகிய ப்ரயோஜனம் ஸித்திக்காது, என்கிற அபிப்ராயத் தினால் சொல்லுகிறார்—'என்னப்ரயோஜனம் என்று. "இதம்" (இந்த) என்பதினால் அந்தந்த ப்ரமாணங்களில் ஏற்பட்டபடி விசித்ரமாக இரு க்கை சொல்லப்பட்டது. என்கிற அபிப்ராயத்தினால், 'சேதனாசேதன மாகிய' என்று சொல்லப்பட்டது. கார்யதசையை உடைய' என்பது முதலியவாக்யத்தினால் 'க்ருத்ஸ்நம்'' என்னும் பதத்தின் அபிப்ராயத்தில் ஏற்பட்டதை விவரித்திருக்கிறது. 'ஸ்தூலமும் ஸூக்ஷ்மமாயுமிருக்கிற' என்பவைகளுக்குக் கார்யதசை காரணதசை இரண்டிலும் முறையே அன்வயம் சொல்லவேண்டியது. 'ஸ்வரூபம்' என்பது முதலிய வாக் யத்தினால் தாங்கிக்கொண்டிருப்பதற்கு ப்ரயோஜனத்தைச்சொல்லி இருக்கிறது. அநித்யமான வஸ்துக்களில் ஸ்வரூபம் உண்டாவதா வது அவைகளின் உத்பத்தி. நித்யமான வஸ்துக்களில் மற்ற வஸ்துக் களை விடவ்யத்யாஸம்,நித்யமான வஸ்துக்களின் ஸ்வரூபமும் பகவானு டையநித்யமானஸங்கல்பத்தினால்ஏற்பட்டதல்லவா;இதுவும் முன்னமே விஸ்தாரமாகச் சொல்லப்பட்டது. இவ்விடத்தில் ஸ்வரூபத்தின் ஒரு பாகத்தையும், அவதாரம் செய்திருக்கும் திவ்யமங்கள விக்ரஹத்தை யும் விலக்குவதற்காகவும், நியமனத்தைச்சொல்லிக்கொண்டு வரும்

காதோ, அப்படியே என்னுடைய ப்ரபாவத்தினுடைய கோடியில் ஒருபாகத்தினால் தாங்கிக்கொண்டு இருக்கிறேன். அப்படியே பகவானாகிய பராஶரரால் 'யஸ்யாயுதாயுதாம்ஶாம்ஶே விஶ்வஶக்திரியம் ஸ்திதா' என்று சொல்லப்பட்டது. 42

பகவத்ராமாநுஜன் என்னும் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த
ஸ்ரீமத் கீதாபாஷ்யத்தில் பத்தாவது அத்யாயம்
முற்றிற்று.
ஸ்ரீ உடையவர் திருவடிகளே ஶரணம்.

ஸந்தர்ப்பத்தை அநுஸரித்தும், என்னுடைய ப்ரபாவத்தினுடைய என்று சொல்லப்பட்டது. இவ்விடத்தில் ப்ரபாவம் என்னும் பதத்தினால் கீழ் ப்ரஸ்தாவிக்கப்பட்ட நியமன ஶக்தியே சொல்லப்படுகிறது. ஆகையினால தேஜோம்ஶ ஸம்பவம் என்பதின் அர்த்தமே இங்கும் சொல்லப்படுகிறது 'ஏக' (ஒரு) என்னும் பதம் மிகவும் அல்பமாகிய என்பதைச் சொல்லுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'கோடியிலொருபங்கினால்' என்று சொல்லப்பட்டது. 'தாங்குவதாவது' இவ்விடத்தில், தன் இஷ்டப்படி நடப்பதில் நின்றும் தடுத்தல். அன்றிக்கே தனக்கு வஶமாக்கிக்கொள்ளுவதாகிய அதிஷ்டானம் செய்தலாகவுமாம. 'ஏகாம்ஶேந' என்பதற்குத் தன்னால் சொல்லப்பட்ட அர்த்தத்தை உறுதிப்படுத்துகிறார்—'அப்படியே' என்று ஆரம்பித்து [விஶ்வஶக்தி: ' ப்ரபஞ்சமாகிற ஶக்தி அதாவது அநந்தக் கார்யங்களுக்கு: உபயோகமுள்ள விஶேஷணமாகிய ப்ரபஞ்சம் என்று அர்த்தம. தேஜோம்ஶ ஸம்பவம், என்பதற்குப் பிறகு சொல்லி இருப்பதினால், ஏகாம்ஶேந என்கிற இடத்திலிருக்கும் அம்ஶ என்கிற பதமும் அந்தத் தேஜோம்ஶத்தைச் சொல்லுகிறது என்பதே ந்யாயத்தை அநுஸரித்தது, என்று தாத்பர்யம். 42

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராகிய ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிகன் அருளிச்செய்த ஸ்ரீகீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகையில் பத்தாவது அத்யாயம்
முற்றிற்று.
ஸ்ரீ உடையவர் நிகமாந்த மஹாதேஶிகாய நம:

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த கீதார்த்த ஸங்க்ரஹம்

ஸ்ரீ.ஆளவந்தார் திருவடிகளே ஶரணம்.

𑌸𑍍𑌵𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑌣𑌾𑌨𑌨𑍍𑌤𑍍𑌯 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌵𑌾𑌧𑍀𑌨𑌤𑌾𑌮𑌤𑌿𑌃 ।

𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿 𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌾 𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌾 𑌦𑌶𑌮𑍋𑌦𑌿𑌤𑌾 ॥ 14

ப - வுரை] 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌾—𑌭𑌕𑍍𑌤𑌿-பக்தியின், 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿 - உண்டாவதையும், 𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌿 – வ்ருத்தியடைவதையும், 𑌅𑌰𑍍𑌥𑌾. ப்ரயோஜனமாக உடைய, 𑌸𑍍𑌵𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑌣𑌾𑌨𑌨𑍍𑌤𑍍𑌯𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌵𑌾𑌧𑍀𑌨𑌤𑌾𑌮𑌤𑌿𑌃—𑌸𑍍𑌵 - தன்னுடைய, 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑌣 - கல்யாணகுணங்கள், 𑌆𑌨𑌨𑍍𑌤𑍍𑌯 - எண்ணிறந்தவை என்பதைப்பற்றியதாயும், 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌵𑌾𑌧𑍀𑌨𑌤𑌾 – எல்லாம் தனக்கு வஶப்பட்டது என்பதைப்பற்றியதாயுமிருக்கிற 𑌮𑌤𑌿𑌃-புத்தி, 𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌾. விஸ்தாரமாக, 𑌦𑌶𑌮𑍋𑌦𑌿𑌤𑌾 - பத்தாவது அத்யாயத்தில் சொல்லப்பட்டது. 14

ஸ்ரீமன் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷை.

இவ்விடத்தில் ஒன்பதாவது அத்யாயத்துடன் ஸங்கதியைத்தெரிவித்துக்கொண்டு பரக்ஷயத்தில "அங்கங்களோடே கூடிய பக்தியோகம சொல்லப்பட்டது. இப்பொழுது பக்தி உண்டாவதற்காகவும், அது விருத்தி அடைவதற்காகவும் பகவானுடைய தடங்கலில்லாத ஐஶ்வர்யம் முதலிய கல்யாண குணங்கள் எண்ணிறந்தவை என்பதைச சொலலுவதற்காகவும் எல்லாலோகமும் அவனுக்குச ஶரீரமாகையினாலே அவனையே ஆத்மாவாக உடையதாகையினாலே அவனாலேயே ப்ரவ்ருத்திப்பிக்கத்தக்கது என்பதும் விஸ்தாரமாகசசொல்லப்படுகிறது" என்று சொல்லியிருக்கிறது. பதினோராவது அத்யாயத்தின் ஆரம்பத்திலும 'இப்படி பக்தியோகம் உண்டாவதற்காகவும், அது வ்ருத்தியடைவதற்காகவும், மற்றெல்லா வஸ்துககளையும் விடசசிறந்ததாயும் ஸ்வபாவததினாலேயே ஏற்பட்டதாயும் பகவானுக்கே அஸாதாரணமாயுமிருககிற கல்யாணகுணங்களுடன் பகவான் எல்லாவற்றையும் சரீரமாக உடையவன் என்பதும், ஆகையினாலேயே அவனைத்தவிர மற்ற சேதனாசேதனமாகிய எல்லா வஸ்துக்களின் கூட்டமும் அவனுக்குச சரீரமாகையினால அவனுக்கு வஶப்பட்ட ஸ்வரூபம் ஸ்த்திதி ப்ரவ்ருத்தி இவைகளை உடையது, என்பதும் சொல்லப்பட்டது. இபபடிப்பட்ட பகவானுக்கே அஸாதாரணமான ஸ்வபாவத்தையும், மற்றெல்லாம் அவனுக்கு வஶபபட்ட ஸ்வரூபம், ஸ்திதிப்ரவ்ருததி இவைகளை உடையது, எனபதையும் பகவானிடத்திலிருநது கேட்டு இது இப்படியே என்று நிஶ்சயம் செய்து, அபபடிப்பட்ட பகவானை நேரில் பார்க்கவேண்டும் என்கிற ஆசையையுடைய அர்ஜுனன் சொன்னான்." என்று சொல்லப்பட்டது.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த கீதார்த்த ஸங்க்ரஹப்பாட்டு.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

எல்லையில்லாத தன்சீலமுமின்ன முதக்கடலும்
எல்லையில்லாத விபூதியெல்லாம் தனதா னமையும்
எல்லையில்லாத பத்தி யெழுவிக்கத் திருவருளால்
எல்லையி லீசனியம் பினனிந்திரன் மைந்தனுக்கே. 11

ப - ரை] எல்லையில்லாத - எண்ணிறந்த, தன் - தன்னுடைய, சீலமும் - ஸ்வபாவத்தையும், இன்னமுதக்கடலும் - இன் — போக்கியமான, அமுதக்கடலும் — அமிருத ஸமுத்திரத்தையும், எல்லையில்லாத எல்லாம் - அளவிடக்கூடாத எல்லாவஸ்துக்களும், தனது - தன்னுடைய, விபூதி ஆனமையும் - விபூதியாக இருப்பதையும், திருவருளால் - உத்தமமான க்ருபையினுல், எல்லை இல்லாத - அளவில்லாத, பத்தி - பக்தியை, எழுவிக்க - உண்டாக்குவதற்காகவும் விருத்தி செய்வதற்காகவும், எல்லையில் - தனக்குமேற்பட்டவர்கள் ஒருவருமில்லாத, ஈசன் - பகவான், இந்திரன் மைந்தனுக்கு - இந்திரன் பிள்ளையாகிய அர்ஜுனனுக்கு, இயம்பினன் சொன்னுன்.

இதில் எல்லையில்லாத தன் சீலமு மின்ன முதக்கடலும் என்பதினுல் ஶ்லோகத்தில் ‘ஸுசூஶ்ராணமாணாநஞ்சு’ என்பதின் அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டது. சீலமும் என்பதினுல் ‘அஹமேதாமஹாகெஙு’ என்கிற ஶ்லோகத்தின் பாஷ்யத்தி லருளிச்செய்த எல்லா லோகங்களையும் ஸ்ருஷ்டிப்பவனுயிருக்கை முதலியதாகிய ‘பொாம என்கிறபதத்தி னர்த்தமும், இன்ன முதக்கடலும் என்பதினுல்‘ஏதாம்விபூதிம் யொாமஞ்’ என்கிற ஶ்லோகத்தின் பாஷ்யத்தில் யோகம் என்னும் பதத்திற்கு அர்த்தமாக அருளிச்செய்த கல்யாணகுணங்களும் சொல்லப்பட்டன. இந்த இரண்டிடங்களிலும் இரண்டும் அர்த்தங்கள் என்று 19 வது ஶ்லோகத்தின் தாத்பர்ய சந்திரிகையில் தம்மாலேயே அருளிச் செய்யப்பட்டிருக்கிறபடியினுல் இவை இரண்டும் ‘யொாம’ என்னும் பதத்திற்கு அர்த்தங்கள் என்று காட்டுவதற்காக இவை தனித்துச் சொல்லப்பட்டன. அன்றிக்கே ‘கொாநவிஷு ஸாரஶதம் ஜொாகெஹணவாநு கஶு வீபவாநு’ என்பதைப்போல முதலில் ஆஶ்ரிதர்களுக்கு அதிக உபாகாரமாகிய முக்கியமான ஸௌஶீல்யத்தைச் சொல்லிப் பிறகு மற்ற குணங்களை இன்ன முதக்கடலும்

என்பதினால் சொல்லியிருக்கிறதாகவுமாம் தன் என்பதினால் இந்த குணங்கள் அம்ருதம்போல போக்யமாக இருப்பதற்குக் காரணம், 'ஶ்ரவணாஸ்த்வஜ்ஞாநவ்ருத்தய உதகவ்ருத்ததயாஸ்வாத்யம் யாதா:' என்று சொல்லுகிறபடியே தன்னுடையவைகளாக இருப்பதே என்கிற அபிப்ராயத்தைக் காட்டுகிற 'விபூதிம் யோகம் ச மம' 'விபூதீராத்மநஶ்ஶுபா:' என்பவைகளின் அர்த்தம் குறிக்கப்பட்டது. இன்னமுதக்கடலாம் என்னும் பாடம் அப்போது அம்ருதஸமுத்திரம் போல போக்யமானஎன்றுஅர்த்தம்இது காகாக்ஷிந்யாயத்தினால சீலத்திலும் மேலே சொல்லப்போகிற விபூதிகளிலும் அன்வயிக்கிறது. இத்தால் 'விஸ்தரேணாத்மநோ யோகம் விபூதிம் ச ஜநார்த்தந । பூய: கதய த்ருப்திர்ஹி ஶ்ருண்வதோ நாஸ்தி மேऽம்ருதம்' என்கிற ஶ்லோகத்தில் விபூதியையும் யோகத்தையும் அம்ருதம் என்று சொலலியிருப்பதின் தாத்பர்யம் சொல்லப்பட்டது. எல்லையில்லாத என்பதினால் 'நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே' 'நாந்தோऽஸ்தி மம திவ்யாநாம் விபூதீநாம்' என்று சொல்லியிருப்பது நினைக்கப்பட்டது. எல்லையில்லாத பத்தி என்பதினால் 'நேரிய காதலன் பிலின்பின் தேறலமுத வெள்ளத்தானும் சிறப்பை விட்டு ஒரு பொருட்கசைவோரசைக திருவொடுமருவிய வியற்கை மாயாப்பெருவிறலுலகம் மூன்றொடு நல்வீடு பெறினும் கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே' என்றும் 'நின்புகழில் வைகுந்தம் சிந்தையிலும் மற்றினிதோ நீயவர்க்கு வைகுந்தமென்றருளும்வான்' என்றுஞ் சொல்லுகிறபடியே மோக்ஷத்தையும் காற்கடைக்கொள்ளும்படியான பக்தியின் ஸாதகாதிசயம் சொல்லப்படுகிறது. எல்லையில்லாத தனக்குமேற்பட்ட ஸாதகம் ஒன்றுமில்லாத என்று அர்த்தமாகவுமாம் பத்தி எழுவிக்க என்பதினால 'பக்த்யா த்வநந்யயா' என்பதின் அர்த்தம் சொல்லப்பட்டது. எழுவதாவது உண்டாகுதலும் வ்ருத்தி அடைதலும் அருளுக்குத்திருவாவது. 'ஆநந்தஸாந்த்ராதி குணா: த்ரைலோக்யவிஸ்ரம்பிதாரூபகாந்தி | ஸ்வாமீந வ்ருஷ்ணீஶ்வரஸ்ய' என்கிறபடியே எம்பெருமானையுமவன் குணங்களையும் தனக்குவசமாக்கிக் கொண்டிருப்பதினால் 'காருண்யவாந் குணேஷ்வஸாவதிஶ்ரீ' என்கிறபடியே அவனுடைய குணங்களுக்குள் ஆதிராஜ்யம் பெற்றதாயும், 'வ்ருஷ்ணீநாம் குணா: ஜ்ஞாநவைராக்யாதிபிஶ்ச ஸ்வா: தோஷாஸ்ஸர்வேऽபி தயயா நாஶ்யந்தே விநாஶிதா:' என்கிறபடியே தன்னாலே அவனுடைய மற்றகுணங்களும் ஆஶ்ரிதர்களுக்குக் கார்யஸாதகங்களாகும்படியான ஏற்றத்தை உடையதாயும் 'க்ருபயாவ

யத்வாஶ்ரயஸ்' என்கிறபடி ஆஶ்ரிதரக்ஷணத்திற்கு முக்யகாரணமாயும் இருக்கை. ஆகையினாலேயே 'வ்யஸாநவாரணாநாமா' அனுக்ரஹமே விஞ்சியிருக்கும். ஈஶ்வரத்வம் கழற்றவொண்ணாமையாலே ஸ்வருபத்தைப்பற்றியிருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். எல்லையிலீசன் என்பதினால் மத்த: பரதரம் நாந்யத் என்கிறபடியே தனக்குமேற்பட்டதொன்றுமில்லாமலிருக்கை சொல்லப்படுகிறது.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ பகவத்கீதை

பதினோராவது அத்யாயம்.

ஶ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

பா] இப்படி பக்தி யோகம் உண்டாவதற்காகவும், அது வ்ருத்திஅடைவதற்காகவும்,மற்றெல்லாவற்றையும் விட வேறுபட்டதாயும், ஸ்வபாவத்திலேயே ஏற்பட்டதாயும், பகவானுக்கே அஸாதாரணமாயும் இருக்கிற கல்யாணகுணங்களின் கூட்டத்துடன் கூட பகவான் எல்லாவற்றிற்கும் ஆத்மா, என்பதும் அவனைத் தவிர மற்றெல்லாச் சேதனசேதனங்களாகிய வஸ்துக்களின்கூட்டமும் அவனுக்குச்சரீரமாகையினால் அவனுக்குஅடங்

தா] விஶ்வரூபாத்யாயத்திற்கு அவதாரிகை சொல்லுவதற்காக விபூதி அத்யாயத்தின் அர்த்தத்தைச் சுருக்கிச் சொல்லுகிறார்— 'இப்படி' என்று ஆரம்பித்து. 'பக்தி யோகம் உண்டாவதற்காகவும், அது விருத்தி அடைவதற்காகவும்' என்னும் ப்ரயோஜனத்தைச் சொல்லி இருப்பதினால் பிறகு அர்ஜுனனுக்குப் பார்க்கவேண்டும் எனகிற ஆசை பக்தி வ்ருத்தி அடைந்ததினால் உண்டானது,என்றுகாட்டப்பட்டது. 'மற்றெல்லாவற்றையும் விட வேறுபட்டதாயும்' என்பதற்கு மற்றெல்லா வஸ்துக்களையும் விட வ்யத்யாஸத்தைக் காட்டக்கூடிய, என்று அர்த்தம். அன்றிக்கே மற்றெல்லா வஸ்துக்களின் ஸ்வபாவங்களை விட வேறுபட்டதாகவும், என்று அர்த்தமாகவுமாம். இத்தால் எல்லையில்லாத மேன்மையை உடையது, என்பது சொல்லப்பட்டதாகிறது. வேறொருவருக்கும் ஸாதாரணமில்லாததும் ஸ்வபாத்தில் ஏற்பட்டதும், எல்லை இல்லாத மேன்மையை உடையதுமாகிய, என்று சொல்லப்பட்டதே இவ்விடத்தில் வரிசையை மாற்றிச்சொல்லி இருப்பதாகத் தோன்றுகிறபடியினால். 'மற்றெல்லாவற்றையும் விட வேறு பட்டதாயும், பகவானுக்கே அஸாதாரணமாயும்' என்பவைகள் ஒன்றுக்கொன்று காரணமாகவும் காரியமாகவும் அன்வயிக்கிறபடியினாலும்ஸமமானவர்களும்மேற்பட்டவர்களும்இல்லை, என்பதில் தாத்பர்யமானபடியினாலும், இவைகள் வ்யர்த்தங்கள் என்பது இல்லை. கேட்கப்பட்ட அர்த்தத்தின் நிஶ்சயத்தினால் உண்டாகிய பக்தியின் வ்ருத்திக்கு ப்ரயோஜனமாகிய பார்க்கவேண்டும் என்கிற ஆசையைக்காரணமாக உடைய மேல் அத்யாயத்திற்கு உபோத்காதமாகிய அர்ஜுனன் வார்த்தைக்கு அவதாரிகை சொல்லுகிறார்—

கிய ஸ்வரூபம், ஸ்திதி, ப்ரவ்ருத்தி இவைகளைஉடையது, என்றும் சொல்லப்பட்டது, இப்படிப்பட்ட பகவானுக்கு அஸாதாரணமான ஸ்வபாவத்தையும்,எல்லாம் அவனுக்கு வசப்பட்ட ஸ்வரூபத்தையும் ஸ்திதியையும், ப்ரவ்ருத்தியையும் உடையது என்பதையும், பகவானிடத்திலிருந்து கேட்டு இது இப்படியே, என்று நிச்சயம்செய்து அப்படிப்பட்ட பகவானை நேரில் பார்க்கவேண்டும் என்கிற ஆசையை உடைய அர்ஜுனன் சொன்னான். அப்படியே பகவானுடைய அனுக்கிரஹத்தினால் மேலே பார்க்கப் போகிறான். 'ஸர்வாஶ்சர்யமயம் தேவம் அனந்தம் விஶ்வதோமுகம் । தத்ரைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்நம் ப்ரவிபக்தமனேகதா' என்றல்லவோ மேலே சொல்லப் போகிறார்.

'இப்படிப்பட்ட' என்று ஆரம்பித்து. 'இப்படிப்பட்ட' என்பதற்கு எல்லாவஸ்துக்களையும்விட மேற்பட்டதாகிய, என்று அர்த்தம். 'இந்த'என்பதற்குக்கீழ்ச் சொல்லியவிதமான என்று அர்த்தம். 'பகவானிடத்தில் இருந்து' என்பதினால் நிச்சயமுண்டாவதற்குக் காரணமாகிய,உண்மையை அறிந்தவன் என்பதும், அறிந்தபடிக்கே சொன்னான் என்பதும் காட்டப்பட்டது. வேறொரு ஆசார்யனிடத்தில் இருந்து கேட்டிருந்தால் பார்க்கவேண்டும் என்கிற ஆசை இருந்தபோதிலும் பார்க்கவேண்டும் என்று பிரார்த்திப்பது பொருந்ாதல்லவா? என்றும் தாத்பர்யம் 'ஏவமேதத்' என்கிற ச்லோகத்தின் அர்த்தத்தை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'இது இப்படியே என்று நிச்சயம் செய்து' என்று. 'ஏவமேதத்யதாத்த' என்று முன் சொல்லியதை ஒப்புக்கொண்டு 'த்ரஷ்டுமிச்சாமி தே ரூபமைஶ்வரம்' என்று வேறு வஸ்துவினுடையரூபவிசேஷத்தைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசையினால் சொல்லி இருப்பதைப்போலத் தோன்றுகிறதே ஆகையினால் அப்படிப்பட்ட பகவானை நேரில் பார்க்கவேண்டும் என்கிற ஆசையை உடைய, என்று, எப்படிச் சொல்லப்படுகிறது, என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்.—'அப்படியே' என்று ஆரம்பித்து. அப்படியே என்பதற்குக் கீழ் கேட்ட மாதிரியே என்று அர்த்தம். இத்தையேவிவரிக்கிறார்—'ஸர்வாஶ்சர்ய' என்று ஆரம்பித்து. 'அஹம்ஸர்வஸ்ய ப்ரபவ:' என்பது முதலாக 'விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நம் ஏகாம்ஶேந ஸ்திதோ ஜகத்' என்பது வரையிலும் சொல்லப்பட்டஅர்த்தம் ஒருவித விசேஷமான விக்ரஹத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது என்றல்லவோ ஸ்பஷ்டமாகத் தோன்றுகிறது, என்று தாத்பர்யம்.

பா-அ] அர்ஜுந உவாச—அர்ஜுனன் சொன்னான்.

மதநுக்ரஹாய பரமம் குஹ்யமத்யாத்மஸம்ஜ்ஞிதம் |
யத்த்வயோக்தம் வசஸ்தேந மோஹோऽயம் விகதோ மம || 1

ப - ரை] மதநுக்ரஹாய - என்னை அனுக்கிரஹிப்பதற்காக, பரமம் - உத்தமமான, குஹ்யம் - ரஹஸ்யமாகிய, அத்யாத்மஸம்ஜ்ஞிதம் - ஆத்மாவைப்பற்றியது, என்று பெயரை உடைய, யத் - எந்த, வச:- வார்த்தை- த்வயா உன்னால், உக்தம் - சொல்லப்பட்டதோ, தேந - அதினால், அயம் இந்த, மம - என்னுடைய, மோஹ: - அஜ்ஞானம், விகத: - நீங்கிற்று. 1

பா] தேஹமே ஆத்மா என்கிற அபிமானமாகிய அஜ்ஞானத்தினால், மயக்கப்பட்டிருக்கிற என்னை அனுக்கிரஹிப்பதாகிய ஒருப்ரயோஜனத்திற்காக

தா] இவ்விடத்தில் நேராகப்பார்க்க வேண்டும் என்று ப்ரார்த்திப்பதற்காக "மதநுக்ரஹாய" என்று ஆரம்பித்து மூன்று ஶ்லோகங்களினால் தான் க்ருதஜ்ஞனாக இருப்பதையும், ஆஸ்திகனாக இருப்பதையும், பக்தியை உடையவனாக இருப்பதையும் காட்டுகிறான். அதில் முதல் ஶ்லோகத்தினால் அத்தியாத்ம என்னும் பதத்தின் ஸ்வாரஸ்யத்தினாலும், 'ஸவாத்ய' என்கிற ஶ்லோகத்தினால் ஏழாவது முதலான அத்தியாயங்களின் அர்த்தங்களைத் தனித்துச்சொல்லி இருக்கிறபடியினாலும், ஆத்மாவின் உண்மையான ஸ்வபாவத்தையும் அதைப்பார்ப்பதற்குஉபாயத்தைக்கேட்டதினுடையவும் அதின்ப்ரயோஜனத்தினுடையவும் அனுவாதம் செய்யப்படுகிறது. என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'தேஹமே ஆத்மா' என்று ஆரம்பித்து. "மோஹ:, விகத:' என்று மேலே சொல்லி இருப்பதினால் "மம" என்பதினால், மோஹத்தை அடைந்திருந்த ஸ்வரூபம் சொல்லப்படுகிறது. என்கிற அபிப்ராயத்தினால், 'மயக்கப்பட்டிருக்கிற' என்கிற வரையில் சொல்லப்பட்டது. ' மதநுக்ரஹாய'' என்பதினால், பகவானால் இதுவரையிலும் அடையப்படாததும் இனி அடையவேண்டியதுமாகியப் பிரயோஜனம் வேறொன்றுமில்லை. என்பது அபிப்ராயமாகக் கொள்ளப்பட்டது. என்று சொல்லுகிறார்—என்னை அனுக்கிரஹிப்பதாகிய, ஒரு ப்ரயோஜனத்திற்காக' என்று. யுத்தத்தில் உத்ஸாஹத்தை உண்டுபண்ணுவதற்காக மாத்திரம் சொல்லப்பட்டது, என்கிற ஸந்தேஹமும் இத்தால் விலக்கப்பட்டது. 'பரமம்' என்கிற பதத்தோடுசேர்ந்த 'குஹ்யம்' என்கிற பதத்தினால் "மௌநமேவாஸ்மி குஹ்யாநாம்" என்று கீழே சொன்ன குஹ்யம் சொல்லப்படுகிறது' என்கிற ப்ரமத்தை விலக்குவ

உத்தமமான ரஹஸ்யமான ஆத்மாவின் விஷயத்தில் சொல்லவேண்டியதாகிய, ‘நத்வேவாஹம் ஜாது நாஸம்’ என்று ஆரம்பித்து ‘தஸ்மாத்யோகீ பவார்ஜுந’ என்கிற வரையில் எந்த வார்த்தை உம்மால் சொல்லப்பட்டதோ அதினால் இந்த என்னுடைய ஆத்மாவைப்பற்றிய அஜ்ஞானமெல்லாம் வெகு தூரத்தில் தள்ளப்பட்டது. 1

பா] அப்படியே.

பவாப்யயௌ ஹி பூதாநாம் ச்ருதௌ விஸ்தரஶோ மயா |
த்வத்த꞉ கமலபத்ராக்ஷ மாஹாத்ம்யமபி சாவ்யயம் || 2

ப - ரை] கமலபத்ராக்ஷ - தாமரைப்புஷ்பங்களின் இதழ்களைப்போன்ற கண்களை உடைய க்ருஷ்ண, பூதாநாம் - எல்லாப் பிராணிகளுக்கும், த்வத்த꞉ - உம்மிடத்திலிருந்து, பவாப்யயௌ - உத்பத்தியும் லயமும், மயா - என்னால், விஸ்தரஶ꞉ - விஸ்தாரமாக, ச்ருதௌ ஹி - கேட்கப்பட்டதுகள் அல்லவோ, அவ்யயம் - அழிவில்லாத, மாஹாத்ம்யமபி - (உம்முடைய) மஹிமையும், (கேட்கப்பட்டது). 2

தற்காக ‘ரஹஸ்யமான’ என்று வ்யாக்யானம் செய்யப்பட்டது. மிகவும் ரஹஸ்யமாகிய பக்தியோகத்தைச் சேர்ந்ததாகையினால் பரமம் என்கிற விசேஷணம் சொல்லப்பட்டது என்பது, ஆதரத்துடன் ‘உத்தமமான’ என்று வ்யாக்யானம் செய்ததினால் காட்டப்பட்டது. ஆத்மாவைப்பற்றிச் சொல்லுகிறபடியினால் வார்த்தை அத்யாத்மமென்னப்படுகிறது. என்று அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு ‘ஆத்மாவின் விஷயத்தில் சொல்லவேண்டியதாகிய’ என்று சொல்லப்பட்டது. உபோத்காதத்தைவிடவும், நடு ஆறு அத்தியாயங்களைப் பிரஸ்தாவிக்கிற ஶ்லோகங்களை விடவும், தனியாகப் பிரித்து அத்யாத்மம் என்பதினால் அனுவாதம் செய்யப்படுகிற ஜீவாத்மாவைப்பற்றிச் சொல்லுகிற பாகத்தைச் சொல்லுகிறார்—‘நத்வேவாஹம்’ என்று ஆரம்பித்து. ‘அத்யாத்மஸம்ஜ்ஞிதம்’ என்பதை அனுஸரித்து ‘அயம்’ (இந்த) என்று நேராகச் சொல்லி இருப்பதின் அபிப்ராயத்தில் ஏற்பட்ட அர்த்தம், என்னுடைய ஆத்மாவைப்பற்றிய என்று சொல்லப்பட்டது. ‘வி’ என்னும் உபஸர்க்கத்தோடு சேர்ந்த ‘கத꞉’ என்னும்தாதுவினால் வாஸனையுடனும் மிகுதி இல்லாமல் நாஶம் அடைந்தது என்று சொல்லப்படுகிறது, என்று காட்டுவதற்காக, ‘எல்லாம்’ என்னும் பதம். ‘வெகு தூரத்தில் தள்ளப்பட்டது’ என்பதற்கு வாஸனையும் நீக்கப்பட்டபடியினால் மறுபடியும் உண்டாகாமல் இருக்கும்படி நாஶம் செய்யப்பட்டது. என்று அர்த்தம். 1

பா] அப்படியே ஏழாவது அத்யாயம் முதல் பத்தாவது அத்யாயம்வரையிலும் உம்மைத் தவிர மற்றெல்லாப் பிராணிகளுக்கும் பரமாத்மாவாகிய உம்மிடத்திலிருந்து உத்பத்தியும் ப்ரளயமும் (உண்டாகின்றன) என்று விஸ்தாரமாய்என்னால்கேட்கப்பட்டது. தாமரஸப்புஷ்பங்களின்இதழ்கள்

தா] ‘பவாப்யயௌஹி’ என்பது ப்ரஸ்தாவிக்கப்போகிறதற்குக் காரணம் என்கிற அர்த்தத்தை விலக்கி வேறு அர்த்தத்தைச் சொல்லுகிறது என்று தெரிவிப்பதற்காகச் சொல்லுகிறார்—‘அப்படியே’ என்று. ஏழாவது அத்தியாயம் முதல் பத்தாவது அத்தியாயம் வரையில் என்று பாஷ்யகாரர் தம்மால் நினைக்கப்பட்ட அத்தியாயத்தைச் சொல்லிஇருக்கிறபடியினால், அவ்விடத்தில் இருக்கும் வார்த்தைகளைக் குறிக்கிறார். பஹுவசனத்திற்குச் சுருக்கமில்லாமையினால் ஏற்பட்டதும் ‘அஹம் க்ருத்ஸ்நஸ்ய’ என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்டதுமான அர்த்தத்தைச் சொல்லுகிறார்—‘உம்மைத்தவிர’ என்று ஆரம்பித்து. மனுஷ்யன் என்கிற ப்ரமம் நிவ்ருத்தியான அர்ஜுனனுடைய வார்த்தை யாகையினால் த்வத்தஃ என்னும் பதத்தினால் உத்பத்தி அடைவதற்கும், ப்ரளயம் அடைவதற்கும் காரணமாகிய ஸ்வபாவத்தை உடையவனாக இருக்கை சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால்—‘பரமாத்மாவாகிய’ என்று சொல்லப்பட்டது. ‘அப்யயஃ’ என்னும் பதம் ‘த்வத்தஃ’ என்கிற இடத்தில் இருக்கும் ஐந்தாம் வேற்றுமையோடு பொருந்தாதாகையினால் ‘பவாப்யயஃ’ என்கிற பதத்தினால் ஸம்ஸாரமும் மோக்ஷமும் சொல்லப்படுகின்றன, என்கிற ப்ரமம் உண்டாகு மாகையினால அதை விலக்குவதற்காக உத்பத்தியும் ப்ரளயமும் என்று சொல்லப்பட்டது. நிமித்த காரணம் உபாதான காரணம் இரண்டுக்கும் பொதுவாகிய காரணம் என்னும் அர்த்தத்தை மாத்திரம் இந்த ஐந்தாம் வேற்றுமை சொல்லுகிற தாகையினால் ‘அப்யயஃ’ என்னும் பதம் அத்தோடு அன்வயிக்கும். உம்மிடத்திலிருந்து கேட்கப்பட்டது என்று அன்வயம் சொல்வதோ வெனில் அல்பமான ப்ரயோஜனத்தை உடையது, என்று தாத்பர்யம். ‘கமலபத்ராக்ஷ’ என்பதினால் அந்தராதித்ய வித்யை முதலிய இடங்களில் சொல்லபபட்ட தாமரைப் பூக்களைப்போன்ற கண்களை உடைய ப்ரக்ருதியின் விகாரமில்லாத திவ்ய விக்ரஹத்தை உடையவனாக இருக்கை இந்த அவதாரத்திலும் ஸ்பஷ்டமாகக் காணப்படுகிறது என்று காட்டப்பட்டது. தாமரைப்பூக்களைப் போன்ற கண்களை உடைய புருஷனுக்கே எல்லா லோகங்களுக்கும் எல்லா இஷ்டங்களுக்கும் ஈச்வரனாக இருக்கை முதலிய அழிவில்லாத

போன்ற கண்களை உடைய க்ருஷ்ண உம்முடையதாகிய அழிவில்லாத சேதநாசேதனங்களாகிய எல்லா வஸ்துக்களுக்கும் ஶேஷியாக இருக்கை ஞானம் பலம் முதலிய கல்யாணகுணங்களின் கூட்டங்களினால் நீரே மேலானவர் என்பதும், எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருக்கை, நினைத்தல், இமைக்கொட்டுதல் முதலிய எல்லா வ்யாபாரங்களிலும் நீரோ ப்ரவர்த்திப்பிக்கிறீர் என்பதும்,என்றிவை முதலிய அளவில்லாதமஹிமையும் கேட்கப்பட்டது. ‘ஹி’ என்னும் பதம் மேல் சொல்லப்போகிற பார்க்க வேண்டுமே என்கிற ஆஶையைக் காட்டுகிறது. 2

𑌏𑌵𑌮𑍇𑌤𑌦𑍍𑌯𑌥𑌾𑌤𑍍𑌥 𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 ।
𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌰𑍂𑌪𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍁𑌰𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 ॥ 3

ப - ரை] 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 பரமேஶ்வரனாகிய, 𑌪𑍁𑌰𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 புருஷஶ்ரேஷ்டனாகிய க்ருஷ்ண, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 உம்மை, 𑌤𑍍𑌵𑌂 நீர், 𑌯𑌥𑌾 எப்படி, 𑌆𑌤𑍍𑌥 சொன்னீரோ, 𑌏𑌤𑌤𑍍 இது, 𑌏𑌵𑌂 இப்படியே, 𑌤𑍇 உம்முடைய 𑌐𑌶𑍍𑌵𑌰𑌂 பகவானுடையதாகிய, 𑌰𑍂𑌪𑌂 ரூபத்தை, 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 பார்ப்பதற்கு, 𑌇𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 ஆஶைப்படுகிறேன், 3

பா] ஓ பரமேஶ்வரனாகிய க்ருஷ்ண நீர் உம்மை எப்படிச் சொல்லுகிறீ

மஹிமை, ஶ்ருதியில் அந்த வித்யையைச் சொல்லுமிடத்தில் சொல்லப்படுகிறது. மஹிமை என்கிற இடத்தில், ‘𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑌃’ என்பதை ‘𑌤𑌵’ (உம்முடைய) என்று மாற்றிச்சேர்த்துக் கொள்ளவேண்டியது. ‘‘𑌸𑌤𑍍𑌯’’ என்னும்பதத்தினால்காலத்தினாலும்,விஷயங்களினாலும்கணக்கினாலும், மேன்மையினாலும், தனக்கு மேற்பட்டவனில்லை என்று முன்பு சொன்னதே இவ்விடத்திலும் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால்— ‘அழிவில்லாத’ என்று ஆரம்பித்து,அளவில்லாத’ என்கிற வரையிலும் சொல்லப்பட்டது. ‘‘𑌹𑍃𑌦𑍀𑌰𑌾𑌵𑌃’ 𑌅𑌤𑌃 𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍, 𑌅𑌖𑌿𑌲𑌂, 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌂’’ என்பவைமுதலியவைகளினால் இந்த ஶேஷியாக இருக்கை முதலியது முன்புவிவரமாகச் சொல்லப்பட்டது. ‘‘ஹி’’ என்னும் பதம் மேலே சொல்லப்போகிற பார்க்கவேண்டுமே என்கிற ஆசையைக்காட்டுகிறது, என்பதற்குக் காரணமாயிருக்கை ப்ரஸித்தி முதலிய அர்த்தங்கள் இங்கே பொருந்தாதாகையினால் ப்ரகிருதத்தில் பொருந்தக்கூடிய அர்த்தமிதுவே என்று தாத்பர்யம். 2

தா] *பரமேஶ்வர, என்பதினால், வார்த்தையின் அர்த்தத்தை நம்புவதற்குக் காரணமாகிய உண்மையைக் கண்டறிகையும், அறிந்தபடி சொல்லுகையும், முதலியது சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—‘ஓ பரமேஶ்வரனாகிய க்ருஷ்ண’ என்று ஆரம்*

ரோ, இது இப்படியே தான் என்று நிஶ்சயிக்கப்பட்டது. ஆஶ்ரயித்தவர்களிடத்தில் ப்ரீதிக்கு ஸமுத்திரமாகிய க்ருஷ்ண உமக்கே அஸாதாரணமாயுள்ள, எல்லாவற்றையும் நியமனம் செய்வதிலும் காப்பதிலும், ஸ்ருஷ்டிப்பதிலும், ஸம்ஹாரம் செய்வதிலும், தாங்கிக்கொண்டிருப்பதிலும், கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாக இருப்பதிலும், எல்லாவற்றையும் விடமேலானதாக இருப்பதிலும் மற்றெல்லாவற்றையும் விடவேறு

பித்து. இத்தைப் பிரகாஶப்படுத்துவதற்காகத்தான் ஒப்புக்கொண்டது மாத்திரம் அர்த்தம் என்பதை விலக்கிக் கேட்டது உறுதியென்று அறியப்பட்டது, என்பதற்காகச் சொல்லுகிறார்—'இது இப்படியே என்று நிஶ்சயிக்கப்பட்டது' என்று. ஆஶ்ரயித்த ஜனங்களிடத்தில் தோஷங்களைப் பார்க்கிறவர்கள் தாழ்ந்த புருஷர்கள் என்றல்லவோ சொல்லுகிறார்கள். ஆகையினால் இவ்விடத்தில் பார்க்கவேண்டும் என்கிற ஆஶையை உடைய தன்னிடத்தில் இருக்கும் தோஷங்களை அனுதாபம் செய்வதாகிய மேலான புருஷத்தன்மை 'புருஷோத்தம' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'ஆஶ்ரிதர்களிடத்தில் ப்ரீதிக்கு ஸமுத்திரமாகிய' என்று சொல்லப்பட்டது. 'ஶ்ரு, ஸ்ராதி' அதிகமாகக் கொடுக்கிறான், என்கிற வ்யுத்பத்தி இவ்விடத்தில் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. 'ஸுவிஸ்ரம்ஹிதஃ' என்று சொல்லப்போகிறது, ஞாபகம் செய்யப்பட்டதாகவுமாம். இப்படி பரத்வமும், ஸௌலப்யமும், இந்த இரண்டுபெயர்களினாலும் சொல்லப்பட்டன. 'தே' என்று சொல்லி இருந்தபோதிலும் 'ஐஶ்வரம்' என்றுசொல்லி இருப்பது, ஈஶ்வரனாக இருக்கும் ஸ்வபாவத்தை ப்ரகாஶப்படுத்தக்கூடியவை என்பதைத் தெரிவிக்கிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'உமக்கு அஸாதாரணமாகிய' என்றுசொல்லப்பட்டது. இத்தையேமுன்பு விஸ்தாரமாகச் சொன்னபடி விவரித்திருக்கிறது, 'எல்லாவற்றையும்' என்பதுமுதல். இப்படிப்பட்ட ஸ்வபாவங்களை உடையவன் அல்லவோ ஈஶ்வரன் என்கிற பதத்திற்கு அர்த்தம். என்று தாத்பர்யம். நியமனம் செய்வது முதலியவைகளில் ரூபம் இருந்து கொண்டிருக்கையாவது. அதற்குத்தகுந்த குணம் உத்ஸாஹம் வ்யாபாரம், இவைகளினால்அவைகளைப் பிரகாசம் செய்கை. அன்றிக்கே நியமனம் செய்வதில் இருத்தலாவது "யோஹம் கௌஶேயவ்யுத்ஸர்க: ஸ ஜிஹ்வேதரே" என்கிற ந்யாயத்தினால் தன்னைப்பார்த்த மாத்திரத்தினாலே விரோதமான எண்ணத்தை நீக்கி நல்ல காரியத்தில் பிரவ்ருத்தி செய்வதற்குக் காரணமாக இருக்கையினால், கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாக இருப்ப

பட்டதாக இருப்பதிலும் இருந்து கொண்டிருக்கிற ரூபத்தை நேராகப் பார்ப்பதற்கு ஆசைப்படுகிறேன், 3

தில் இருத்தலாவது அவதாரங்களில் இருந்தும் விக்கிரஹங்களைப் போல அறியாமை முதலியவைகளை அபிநயம் செய்யத்தகாமை. காப்பதில் இருத்தலாவது. ஸத்வகுணத்தை உண்டாக்குதல் முதலியவைகளிஞல். ஸ்ருஷ்டித்தலில் இருத்தலாவது தன்னுடைய அவயவங்களில் இருந்து ப்ரும்மா ருத்திரன் முதலியவர்களையும் உண்டாக்குகிறபடியிஞல். ஸம்ஹாரம் செய்வதில் இருத்தலாது மேலே சொல்லப்போகிற விழுங்குதல் முதலியவற்றால் தாங்கிக்கொண்டிருப்பதில் இருத்தலாவது "தத்ரைகஸ்தம்" என்பவைகளிஞல் மேலே வியக்தமாகப்போகிறது. உயர்ந்தவர்களாக ஸந்தேஹிக்கப்பட்ட ப்ரும்மா ருத்திரன் முதலியவர்கள் தன்னுடைய ஒரு பாகத்தில் இருக்கிறார்கள் என்பதாக "ப்ரஹ்மாணமீஶம்" என்று ஆரம்பித்து மேலே சொல்லப்போகிற படியிஞல் எல்லாவற்றையும் விட மேலானதாக இருப்பதில் இருத்தலும் உசிதம்தான். எல்லாவற்றையும்விட வேறு பட்டதாக இருப்பதிலும் என்பதோவெனில் கீழ்ச்சொல்லிய எல்லாவற்றையும் சேர்த்து முடித்திருக்கிறது. அவைகளிஞல் ஏற்பட்ட அர்த்தமாகவுமாம். பரமேஸ்வர, புருஷோத்தம என்று கூப்பிட்டதிஞல் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லிஇருக்கிறதாகவுமாம். "ஸர்வைஶ்வர்யம்" என்று ஒன்பதாவது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டதும், தன்ஞல் பொதுவாகத்தெரிந்து கொள்ளப்பட்டதுமாகிய அர்த்தத்தைப்பார்க்க வேண்டும் என்று ப்ரார்த்தித்திருப்பதை அனுஸரித்து "ரூபமைஶ்வரம்" என்று சொல்லி இருக்கிறது. ரூபம் என்னும் பதம் ஸ்வரூபத்தைச்சொல்லுவதாக ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் ஐஸ்வரம் என்கிற ஒன்று மாத்திரம் ஔபசாரிகம். மற்றதெல்லாம் முக்கியம். ஸ்வரூபத்தைச் சேர்ந்ததாகையிஞல் விக்ரஹத்தைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசையும் உள்ளடங்கி இருக்கிறது. ரூபம் என்றும் பதம் ஸ்வரூபம் ரூபம் முதலிய அஸாதாரணமான எல்லா ஸ்வபாவங்களையும் சொல்லுகிறதாகவுமாம் அப்பொழுது ரூபம் என்பதற்கு ஸ்வபாவத்தை என்று அர்த்தம். த்ருஷ்டும் என்று சொல்லி இருப்பதில் பார்ப்பதைப்போல விஶதமாகத் தெரிவதிலும், பார்ப்பதென்கிற பதம் ப்ரயோகிக்கப்படுகிறபடியிஞல் அதை விலக்குவதற்காகவும், கண்ணிஞல் கண்டறிவது மாத்திரத்தைச் சொல்லுகிறது, என்பதை விலக்குவதற்காகவும், 'நேராகப் பார்ப்பதற்கு' என்று சொல்லப்பட்டது. 3

𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌯𑌦𑌿 𑌤𑌚𑍍𑌛𑌕𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌭𑍋 ।
𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰 𑌤𑌤𑍋 𑌮𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥ 4

ப - ரை] 𑌪𑍍𑌰𑌭𑍋 - ப்ரபுவாயும், 𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰 - கல்யாணகுணங்களை உடையவனாகிய க்ருஷ்ண, 𑌤𑌤𑍍 - அந்த ரூபமானது, 𑌮𑌯𑌾 - என்னால், 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 - பார்ப்பதற்கு, 𑌶𑌕𑍍𑌯𑌂 - முடியும், 𑌇𑌤𑌿 – என்று, 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌯𑌦𑌿 – எண்ணுகிறாயே யானால், 𑌤𑌤𑌃 - அதினால், 𑌤𑍍𑌵𑌂 - நீ, 𑌮𑍇 - எனக்கு, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 - உம்மை, 𑌅𑌵𑍍𑌯𑌯𑌂 - முழுமையும், பூர்ணமாய் இருக்கும்படி, 𑌦𑌰𑍍𑌶𑌯 - காட்டு. 4

பா] அந்த எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கிறதாயும், எல்லாவற்றையும் நியமிப்பதாயும், எல்லாவற்றிற்கும் ஆதாரமாயும் இருக்கிற உம்முடையரூபம் என்னால் பார்க்கமுடியும் என்று எண்ணுகிறாயேயானால், பிறகு யோகங்களுக்கு ஈஸ்வரனாகிய க்ருஷ்ண, யோகமாவது ஜ்ஞானம்முதலிய கல்யாணகுணங்களின் ஸம்பந்தம். '𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌂' என்றல்லவோ மேலே சொல்லப்போகிறார்—உம்மைத் தவிர ஒருவருக்கும் உண்டாகாத,

---

தா] 'எல்லாவற்றையும்' என்று ஆரம்பித்து "𑌤𑌤𑍍" என்னும் பதத்தினால் சொல்லப்பட்ட கேட்கப்பட்ட ஸ்வபாவங்களைச்சொல்லி இருக்கிறது. இவ்விடத்திலும் ரூபத்தைச்சொல்லுகிறதாக இருந்தால் முக்யமாக இருக்கிறது ரூபத்தைச் சொல்லுவதாக இருந்தாலும் பொதுவாக ஸ்வபாவத்தை மாத்திரம்சொல்லுவதாக இருந்தாலும்முன்போலவே அர்த்தம் சொல்லிக்கொள்ளவேண்டியது. 'யோகமாவது ஜ்ஞானம் முதலிய கல்யாண குணங்களின் ஸம்பந்தம்' என்பதற்கு இவ்விடத்தில் அணிமா முதலிய ஐஸ்வர்யங்களை அடைந்திருக்கும் ஸக்தியும் குணங்களுக்குள் சேர்ந்தது. யோகத்தை நிறைவேற்றி வைப்பது முதலியது மாத்திரமோவெனில் பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுகிற ரூபத்தைச்சேர்ந்ததல்லாமையினால் இங்கே சொல்லப்படவில்லை, என்று தாத்பர்யம். மேலே காட்டப்போகிற ரூபமல்லவோ இவ்விடத்தில் பார்க்கவேண்டும்என்று ஆசைப்படப்பட்டது. அர்ஜுனனுக்குஅஷ்டாங்கயோகம் முதலிய வேறு வஸ்துக்கள்காட்டப்படவில்லை அல்லவா? யோகஎன்னும் பதமும் மேலே சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'𑌪𑌶𑍍𑌯' என்று ஆரம்பித்து. ப்ரபோ என்னும் பதத்தினால்,நீர் நினைத்தீரேயானால் உமக்குச் செய்யமுடியாத தொன்றுமில்லை, என்று அபிப்ராயம். விசேஷமான குணங்களை உடையவராக இருக்கையைக் காட்டுகிறார்—'உம்மைத்தவிர' என்று ஆரம்பித்து. அன்றிக்

ஜ்ஞானம் பலம், ஐஶ்வர்யம் வீர்யம் ஶக்தி தேஜஸ்ஸு இவைகளுக்கு இருப்பிடமாகிய க்ருஷ்ணா, உம்மை முழுமையும் எனக்குக் காட்டும் என்று அர்த்தம். 4

பா] இப்படி ஸந்தோஷத்தை உடையவனாய் ப்ரீதியினால் தழுதழுத்த குரலை உடையவனாகிய அர்ஜுனனால் ப்ரார்த்திக்கப்பட்ட பகவான் சொன்னார்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚:—ஸ்ரீபகவான் சொன்னார்.

𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌶𑌤𑌶𑍋𑌽𑌥 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 ।
𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌕𑍃𑌤𑍀𑌨𑌿 𑌚 ॥ 5

ப-தை] 𑌪𑌾𑌰𑍍𑌥 ஓ அர்ஜுனா, 𑌶𑌤𑌶𑌃 நூறுவிதமாகவும், 𑌅𑌥 அன்றிக்கே, 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 ஆயிரம் விதமாகவும், 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 அநேக விதங்களாயுமிருக்கிற, 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 ப்ரக்ருதிஸம்பந்தமில்லாதவைகளாகவுமிருக்கிற, 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌕𑍃𑌤𑍀𑌨𑌿 𑌚 அனேக விதங்களான வர்ணங்களையும் ஆகாரங்களையும் உடையவைகளாயுமிருக்கிற, 𑌮𑍇 என்னுடைய, 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 ஆகாரங்களை, 𑌪𑌶𑍍𑌯 பார். 5

க்கே ‘𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰’ என்னும் பதத்தினால் தாத்பர்யமாகக் கொள்ளப்பட்ட அர்த்தத்தைச் சொல்லி இருக்கிறதாகவுமாம் ‘𑌅𑌶𑍍𑌵𑌪𑌤𑌿𑌃’ (குதிரைகளுக்கு எஜமானன்) ‘𑌧𑌨𑌪𑌤𑌿𑌃’ (பணங்களை உடையவன்) என்பவைகளைப்போல குணங்கள் அதிகமாக இருப்பதினாலாவது, குணங்களையும் நியமிப்பதினாலாவது. ‘𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰’ என்னும்பதம் சொல்லிஇருக்கிறது, என்று தாத்பர்யம் ‘𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂’(உன்னை என்பதற்கு, ஆத்மா என்னும் பதம் வேறு அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பது யுக்தமல்ல. ‘‘𑌦𑍍𑌰°’’ என்று மேலே சொல்லப்போகிறார் என்று தாத்பர்யம். ‘𑌅𑌵𑍍𑌯𑌯𑌃’ என்னும் பதம் ப்ரயோஜனமற்றது, என்கிற ஆக்ஷேபத்தை விலக்குவதற்காகவும், அழியக்கூடிய ப்ரபஞ்சமயமாகிய ரூபத்தைக்காட்டினதற்கு விரோதத்தைப் பரிஹரிப்பதற்காகவும், விஶேஷமாய்ப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டவனுக்கு வேண்டிய அர்த்தத்தைச் சொல்லுகிறது, என்று காட்டுகிறார்—அதினால் என்ன ஏற்பட்டது என்னில் சொல்லுகிறார்—‘உம்மைமுழுமையும்’ என்று. எல்லாக் குணங்கள், விபூதிகள், விக்ரஹங்கள் முதலியவைகளோடுகூடிய ரூபத்தை, என்று அர்த்தம். 4

பா] எல்லா வஸ்துக்களுக்கும் ஆதாரமாகிய என்னுடைய ரூபத்தைப் பார். மேலும் நூறுகளாகவும், ஆயிரங்களாகவும், அநேக விதங்களாகவும் ப்ரக்ருதி ஸம்பந்தமில்லா தவைகளாகவும், வெளுப்பு கறுப்பு முதலிய,

---

தா] பகவான்தன்னைக் காட்டுவதற்குக் காரணமாயும் கேட்டிருப்பதின் ப்ரகாரத்தினால் ஏற்பட்டிருப்பது மாகிய அர்ஜுனனுடைய அவஸ்தை யைக் காட்டிக்கொண்டு "பஶ்ய" என்றிவை முதலிய பகவானுடைய வாக்யத்திற்கு ஸங்கதி சொல்லுகிறார்—இப்படி, என்று ஆரம்பித்து. மேல்சொல்லப்போகிற விதத்தை நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்— 'எல்லா வஸ்த்துக்களுக்கும் ஆதாரமாகிய' என்று. பஹுவ்ரீஹியாகையி னால் ஒன்றன் பாலாகச் சொல்லி இருக்கிறது. ஸூர்யமண்டலம் முதலிய எண்ணிறந்த ஸ்தானங்களை உடைய, என்று அர்த்தம் அன்றிக் கே ஆஶ்ரய என்னும் பதமானது. ஔபசாரிகமாக அடைந்திருக்கும் வஸ்துக்களைச் சொல்லுகிறதாகவுமாம். 'நூறுகளாகவும், ஆயிரங்களா கவும்' என்பதினால், "பரம், வ்யூஹம், விபவம், என்கிற பெயர்களினால் சேர்த்துச் சொல்லப்பட்ட எண்ணிறந்த ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத விக்ரஹங்களை உடையவனாக இருக்கை காட்டப்பட்டது. ஒரு ஸூர்ய மண்டலத்தின் நடுவில்இருக்கும் ரூபம் எதுவோ, அதைப்போன்ற எண் ணிறந்த ப்ரும்மாண்டங்களிலிருக்கும் ஸூர்ய மண்டலத்தில் இருக்கிற ரூபங்கள் எண்ணிறந்தவை. இப்படி ஸ்ரீவிஶ்வரூபம் முதலிய ரூபங்களி லும் கண்டுகொள்வது "ஒவ்வொரு வஸ்துக்களிலும்வியாபித்திருக்கிற ரூபத்தைஉடையவனாக ஆனான்," என்றஅர்த்தமுள்ளஶ்ருதியினாலும் இந்த அர்த்தம் சொல்லப்படுகிறது, என்று சிலர் சொல்லுகிறார்கள். எப்படியானால் பார்க்கப்போகிறாயோ அப்படிச் செய்கிறேன். என்கிற அபிப்ராயத்தினால் "பஶ்ய" என்று சொல்லி இருக்கிறது. "நாநா வியாநி" (அநேக விதங்களாக இருக்கிற) என்பதினால் தனித்தனியே ஆபரணங்கள், ஆயுதங்கள், அடையாளங்கள், கைகள், இவைகளின், எண்கள், முதலிய ஸ்வபாவங்களினால், எண்ணிறந்தவைகள் என்பது, இவ்விடத்தில்சொல்லப்படுகிறது, என்று சொலலுகிறார்—'அனேகவிதங் களாய் இருக்கிற' என்று. 'ப்ரகிருதிஸம்பந்தமில்லாத' என்பதற்கு, இவ் விடத்தில் திவ்ய என்னும் பதத்தினால் பரமபதத்தில் இருக்கிறது என் பது மாத்திரம். சொல்லப்படவில்லை. பூமி முதலிய இடங்களில் வியா பரித்து இருப்பதையும் சொல்லப்போகிறபடியினால். வஸ்துவின் வ்யத்யாஸமானது அவஶ்யம் சொல்லவேண்டியது, என்று தாத்பர்யம். வாஸுதேவன் முதலிய வ்யூஹங்கள் நான்கிலும் வெவ்வேறு யுகங்க ளிலும் வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கறுப்புமுதலிய ரூபங்கள் மாறுகிற

அனேக வர்ணங்களை உடையவைகளாகவும், அனேக ஆகாரங்களை உடையவைகளாகவும் இருக்கிற அவைகளைப்பார். 5

பஶ்யாதி³த்யாந் வஸூந் ருத்³ராநஶ்விநௌ மருதஸ்ததா² ।
ப³ஹூந்யத்³ருஷ்டபூர்வாணி பஶ்யாஶ்சர்யாணி பா⁴ரத ॥

ப - ரை] பா⁴ரத ஓ அர்ஜுன, ஆதி³த்யாந் ஸூர்யர்களையும், வஸூந் வஸுக்களையும், அஶ்விநௌ அஶ்வினீதேவதைகளையும், ததா² அப்படியே, மருத: மருத்துக்களையும், பஶ்ய பார், அத்³ருஷ்ட பூர்வாணி இதுவரையில் பார்க்கப்படாதவைகளும், ஆஶ்சர்யாணி ஆஶ்சர்யங்களாயுமிருக்கிற, ப³ஹூநி அனேகவஸ்துக்களை, பஶ்ய பார்,

பா] என்னுடைய ஒரு ரூபத்தில் பனிரண்டு ஸூர்யர்களையும், எட்டு வஸுக்களையும், பதினொரு ருத்திரர்களையும், இரண்டு அஶ்வினீ தேவதைகளையும், நாற்பத்தி ஒன்பது மருத்துக்களையும், பார். இது குறித்துக்காட்டுவேதற்காக, இந்த லோகத்தில் ப்ரத்யக்ஷத்தி

தா] படியினாலும், அந்தந்த அவதாரங்களினும் அந்தந்த பலத்தை விரும்புகிறவர்கள் த்யானம் செய்வதற்கு அனுகுணமாக அனேக வர்ணங்களை உடையவராக இருக்கையுமுண்டு "ஆக்ருதி" ஆகாரம் என்னும் பதத்தினால், தேவதைகள் மனுஷ்யர் ம்ருகங்கள் முதலியவைகளுக்கு ஸமமான வ்யத்யாஸமுள்ள அமைப்பு, சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அனேகவிதங்களான ஆகாரங்களை உடையவைகளாய்' இருக்கிற' என்று.

"ஶதஶோத² ஸஹஸ்ரஶ:" என்று தனக்கு அஸாதாரணங்களான எண்ணிறந்த ரூபங்களைக் கீழே ப்ரஸ்தாவித் திருந்தபோதிலும் இந்த ஸந்தர்ப்பத்தி லுபயோகப்பட வேண்டியதற் காகவும், இஹைகஸ்த²ம்" என்று ஒரு ரூபமே விசேஷமாகக் காட்டப்படப்போகிறது, என்பதையும், நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'என்னுடைய ஒரு ரூபத்தில்' என்று. "பஶ்யாதி³த்யாந்" என்று ஆரம்பித்து, தேவதைகளுக்குள் முக்யர்களான முப்பத்தி மூன்று தேவதைகள் முதலில் சொல்லப்படுகிறார்கள், என்கிற அபிப்ராயத்தினால், 'பனிரண்டு' என்பது முதலான கணக்குகளை விசேஷித்துக் காட்டி இருக்கிறது. மேலே சொல்லப்போகிறதை அநுஸரித்து, நம்மால் அறியப்பட்ட வஸ்துக்களுக்கு மாத்திரம் இருப்பிடம் என்பதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'இது குறித்து காட்டுவேதற்காக' என்று. அர்ஜுனனாலும் மற்றவர்களினாலும், கண்டறியப்படாத வஸ்துக்களை என்று சேர்

ஞல் பார்க்கப்பட்டவைகளும் ஶாஸ்திரங்களிஞல் அறியப்பட்ட வஸ்துக்களும் எவைகளோ, அவை எல்லாவற்றையும், மற்றும், எல்லா லோகங்களிலும், எல்லா ஶாஸ்திரங்களிலும் அறியப்படாதவையாகிய, அனேக ஆஶ்சர்யங்களையும் பார். 6

இஹைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்நம் பஶ்யாத்ய ஸசராசரம் |

மம தேஹே குடாகேஶ யச்சாந்யத்த்ரஷ்டுமிச்சஸி || 7

ப - ரை] குடாகேஶ சேம்பலை ஜயித்தவஞகிய அர்ஜுன, ஸசராசரம் ஜங்கமஸ்தாவரங்களோடுகூடிய, க்ருத்ஸ்நம் எல்லா, ஜகத் லோகத்தையும் அந்யத் வேறு, யத் எதை, த்ரஷ்டும் பார்ப்பதற்கு, இச்சஸி விரும்புகிருயோ, (அதையும்) இஹ இந்த மம என்னுடைய, தேஹே ஶரீரத்தில், ஏகஸ்தம் ஒருபாகத்தில் இருப்பதாக, அத்ய இப்பொழுது, பஶ்ய பார். 7

பா] இந்த என்னுடைய ஒரு ஶரீரத்தில் அதிலும் ஒரு பாகத்தில் இருக்

தா] த்துக்கொள்ளவேண்டியது. "அத்ருஷ்டபூர்வாணி" என்பது, முன்பு கேட்கப்படாத வஸ்துக்களையும் குறிக்கிறது. அன்றிக்கே அறியப்படாதவைகள் என்கிற காரணத்திஞல் பொதுவாகச் சேர்த்துச் சொல்லுகிறதாகவுமாம், என்கிற அபிப்ராயத்திஞல் சொல்லுகிருர்—'எல்லா ஶாஸ்திரங்களிலும்' என்று ஆரம்பித்து. இத்தால் இந்த்ரியங்களுக்குப் புலப்படாத வஸ்து ஶாஸ்திரத்திஞல் அறியப்பட்டபோதிலும் அதில், நேராகப்பார்ப்பதிஞலேயே தெரிந்து கொள்ளக்கூடிய விஶேஷங்கள் அனேகமிருக்கின்றன என்று காட்டப்பட்டது. 6

"இஹைகஸ்தம்" என்று ஒருமையாகச் சொல்லி இருக்கிறபடியிஞல், மேலே காட்டப்போகிற ஒரு ஶரீரம் சொல்லப்படுகிறது என்கிற அபிப்ராயத்திஞல் சொல்லுகிருர்—'இந்த என்னுடைய ஒரு ஶரீரத்தில்' என்று. ஒருமையாகச்சொல்லி இருப்பதிஞலும்மேலேகாட்டப்போகிற ஶரீரத்தைப்பற்றிச் சொல்லி இருக்கிறபடியிஞலும் ஒருஶரீரம் சொல்லப்படுகிறது, என்கிறது ஏற்பட்டபடியிஞல் "ஏகஸ்தம்" என்கிற பதத்திஞல் ஒரு பாகத்தில் இருக்கிறது, என்பதே சொல்லப்படுகிறது, ஒரு அவயவியின் அவயவங்களாக இருக்கிறது, என்று சிலர் சொன்ன அர்த்தமோவெனில், பகவானுடைய ஶரீரம் ப்ரக்ருதி ஸம்பந்தம் அற்றது, என்று ஸ்தாபித்திருக்கிறபடியிஞல் நிராகரிக்கப்பட்டது என்கிற அபிப்ராயத்திஞல் 'அதிலும் ஒருபாகத்தில் இருக்கிற' என்று சொல்லப்பட்டது. அன்றிக்கே எல்லா லோகமும் ஒன்றிலேயே இரு

கிற, ஜங்கமம், ஸ்தாவரம் இவைகளோடு கூடிய எல்லாலோகத்தையும் பார். இன்னும் எதைப்பார்க்க வேண்டும் என்று விரும்புகிறாயோ அதையும் இந்தஶரீரத்தின் ஒரு பாகத்திலே பார்.

𑌨 𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌶𑌕𑍍𑌯𑌸𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌨𑍇𑌨𑍈𑌵 𑌸𑍍𑌵𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌮𑌐𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥ 8

ப - ரை] 𑌅𑌨𑍇𑌨 இந்த, 𑌸𑍍𑌵𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍈𑌵 உன்னுடைய கண்ணினாலேயே, 𑌮𑌾𑌂 என்னை, 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 பார்ப்பதற்கு, 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌸𑍇 சக்தியுள்ளவனாகமாட்டாய், 𑌤𑍇 உனக்கு, 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 திவ்யமான, 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 கண்ணை, 𑌦𑌦𑌾𑌮𑌿 கொடுக்கிறேன், 𑌮𑍇 என்னுடைய, 𑌐𑌶𑍍𑌵𑌰𑌂 பகவானுக்கு அஸாதாரணமான, 𑌯𑍋𑌗𑌂 ஸ்வபாவத்தை, 𑌪𑌶𑍍𑌯 பார். 8

பா] நான் என்னுடைய சரீரத்தின் ஒருபாகத்தில் எல்லாலோகத்தையும் காட்டப்போகிறேன். நீயோவெனில் சிற்சில வஸ்துக்களை க்ரஹிக்கக் கூடியதும், கொஞ்சவஸ்துக்களை க்ரஹிக்கக்கூடியதுமாகிய ப்ரக்ருதி ஸம்பந்தமுள்ள இந்தக் கண்ணினால் அப்படிப்பட்டவனாகவும் மற்றெல்லா வஸ்துக்களையும்விட வேறு பட்டவனாகவும், அளவில்லாதவனாகவுமிருக்

தா] க்கிறது என்று சொல்லி இருப்பதினால் ஒருபாகத்தில் இருக்கிறது, என்பதும் ஏற்பட்டதாகவுமாம். "𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌦𑍍𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿" என்பதினால் பாண்டவர்கள் துர்யோதனாதிகள் இவர்களின் ஜயம் முதலியதும் சேர்த்துச சொல்லப்பட்டது. அதில் அதையும் என்று சேர்த்துச் சொல்லி இருப்பதினால் அதுவும் ஒரு ஶரீரத்தில ஒரு பாகத்திலேயே இருக்கிறது, என்று சொல்லுகிறார்—அதையும், என்று ஆரம்பித்து 7

"𑌨 𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌶𑌕𑍍𑌯𑌸𑍇" என்கிற இடத்திலிருக்கும் "𑌤𑍁" என்னும் பதத்தினால் குறிக்கப்பட்டதும், முன் ஶ்லோகத்தில் சொல்லப் பட்டதுமான சக்தி இல்லாமையின் காரணத்தை எடுத்துக்காட்டு கிறார்—'நான்' என்று ஆரம்பித்து. "𑌅𑌨𑍇𑌨𑍈𑌵" (இந்த) என்பதின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'சிற்சில' என்று ஆரம்பித்து. "𑌦𑌿𑌵𑍍𑌯𑌂" என்று சொல்லி இருப்பதற்கு எதிர்த்தட்டாகையினால், 'ப்ரக்ருதி ஸம்பந்தமுள்ள' என்று சொல்லப்பட்டது. (அப்படிப்பட்டவனாகவும்) என்பது முதலிய வாக்யங்களுக்கு "𑌮𑌾𑌂" (என்னை) என்பதினால் இவ்விடத்தில் விக்ரஹம் முதலியவைகளை உடையவனாக இருக்கை சொல லப்படுகிறது, என்று தாத்பர்யம். இவ்விடத்தில் திவ்ய என்னும் பதத்தினால் சொல்லப்படுகிற அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'ப்ரக்ருதி

கிற என்னைப்பார்க்கச் சக்தி உள்ளவனாகப் போகிறாயில்லை. உனக்கு ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாததும், என்னைப்பார்ப்பதற்கு ஸாதனமுமாகிய கண்ணைக்கொடுக்கிறேன் எனக்கே அஸாதாரணமான ஸ்வபாவத்தைப் பார். அதாவது என்னுடைய அளவில்லாத ஞானம் முதலியவைகளின் ஸம்பந்தத்தையும், அளவில்லாத விபூதி முதலியவைகளுடைய ஸம்பந்தத்தையும் பார், என்று அர்த்தம்.

ஸஞ்ஜய உவாச ஸஞ்சயர்சொன்னார்.

ஏவமுக்த்வா ததோ ராஜந் மஹாயோகேச்வரோ ஹரி: |
தர்சயாமாஸ பார்த்தாய பரமம் ரூபமைச்வரம் || 9

ப - ரை] ராஜந் ஓ த்ருதராஷ்ட்ர மஹாராஜனே, மஹாயோகேச்வர: பெரிய ஆஸ்சரியங்களுக்கெல்லாம் ஈச்வரனாகிய, ஹரி: பகவான், ஏவம் இந்தமாதிரி, உக்த்வா சொல்லி, தத:' பிறகு, பார்த்தாய அர்ஜுனனுக்கு, ஐச்வரம் பகவானுக்கு அஸாதாரணமாகிய, பரமம் உத்தமான, ரூபம் ரூபத்தை, தர்சயாமாஸ காட்டினார். 9

பா] இவ்விதமாகச்சொல்லி, ஸாரதியாக இருக்கிற அர்ஜுனனுடைய மாமன்குமாரராகியும், பெரிய ஆஸ்சரியங்களுக்கெல்லாம் ஈஸ்வரனாகியும்,

---

தா] ஸம்பந்தமில்லாததும்' என்று. 'என்னைப் பார்ப்பதற்கு ஸாதனமுமாகிய' என்று ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாமையினாலேற்பட்ட அர்த்தத்தைச் சொல்லி இருக்கிறது. ஐஸ்வரம், என்னும் பதத்தின் அபிப்ராயத்திலிருக்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'எனக்கே அஸாதாரணமாகிய' என்று. இந்த ஸந்தர்ப்பத்தினால் கிடைத்ததும் ஐஸ்வரம் என்னும் பதத்தினால் காட்டப்பட்டதுமாகிய யோகஎன்னும் பதத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'எண்ணிறந்த' என்று. ஈஸ்வரனாக இருக்கையாவது, எல்லாவற்றையும் நியமிக்கும் சக்தி, அதைச்சேர்ந்த யோகமாவது அப்படி நியமிக்கத் தகுந்தவையான குணங்களுடையவும், விபூதிகளுடையவும், ஸம்பந்தமே. கண் திவ்யமாகையினால் ஞானம்முதலிய குணங்களைப்பார்ப்பதும் பொருந்தும். மேலேயும் அளவில்லாத வீர்யத்தை உடையவனாக இருக்கை முதலிய குணங்களை உடையவனாகப் பார்க்கிறேன். என்று சொல்லப்போகிறானல்லவா, என்று தாத்பர்யம்.

"மஹாயோகேச்வரோஹரி:" என்பதை மறைக்கக் கூடியதும் முன்பு தெரிந்து கொள்ளப்பட்டதுமான ரூபத்தைச்சொல்லுகிறார்—'ஸாரதியாகஇருக்கிற அர்ஜுனனுக்கு மாமன் குமாரராகிய' என்று. இத்தால் திவ்ய ரூபத்தைப்பிரகாசம் செய்வதற்குக் காரணமாகிய ப்ரீதி

பரப்பிரும்மமாகியு மிருக்கிற நாராயணன், உத்தமமாகியும் தனக்கே அஸாதாரணமாகியுமிருக்கிற ரூபத்தை, அத்தையாகிய குந்தியின் குமாரனாகிய அர்ஜுனனுக்குக்காட்டினார் அந்த ரூபம் அநேக விதங்களாயும் விசித்

யும் காட்டப்பட்டது. "மஹா" என்கிற விசேஷணமிருப்பதினால் யோகம் என்பது ஆச்சரியம் தான் என்றும், 'மஹா (பெரிய) என்பதை ஈச்வரனுக்கு விசேஷணமாகச் சொல்லுவதை விட யோக என்பதற்கு விசேஷணமாகச் சொல்லுவதே இவ்விடத்தில் விசேஷம்,' என்றும் அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'பெரிய ஆச்சரியங்களுக்கு' என்று. மற்றவர்களிடத்தில் ஆச்சரியங்களின ஸம்பந்தமிருப்பது இவனுக்கு அதீனப்பட்டது என்பது, 'ஈச்வரனாகிய' என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது. "மஹாயோகேச்வர:, ஹரி:" என்கிற இரண்டு பதங்களினாலும் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்ட பொதுவாயும் விசேஷமாகியுமுள்ள அர்த்தத்தைக் காட்டுகிறார்—'பரப்பிரும்மமாகிய நாராயணன்' என்று 'ஹரிர்யோக ஐச்வரம் பரமம் ரூபமைச்வரம்' என்கிற இரண்டும் அதிகாரம் வ்யத்யாஸமில்லாமல் ஸமீபத்திலேயே சொல்லி இருப்பதினால் ஒரே அர்த்தத்தைச்சொல்லுகின்றன. 'ஐச்வரம் ரூபம் தர்சயாமாஸ' (ஈச்வரனுடையதாகிய ரூபத்தைக்காட்டினார்) என்று சொல்லி இருப்பதினால் தன்னைத்தவிர வேறொருவருடையரூபத்தைக்காட்டினார் என்று அர்த்தம், என்கிற ப்ரமம் உண்டாகும், ஆகையினால் அதை விலக்குவதற்காகத் 'தனக்கே அஸாதாரணமான' என்று சொல்லப்பட்டது. ரூப என்னும் பதம் இவ்விடத்திலும் தன்னைச்சேர்ந்த எல்லா ஸ்வபாவங்களோடும் கூடிய ரூபத்தைச்சொல்லுகிறது, என்றாவது, அவைகளைப் பிரகாசம் செய்யக்கூடிய விக்ரஹத்தைச சொல்லுகிறது, என்றாவது, ஸ்வரூபம் முதலிய தனக்கே அஸாதாரணங்களாகிய எல்லா ஸ்வபாவங்களையும் சொல்லுகிறது, என்றாவது, அறிந்துகொள்ள வேண்டியது. இவ்விடத்தில் "பார்த்தாய" என்னும் பதத்தினால் தன்னுடைய ஸ்வரூபத்தைக்காட்டுவதற்காக ப்ரீதிக்குக்காரணமாகிய உறவு அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது, என்று தெரிவிப்பதற்காகச் சொல்லுகிறார்—'அத்தையாகிய குந்தியின் குமாரனாகிய' என்று. "பரமம் ஐச்வரம், ரூபம்" (உத்தமமான ஈச்வரனுடைய ரூபத்தை) என்று சொல்லி இருப்பதை விவரிக்கிறார்—'அந்தரூபமாவது' என்று ஆரம்பித்து. எல்லாலோகங்களுக்கும் இருப்பிடமாக இருக்கை ஸ்வரூபத்தினாலும், விக்ரஹத்தின் மூலமாகவும். அன்றிக்கே "ஸர்வதோமுகத்

திரங்களாயுமிருக்கிற எல்லா லோகங்களுக்கு மிருப்பிடமாயும்,எல்லாவற்றையும் நியமிக்கக்கூடியதாயு மிருக்கிறரூபம். 9

பா] அந்தரூபமுமிப்படிப்பட்டது.

𑌅𑌨𑍇𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰 𑌨𑌯𑌨𑌮𑌨𑍇𑌕𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 |
𑌅𑌨𑍇𑌕𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍇𑌕𑍋𑌦𑍍𑌯𑌤𑌾𑌯𑍁𑌧𑌮𑍍 ||
𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌂𑌬𑌰𑌧𑌰𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑌮𑍍 |
𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌯𑌂 𑌦𑍇𑌵𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 ||

ப - ரை] 𑌅𑌨𑍇𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌨𑌯𑌨𑌂 பலமுகங்களையும், கண்களையுமுடையதாயும், 𑌅𑌨𑍇𑌕𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 பல ஆஶ்சர்யமான பார்வைகளை உடைத்தானதாயும், 𑌅𑌨𑍇𑌕 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌂 அனேகங்களாயும் திவ்யங்களுமான ஆபரணங்களை உடையதாயும், 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍇𑌕𑍋𑌦𑍍𑌯𑌤𑌾𑌯𑍁𑌧𑌂 திவ்யங்களாயும், அனேகங்களாயுமிருக்கிற உயரத்தூக்கப்பட்ட ஆயுதங்களை உடையதாயும் 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌂𑌬𑌰𑌧𑌰𑌂 திவ்யமான மாலைகள் வஸ்திரங்கள், இவைகளை தரித்ததாயும், 𑌦𑌿𑌵𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑌂 திவ்யமான சந்தனத்தைப் பூசிக்கொண்டதாயும், 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌯𑌂 எல்லா ஆஶ்சர்யங்களும் நிறைந்ததாகவும், 𑌦𑍇𑌵𑌂 ப்ரகாசமுள்ளதாகவும், 𑌅𑌨𑌨𑍍𑌤𑌂 அவில்லாததாகவும், 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑌂 எல்லாத்திக்குக்களிலும்முகங்களை உடையதாகவும் (இருந்தது). 10, 11

பா]ப்ரகாஶமுள்ளதாகவும், மூன்று காலங்களிலுமுள்ள எல்லாலோகங்

தா]என்று ஆரம்பித்து மேலே சொல்லப்போகிறதற்கு அவதாரிகைகாட்டி இருக்கிறதாகவுமாம். ஆகையினாலேதான் அந்தரூபமுமிப்படிப்பட்டது, என்று சேர்க்கப்பட்டது இந்த எல்லா லோகங்களுக்குமிருப்பிடமாகஇருக்கை "𑌇𑌹𑍈𑌕𑌸𑍍𑌥𑌂" என்றிவை முதலிய ஶ்லோகங்களினாலேற்பட்டது நியமனம் என்னும் பதத்தினால் அதிஷ்டானம் சொலலப்படுகிறது. 9

வஸ்திரங்கள், ஆபரணங்கள், ஆயுதங்கள் இவைகள் அனேகம், என்பது ஜாதியின் வ்யத்யாஸங்களாலும் என்று அறியவேண்டியது. அனேகஜாதியான அனேகமுகங்கள் உண்டென்பது விஶ்வரூபத்தைப் பற்றியத்யானத்தைச் சொல்லுமிடத்தில் பாஞ்சராத்ர ஶாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. அப்படிக்கில்லாவிடில் அனேகம் கண்களை உடையது. என்று சொல்லி இருப்பது வ்யர்த்தமாகிவிடும். முகம் அனேகம் என்பனாலேயே கண்கள் அனேகம் என்பது ஏற்பட்

களுக்கு மிருப்பிடமாகையினுல், இடம், காலம், இவைகளினுல் அள

விட்டதினுல் எதினுடைய பார்வையானது, அநேகமான ஆஶ்சரிய மாக இருக்கிறதோ, அது அநேகாத்புத தர்சனம், அதாவது எல்லை யில்லாதமேன்மையை உடையஆஶ்சர்யமாகப் பார்க்கப்படுகிறது,என்று அர்த்தம். திவ்யமாவது ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாதது. "ஸவாஶ்சர்ய மயம்" என்பதற்கு ஆஶ்சர்யமாகிய எல்லாவஸ்துக்களுக்கு மிருப் பிடம் என்று அர்த்தம். ஆகையினுல் "அநேகாத்புததர்ஶநம்" என்ப தோடுபுனருக்தி இல்லை. 1 "ஜகதேதந்மஹாஶ்சர்யம் ரூபம்யஸ்ய மஹாத்மந:" என்றிவை முதலியது நினைக்கத்தக்கது. 'தேவம்' என்னும் பதம் இவ்விடத்தி லுபயோக மில்லாத தேவஜாதியைச் சொல்லு கிறது, என்பதை விலக்குவதற்காகவும், திவ்ய விக்ரஹத்தோடு கூடிய பகவானைச் சொல்லுகிறது, என்று தெரிவிப்பதற்காகவும், 'ப்ரகாஶமுள்ளதாகவும்' என்று சொல்லப்பட்டது. அளவில்லாம லிருக்கும் விதத்தையும் அதற்குக்காரணத்தையும் சொல்லுகிறார்— எல்லாலோகங்களுக்கும், என்று ஆரம்பித்து. எல்லாலோகங்களுக்கும் இருப்பிடம் என்பது ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்ட படியினுல் மூன்று காலங்களிலிருக்கும் லோகங்களுக்கும் இருப்பிடம், என்பதும் ஏற்பட்டது. இவை இரண்டாலும் ஏற்பட்டதாகிய இடம் காலமிவைக ளால் அளவிடமுடியாமையும் இவ்விடத்தில், எப்படி ஸம்பவிக்குமோ அவ்விதமாக விக்ரஹத்தின் வழியாகவும் நேராகவும் சொல்லவேண் டியது,வாஸ்தவத்தில்அளவில்லாமை ஸ்வரூபத்திலேதான் இருக்கிறது. இவ்விடத்தில் விக்ரஹத்தினுடைய விசேஷணங்களின் கூட்டத்தில்நடு விலிருப்பதினுல் விக்ரஹத்தையேசொல்லுகிறது 'ஞுவிஷ்ஞுநம்' என் கிற இடத்தில்'அநந்தரூபம்'என்று விக்ரஹத்தைப்பற்றி மேலே சொல்லப்போகிறார்' ஆகையினுல் மிகவும் விசாலமாக இருக்கை முதலி யதைக்குறிப்பதில் தாத்பர்யம், என்று சிலர் சொல்லுகிறார்கள். இப் படியே 'அநந்தரூபம்' என்று இதை அனுவாதம் செய்திரு க்குமிடத்திலும் அர்த்தம் சொல்லிக்கொள்ளவேண்டியது. எல்லா இடத்திலும் இந்த விக்ரஹம் வ்யாபித்து இருந்தாலும் விசேஷ மான ஶக்தியினுல் ஓரிடத்திலும் தடையில்லாமலிருப்பதும் யுக்தம் தான், அஷ்டைஶ்வர்யம் பெற்ற யோகிகளுக்கும் பூமியில் முழுகு தல் வெளிகிளம்புதல் முதலிய சில ஸித்திகள் சொல்லப்படுகின்றன அல்லவா. ஆகையினுல் இந்த விஶ்வரூபம் ப்ரக்ருதி முதலிய எல்லா

1 விஷ்ணுபுராணம் 5-11-7 மஹாஶ்சர்யம் மிகவும் ஆச்சரியமாகிய ஜகத் இந்த லோகம் யஸ்ய எந்த மஹாத்மன: மகாத்மாவுக்கு ரூபம் சரீரமோ.

விட முடியாததாகவும், எல்லாத் திக்குக்களிலும் இருக்கிற முகங்களை

லோகங்களுக்கும் இருப்பிடம் என்று மேலே சொல்லப்போகிறதும் அனுசிதமல்ல. ஆகையினாலேயே, அஸ்த்ரங்களாகவும், பூஷணங்களாகவும் இருக்கும் எல்லா லோகங்களுக்கும் இருப்பிடம் என்பது இங்கே சொல்லப்படுகிறது, என்பதுவும் ஸந்தேகிக்கவேண்டியதில்லை. 'தத்ர தேவதேவஸ்ய ஶரீரே' என்கிற இடத்தில் மேலே 'அநந்தாயாமவிஸ்தரே' (அளவில்லாத நிகளம், விஶாலமிவைகளை உடைய) என்று அந்த ஶரீரத்திற்கே விஶேஷணமாகச் சொல்லப்போகிறபடியினால். வடபத்ர ஶாயியான பகவானுடைய விக்ரஹத்தைப்போல அகடிதகடனா ஶக்தியினால் சின்ன விக்ரஹத்திலும் ஸூக்ஷ்மமாக எல்லாம் அடங்கி இருப்பதாகக் காட்டப்பட்டது, என்றும் சொல்லமுடியாது. அப்படிச் சொல்லாமையினாலும், அதற்கு விரோதமாகச் சொல்லி இருப்பதினாலும். ஆகையினால் கீழ்ச்சொல்லியதே அர்த்தம். இதுவும் பாஷ்பத்திலாரம்பத்திலேயே அசிந்த்ய என்னும் பதத்தினால் சொல்லப்பட்டது. 'அநேகவக்த்ர' (அனேகம் முகங்களை உடைய) என்று சொல்லி இருப்பதே விஶ்வதோமுகம், என்னும் பதத்தினால் விஶேஷித்துச் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எல்லாத் திக்குக்களிலுமிருக்கிற முகங்களை உடையதாகவும்' என்று நேரில் விக்ரஹத்தைப்பற்றிச் சொல்லுகிறபடியினால், 1 எல்லா இடத்திலும் கண்களை உடையவன், எல்லா இடங்களிலும் முகங்களை உடையவன்' என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளிலே போல எல்லா இடங்களிலும் முகங்களின் ஶக்தி உண்டு, என்பதும் சொல்லப்படுகிறதில்லை. எல்லா இடங்களிலும் முகங்களை உடையது, என்று மற்றவர்கள் சொன்ன அர்த்தமும் யுக்தமல்ல, கை, கால் முதலிய இடங்களில் முகமில்லாமையினால் என்று தாத்பர்யம். முதலில் அவிசதமாகத் தெரிந்து கொள்ளுதல், பிறகு விஶதமாகத் தெரிந்து கொள்ளுதல், என்கிற க்ரமத்தை அனுஸரித்து ஶ்லோகத்தில் சொல்லி இருக்கும் க்ரமத்தை அநாதரித்து தேவம் என்பது முதலியது முதலில் வ்யாக்யானம் செய்யப்பட்டது. தன்னிடத்திலிருக்கிற ஆகாரத்தைத் தெரிந்துகொண்ட பிறகல்லவோ தனித்திருக்கும் வஸ்துக்களோடு சேர்ந்திருத்தலைத் தெரிந்துகொள்ள முடியும். அப்படியே இவ்விடத்திலும் காட்டுவது உசிதம். என்கிற அபிப்ராயத்தினால் முதலில் சொல்லட்ட போதிலும் வஸ்திரம் முதலியது கடைசியில் நிரூபிக்

---

1 ஶ்வேதாஶ்வதரம் 3-3.

உடையதாகவும், தனக்குத் தகுந்த திவ்யங்களான வஸ்திரம், சந்தனம், மாலை, ஆபரணங்கள், ஆயுதங்கள், இவைகளை உடையதாகவும் இருந்தது. 10, 11

பா] முன்பு சொன்ன தேவம் என்னும் பதத்தினால் குறிக்கப்பட்ட, ப்ரகாஶம் உள்ளதாக இருப்பதையே விஶேஷித்துச் சொல்லுகிறார்—

திவி ஸூர்யஸஹஸ்ரஸ்ய பவேத் யுகபதுத்திதா |
யதி பாஸ்ஸத்ருஶீ ஸா ஸ்யாத்பாஸஸ்தஸ்ய மஹாத்மந: || 12

ப - ரை] திவி - ஆகாசத்தில், ஸூர்யஸஹஸ்ரஸ்ய - ஆயிரம்ஸூரியன்களுடைய, பா: - காந்தியானது, யுகபத் - ஒரேகாலத்தில் உத்திதா - உதித்ததாக, பவேத்யதி - ஆகுமேயானால், ஸா - அந்தக் காந்தியானது, மஹாத்மந: - மஹாத்மாவாகிய, தஸ்ய - அந்தப்பகவானுடைய, பாஸ: - ப்ரகாஶத்திற்கு, ஸத்ருஶீ - ஸமமாக, ஸ்யாத் - ஆகும். 12

பா] தேஜஸ்ஸு அளவில்லாதது. என்பதைக் காட்டுவதற்காக இது சொல்லப்பட்டது. அழிவில்லாத தேஜஸ்ஸையே ஸ்வபாவமாக உடையவன், என்று அர்த்தம். 12

தத்ரைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்நம் ப்ரவிபக்தமநேகதா |
அபஶ்யத்தேவதேவஸ்ய ஶரீரே பாண்டவஸ்ததா || 13

ப - ரை] பாண்டவ: - பாண்டுவின்மகனாகிய அர்ஜுனன், ததா - அப்பொழுது, தத்ர - அந்த, தேவதேவஸ்ய - பகவானுடைய, ஶரீரே - விஶ்வரூப விக்ரஹத்தில், அநேகதா - அனேகவிதமாக, ப்ரவிபக்தம் - பிரிக்கப்பட்டிருக்கிற, க்ருத்ஸ்நம் - எல்லா, ஜகத் - லோகத்தையும், ஏகஸ்தம் - ஏகதேசத்திலிருப்பதாக, அபஶ்யத் - பார்த்தான். 13

கப்பட்டது.—'தனக்குத் தகுந்த' என்று ஆரம்பித்து. இவ்விடத்திலும் ஶ்லோகத்தில் சொல்லியிருக்கும் வரிசையை அநாதரித்து வஸ்திரம் முதலாக வரிசையாகச் சொல்லி இருப்பது, அந்தரங்கம், பஹிரங்கம், முதலான வ்யத்யாஸத்தைக்காட்டுவதற்காக. இவ்விடத்திலும் 'த³ர்ஶயாமாஸ' (காட்டினார்) என்று முன் ஶ்லோகத்துடன் அன்வயம் சொல்லிக்கொள்ள வேண்டியது. 10, 11

'திவி' என்று ஆரம்பிக்கும் ஶ்லோகத்துக்கு ஸங்கதியைச் சொல்லுகிறார்—'முன்பு சொன்ன' என்று ஆரம்பித்து. கீழ்க் குறிக்கப்பட்ட ப்ரகாஶத்திற்கே எல்லை இல்லாமையாகிற விஶேஷம் சொல்லப்படுகிறது, என்று அர்த்தம். ஒரு கணக்கைக் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதினால் உண்டாகிய அளவிடப்பட்டது என்கிற ஸந்தேஹத்தைவிலக்குவதற்காகச்சொல்லுகிறார்—'தேஜஸ்ஸு' என்று ஆரம்பித்து. 12

பா] அளவில்லாத நீகளம், விஶாலமிவைகளை உடையதாயும், எண்ணிறந்த கைகள், வயிறுகள், முகங்கள் கண்கள் இவைகளை உடையதாயும், அளவில்லாத தேஜஸ்ஸை உடையதாயும் எண்ணிறந்த திவ்யாயுதங்களை உடையதாயும், தனக்குத்தகுந்த எண்ணிறத பூஷணங்களை உடையதாயும், திவ்யங்களான, மாலை வஸ்திரம் இவைகளைத் தரித்ததாயம், திவ்யசந்தனத்தினால் பூசப்பட்டதாயும் அளவில்லாத ஆஶ்சரியங்கள் நிறைந்ததாயு மிருக்கிற பகவானுடைய திவ்யஶரீரத்தில் ப்ரும்மா முதலாக அனேக விதங்களாயும் விசித்திரங்களாயு மிருக்கிற தேவதை, பசு, மனுஷ்யன் ஸ்தாவரம் முதலிய போக்தாக்களின் கூட்டம், பூமி, ஆகாஶம், ஸ்வர்க்கம், பாதாளம், அதலம், விதலம், ஸுதலம் முதலிய, அனுபவிக்கக்கூடிய வஸ்துக்கள் அனுபவிப்பதற்கு ஒத்தாசைக் கருவிகள், இவைகளின் வ்யத்யாஸங்களினால் பிரிக்கப்பட்டிருக்கிற ப்ரக்ருதியும், ஜீவனுமாகிய, 1'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே' 2'ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்மவிபூதய:' 3 'அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்தித:' என்றும் 4 'ஆதித்யாநாமஹம் விஷ்ணு:' என்று ஆரம்பித்து 5 'ந ததஸ்தி விநா யத் ஸ்யாந்மயா பூதம் சராசரம் । விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நம் ஏகாம்ஶேந ஸ்திதோ ஜகத்' என்னுமளவாகச் சொல்லப்பட்ட எல்லா லோகத்தையும் ஏகதேஶத்தி லிருப்பதாகப் பகவானுடைய அனுக்ரஹத்தினு லடையப்பட்ட அவனைப்பார்ப்பதற்குத் தகுந்த திவ்யமான கண்ணை உடைய அர்ஜுனன் பார்த்தான். 13

தத: ஸ விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா தநஞ்ஜய: ।
ப்ரணம்ய ஶிரஸா தேவம் க்ருதாஞ்ஜலிரபாஷத ॥ 14

ப - ரை] தத: - பிறகு, ஸ: - அந்த, தநஞ்ஜய: - அர்ஜுநன், விஸ்மயாவிஷ்ட: - ஆஶ்சரியத்தை அடைந்தவனுய்க் கொண்டு, ஹ்ருஷ்டரோமா: ஹ்ருஷ்ட - நெறித்துக்கொண் டிருக்கிற, ரோமா: - மயிர்களை உடையவனுய்க் கொண்டும், தேவம் - பகவானை, ஶிரஸா - தலையினால், ப்ரணம்ய - ஸேவித்து, க்ருதாஞ்ஜலி: - கைகளைக்கூப்பிக்கொண்டு, அபாஷத - சொன்னான்.

1 பகவத்கீதை - 10 - 8.
2 பகவத்கீதை - 10 - 19.
3 பகவத்கீதை - 10 - 20.
4 பகவத்கீதை - 10 - 21.
5 பகவத்கீதை - 10 - 39.

பா] பிறகு அர்ஜுநன் பெரிய ஆஶ்சர்யங்களாகிய எல்லா லோகத்திற்கும் தன் ஶரீரத்தின் ஏகதேஶத்தினால் ஆதாரமாகவும், எல்லாவற்றையும் நியமிக்கிறவராயும், மிகவும் ஆஶ்சர்யங்களாகிய அளவில்லாத ஜ்ஞானம் முதலிய கல்யாணகுணங்களின் கூட்டத்தை உடையவராகவு மிருக்கிற பகவானைப் பார்த்து, ஆஶ்சர்யத்தை உடையவனாய், நெறித்துக்கொண்ட மயிர்களை உடையவனாயும் கொண்டு தலையினால் தடிபோல விழுந்து நமஸ்கரித்துக் கைகுவித்துக்கொண்டு சொன்னான். 14

அர்ஜுந உவாச — அர்ஜுனன் சொன்னான்.

பஶ்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே
ஸர்வாம்ஸ்ததா பூதவிஶேஷஸங்காந் |
ப்ரஹ்மாணமீஶம் கமலாஸநஸ்தம்
ருஷீம்ஶ்ச ஸர்வாநுரகாம்ஶ்ச திவ்யாந் || 15

ப - ரை] ஹே தேவ - பகவானே, தவ - உம்முடைய, தேஹே - ஶரீரத்தில், ஸர்வாந் - எல்லா, தேவாந் - தேவதைகளையும், ததா - அப்படியே, பூதவிஶேஷஸங்காந் - ப்ராணி விசேஷங்களின் கூட்டங்களையும், ப்ரஹ்மாணம் - ப்ரும்மாவையும், கமலாஸநஸ்தம் - ப்ரும்மாவினிடத்தில் அடங்கி இருக்கிற, ஈஶம் - ருத்திரனையும், ஸர்வாந் - எல்லா, ருஷீம்ஶ்ச - ரிஷிகளையும், திவ்யாந் - ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற, உரகாம்ஶ்ச - ஸர்பங்களையும், பஶ்யாமி - பார்க்கிறேன். 15

பா] ஓ, பகவானே உம்முடைய தேஹத்தில் எல்லாத் தேவதைகளையும் பார்க்கிறேன். அப்படியே எல்லாப்ராணி விஶேஷங்களின் கூட்டங்களையும், அப்படியே அண்டத்திற்கு யஜமானனாகிய சதுர்முகனையும், அப்படியே ப்ரும்மாவினிடத்திலிருக்கிற அதாவது ப்ரும்மாவினிஷ்டப் படி நடக்கிற ருத்ரனையும், அப்படியே தேவரிஷி முதலிய எல்லா ரிஷிகளையும் ப்ரகாஶித்துக்கொண் டிருக்கிற வாஸுகி, தக்ஷகன் முதலிய ஸர் பங்களையும் (பார்க்கிறேன்). 15

அநேகபாஹூதரவக்த்ரநேத்ரம்
பஶ்யாமி த்வாம் ஸர்வதோऽநந்தரூபம் |
நாந்தம் ந மத்யம் ந புநஸ்தவாதிம்
பஶ்யாமி விஶ்வேஶ்வர விஶ்வரூப || 16

ப - ரை] விஶ்வேஶ்வர - லோகங்களை நியமிப்பவனாகிய, விஶ்வரூப - ப்ரபஞ்சத்தை சரீரமாக உடைய பகவானே, அநேகபாஹூதரவக்த்ர

நேத்ரம் - அனேகங்களானகைகள், வயிறுகள், முகங்கள், கண்கள் இவைகளை உடைய, அநந்தரூபம் - அளவில்லாத ரூபத்தை உடைய, த்வாம் - உம்மை, ஸர்வத: - எல்லா இடங்களிலும், பஶ்யாமி - பார்க்கிறேன், தவ - உமக்கு, அந்தம் - முடிவையும், மத்யம் - நடுவையும், ஆதிம் - முதலையும், நபஶ்யாமி – பார்க்கவில்லை. 16

பா] அனேகங்களான, கைகள், வயிறுகள், முகங்கள், கண்கள் இவைகளை உடைய முடிவில்லாத ரூபத்தை உடை ய உம்மை எல்லா இடத்திலும் பார்க்கிறேன். ப்ரபஞ்சத்தை நியமிக்கிறவனும், ப்ரபஞ்சத்தை ஶரீரமாக உடையவராயு மிருக்கிற பகவானே எந்தக்காரணத்தினால் நீர் முடிவில்லாதவரோ ஆகையினால் உமக்கு முடிவையும் நான் பார்க்கவில்லை. நடுவையும் பாாக்கவில்லை. ஆதியையும் பார்க்கவில்லை 16

தா] 'ஸர்வதோநந்தரூபம்' (எல்லா இடத்திலும் முடிவில்லாதரூபத்தை உடைய) என்று அன்வயம் சொல்லில் 'ஸர்வத:' (எல்லா இடத்திலும்) என்னும் பதம் வ்யர்த்தமாகிவிடும். 'ஸர்வத: பஶ்யாமி' (எல்லா இடத்திலும் பார்க்கிறேன்) என்று சொல்வதோவெனில் திவ்யமான கண் கிடைத்ததற்கு அனுகுணமாக இருப்பதினால் யுக்தம். விஶ்வரூப என்பதற்குக் காரணத்தைச் சொல்லுகிறது, 'விஶ்வேஶ்வர' என்னும் பதம், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ப்ரபஞ்சத்தை நியமிக்கிறவனும்' என்று வ்யாபரித்துக்கொண்டு நியமிக்கிறவனல்லவோ ஆத்மா 'நாந்தம் நமத்யம்' என்கிற இடத்தில் வாஸ்தவத்திலிருக்கிற முடிவுமுதலியவைகளைப் பார்க்கவில்லை, என்பது சொல்லப்படுகிறதில்லை. அர்ஜுநனுக்கு திவ்யமான கண் கிடைத்திருப்பதினாலே அது பொருந்தாதாகையினால், மேலும் அநந்தரூபம் என்று காரணத்தைக் காட்டிக்கொண்டு விஶேஷணம் சொல்லி இருப்பதினாலும். ஆகையினால் முயல்க்கொம்பு முதலியவற்றைப்போல உண்மையிலே இல்லாதவைகளைப் பார்க்காமையே சொல்லப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எந்தக் காரணத்தினால்' என்று ஆரம்பித்து. இது விஶ்வரூபம் என்னும் பதத்தினாலும் சொல்லப்பட்டது. இவ்விடத்தில் இடத்தினாலும், காலத்தினாலும், ஆதி, மத்யம், முடிவு, இல்லை, என்று மறுக்கப்படுகிறது, என்று அறியவேண்டியது. ஆதிமுடிவு ஆகிய அளவில்லாமையினால் அவை இரண்டைக்கொண்டும் நிரூபிக்கவேண்டியதாகிய மத்யமும் இல்லை, என்று ஏற்பட்டது, என்று தாத்பர்யம். 16

கிரீடிநம் கதிநம் சக்ரிணம் ச
தேஜோராஶிம் ஸர்வதோ தீப்திமந்தம் |
பஶ்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தாத்
தீப்தாநலார்கத்யுதிமப்ரமேயம் || 17

ப - ரை] தேஜோராஶிம் - தேஜஸ்ஸுக்களின் கும்பலாகவும், ஸர்வத꞉ - எல்லா இடத்திலும், தீப்திமந்தம் - ப்ரகாஶமுள்ளவராயும், ஸமந்தாத் - நாலுபக்கத்திலும், துர்நிரீக்ஷ்யம் - பார்க்கமுடியாதவராகவும், தீப்தாநலார்கத்யுதிம் தீப்த-ப்ரகாசித்துக்கொண் டிருக்கிற, அநல - அக்னி, அர்க - ஸூர்யன், (இவர்களுக்குஸமமான) த்யுதிம் - காந் தியை உடையவராயு மிருக்கிற, அப்ரமேயம் - அளவிடமுடியாதவராயு மிருக்கிற, த்வாம் - உம்மை, கிரீடிநம் - கிரீடத்தை உடையவராகவும், கதிநம் - கதையை உடையவராகவும், சக்ரிணம் - சக்ராயுதத்தை யுடையவராகவும், பஶ்யாமி - பார்க்கிறேன். 17

தா] 'கிரீடிநம்' என்பவை முதலியவைகளுக்கு ஶ்லோகத்தில் சொல்லி இருக்கும் க்ரமத்தை அநாதரித்துத் தெரிந்துக்கொள்ளும் வஸ்துக்களில் வரிசையை அநுஸரித்து அன்வயம் சொல்லுகிறார்—'தேஜஸ்ஸுக் களின்கும்பலாகவும்' என்று ஆரம்பித்து. 'தேஜோராஶிம்' என்றுவஸ்து வின்ஸ்வரூபத்தைச்சொல்லி இருக்கிறது 'ஸர்வதோதீப்திமந்தம்' என்றதற்கு [1]'அவனுடையகாந்தியினால்இந்த எல்லாம்ப்ரகாஶிக்கிறது' என்றுஅர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளிலேபோல, எல்லா இடத்திலும் பரவியகாந்தியை உடையவனாகிய என்று அர்த்தம் 'ஸமந்தாத்' (நாலுபக்கங்களிலும்) என்று விக்ரஹத்தில் எல்லா இடங்களையும் பற்றிச் சொல்லப்பட்டது 'தீப்தாநலார்கத்யுதிம்' என்பது பார்க்கமுடியாமலிருப்பதற்குக்காரணம் இவ்விடத்தில் 'த்யுதி' என்னும்பதத்தினால்கிரணமாகியகாந்தி சொல்லப்பட்டது. ஆகையினால் 'தீப்திமந்தம்' என்பதோடு புநருக்தி இல்லை. அன்றிக்கே முன்பு எல்லா இடத்திலும் வ்யாபித்திருக்கிறது என்பதில் தாத்பர்யம். இவ்விடத்திலோ வெனில் பார்க்கமுடியாமைக்குக் காரணமாகிய அதிக க்ரூரம் என்பதில் தாத்பர்யமாகவுமாம். 'அப்ரமேயம்' இப்படிப்பட்டது, இவ்வளவு, என்று அளவிடமுடியாதது. இவ்வளவால் ஸாமாந்யமாகத் தெரிந்துகொண்டதைச் சொல்லி இருக்கிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'உம்மை' என்று பிரித்துச்சொல்லப்பட்டது. இதுவரையிலும் பார்க்கப்படாத ரூபத்தைப் பார்த்தபோதிலும் உமக்கு அஸாதாரணமான அடையாளங்களினால் உம்மைத் தெரிந்துகொள்ளுகிறேன், என்கிற அபிப்ராயத்தினால் 'கிரீடிநம்' என்பது முதல் சொல்லப்பட்டது 'கிரீடத்தை' என்பது ஆபரணங்

1 கடவல்லீ - 2 - 5 - 15.

கிபமான ஆதாரமாக இருப்பவரும் நீரே. அழிவில்லாதவரும் நீரே. அதாவது எவ்வித ஸ்வரூபத்தை உடையவராகவும், எவ்வாறு குணங்களை உடையவராகவும், எவ்வளவு விபூதிகளை உடையவராகவு மிருக்கிறீரோ இப்படிப்பட்ட ஸ்வபாவங்களை உடையராகவே எப்போழுதும் இருக்கி

வைக்கப்படுகின்றது) என்கிற அர்த்தத்தினால் 'நிதாநம்' என்று சொல்லப்படுகிறது, ஆதாரமாகிய வஸ்துக்களுக்கும் ஆதாரமாகையினால் 'பரம் நிதாநம்' என்று சொல்லப்பட்டது. 'ஆத்மா ஸம்ப்ரவஸ' என்றிவை முதலிய வசனங்களினால் சொல்லப்பட்ட ஜீவாத்மாவை விலக்குவதற்காகப் பரம் என்னும் பதம் 1 'பஞ்சபூதங்கள் ஜீவாத்மாவினிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஜீவாத்மாக்கள் பகவானிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன'. என்று அர்த்தமுள்ள வாக்கியம் ஶ்ருதியில் சொல்லப்படுகிறதல்லவோ. இவனுக்கு வேறொரு ஆதாரமுமில்லை எனபதற்தாக 'உத்தமமான' என்று வ்யாக்யானம் செய்யப்பட்டது. 'அவ்யய' என்னும் பதத்தினால் 2 'அந்த அழிவில்லாத, எனறும் 3 அளவில்லாதவனும், அழிவில்லாதவனும், கவியுமாகிய' என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகள் ஞாபகப்படுத்தப்பட்டன. ஸ்வரூபத்திற்காவது, குணத்திற்காவது, விபூதிக்காவது, எப்பொழுதாவது உண்டாகும் நாஶமல்லவோ வ்யயம், என்னப்படுகிறது. அது ஒன்றுமில்லை, என்று பொதுவாக அவ்யய என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது. இப்பொழுது பார்க்கப்படுகிற ஆகாரத்தை அனுவாதம் செய்கிற 'த்வம்' (நீர்) என்னும் பதத்தினால் குறிக்கப்பட்ட வஸ்துவுக்கு அவ்யய, என்னும் பதம் விஶேஷணமாக இருப்பதினால் ஜீவன் முதலியவர்களுக்கு ஸாதாரணமாகிய ஸ்வரூபம் மாத்திரம் நித்தியம் எனபதைச் சொன்னால் ஒரு விஶேஷமுமில்லை, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அதாவது எவ்வித ஸ்வரூபத்தை உடையவராகவும்' என்று ஆரம்பித்து. இவ்விடத்தில் விபூதி என்னும் பதத்தினால் நித்ய விபூதி சொல்லப்படுகிறது இரண்டு விபூதியையும் சொன்னால் வஸ்துக்களின் ஸ்வரூபத்திற்கு அதிகப்படுதலும் குறைதலுமில்லை, என்பது மாத்திரம் சொல்லப்படுகிறது. 'ஶஶ்வத்' (எப்பொழுது மிருக்கிறது) 'ஶாஶ்வத' என்று சொல்லப்படுகிறது. அழிவில்லாமைக்குக் காரணம், நித்யமாகிய வேதத்தில் சொல்லப்பட்டிருக்கை, என்கிற அபிப்ராயத்

---

1 கௌஷீதகீ - 3 - 9.

2 முண்டகம் - 1 - 1 - 6.

3 புருஷஸூக்தம்.

த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம்
த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதாநம் |
த்வமவ்யய: ஶாஶ்வததர்மகோப்தா
ஸநாதநஸ்த்வம் புருஷோ மதோ மே || 18

ப - ரை] வேதிதவ்யம் - அறியத்தகுந்ததான, பரமம் - உத்தமமான, அக்ஷரம் - அக்ஷரம் என்று சொல்லப்பட்டதும், த்வம் - நீரே, அஸ்ய - இந்த, விஶ்வஸ்ய - ப்ரபஞ்சத்திற்கு, பரம் - உயர்ந்த, நிதாநம் - ஆதாரமும், த்வம் - நீரே, அவ்யய: - அழிவில்லாதவரும், த்வம் - நீரே, ஶாஶ்வத தர்மகோப்தா - நித்தியமான தர்மத்தைக் காப்பாற்றுகிறவரும் (நீரே), ஸநாதந: - அனாதியாகிய, த்வம் - நீர், புருஷ: - புருஷனாக, மத: - எண்ணப்பட்டீர். 18

பா] உபநிஷத்துக்களில் 1 'இரண்டு வித்யைகள் அறியத்தக்கவைகள்' என்று அர்த்தமுள்ள வாக்யம் முதலியவைகளில் அறியத்தக்கதாகச் சொல்லப்பட்ட உத்தமமான அக்ஷரம் நீரே. இந்த லோகத்திற்கு முக்

களின் கூட்டங்களைக் குறிக்கிறது. அதிலும் கிரீடத்தைச் சொன்னது, அது இவன் ஸர்வேஶ்வரன் என்பதைத் தெரிவிக்கிறதானபடியினால். கிரீடம் என்றும், கரண்டிகை, என்றும் தலையில் அணியக்கூடிய மகுடம் இரண்டு விதம், அவற்றுள் கிரீடம் உயர்ந்தவரால் தரிக்கக்கூடியது 'கதிநம்சக்ரம்' என்பது, ஆயுதங்களின் கூட்டத்தைக் குறிக்கிறது, அதிலும் சக்கரம் முதலியவற்றைச் சொல்லி இருப்பது அது பகவானுக்கு அஸாதாரணம் என்று ப்ரஸித்தமானபடியினால். 17

'த்வமக்ஷரம்' என்கிற ஶ்லோகத்தினால், இவ்விதமாகப் பகவானைப் பார்த்ததினால் 'அக்ஷரம் வேதிதவ்யம் அவ்யயஸநாதந, புருஷ' முதலிய பதங்களினால், முண்டகோபநிஷத்து முதலிய ஶ்ருதிகளை ஞாபகப்படுத்துகிறான், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'உபநிஷத்துக்களில்' என்று. 'சொல்லப்பட்ட' என்கிற இடத்தில் 2 'பிறகு பரவித்யை, எந்த வித்யையினால் அந்த அக்ஷரம் அறியப்படுகிறதோ' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளினால், என்று சேர்த்துக்கொள்ளவேண்டியது. 'விஷ்ணுவென்று பெயரை உடைய எல்லாவற்றிற்கும் ஆதாரமான ப்ரகாஶத்தை' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவற்றை நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்— 'இந்த ப்ரபஞ்சத்திற்கு' என்று. 'நிதேயதஸ்மிந்' (இந்த இடத்தில்

1 முண்டகம் - 1 - 1 - 3.
2 முண்டகம் - 1 - 1 - 5.

றீர். நித்யமான வேதத்தில் சொல்லப்பட்ட தர்மத்தை இப்படிப்போன்ற அவதாரங்களினால் காப்பாற்றுகிறவரும் நீரே. அனாதியான புருஷனும் நீரே, என்று என்னால் தெரிந்துகொள்ளப்பட்டீர். † 'நான் இந்தப் பெரிய புருஷனை அறிந்தேன்' என்றும் ‡ 'மேலானவனைவிட மேலான புருஷனை. என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில் சொல்லப்பட்ட அனாதியான புருஷன் நீரே, என்று என்னால் அறியப்பட்டீர். அதாவது யதுகுலத்திற்குத் திலகமாகிய நீர் இப்படிப்பட்டவர் என்று இப்பொழுது என்னால் பார்க்கப்பட்டீர்; என்று அர்த்தம். 18

தினால் 'வேதத்தில் சொல்லப்பட்ட' என்று சொல்லப்பட்டது. 'நாரா யணஶாஶ்வதஶரீரோஶாஶ்வதா' என்றிவை முதலிய இடங்களிலும் வேதத்தில் சொல்லப்பட்ட விஶேஷமான தர்மமே சொல்லப்படுகிறது. என்று அபிப்ராயம், ப்ரத்யக்ஷம், ஶாஸ்த்ரம் இவைகளினால் ஏற்பட்ட அர்த்தம் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால், 'இப்படிப்போன்ற அவதாரங்களினால்' என்று சொல்லப்பட்டது. புருஷனைப்பற்றிச் சொல்லுகிற ஶ்ருதிவாக்யங்க ளிரண்டுகளாலும் உபாஸிக்கப்படுகிறவன், என்பதையும், அடையப்படுகிறவன், என்பதையும் காட்டி இருக்கிறது. 'முதலிய' என்னும் பதத்தினால் 1 எதினால் அழிவில்லாதவனும், ஸத்யமுமான புருஷனை, அறிகிறானோ' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம்முதலியதும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. 'ஸநாதந' என்னும்பதத்தினால் ஸத்யம் என்கிற பதத்தின் அர்த்தம் சொல்லப்படுகிறது. உத:, என்று தனனுடைய அபிமானம் மாத்ரத்தைச சொல்லுகிறது, என்கிற ப்ரமத்தை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'தெரிந்துகொள்ளப்பட்டீர்' என்று இநத ஶ்லோகத்தில் 'த்வம்' (நீர்) என்று பழயமாம்ஸமயமானக் கண்ணினால் தெரிநதுகொளளபபட்ட ஆகாரத்தை அனுவாதம் செய்கிறது. மிகுதியினாலேயெனில் திவ்யமான கண்ணை அடைந்ததினால நேராகப் பார்க்கப்பட்ட ஆகாரத்தைச சொலலி இருக்கிறது. ப்ரபாவததைபபற்றிய ஞானம் முன்னமேயே உண்டானபடியினால், என்கிற அபிபராயத்தினால் சொலலுகிறார். 'அதாவது யதுகுலத்திற்கு' என்று ஆரம்பித்து. பொதுவாக இருக்கிற உத:, என்னும் பதம் இவ்விடத்தில 'வஶ்ஶ்ராமி' என்று கீழ்சசொல்லப்பட்ட நேராகப் பார்ப்பதாகிய விஶேஷத்தில் முடிவுபெறுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'இப்பொழுது என்னால் பார்க்கப்பட்டீர்' என்று சொல்லப்பட்டது. 18

---

† புருஷஸூக்தம்.

‡ முண்டகம - 31 - 2, - 8

1 முண்டகம் - 1 - 2 - 16

அநாதி³மத்⁴யாந்தமநந்தவீர்யம் அநந்தபா³ஹும் ஶஶிஸூர்யநேத்ரம் । பஶ்யாமி த்வாம் தீ³ப்தஹுதாஶவக்த்ரம் ஸ்வதேஜஸா விஶ்வமித³ம் தபந்தம் ॥ 19

ப - ரை] அநாதி³மத்⁴யாந்தம் ஆதி நடுவுமுடிவு இல்லாதவராயும், அநந்தவீர்யம் அளவில்லாத வீர்யத்தை உடையவராயும், அநந்தபா³ஹும் எண்ணிறந்த கைகளை உடையவராயும், ஶஶிஸூர்யநேத்ரம் சந்திரன் ஸூரியன் இவர்களைப்போன்ற கண்களை உடையவராயும், தீ³ப்தஹுதாஶவக்த்ரம் தீ³ப்த எரிந்துகொண் டிருக்கிற, ஹுதாஶ அக்நியைப்போன்ற, வக்த்ரம் முகங்களை உடையவராயும், ஸ்வதேஜஸா தம்முடைய தேஜஸ்ஸினால், இத³ம் இந்த, விஶ்வம் ப்ரபஞ்சத்தை, தபந்தம் எரித்துக்கொண்டேயிருக்கிற, த்வாம் உம்மை, பஶ்யாமி பார்க்கிறேன். 19

பா] ஆதி, மத்யம், அந்தமில்லாதவராகவும், எல்லை இல்லாத மேன்மை

தா,] 'அநாதி³மத்⁴யாந்தம்' என்கிற இடத்தில் 'அநு' என்னும் விருதி அதை விட வேறு என்னும் அர்த்தத்தைச் சொல்லும் பக்ஷத்தில் 1 'அஹமாதி³ஶ்ச மத்⁴யம் ச பூ⁴தாநாமந்த ஏவ ச ।' 2 'ஸர்கா³ணாமாதி³ரந்தஶ்ச மத்⁴யம் சைவாஹமர்ஜுந' என்றிவை முதலியவைகளோடு விரோதிக்கும், ஆகையினால் இல்லை, என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'ஆதிமத்யம், அந்தம், இல்லாதவராயும்' என்று. 'அநந்தவீர்யம்' என்பது ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது, இது விக்ரஹத்தைப்பற்றிச் சொல்லுகிறது, ஆகையினால் புனருக்தி இல்லை. அன்றிக்கே உத்பத்தி, ஸ்திதி, நாஶம், என்கிற விகாரங்களில்லை என்று ஓரிடத்திலும், மற்றோரிடத்தில் அவைகளுக்குக் காரணமில்லை என்றும் சொல்லுகிறது, என்று பிரித்துக்கொள்ளவுமாம். அதுவுமல்லாமல் காலத்திற்கு அபிமானியாகிய ரூபத்தைப் பார்க்கிறபடியினால் 3 'அநாதி³ர்ப⁴க³வாந் காலः' என்பதைப் போல காலம் என்கிற விபூதி நித்தியம் என்பதைச் சொல்லுகிறதாகவுமாம். வீர்யம் அனந்தமாகவிருக்கையாவது-தாரதம்மியத்தினாலுண்டான அளவில்லாமை என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எல்லை இல்லாத மேன்மையை உடைய வீர்யத்தை உடையவராகவும்' என்று குறித்தது மாத்ரம்தான் அர்த்தம் என்பதை விலக்குவதற்காக ஒரே இடத்தில் சொல்லி இருப்பவைகளுக்குள் ஒன்றைச் சொன்னால் மற்றவைகளும் தானே ஏற்படுகின்றன, என்கிற அபிப்ராயத்தினால் சொல்

1 பகவத்கீதை - 10 - 32 2 பகவத்கீதை - 10 - 20,
3 விஷ்ணு புராணம் - I - 2 - 16.

யை உடையவீர்யத்தை உடையவராகவும், இங்கு வீர்யம், என்னும் பதம் மற்றவைகளைக் குறிப்பதற்காக, எல்லை இல்லாத மேன்மையை உடைய ஜ்ஞானம், பலம், ஐஶ்வர்யம், வீர்யம், ஶக்தி, தேஜஸ்ஸு, இவைகளுக்கு இருப்பிடமாகிய, என்று அர்த்தம், கணக்கில்லாத கைகளை உடையவராகவும், இதுவும் மற்றவைகளைக் குறிப்பதற்காக, கணக்கில்லாத கைகள், வயிறுகள், கால்கள், முகங்கள் முதலியவைகளை உடையவராகவும், சந்திரனைப்போலவும் ஸூர்யனைப்போலவும், அனுக்ரஹம், ப்ரதாபம், இவைகளை உடைய எல்லாக் கண்களையுமுடையவராகவும், அதாவது நமஸ்காரம் முதலியவைகளைச் செய்கிற அனுகூலரான தேவதைகள் முதலியவர்களைக்குறித்து அனுக்ரஹமும், அவர்களுக்கு விரோதிகளான அசுரர்கள் ராக்ஷஸர்கள் முதலியவர்களைக் குறித்து ப்ரதாபமும், 1 ரக்ஷாம்

லுகிறார்—'இங்கு வீர்யம் என்னும் பதம் மற்றவைகளைக் குறிப்பதற்காக' என்று 'அநேகபாஹும்' என்று கைகள் அனேகம என்பது மாத்ரம் முன்பு சொல்லப்பட்டது. 'அநந்தபாஹும்' என்று, இங்கே அவை களுக்குக் கணக்கில்லை, என்பது சொல்லப்படுகிறது, ஆகையினுல் புன ருக்தி இல்லை, என்கிற அபிப்ராயததினுல் சொல்லுகிறார்—'கணக்கில் லாத கைகளை உடையவராகவும்' என்று. 'அநேகபாஹூதரவக்த்ர நேத்ரம்' என்று முன்பு சொல்லப்பட்ட கும்பலில் ஒன்று கணக்கில் லாதது என்று சொன்னது மற்றவைகளையும் குறிப்பதற்காக, என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிறார்—'இதுவும்' என்று ஆரம்பித்து. 'ஶஶிஸூர்யநேத்ரம்' என்கிற இடத்தில், சந்திரஸூர்யர்களையே கண்ணுக நிரூபித்திருக்கவில்லை, அப்படி நிரூபித்துச சொல்லும் ஸந் தர்ப்பமில்லாமையினுலும் இந்த ரூபம் கணக்கில்லாக கண்களை உடைய தாகையினுலும், ஆகையினுல் அவைகளுக்கு ஸமமான என்பதே சொல்லப் படுகின்றது. அதிலும் சில கண்கள் சந்திரனுக்கு ஸம மானவைகள் என்றும், சில கண்கள் ஸூர்யனுக்கு ஸமமானவைகள் என்றும் பிரித்துச் சொல்லுவதற்குக் காரணமில்லாமையினுல் எல்லாக் கண்களுமே இரண்டுக்கும் ஸமம், என்பது சொல்லப்படுகின்றது. என்று சொல்லுகிறார்—'சந்திரனைப்போலவும்' என்று ஆரம்பித்து. ஒரேகாலததில் அனுக்ரஹம், ப்ரதாபமிவைகள் ஒன்றுக்கொன்று விரு த்தங்களாகையினுல், அவைகளுக்கு விஷயத்தைப் பிரித்துக் காட்டுகி ருர—'அதாவது' என்று ஆரம்பித்து. அதையே மேலே சொல்லப்போ கிறதைக்கொண்டு ஸ்த்தாபிககிருர்—'ரக்ஷாம்ஸி' என்று ஆரம்பித்து. [illegible]திம்' என்று முன்புசொல்லி இருந்தபோதிலும் மறு,

1 பகவத்கீதை - 11 - 36.

ஸிஹீதாநிஹிஶோஷ்யந்தி ஸவேபநஸோஷந்தி வஹ்நிஜ்வாலா:" என்றவல வோ மேலே சோல்லப்போகிறா. மிகவும் ஜ்வலித்துக்கோண்டிருக்கிற ப்ரளயகாலாக்நியைப்போல் எல்லாவறறையும் ஸம்ஹரிப்பதற்குத்தகுந்த முகங்களை உடையவராகவும், தேஜஸ்ஸாவது அயலாரை அடக்கும்படி யான ஸாமர்த்தியம், உம்முடையதாகிய தேஜஸ்ஸினால் இந்த லோகத்தைத்தபித்துக் கோண்டிருக்கிற உம்மைப்பார்க்கிறேன். இப்படிப்பட்டவராயும் எல்லா வற்றையும் ஸ்ருஷ்டிப்பவராயும். எல்லாவற்றிற்கு மாதாரமானவராகியும் எல்லாவற்றையும் நியமிபபவராகியம், எல்லாவற்றையும் ஸம்ஹாரம் செய்பவராகியும், ஜ்ஞானம் முதலிய அளவில்லாத குணங்களுக்கு ஸமுத்ரமாகியும், ஆதிமத்யம் அந்தமில்லாதவராயும், இப்படிப்பட்ட திவ்விய விக்ரஹத்தை உடையவராயுமிருக்கிற உம்மை நீர் உபதேசம் செய்ததைப்போலவே நேரில் பார்க்கிறேன் என்று அர்த்தம். ஒரு திவ்

படியும், 'தீப்தஹுதாஶவக்த்ரம்' என்று விஶேஷித்துச் சொல்லி இருப்பது முகத்தினால் செய்யப்படுகிற லோகங்களை விழுங்குகிறதாகிற விஶேஷத்தைச் சொல்லுவதில் தாதபர்யத்தினால், என்கிற அபிப்ராயத்தினால சொல்லுகிறார்—'மிகவும் ஜ்வலித்துக்கோண்டிருக்கிற' என்று ஆரம்பித்து. 'எல்லாவற்றையும் ஸம்ஹரிப்பதற்குத் தகுந்த' என்று இரண்டுக்கும் பொதுவான ஸ்வபாவத்தைச் சொலலுகிறது. இவ்விடத்தில் அக்நியே முகம், என்று மற்றவர்கள் சொல்லி இருப்பதைத் தள்ளுவதற்காக 'காலாநலஸந்நிபாநி' என்று மேலே சொல்லப்போகிறதை நினைத்துக்கொண்டு. 'காலாக்நியைப்போல்' என்று சொல்லப்பட்டது. வஸுக்களின கூட்டத்திற்குள்பட்ட பாவகன் தனியாகசசொல்லப்பட்டான் 'விஶ்வதோமுகம்' என்று சொல்லி இருக்கிறபடியினால் இவ்விடத்தில் தேஜஸ்ஸு என்னும் பதத்தினால் மற்றவர்களை ஸகாயமாக அபேக்ஷிக்காமை.சொல்லப்படுகிறதல்ல, ப்ரகருதத்தி லுபயோகப்படாமையினால், ஆகையினால் அதற்குத் தகுநத அர்த்தத்தைச்சொல்லுகிறார்—'தேஜஸ்ஸாவது' என்று 1 'காலஶ்சவதிஹந்தாநி' என்பவை முதலியவைகளுக்குக் காரணத்தைக்காட்டி இருக்கிறது இது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'உம்முடையதாகிய'என்று ஆரம்பித்து. முதலில் கேட்கப்பட்டதும், பிறகு திவ்வியக்கண்ணினால் நேராகப் பார்க்கப்பட்டதுமாகிய, எலலா ஆகாரங்களையும் சேர்த்துச் சொல்லுகிறார்—'இப்படி' என்று ஆரம்பித்து. ஒருதேகத்திற்கு அனேகம் கைகள் முகங்களிருப்பது முன்பு கேட்கப்பட்டு மிருக்கிறது, பார்க்கப்பட்டு மிருக்கிறது. வயிறு முதலியவைகள் அனேகம் என்பது எப்

1 மஹா பாரதம் உதயோக பர்வம்

விய தேஹகத்தில் அனேகம் வயிறு முதலியவைகள் எப்படி ஸம்பவிக்கும்? என்னில், இவ்விதமாகப் பொருந்தும். அளவில்லாத விசாலத்தை உடைய ஒரு இடுப்பிலிருந்து மேல்பாகத்தில் கீழ்ச்சொல்லியபடி அனேகம் வயிறு முதலியவைகளும் கீழ்ப்பாகத்தில் முன்பு சொல்லியபடி அனேகம்

படிப பொருந்தும், என்று ஆக்ஷேபிக்கிறார்—'ஒரு திவ்விய தேஹத்தில்' என்று ஆரம்பித்து. பரிஹரிக்கிறார்—'இப்படி' என்று ஆரம்பித்து,ஶாஸ்த்ரத்தில் சொல்லி இருப்பதற்குத் தக்கபடிஎல்லாம் சொல்லவேண்டியது, என்று தாத்பர்யம். 'அளவில்லாத' என்பவை முதலியவைகளுக்குக் கருத்தாவது என்னவெனில்1 'ஸர்வதோநந்தரூபம்'

என்று அவயவங்கள் அனேகம் என்பது மாத்ரம் சொல்லப்பட்டபடியினால் ரூபம் ஒன்று என்று ஏற்படுகிறது. ஒரே விக்ரஹத்தைப்பற்றிய முன்பின் ஸந்தர்ப்பங்களை பராமர்சிப் பதினாலும் இதுவே உசிதம் "வஶ்யேயாநுரூபாணி" என்று ஆரம்பித்திருக்கிற படியினால் இவ்விடத்திலும் வயிறு முதலியவைகள் அனேகம் என்பது அனேகம் விக்ரஹங்களைப் பற்றியது, என்பதும் ஸரியல்ல. அப்படியானால் அனேக விக்ரஹங்களை உடைய, என்றிவ்வளவே சொல்லவேண்டியதாகும் அனேகம் ஶரீரங்களில் அனேகம் கைகள் அனேகம் வயிறுகள் இருக்கின்றன என்பவை முதலியது விஶேஷித்துச்சொலல வேண்டியதில்லையல்லவா. அனேகம் வயிறு முதலியவைகளை உடையரூபமும் பாஞ்சராத்ர ஶாஸ்த்ரத்தில அறியப் படவில்லை, என்பதும் ஸரியல்ல. அந்த ஶாஸ்த்ரம் இப்பொழுது முழுமையும் பரவி இருக்கவில்லையாகையினால், நாரதர் முதலியவர்களால் பார்க்கப்பட்ட ரூபத்தையும், இப்பொழுது அந்த ஶாஸ்த்ரத்தில் நாம் பார்க்கவில்லை. இதைவிட வேறுவிதமான விஶ்வரூபமே நாரதரால் பார்க்கப்பட்டது. அதைவிட வேறு தருதராஷ்டிரனால் பார்க்கப்பட்டது. ஆகையினால் வெவ்வேறு ஸம்ஹிதைகளில், வராஹம், நரஸிம்மம் முதலிய ரூபத்திற்கு வெவ்வேறான அமைப்புகளும் வர்ணங்களும், கைமுதலியவைகளும் விசித்திரங்களாக எப்படி இருக்கின்றனவோ. அபபடிக்கே ஸ்ரீ விஶ்வரூபவிக்ரஹத்திலும் வசனம் சொல்லி இருப்பதைக்கொண்டு அந்தந்த விதமான விசித்ரங்களான தன்மைகளை அங்கீகரிக்கிறோம். ஆகையினால் கிளைகள் வேர்கள் அனேகங்களாக இருந்தபோதிலும் கட்டை ஒன்றாக இருப்பதினால் மரம் ஒன்றாக இருப்பதைப்போல் கைகள் வயிறுகள் முதலியவை அனேகங்களாக இருந்தபோதிலும் அனேகம் என்று சொல்லப்படாத ரூபம் ஒன்றாக

1 பகவத்கீதை - 11 - 16.

கால் முதலியவைகளும், அதில் ஒவ்வொரு முகத்திலும் இரண்டு கண்க ளும் இருக்கின்றனவாகையினால் விரோதமில்லை. 19

பா] இப்படிப்பட்ட உம்மைப்பார்த்து தேவர் முதலியவர்களும் நானும் பயப்படுகிறோம், என்று சொல்லுகிறான்,

𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑍋𑌰𑌿𑌦𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌹𑌿 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌯𑍈𑌕𑍇𑌨
𑌦𑌿𑌶𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃। 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 𑌰𑍂𑌪𑌮𑍁𑌗𑍍𑌰𑌂 𑌤𑌵𑍇𑌦𑌂 𑌲𑍋
𑌕𑌤𑍍𑌰𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 ॥ 20

ப - ரை] 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 பெரியமனத்தை உடைய க்ருஷ்ண, 𑌤𑍍𑌵𑌯𑍈𑌕𑍇𑌨 ஒருவராகிய, உம்மால், 𑌇𑌦𑌂 இந்த, 𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑍋𑌃 ஆகாசம் பூமி இவைகளுடைய, 𑌅𑌨𑍍𑌤𑌰𑌂 நடுவானது, 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 வ்யாபிக்கப் பட்டது, 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 எல்லா, 𑌦𑌿𑌶𑌶𑍍𑌚 திக்குக்களும், (வயாபிக்கப்பட்டன) 𑌤𑌵 உம்முடைய, 𑌇𑌦𑌂 இந்த 𑌅𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 ஆச்சரியமாயும், 𑌉𑌗𑍍𑌰𑌂 பயங்கர மாயுமிருக்கிற, 𑌰𑍂𑌪𑌂 ருபத்தை, 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 பார்த்து, 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌂 மூன்று விதமான ஜனங்களும், 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂 மிகவம் பயப்படுகின்றது.()

பா] 𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑍋𑌃 என்னும் பதங்கள் மேலே இருக்கிற லோகங் களையும் கீழே இருக்கும் லோகங்களையும் குறிப்பதற்காக. இந்த லோகங்

இருப்பதினால், ரூபம் ஒன்று என்பதும் உசிதம், என்று இவை எல் லாம் முன்பு சொல்லியபடி என்னும் பதத்தினால் குறிக்கப்பட்டது. ஒரு முகத்தில் இரண்டு கண்கள், என்பதற்கு ஒவ்வொரு முகத்திலும், என்று அர்த்தம். 19

‘இப்படிப்பட்ட’ என்பதற்கு மிகவும் பயங்கரமான ரூபத்தை யுடைய என்றர்த்தம. ‘𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂’ என்கிற விசேஷணத்தை அனுஸரித்து லோக என்னும் பதம் ஜனங்களைச்சொல்லுகிறது.என்று சொல்லுகிறார்? ‘தேவர்முதலியவர்களும்’ என்று 1 ‘𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑌥𑌾𑌹𑌮𑍍’ என்று மேலே சொல்லப்போகிறதை யோசித்து ‘நானும்’ என்று சொல்லப்பட்டது. அளவில்லாததென்பது அனேக இடங்களில் சொல்லப்பட்டபடியினால் அளவிடப்பட்ட இர ண்டு லோகங்களில் வ்யாபித்திருக்கிறதென்று சொன்னது அதனால குறிக்கப்பட்ட இரண்டுவித லோகங்களின் கூட்டங்களையும் குறிப்பதற் காக என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்— ‘𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑍋𑌃 என்னும் பதம்’ என்று 2 ‘𑌅𑌨𑍍𑌤𑌰𑌮𑌵𑌕𑌾𑌶𑌾𑌵𑌧𑌿 𑌪𑌰𑌿𑌧𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌧𑌿𑌭𑍇𑌦

1 பகவத்கீதை - 11 - 23.
2 நாமலிங்கானு சாஸனம் 3 - காண்டம் நானார்த்தவர்க்கம் 347.

களின் ஆச்ரய மாவது—இடம். எந்த இடத்தில் இந்த லோகங்களிருக்கின்றனவோ, அந்த இடங்களெல்லாமும் திக்குக்களெல்லாமும் நீர் ஒருவரால் வ்யாபிக்கப்பட்டன அளவில்லாத நீளம் விசாலம் இவைகளையுடையதாயும் மிகவும் ஆஶ்சர்யமாயும் மிகவும் பயங்கரமாயும் இருக்கிற உம்முடைய இந்த ரூபத்தைப்பார்த்து யுத்தத்தைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசையினால் வந்திருக்கிற ப்ரும்மா முதலிய தேவர்கள் அஸுரர்கள் பித்ருக்களின் கூட்டம் ஸித்தர்கள் கந்தர்வர்கள் யக்ஷர்கள் ராக்ஷ

தாடிமெ-ஜ்' என்று அனேக அர்த்தங்களைச்சொல்லுகிற ஆச்ரயம் என்னும் பதத்திற்கு ப்ரக்ருதத்திற்கு அநுகுணமான அர்த்தத்தைச் சொல்லுகிறார்.—'இடம்' என்று ஶக்தி விஶேஷத்தினால் தடங்கல் விரோதம் முதலியவைகளில்லையென்கிற அபிப்ராயத்தினால் இடத்தை விவரித்துக் கொண்டுசேர்ந்த அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'எந்த இடத்தில்' என்றாரம்பித்து, 'அளவில்லாதநீளம் விஶாலம்இவைகளையுடையதாயும்'என்பது முன்புசொன்னதைச்சேர்த்துச்சொல்லப்பட்டது. இதின்கருத்தாவது கீழ்மேல்வாக்யங்கள் விக்ரஹத்தைப்பற்றியவைகளானபடியினால் நடுவிலேஸ்வரூபம்வ்யாபித்திருப்பது,என்று சொல்லுவதற்குப்ரயோஜனமில்லாமையினாலும்,விக்ரஹம்மிகவும்பெரிதுஎன்பதுஸ்பஷ்டமாகச் சொல்லப்பட் டிருக்கிறபடியினாலும் இங்கு வ்யாபித்திருக்கிறது என்று சொல்லியிருப்பது விக்ரஹத்தைப்பற்றியதுதான், என்று. இவ்விடத்தில் 'லோகத்ரயம்' என்னும் பதத்தினால் பூமி முதலிய லோகங்கள் சொல்லப்படவில்லை, அவைகளில் 'ப்ரவ்யதிதம்' (மிகவும் பயந்துவிட்டது.என்று சொல்லியிருப்பது பொருந்தாதாகையினால், ஆகையினால் 'மஞ்சா: க்ரோஶந்தி' (கட்டில்கள் கூப்பிடுகின்றன) என்கிற இடத்திலேபோல அதிலிருக்கும் ப்ராணிகளையே செல்லவேண்டும், ஆகையினால் லக்ஷணைசொல்லுவதைப் பார்க்கிலும் 'லோக' என்னும்பதமே முக்யமாகவே ஜனங்களைச் சொல்லுகிறதென்பது சிறந்தது. சத்ரு, மித்ரன், இரண்டு வகுப்பிலும் சேராதவன், என்று ஜனங்கள் மூன்றுவிதமென்பதும் ப்ரஸித்தம் அவ்வித ஜனங்களெல்லாம் யுத்தத்தைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசையினால் வந்திருக்கின்றன, எனபதும் ஏற்பட்டிருக்கிறது, ஆகையினால் மூன்று லோகங்களிலுமிருக்கும் சிற்சில புருஷர்கள் பயந்ததைப் பார்த்ததினால் 'லோகத்ரயம்' என்று சொல்லியிருக்கிறது என்று ப்ரமிக்கவேண்டாம். இது அர்ஜுநனுடைய ஊஹமுமல்ல பார்த்ததையே முழுமையும் இங்கே சொல்லுகிறபடியினால் இதையெல்லாம் சொல்லுகிறார்—'யுத்தத்தை' என்றாரம்பித்து. இவ்விடத்தில் தேவர்கள் அஸுரர்கள் முதலியவர்களை எடுத்தது மனு

ஸர்கள் இவர்களில் விரோதிகள் பக்திமான்கள மத்யஸ்தர்கள் ஆகிய மூன்றுவித ஜனங்களும் மிகவும் பயந்துவிட்டது ஹோதநு அளவிட முடியாத மனதின் வ்யாபாரத்தையுடையவராகிய பகவானே. இவர்களுக்கும் அர்ஜுனனுக்குப்போலவே ப்ரபஞ்சத்திற்கு ஆதாரமாகிய தன்னுடைய ரூபத்தைப்பார்ப்பதற்குக் காரணமாகிய திவ்யமான கண் பகவானால் கொடுக்கப்பட்டது. எதற்காகவெனில் அர்ஜுனனுக்குத்தன்னு

ஷ்யர்களை விலக்குவதற்காக. யுத்தத்திற்காக வந்திருக்கிற எல்லோரும் பகவானுடைய விக்ரஹத்தைப் பார்க்கவில்லை யாகையினால், 'வ்' என்னும் உபஸர்க்கத்தோடு சேர்ந்ததாதுவின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'மிகவும் பயந்துவிட்டது' என்று. மஹாத்மா என்னும் பதம் கம்பீரமான புத்தியை யுடையவர்களிடத்தில ப்ரஸித்தமாகச் சொல்லப்படுகிறபடியினாலும், விக்ரஹம் பயங்கரமாக இருப்பதைப்போலவே அபிப்ராயத்தை அறியமுடியாமையும் பயப்படுவதற்குக் காரணமாகையினாலும், இந்த அர்த்தமே இவ்விடத்தில் உசிதம், என்கிற அபிப்ராயத்தினால சொல்லுகிறார்—'அளவிடமுடியாத' என்றாரம்பித்து. இங்கு 1 'ஏஶ்யோஶ்வராய்' என்றல்லவோ ஆரம்பிக்கப்பட்டது. அப்படியிருக்க மனுஷ்யர்களைப்போலவே மாம்ஸமயமான கண்ணையுடைய தேவர் முதலியவர்களுக்கும் பகவானுடைய விஶ்வரூப விக்ரஹத்தின் ஸாக்ஷாத்காரமுண்டாயிற்று என்று எப்படி சொல்லப்படுகிறது; என்கிற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்—'இவர்களுக்கும்' என்றாரம்பித்து. ஶிஷ்யனாகவும் மிகவும் வணங்கினவனாகவும் மிகுந்த பக்தியை யுடையவனாகவும் இருக்கிற அர்ஜுனனுக்குத் தன்னுடைய ரூபத்தைக் காட்டவேண்டியது அவசியம், அதற்காக அவனுக்கு மாத்திரம திவ்யமான கண் கொடுக்கப்பட்டது. 2 'தேவா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்ஶநகாங்க்ஷிண:' என்று மேலே சொல்லவும் போகிறார், ஆகையினால் பொதுவாக எல்லா ஜனங்களுக்கும் திவ்யமான கண் கொடுப்பதற்குக் காரணம் தெரியவில்லை, என்கிற அபிப்ராயத்தினால் ஆக்ஷேபிக்கிறார்—'எதற்காக' என்று. ஸமாதானம் சொல்லுகிறார்- 'அர்ஜுனனுக்கு' என்றாரம்பித்து. தேவர் முதலியவர்களுக்கும் இந்த ரூபத்தைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசை ஸம்பவிக்குமாதலாலும், அவதார ரூபத்தைப்போலவே இந்த ரூபத்தையும் பார்ப்பதற்குக் காரணமான ஸுக்ருதம் எல்லோருக்கும் ஒரேகாலத்தில் பரிபாகத்தை அடையலாமாகையினாலும், அல்பர்களைப்போலவேபெரியோர்களுக்கும்

---

1 பகவத்கீதை - 11 - 9. 2 பகவத்கீதை-11-52.

டைய ஐஶ்வர்யம் எல்லாவற்றையும் காட்டுவதற்காக, ஆகையினால் 'த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரம் தவேதம் லோகத்ரயம் ப்ரவ்யதிதம் மஹாத்மந்' என்று சொல்லப்படுகிறது. 20

அமீ ஹி த்வா ஸுரஸங்கா விசந்தி கேசித்பீதா: ப்ராஞ்ஜலயோ க்ருணந்தி । ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷிஸித்தஸங்கா: ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி: புஷ்கலாபி: ॥ 21

ப - ரை] அமீ - இந்த, ஸுரஸங்கா: - தேவர்களின்கூட்டங்கள், த்வா - உம்மை, விசந்தி - ப்ரவேசிக்கிறார்கள்(அதாவது ஸமீபத்தில் வருகிறார்கள்) (அவர்களுக்குள்) கேசித் சிலர், பீதா: பயந்தவர்களாய், ப்ராஞ்ஜலய: கைகளைக்கூப்பிக் கொண்டவர்களாய், க்ருணந்தி (ஸ்தோத்திரங்களை)ச் சொல்லுகிறார்கள், மஹர்ஷிஸித்தஸங்கா: மஹாருஷிகள் ஸித்தர்கள் இவர்களின் கூட்டங்கள், ஸ்வஸ்தி மங்களங்கள் உண்டாகவேண்டும் இதி என்று, உக்த்வா சொல்லி, புஷ்கலாபி: பூர்ணங்களான, ஸ்துதிபி: ஸ்தோத்திரங்களினால், த்வா உம்மை ஸ்துவந்தி ஸ்தோத்திரம் செய்கிறார்கள். 21

பா] உயர்ந்தவர்களான இந்தத் தேவர்களின் கூட்டங்கள் ப்ரபஞ்சத்

பயத்தை உண்டாக்குதல் முதலியவைகளினாலே தடங்கலில்லாத தன்னுடைய ஐஶ்வர்யத்தை பரகாசப்படுத்துவதினால் ப்ராக்ருதத்தில்உபயோகமிருப்பதினாலும், எல்லோருக்கும் திவ்யமான கண்ணைக் கொடுத்தார் என்று தாத்பர்யம். இதையே அர்ஜுநனுடைய வார்த்தையினாலும் உறுதிப்படுத்துகிறார்—'ஆகையினால்' என்றாரம்பித்து. 20

"விசந்தி" என்கிற இடத்தில், ஸம்ஹாரம் செய்தல் முதலியது சொல்லப்படவில்லை. ஸ்தோத்திரம் முதலியவைகளோடு சேர்த்துச் சொல்லி இருக்கிறபடியினாலும், த்ருதராஷ்டிரன் பிள்ளைகளைப்போல அவர்களுக்கும் ஸமீபத்தில் மரணமில்லாமையினாலும்,மற்றவர்கள்சொன்ன பூமியில் அவதாரம் செய்திருக்கிற தேவதைகளைச்சொல்லுகிறது. என்பதற்கோ,மேலே சொல்லப்போகிற"வீக்ஷந்தே"என்பவைமுதலியவைகளோடு விரோதம் வருகிறபடியினாலும், ஆகையினால் இவ்விடத்தில் ஸமீபத்தில் வருவதாகிய ஸேவையின் ப்ரகாரம் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'உயர்ந்தவர்களான' என்று ஆரம்பித்து. "கேசித்பீதா:" என்பதினால் தைர்யமில்லாதவர்களைப்பற்றித் தனித்துச்சொல்லி இருப்பதினால், இந்த வாக்

திற்கு ஆதாரமாகிய உம்மைப்பார்த்து, ஸந்தோஷத்தோடேகூடிய மனதை உடையவர்களாய்க்கொண்டு உம்முடைய ஸமீபத்தை அடைகிறார்கள். அவர்களுக்குள்ளேயே சிலர் மிகவும் பயங்கரமாகவும் மிகவும் ஆஶ்சரிய மாகவுமிருக்கிற உம்முடைய ரூபத்தைப்பார்த்து, பயந்தவர்களாய்க் கைகளைக்குவித்துக்கொண்டு, தங்கள் ஜ்ஞானத்துக்குத் தகுந்தபடி ஸ்தோத்திரங்களாக இருக்கிற வாக்யங்களைச் சொல்லுகிறார்கள். இன்னும் சில

பா] யுத்தத்தைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையினால் வந்திருக்கிற ஸகலமான தேவதைகள் கந்தர்வர்கள், ஸித்தர்கள், யக்ஷர்கள், வித்யாதரர்கள், கிந்நரர்கள், கிம்புருஷர்கள, முதலிய லோகம், உம்முடைய அனுக்ரஹத்தினால் எல்லாவற்றிற்கும் ஈச்வரனாகிய உம்மைப்பார்த்து, உம்முடைய கீர்த்தியினால் எல்லாம் ஸந்தோஷப்படுகிறது. ப்ரீதியையும் செய்கிறது. உம்மைப்பார்த்து ராக்ஷஸர்கள் பயந்தவர்களாய் எல்லாத்

தா] 'ஸ்தாநேஹ்ருஷீகேச' என்கிற ச்லோகம் ஸ்ரீவிஷ்ணுபஞ்சரம் முதலியவைகளில் உபயோகப்படுத்தப்பட்ட மந்த்ரம் என்று ப்ரஸித்தம். ஸ்தாநே என்பது இடத்தில் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'யுக்தம்' என்று. இவ்விடத்தில் ஜகத் என்னும் பதத்தினால் சொல்லுகிற அர்த்தத்தையும் அதற்குக் கீர்த்தியினால் ஸந்தோஷம் உண்டாவதற்குக் காரணத்தையும் ப்ரகாசப்படுத்துகிறார்—'யுத்தத்தை' என்று ஆரம்பித்து. 'ப்ரஹ்ருஷ்யதி' என்பதினால இஷ்டமான அதிதி வந்ததைப்போலக் கண் மனஸ்ஸு இவைகளுக்கு ப்ரீதி சொல்லப்படுகிறது. அநுரஜ்யதே என்பதினாலோ தகப்பனார் முதலியவர்கள் இடங்களில் பிள்ளை முதலியவர்களுக்குப்போல ஸ்நேஹம் சொல்லப்படுகிறது. ஆகையினால் புனருக்தி இல்லை. 'உம்மைப் பார்த்து' என்பதினால், ராக்ஷஸர்களுக்குப் பயமுண்டாவதற்குக் காரணத்தைக்காட்டி இருக்கிறது. கீர்த்தியினால் என்பதைச் சேர்த்துக்கொள்வதோ விருத்தமாகையினால் யுக்தமல்ல.

திக்குக்களையும் குறித்து ஓடுகிறார்கள். ஸித்தர் முதலிய பக்திமான்க ளுடைய கூட்டங்கள் எல்லாம் நமஸ்காரம் செய்கின்றன. இவை எல் லாம் யுக்தம்தான், என்று முன் பதத்தோடு அன்வயம் சொல்லிக்கொ ள்ள வேண்டியது. 36

பா] யுக்தம் என்பதையே நிரூபிக்கிறார்.

> கஸ்மாச்ச தே ந நமேரந் மஹாத்மந்
> கரீயஸே ப்ரஹ்மணோऽப்யாதிகர்த்ரே ॥ 36½

ப - ரை] மஹாத்மந் - மஹாத்மாவாகிய க்ருஷ்ண, கரீயஸே - சிறந்த வராகிய, ப்ரஹ்மணோऽபி - சதுர்முகனுக்கும், ஆதிகர்த்ரே ஆதியாயும் கர்தாவாயு மிருக்கிற, தே - உம்மின்பொருட்டு, கஸ்மாச்ச - எந்தக் காரணத் தினால், ந நமேரந் - ஸேவிக்கமாட்டார்கள். 36½

பா] மஹாத்மாவாகிய க்ருஷ்ண சிறந்தவராயும் சதுர்முகனுக்கும் ஆதியா

மற்றவர்கள் உம்முடைய குணங்களைச் சொல்வதினால் என்று சொல்வ தோவெனில் அநேகப்பதங்களைக் கல்பிக்கவேண்டி இருப்பதினால் ச்ரம மானது தேவர்கள் அஸுரர் முதலியவர்கள் எல்லோரும் இந்த ரூபத்தைப் பார்த்தார்கள் என்பது 'வீக்ஷந்தே' என்று முன்னமே சொல்லப்பட்டது, என்று தாத்பர்யம். ஸித்த என்னும் பதம் இவ்விடத் தில் பக்திமான்களுடைய கூட்டம் எல்லாவற்றையும் குறிப்பதற்காக, என்கிற அபிப்ராயத்தினால் 'ஸித்தர் முதலிய பக்திமான்களுடைய கூட் டம்' என்று சொல்லப்பட்டது. 36

'கஸ்மாச்ச' என்கிற ஶ்லோகத்தை முன் ஶ்லோகத்தோடு சேர்க் கிறார்—யுக்தம் என்பதையே, என்று ஆரம்பித்து தே என்பது முதல் வேற்றுமைப் பன்மைஎனகிற ப்ரமத்தைவிலக்குவதற்காக(உம்மின்பொ ருட்டு) என்றுசொல்லி இருக்கிறது ஸேவிக்கிறவாகளோ தானாகவே ஏற் பட்டார்கள். கீழ் ஶ்லோகத்திலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டார்க ளாகவுமாம், என்று தாத்பர்யம், ப்ரும்ம, என்னும் பதம் அநேக வஸ் துக்களில் ப்ரயோகிக்கப் படுகிறபடியினால் இவ்விடத்தில் எல்லோரா லும் ஸேவிக்கத் தகுந்தவர் என்பதைத் தெரிவிப்பதற்கு உபயோகமா கையினால் 'சதுர்முகன்' என்கிற பதத்தினால் வ்யாக்யானம் செய்யப் பட்டது. 'ஆதிகர்த்ரே'என்று விசேஷணத்துடன் சொல்லி இருப்பதி னால்விலக்கப்படுகிறவனும், புதிதாய் சதுர்முகனுக்குக் கர்த்தா ஒருவன் இருக்கிறானோ என்கிற ஊஹத்தினால் உண்டாகும் ப்ரமத்தை விலக்கு வதற்காக 'ஆதியாகியும்' என்று பிரித்துச் சொல்லப்பட்டது. கர்த்

கியும் கர்த்தாவாகியு மிருக்கிற உம்மின்பொருட்டு அந்தச்சதுர்முகன் முதலியவர்கள் எந்தக் காரணத்தினால் நமஸ்காரம் செய்யமாட்டார்கள். 36½

அநந்த தேவேஶ ஜக³ந்நிவாஸ
த்வமக்ஷரம் ஸத³ஸத்தத்பரம் யத் |
த்வமாதி³தே³வ꞉ புருஷ꞉ புராண꞉
த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதா⁴நம் || 37½

ப-ரை] அநந்த – அந்தமில்லாதவராயும், தேவேஶ . தேவதைகளுக்கெல்லாம் ஈஶ்வரனாயும், ஜக³ந்நிவாஸ – லோகங்களை யெல்லாவற்றையு மிருப்பிடமாகவுடையவராயுமிருக்கிற (க்ருஷ்ணா) த்வம்-நீர், அக்ஷரம்-அழிவில்லாத ஜீவாத்மா, ஸத³ஸத்-கார்யதசை காரணதசை இவைகளோடு கூடிய ப்ரக்ருதியும், யத்-எந்தப் பரிசுத்த ஆத்மாவானது, தத்பரம்-அவை இரண்டைக் காட்டிலும் மேலானதோ, அதுவும் (நீரே) த்வம் - நீர், ஆதி³தே³வ꞉ - ஆதியாகிய தேவன், புராண꞉ - அநாதியாகிய, புருஷ꞉ - புருஷன், த்வம் - நீர், அஸ்ய - இந்த, விஶ்வஸ்ய ப்ரபஞ்சத்திற்கு, பரம் - மேலான, நிதா⁴நம் - இருப்பிடம், 37½

பா] அளவில்லாதவராகவும், தேவதைகளுக்கெல்லாம் ஈஶ்வரனாகவும், லோகங்களை யெல்லா மிருப்பிடமாகவுடையவராகவுமிருக்கிற க்ருஷ்ணா, நீரே அக்ஷரம் 'நக்ஷரதி' (நாஶமடைகிறதில்லை)என்று ஜீவாத்மா அக்ஷ

தா என்னும் பதத்தினால் நிமித்தகாரணம் என்பது சொல்லப்பட்டபடியினால் ஆதி, என்னும் பதம் உபாதானம் என்னும் காரணத்தைச் சொல்லுகிறது, தனக்கு வேறொரு காரணம் இல்லை, என்று மறுப்பதற்காகவுமாம் 'நம꞉' என்னும் பதத்தோடு சேர்ந்திருப்பதைப்போலவே, நமஸ்காரம் என்கிற அர்த்தம் சேர்ந்திருந்தபோதிலும் நான்காம் வேற்றுமை உண்டு என்று தெரியப்படுத்துவதற்காக நமஸ்காரம் செய்யமாட்டார்கள் என்று சொல்லப்பட்டது. 'வஷடி³ந்த்³ராய [illegible] க்ருஷ்ணாய [illegible] நம꞉' என்றிவை முதலிய ப்ரயோகங்களைப் போலவே இதுவும் 36½

'த்வமக்ஷரம்' என்று முன்னமே சொல்லப்பட்டதினால் இவ்விடத்தில் 'த்வமக்ஷரம்' என்று சொல்லி இருப்பது அதைவிட வேறு அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பது உசிதம் 'தத்பரம்' என்பதின் ஸாமர்த்தியத்தினாலும் இவ்விடத்தில் அக்ஷரம், ஸத் அஸத், என்னும் பதங்

ரம் என்னப்படுகிறது. †'இந்த ஜீவாத்மாபிறக்கிறதுமில்லை. மரணமடைகிறதுமில்லை' என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில் சொல்லப்பட்ட ஜீவாத்மா நாஶமடைகிறதில்லை அல்லவா. ஸத்து அஸத்தும் நீரே, ஸத்து அஸத்து என்கிற பதங்களினால் சொல்லப்பட்டது காரியமாகவும், காரணமாகவு மிருக்கிற ப்ரக்ருதி. பெயர், ரூபம் இவைகளினாலுண்டான பிரிவுகளை உடைத்தாய் இருப்பதினால் கார்யதசையை உடைய ப்ரக்ருதி, ஸத்து என்னும் பதத்தினால் சொல்லப்பட்டது. அவைகளை அடையத்தகாததாகையினால் காரணதசையை உடைய ப்ரக்ருதி அஸத்து என்னும் பதத்தினால் சொல்லப்பட்டது. இவை இரண்டும் நீரே என்று தாத்பர்யம். அப்படிப்பட்ட ப்ரக்ருதியைப் பார்க்கிலும் ப்ரக்ருதியோடு சேர்ந்த ஜீவாத்மாவைப் பார்க்கிலும் வேறாகிய பரிசுத்தாத்மா எதுவோ

கள், தாழ்ந்த தத்வங்களைப்பற்றிச் சொல்லுகின்றன என்பது, நியாயத்தை அனுஸரித்தது அதிலும், பாவம், அபாவம் என்னும் பதங்களினால் சொல்லக்கூடிய விகாரங்களை அடைகிறபடியினால், ஸத் அஸத் என்னும் பதங்கள் அசேதனத்தைச் சொல்லுகின்றன, என்பதும், விகாரம் அற்றிருக்கையினால் அக்ஷரம் என்னும் பதம் ஜீவாத்மாவைச் சொல்லுகிறது, என்பதும் உசிதம், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'நக்ஷரதி' என்று ஆரம்பித்து. ஜீவாத்மாவின் ஸ்வரூபம் விகாரமற்றது என்பதில் ஶ்ருதியைக் காட்டுகிறார்—'இந்த ஜீவாத்மா' என்று ஆரம்பித்து. 'கார்யம் காரணம் இவைகளை' ஸத் அஸத் என்னும் பதங்களினால் சொல்லுவது 1 'இது முதலில் அஸத்தாகவே இருந்தது. அதிலிருந்து ஸத்து உண்டாயிற்று' என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளில் ஏற்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால 'காரியமாகவும் காரணமாகவும்' *என்று சொல்லி இருக்கிறது. ஒரு வஸ்துவினிடத்திலேயே ஸத் அஸத், என்கிற பதங்களை ப்ரயோகித்ததற்குக் காரணத்தைச் சொல்லுகிறார்—*'பெயர் ரூபம்' *என்று ஆரம்பித்து. அக்ஷரம், ஸத் அஸத் என்று சொல்லப்பட்ட எல்லாவற்றையும் குறிக்கிறது, 'தத்' என்னும் பதம், விஶேஷித்து ஒன்றையே சொல்லுவதற்குக் காரணமில்லாமையினால், எள்ளுக்குள் எண்ணெயைப்போலவும் மரங்களுக்குள் நெருப்பைப்போலவும், ஒன்றுக்கொன்று சேர்ந்திருக்கும் இந்தச் சேதனம் அசேதனம் இவ்விரண்டைப் பார்க்கிலும் பாரிசுத்தமான ஆத்மாமேலானது என்றும் ப்ரஸித்தமாக இருக்கிறது, என்று 'ஸதஸத்தத்பரம்யத்' என்பதினால் அனுபவிக்கப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால்,* 'பரிசுத்தாத்மா' *என்று*

---

† கடவல்லீ 1-2-18. 1 தைத்திரீயம்-ஆனந்தவல்லி 7-1.

அதுவும் நீரே. ஆகையினால் நீரே ஆதியாகிய தேவன், அநாதியாகிய புருஷன், 'நிதாநம்' (இந்த ப்ரபஞ்சம் உம்மிடத்தில் வைக்கப்படுகிறது) ஆகையினால் நிதானம் ஶரீரமாகிய இந்த ப்ரபஞ்சத்திற்கு ஆத்மாவாக இருப்பதினால் முக்யமான ஆதாரமாக இருப்பவரும் நீரே, என்று தாத்பர்யம். 37

வேத்தாஸி வேத்யஞ்ச பரஞ்ச தாம
த்வயா ததம் விஶ்வமநந்தரூப ॥ 38

ப - ரை] அநந்தரூப - அளவிடமுடியாத ரூபத்தை உடையக்ருஷ்ண! வேத்தா - அறிபவனாகவும், வேத்யம் - அறியத்தக்க வஸ்துவாகவும், பரம் - மேலான. தாம - அடையவேண்டிய இடமாகவும், அஸி - ஆகிறீர், விஶ்வம் - ப்ரபஞ்சம், த்வயா - உம்மால், ததம் - வ்யாபிக்கப்பட்டிருக்கிறது. 38

பா] இந்த லோகத்தில், அறிபவர் எல்லோரும், அறியப்படும் வஸ்துக்

சொல்லப்படுகிறது. ப்ரக்ருதி ஜீவன் இவைகளைச் சரீரமாக உடையவனாகஇருப்பதும், பரிசுத்தமானஆத்மா அவனுக்கு வசப்பட்டிருப்பதும், காரணமாக இருப்பதற்கு ஸாதகம், என்று சொல்லுகிறார்—'ஆகையினால்' என்று, எல்லா வஸ்துக்களுக்கும் அந்தராத்மாவாக இருப்பதினால், என்று அர்த்தம். 'நிவாஸ' என்னும்பதத்தினால் எவனுக்கு லோகங்கள் எல்லாம் இருப்பிடமோ என்று பிரித்துக்கொள்ளவேண்டியது ஆகையினால் 'நிதாந' என்னும் பதத்தினால் இவ்விடத்தில் கீழ்ச்சொல்லப்படாத ஆதாரமாக இருக்கை சொல்லப்படுகிறது, என்று தெரிவிப்பதற்காக வ்யுத்பத்தியைக் காட்டுகிறார்—'நிதீயதே' என்று ஆரம்பித்து. இத்தால் 'ஸதஸத்' என்றிவைமுதலாகச் சேர்த்துச் சொல்லி இருப்பதற்குக் காரணமாகிய ப்ரபஞ்சத்தைச ஶரீரமாக உடையவனாக இருக்கை சொல்லப்படுகிறது, என்று சொல்லுகிறார்—'ஶரீரமாகிய ப்ரபஞ்சத்திற்கு' என்று ஆரம்பித்து. இத்தால் நிதாநம் என்னும் பதம் இவ்விடத்தில் அவ்யக்தத்தைச் சொல்லுகிறது, என்று சிலர் சொல்லியது நிராகரிக்கப் பட்டது. 37

"வேத்தாஸி" என்றிவை முதலிய இடங்களில் பரமாத்மாவுக்கு அறியும் தன்மை முதலியவைகளை மாத்திரம் சொல்வதில் ஒருவித மேன்மையும் இல்லாததினால், காரண தசையை உடைய வஸ்துக்களுக்கு அந்தர்யாமியாக இருப்பதைக் கீழ்ச் சொல்லி இருப்பதினால் கார்ய தசையை உடைய அறிகிறவர் அறியப்படும் வஸ்துக்கள் இவைகளுக்கு அந்தர்யாமியாக இருப்பதே இவ்விடத்தில் சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'லோகத்தில்' என்று ஆரம்

கள் எல்லாமும் நீரே இப்படியே எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருக்கிற நீரே அடையவேண்டிய உயர்ந்த இடம். உம்மால் ஆத்மாவாக இருந்து கொண்டு சேதனமும் அசேதனமும் கலந்த இந்த லோகம் வ்யாபிக்கப் பட்டது. 38

பா] ஆகையினால் நீரே வாயு முதலிய ஶப்தங்களினால் சொல்லப்படுகிற வர் என்று சொல்லுகிறார்—

வாயுர்யமோ(அ)க்நிர்வருண: ஶஶாங்க:
ப்ரஜாபதிஸ்த்வம் ப்ரபிதாமஹஶ்ச । 38½

ப - ரை] வாயு: - காற்று, யம: - யமன், அக்நி: - அக்னி, வருண: - வருணன், ஶஶாங்க: - சந்திரன், ப்ரஜாபதி: - ப்ரும்மா, ப்ரபிதாமஹஶ்ச - பெரிய பாட்டனாரும், த்வம் - நீரே. 38½

பித்து. 'தாம' என்னும் பதம் அனேக அர்த்தங்களை உடையதாக இருந்த போதிலும் இடத்தில் அதிக ப்ரஸித்தி இருப்பதினால் அந்த அர்த்தமே உசிதம். இடமும் அடைய வேண்டியது, என்று ப்ரஸித்தமாக இருக்கிறது. ஆகையினால் உயர்ந்ததாகிய அடையப்படும் இடமே சொல்லப்படுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'அடைய வேண்டிய உயர்ந்த இடமும்' என்று. அன்றிக்கே, உயர்ந்ததாகிய அடையவேண்டிய இடம் என்று பகவானுக்கு அஸாதாரணமாகிய பரமபதம் சொல்லப்படுகிறதாகவுமாம். அத்துடன் சேர்த்துச்சொல்லி இருப்பதும் முன்போலவே. ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத அப்படிப்பட்ட இடம் ஶ்ருதியில் சொல்லப்படுகிறது. 1 அரம் என்றும் 'ண்யம்' என்றும், இதைவிட மூன்றாவதாகிய ஆகாஶத்தில் இருக்கும் பரமாத்மாவின் லோகத்தில் ஸமுத்ரங்களிருக்கின்றன, என்றும் அது ஐரம்மதீயம் என்கிற குளம் அது ஸோமஸவனம் என்கிற பெயரை உடைய அரசமரம். அது பகவானால் விஶேஷமாக அபிமானிக்கப்பட்ட பரமாத்மாவினுடையமற்றொருவராலும் ஜயிக்கப்படாத பட்டணம். என்றும், அப்படியே 2 ஆயிரம் தூண்களை உடையதாகவும், விஶேஷமாக அபிமானிக்கப்பட்டதாயும் உறுதியாயும், க்ரூரமாயும் இருக்கிற எந்த மண்டபத்தில் தேவதைகளுக்கெல்லாம் தேவதையாகிய பகவான் இருக்கிறாரோ. என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாகவும் விஶேஷமாகவும் இருக்கிற முன்னும் பின்னும் சேர்த்துச் சொல்லி இருப்பதற்கு நடுவில் இருக்கும் 'த்வயாததம்' (என்கிற வாக்கியத்தினால சரீரமாகவும் ஆத்மாவாகவும் இருப்பதே காரணம், என்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுகிறது, எனகிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'உம்மால் ஆத்மாவாக இருந்து கொண்டு' என்று. 38

---

1 சாந்தோக்யம் 8-5-3. 2

பா] எல்லோருக்கும் ப்ரபிதாமஹரும் நீரே, பிதாமஹர் முதலியவரும் நீரே, எல்லா ஜனங்களுக்கும், தகப்பனார்கள் ப்ரஜாபதிகள். ப்ரஜாபதிகளுக்கும் தகப்பனாராகிய சதுர்முகன், ஜனங்களுக்குப் பிதாமஹன். சதுர்முகனுக்கும் பிதாவாகிய நீர் ஜனங்களுக்கு ப்ரபிதாமஹர். பிதாமஹர் முதலியவர்களுக்கு ஆத்மாவாகையினால், அந்தந்தச் ஶப்தங்களினால் சொல்லப்படுகிறவரும் நீரே, என்று தாத்பர்யம். 38½

தா] 1 இந்திரனாகவும், ஸூர்யனாகவும், வருணனாகவும் அக்னியாகவும், சொன்னார்கள். திவ்யரான அழகிய இறகுகளை உடைய கருடன் கிழே இருக்கிறார். ஒன்றாக இருந்து கொண்டிருக்கிற வஸ்துவையே ப்ராம்மணர்கள், அநேக விதமாகச் சொல்லுகிறார்கள். அக்னியாகவும் யமனாகவும் வாயுவாகவும் சொல்லுகிறார்கள்.' 2 அதுவே அக்னி அதுவே வாயு, அதுவே ஸூர்யன், அதுவே சந்திரன், அதுவே பரிசுத்தமாகிய மோக்ஷம், அதுவே ப்ருஹ்மம், அதுவே ஜலம், அவனே ப்ரஜாபதி, என்று அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளின் அர்த்தத்தை விஶதப்படுத்துகிறது, என்கிற அபிப்ராயத்தினால் 'க்ஷபாதகம் விஶ்வம்' என்று கீழ்ச் சொல்லிய, ஶரீரமாகவும் ஆத்மாவாகவும் இருப்பதே 'வாயுர்யமோக்நி:' என்றிவை முதலிய இடங்களில் சேர்த்துச் சொல்லி இருப்பதற்குக்காரணம் என்று சொல்லுகிறார்—'ஆகையினால் நீரே' என்று ஆரம்பித்து. இன்னாருக்கு, என்று விஶேஷித்துச் சொல்லாமையினால் ப்ரபிதாமஹன் என்பது எல்லா ப்ரஜைகளையும் பற்றியது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எல்லாருக்கும் ப்ரபிதாமஹர் நீரே' என்று 'வ' என்னும் பதம், பிதாமஹர் முதலியவர்களையும் சேர்த்துக்கொள்ளுவதற்காக, என்று அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்--'பிதாமஹர் முதலியவர்களும்' என்று. எல்லோருக்கும் ப்ரபிதாமஹராகிய ஒருவர் இல்லாமையினால், அவருக்கு ஆத்மாவாகையினால் இவர் ப்ரபிதாமஹர் என்பது பொருந்தாதாகையினால் வேறுவிதமாக அதைச் சொல்லுகிறார்--'எல்லா ஜனங்களுக்கும்' என்று. ப்ரஜாபதிகளாவது தக்ஷர் முதலியவர்கள் 'வ' என்பதினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட பிதமஹராக இருக்கையோ வெனில் அவர்களுக்கு அந்தர்யாமியாக இருப்பதினால், என்று சொல்லுகிறார்--பிதாமஹர் முதலியவர்களுக்கு' என்று. 38½

---

1 தைத்திரீயம் ப்ராம்மணம் 6-7.

2 தைத்திரீயம் நாராயணம் 1-7.

𑌨𑌮𑍋 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌵𑌃
𑌪𑍁𑌨𑌶𑍍𑌚 𑌭𑍂𑌯𑍋𑌽𑌪𑌿 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 ‖ 39
𑌨𑌮𑌃𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌦𑌥 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌸𑍍𑌤𑍇
𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌤 𑌏𑌵 𑌸𑌰𑍍𑌵 | 39½

ப - ரை] 𑌸𑌰𑍍𑌵 - எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாகிய பகவானே, 𑌤𑍇- உம்பொருட்டு, 𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌵𑌃 - ஆயிரம் தடவை, 𑌨𑌮𑍋𑌨𑌮𑌃 - நமஸ்காரங்கள், 𑌅𑌸𑍍𑌤𑍁 - இருக்கட்டும், 𑌪𑍁𑌨𑌶𑍍𑌚𑌭𑍂𑌯𑍋𑌽𑌪𑌿 - மறுபடியும் மறுபடியும், 𑌤𑍇 - உம்பொருட்டு, 𑌨𑌮𑍋𑌨𑌮𑌃 - நமஸ்காரங்களைச் செய்கிறேன், 𑌅𑌥 - பிற்பாடு, 𑌤𑍇 – உம்பொருட்டு, 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 - முன்பக்கத்திலும், 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌃 – பின்பககத்திலும், 𑌨𑌮𑌃 - ஸேவிக்கிறேன, 𑌤𑍇- உம்பொருட்டு, 𑌸𑌰𑍍𑌵𑌤𑌏𑌵 - எல்லா இடங்களிலும், 𑌨𑌮𑌃 - நமஸ்காரமானது, 𑌅𑌸𑍍𑌤𑍁 - இருக்கட்டும். 39½

பா] மிகவும் ஆஶ்சர்யகரமான வ்யாபாரத்தை உடைய பகவானைப் பார்த்து, ஸந்தோஷத்தினல் மலர்ந்த கண்களை உடையவனாய் அதிகமான பயத்தினல் வணக்கப்பட்டவனாய், எல்லாத் திக்குக்களிலும் நமஸ்காரம் செய்கிறான். 39½

𑌅𑌨𑌨𑍍𑌤𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌂
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌷𑌿 𑌤𑌤𑍋𑌽𑌸𑌿 𑌸𑌰𑍍𑌵𑌃 ‖ 40

ப - ரை] 𑌅𑌨𑌨𑍍𑌤𑌵𑍀𑌰𑍍𑌯 - அளவில்லாத வீர்யத்தை உடைய பகவானே, 𑌅𑌮𑌿𑌤𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌃 – அளவிடப்படாத பராக்ரமத்தை உடைய, 𑌤𑍍𑌵𑌮𑍍 – நீர், 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 - எல்லாவற்றையும், 𑌸𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌷𑌿 - வ்யாபித்திருக்கிறீர், 𑌤𑌤𑌃 - ஆகையினல், 𑌸𑌰𑍍𑌵𑌃 - எல்லாமாகவும் 𑌅𑌸𑌿- ஆகிறீர் 40

பா] அளவில்லாத வீர்யத்தைஉடைய பகவானே, அளவிடமுடியாத பரா

தா] '𑌨𑌮𑍋𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁' என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்ட நமஸ்காரத்தில் விஶ்வரூபத்தைக் காட்டினதினல் ப்ரகாஶம் செய்யப்பட்ட மேன்மை, ஸௌலப்யம், இவைகளை அனுபவித்ததினலுண்டானபயம் ஸந்தோஷம் இவைகளே காரணங்கள், என்கிற அபிப்ராயத்தினல சொல்லுகிறார்—'மிகவும் ஆஶ்சரியகரமான' என்று ஆரம்பித்து 39½

ஆதி ஶேஷனுடைய வீர்யம போன்ற வீர்யத்தை உடைய, என்று வேறு விதமாக அர்த்தம் தோன்றுவதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'அளவில்லாத வீர்யத்தை உடைய' என்று. அமித, என்னும்

க்ரமத்தை உடைய நீர், எல்லாவற்றையும் ஆத்மாவாக இருந்துகொண்டு வ்யாபரித்துக் கொண்டு இருக்கிறீர். ஆகையினால் எல்லாமாகிறீர். எந்தக் காரணத்தினால் நீர் சேதநாசேதனங்களாகிய வஸ்துக்களின் கூட்டம் எல்லாவற்றையும் ஆத்மாவாக இருந்துகொண்டு வ்யாபரிக்கிறீரோ ஆகையினால் சேதநாசேதனங்களாகிய வஸ்துக்களின் கூட்டங்களெல்லாம் உமக்குச் ஶரீரமாகையினால், உமக்கு விஶேஷணமாகையினால் எல்லாவற்றையும் விஶேஷணமாக உடைய நீரே, எல்லாப் பதங்களினாலும் சொல்லப்படுகிறவர் ஆகிறீரென்று அர்த்தம். † ‡'ஸ்வ ஸமாப்நோஷி' என்றிவை முதலாக எல்லா வஸ்துக்களோடும் சேர்த்துச்

பதம் அறியப்படாத. என்கிற அர்த்தத்தைச் சொல்லில் ஶாஸ்த்ரம்முதலிவைகளில் சொல்லி இருப்பதற்கு விரோதம் வருகிறபடியினால்—'அளவிட முடிய பராக்ரமத்தை உடைய' என்று சொல்லப்பட்டது. 'ஸர்வம் ஸமாப்நோஷி' எனகிற இடத்தில் ஆகாசம் முதலியவைகளைப் போல வ்யாபரித்து இருப்பதை விலக்குவதற்காக 1 உள்ளே நுழைந்துகொண்டு நியமித்துக்கொண்டு இருக்கிற எல்லாவற்றிற்கும் ஆத்மாவானவன், என்று அர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில் சொல்லப்பட்ட ஆத்மாவாக இருப்பதில் முடிவு பெறுகிற நியமிப்பதற்காக வ்யாபரித்து இருப்பது சொல்லப்படுகிறது, என்று அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'எல்லாவற்றையும் ஆத்மாவாக இருந்து கொண்டு' என்று 2'இந்த எல்லாம் புருஷனே, 3இந்த எல்லாம் ஆத்துமாதான். இது எல்லாம் நாராயணன் தான், என்றுஅர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளில் ஸர்வ என்கிற பதத்தோடு சேர்த்துச் சொல்லி இருப்பதின் அர்த்தத்தை விஶதப்படுத்துவதற்காக—4'ஸர்வ ஸமாப்நோஷி' என்று முன்பு ஸர்வஎன்னும் பதத்தோடு சேர்த்துச் சொல்லி இருப்பது மற்றொன்று இல்லை, என்று மறுப்பதற்காக இல்லை; பின்னைஎதற்காக, என்னில் சரீரமாகவும் ஆத்மாவாகவும் இருப்பதினால் லேற்பட்ட சேர்ந்த வஸ்து ஒன்று என்பதைச் சொல்லுகிறது, என்று சொல்லப்பட்டது, என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எந்தக் காரணத்தினால்' என்று ஆரம்பித்து. எல்லா வேதங்களிலும் வேதாந்தங்களிலும், இவைகளின் அர்த்தங்களை விஶதப்படுத்துகிற க்ரந்தங்களிலும், பகவானைச் சொல்லுகிற பதங்களைச் சேதநாசேதன வஸ்துக்கள் எல்லாவற்றையும் சொல்லுகிற பொதுவாகவும் தனித்தனியாகவுமிருக்கிற எல்லாப் பதங்களுடனும் சேர்த்துச் சொல்லி இருப்பதற்கு

---

† பகவத்கீதை 11-37. ‡ பகவத்கீதை 11-39.

1 யஜுர்வேதம் ஆரண்யகம் 3-11. 2 புருஷஸூக்தம்

3 சாந்தோக்யம் 25-2. 4 பகவத்கீதை 11-39.

சொல்லி இருப்பதற்கு ஆத்மாவாக வ்யாபித்து இருப்பதே காரணம் என்று ‡'த்வயா ததம் விச்வமநந்தரூப-ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:' என்றும் ப்ரகாசமாகச் சொல்லப்பட்டது 40

ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்
ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி |
அஜாநதா மஹிமாநம் தவேதம்
மயா ப்ரமாதாத் ப்ரணயேந வாபி || 41

யச்சாவஹாஸார்த்தமஸத்க்ருதோஸி
விஹாரசய்யாஸநபோஜநேஷு |
ஏகோதவாப்யச்யுத தத்ஸமக்ஷம்
தத் க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம் || 42

ப-ரை] அச்யுத - ஸ்ரீக்ருஷ்ணா, தவ - உம்முடைய இதம் - இந்த, மஹிமாநம் - மஹாத்மியத்தை, அஜாநதா - அறியாத மயா - என்னால், ப்ரமாதாத் - மோஹத்தினாலேயாவது, ப்ரணயேந வாபி - அதிகபரிசயத்தினாலேயாவது, ஸகா - தோழன், இதி - என்று, மத்வா - நினைத்து, ஹே க்ருஷ்ண - கிருஷ்ணனே, ஹே யாதவ - யதுகுலத்தில் பிறந்தவனே, ஹே ஸகே - நண்பனே, இதி - என்று, ப்ரஸபம்-வணக்கமில்லாமல், யத் - எந்த வார்த்தை, உக்தம் - சொல்லப்பட்டதோ, யச்ச - எதுவும் அவஹாஸார்த்தம் - பரிஹாஸத்திற்காக, விஹாரசய்யாஸநபோஜநேஷு விஹார — விளையாடல், சய்யா - படுக்கை, ஆஸந - உட்காருதல், போஜந - ஸாப்பிடுதல் இவைகளில், ஏக: - ஒருவனாகவாவது, அதவா - இல்லாவிட்டால், தத்ஸமக்ஷம் - ஜனங்களுக்கு எதிரிலாவது, அஸத்க்ருத: - அவமதிக்கப்பட்டவராக, அஸி - ஆகிறீரோ, தத்-அத்தை, அஹம் - நான், அப்ரமேயம் - அளவிடமுடியாத, த்வாம் - உம்மை, க்ஷாமயே - பொறுக்கும்படிப் பிரார்த்திக்கிறேன், 41-41

ச்சரீரமாகவும் ஆத்மாவாகவும் இருப்பதே காரணம் என்கிற இது இந்த ஸந்தர்ப்பத்தில் கிடைத்த அர்த்தம், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஸர்வம் ஸமாப்நோஷி' என்று. 40

---

‡ பகவத்கீதை 11-38.

பா] உம்முடைய அளவில்லாத வீர்யத்தை உடையவனாக இருக்கை அளவில்லாத பராக்ரமத்தை உடையவனாக இருக்கை, எல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாக இருக்கை, எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிப்பவனாக இருக்கை முதலிய மஹிமை எதுவோ அதைத் தெரிந்துகொள்ளாத என்னால் மோஹத்தினாலாவது வெகுகாலமாக உண்டான பழக்கத்தினாலாவது எனக்கு ஸ்நேகிதன் என்று நினைத்து, க்ருஷ்ண, யதுகுலத்தில் பிறந்தவனே, நண்பனே, என்று உன் விஷயத்தில் விநயமில்லாமல், எந்த வார்த்தை சொல்லப்பட்டதோ, பரிஹாஸத்திற்காக, எப்போழுதும் பூஜை செய்யத்

தா] 'மஹிமாநம்' என்று சொல்லப்பட்ட, மஹிமா என்னும் பதம் கீழ்ப்ரஸ்தாவிக்கப்பட்ட மாஹாத்மியங்களை அனுவாதம் செய்கிறது. என்று அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'அளவில்லாத வீர்யத்தை உடையவனாக இருக்கை' என்று ஆரம்பித்து. ப்ரமாதாத்என்னும் பதம அஜ்ஞானத்தைச் சொல்வதாக இருந்தால் அஜானதா என்பதோடு புனருக்தி வருகிறபடியினால் நம்மைப் போன்றவன் என்கிற ப்ரமத்தைச் சொல்லுகிறது, என்று அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு 'மோஹத்தினால்' என்று சொல்லப்பட்டது. ஸ்நேகிதன், என்கிற புத்திக்குக் காரணமாக இருப்பதாகிற ஸ்வாரஸ்யத்தினாலே ப்ரீதியைச் சொல்லுகிற ப்ரணயேந என்கிற பதத்தினால் அந்த ப்ரீதிக்குக் காரணமாகிய வெகுகாலப் பரிசயத்தை உபசாரமாகச் சொல்வது யுக்தம், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'வெகு காலமாக உண்டான பழக்கத்தினால்'என்று. 1'கூடச் சேர்ந்தவர்களாயும் ஸ்நேகிதர்களாயு மிருக்கிற' என்று அர்த்த முள்ள ஶ்ருதிவாக்யத்தில் ஏற்பட்ட ஸ்நேகிதன் என்கிறஜ்ஞானம் மோஹம் முதலியவைகளினால்உண்டாக்கப்பட்டதல்ல, ஆகையினால் லோகத்தி லுண்டானபடி ஸ்நேகிதன், என்கிற புத்தியைச் சொல்லுகிறது. என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'எனக்குஸ்நேகிதன் என்று நினைத்து' என்று. க்ருஷ்ண என்றிவை முதலியது விநயமில்லாமல் சொல்லி இருப்பதின் ஆகாரத்தைக் காட்டுகிறது, என்கிற அபிப்ராயத்தினால் அன்வயத்தைக் காட்டிக்கொண்டு ப்ராக்ருதத்தி லுசிதமாகிய விநய மில்லாமையைச் சொல்லுகிறது, என்பதையும் சொல்லுகிறார்—'க்ருஷ்ண' என்றுஆரம்பித்து 'யாதவ' என்கிற இடத்தில் இருக்கிற வ என்பதினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்ட அவமானங்கள் அநேக விதங்கள் என்பது ஸித்திப்பதற்காக 'அஸத்க்ருதோஸி' என்னும் பதங்களைத் திருப்பி வைத்துக்கொண்டு வாக்யம் வெவ்வேறு என்று வைத்துக்கொண்டு அர்த்தம் சொல்லுகிறார்—'பரிஹாஸத்திற்காக' என்றாரம்பித்து. ஆகையினாலே தான

---

1 முண்டகோபநிஷத் 3-1-1

தக்க நீர் எந்த அவமானம் செய்யப்பட்டீரோ, சேர்ந்து செய்யப்பட்ட விளையாட்டு, படுக்கை, உட்காருதல், போஜனம் முதலியவைகளில், தனிமையிலாவது தம்பலிலாவது. அவமானம் செய்யப்பட்டீரோ, அவை எல்லாவற்றையும், பொறுத்தருளும்படி, அளவிடமுடியாத உம்மைநான் ப்ரார்த்திக்கிறேன் 41-42

𑌪𑌿𑌤𑌾𑌸𑌿 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌚𑌰𑌾𑌚𑌰𑌸𑍍𑌯
𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯 𑌪𑍂𑌜𑍍𑌯𑌶𑍍𑌚 𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌗𑌰𑍀𑌯𑌾𑌨𑍍 ।
𑌨 𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌯𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌃 𑌕𑍁𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑍋
𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑍇𑌽𑌪𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌪𑍍𑌰𑌭𑌾𑌵 ॥ 43

ப - ரை] 𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌪𑍍𑌰𑌭𑌾𑌵 - ஒப்பில்லாத ப்ரபாவத்தையுடைய க்ருஷ்ண, 𑌅𑌸𑍍𑌯 - இந்த, 𑌚𑌰𑌾𑌚𑌰𑌸𑍍𑌯 - ஜங்கமஸ்தாவரங்களாகிய, 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 - லோகத்திற்கு, 𑌤𑍍𑌵𑌂 – நீர், 𑌪𑌿𑌤𑌾 - தகப்பனாராகவும், 𑌗𑍁𑌰𑍁𑌃 - ஆசார்யனாகவும் (ஆகையினாலே), 𑌗𑌰𑍀𑌯𑌾𑌨𑍍 - சிறந்தவரான, 𑌪𑍂𑌜𑍍𑌯𑌃 - பூஜிக்கத்தக்கவராகவும், 𑌅𑌸𑌿 - ஆகிறீர், 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑍇𑌽𑌪𑌿-மூன்று லோகங்களிலும், 𑌅𑌨𑍍𑌯𑌃 - (உம்மைவிட) வேறாகிய, 𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌮𑌃 - உமக்கு ஸமமானவா, 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 - இல்லை, 𑌅𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌃 - மேலானவர், 𑌕𑍁𑌤𑌃-ஏது. 43

பா] ஒப்பில்லாத ப்ரபாவத்தைபுடைய க்ருஷ்ண நீர் இநத எல்லா ஜங்

'அவை யெல்லாலற்றையும்' என்று அவைகள் அனேகங்கள் என்பது சொல்லப்பட்டது. பெரியோர்கள் விஷயத்தில் பரிஹாஸத்திற்காகவும் அவமானம் செய்வது அபராதம் தான் என்கிற அபிப்பிராயத்தினால்— 'ஆகிறீர்' என்று முன்னிலையாகச் சொல்லி யிருப்பதினால் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்—'எப்பொழுதும் பூஜை செய்யத் தக்கநீர்' என்று. 'ஸாக' என்னும பதத்தினாலேறபட்ட அர்த்தத்தை ச்சொலலி யிருக்கிறது—'தனிமையிலாவது' என்று. 41-42

உன்னால பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று ப்ரார்த்திக்கப் பட்ட போதிலும் நான் பொறுப்பேனென்று எந்தக் காரணத்தினால் நிரூபிக்கப் பட்டது என்னைவிட வேறு யாரையாவது ஆஶ்ரயிக்கலாமே எனறு பகவானுடைய அபிபாாய மிருப்பதாக ஊஹித்துக்கொண்டு அதற்கு ஸமாதானமாக காரயத்தையும் காரணத்தையும் சொல்லுவதாக ஆரம்பித்திருக்கு மிந்த இரண்டு ஶ்லோகங்களில் முதல் ஶ்லோகத்தி லிருக்கிற விஶேஷணங்கள் ஒப்பில்லாத ப்ரபாவத்தை யுடையவனாக யிருக்கையை நிருபிக்கின்றன என்கிற அபிப்ராயத்தினால் —'ஒப்பில்லாத ப்ரபாவத்தை யுடைய' என்று முதலில சொல்

கமஸ்தாவரமாகிய லோகத்திற்குத் தகப்பனாகிறீர். இந்த லோகத்திற்கு ஆசார்யனாகிறீர். ஆகையினால் நீர் இந்த எல்லா ஜங்கமஸ்தாவரமாகிய லோகத்திற்கு மிகவும் சிறந்தவரான பூஜிக்கத்தக்கவர். மூன்று லோகங்

லப்பட்டது. தகப்பனார் ஆசார்யன் பூஜிக்கத் தக்கவன் என்னும் பதங்கள், யாருக்கு என்பதை அபேக்ஷிக்கிறபடியினால்—'லோகஸ்ய' (லோகத்திற்கு) என்னும் பதம் எல்லா இடங்களிலும் அன்வயிக்கிறது என்று சொல்லுகிறார்—'இந்த' என்றாரம்பித்து. ஸ்வபாவத்தினாலேயே தகப்பனாராகவும் ஆசார்யனாகவும் இருக்கை மிகவும்பூஜிக்கத்தக்கவனாக யிருப்பதற்குக் காரணம், என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—'ஆகையினால்' என்று. பூஜிக்கத்தக்கவராக இருப்பதில் சிறந்தவராகையாவது இன்னொருவரைவிட என்கிற அளவில்லாதது, என்று தெரிவிப்பதற்காக ஆரம்பித்திருக்கிற—'நத்வத்ஸமோஸ்தி' என்கிற வாக்யத்திற்கு வ்யாக்யானம் செய்யப் போகிறவராய் அதிக ப்ரயோஜன மிருக்கிற படியினால் 'லோகத்ரயேபி' என்னும்பதம் இவ்விடத்திலன்வயிக்கிறது, என்றுசொல்லுகிறார்—'மூன்றுலோகங்களிலும் உம்மைவிட' என்றாரம்பித்து. இவ்விடத்தில் மூன்றுலோகங்கள் என்பதினால் க்ருதகம் அக்ருதகம் க்ருதகாக்ருதகம் என்கிற மூன்று லோகங்களாவது, வேறு ப்ரமாணங்களினால் அறியப்படாதது இதனால் 'லோக்யதே' (அறியப்படுகிறது) என்கிறவ்யுத்பத்தியினால் மூன்று வேதங்களாவது சொல்லப்படுகின்றன. ஸமமாக யிருக்கை வேறு வஸ்துவுக்கே பொருந்துமாதலால் உமக்கு ஸமமானவரில்லை என்பதினாலேயே வேறு வஸ்துவுக்கு பகவானோடு ஸாம்யமில்லை என்று விலக்குவதும் கிடைத்து விடுகிற படியினால் 'அந்ய:' என்னும் பதம் வ்யர்த்தம் என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரிப்பதற்காகவும் வேறொருவன் உமக்கு ஸமமானவன் இல்லை நீரே உமக்கு ஸமமானவர் என்றர்த்தம் ஏற்படுவதற்காகவும் 'உம்மைவிட வேறானவன்' என்று முதலிலேயே 'அந்ய:' என்னும் பதத்திற்கு அன்வயம் சொல்லப்பட்டது' இத்தால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்களாக இருக்கை கர்மங்களுக்கு வசப்பட்டவர்களாக இருக்கை முதலியவைகளினாலே பகவானை விட வேறுபட்டவர்களென்று ப்ரஸித்தர்களான ப்ரும்மா ருத்திரன் முதலியவர்கள் 1 'முதலில் ஹிரண்யகர்ப்பர் இருந்தார் என்றும் 2 அஜனுடைய நாபியில் ஒன்றுண்டானது' என்றும் 3 'எப்பொழுது தமஸ்இருந்ததோ

---

1 யஜுர்வேதம்-4 காண்டம் 1—31.

2 யஜுர்வேதம் 4-6-2

3 ச்வேதாச்வதரம் 4 18

களிலும் உம்மைவிட வேறானவர் கருணை முதலிய எந்தக் குணத்தினா லும் உமக்கு ஸமானமானவரில்லை மேலானவர் ஏது. 43

அப்பொழுது மத்தியான்னமும் ராத்திரியு மில்லை ஸத்தும் அஸத்து மில்லை கேவலம் சிவனே இருந்தான்' என்றும் அர்த்த முள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளில அவரவர்களைச் சொல்லு கிற பதங்களிருக்கிற படியினாலே காரணமாக இருக்கை முதலிய வைகளினால் பகவானுக்கு ஸமமானவர்கள் என்று மொத்தமாகத் தோன்றினபோதிலும், 4'ஆகாஶஸ்தல்லிங்காத்' 5'ப்ராணஸ்ததாநுகமாத்' 6'ஶாஸ்த்ரத்ருஷ்ட்யாதூபதேஶோவாமதேவவத்' 7'ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:' என்றிவை முதலிய ஸூத்ரங்களில் சொல்லியிருக்கும் ந்யாயங்களை அனுஸரித்து. 8'இவன் எல்லா ப்ராணிகளுக்கும் அந்த ராத்மாவாகவும் கர்ம ஸம்பந்தமில்லாதவனாகவும் திவ்யனாகிய தேவ னாகவுமிருக்கிற ஒரு நாராயணன்' என்றும 9'ஒருநாராயணனே இருந் தான் ப்ரும்மாவுமில்லை ருத்திரனுமில்லை, என்று மர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யம் முதலியவைகளில ஏற்பட்ட எல்லாவற்றிற்கு மந்தராத்மாவாக இருக்கை, கர்மஸம்பந்தமில்லாதவனாக இருக்கை, முதலியவைகளை யுடைய பகவானுக்கே அஸாதாரணமான ஸ்வபாவங்களைச் சொல்லு கிற வாக்யங்களிலிருக்கிற ஹிரண்யகர்பப அஜஶிவ முதலிய பதங்கள் பகவானையே சொல்லுகின்றன ஆகையினால் அவர்கள் பகவானுக்கு ஸமமானவர்கள என்கிற ப்ரஸ்தாவமே இல்லை, என்றேற்படுகிறது— '**எந்தக் குணத்தினாலும்**' *என்பதற்கு, எல்லாக் கல்யாண குணங்களினா லும், லோகங்களுக்குக் காரணமாயிருக்கையினாலும் மோக்ஷத்தைக் கொடுப்பதினாலும உமக்கு ஸமமானவர்களில்லை என்பதைப்பற்றிக் கேழ்க்கவே வேண்டியதில்லை என்று தாத்பர்யம். இத்தால் த்ரிமூர்த்தி களும் ஸமரென்றும், ஒன்றென்றும், இவர்களைவிட வேறொருவர் காரண மென்றும் இவர்களில் பகவானைத்தவிர மற்றவர்கள் காரணமென்றும் சொல்லும் பக்ஷங்கள் நிராகரிக்கப்பட்டன, என்றறிய வேண்டியது.* 43

---

4 *சாரீரக ஸூத்திரம்*-1-1-23

5 *சாரீரக ஸூத்திரம்* 1-1-29

6 *சாரீரக ஸூத்திரம்* 1-1-39

7 *சாரீரக ஸூத்திரம்* 1-2-29

8 *ஸுபாலோப நிஷத்* 7

9 *மஹோபநிஷத்* 1-1

தஸ்மாத்ப்ரணம்ய ப்ரணிதாய காயம்
ப்ரஸாதயே த்வாமஹமீஶமீட்யம் ।
பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யு:
ப்ரிய: ப்ரியாயார்ஹஸி தேவ ஸோடும் ॥ 44

ப - ரை] தஸ்மாத் - ஆகையினால், அஹம் - நான், ப்ரணம்ய - ஶரணு கதிபண்ணி, காயம் - சரீரத்தை, ப்ரணிதாய - கீழே விழச்செய்து, ஈஶம் - ஈஶ்வரனுகவும், ஈட்யம்- ஸ்தோத்திரம் செய்யத்தக்கவராகவு மிருக்கிற, த்வாம் - உம்மை, ப்ரஸாதயே - அனுக்ரஹம் செய்யும்படி யாக ப்ரார்த்திக்கிறேன், தேவ - தேவனே, புத்ரஸ்ய - பிள்ளைக்கு, பிதேவ - தகப்பனுர் போலவும், ஸக்யு: - தோழனுக்கு, ஸகேவ - தோழன் போலவும், ப்ரியாய - ப்ரியனுகிய என் பொருட்டு, ப்ரிய: - ப்ரியனுகிய நீர், ஸோடும் - பொறுப்பதற்கு, அர்ஹஸி - தகுந்தவ ராகிறீர். 44

பா] எந்தக் காரணத்தினுல் நீர் எல்லாவற்றிற்கும் தகப்பனுராகவும் பூஜி க்கத்தக்கவராகவும் ஆசார்யனுகவும், கருணை முதலிய குணங்களினுல் எல்லாரையும்விட மேலானவராகவும் ஆகிறீரோ. ஆகையினுல். ஈஶ்வர னுகவும் ஸ்தோத்திரம் செய்யத்தக்கராகவு மிருக்கிற உம்மைச் சரணமாக அடைந்து ஶரீரத்தைக் கீழே விழச்செய்து அனுக்ரஹம் செய்யும்படி

[தா 'தஸ்மாத்' என்பதினுல் முன் ஶ்லோகத்தில்சொல்லிய,ஸ்வபாவத்தி னுலேயே தகப்பனுராக இருக்கை, மிகவும் பூஜிக்கத்தக்கவனுக இரு க்கை, ஆசார்யனுக இருக்கை முதலியதைக் காரணமாகச் சொல்லுகி ருர், என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகிருர்—'எந்தக் காரணத்தி னுல்' என்ருரம்பித்து. 'ப்ரணம்ய' என்றுப்ரபத்தி சொல்லப்படு கிறது. முன்பு சொல்லிய தகப்பனுராக இருக்கை முதலியவற்றைச சொல்லுகிற — 'தஸ்மாத்' என்பதினுலும், 'அஹம்' என்பதினுலும் ஆனுகூல்ய ஸங்கல்பம் முதலிய அங்கங்கள் குறிக்கப்பட்டன. 'ப்ரணி தாயகாயம்' என்பதினுல் '1 எதை மனதினுல்நினைக்கிருனே' என றர்த்த முள்ள ஶ்ருதிவாக்யத்தில சொல்லியிருக்கிறபடியே கரணங்கள் மூன் றும் சேர்ந்திருக்கிறது என்பது காட்டப்பட்டது. 'ப்ரணம்ய ப்ரஸாத யே' என்பதற்கு அனுக்ரஹம் செய்வதற்காக ப்ரபத்திசெய்கிறேன் என்று அர்த்தம் 'ப்ரஸாதயேஸோடும்' என்கிற பதங்களினுல் ஏற் பட்ட அர்த்தத்தைச் சொல்லிகொண்டு உபமானோபமேயங்களுக்

1 யஜுர்வேதம் 6 காண்டம 9-7

ப்ரார்த்திக்கிறேன். எப்படி அபராதம் செய்தவனாக யிருந்தபோதிலும் பிள்ளைக்கும் தோழனுக்கும் நமஸ்காரம் செய்து ப்ரார்த்திக்கப்பட்டவனாய் தகப்பனாரும் தோழனும் அனுக்ரஹம் செய்கிறானோ, அப்படியே மிகவும் கருணை உடையவனாயும் ப்ரியனாயுமிருக்கிற நீர் ப்ரியனாகிய என் பொருட்டு எல்லாவற்றையும் பொறுக்கத் தகுந்தவராகிறீர். 44

𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌹𑍃𑌷𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾
𑌭𑌯𑍇𑌨 𑌚 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂 𑌮𑌨𑍋 𑌮𑍇 ।
𑌤𑌦𑍇𑌵 𑌮𑍇 𑌦𑌰𑍍𑌶𑌯 𑌦𑍇𑌵 𑌰𑍂𑌪𑌂
𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 𑌦𑍇𑌵𑍇𑌶 𑌜𑌗𑌨𑍍𑌨𑌿𑌵𑌾𑌸 ॥ 45

ப - ரை] 𑌜𑌗𑌨𑍍𑌨𑌿𑌵𑌾𑌸 - லோகங்களுக் கிருப்பிடமாக இருக்கிற, 𑌦𑍇𑌵𑍇𑌶 – ப்ரும்மா முதலிய தேவதைகளுக்கும் ஈஶ்வரனாகிய, 𑌦𑍇𑌵-பகவானே, 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 - இதற்குமுன் பார்க்கப்படாத (உம்முடையரூபத்தை) 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 - பார்த்து, 𑌹𑍃𑌷𑌿𑌤𑌃 – ஸந்தோஷத்தை அடைந்தவனாக, 𑌅𑌸𑍍𑌮𑌿 ஆகிறேன், 𑌭𑌯𑍇𑌨 - பயத்தினால், 𑌮𑍇 - என்னுடைய, 𑌮𑌨𑌃 - மனது, 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂𑌚 - மிகவும் நடுங்குகின்றது, 𑌮𑍇 - எனக்கு, 𑌤𑌤𑍍 - அந்த, 𑌰𑍂𑌪𑌮𑍇𑌵 - ரூபத்தையே, 𑌦𑌰𑍍𑌶𑌯 - காட்டும், 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 - அனுக்ரஹம் செய்யும். 45

பா] இதற்குமுன் பார்க்கப்படாததாயும் மிகவும் ஆஶ்சர்யமாயும் மிகவும் பயங்கரமாயு மிருக்கிற உம்முடைய ரூபத்தைப் பார்த்து ப்ரீதியை யடைந்

குப் பொதுவான ஸ்வபாவத்தை நிரூபிக்கிறார்—'எப்படி அபராதம் செய்தவனாக இருந்த போதிலும்' என்றாரம்பித்து. 44

விசித்திரமாக இருந்தபோதிலும் முன்புபார்க்கப்படாத வஸ்துவே ஆஶ்சர்யப்படக்கூடியதென்பதைக் கண்டிருப்பதால், '𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌂' என்பதினால் ஏற்பட்ட அர்த்தத்தைச் சொல்லுகிறார்— 'மிகவும் ஆஶ்சர்யமாயும்' என்று. '𑌭𑌯𑍇𑌨𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂𑌮𑌨𑍋𑌮𑍇' என்பதினால் ஏற்பட்டதாயும், '𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌹𑌿𑌮𑍇𑌘𑍋𑌰𑌸𑍍𑌵𑌾𑌨𑌂𑌰𑍂𑌪𑌂' என்கிற இடத்தில் சொல்லப்பட்டதாயு மிருக்கிற விசேஷணத்தைச் சொல்லுகிறார்—'மிகவும் பயங்கரமாயும்' என்று—'𑌭𑌯𑍇𑌨𑌚' என்கிற இடத்தில் 𑌚 என்பது ப்ரயோஜனமற்றதாகையினாலும் மற்றொரு நடுக்கத்திற்குக் காரணத்தைச் சேர்த்துக்கொள்ளுகிறது என்றர்த்தம் சொல்லுவது யுக்தமல்ல ஆகையினாலும் கீழ்ச்சொல்லிய ப்ரீதியோடு சேர்த்துக்கொள்ளுவதையே சொல்லுகிறதென்று அப்பிராயத்தில் வைத்

தவனுகிறேன். பயத்தினுல் என் மனது நடுங்கியும் விட்டது. ஆகையி னுல் அந்த ப்ரஸன்னமான ரூபத்தையே எனக்குக் காட்டும். என்னிடத் தில் அனுக்ரஹம் செய்யும். ப்ரும்மா முதலிய தேவதைகளுக்கும் ஈஶ்வர னுகிய எல்லா லோகங்களுக்கு மாதாரமாகிய பகவானே, 45

கிரீடிநம் கதிநம் சக்ரஹஸ்தமிச்சாமி
த்வாம் த்ரஷ்டுமஹம் ததைவ।
தேநைவ ரூபேண சதுர்புஜேந
ஸஹஸ்ரபாஹோ பவ விஶ்வமூர்த்தே॥ 46

ப-ரை] ஸஹஸ்ரபாஹோ - ஆயிரம் கைகளையுடைய, விஶ்வமூர்த்தே - ப்ரபஞ்சத்தை ஶரீரமாக உடைய பகவானே, அஹம் - நான், கிரீடிநம் கிரீடத்தை யுடையவராயும், கதிநம் - கதையை யுடையவரா யும், சக்ரஹஸ்தம் - சக்ரத்தைக் கையில் தரித்தவராயும் இருக்கிற, த்வாம் - உம்மை, ததைவ - முன்போலவே, த்ரஷ்டும் - பார்ப்பதற்கு, இச்சாமி

துக்கொண்டு கொஞ்சம்விட்டு அன்வயம் சொல்லுகிறார்—'நடுங்கியும் விட்டது' என்று. முன்பாதியில் சொன்ன நடுக்கத்துடன் ப்ரீதியையுண் டாக்கினது, மேல்பாதியில் சொல்லப்போகிற அர்த்தத்திற்குக் கார ணம், என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'ஆகை யினுல்' என்று 'தத்' என்னும் பதம் முன்பு ப்ரஸித்தமான ஆகாரத் தைச் சொல்லுகிற தாகையினுல் அதினுல் அபிப்ராயத்தில் கொள்ளப் பட்ட ஆகாரத்தைச் சொல்லுகிறார்—'ப்ரஸன்னமான' என்று. இத்தால் அது கேவலம் ப்ரீதிக்கு மாத்திரம் காரணமென்பது காட்டப்பட்டது. சரணமாக அடைந்தவனை அவச்யம் ரக்ஷிக்கவேண்டியது என்கிற அபிப்ராயத்தினுல் என்க்குக்காட்டும் என்று சொல்லப்பட்டது 'தேவ, தேவேஶ' என்று இரண்டு விதமாக அழைத்ததினுல் 1 'ஈஶ்வரர்களுக் கெல்லாம் உயர்ந்த ஈஶ்வரனுயும் தேவதைகளுக்கெல்லாம் உயர்ந்த தேவதையாயுமிருக்கிற அவனை என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்யத்தின் அர்த்தம் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது என்கிற அபிப்ராயத்தி னுல்—' ப்ரும்மாமுதலிய தேவதைகளுக்கும் ' என்ருரம்பித்துச் சொல் லப்பட்டது. இப்பொழுது பார்க்கப்படுகிற ரூபம் 2 'தஸ்மிந்யஸ்ம ஜகத்ஸர்வம் ப்ரதிஷ்டிதம்' என்று சொல்லுகிறபடியே லோகங் களுக்கு ஆதாரமாகக் காணப்படுகிறபடியினுல் 'ஜகந்நிவாஸ' என்பதினு லும் அதுவே சொல்லப்படுகிறது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொ ண்டு சொல்லுகிறார்—'லோகங்களுக்கு ஆதாரமாகிய' என்று 45

ஆசைப்படுகிறேன் (ஆகையினால்), சதுர்புஜேந - நான்கு கைகளை உடைய, தேநைவ - அந்த ரூபேண - ரூபத்துடன் கூடியவராய், பவ - ஆய்விடும். 46

பா] முன்போலவே கிரீடத்தை யுடையவராகவும் கதையை யுடையவராகவும் சக்ரத்தைக் கையில் தரித்தவராகவும் இருக்கிற உம்மைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஆகையினால் முன் இருந்த நான்கு கைகளையுடைய ரூபத்துடன் கூடியவராக ஆய்விடும் ஆயிரம் கைகளையுடைய ப்ரபஞ்சத்தை ஶரீரமாகவுடைய பகவானே. அதாவது இப்பொழுது ஆயிரம் கைகளையுடையவராவும் ப்ரபஞ்சத்தைச் சரீரமாக வுடையவராகவும் பார்க்கபபடுகிற ரூபத்தையுடைய நீர் முன்பிருந்த ரூபத்துடன் கூடியவராக ஆய்விடும் என்றர்த்தம் 46

ஸ்ரீபகவாநுவாச—பகவானாகிய ஶ்ரீ க்ருஷ்ணன் சொன்னார்—

மயா ப்ரஸந்நேந தவார்ஜுநேதம்
ரூபம் பரம் தர்ஶிதமாத்மயோகாத் ।
தேஜோமயம் விஶ்வமநந்தமாத்யம் யந்மே
த்வதந்யேந ந த்ருஷ்டபூர்வம் ॥ 47

ப - ரை] தேஜோமயம் - தேஜோமயமாயும், விஶ்வம் - ப்ரபஞ்சத்திற்கு அந்தர்யாமியாயும், அநந்தம் - முடிவில்லாததாயும், ஆத்யம் - (எல்லாவற்றிற்

[தா 'தேநைவ' என்பதற்கு, முன்புபரபஞ்சத்திற்கு ஆதாரமாகிய ரூபத்தைப் பார்க்கவேண்டுமென்று ஆசையையுடைய நான் அப்படியே அந்த ரூபத்தையே பார்க்கவேண்டும் என்று ஆசைபபடுகிறேன் என்று அர்த்தம் என்கிற ப்ரமத்தை நீக்கிக்கொண்டும் முன்கழிந்ததசையை யுடையவனை இபபொழுது எப்படிக்காட்டமுடியும் என்கிற ஆக்ஷேபத்தை பபரிஹரித்துக்கொண்டும் அன்வயத்தை மாற்றிக் காட்டிக்கொண்டு அநதப்பததிறகு அர்த்தம் சொலலுகிறார்—'முன்போலவே' என்றாரம்பித்து. முன்புபார்க்கப்பட்ட ரூபததிறகு ஸமமானரூபத்தைப்பார்க்க விரும்புகிறேன் என்றர்த்தம். 'ரூபேண' என்கிற இடத்திலிருக்கிற மூன்றும வேற்றுமைகருக்காரணம் என்கிற அர்த்தம் ஸம்பவிக்காதாதலால—'ரூபத்துடன் கூடியவராக' என்று சொலலப்பட்டது. ஆயிரம்கைகளுடனும் பரபஞசமாகிய சரீரத்துடனும் கூடியவருக்கு நான்கு கைகளை யுடைய ரூபத்துடன் கூடியவராக இருக்கை ஸம்பவிக்காது என்கிற ஆக்ஷேபத்தை வெவ்வேறு காலததில ஸம்பவிக்கும் என்று பரிஹரிககிறார்—'இப்பொழுது' என்றாரம்பித்து.

கும்) காரணமாயும், த்வதந்யேந - உன்னைத் தவிர வேறொருவராலும் பார்க்கப்படாததாயு மிருக்கிற, மே - என்னுடைய, ரூபம் - ரூபம், யத் - எதுவோ, இதம் - இந்த, பரம் - சிறந்த, ரூபம் - ரூபம், ப்ரஸந்நேந - அனுக்ரஹத்தை யடைந்திருக்கிற, மயா - என்னால், அர்ஜுந - அர்ஜுந, தவ - உனக்கு, ஆத்மயோகாத் - என்னுடைய கல்யாணகுணத்தினால், தர்ஶிதம் - காட்டப்பட்டது. 47

பா] எந்த என்னுடைய ரூபம் தேஜஸ்ஸுக்களின் கும்பலாயும் ப்ரபஞ்சத்திற்கு ஆத்மாவாகியும் முடிவில்லாததாயும், இது மற்றவைகளையும் குறிப்பதற்காக. ஆதி நடுவு முடிவு இவைகளில்லாததாயும் எனனைத் தவிர மற்றெல்லா வஸ்துக்களுக்கும் காரணமாயும் உன்னைத் தவிர மற்றொருவராலும் பார்க்கப்படாததாயும் இருக்கிறதோ, அப்படிப்பட்ட இந்த ரூபம் ப்ரஸன்னனாகிய என்னால் என்னிடத்தில் பக்தியுள்ளவனாகிய உனக்குக் காட்டப்பட்டது என்னுடைய ஸத்ய ஸங்கல்பனாகை யிருக்கையாகிற குணத்தினால். 47

தா] 'தேஜோமயம்' என்கிற இடத்திலிருக்கும் 'மய' என்னும் விகுதி நிறைந்தது என்னு மர்த்தத்தைச் சொல்லுகிறது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'தேஜஸ்ஸுக்களின் கும்பலாயும்' என்று 'ப்ரபஞ்சத்திற்கு ஆத்மாவாகியும்' என்பதற்கு ப்ரபஞ்சத்தில் வ்யாபித்திருக்கிற என்றர்த்தம், அசேதனத்திற்கு ஆத்மாவாக இருக்கை ஸம்பவிக்காததாலால்—'அநாதிமத்யாந்தம்' என்று முன்பு சொல்லப்பட்ட படியினால். 'அநந்தம்' என்பது மற்றவைகளையும் குறிக்கிறது என்றுசொல்லுகிறார்—'இது மற்றவைகளையும்'என்றாரம்பித்து. 'ஆத்யம்' என்கிறஇடத்தில்இவைகளுக்குஎன்று சொல்லாமையினால் 'எல்லாவஸ்துக்களுக்கும் காரணமாயும்' என்று சொல்லப்பட்டது. 'த்வதந்யேந' என்பதினால்ஏற்பட்டஅர்த்தத்தைசசொல்லுகிறார்—'மற்றொருவராலும்' என்று. அனுக்ரஹம காரணமில்லாமல உண்டாகிற தென்னில் பகவானுக்குப் பக்ஷபாதமும் தயையில்லாமையும் உண்டாகவேண்டி வருகிற படியினால், 'தே' என்பதினால அபிப்ராயமாகக் கொள்ளப்பட்ட அனுக்ரஹத்தின் காரணத்தைச் சொல்லுகிறார்—'என்னிடத்தில் பக்தியுள்ளவனாகிய உனக்கு' என்று. 'யோக' என்னும் பதம் த்யானத்தைச் சொல்லுகிறது என்கிறப்ரமத்தை நீக்குவதற்காக வ்யாக்யானம் செய்கிறார்—'என்னுடைய' என்றாரம்பித்து. 47

பா] வேறு ப்ரயோஜனத்தை விரும்பாத பக்தியைத் தவிர மற்றெந்த உபாயத்தினாலும் உள்ளபடியே இருக்கிற என்னைப் பார்க்கமுடியாது என்று சொல்லுகிறார்—

ந வேதயஜ்ஞாத்யயனைர்ந தானை
ர்ந ச க்ரியாபிர்ந தபோபிருக்ரை: ।
ஏவம்ரூப: ஶக்ய அஹம் ந்ருலோகே
த்ரஷ்டும் த்வதன்யேன குருப்ரவீர ॥ 48

ப - ரை] குருப்ரவீர-குருவம்சத்தில் வீரனாகிய அர்ஜுந, ஏவம்ரூப: - இப்படிப்பட்ட ஸ்வபாவத்தையுடைய, அஹம் - நான், ந்ருலோகே - மனுஷ்யலோகத்தில், த்வதன்யேன - உன்னைத் தவிர வேறொருவனால், வேதயஜ்ஞாத்யயனை:-வேத-வேதத்தை அர்த்தத்துடன் தெரிந்துகொள்ளுதல். யஜ்ஞ - யாகம், அத்யயன - வேதத்தை ஓதுதல் இவைகளினால், த்ரஷ்டும் - பார்ப்பதற்கு, ந ஶக்ய: - தகாதவன், தானை: - தானம் செய்வதினாலும், ந - பார்க்கத்தகாதவன், க்ரியாபி: - கர்மங்களினாலும், ந - பார்க்கத்தகாதவன், உக்ரை: - க்ரூரங்களான, தபோபி:- தபஸ்ஸுக்களினாலும், ந - பார்க்கத்தகாதவன். 48

பா] உள்ளபடியே இருக்கிற நான் என்னிடத்தில் பக்தியையுடைய

தா] இந்த ரூபம் உன்னைத்தவிர மற்றவர்களால் இதற்கு முன்பார்க்கப் படவில்லை என்பது எப்படிப் பொருந்தும், மற்றவர்களாலும் ஏதாவது ஒரு உபாயத்தினால் பார்த்திருக்கக் கூடுமாதலால்,' என்று ஆக்ஷேபித்துக்கொண்டு மேல் ஶ்லோகத்திற்கு அவதாரிகை சொல்லுகிறார்— 'வேறு ப்ரயோஜனத்தை விரும்பாத' என்றாரம்பித்து. 'ஏவம்ரூப:' என்றது ப்ரக்ருதியின் ஸம்பந்தமில்லாத ரூபத்தையுடையவனாக இருக்கிற என்னு மர்த்தத்தைச் சொல்லுகிறது என்னில் க்ருஷ்ணாவதார ரூபம் எல்லாராலும் பார்க்கப்படுகிறது பொருந்தாது, ஆகையினால் மனுஷ்யர்களைவிட வேறுபட்டவனாக இருக்கை ப்ரக்ருதியின் ஸம்பந்தமில்லாதவனாக இருக்கை முதலிய ரூபங்களைச் சொல்லுகிறது என்றபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—'உள்ளபடியே இருக்கிற' என்று ஒரே நிஶ்சயத்துடன் கூடிய பக்தியில்லாதவர்கள் அவதாரரூபத்தைப்பார்க்கிறது மனுஷ்யன் முதலியவைகளுக்கு ஸமமானவன் ப்ரக்ருதிஸம்பந்தமுள்ளவன் என்கிற ஸ்வபாவங்களோடு பார்க்கிறதாகையினால் உள்ளபடியே பார்க்கிறதல்ல, என்று தாத்பர்யம்— த்வத' என்கிற தனிப்பதம் பக்தியையுடையவனைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்—'என்னிடத்தில்' என்றாரம்பித்து. இவ்விடத்தில் 'த்வத்' என்னும் பதத்தினால்

உன்னைவிட வேறு ஒரே நிஶ்சயத்துடன் கூடிய பக்தியில்லாத ஒரு புருஷனாலும் கேவலங்களான வேதம் யாகம் முதலியவைகளினால் பார்க்கத் தகாதவன். 48

𑌮𑌾 𑌤𑍇 𑌵𑍍𑌯𑌥𑌾 𑌮𑌾 𑌚 𑌵𑌿𑌮𑍂𑌢𑌭𑌾𑌵𑍋
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌰𑍂𑌪𑌂 𑌘𑍋𑌰𑌮𑍀𑌦𑍃𑌙𑍍𑌮𑌮𑍇𑌦𑌮𑍍 ।
𑌵𑍍𑌯𑌪𑍇𑌤𑌭𑍀𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌮𑌨𑌾𑌃 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌂
𑌤𑌦𑍇𑌵 𑌮𑍇 𑌰𑍂𑌪𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯 ॥ 49

ப - ரை] 𑌮𑍇 - என்னுடைய, 𑌈𑌦𑍃𑌕𑍍 - இப்படிப்பட்ட, 𑌘𑍋𑌰𑌂 - பயங்கரமான, 𑌇𑌦𑌂 - இந்த, 𑌰𑍂𑌪𑌂 - ரூபத்தை 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 பார்த்து, 𑌤𑍇 - உனக்கு, 𑌵𑍍𑌯𑌥𑌾 - துக்கமும், 𑌮𑌾 - உண்டாகவேண்டாம், 𑌵𑌿𑌮𑍂𑌢𑌭𑌾𑌵𑌃 -

அர்ஜுனனைத் தவிர மற்றவர்களைச் சொல்லில் (1) '𑌨𑌾𑌹𑌂 𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌨 𑌚𑍇𑌜𑍍𑌯𑌯𑌾 । 𑌶𑌕𑍍𑌯 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍋 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿 𑌮𑌾𑌂 𑌯𑌥𑌾' என்று மேலே சொல்லப்போகிறதற்கு விரோதமாகும், ஆகையினால் பக்தியை யுடையவர்களைத் தவிர மற்றவர்கள் என்பது மாத்திரம் சொல்லப்படு கிறது என்று சொல்லுகிறார்—'ஒரேநிஶ்சயத்துடன் கூடிய' என்றாரம் பித்து. '𑌵𑍇𑌦' என்னும் பதம் அர்த்தத்துடன் கூட அத்யயனம்செய் யப்பட்ட வேதத்தைச் சொல்லுகிறது. இத்தால் 2'ஆத்மா கேழ்க்கத்தகுந்தவன்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்கியத்தில் சொல்லப்பட்ட கேழ்பது சொல்லப்பட்டது '𑌅𑌧𑍍𑌯𑌯𑌨𑍈𑌃' என்று அர்த்தமில்லாத அத்ய யனம் தனித்துச் சொல்லப்பட்ட படியினால். '𑌕𑍍𑌰𑌿𑌯𑌾' என்னும் பதத் தினாலும், கோபலீவா தந்யாயத்தினால் யாகம் அத்யயனம் முதலியவை களைத்தவிர ஹோமம் முதலியதர்மங்கள் சொல்லப்படுகின்றன என் கிற அபிப்ராயத்தினால்—'வேதம்யாகம் முதலியவைகளினால்' என்று சொல்லப்பட்டது. (3)'அப்படிப்பட்ட இந்தப்பகவானை ப்ராம்மணர்கள் வேதத்தை ப்ரவசனம் செய்தலாலும் யாகத்தினாலும் தானம் செய் வதினாலும் தபஸ்ஸினாலும் உபவாஸத்தினாலும் அறியவிரும்புகிறார்கள்' என்றர்த்தமுள்ள ஶ்ருதிவாக்கியத்தினால் வேதம் யாகம் முதலியவை களும் பக்தியின் வழியாகப் பகவானைப் பார்ப்பதற்கு ஸாதனம் என் றேற்பட்டிருப்பதினால் அவைகளினால் பார்க்கத்தகாதவன் என்று மறுத்திருப்பது எப்படிப் பொருந்தும்? என்கிற ஆக்ஷேபத்தை விலக்குவ தற்காக—'கேவலங்களாகிய என்று சொல்லப்பட்டது. 48

1 பகவத்கீதை 11-54

2

3ப்ருஹதாரண்யகம் 6-4-22

மோஹமும், மா - உண்டாகவேண்டாம், த்வம்-நீ, வ்யபேதபீ:-வ்யபேத -நீங்கின, பீ: - பயத்தையுடையவனாய்க் கொண்டு, ப்ரீதமநா: - ப்ரீதியை அடைந்தமனதை யுடையவனாய்க் கொண்டும். புந: - மறுபடியும் தத் ஏவ - முன்பிருந்த, இதம் - இந்த, மே - என்னுடைய, ரூபம்-ரூபத்தை, ப்ரபஶ்ய - பார், 49

பா] இப்படிப்பட்ட பயங்கரமான ரூபத்தைப் பார்த்ததினால் உனக்கு எந்தத் துக்கமும் மோஹமும் உண்டாயிற்றோ, அவையிரண்டும் வேண்டாம் உன்னால் முன்பரிசயம் பண்ணப்பட்ட ப்ரஸந்நமான ரூபத்தைக் காட்டுகிறேன் அப்படிப்பட்ட என்னுடைய ரூபத்தைப்பார். 49

ஸஞ்ஜய உவாச—ஸஞ்ஜயன் சொன்னார்—

> இத்யர்ஜுநம் வாஸுதேவஸ்ததோக்த்வா
> ஸ்வகம் ரூபம் தர்ஶயாமாஸ பூய: ।
> ஆஶ்வாஸயாமாஸ ச பீதமேநம்
> பூத்வா புந: ஸௌம்யவபுர்மஹாத்மா ॥ 50

ப - தை] வாஸுதேவ: - வஸுதேவர் மகனாகிய க்ருஷ்ணன். அர்ஜுநம் - அர்ஜுநனைக் குறித்து, இதி - இவ்விதமாக, உக்த்வா - சொல்லி,

---

தா] 'த்ருஷ்ட்வா ரூபம் கோரமீத்ருங்மமேதம்' என்கிற இடத்தில் க்ரியாபதம் ஒன்றும் சொல்லப்படாமையினால் இந்த ரூபத்தைப்பார்த்ததினால் துக்கம் இல்லை மோஹமும் இல்லை என்று அர்த்தம் என்கிற ப்ரமம் உண்டாகும்; 'பஶ்ய' என்று க்ரியாபதத்தைச் சேர்த்துக் கொண்டாலும் இந்த ரூபத்தைப் பார்த்தது துக்கம் முதலியவைகளில்லாமைக்குக் காரணம் என்கிற ப்ரமமுண்டாகும் இவைகளை விலக்குவதற்காக வ்யாக்யானம் செய்கிறார்— 'இப்படிப்பட்ட' என்றாரம்பித்து. 'ததேவேதம் மேரூபம் புந: பஶ்ய' என்று சொல்லியிருக்கிறபடியினால் பயம் முதலியவைகளுக்குக் காரணமாகிய இந்த ரூபத்தையே மறுபடியும் பார என்று அர்த்தம், என்கிற ப்ரமம் உண்டாகும், ஆகையினால் அந்தப்பதங்களுக்கு வேறுவிதமாக வ்யாக்யானம் செய்கிறார்—'உன்னால் முன்பரிசயம் பண்ணப்பட்ட' என்றாரம்பித்து. 'ததேவேதம்' எனனும் பதத்தினால் நிகழ்காலமாகச் சொல்லி யிருப்பதினால் இரண்டு ரூபங்களும ஒரேகாலத்தில் இருக்கின்றன என்று ப்ரமமுண்டாகும், அதை விலக்குவதற்காக 'தத்' என்னும் பதம் ஸமீபத்தில் காண்பிக்கப போகிறதைச சொல்லுகிறது என்கிற அபிப்ராயத்தினால்—'காட்டுகிறேன்' என்று சொல்லப்பட்டது. ஆகையினால் 'இதம்' என்னும் பதம் காட்டப்போகிறதைச் சொல்லுகிறது என்று தாத்பர்யம். 49

ஹ்ய: - மறுபடியும், ஸ்வகம் - தன்னுடையதாகிய, ரூபம் - ரூபத்தை, தர்ஶயாமாஸ - காண்பிவித்தார், மஹாத்மா - ஸத்யஸங்கல்பனாகிய க்ருஷ்ணன், பூந: - மறுபடியும், ஸௌம்யவபு: - ப்ரஸந்நமான ரூபத்தை யுடையவராக, பூத்வா - ஆகி, பீதம் - பயந்தவனாக இருக்கிற, ஏநம் - இந்த அர்ஜுநனை, ஆஶ்வாஸயாமாஸ - தேற்றினார். 50

பா] பகவானாகிய வஸுதேவர் பிள்ளையாகிய க்ருஷ்ணன் பாண்டுவின் பிள்ளையாகிய அர்ஜுநனைக் குறித்து இவ்விதமாகச் சொல்லி மறுபடியும் தன்னுடையதாகிய நான்கு கைகளையுடைய ரூபத்தைக் காண்பிவித்தார் பரிசயம் செய்யப்படாத ரூபத்தைப் பார்த்ததினால் பயந்தவனாகயிருக்கிற இந்த அர்ஜுநனை மறுபடியும் முன்பு பரிசயம் செய்யப்பட்ட ப்ரஸன்னமாகிய ரூபத்தை உடையவராகித் தேற்றினா. மஹாத்மா - ஸத்ய ஸங்கல்பன், எல்லாவற்றிற்கும் ஈஶ்வரனாகியும் பரமபுருஷனாகியும் பரப்ரும்ம

தா] *ஸஹஜமான ப்ரீதியைத் தெரிவிப்பதற்காகச் சொல்லுகிறார்,—* 'வஸுதேவர் பிள்ளையாகிய' *என்றும்*—'பாண்டுவின் பிள்ளையாகிய' *என்றும்*—'ஸ்வகம்' *எனகிற இடத்தில் ஸ்வ (தான்) என்றது க்ருஷ்ணாவதாரத்தைச் சொல்லுகிறது என்று அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு* —'தன்னுடையதாகிய நான்கு கைகளை யுடைய ரூபத்தை' *என்று சொல்லப்பட்டது*—'பீதமேநம்' *என்கிற இடத்தில் இப்பொழுது காட்டப்பட்ட நான்கு கைகளை யுடைய ரூபத்தைப் பார்த்ததினால் பயந்து விட்டான் என்று ப்ரம முண்டாகும், அதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்*— 'பரிசயம் செய்யப்படாத' *என்றாரம்பித்து. தன்னுடைய இச்சையினால் மாத்திரம் இவர் அனேக விதங்களான ரூபங்களை அடைவது எப்படிப் பொருந்தும் என்று ஆக்ஷேபம் வரில் அதை நிரூபிப்பதற்காகச் சொல்லப்பட்ட*—'மஹாத்மா' *என்னும் பதத்தை பரக்ருதத்தில் உபயோகமாகும்படி வ்யாக்யானம் செய்கிறார்*— 'ஸத்ய ஸங்கல்பன்' *என்று. ஒருவராலும் தடுக்கப்படாத ஸங்கல்பத்தை யுடையவனானபடியினால் எல்லாம் பொருந்தும் என்று தாத்பர்யம். க்ருஷ்ணன் இரண்டு கைகளை யுடையவனாகவே நந்தகோ குலத்தி லிருந்த,படியினால் இவருக்கு நான்கு கைகளையுடைய ரூபம் எப்படித்தன்னுடையதாகும்என்று ஆக்ஷேபம் வருகிறபடியினால அதை ப்ரமாணத்துடன் நிரூபிக்கிறார்*— 'எல்லா வற்றிற்கும் ஈஶ்வரனாகியும்' *என்றாரம்பித்து. எல்லாராலும் ஆஶ்ரயிக்கத் தக்கவனாக இருப்பதற்கு உபயோகமான மேன்மை ஸௌலப்யம் இவைகளை ப்ரகாசப்படுத்துவதற்காக*—'எல்லா வற்றிற்கும் ஈஶ்வரனாகியும்' *என்பது முதலிய விசேஷணங்கள் சொல்லப்பட்டன*—'தன

மாகியும் லோகங்களுக்கு உபகாரம் செய்வதற்காக மனுஷ்யாவதாரம் செய்தவனாய் வஸுதேவருக்குப் பிள்ளையாயு மிருக்கிற இந்த க்ருஷ்ண னுக்கு நான்கு கைகளை உடைய ரூபமே தன்னுடைய ரூபம், கம்ஸனிட த்திலிருந்து பயந்த வஸுதேவர் ப்ரார்த்தித்ததினால் கம்ஸவதம் செய்யு மளவும் இரண்டு கைகள் மறைக்கப்பட்டன. பிறகு ப்ரகாசம் செய்யப் பட்டன—'𑌜𑌾𑌤𑍋𑌽𑌸𑌿 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍇𑌶 𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌧𑌰। 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌰𑍂𑌪𑌮𑌿𑌦𑌂 𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇𑌨𑍋𑌪𑌸𑌂𑌹𑌰 ॥ 𑌉𑌪𑌸𑌂𑌹𑌰 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 𑌰𑍂𑌪𑌮𑍇𑌤𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌂' என்றல்லவோ ப்ரார்த்திக்கப்பட்டது. த்வேஷியாகிய சிசுபாலனுக்கும் எப்பொழுதும் த்யானத்தில் தோன்றிக்கொண்டிருந்த ரூபம் நான்கு கைகளையுடைய க்ருஷ்ணனுடைய ரூபமே—'𑌉𑌦𑌾𑌰𑌪𑍀𑌵𑌰𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌂 𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌧𑌰𑌂' என்று சொல்லி யிருக்கிறபடி யினால், ஆகையினால் அர்ஜுநனும் இவ்விடத்தில்—'𑌤𑍇𑌨𑍈𑌵 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑍇𑌨' என்று சொல்லப்படுகிறது. 50

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—அர்ஜுநன் சொன்னான்.

𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍇𑌦𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌤𑌵 𑌸𑍌𑌮𑍍𑌯𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ।
𑌇𑌦𑌾𑌨𑍀𑌮𑌸𑍍𑌮𑌿 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌸𑌚𑍇𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌗𑌤𑌃 ॥ 51

ப - ரை] 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 - க்ருஷ்ண, 𑌤𑌵 - உம்முடைய, 𑌸𑍌𑌮𑍍𑌯𑌂 - ப்ர ஸந்நமாகிய, 𑌇𑌦𑌂 - இந்த, 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 - மனுஷ்யர்களுடையதாயிருக்கிற, 𑌰𑍂𑌪𑌂 - ரூபத்தை, 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 - பார்த்து, 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 — இப்பொழுது, 𑌸𑌚𑍇𑌤𑌾𑌃 — ப்ரஜ்ஞையுடன் கூடினவனாக, 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌃𑌽𑌸𑍍𑌮𑌿 - ஆகி றேன், 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 - ஸ்வபாவத்தை, 𑌗𑌤𑌃 - அடைந்தவனாக (ஆகி றேன்). 51

பா] எல்லையில்லாத மேன்மையையுடைய ஸௌந்தர்யம் ஸௌகுமார் யம் லாவண்யம் முதலியவைகளுடன் கூடியதாயும் உமக்கே அஸாதார ணமாயும் மனுஷ்யனாக யிருக்கிற அமைப்பை யுடையதாயும் மிகவும் ப்ரஸந்நமாயும் இருக்கிற இந்த உம்முடைய ரூபத்தைப் பார்த்து இப்போ

னுடைய ரூபம்' என்பதற்கு க்ருஷ்ணாவதாரத்திற்கு ஸஹஜமான ரூபம் என்றர்த்தம். 50

𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌰𑍂𑌪𑌂 என்பது கர்மங்களினா லுண்டாக்கப்பட்ட ப்ர க்ருதியின் ஸம்பந்தமுள்ள ரூபத்தைச் சொல்லுகிறது என்கிற ப்ரமத் தை நீக்குவதற்காக—𑌇𑌦𑌂 (இந்த) என்பதினால் அபிப்ராயத்தில் கொ ள்ளப்பட்ட அர்த்தத்தைச் சொல்லிக்கொண்டு அதற்கு வ்யாக்யானம்

முது ப்ரஜ்ஞையை யுடையவனுகிறேன் ஸ்வபாவத்தை யடைந்தவனு கவு மாகிறேன். 51

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚—ஶ்ரீக்ருஷ்ணன் சொன்னுர்.

𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌮𑌿𑌦𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿 𑌯𑌨𑍍𑌮𑌮 ।
𑌦𑍇𑌵𑌾 𑌅𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 ॥ 52

ப - ரை] 𑌮𑌮 - என்னுடைய, 𑌯𑌤𑍍 - எந்த ரூபத்தை, 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑍍 - பார்த்தவனுக, 𑌅𑌸𑌿 - ஆகிறுயோ, 𑌇𑌦𑌂 - இந்த, 𑌰𑍂𑌪𑌂 - ரூபம், 𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌂 - ஒருவராலும் பார்க்கமுடியாதது, 𑌦𑍇𑌵𑌾𑌅𑌪𑌿 - தேவதைகளும், 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 - தினந்தோறும், 𑌅𑌸𑍍𑌯 - இந்த, 𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 - ரூபத்தினுடைய, 𑌦𑌰𑍍𑌶𑌨𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 - பார்ப்பதை ஆசைப்படுகிறுர்கள். 52

பா] என்னுடைய இந்த, எல்லாவற்றையும் நியமிப்பதி லிருப்பதாயும் எல்லாவற்றிற்கும் இருப்பிடமாயும் எல்லாவற்றிற்கும் காரணமாயும் இருக்கிற எந்த ரூபத்தைப் பார்த்தாயோ இது ஒருவராலும் பார்க்க முடியாதது. தேவதைகளும் தினந்தோறும் இந்த ரூபத்தைப் பார்க்கவேண்டும் என்றுசைப்படுகிறுர்களே அல்லாமல் பார்க்கவில்லை. 52

ப - ரை] 𑌪𑌰𑌂𑌤𑌪 – சத்ருக்களைக் கொளுத்துகிற, 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 - அர்ஜுநா, 𑌮𑌾𑌂 - என்னை, 𑌯𑌥𑌾 - எப்படி, 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑍍 – பார்த்தவனுக, 𑌕𑌥𑌮𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌹—ஏனெனில் சொல்லுகிறுர்—

𑌨𑌾𑌹𑌂 𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌨 𑌚𑍇𑌜𑍍𑌯𑌯𑌾 ।
𑌶𑌕𑍍𑌯 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍋 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿 𑌮𑌾𑌂 𑌯𑌥𑌾॥ 53
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯 𑌅𑌹𑌮𑍇𑌵𑌂𑌵𑌿𑌧𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌪𑌰𑌂𑌤𑌪॥54

செய்கிறுர்-'எல்லை யில்லாத மேன்மையையுடைய' என்றுரம்பித்து. 51

தா] 𑌯𑌤𑍍 (எந்த) என்பது ப்ரஸித்தமானதைச் சொல்லுகிறதாகையி ஞல் ப்ரஸித்தங்களான ஆகாரங்களைச் சொல்லுகிறுர்—'எல்லாவற்றை யும்' என்றுரம்பித்து. 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 என்பது பதார்த்தத்தின் ஒரு பாகமாகிய பார்ப்பதில் அன்வயிக்கிற தென்பது வேறு கதி யில்லாத இடத்தில் சொல்லவேண்டிய தாகையினுல் இவ்விடத்திலது உசிதமல்ல என்று அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு நித்யமாக ஆசைப்படுதல், பார்க்க வில்லை என்பதைக் காட்டுகிறது, என்கிற அபிப்ராயத்தினுல் சொல்லுகி றுர்—'பார்க்க வில்லை' என்று. 52

ஈஷி - ஆசிருயோ, ஏவம் விய: — இப்படிப்பட்ட, அஹம் - நான், வேதை: - வேதங்களினுலும், த்ருஷ்டும் - பார்க்க, ந ஶக்ய: - தகாத வன், தபஸா - தபஸ்ஸினுலும், ந - பார்க்கத்தகாதவன், தாநேந - தானம் செய்வதினுலும், ந - பார்க்கத்தகாதவன், இஜ்யயா - யாகத்தினு லும், ந - பார்க்கத்தகாதவன், ஏவம் விய: - இப்படிப்பட்ட அஹம் - நான், அநந்யயா - வேறு ப்ரயோஜனத்தைவிரும்பாத, பக்த்யா-பக்தி யினுலோ வெனில், தத்த்வேந - உள்ளபடியே, ஜ்ஞாதும் - அறிவதற்கும், த்ருஷ்டும் - பார்ப்பதற்கும், ப்ரவேஷ்டும் - அடைவதற்கும், ஶக்ய: - தகுந்தவன். 53-54

பா] என்னிடத்தில் பக்தியில்லாத கேவலங்களா யிருக்கிற, பிறருக்கு அத் யயனம் செய்வித்தல், அர்த்தம் உபதேசித்தல், தான் அத்யயனம் செய்தல் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளுதல், ஜபம், முதலியவைகள் செய்யப் பட்ட வேதங்களினுலும் யாகம் தானம் ஹோமம் தபஸ்ஸு இவை களினுலும் உள்ளபடியே யிருக்கிற நான் அறியத்தக்கவனல்ல. வேறொரு ப்ரயோஜனத்தையும் விரும்பாத பக்தியினுலோ வெனில் உள்ளபடியே ஶாஸ்த்ரங்களைக் கொண்டே அறியவும் உள்ளபடியே நேராகப் பார்க்கவும்

தா] மேல் ஶ்லோகம் இதையே நிரூபிக்கிற தாகையினுல் புனருக்தியி ல்லை என்கிற அபிப்ராயத்தினுல் அதற்கு அவதாரிகை சொல்லுகிருர்— 'ஏனெனில் சொல்லுகிருர்' என்று.வேதங்கள் தானுகவே இவைகளுக்கு ஸாதனம் என்கிற ப்ரஸ்தாவமே இல்லாமையினுல் அதில்லை என்றுமறுப் பது பொருந்தாதாகையினுல் அதின் அபிப்ராயத்தி லேற்பட்டதைச் சொல்லுகிருர்-'அத்யயனம் செய்வித்தல்' என்ருரம்பித்து.தானம் யாகம் இவைகளைச் சொன்னது ஹோமத்தையும் குறிப்பதற்காக,என்று அபிப் ராயத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிருர் - 'யாகம் தானம்'என்ருரம் பித்து.பக்தியின் வழியாகஇவைகள்ஸாதனங்கள்என்பது'1அந்தஇந்தப் பகவானை ப்ராம்மணர்கள் வேதத்தை ப்ரவசனம் செய்வதினுல் அறிய வேண்டும் என்று விரும்புகிருர்கள்' என்றர்த்த முள்ள ஶ்ருதிவாக்யம் முதலியவைகளைக் கொண்டறியப் பட்டிருக்கிற படியினுல்— 'என்னி டத்தில் பக்தியில்லாத' என்று சொல்லப்பட்டது. 'ஏவம்விய:' என் னும் பதம் மனுஷ்யன் என்று ப்ரமிக்கத்தகாதவனுக இருக்கை ப்ர க்ருதி ஸம்பந்த மில்லாதவனுக இருக்கை முதலியவைகளைச் சொல்லு கிறது, என்று சொல்லுகிருர்— 'உள்ளபடியே இருக்கிற நான்' என்று, நேராகப் பார்ப்பதற்கு மாத்திரம் ஸாதனமாக பக்தி அபேக்ஷிக்கப்படு

1 ப்ருஹதாரண்யகம் - 6 - 4 - 22.

உள்ளபடியே ப்ரவேசிக்கவும் தகுந்தவன், அப்படியே *'இந்த ஆத்மா ப்ரவசனம் செய்வதினால் அடையத்தக்கவனல்ல த்யானத்தினாலும் அடையத்தக்கவனல்ல அனேகவிதமாக கேட்பதினாலும் அடையத்தக்கவ

